Jan & Feb 1984

# தமிழரசு

JL1
211mN84
N84.1
346

# தமிழரசு

1-1-1984 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2014

ருத்ரோத்காரி — மார்கழி 17

10 ஜன 1984







... புதிய சரக்குப் பெட்டக வசதி நிலையத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி 18.12.83ல் தொடங்கி வைத்தார்.



சென்னை நகர ஷெரீபாக திருமதி சரோஜினி வரதப்பன் 21.12.83-ல் பதவி ஏற்றார்.







## வெள்ளப் பகுதியில் உதவிப் பணிகள்

அண்மையில் பெய்த கடும் மழையின் காரணமாகத் தமிழகத்தின் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பலத்த சேதங்கள் உண்டாயின.

வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், 26-12-83 அன்று ஹெலிகாப்டரில் சென்று, பாதிப்புக்கு ஆளான மக்களுக்கு ஆறுதல் தெரிவித்து. உடனடி உதவிகளுக்கு உத்தரவிட்டார்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பனங்குடி கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேட்டி, சேலை, உதவித் தொகைகளை வழங்கினார்; குழந்தைகளுக்குப் பரிவோடு பால் வழங்கினார்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — மார்கழி 17
மலர் : 14 இதழ் : 13
1-1-1984



நான்காவது அட்டை.
சொல்லும் செய்தி

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஐக்கிய நாட்டு அவைக்கு இந்தியக் குழுவின் தலைவராகச் சென்று ஐக்கிய நாட்டு அவைக் கூட்டங்களில் கலந்து கொண்டு, 25.12.'83-ல் சென்னைக்குத் திரும்பிய மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச் சந்திரன் அவர்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்., -மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், மேலவைத் தலைவர், இலங்கைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் வரவேற்றனர்.

சென்னை திரும்பிய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள், அண்ணாசாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார்.





# வாழ்க்கைப் பயணத்தின் முதற்படி

## மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

இதுவரை நான் அரசு இசைக் கல்லூரிக்கு வரவில்லை என்பதை இக்கல்லூரி முதல்வர் தமது வரவேற்புரையில் மிக நாகரிகமான முறையில் சுட்டிக்காண்பித்தார்.

இங்கே பல கலைஞர்களை எனக்கு அறிமுகம் செய்வித்தார்கள். சிலர் பாடினார்கள்-சிலர் ஆடினார்கள்-சிலர் இசைக் கருவிகளை வாசித்தார்கள-இவர்களை எல்லாம் எனக்கு அறிமுகப் படுத்தினார்கள். இவர்களது கலை நிகழ்ச்சிகளை ரசிகர்களில் பலர் மிகவும் ரசித்துக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன்.

மனிதர்களுக்குச் சில குணங்கள் உண்டு. அவர்கள் தங்களைக் கட்டுப் படுத்தி வாழ்ந்தால்-சரியான முறையில் தங்களது சந்ததியினரை வழி நடத்திச் சென்றால், ஆகா என்ன அழகான குடும்பம் என்று பாராட்டுகிறோமல்லவா? அதுபோலவே இசைக்கும் நல்ல குணங்கள் உண்டு. 11 குணங்கள் உண்டு என்று பெரியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கோப தாபம் மனிதர்களுக்கு மட்டுமல்ல இசைக்கும் உண்டு. இசையின் மூலம் அமைதியைச் காட்ட முடியும்-கோப தாபத்தைக் காட்ட முடியும்.

இங்கே ஆடிய கலைஞர்கள் எல்லாம் சிறப்பாக ஆடினார்கள். கைவழி நயனம் செல்ல, கண் போன இடத்திற்கு மனம்போக வேண்டும். அதே அளவில் கால் போக வேண்டும். இப்படிப்பட்ட கட்டுப்பாடு இசையில் இருக்கும் போது, இதைக் கற்றுக்கொண்டிருக்கிற மன.தன.டத்தில் இந்தக் கட்டுப்பாடு இல்லாமல் போய் விடுகிறதே என்பதுதான் வேதனையாக இருக்கிறது.

கடவுளை 2 வழிகளில் அணுக முடியும். ஒன்று இசையால்-மற்றொன்று கடுமையான தவத்தால்! மந்திரங்கள் ஓதுவது மட்டும் தவமாகாது. தவம், மனத்தை ஐக்கியப்படுத்துவதன் மூலம் கிடைக்கும்! இசைக்கும்போதும் மனம் ஐக்கியமாகத்தான் வேண்டும்.

பாடல் முதலில் தனக்காகப் பாடப்பட வேண்டும். தான் ரசிப்பதற்காகவே பாடவேண்டும். பிறர் ரசிப்பதற்காக அல்ல! ஆடலும் அதுபோலத்தான்! ஆடுபவர்கள் தமக்காகத்தான் ஆடவேண்டும், பிறர் மகிழ்வதற்காக அல்ல!

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் அமைதியில்தான் ஆரம்பமாகிறது. பிறகு இறுதியில் உச்ச கட்டம் ஏற்பட்டு, முடிகிறது. இசையும் அப்படித்தான் . துவக்கத்தில் ஆரவாரம் இன்றி ஆரம்பிக்கப்படும் தாள நிலை, இறுதியில் உச்ச கட்டம் பெற்று, உயர்த்தப்படும்போது, துரிதகதி அடைகிறது. மனிதனும் அது போலத்தான். 'தீர்மானம்' என்று வைக்கிறார்களே அது முடிவு! அதுதான் வாழ்க்கையின் நிலையும்.

தமிழ்நாட்டில் பள்ளிசெல்லும் குழந்தைகள் நலனை முன்னிட்டு 10 வயது வரைஉள்ள 65 லட்சம் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு வழங்குகிறோம். 15 வயது வரை கொடுக்கவேண்டும் என்று திட்டமிட்டு வருகிறேன். இன்று 5 வயதுள்ள ஒரு குழந்தை இன்னும் 16 வருஷம் கழித்து 21 வயது ஆகும். அப்போவ

வெறும்படிப்பு மட்டுமே அதற்குக் கிடைத்தால் பலன் இல்லை. ஆகவே தொழிற் கல்வியும் அந்தக் குழந்தைக்குக் கற்றுத் தர வேண்டும். 4 நாள் படிப்பு-2 நாள் பயிற்சி- ஒரு நாள் ஓய்வு.

குழந்தை எந்தத் தொழிலைக் கற்றுக் கொள்ள விரும்புகிறதோ, அதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இங்கே நாம் பார்த்த -நடனக் கலையானாலும் சரி-இசைக் கலையானாலும் சரி, எதனைக் கற்றுக் கொள்ள விரும்பினாலும் சரி-அதனைக் கற்றுத்தர வேண்டும்.· பள்ளியை - கல்லூரியை விட்டு வெளியே வரும்போது அந்தக் குழந்தைக்கு வேலைகொடுக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குவது எனது கடமை எனக் கருதுகிறேன்.

இப்படிப்பட்ட கலை உணர்வைப் பெற்றால் நல்ல குணத்தை நாம் பெற முடியும். இசையை உண்மையாகக்காதலிக்கிறவர்கள் நல்லவர்களாகத்தான் இருப்பார்கள்.

சாதகம் செய்வதற்கு வசதியாக விடுதிகள் கட்டப்படவேண்டும் என்று சொன்னார்கள். சாதகம்செய்வதற்குக்கடற்கரை இருக்கிறதே! நாங்கள் எல்லாம் நாடகத்தில் நடித்த காலத்தில் கடல் நீரில் - ஆற்றில் அதிகாலை 4 மணிக்கே நின்று சாதகம் செய்வோம். என்றாலும் ,இந்த நவீன காலத்தை எண்ணி, விடுதி கட்டித் தருவது பற்றி ஆலோசிப்பதற்குச் சித்தமாக இருக்கிறேன்.

பாடம் படிப்பது போன்றதல்ல சங்கீதம். பிறரைப் பாராட்டி, மதித்திடும் குணம் எல்லோருக்கும் வர வேண்டும். சகோதரி எம்.எஸ்.சுப்புலட்சுமி அம்மையார் அவர்களின் முன்பு, பாடத் தெரியாத ஒருவர்சென்று பாடினால் அவர் கேலி செய்ய மாட்டார். அவரைத் தட்டிக் கொடுத்து ஆதரவு தருவார். இன்னும் முயற்சி செய்து பாடவேண்டும்-அவ்வாறு பாடினால் வெற்றி கிடைக்கும் என்று வாழ்த்தி அனுப்புவார்.

இங்கே ஒரு மாணவர் - சிவபாலன் என்பவர்— இலங்கையைச் சேர்ந்தவர்-நான் நிகழ்ச்சிக்கு வந்தவுடனே எனக்கு ஒரு நூலைக் கொடுத்தார். அது குறித்துச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்த உலகத்தில் தான் நாம் இருக்கிறோம். வேறு எங்கேயும் இல்லை. முதல்வராயினும், அமைச்சராயினும், கவிஞர்களாயினும், பாடகர்களாயினும இந்த உலகத்தில் தான் இருக்கிறார்கள்.

அந்த நண்பர் தமது நூலில் ஒரு தவறைச் செய்திருக்கிறார். அது குறித்து அவரிடமே நான் சுட்டிக் கேட்டேன். அவர் எழுதுகிறார்.

''உலகம் என்ற மாற்றாந்தாய் கலைஞனைக் கொடுமைப்படுத்திக் கண்ணீர் முத்துக்களை அதிக அளவில் வரவழைக்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளார். உலகம் நமது தாய். அது எப்படி மாற்றாந்தாய் ஆகும்?

வாழ்வு சிறிது - வளர்கலை பெரிது என்பார்கள். கலை நித்தமும் வளர்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டுவார்கள்.

கலை எப்போதும் இருக்கும். ஆனால் கலைஞர்கள் இருக்க மாட்டார்கள். பாகவதர் எங்கே? பி.யு. சின்னப்பா எங்கே? கலைவாணர் எங்கே? அவர்கள் எல்லாம் மறைந்து விட்டார்கள். அவர்கள் கையாண்ட கலை இன்னும் இருக்கிறது. தற்போது வேறு கலைஞர்கள் வந்திருக்கிறார்கள், பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பார்களே அது இதுதான்.

## மூன்றில் ஒரு பகுதி

சேலம் மாவட்டத்தின பரப்பளவில் மூன்றில் ஒரு பாகம் மலைப்பகுதியாகும். சேர்வராயன் மலை, கொல்லி மலை, கல்ராயன் மலை, பச்சமலை, அரநூத்து மலை ஆகியவை இம் மாவட்டத்தின் மலைப் பகுதிகள்.

## முதன்மை பெறும் கூட்டுறவு நூற்பு ஆலை

கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கிவரும் நூற்பு ஆலை ஒன்று சேலம் அம்மாப் பேட்டையில் உள்ளது. 6000 முதல் 8000 வரை கதிர்கள் கொண்ட இவ் ஆலை - தமிழ்நாட்டில்

கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கி வரும் நூற்பு ஆலைகளில் எல்லாம் முதன்மை பெற்றுத் திகழ்கிறது.

பிறப்பு இருக்கிறது என்றால் இறப்பு இருக்கிறது.

இளமை இருக்கிறது என்றால் முதுமையும் இருக்கிறது.

இயற்கை கலைஞனைக் கண்ணீர்விடச் செய்கிறது.

பிறக்கும்போதும் மனிதன் அழுகிறான்: இறக்கும்போதும் அழுகிறான். அதற்கு இடையிலே இயற்கை எத்தனை விளையாட்டுக் காண்பிக்கிறது?

இன்றைக்கு வாழ்கின்ற நாம் நமது கடமையைச் சரியாகச் செய்தால்தான் எதிர்காலத்தில் வரும் நமது சந்ததியினர் நல் வாழ்வு வாழ முடியும்.

இந்தக் கல்லூரியில் தமிழ் இசைக்காக ஒரு பிரிவு வரவேண்டும். சரிகமபதநி என்று சொல்லித்தருகிறார்கள். அதற்குரிய தமிழ் வார்த்தைகள் என்ன என்பது இங்குள்ள ஆசிரியர்களுக்குத் தெரியாததல்ல!

தெலுங்குப் பாடலைப் பாடுங்கள்! அதற்காகத் தமிழிசையைப் புறக்கணிக்கக்கூடாது. அதையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பழைய கால வைத்தியர்கள் போல-எவருக்கும் எதுவும் சொல்லித்தராமல் மறைந்து போனது போல கலையை ஆக்கக் கூடாது. அதை ஒரு பொக்கிஷமாக வைத்து விடக் கூடாது. மக்களுக்குப் பயன்படும்படி செய்யவேண்டும். கலைஞர்கள் தமது கலைத்திறமையால் மக்களைச் சொந்தக்காரர்களாக்கிக் கொள்ளவேண்டும்.

இன்று பட்டம் பெற்றுவிட்டீர்கள். இதுதான் உங்கள் காலடியின் முதற்படி. இன்னும் 99படிகள் உள்ளன. அதனை உணர்ந்து செயல்பட்டு வெற்றி யடைய வாழ்த்துகிறேன்.

**[தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் (21-11-83-ல்) மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரையிலிருந்து].**



*சேலம் - ராசிபுரம் பாதையிலிருக்கும் பொய்மான் கரடு குறிப்பிடத்தக்கது. தூர நின்று பார்த்தால் மலையிடுக்கில் கொம்பு மானொன்று நிற்பது போலிருக்கிறது; நெருங்கிப் போனால் மறைந்துவிடுகிறது!



பெரியார் மாவட்ட

# ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா

பெரியார் மாவட்டத்தில், ஏறத்தாழ இரண்டு கோடிரூபாய் செலவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார்கள். (12.12.83) இவ்விழாவையொட்டி ஈரோடு நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்குபார்த்தாலும் அலங்கார வளைவுகள் போடப்பட்டிருந்தன.

இந்த விழாவில் - மாவட்டக் கருவூலக் கட்டடம், வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட குடிசைமாற்றுத் திட்ட பல அடுக்கு மாடி வீடுகள்-மற்றும் அங்காடி, ஈரோடு பவானிசாலை பாலம், ஆதிதிராவிடர் குடியிருப்புக் காலனிகள், மருத்துவமனைக் கட்டடங்கள், நகராட்சி அங்காடி, சத்துணவுத் திட்ட சமுதாயக் கூடங்கள், பள்ளிக்கட்டடங்கள் ஆகியவற்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

கெம்பநாயக்கன் பாளையம் பெரும்பள்ளம் அணைத்திட்டம், ஈரோடு சத்திய மங்கலம் ரோட்டில் பெரிசேமூர் அருகே பாலம் சத்தியமங்கலம் மருத்துவமனை, ஜீவா போக்குவரத்துக் கழக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கட்டடம், காங்கேயம் 'பணிமனை', இமூவைப் பேருந்து ஆகியவற்றிற்கும் இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு துவக்கிவைக்கப்பட்டன.

**ஊர்வலச் சிறப்பு:**

இவ்விழாவையொட்டி, விழா நாளன்று மாலை 3 மணியளவில் வ.உ.சி. பூங்காவிலிருந்து மாபெரும் ஊர்வலமொன்று தொடங்கியது. இந்த ஊர்வலத்தில், பெரியார் மாவட்டம் துவங்கியதிலிருந்து இன்று வரையான நான்காண்டுகளில் அரசு மூலம் செய்யப்பட்டுள்ள சாதனைகளை விளக்கும் அலங்கார ஊர்திகள்— மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், காவல்துறை, ஜீவா போக்குவரத்துக் கழகம், தன்னிறைவுத்திட்ட விளக்கம், பால்வளம், கிறிஸ்துஜோதி மெட்ரிக் ஸ்கூல், வேளாண்மைத்துறை, கூட்டுறவுத்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம், வீட்டுவசதி வாரியம், வனத்துறை, குடிநீர் வடிகால் வாரியம், ஈரோடு நகராட்சி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, இந்து சமய அறநிலையத்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, பெரியார் மாவட்ட சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சார்பில் செலுத்தப்பட்டன.

தேசிய மாணவர் படை, சிக்கைய நாயக்கர் கல்லூரி, வாசவி கல்லூரி, வேளாளர் மகளிர் கல்லூரி, செங்குந்தர் மேனிலைப் பள்ளி, மகாஜன் உயர்நிலைப் பள்ளி, கலைமகள் பள்ளி, சி.எஸ்.ஐ. மகளிர் பள்ளி, கலைமகள் கல்வி நிறுவனம், அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, அரசினர் பயிற்சிப் பள்ளி, சி.எஸ்.ஐ. மகளிர் மேனிலைப்பள்ளி, செயின்ட் ரீட்டா உயர்நிலைப்பள்ளி, வெள்ளாளர் மெட்ரிகுலேஷன், நகராட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளி, மதார்ஷா இஸ்லாமியப் பள்ளி, சி.எஸ்.ஐ. ஆண்கள் பள்ளி, செங்குந்தர் மேனிலைப் பள்ளி, காமராஜ் நகராட்சி மேனிலைப்பள்ளி, மதரஸா இஸ்லாமிய உயர்நிலைப்பள்ளி, ரயில்வே குடியிருப்பு நகராட்சி உயர்நிலைப்பள்ளி, செங்குந்தர் மேனிலைப்பள்ளி ஆகியவர்





றைச் சேர்ந்த மாணவ மாணவிகளும் சீருடையோடு இந்த ஊர்வலத்தில் அணிவகுத்து வந்தனர்.

ரவி திரையரங்கத்தின் எதிரே அமைந்திருந்த அலங்காரமேடையிலிருந்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.எஸ்.டி.சோமசுந்தரம், திரு.செ.அரங்கநாயகம் திரு.ப.குழந்தைவேலு, திரு. சு. முத்துசாமி, திரு.எஸ்.ஆர்.ராதா ஆகியோரும், வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.ஏ.செல்லையா குடிசைமாற்றுவாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத், பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர். திரு.பி.வி.ராஜாராமன் இ.ஆ.ப ஆகியோரும் இந்த மாபெரும் ஊர்வலத்தைக் கண்டுகளித்ததோடு, அதில் பங்கேற்றோருக்கு வாழ்த்தும் வணக்கமும் செலுத்தினர்.

**பாராட்டு விழா:**

ஈரோடு-பெருந்துறை சாலையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தையொட்டி அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் காலை முதல் மாலை வரை-மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றதற்குப் பாராட்டு தெரிவிக்கும் வகையில் மாபெரும் விழா ஒன்று நடைபெற்றது.

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் நாதசுர இசையோடு தொடங்கிய இவ்விழாவில்-திரு. வி.கே. ராமசாமி, திரு.நாகேஷ், திருமதி. விஜயகுமாரி போன்ற தமிழகத்தின் முன்னணி நட்சத்திரங்கள் பங்கேற்ற கலைநிகழ்ச்சி, கவிஞர் காமராசன் தலைமையில் கவியரங்கம், சிவராஜ்-ஆனந்த் குழுவினர் இசைநிகழ்ச்சி, வலம்புரி ஜான் எம்.எல்.சி. தலைமையில் 'புரட்சித் தலைவர் ஒரு சகாப்தம்' எனுந் தலைப்பின்கீழ் திருக்குறள் முனிசாமி, ஊரன்அடிகள் முதலானோர் பங்கேற்ற கருத்தரங்கம், தண்டாயுதபாணி பிள்ளையின் சிஷ்யைகள் செல்வி மோகனப்பிரியா, செல்வி ஜெயலட்சுமி ஆகியோரின் நடனம் ஆகியவை இடம் பெற்றன.

மாண்புமிகு அமைச்சர் திரு. சு.முத்துசாமி இந்தப் பாராட்டு விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

**கட்டடத் திறப்புவிழா:**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பங்கேற்ற புதிய மாவட்ட ஆட்சித்தலைவர் கட்டடத் திறப்பு விழா, அதையொட்டிய திடலில் அழகுற அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான பந்தலில் மாலை 7 மணியளவில் தொடங்கியது.

மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி திரு.கே.எம்.ராஜூ முன்மொழிய, திரு. தில்லைகோவிந்தன் வழிமொழிய இவ்விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.எஸ்.டி.சோமசுந்தரம் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி.வி.ராஜாராமன் வரவேற்புரையாற்றினார். தலைமைப் பொறியாளர் திரு.எம்.மல்லிகார்ஜுனன் திட்ட அறிக்கை படித்தார்.

அதைத்தொடர்ந்து - வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு ஏ. செல்லையா, குடிசைப் பகுதி மாற்றுவாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத், மாண்புமிகு மீன்வளம் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு.எஸ்.ஆர். ராதா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.ப.குழந்தைவேலு. மாண்புமிகு கல்வியமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பெரியார் மாவட்டம் 1979ல், தனியாகப் பிரிக்கப்பட்டது. இந்த நான்காண்டுக் காலத்திலேயே ஈரோடு இந்த அளவுக்கு வளர்ந்துவிட்டதே என்று பார்ப்போர் வியக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டடம் இந்த அளவுக்குத் தேவைதானா என்றெழுந்த கேள்விக்கணைகளை யெல்லாம் தவிடுபொடியாக்கி இங்கே இந்தக் கட்டடம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்றால் அந்தப் பெருமை நமது முதல்வர் அவர்களையே சேரும்.

இரண்டு கோடி ரூபாய் திட்டத்தில் இது உருவாக்கப்பட்டது போலவே, இதனெதிரே ஒரு கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நீதிமன்றக் கட்டடமொன்றும் உருவாகி வருகிறது. இந்த நான்காண்டுக் காலத்தில் நமது மாவட்டத்தில் 82,374 பணிகளுக்காக அரசின் மூலம் 74 கோடியே 18 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இதுதவிர, இப்போது 1,770 வேலைகள் 8 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுமட்டுமின்றி - 4,759பணிகள் அரசின் அனுமதி பெறப்பட்டு அவற்றுக்காக 11 கோடியே 22 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இத்தகைய நல்ல திட்டங்கள் நிறைவேற, பொதுமக்கள் அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இப்போது, 11 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில புதிய திட்டங்களுக்கும் அனுமதி அளித்திருக்கிறார்கள். சித்தோடு அருகே ஒரு வாய்க்கால் திட்டம், பெரும்பள்ளம் ஓடையில் குடிசை மாற்று வாரியத் திட்டம், பொறியியல் கல்லூரி ஒன்று நம் மாவட்டத்தில் அமைக்கும் திட்டம் போன்றவைகளே அவை.



பொறியியல் கல்லூரி அமைக்க, தமிழகத்திலுள்ள பன்னிரண்டு போக்குவரத்துக் கழகங்களின் மூலமே நிதி ஆதாரம் பெறப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப்பெரும் பொறுப்பை என்னிடமே விட்டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் பெரியார் மாவட்ட மக்கள் சார்பில் புரட்சித் தலைவர் டாக்டர் முதல்வர் அவர்களுக்கு நான் இதயபூர்வமான நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**முதல்வர் உரை**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்டடங்களைத் திறந்துவைத்தும் பல்வேறு திட்டப் பணிகளைத்துவக்கி வைத்தும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

என் மனச்சாட்சிப்படி நான் தீட்டும் நல்ல திட்டங்களுக்கு எப்போதும் ஆதரவு தந்து வரும் எல்லோருக்கும் வணக்கம்.

பெரியார் மாவட்டத்திற்கு நான் அதிக அளவில் உதவியிருப்பதாக இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தக் குழந்தைக்கு உடனடி ஊட்டச்சத்து தேவையோ அந்தக் குழந்தைக்கு உடனடி ஆதரவு தருவது என்ற வகையிலே தான் புதிதாக உருவான இந்த மாவட்டத்திற்கு நான் உதவுகிறேனே தவிர-மற்ற மாவட்டங்களை ஒதுக்குவதாகக் கருதிவிடக் கூடாது.

என்னையும் உங்களையும் பிணைத்துள்ள பாசம் இன்று நேற்று - குறிப்பாக நான் முதலமைச்சர் ஆனபிறகு ஏற்பட்டதல்ல; நான் நடிக்கத் தொடங்கியதிலிருந்தே உண்டானதாகும். நான் உங்கள் வீட்டுப்பிள்ளை என்று சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக்கட்டடத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகியிருக்கிறதென்றால் கட்டுமானப் பொருள்களுக்கு ஆனது போக, பாதியாவது இதில் வேலைசெய்த தொழிலாளிகளுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும் என்பதை மறக்கக் கூடாது.

பொதுமக்களாகிய நீங்கள் தான் என்னை ஆட்சிக்கு அனுப்பினீர்கள். கெட்டதை மறக்க வேண்டும்; நல்லதை நினைக்க வேண்டும்; அந்த அடிப்படையில் உங்கள் அரவணைப்பிலிருக்கும் நான் நல்லதையே செய்வேன். எதையும் அகம்பாவத்தோடு செய்யமாட்டேன். நாங்கள் வேண்டாமென்றால் எங்களை நீங்கள் தான் திருப்பியனுப்ப வேண்டும்.

சிலர், மக்களை ஏமாளிகள் என்று கருதுகிறார்கள். அவர்கள் இன்னும் மக்களைப் புரிந்து கொள்ளாததே அதற்குக் காரணம்.

தேர்தல் அறிக்கையில் சொன்னாயே-செய்தாயா என்கிறார்கள். பெரியார் மாவட்டம் உருவாக்கப்போகிறோம் என்றுஅதில் சொன்னோமா? செய்திருக்கிறோம். இப்படி மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகம் கட்டப் போவதாகக் குறிப்பிட்டோமா? கட்டி முடித்திருக்கிறோம். இதற்காக மாலை போடவேண்டாம்; நற்சான்றிதழ் தரவேண்டாம்; பாராட்டி ஒரு வார்த்தை-தமிழிலே வல்லவர்களாயிற்றே; சொல்லியிருக்கவேண்டாமா?

உயர்ந்து வரும் விலைவாசியைக் கட்டுப்படுத்தவில்லை என்கிறார்கள். விலைவாசி ஏன் உயர்கிறது? உயர்த்தச் சொல்லுகிறார்கள். விவசாயிகளிடம் போய் நெல்லுக்கு விலையை உயர்த்தச் சொல்லிவிட்டு மக்களிடம் அரிசியைக் குறைந்த விலைக்குக் கேளுங்கள் என்றால் எப்படி? நாங்கள் ஆட்சிக்கு வந்தபின் மக்கள் நலன் கருதி 8 ஆயிரம் நியாயவிலைக்கடைகளை நடத்துகிறோம். அரசுக்கு அதனால் எத்தனைக்கோடி நஷ்டம்-எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அண்ணாவின் கருத்து என் நெஞ்சில் ஊறியிருக்கிறது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாண்டுக்காலம் வரை போராட்டம் போராட்டம் என்ற நிலைதானே இருந்தது? எதையும் ஆக்குவது கடினம்; அழிப்பது எளிது.

டிஸ்மிஸ் செயயப்பட்ட பிறகும், அண்ணாமேல் உள்ள நம்பிக்கையால் என்னை மீண்டும் ஆட்சிக்கு அனுப்பினீர்கள்.

ஏழை எளிய மக்களின் குழந்தைகள் நலன் கருதி சத்துணவுத் திட்டம் கொண்டுவந்தோம். இதைக் குறைகூறினார்கள். உங்களால் நடத்த முடியாது. வேண்டாம் என்றார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் சத்துணவுத் திட்டத்தை நீக்கிவிடப்போகிறீர்களா? சத்துணவுத் திட்டம் வேண்டாம் என்று சொல்லப் போகிறீர்களா?

[கூட்டத்தில், தாய்மார்கள் பகுதியிலிருந்து, ''சத்துணவுத் திட்டம் வேண்டும்'' என்ற குரல்கள் ஒலிக்கின்றன.]

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இதை மாற்ற முடியாது.

குழந்தைகள் எல்லாம் சமத்





துவமான அறிவைப் பெறவேண்டும். இதற்காக பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு ஒருமணி நேரம் அந்தந்த வகுப்பு ஆசிரியரே பிள்ளைகளுக்கு டியூசன் சொல்லித் தருவது; அவர்களுக்கு அதற்கான ஊதியத்தை அரசே வழங்குவது என்பது பற்றிப் பரிசீலித்து வருகிறோம்.

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி.வி. ராஜாராம், இ.ஆ.ப. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் சார்பில் இலங்கைத் தமிழர் துயர்துடைப்பு நிதிக்கென ரூ. 39 ஆயிரத்தை மாண்புமிகு முதல்வரிடம் வழங்கினார்.

கடந்த எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் ஈரோடு நகராட்சிப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் 97 சதவிகிதம் தேர்வு பெற்றதைப் பாராட்டி கல்வித்துறை அளித்த கேடயத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்பள்ளித் தலைமை ஆசிரியரிடம் வழங்கினார்.

பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களேல்லாம் பங்கேற்ற இந்த விழா முடிவில்' இம் மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், ஈரோட்டைச் சேர்ந்த 33 வியாபாரிகள் சங்கத்தார் பரிசுகள் வழங்கிப் பாராட்டினர்.

**நிகழ்ச்சி தொகுப்பு:**

**பி. எல். ஆர்.**

# சேலம் மாவட்ட நூலகப்பணி



சேலம் நகரிலுள்ள மைய நூலகம் சிறப்புறச் செயல்பட்டு வருகிறது. நாளேடுகள் படிக்க நாவல்கள், கட்டுரைகள், இன்னபிற புத்தகங்கள் படிக்க எனத் தனித்தனிப் பிரிவுகள் உள்ளது போலவே மகளிர்-சிறுவர் சிறுமியர்க்கென்றோர் தனிப் புத்தகப் பிரிவும் இங்குள்ளது.

திரு. ஆர். பழனிச்சாமி மாவட்ட நூலகராக உள்ள இம் மாவட்டத்தில் 83 கிளை நூலகங்களும் வீதிதோறும் சென்று புத்தகங்களை வழங்கிடும் 18 சைக்கிள் நூலகங்களும் இருக்கின்றன.

திருஎம்.நல்லதம்பி நூலகராக உள்ள மாவட்ட மைய நூலகத்தில் மட்டும் 36, 431 நூல்கள் உள்ளனவென்றால், கிளை நூலகங்களிலே 5,092,249 நூல்கள் இருக்கின்றன. மூவுருளை வண்டிகளின் மூலம் வீதிதோறும் கொண்டு சென்று வழங்கப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை மட்டும் 93,588 ஆகும்.

இங்கு நூலகத்திலே 9,126 பேர் உறுப்பினராகச் சேர்ந்துள்ளனர்.

சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற அத்தனை நூலகங்களிலேயும் 211 பேர் பணியாற்றி வருகின்றனர். மாவட்ட அளவில் ஆறே நூலகங்கள் தான் சொந்தக்கட்டடத்திலே இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களிலே 54ம், வாடகை இல்லாத கட்டடங்களிலே 24ம் இயங்கி வருகின்றன.

கிளை நூலகங்களுக்குத் தலா 3.6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி நடைமுறையில் உள்ளது.

சேலத்திலே இருக்கின்ற மைய நூலகக் கட்டடம் ரூ. 15,55,438 செலவில் கட்டப்பட்டு 23.9.81ல் திறந்து வைக்கப்பட்டதாகும்.

ஏறத்தாழ 25 ஆண்டுக் கால அரசிதழ்கள் இங்கே தொகுத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதும், முதலாவது நூலக வளர்ச்சி மாநாடு 1982ல் முதன் முதல் இங்கேதான் நடத்தப்பெற்றது என்பதும் நூலகரால் பெருமையோடு நமக்குத் தெரிவிக்கப்பட்டன.





# டாக்டர் பட்டம் பெற்ற முதலமைச்சருக்கு சேலம் நடத்திய சிறப்புமிகு விழா

"அர்ச்சுனனை ஒத்த அறப்போர் வீரர்'' என்று மூதறிஞர் ராஜாஜியாலும், ''விரிந்து பரந்த மனம் கொண்டவர்'' என்று தந்தை பெரியாராலும், ''அமைதியான அழகும் ஆழ்ந்த உணர்ச்சியும் அலைபுரளும் கவிதையின் வடிவமும் உடையவர்'' என்று பேரறிஞர் அண்ணாவாலும் போற்றிப் புகழப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றமைக்கு சேலம் - தர்மபுரி மாவட்டப் பெருமக்களின் சார்பில் மாபெரும் பாராட்டு விழா நடத்தப்பட்டது.



இருநாட்கள் (10-12-83, 11-12-83) சேலம் நகரில் நடைபெற்ற இவ்விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளின் முதல் நிகழ்ச்சி நேரு கலையரங்கில், சேலம் ஜி. சுப்பிரமணியம் குழுவினரின் நாதசுர இசையோடு தொடங்கியது. அதைத் தொடர்ந்து குன்னக்குடி வைத்தியநாதன் குழுவினர் வயலின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

**வரவேற்புரை :**

பாராட்டு விழாவிற்கு வருகை தந்தோரை வரவேற்று மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது :

திராவிட சமுதாயத்திற்கு நமது முதல்வர் அவர்கள் செய்த உதவி மகத்தானது. சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு. கழகம் வெற்றி பெறவும், தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர் முதன் முதல் மேயராக வரவும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நமது புரட்சித் தலைவர் அவர்களோடு ஆலோசனை நடத்தியது மட்டுமல்ல; அந்தப் பெரும்பொறுப்பை இவரிடம்தான் ஒப்படைத்தார்கள். அப்படித்தான் முதலாவது தி.மு.க மேயர் வர முடிந்தது.

நம்முடைய முதல்வர் அவர்கள் என்றைக்கும் பெரியவர்களை மதிக்கத் தவறியதில்லை. இவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னாலேதான்-டாக்டர் அம்பேத்கார், பாவேந்தர் பாரதிதாசன், வீரபாண்டியக் கட்டபொம்மன், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், காயிதே மில்லத், காமராசர், செய்குத்தம்பி பாவலர், வ. உ. சிதம்பரனார். பாரதியார், பேரறிஞர் அண்ணா, நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, தந்தைபெரியார், முத்துராமலிங்கத் தேவர், பண்டித நேரு, ராஜாஜி, சுபாஷ் சந்திரபோஸ், தேசிக விநாயகம் பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, திரு. வி. கல்யாணசுந்தரனார் ஆகியோருக்கெல்லாம் அரசு சார்பிலே விழா எடுக்கப்பட்டு வருகிறது. தந்தை பெரியார், வ. வே. சு. ஐயர், திரு.வி.க., பாரதியார் ஆகியோருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. தந்தை பெரியாருக்குப் பெருமை சேர்க்கும் வகையில்

**நிகழ்ச்சித்தொகுப்பு:**

**—இந்திரன்**

பெரியார் மாவட்டம் உருவாக்கப்பட்டது.

தந்தை பெரியார் சீர்திருத்த எழுத்தை அமல்படுத்த வேண்டும் என்றார். அதற்கு ஆக்கமும் ஊக்கமும்தந்தவர் நம் முதல்வர்.

சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் ஆகியவற்றின் மூலம் இந்த நாட்டுக் கிராமங்களை முன்னேற்றிய பெருமை-கிராம மக்களை வாழ்வித்த பெருமை இவருக்கே உண்டு. இவர் முதல்வரான பிறகுதான் 8,000 பேருந்துகள் இந்த நாட்டுக் கிராமங்களையெல்லாம் நகரங்களோடு இணைக்கும் விதத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது.

லெனின் ரஷ்யாவிலிருந்து ஆட்சி செலுத்தினாலும் அவர் எண்ணமெல்லாம் சைபீரியப் பனிப் பிரதேசத்தில் வாடிய ஏழை எளிய மக்களிடமே இருந்தது என்பார்கள். அதே போல் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தாலும் அவர் எண்ணமெல்லாம் இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களின் முன்னேற்றம் பற்றியே இருக்கிறது.

இத்தகைய மனிதாபிமானம் கருதியே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்திருக்கிறது. எல்லா கட்சிக்காரர்களும் இணைந்து அதற்காகப் பாராட்டு விழா நடத்த வேண்டும் என்று என்னிடம் பலரும் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இன்று இந்த விழா நடத்தப்படுகிறது.

—இவ்வாறு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் பேசியபின், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. பேசினார். அப்போது அவர் ''ராஜாஜி போன்ற முதுபெரும் தேசபக்தர்களையெல்லாம் பெற்றெடுத்த சேலத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பராட்டுவிழா நடத்துவது மிகவும் பொருத்தமுடையது'' என்று குறிப்பிட்டார்.

**பல்ராம் ஜாக்கர் :**

மாண்புமிகு இந்திய நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் டாக்டர் பல்ராம் ஜாக்கர் விழா தொடக்கவுரை ஆற்றுகையில் பின்வருமாறு பேசினார்:

பெருந்திரளாக இங்கே கூடியுள்ள நீங்களெல்லாம், முதலமைச்சரான பிறகு திரு.எம்.ஜி.ஆர். அவர்களைத் தெரிந்து கொண்டவர்களல்ல; அவர் கலைத் துறையிலிருந்த காலம் முதலே உன்னதமான ஒழுக்கமுள்ள நடிகராகவும், அரசியல் மேதையாகவும் அவரை நீங்கள் அறிந்து வைத்திருக்கிறீர்கள்.

உண்மையானவராக நடிப்பது, வாழ்க்கையில் உண்மையானவராக இருந்தாலன்றி முடியாது; உள்ளத்தில் உண்மையும் ஒளியும் இருந்தால்தான் ஒருவர்பெரும்புகழும் பெறமுடியும் என்று எனது கல்லூரி முதல்வர் சொல்லக்கேட்டிருக்கிறேன். அந்த வகையிலே தான் தமிழக முதல்வர் அவர்கள் தனித்து உயர்ந்து விளங்குகிறார்.

அதிகாரத்தைத் தேடி அவர் அலையவில்லை. அவரைத்தேடித் தான் அதிகாரம் வந்திருக்கிறது.

எல்லோரும் ஒற்றுமையாகச் செயல்படவேண்டும் என்ற நல்லெண்ணம் இவருக்கிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஜனநாயகத்தில் மக்கள் அனைவருமே மன்னர்கள் என்கிறோம். அதிலும் விவசாயிகள் பெருமன்னர்களாக இந்த நாட்டில் திகழ்கிறார்கள். அந்த வகையில் சாதாரணக் குடும்பத்திலே பிறந்து மன்னாதி மன்னனாக விளங்குபவர்தான் தமிழக முதல்வர்.

ஒருமைப்பாட்டுணர்வு இந்தியப் பிரதமருக்குள்ளது போலவே இவருக்கும் இருப்பதை அறிகிறேன். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலே இந்தியர்கள் ஒன்றுபட்டு இருக்கவேண்டும் என்ற கருத்தில் பாடுபடுகிறவர்களின் வரிசையில் தமிழக முதல்வர் அவர்கள் முன்னணியில் இருக்கிறார்.

—இவ்வாறு நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் அவர்கள் பேசியபின் உரையாற்றிய பேராயர் திரு. சுந்தர்கிளார்க் பேசுகையில்-''நான் கிறிஸ்தவர்களுக்குத் தலைவனென்றாலும் இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராக ஏற்று நான் வணங்குகிறேன். சென்னையிலுள்ள கதீட்ரல் சாலையைப்



பெயர் மாற்றும் பிரச்சினை வந்தபோது, நான் அந்தப் பெயருக்குள்ள பெருமையை எடுத்துச் சொல்லி அதை மாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதை ஏற்றுக் கொண்டதற்காகவும், வீரமாமுனிவர் விழாவுக்குப் பெருநிதி உதவியமைக்காகவும் முதல்வர் அவர்களுக்குக் கிறிஸ்தவ சமுதாயத்தின சார்பில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

**சிவசங்கர் :**

மாண்புமிகு மத்திய பெட்ரோலிய-ரசாயன அமைச்சர் திரு. சிவசங்கர் பேச்சு விவரம் வருமாறு:

வரலாற்றுப் புகழ்மிக்க இந்த விழாவில் நான் கலந்து கொள்ளுவது திரு எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டின முதலமைச்சராக இருக்கிறார் என்பதற்காகவோ, முன்பு அவர் தலைசிறந்த நடிகராக இருந்தார் என்பதற்காகவோ அல்ல; நாட்டு மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட ஒரு நல்ல மனிதராக இருக்கிறார் என்பதாலயே நான் இங்கு வரச் சம்மதித்தேன்.

கல்வியில் சிறந்தவர்களுக்கும், வித்தகர்களுக்கும் பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்குவது எப்போதும் நிகழக்கூடியது தான். ஆனால் மனிதாபிமானத்தின் மாட்சியறிந்து ஏழைகள் வாழ்வு ஏற்றம் பெறப் பாடுபட்ட ஒருவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியிருப்பதானது பல்கலைக் கழகத்திற்கே புகழ் சேர்ப்பதாகும்.

ஒவ்வொரு மனிதன் வெற்றிக்கும் ஒரு பெண் அடிப்படையாக இருப்பதாகச் சொல்லுவார்கள். அந்த வகையில் இவர், இந்த அளவுக்கு வளர ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும் அவருடைய தாய்க்கு நன்றி செலுத்துகிறேன். இந்த மாமனிதன் உருவாக அந்தத் தாயின் ஆசியே காரணமாகும்.

ஏழைகளுக்கு நன்மை செய்வதில் என்னைப் பொருத்தமட்டில் இந்தியப் பிரதமரும், தமிழகமுதல்வரும் ஒன்றாகவே தெரிகிறார்கள்.

—இவ்வாறு மாண்புமிகு மத்திய பெட்ரோலிய - ரசாயன அமைச்சர் உரையாற்றினார்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் பேசுகையில்-''இந்த விழா தனி மனிதனுக்கு எடுக்கப்படுகிற விழா அல்ல; அமரர் அண்ணா அவர்கள் எத்தகைய லட்சியத்தை நிறைவேற்றப் பாடுபட்டாரோ அதை ஈடேற்றும் வகையில் அண்ணாயிசம் கண்ட-ஐம்பதாண்டுக் காலாமகத் தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்து வருகிற ஒரு நந்நுலத்திற்கு - தென்னகத்தின் தலைமகனுக்கு எடுக்கப்படுகிற விழாவாகும்'' என்று குறிப்பிட்டார்.

பழனியாண்டி

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவரான திரு. எம்.பழனியாண்டி பேசியதாவது:

தேச ஒற்றுமைக்காக, ஒருமைப்பாட்டுக்காக யாரெல்லாம் பாடுபடுகிறார்களோ, அவர்களைப் பாராட்டுவதை நாங்கள் பாரம்



பர்யக் கடமையாகக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் தமிழக முதல்வரைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டுச் சிறுவர்கள் நெஞ்சில், தான் நடித்த படங்களின மூலம் வீரத்தை விளைத்தவர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள். அப்படி முப்பதாண்டுக் காலம் கலையுலகில் இருந்து பாடுபட்டவருக்கு டாக்டர் பட்டம் அளித்திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

நான் தொழிற்சங்கத் தலைவனாக இருப்பவன். என்னதான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் தொழிலாளர் பிரச்சினைகளைத் தாய்ப்பாசத்தோடு அணுகக்கூடியவர் நமது முதல்வர் என்பதை நான் அனுபவ ரீதியில் கண்டிருக்கிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை, இதுவரை இல்லாதபடி ஐ.நா. சபைக்கு ஒருவரை அனுப்பி பேசச்செய்திருப்பது ஒரு பாராட்டத்தக்க விஷயம்.

—இவ்வாறு திரு.எம்.பழனியாண்டி பேசியபின், அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகப் பொதுச் செயலாளர் திரு.ப.உ. சண்முகம் பேசுகையில்-''டாக்டர் பட்டத்தால் சிலர் இங்கே பெருமை பெற்றிருக்கலாம். ஆனால், டாக்டர் பட்டமே! நீ எங்கள் புரட்சித் தலைவரிடம் வந்து சேர்ந்ததால் பெருமை பெற்றிருக்கிறாய். நீ வாழ்க!'' என்றார்.

விழாவில் பங்கேற்ற முக்கிய விருந்தினர்களுக்கெல்லாம் விழாக் குழு சார்பில் கேடயம் வழங்கப் பட்டதுடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

**கருத்தரங்கம்**

மாலை 5 மணியளவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் 'அனைத்து வடிவிலும் அவரே' எனும் தலைப்பில் கருத்தரங்கம் தொடங்கியது.

பேராசிரியர் திரு.பா.நமசிவாயம் 'கலையரசர்' எனும் தலைப்பிலும், பேராசிரியர்திரு. சோ சத்தியசீலன் 'அரசியல் வித்தகர்' எனுந் தலைப்பிலும், பேராசிரியர் திரு. இரா.செல்வகணபதி 'இலக்கியத் தென்றல்' எனுந் தலைப்பிலும், பேராசிரியர் திரு. கோ.சாரங்கபாணி 'பண்பாளர்' எனுந் தலைப்பிலும், பேராசிரியர் திரு.தி.இராசகோபாலன் 'மக்கள் தலைவர்' எனுந் தலைப்பிலும், வயலின் மேதை திரு.குன்னக்குடி வைத்தியநாதன் 'இசைஞானி' எனுந் தலைப்பிலும், திருமதி [illegible] 'பொன்மனச் [illegible]' [illegible] தலைப்பிலும், தமிழ் [illegible]

துறை இயக்குநர் திரு.சிலம்பொலி சு.செல்லப்பன் 'கொடைவேந்தர்' எனுந் தலைப்பிலும் உரையாற்றினர்.

**குன்றக்குடி அடிகளார்**

தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசியதாவது:

கலை கலைக்காகவே என்பது ஒரு சித்தாந்தம்; இன்னொன்று கலை வாழ்க்கைக்கே என்பது. நமது தமிழக முதல்வர் அவர்கள் கலை வாழ்க்கைக்காகவே என்ற சித்தாந்தத்தில் நம்பிக்கை உள்ளவர். எனவேதான் அவர் கலை அரசராகத் திகழ்கிறார்.

நடிப்பில் கூட அவர் மற்றவர்க்குத் தீமை செய்தவரில்லை.

அரசியலிலிருந்து -அதுவும் குடியாட்சி நாட்டில் யாரும் விலக முடியாது. ஆனால், கட்சிகளின் காரணமாகக் கச்சைகட்டிக் கொண்டிருப்பதன் காரணமாகச் சிலரால் நல்லதைக்கூட பாராட்ட முடியாத நிலை இருப்பதைக் காண்கிறோம்.

தன் கட்சிக்காரர்களுக்கு மட்டுமே நல்லது செய்ய எண்ணும் எந்த அரசியல் தலைவனாலும் உயர முடியாது; தன் கட்சிக்கும் அப்பாற்பட்டுச் சிந்திப்பவனே உயரமுடியும். அதற்கு உதாரணம் தான் நம்முடைய புரட்சித்தலைவர்.

முதல்வர் அவர்களின் வாழ்வும் வாக்கும் நமக்குச் சொந்தம்; அவரது ஆட்சி தமிழ்நாட்டுக்குச் சொந்தம். அவர் வாழ்க-வெல்க!

—இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசிய பின்-மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி நன்றி கூறினார்.

**இசை நிகழ்ச்சி**

இரவு 7 மணியளவில், குழந்தை மேதை திரு. யு. சீனிவாஸ் மாண்டலின் இசைநிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த இசைக்குழுவில்-கலைமாமணிகள் திரு. வலங்கைமான் ஏ. சண்முகசுந்தரம் (தவில்) திரு.சிக்கல் ஏ.பாஸ்கர் (வயலின்), திரு.தஞ்சை உபேந்திரன்(மிருதங்கம்), திரு.டி.எம்.விநாயக்ராம் (கடம்) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இதைத் தொடர்ந்து நடந்த இன்னிசைச் , செல்வன் சீர்காழி டாக்டர் ஜி.சிவசிதம்பரம் இசை நிகழ்ச்சியில் திரு.மதுரை கே. ராமையா(வயலின்), திரு.கொச்சி பி.எஸ்.பாஸ்கர் (மிருதங்கம்), திரு.பி.சுகுமாரன் (கடம்), கலைமாமணி திரு.ஆர்.வி.பக்கிரிசாமி (முகர்சிங்), திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி (தம்புரா), ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

**பாராட்டரங்கம் :**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றமைக்குச் சேலத்தில் நடத்தப்பட்ட பாராட்டுவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நேரு கலையரங்கில் 11.12.83 ஆம் நாள் காலையில் பத்மஸ்ரீ நாமகிரிப்பேட்டை திரு.கே.கிருஷ்ணன் நாதசுர இசை நிகழ்ச்சியோடு தொடங்கியது.

10.15 மணியளவில். மாண்புமிகு திட்டக்குழு துணைத் தலைவர் திரு மா.முத்துசாமி வரவேற்புரையோடு பாராட்டரங்கம் தொடங்கியது. கவிதையிலேயே அமைந்திருந்த வரவேற்புரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பற்றி-'யுத்தம்



சேலத்தில், ராஜாஜி பிறந்த நாளன்று (10.12.83) ராஜாஜி சிலைக்கு மாண்புமிகு முதலமைச்சரும் மற்றும் அமைச்சர்களும், சட்டமன்றத் தலைவரும், மேலவைத் தலைவரும் மாலையணிவித்தனர்.



அதிகமின்றி யூகமாய் அரசேறியவர்...கர்ணனிலும் சிறந்த வள்ளல்...சிறப்பாக இவர் செய்கின்ற ஆட்சி மறப்போர் எவருமில்லை; மறுப்போரும் எவருமில்லை.... இலங்கைத் தமிழர்தம் இன்னல்களைவதற்கு சலங்கை ஒலி எழுப்பாமல் சாந்தமுடன் சிந்தித்து நலன்கள் பல செய்துவரும் நாயகராம் நம்முதல்வர்..' என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தது.



நிகழ்ச்சித் தலைமையேற்ற மேதகு புதுவை ஆளுநர் திரு பிரபாகர் ராவ் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

1940ஆம் ஆண்டிலேயே புகழ் பெற்ற நடிகராக நான் தமிழக முதல்வரை அறிந்திருக்கிறேன். திரைப்பட நடிகராக இருந்த போதும், அரசியல்வாதி ஆன போதும், முதலமைச்சர் ஆகிவிட்ட இப்போதும் அவரிடம் நிலைத்திருக்கும் மாண்பு ஏழை மக்களிடம் அவர் காட்டும் இரக்கமேயாகும்.

மற்றபல நடிகர்களைப்போல அல்லாமல், தன்னுடைய சொந்தப் பணத்தையே ஏழை எளிய மக்களுக்கு அள்ளித் தந்தவர் இவர். திரு.எம்.ஜீ.ஆர். செய்யும் தர்மம் விளம்பரத்திற்கோ வீண் ஆடம்பரத்திற்கோ செய்யப்படுவதில்லை; சிறு வயது முதற்கொண்டே இவர் இதயத்தில் இயற்கையாகவே ஊற்றெடுக்கும் இரக்க உணர்ச்சியே இதற்கெல்லாம் காரணமாகும்.

பல்கலைக் கழகத்தார் இந்த ஏழை மக்களின் இதயநேசனின் மகிமையைப் புரிந்துகொள்ள பல ஆண்டுகள் ஆகியுள்ளன. எம்.ஜீ. ஆர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கி சென்னைப் பல்கலைக் கழகம் தனக்குப் பெருமை தேடிக்கொண்டுள்ளது.

—இவ்வாறு மேதகு புதுவை ஆளுநர் பேசினார்.

அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வா.செ.குழந்தைசாமி பேசுகையில்''அரசியலில் நேர்மை இருக்கவேண்டுமானால் முழுநேர அரசியல்வாதிகளால் அதை உண்டாக்க முடியாது; ஒரு தொழிலை மேற்கொண்டு அரசியலிலும் இருப்பவர்கள் வந்தால்தான் முடியும் என்றார் ராஜாஜி. அந்த வகையில் நமது முதல்வர் அவர்கள் உருவானதாலேயே இன்று ஆரோக்கியமான அரசியலை நாம் காணமுடிகிறது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.எஸ்.டி. சோமசுந்தரம் உரையாற்றுகையில்-''நாட்டைச் சீராக்கவும், சமுதாயத்தைச் செம்மைப்படுத்தவுமே நமது முதல்வர் அவர்கள் கலையைப்பயன்படுத்தினார்கள். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று அண்ணா சொன்னதை நிறைவேற்றி வருகிறார்கள். வாய்மை, நட்பு, கடமை, கட்டுப்பாடு, தியாகம், உழைப்பு ஆகியவற்றின் மொத்த உருவமே நமது முதல்வர்'' என்று குறிப்பிட்டார்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள்பேசுகையில் —''சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களை முன்னணிக்குக் கொண்டுவர அயராது பாடுபடும் தகுதிமிக்க முதல்வர் அவர்களுக்கு -தகுதியுடையவர்களால் தகுந்த நேரத்தில் டாக்டர் பட்டம் தரப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்'' என்றார்.

மாண்புமிகு நீதிபதி மு.மு.இஸ்மாயில் உரையாற்றுகையில் — ''பாராட்டு பொருத்தமானவருக்குச் செய்யப்படாவிட்டால் அது நையாண்டி ஆகிவிடும்; பாராட்ட வேண்டியவரைப் பாராட்டாவிட்டால் செய்யவேண்டிய கடமையைச்செய்யத் தவறியதாகிவிடும். அந்த வகையிலேயே தமிழக முதல்வர் அவர்களுக்கு சென்னை பல்கலைக் கழகம் டாக்டர் பட்டமளித்துள்ளது'' என்று சொன்னார்.

தமிழ்ப் பழங்கலை இயக்கக இயக்குநர் திரு.திருக்குறள் வீ. முனுசாமி பேசும்போது -''ரொட்டித் துண்டிலே கடவுளைக் காண்கிறேன் என்றார் காந்தியார்; ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்றார் அண்ணா; சத்துணவுத் திட்டத்தின் மூலம் கடவுளைக் காண்கிறேன் என்று பாடுபட்டு வருகிறார் நம் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அந்த நல்ல மனத்தைப் பாராட்டுகிறேன்'' என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு.இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுகையில்— ''இந்தப் போற்றுதலும் புகழுதலும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு மகிழ்வூட்டுமோ இல்லையோ-இதன்மூலம், குழந்தையைப் பாராட்டுவதிலே தாய்க்கு ஏற்படும் மகிழ்ச்சி நமக்கு ஏற்படுகிறது. அண்ணா அவர்களிடம் எப்படிப்பட்ட அடக்க உணர்வை நாம் கண்டோமோ அப்படிப்பட்ட அடக்க உணர்வை நாம் நம் புரட்சித் தலைவர் அவர்களிடம் காண்கிறோம். இத்தகைய பண்புதான் அவரை இந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. ஒரு நாட்டை நல்ல சட்டங்கள் ஆள்கின்றன என்பதைவிட, நல்லவர் ஆளவேண்டும் என்று சாக்ரடீஸ் சொன்னது போல் தமிழகத்திலே இன்றைக்கு ஆட்சி அமைந்திருக்கிறது''என்று குறிப்பிட்டார்.

**கவியரங்கம் :**

மாலை நிகழ்ச்சிகள் 3 மணியளவில் கவிஞர் திரு. சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டோடு தொடங்கின.

அதைத் தொடர்ந்து - 'புரட்சித் தலைவர் என் பார்வையில்' என்ற பொதுத் தலைப்பில் கவியரங்கம் தொடங்கியது.'தேயாத சந்திரன்' எனுந் தலைப்பில் கவிஞர் முத்துலிங்கமும், 'சாயாத குன்றம்' எனுந் தலைப்பில் கவிஞர் இளந்தேவனும், 'ஓயாத தென்றல்' எனுந் தலைப்பில் கவிஞர் கங்கை மணிமாறனும்,

'பொய்க்காதமுகில்' எனுந்தலைப்பில் கவிஞர் வீரபாண்டியனும், 'கைக்காத கடல்' எனுந் தலைப்பில் கவிஞர் மணிமொழியும், 'காயாத சூரியன்' எனுந் தலைப்பில் கவிஞர் செந்தமிழ்மாறனும், புதுக் கவிஞர் பு.த.புகழேந்தியும் கவிதை பாடினார்கள்.

மாண்புமிகு மேலவைதுணைத் தலைவர் கவிஞர் திரு.புலமைப்பித்தன் கவியரங்கத் தலைமையேற்றுத் தலைமைக் கவிதை பாடுகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டி—''வருடம் ஒன்று கடந்துவிட்டால் எல்லோருக்கும் வயது ஒன்று கூடுகிறது; உனக்கு மட்டும் வயது ஏன் கழிகிறது?...உன்னை நெருங்கும் மரணத்திற்கே மரணம் வருகிறதே!.. பரட்டைத் தலை பச்சைக் குழந்தைக்கு இரட்டை இலைபோட்டு நீ அன்னம் படைத்தாய்.. பெரிய எழுத்தில் உன் பெயர் பதிக்காமல் பெரியார் எழுத்தில் உன்பெயர் பொறிக்கச் செய்தாய்..எடைக்கு எடை வெள்ளி நீ கேட்டதில்லை; உண்மையில் எடைக்கு எடை தங்கமாக இருக்கிறாய்..சந்திரனுக்குத் தண்ணொளி தருவது சூரியன் என்பது பொய்; உதய சூரியனுக்கே சுடரொளி தந்தது சந்திரன்-இராமச்சந்திரன்'' ... என்றெல்லாம் தன் கவிதைவரிகளால் குறிப்பிட்டார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.இரா.அருணாசலம் நன்றி கூறினார்.

**நிறைவு விழா!**

நிறைவு விழா, மகாத்மாகாந்தி விளையாட்டரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு சி.பொன்னையன் வரவேற்புரையாற்றுகையில்-''சமுதாய மீட்சி தருவதற்காகவே ஆட்சி நடத்துகிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை நாங்கள் எங்கள் இதய தெய்வமாகக் கொண்டிருக்கிறோம். தமிழ் இவரால் வாழ்கிறது; தமிழர்கள் இவரால் தகுதி பெறுகிறார்கள். தமிழன்னை தாங்கொணா மகிழ்ச்சியிலே திளைக்கிறாள். புரட்சித் தலைவர் அவர்கள் இப்போது இங்கே வருகை தந்திருப்பது-இங்கு வந்துள்ள மற்ற மாநில முதல்வர்களை வரவேற்பதற்காகவும் அவர்களை மதிக்கும் விதத்திலும் தானே தவிர வேறல்ல'' என்றார்.

விழாத் தலைமையேற்ற டாக்டர் எம்.ஏ.எம்.இராமசாமி பேசும்போது -''இதுவரை பலரும் பலவகையில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள்; ஆனால் வள்ளல் தன்மை, கலையுலகத் திறமை, மனிதாபிமானம் ஆகியவற்றுக்காக முதன் முதல் டாக்டர் பட்டம் பெற்றிருப்பவர் தமிழக முதல்வர் ஒருவரே. இதற்காக ஊருக்கு ஊர் மட்டுமல்ல; வீதிக்கு வீதி-வீட்டுக்கு வீடு நாம் பாராட்டுவிழா நடத்திடவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

திரைப்பட இயக்குநர் திரு. பாரதிராஜா பேசுகையில்-''சென்னையில், திரைப்பட உலகைச் சேர்ந்த நாங்கள் நடத்திய பாராட்டு விழாவை விட இங்கே சிறப்பாக நடக்கிறது. இதற்குக் காரணம், விழா நாயகரான மாண்புமிகு முதல்வர் அவர்கள் தான். அவருக்கு யார் விழா எடுத்தாலும் ஒன்றுக்கொன்று சிறப்பாகவேஇருக்கும்'' என்றார்.

**கர்னாடக முதல்வர்;**

மாண்புமிகு கர்னாடக முதல்வர் திரு இராமகிருஷ்ணஎக்டே அவர்கள் பேசியதாவது:—

கர்னாடக மக்கள் சார்பிலும், அரசு சார்பிலும் நான் தமிழக முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பே அவர் பல சிறப்புக்களை பெற்றிருந்தாலும் கூட-நம் நாட்டுக்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கு ஆற்றிய தொண்டுக்காகவே இந்தப் பட்டம் அளிக்கப்பட்டுள்ளது. திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆன பிறகு இங்கே பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும், ஏழை எளிய மக்களும் ஏற்றம் பெற்று வருவதை நான் கவனித்திருக்கிறேன்.

இந்தியப் பிரதமரோடு திரு. எம்.ஜி.ஆர். மிகுந்த நுண்ணறிவோடு உரையாடுவதை நான் பார்த்திருக்கிறேன்.இவர் திறமையைப் பிரதமர்நன்கறிந்துள்ளார்.

தென்னக முதல்வர்கள் மூன்று பேர் இங்கே கூடியிருக்கிறோம். நாங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஒன்றுபட்டிருந்தால் எந்தக் காரியத்தையும் எளிதில் சாதிக்க முடியும். தென் மாநில முதல்வர்கள் கூடிப்பேசி பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதில் என்ன தவறு?

தென்னக முதல்வர்களுக்குத் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னின்று தலைமையேற்க வேண்டும். மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்குமிடையே ஒற்றுமையை உடன்பாட்டை உருவாக்க வேண்டும்.





**ஆந்திர முதல்வர்**

மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு என்.டி.ராமராவ் பேசியதாவது:

தமிழக முதல்வருக்கு இன்று இங்கே நடக்கின்ற இந்த விழா, தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா முழுமையுமே கொண்டாடப்பட வேண்டிய விழாவாகும். சாதாரண மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றிருக்கும் எம்.ஜி. ஆர். மாபெரும் மக்கள் சக்தியின் தலைவராவார்.

மக்கள் அவரை நம்புகிறார்கள். தன்னை நம்புகிறவர்களை அவர் என்றுமே ஏமாற்றுவதில்லை.

சென்னை நகரில் குடிநீர்ப் பிரச்னை பல ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது. ஆந்திராவில் எங்கள் தெலுங்கு தேசக் கட்சி



ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கே மாதத்தில் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் தீட்டி சென்னைக்குக் குடிநீர் வழங்க முன்வந்தோம். இப்படி அண்டை மாநிலங்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் நடந்து கொண்டால் எத்தனையோ பிரச்னைகளைத் தீர்க்க முடியும்; எவ்வளவோ சாதனைகளைச் செய்ய முடியும்.

—இவ்வாறு மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்கள் பேசியபின், நடிகை கே.ஆர்.விஜயா பேசும்போது ''எங்கள் கலைக்குடும்பத்தைச் சேர்ந்த திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே முதலமைச்சராக இருக்கிறார். ஆந்திராவில் திரு.என்.டி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார். புதுவையில் பழம்பெரும் நடிகரான திரு.பிரபாகர் ராவ் அவர்கள் ஆளுநராக இருக்கிறார். அமெரிக்காவில் ரீகன் ஜனாதிபதியாக இருக்கிறார். உலகமே நாடக மேடை என்று சொன்னவர் நல்ல தீர்க்கதரிசிதான். இதற்காக கலையுலகைச் சேர்ந்த நாங்களெல்லாம் பெருமைப்படுகிறோம்'' என்றார்.

இந்திப் படவுலகில் பிரபலமாக விளங்கும் நடிகை ஹேமமாலினி பேசுகையில்-''அறிவில் ஆற்றலில் ராஜதந்திரத்தில் கலையுலகைச் சேர்ந்தவர்கள் யாருக்கும் சளைத்தவர்களல்ல என்பதை உலகறியச் செய்த தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை மனமார வாழ்த்துகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

திரைப்படக் கதாசிரியரும் வசனகர்த்தாவும் இயக்குநருமான திரு.கே.பாக்யராஜ் பேசும்போது;''தமிழ்நாட்டு மக்களுக்குத் தாய் போன்றவர் எம்.ஜி ஆர். இந்த டாக்டர் பட்டம் திரைப்படங்களில் நடித்துக்கொண்டிருந்தபோதே அவருக்குக் கிடைத்திருக்கவேண்டும்'' என்றார்.

நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் எம்.பி. பேசுகையில்— ''அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றதற்காக முதலில் கலையுலகம் பாராட்டியது; இப்போது அரசியல் உலகம் பாராட்டுகிறது. தேசிய ஒருமைப்பாட்டிலே அன்னை இந்திராகாந்தியோடு தோளோடு தோள் நின்று பாடுபடும் இவர் செய்கிற நல்ல காரியத்திலெல்லாம் நான் உடனிருப்பேன்'' என்று கூறினார்.

**முதல்வரின் ஏற்புரை**

தமக்களித்த பாராட்டுகளுக்கெல்லாம் நன்றி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

நான் டாக்டர் பட்டம் பெற்றதற்காக என்னை வாழ்த்தி நேற்று முதல் இன்றுவரை திருவிழா போல விழாவினை நடத்தி அன்பு காட்டிய அனைவருக்கும் நான் முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



பதவிகளெல்லாம் வந்தால் வரும்; போனால் போகும்.நான் நடிகனாக இருந்தவன்; அந்த உணர்வை என்னால் மாற்றிக் கொள்ள முடியாது.

ஆந்திர முதல்வர் என்.டி.ஆர். அவர்கள் பேசும்போது என்னைப் பின்பற்றி நடப்பதாகச் சொன்னார்; நான் கொடுத்து வைத்தவன். கர்னாடக முதல்வர் ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் பேசும்போது தென் மாநிலங்களுக்கு நான் முன் நின்று வழிகாட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நான் வழிகாட்டத் தயார்; அதனை அவர் ஏற்றுக் கொள்ளத்தயாரா?

நமது உறவால் எந்த மாநிலத்திற்கும் இழப்பு வரக்கூடாது. எந்த மாநிலத்திற்கும் பாதகம் இல்லாத வகையில் தேசிய ஒருமைப்பாட்டுக்கு வலு ஏற்படுகிற வகையில் அவரவர் கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் நாம் முடிவுகளை எடுக்க வேண்டும். எங்களைப் பொறுத்தவரை அண்ணாவின் கொள்கைகளிலிருந்து பிறழாத வகையில் முடிவெடுப்போம். அதற்கு என்.டி.ஆரும், ஹெக்டேயும் ஒத்துழைப்பதானால் தலைமை ஏற்க நான் தயார்.

(சரி என்பது போல் கர்னாடக முதல்வர் கையசைக்கிறார்.)

இப்படி ஒற்றுமை ஏற்படுவது சிக்கலை ஏற்படுத்துவதற்காக அல்ல; அவசியமான நன்மைகளைப் பெறுவதற்கும் தேசிய ஒருமைப்பாடு வலுப்பெறுவதற்குமேயாகும்.

சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் கொண்டுவரும் திட்டம் நீண்ட காலமாக ஆலோசிக்கப்பட்டு வந்தது. பிரதமர் இந்திராவும் அது பற்றிப்பேசினார். அதற்குப் பிறகு நானும் ஆந்திர முதல்வர் என்.டி.ஆரும் அண்ணன் தம்பியாகப்பேசி நல்லதோர் முடிவெடுத்தோம். இதைப்போல கர்நாடகத்துடனும் பேசவிருக்கிறோம். ஹெக்டே மிக நல்ல உள்ளம் கொண்டவர்,கர்நாடகத்தை வறட்சியில் விட்டுவிட்டு தமிழ

## தூத்துக்குடி துறைமுகத்தின் நகரப் பிரிவில் ஒரு மருத்துவ மனை



தூத்துக்குடித் துறைமுகப் பொறுப்புக் கழகம் 1.4.1979ல் உருவாக்கப்பட்டது. பெருந் துறைமுகங்களுக்கான 1963-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ், நகரி லுள்ள பழைய நடுத்தரத் துறை முகம், புதிதாக ஏற்றுபடுத்தப் பட்ட தூத்துக்குடித் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் கீழ்வந் தது. எனவே பழைய துறைமுகத் தொழிலாளர்கட்கும் மருத்துவ வசதி அளிக்க வேண்டியது, துறை முகப் பொறுப்புக் கழகத்தின் பொறுப்பாகிவிட்டது. துறைமுக பொறுப்புக்கழகம் அமைக்கப் படும்வரை நடுத்தரத் துறைமுகத் தில் மருத்துவ வசதிக்கான அமைப்பு ஏதும் கிடையாது. தூத்துக்குடி நகரில், 1979ல் வாட கைக் கட்டடம் ஒன்றில், ஒரு மருத்துவமனை இயங்கி வந்தது. நாள்தோறும் 200 நோயாளிகள் வீதம் சுமார் ,1350 குடும்பத்தி னர், மருத்துவமனையிலே வெளி நோயாளிகளாக மருத்துவ வசதி பெற்று வருகின்றனர். மருத்துவ மனையில் தங்கி மருத்துவம் பெறும் அவசியம் உள்ள நோயா ளிகள் புதிய துறைமுகப் பகுதி யில் இருக்கும் பெரிய மருத்துவ மனைக்கு அனுப்பப்படுகிறார்கள்.

எந்த வேளையிலும் ஊழியர் கட்கு நல்ல மருத்துவ வசதி வழங்குவதற்காக நகரிலுள்ள மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் அமைக்கத் தீர்மானிக் கப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. கீழ்ப்பகுதியில் மருத்துவ மனையும், அவசர நேரத்தில் உடன் மருத்துவம் அளிப்பதற்கு வாய்ப்பாக மாடி யிலே மருத்துவ அலுவலர் குடி யிருப்பும் அமைக்கப்படவுள்ளன. நவீன வசதிகளுடன், மருத்துவ அலுவலர் அறை, மருந்து வழங் குமிடம், சோதனைச்சாலை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக இரணங்களுக்கு மருந்து கட்டும் அறைகள், ஊசி போடும் அறை முதலிய பல்வேறு வசதிகளுடன் மருத்துவமனை அமைக்கப்பட்டு வருகிறது. அலு வலக அறையும், நோயாளிகள் காத்திருக்கப் பெரியதோர் இட மும் இக்கட்டடத்திலேயே உண்டு. இரவும் பகலும் 'ஆம்புலன்ஸ்' வசதி செய்யப்பட்டுள்ளது.

ரூ. 5.34 இலட்சம் மதிப்பீடு கொண்ட இம்மருத்துவ மனை யின் கீழ்த்தளம் 3006 சதுர அடி பரப்பளவும் மாடி 1053 சதுர அடி பரப்பளவும்கொண்டதாகும். 5 திங்களுக்குள் மருத்துவமனைக் கட்டடம் உருவாக்கப்பட்டுவிடும்.

## வ.உ.சி. தளத்தில் சிற்றுண்டி விடுதி

தூத்துக்குடித் துறைமுகத்தில் இணைக்கப்பட்ட ஏற்றுமதி-இறக்குமதி முறை நடைமுறைக் குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், ஏற்றுமதி-இறக்குமதித் தொழிலாளர்கள் கப்பல் ஏஜண்டுகளால் வேலைக்கு அமர்த்தப்பட்டனர்; தொழிலா ளர்கட்கான உணவும் அந்த 'ஏஜண்டுகளால்' தான் கொடுக் கப்பட்டு வந்தது. இதற்காகத் தற்காலிக உணவுக் கூடங்கள் துறைமுகத்தினரால் நிறுவப்பட்டு ஏஜண்டுகளினால் உணவு சமைக் கப்பட்டு, தொழிலாளர்கட்கு வழங்கப்பட்டு வந்தது. துறைமுக உணவு விடுதியும் அவர்களின் தேவைகளுக்குத் துணை நின்றது.

தளத் தொழிலாளர் விதிகளில் கண்டுள்ள சட்டப்பூர்வமான தேவைகளுக்கேற்ப, இணைக்கப் பட்ட ஏற்றுமதி -இறக்குமதி முறை இங்கு அமலாக்கப்பட்டதை யடுத்து, தொழிலாளர் உணவு விடுதி ஒன்றினைத் தளத் திலே அமைப்பது அவசியமா யிற்று. விடுதியின் உணவுக் கூடம், தொழிலாளர்கள் வேலையில்லா வேளையிலேதொழிலாளர்களுக்கு ஓய்வறையாகவும் பயன்படும்.

ஒரே நேரத்தில் 200 பேர் அமர்ந்து உணவருந்தக்கூடிய அரிய வசதி படைத்தது. வ.உ.சி. தளத்தில் மூன்று வேலைப் பிரிவு களிலும் பணிபுரியும் 2000 தொழி லாளர்கள் இவ்வுணவு விடுதியி னால் பயனடைவர். சரக்கு ஏற்று மதி-இறக்குமதித் தொழிலாளர் களின் நெடுநாளையத் தேவை யினை இவ்வுணவு விடுதி நிறை வேற்றி வைத்துள்ளது.

---

கத்திற்கு உதவவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. இதே போலத் தமிழகம் வறண்டுபோக வேண்டுமென்று அங்குள்ளவர் களும் நினைக்கமாட்டார்கள்.

காவிரி நீர்ப்பிரச்னையில் நல்ல முடிவு ஏற்படும். அப்போது அதை எதிர்க் கட்சிகள் தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடாது. கர்நாடக அரசுக்கு அங் குள்ள எதிர்க்கட்சிகள் தொல்லை தரக்கூடாது என்று தமிழ்நாட்டி லும் வெளி நாட்டிலும் உள்ள 7 கோடித் தமிழர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் என்னை நல்ல மனித னாக - மனிதாபிமானம் மிக்கவ னாக ஏற்றுக்கொண்டு வாழ்த்து வதற்கு நான் என் இதயபூர்வ மான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு தமி ழக முதல்வர் அவர்கள் பேசினார்.

சட்டப்பேரவைத் தலைவர் திரு.க.இராசாராம் நன்றி கூறி னார்.

### ஆந்திராவுக்கு நிதியுதவி

சேலத்தில்நடந்தகலைவிழாவின் மூலம் வசூலாகியிருந்த 18 இலட் சம் ரூபாயை முதலமைச்சர் நிதிக் கென ,சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இரா.வரதராசலு இ.ஆ.ப., மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

இந்தத் தொகையினை-புய லால் பாதிக்கப்பட்ட ஆந்திர மாநில மக்களுக்கு உதவுமாறு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்களிடம் தமிழக அரசு சார் பில் அளித்தார்.

இந்தப் பாராட்டு விழாகாரண மாக சேலம் நகரமே இருநாளும் விழாக் கோலம் பூண்டிருந்தது.

### இசை நிகழ்ச்சி

விழா நிகழ்ச்சி முடிந்த பின் னர் சங்கர்-கணேஷ் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. திரு. டி.எம். சௌந்தரராஜன், திருமதி வாணிஜெயராம், திரு. தீபன் சக்ரவர்த்தி ஆகியோர் இதில் பங்கேற்றுப் பாடினார்கள்.



# சேலத்துத் தமிழறிஞர்கள்

டாக்டர் **சிவ அரசி முத்துக்காளத்தி**

கொங்கு நாட்டுத் தமிழ் நய மிக்கது; இனிமை நிறைந்தது; கேட்கும் மக்களை மகிழ்விப்பது. சேலம் மாவட்டம்பைந்தமிழைப் பாங்குற வளர்ப்பதில் சிறப் பிடம் பெறுவது.

இங்குள்ள கொல்லிமலை சங்க இலக்கியங்களிலேயே இடம் பெறும் பேறு பெற்றது. வில் லாண்மை மிக்க ஓரியால் புகழ் பெற்ற கொல்லிமலையும் காவிரி யும் இலக்கியச் சிறப்பு வாய்ந் தவை.

திருச்செங்கோடு சேலத்தின் முக்கிய நகரங்களுள் ஒன்று, இது சிலம்பில் இடம் பெறுகின் றது.

தமிழ் மந்திரமான திருமந்தி ரத்தை இயற்றிய திருமூலர், தம் நூலில் சேலம் கஞ்சமலைச் சித் தரைப் பற்றிக்குறிப்பிடுகின்றார். கஞ்சமலையில் பல முனிவர்களும் சித்தர்களும் வாழ்ந்தமை பற்றிய குறிப்புகளும் சான்றுகளும் உள. திருமூலர் கஞ்சமலையான் என் பானைத் தன வழிவந்தவனாகக் குறிப்பிடுகின்றார், ''மந்திரம் பெற்ற வழிமுறை....'' என்று தொடங்கும் தம் பாடலில்.

மொழிவழி இறையுணர்வைத் தட்டிஎழுப்பி, பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்த காலம், சமய மறுமலர்ச்சிக்காலம். சமயப் பெரியார்களின் பாடல் களில் திருச்செங்கோடு, சேலம் கிளிக்காட்டு ஒளியிறையனார் (சுகவனேசுவரர்) முதலியகோயில் களும் இடம் பெற்றுள்ளன.

கம்பர் பாடியதாகச் சொல்லப் படும் தனிப்பாடல் ஒன்றில் கொங்குநாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. 'நீரெல்லாம் சேற்று நாற்றம் நிலமெலாம்,... . காருலாம் கொங்கு நாட்டைக் கனவிலும் நினைக்கொணாதேன்' என்பது அந்தப்பாடல்.

கொங்குநாட்டில், கொஞ்சு தமிழ் வளர்த்த பெரியோர் பல ராவர். அவருள் முதன்மை யானவர், தேசிய இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்ட - செந் தமிழைப் பேணி வளர்த்த பெரியார் நாமக்கல் கவிஞராவர். ''கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது'' என்று பாடிய காந்திய வாதியான இவ ருடைய பாடல்கள், தமிழினத் திற்குப் பெருமை சேர்ப்பன. 'தமிழன் என்று சொல்லாடா, தலைநிமிர்ந்து நில்லடா'! "தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குண முண்டு; அமிழ்தம் அவனது மொழியாகும்'' என்றெல்லாம் பாடிப்பரவசப் பட்டவர். தமிழ் மொழி வளர்ச்சியில் இவர் பங்கு அளப்பரியது.

தமிழன் இதயம், சங்கொலி, அவனும் அவளும் என்பன போன்ற நூல்களை இயற்றிய நாமக்கல் கவிஞர், 'என் கதை' என்ற பெயரில் தம் வரலாற்றை எழுதியுள்ளார். இலக்கிய நய மிகக வகையில் கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றுக்கு நயம் எழுதிய காந்தியக் கவிஞர் அவர்.

சேலம் மாவட்டத்தில் தோன் றிச் செந்தமிழ் வளர்த்தோர் பட்டியல் இன்னும் நீள்கிறது.

திராவிட மறுமலர்ச்சிக்காக எழுத்தாலும் பேச்சாலும் பணி யாற்றியவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் தி. வை. சொக்கப்பா, பொன்னம்பலனார், கவிஞர் தரங்கசாமி, நடேச உடையார், சலகை ப. கண்ணன், பாவலர் முத்துசாமி, கவிஞர் எஸ். டி. சுந்தரம் ஆகியோராவர்.

ஆங்கில 'எப்' ஒலியைத்தமிழில் உண்டாக்குதற்கு ஆய்த எழுத் தைப் பயன்படுத்தலாம் என்று கூறியவர் பா வே. மாணிக்க நாயக்கர். இவர் மிகச் சிறந்த பொறியியல் நிபுணரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை நூல்களில் சிறந்து விளங்கும் 'தஞ்சைவாணன் கோவை'க்குச், செந்தமிழ்ப்புலமை தோன்ற - பன்னூற் பயிற்சி யுடன் இலக்கண இலக்கியத்திறன் மிக்கதோர் உரை எழுதியவர், சொக்கப்ப நாவலர். கற்போர் உள்ளம் கவரும் அருமையான சிறப்புமிக்க உரை இவருடை யது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடு 'தனிச் செய்யுள் சிந்தா மணி' என்பது. இதன் பதிப்பா சிரியர் மு. ரா. கந்தசாமிக் கவி ராயர். இந்நூலின் ஒரு பாடலில் சேலம் கங்காதரன் எனும் புரவ லர் பேசப்படுகின்றார். இவர் தமிழ்ப்பணி சிறக்க, புலவர் களையும் கலைஞர்களையும் பேணிப் புரந்த பெருமை மிகு தமிழ்த் தொண்டர்.



நாமக்கல் கவிஞர்

''கோலமலர்ப் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்'' என்று ஞானசம்பந்தரால் பாடப் பெற்ற இடம் திருச்செங்கோடு. இந்த ஊரைச் சேர்ந்த முத்து சாமிக் கோனார் என்பவர்பெரும் புலவராவார்.

தெலுங்கு, வடமொழிஇரண்டி லும் வல்லுநரான இத்தமிழ்ப் புலவர், நினைவாற்றல் மிக்கவர். அட்டாவதானச் சிறப்புக்குரிய வர். இலக்கிய இலக்கண நூல் களையும் புராணங்களையும் பழுதறக்கற்றறிந்த புலவர், கொங்கு நாட்டு வரலாற்றைச் செம்மையாக அறிந்து கொள்ளப் பெரிதும் உழைத்தார். வரலாற்று நூல்கள், செப்பேடுகள், கல் வெட்டுகள் போன்ற வற்றை ஆய்ந்து பல உண்மை களைவெளிப்படுத்தினார். 'விவேக திவாகரன்' 'கொங்குவேள்' என் னும் செய்தித்தாள்களை வெளி யிட்டுத் தமிழ்ப்பணி புரிந்தார்

இவரது அச்சகத்தின் வழி பல நூல்களை வெளிவரச் செய்து, நல்ல பல நூல்களைத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்வித்தார். அவற்றுள் சில, கொங்கு நாட்டு ஊர்த்தொகை, அர்த்தநாரீசுவரர் மாலை, செங்கோட்டு மாலை சிவமலைக் குறவஞ்சி, திருச்செங்கோட்டுப் புராணம், திருச்செங்கோட்டுக் கலம்பகம், திருச்செங்கோட்டுப் பிள்ளைத் தமிழ், பாம்பலங்கார தருக்கக் கோவை என்பன.

சைவப் பேரவை ஒன்றை நிறுவி சோமசுந்தர நாயகர், பூவை கல்யாண சுந்தரமுதலியார் போன்றோர் உரைகளைக் கேட்கும் பெருவாய்ப்பினை மக்கட்கு வழங்கினார் இவர்.

புலவர் முத்துசாமிக் கோனாருடைய நூல்கள், திருச்செங்கோட்டு மான்மியம், திருப்பணி மாலை, மும்மணிக் கோவை, கொங்குமண்டல சதக உரை என்பனவாகும். அமர்நீதி நாயனார் வரலாறு, சண்டன்வரலாறு, புரந்தரதாசர் வரலாறு, சக்குபாய் வரலாறு ஆகியவற்றை இசைப்பாட்டில் அமைத்தவர்.

சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்ட புலவர்முத்துசாமி சேதுபதி அரசரால் பாராட்டப் பெற்றவர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகரால் அம்மடத்தின்சார்பில் பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கப் பெற்றவர் இவர்.

மொழியும் சமயமும் தம் இருகண்களெனப் போற்றித் தொண்டாற்றிப் பெரும் புகழ் பெற்றார்.

புலவர்கட்கெல்லாம் தலைமை சான்றவராக - புலமைத்திறனில் எல்லை கண்டவராக விளங்குபவர் அ. வரதநஞ்சையபிள்ளை. இவரது ஊர் கொங்கு நாட்டைச் சார்ந்த தாரமங்கலம். சேலம் மாவட்டத்தில் சிறப்புமிக்க இந்த ஊரில் பிறந்த புலவர், தான் பிறந்த ஊருக்குப் பெருமை சேர்க்கும்வகையில் விளங்கினார்.

பூவாமல் காய்க்கும் மரம் போல்,விதையாமல் முளைத்துப் பயன் தரும் வித்துப் போல், ஓதாமல் உணரும் மாமேதையாக விளங்கிய அவர், அப்பாசாமிப்பிள்ளை என்ற தம் தந்தையாரையே ஆசானாகக் கொண்டு, பள்ளி செல்லாமல் கல்வி கற்றவர்.

வடமொழி, தெலுங்கு இவற்றில் வல்லுநரான புலவர், சோதிடக் கலையிலும் சிறந்தொளிர்ந்தார். இசைக்கலை, நாடகக் கலையிலும் தெளிந்த புலமை உடைய இவர், நடமாடும் பல்கலைக்கழகமாகவே திகழ்ந்தார் என்றால் சரியாகும்.

புலவர்களேயன்றி, நிலக்கிழார்களும் இவரிடம் கல்வி கற்றுப் பெரும் புலமைத்திறன் வாய்க்கப் பெற்றனர். அவர்களுள்குறிப்பிடத்தக்கவர் 'கலைத்தந்தை' எனப் போற்றப்பட்ட கருமுத்து தியாகராசச் செட்டியார். நாமக்கல்லுக்கு அண்மையிலுள்ள இலத்திவாடி பெருநிலக்கிழார் மகன் சின்னசாமி ரெட்டியார் என்பார்க்குத் தமிழ் கற்பித்த இவர், நாமக்கல் உயர் பள்ளியில் தமிழ்ப்பணி செய்தார்.

இவருடைய நூல் 'தமிழரசி' 'குறவஞ்சி'. இலாங்காடு தமிழ் மன்றத்தினரால் 'புலவரேறு' என்று பட்டமளித்துப்பெருமைப் படுத்தப்பட்டவர். தஞ்சை நாவலர் நாட்டார் பேரவையினரால் பாராட்டப்பட்டவர். சேலம் குகை திருவள்ளுவர் கழகச் சார்பில் பொன்னாடை போர்த்தப் பெற்றுப் பெருவிழாவும் நடத்தப் பெற்றது இவருக்கு. இலக்கணக் கோவை, துருவசரிதை, மனோவசியமாலை என்பன இவரது நூல்கள். பல தனிப்பாடல்களும் இவரது திறமையின் வெளிப்பாடாக அமைந்தன.

'புலவரேறு' என்னும் விருதுக்குரிய வரதநஞ்சையாப்பிள்ளையின் உடன் பிறந்தவர் அ. கந்தசாமிப்பிள்ளை. தன் அண்ணன் வரத நஞ்சையாப் பிள்ளையையே தம் குருவாகக் கொண்டு தமிழ் பயின்றவர். பண்டிதர் தேர்வில் முதன்மையாகத் தேறி, பொற்பதக்கமும் தோடாவும்பெற்றார்.

தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் டாக்டர் உ. வே. சா. தலைமையில் 'மழவர்' எனும் தலைப்பில் ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார். பலபொருள் பற்றித் திறம்பட ஆய்ந்து சொற்பொழிவாற்றிய இவர் புலமைத்திறம் கண்டு வியந்த திரு. இராமலிங்கம் செட்டியார், இவரைக் கோவைக் கல்லூரியில் பணியாற்றிட அழைத்துப் பெருமைப்படுத்தினார்.

தருமபுர ஆதீனத்தின் அழைப்பினை மனமுவந்து ஏற்று அங்கு சென்று தங்கிய பிள்ளையவர்கள் தேவாரத்தில் மூன்றாம் திருமுறைக்கு உரை எழுதினார்.

சுந்தசாமிப்பிள்ளை, தம் வாழ்நாள் முழுவதும் சாந்தலிங்கர் திருமடத்து ஆதீனப் புலவராகவே வாழ்ந்தார். 1969-இல் இறையடி சேர்ந்தார்.

திருச்செங்கோட்டுக்குஅண்மையிலுள்ள மோரூர் குமாரசாமிக் காங்கேயன் அவைப் புலவர் பாகம்பிரியான் என்பவர் படிக்காசுப் புலவரின் காலத்தவர்.

'கந்தபுராணக் கீர்த்தனை' பாடிய குமாரசாமி முதலியாரின் மகனான சே. கு. விசாகப் பெருமாள் முதலியார், திருச்செங்கோட்டுக் கலம்பகம் இயற்றிய சுந்தரமுதலியாரின் பெயரன். முத்தமிழ் வித்தகர் மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் 'பிரபந்தத் திரட்டு' என்ற நூலுக்குச் சிறப்புப்பாயிரம் எழுதியவர். பேளுக்குறிச்சி வேலப்பகவுண்டர் மீது பாடல்கள் பல இயற்றியவர். இவருடைய வேறு நூல்கள் கிடைத்தில.

சேலம் கு. ஐயாக்கண்ணு முதலியார் பாரதம் ' பாடிய



## மாவட்ட நூலகத்தில் தந்தை பெரியார்

சேலத்தில் உள்ள மாவட்ட நூலகத்தில் தந்தை பெரியாரின் உருவப் படம் ஓவியமாகத் தீட்டி வைக்கப்பட்டுள்ளது. தந்தை பெரியார்-கண்ணாடி அணிந்தவாறும்-கையில் பூதக்கண்ணாடி ஒன்றின் உதவியால் ஒரு புத்தகத்தைப் படிப்பது போலவும் தீட்டப்பட்டுள்ள அந்த ஓவியம் நூலகக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

அட்டாவதானி அரங்கநாத முதலியார் மகன்; தனிப் பாடல்கள் பல பாடிய பைந்தமிழ்ப் பாவலர்.

சைவசித்தாந்தத்திலும் செந்தமிழ் இலக்கிய இலக்கணத்திலும் சிறந்து தெளிந்தவர் கோமளேசுவர முதலியார். இவருடைய ஆசிரியர் மாம்பழக் கவிச்சிங்க நாவலர். இந்திர பீடம் கரபாத்திரசுவாமிகள் ஆதீனம் தவத்திரு. ஈரூர் சச்சிதானந்த சுவாமிகளை ஞானாசிரியராகக் கொண்டவர் இவர்.

இறையுணர்வில் ஈடுபாடு மிகக் கொண்டு சித்த மருத்துவத்தில் சிறந்தொளிர்ந்த இவர் இன்றும் சேலத்தில் பலருக்கு ஆசானாக விளங்குகின்றார். வடமொழியிலும் வல்லுநரான இவர் நூல்கள் அனைத்தும் இன்று கிடைக்கவில்லை. 'ஆனந்தக்களிப்பு' என்ற நூல் கிடைத்துள்ளது. 'ஆத்மானந்த சுவாமி அருட்பா முந்நூறு' என்ற நூல் அச்சேறவில்லை. தனிப்பாடல்கள் பலவற்றின் ஆசிரியரான இவர் பெயரில் பல மடங்கள் சேலத்தில் உள்ளன.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரால் பாராட்டப்பெற்ற இராமசாமிக் கவுண்டர் சேலம் நகராட்சிக் கலைக்கல்லூரியின் முதல்வர். இன்று தமிழகத்தில் ஒளிரும் பலரைப் படைத்த பெருமைக்குரியவர். இவருடைய பாடல்கள் பகவத்கீதை, தனிப் பாடல்கள் என்பன. 'கபிலகதை என்ற அறநூலை எழுதிய இவர் நெப்போலியன்,நெல்சன்போன்ற மாவீரர்களின் வரலாற்றைத் தமிழில் சுவைபட எழுதியுள்ளார்.

அண்மையில் மறைந்த சேலம் அம்மாப்பேட்டை தியாகராச முதலியார் வடமொழியிலும் சுந்தரத் தெலுங்கிலும் வல்லவர். அம்மாப்பேட்டை குமரன்மலை (குமரகிரி) முருகன்மீது பல பாடல்களையும் தனிப்பாடல்கள் சிலவற்றையும் பாடியவர். இவை பெற்ற சிறப்புக்கண்டு இவரைத் தம் ஆசானாகக் கொண்டவர்கள் பலர் உண்டு.

சேலம் குகையில் வாழ்ந்து வரும் முதுபெரும் நாவலர், முத்தமிழ் வல்லுநர்; சந்தக்கவி மே. பே. சாமி தில்லை நடேசச் செட்டியார். 'ஞானாமிர்தக் கீதங்கள்' என்னும் நூலைப் பாடிய இம்முதுபெரும் புலவர், சந்தம்பாடுவதில் பெரும் புகழ் பெற்றவர். தேர்க்கட்டு (ரதபந்தம்) பாம்புப்பிணையல் (நாகபந்தம்)மலைக்கட்டுமுதலிய சித்திரக் கவிகளைப் பாடுவதில்



பா. வே. மாணிக்க நாயகர்

சிறந்து விளங்கியவர். இவருடைய மாணவர்கள் சிலர் இன்றும் புகழ் சிறந்து விளங்குகின்றனர்.அவருள் குறிப்பிடத்தக்கவர்கள், சச்சிதானந்த தமிழ்ப் பாமாலை, திருக்குறள் இசைப் பாடல்கள் ஆகிய பல்வேறு சந்தநயம் மிக்க பாடல்களின் ஆசிரியரான சேடர் பாளையம் மதுரசந்த வேலாயுதசாமி, வேலாயுதம் பிள்ளை ஆகியோராவர்.

40 ஆண்டுக்கு முன்பு இராசிபுரத்தில் வாழ்ந்த மாரையஆசாரியார் 'இரவீச மரபினர் காதை' (இராகவ பாண்டல்யம்) என்ற நூலின் ஆசிரியர். இதன் ஒவ்வொரு பாடலும் பாரதத்தில் ஒரு செய்தியும் இராமாயணத்தில் ஒரு செய்தியும் சிலேடையாகப் பொருள் தருவது,



க. இராசாராம்

கற்பனை வளம்மிக்கது, அறநெறிக் கருத்துக்களைக் கொண்டிலங்குவது.

பொன்முடி சு. பொன்னுசாமி செட்டியார், இராசிபுரத்தைச் சேர்ந்தவர். 'சேலம் கோவை' என்னும் நூலின் ஆசிரியர்.

'சக்கரவர்த்தி' என்ற விருதுப் பெயர் ஏற்று இறுதி வரை சக்கரவர்த்தியாகவே வாழ்ந்த இராஜாஜி 1901இல் இலக்கியச் சங்கம் ஒன்றினைந்த தம் அன்பர்களுடன் இணைந்து நிறுவினார். 'விமோசனம்' எனும் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்தார். இவருடைய 'சக்கரவர்த்தித் திருமகன்' எனும் நூல், சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது. ஆத்ம சிந்தனை, வியாசர் விருந்து, பக்தி நெறி, கண்ணன் காட்டிய வழி போன்றவை இராஜாஜியின் படைப்புகளுள் சிலவாகும்.

பைந்தமிழ்க் காவலர்களாகத் தோன்றி,புகழ் பெருக்கி மறைந்த தண்டமிழ்ச் சான்றோர்களே அன்றி, நம்முடைய அருந்திறத்



எஸ். டி. சுந்தரம்

தால் - ஆற்றல் புலமையால அருந்தமிழ்த் தொண்டாற்றி இன்றைய இலக்கிய வானில் மின்னிமிளிர்பவர்களும் பலர் சேலம் மாவட்டத்தில் உள்ளனர்.அவருள் ஆர். கே. நாராயணன், கி. வா. ஜகந்நாதன், இல. செ. கந்தசாமி, சிலம்பொலி செல்லப்பன், முருகு சுந்தரம், மகரிஷி, பெருஞ்சித்திரனார், மாரிஅறவாழி,'திருவிளக்கு' ஏட்டின் ஆசிரியராக இருந்தவரும், பயணநூல் எழுதியவருமான இன்றைய சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம்போன்ற பலர் தமிழ் அறிஞராக - கவிஞராகச் சிந்தனைச் செல்வர்களாக எழுத்தாளராகப் பேச்சாற்றல் மிக்கவராகத் திகழ்கின்றனர். பல்வேறு துறையில் பல்கலைச் செல்வராகத் தம்முடைய தணியாத தமிழ்க் காதலால் தமிழ்ப் பணி புரிகின்றனர்.

சேலத்து மாங்கனியின் சுவை நலம் போலவே, சேலத்துத் தமிழறிஞர் தம் தமிழ்த் தொண்டும் சுவைமிக்கது; நயமும் பயனும் நிறைந்தது. சங்ககாலம் தொட்டே தமிழ் இலக்கியத்தோடு, தமிழ்ப் பெருமையோடு தொடர்புடையது எங்களது சேலம் மாவட்டம். மங்காப் புகழ் படைத்த சீர்சால் தமிழின் பெருமை, சேலத்து மறத்தமிழர் வழி மேலும் சிறந்தொளிர்ந்த தென்பதில் ஐயமில்லை.

# கொத்தடிமைகளுக்குப் புதுவாழ்வு

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பல தொழிலாளர்கள் ஆந்திர மாநிலத்திலும் மத்தியப் பிரதேசத்திலும பல்லாண்டுகளாகக் கொத்தடிமைகளாக இருக்கின்றனர். சிறைக் கைதிகளைவிடக் கொடுமையான வாழ்க்கையை அவர்கள் அனுபவித்து வந்தனர். குறிப்பாக, கல் உடைக்கும் தொழிலாளர்கள் பலர் - முதலாளிகளால் கொத்தடிமைளாக்கப்பட்டு. எவ்வித மான உரிமையும் இன்றி வாடி வருந்தினர். அங்கு அவதியுற்ற கொத்தடிமைகளில் பலர் - தங்களது சொந்த மாவட்டமான சேலத்தில் உள்ள உறவினர்கள்-காவல் துறையினர் ஆகியோருக்குத் தங்களை மீட்டுச் செல்லுமாறும் - காப்பாற்றுமாறும், கடிதம் எழுதியதன் பேரில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

சேலத்திலிருந்து காவல்துறையினர் ஆந்திரமாநிலத்துக்கும் மத்தியப் பிரதேசத்திற்கும் சென்று அவர்களை மீட்டு வந்தனர். சேலம் மாவட்டத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

1982-83-ல் ஆந்திர மாநிலத்திலிருந்து 329 குடும்பங்களைச் சேர்ந்த 1,325 பேரும், மத்தியப் பிரதேசத்திலிருந்து 12 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேரும் மீட்டு வரப்பட்டனர். 1983 ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய ஆந்திர மாநிலத்திலிருந்து 241 குடும்பங்களைச் சேர்ந்த 1,072 பேர்-மீட்டு வரப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 1,000 பண உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஆந்திர மாநிலத்திலிருந்து 171 குடும்பங்களைச் சார்ந்த 1687 நபர்களுக்கு ரூபாய் 1,71,000, மத்தியப் பிரதேசத்திலிருந்து 12 குடும்பங்களைச் சார்ந்த 54 பேர்களுக்கு ரூபாய் 12,000 வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் ஓமலூரில்—மீட்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு வேலை வாய்ப்புத் தருவதற்காக-கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும் - அரசுச் சார்பு அலுவலர்கள் - சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல முக்கியஸ்தர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஆய்வுக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கொத்தடிமைகள் மறுவாழ்வுபபணியை மதிப்பீடு செய்கிறது.

கடந்த நவம்பர் 14 ஆம் நாளன்று, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலு இ. ஆ. ப. அவர்களின் இல்லத்தை நாடி, ஆண், பெண் குழந்தைகள் அடங்கிய ஒரு குடும்பம், மனுவும் கையுமாக வந்தது. மனுவை மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்தார்கள்.

விசாரித்ததில், ஆந்திராவில், காஜிபேட் பகுதியில் கல் உடைக்கும் தொழிலில் கொத்தடிமையாயிருந்த குடும்பம் அது என்றும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் முயற்சியால் அந்தக் குடும்பம் மீட்கப்பட்டு வந்துள்ளது என்றும் தெரிந்தது. ஓமலூரில் வெள்ளாள பட்டியை அடுத்துள்ள தேக்கம் பட்டியைச் சேர்ந்த அந்தக் குடும்பத்தினர்—நிவாரண நிதி கேட்டு மாவட்ட ஆட்சியாளரிடம் மனுவைக் கொடுத்தார்கள்.

அவர்களை அன்புடன் வரவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவில் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார். மக்கள் ஆட்சியின் மாண்பை—இந்த மனுநீதி முறை நமக்கு எடுத்துக்காட்டுகிறது என்று சொல்லலாம்.

## சேலம் மாவட்டத்துக் கலைஞர்கள்

குமாரசாமி முதலியார்

கோதாவரி அம்மாள்

பல்லவி நரசிம்ம அய்யங்கார்

அனந்தராம தீட்சிதர்

நாமக்கல் நரசிம்ம பாகவதர்

நாமக்கல் கவிஞர்

ஜெயலட்சுமி

ஏ.பி. நாகராஜன்

எஸ்.டி. சுந்தரம்

டி.ஆர். சுந்தரம்

## சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத் தலங்கள்



சுற்றுலாப்பயணிகளைக் கவரும் வகையில் பல்வேறு சிறப்புகள் இந்த மாவட்டத்தில் உண்டு. அவை வருமாறு :

ஏர்க்காடு

கொல்லிமலை

பச்சைமலை

திருச்செங்கோடு மலைக்கோயில்

தாரமங்கலம் கைலாயநாதர் ஆலயம

பனைமரத்துப்பட்டி ஏரி

மேட்டூர் அணை

நாமக்கல் மலைக்கோட்டை

ஆஞ்சநேயர் சிலை

பொய்மான் காடு

சங்ககிரி மலைக்கோட்டை

# சேலத்துப் பட்டு



இந்தியாவில் கர்நாடக மாநிலத்திற்கு அடுத்தபடியாகப் பட்டுத் தொழிலில்ஆந்திரம் இரண்டாவதாக விளங்குகிறது. மூன்றாம் இடம் வகிப்பது தமிழகம். அதிலும் மாவட்ட அளவில் சேலமே சிறப்புற்றுத் திகழ்கிறது.

இங்கே - பட்டுத் தொழிலுக்கு மூலாதாரமான முசுக்கட்டைச் செடி 1979-80-ல் 3,923 ஏக்கரிலும், 1980-81-ல் 4,810ஏக்கரிலும், 1981-82-ல் 5,326 ஏக்கரிலும் பயிரிடப்பட்டிருந்தது. 1982-83-ல் 6,011ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. வறட்சி இல்லாவிட்டால் இந்த ஆண்டில் இன்னும் அதிகப் பயிரிட்டிருக்கக் கூடும்.

திரு கே. எஸ். ஸ்ரீபதி இ.ஆ.ப. இயக்குநராகவும், திரு.கே.என். வெங்கடேசன் இணை இயக்குநராகவும் இருந்து பட்டு வளர்ச்சியை மட்டின்றி வளர்க்கும் மாவட்டம் சேலம் மாவட்டம்.

6 ஆயிரம் ஏக்கரில் மல்பரி பயிரிடப்படுகிறதென்றால், அதன் மூலம் ஏறத்தாழ 80 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்கிடைக்கிறது இங்கே என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தில் முதன் முதல் 1956ல்தான்பட்டுப் பூச்சி வளர்ப்பு, மல்பரி பயிரிடல் ஆகிய தொழில்களே துவக்கப்பட்டன. இந்த நிலையில் சேலம் மாவட்டம் பெற்றிருக்கும் வளர்ச்சி வியந்து பாராட்டத் தக்கது.

இம்மாவட்டத்தில் - 1979-80-ல் 0.45லட்சம் கிலோ கிராம் கச்சாப்பட்டு உற்பத்தியானதென்றால் 1982-83-ல் 0.75 லட்சம் கிலோகிராம் உற்பத்தியாகியிருக்கிறது.

பட்டுக்கூடு அங்காடி சேலத்திலும், ராசிபுரத்திலும் அமைந்துள்ளன. தொழில் கூட்டுறவு பட்டு நூற்புச் சங்கங்கள் சேலத்திலேயே அமைந்திருக்கின்றன.

பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி பெற்ற விவசாயிகள் 1979-80ல் 955 பேராக இருந்த இம்மாவட்டத்தில் நடப்பு ஆண்டிலோ 2,573 பேர்களாக அதிகரித்துள்ளனர். அந்த ஆண்டில் பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட 749 விவசாயிகள் 25 சதவிகித அரசு மானியம் பெற்றனரென்றால், இந்த ஆண்டில் 1,921 பேர் பெற்றுள்ளனர்.

கொல்லிமலையிலும் ஏர்க்காட்டிலும் அரசு பட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொழிலுக்கான முன்னோடிச் சேவை மையமும், மாவட்டப் பட்டு வளர்ச்சி மையமும் சேலத்திலிருக்கின்றன. கிராமயப் பட்டு நூற்புப் பயிற்சி மையம் நாமக்கல்லில் உள்ளது. அவனியாபுரம், சித்தேரி, குளத்துப் பாளையம், அலச்சன் பாளையம் பட்டினம், முனைப்பன் பாளையம், வைத்தியா கவுண்டன் புதூர், கடத்தூர் ஆகிய ஊர்களில் கிராமிய இளம் புழு வளர்ப்பு மையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

பட்டுத்தொழில் நுட்பச்சேவை மையம் ஓமலூரில் உள்ளது.

சேலம் மாவட்டத்தைச்சேர்ந்த கல்ராயன் மலைவாழ் மக்களும், கொல்லிமலைப் பகுதி மலைவாழ் மக்களும் பட்டுத்தொழிலில் ஆர்வத்தோடு ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அப்பகுதிகளில்மட்டும் 404.70 ஏககரில் முசுக்கட்டைச் செடி பயிரிடப்பட்டுள்ளது.

பணத்தை அள்ளித்தரும் தொழிலான பட்டு உற்பத்தித் தொழிலுக்குத் தக்க பயிற்சி வேண்டுமல்லவா? இதற்கெனக் கொல்லி மலையில் ஒரு பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. மூன்றே மாதம்தான் பயிற்சி. பயிற்சிக் காலத்திலோ ரூ. 150 உதவிப்பணம் தரப்படுகிறது. பயிற்சி முடித்தவர்கள் தொழில் தொடங்க 25 சதவீதம் உதவி அரசால் வழங்கப்படுகிறது. வங்கிகளும் கடனுதவி செய்கின்றன.

இப்படி ஊக்குவிப்பதனாலேயே போலும்-அந்த மலைவாழ்மக்கள் பலாவும்அன்னாசியும்தான் லாபகரமான தொழில் என்று எண்ணியிருந்த நிலைமாறி இப்போது முழமூச்சோடு பட்டு தொடர்பான தொழில்களிலே ஆர்வத்தோடு இறங்கியுள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்தினால் இத்தொழில் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வருகிறது.

பட்டுத்தொழில் மேன்மைக்கான தலைமைச் செயலகம் சேலத்தில் அமைந்திருப்பதொன்றே போதும், அத்தொழில் இங்கே பெரும் அளவுக்கு விரிவடைந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட!






# சேலத்தில் ஓர் 'ஆலிவுட்'

சேலம் நகரில் உள்ள மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனம் - சேலத்துக்குத் தனிப் பெருமை தேடித் தருகிறது. 1936ஆம் ஆண்டில் திரைப்படத் தொழிலில் ஈடுபட்ட இந்த நிறுவனம் சேலம் மாவட்டத்தில் ஓர் 'ஆலிவுட்' எனத் திகழ்ந்து, தமிழகத்துக்கே புகழ் சேர்த்து வருகிறது.

முதன் முதலில் ஒரே நடிகரை இரட்டை வேடங்களில் (Double Role ) நடிக்க வைத்துப் படம் தயாரித்த பெருமை இதற்கு உண்டு. தமிழகத்தில் முதன் முதலில் 'ஜங்கிள்' என்ற ஆங்கிலப் படத்தைத் தயாரித்தது இந்த நிறுவனம்தான். அதுமட்டுமல்ல, தமிழகத்து நட்சத்திரங்களையும் அந்த ஆங்கிலப் படத்தில் நடிக்க வைத்திருக்கிறது. முதன் முதலில் தமிழ்நாட்டில் முழுநீள கேவா கலர் படத்தை (அலிபாபாவும் 40 திருடர்களும்) தயாரித்ததும் இந்த நிறுவனம்தான்.

இதுவரை சுமார் 120 படங்களை உருவாக்கியிருக்கும் இந் நிறுவனத்தின் முதல் படம் 'சதி அகல்யா' ஆகும்.

புகழ்பெற்ற எழுத்தாளர்கள், நட்சத்திரங்கள், வசன ஆசிரியர்கள், பாடல் ஆசிரியர்கள், ஒலிப்பதிவாளர்கள், இயக்குநர்கள் ஆகியோரை உருவாக்கித் தமிழ் இலக்கியத்திற்கும், கலை உலகிற்கும் இந்நிறுவனம் செய்திருக்கும் சேவை மகத்தானது.

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்ற பாரதியார் பாடலை-ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே (1940-ல்) தனது 'உத்தமபுத்திரன்' என்னும் படத்தில் இடம்பெறச் செய்த துணிச்சல் இந்நிறுவனத்தின் உடைமையாகும்.

இதன் நிறுவனர் திரு டி. ஆர். சுந்தரம் அக்காலத்திலேயே இங்கிலாந்தில் உள்ள லீட்சுக்குச்சென்று விஞ்ஞானத்துறைப் பட்டதாரியாகியவர். அவரது அரும்முயற்சியால் உருவான இந்த நிறுவனம் தற்போது அவரது மகனான திரு ராமசுந்தரத்தினால்நடத்தப் பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் தயாரிப்புகளில் வெளிப்புறக் காட்சிகளில் பெரும்பாலும் ஏர்க்காடு இடம் பெறுவது வழக்கம். 'மந்திரி குமாரி' என்னும் படத்தில் ஒரு பயங்கரமான கட்டம் ஏர்க்காட்டில் உள்ள 'லேடீஸ் சீட்' பகுதியில் படமாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் இந்நிறுவனத்தில் ஒரு காலத்தில் பணியாற்றியிருக்கிறார்கள். இங்கே பணியாற்றிய எழுத்தாளர், கவிஞர் கண்ணதாசன் தமிழகத்தில் அரசவைக் கவிஞராகும் வாய்ப்புப் பெற்றார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இந்த நிறுவனத்தின் பல படங்களுக்கு வசனமும் பாடலும் எழுதியிருக்கிறார்.

இந்நிறுவனத்தின் மூலம் தான் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் திரையுலகுக்கு அறிமுகமானார்.

இந்த நிறுவனத்தில் பணி புரிந்து வெளிவந்த பலர் பட முதலாளியாகியிருக்கின்றனர்.

'நீராரும் கடலுடுத்த' என்னும் தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்ற பேராசிரியர் சுந்தரனாரால் உருவாக்கப் பெற்ற







1980ல் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து திரு ஆர்.சுந்தரம் கலைமாமணி விருது பெறுதல்.

'மனோன்மணீயம்' நாடகத்தை தனக்குள்ள பற்றுதலை வெளிக் 'மனோன்மணி' என்ற பெயரில் காட்டியிருக்கிறது.

இந்நிறுவனம் 1943-ல் வெளியிட்டு, தமிழ் அறிஞர்களிடம் புராணக் கதைகள், வரலாற்றுக் கதைகள், சமூகக் கதைகள், நீதிக் கதைகள், நகைச்சுவைக்கதைகள் இசைப்பெருமைக் கதைகள், துப்பறியும் கதைகள் எனப் பல்வேறு வகைக் கதைகளையும் திரைப்படமாக்கித் தமிழக மக்களுக்குக் களிப்பூட்டியிருக்கிறது இந்த நிறுவனம்.

ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி, கும்பகோணம் வக்கீல் (திகம்பர சாமியார்) போன்ற மிகப் பெரும் நாவல்களைச் சுவை குன்றாமல் திரைப் படங்களாக்கி வெளியிட்ட பெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு.

நாற்பதாண்டுகளுக்கு முன்னமேயே 'சண்டமாருதம்' என்னும் திரையுலகப் பத்திரிகையை இந் நிறுவனம் நடத்தியிருக்கிறது என்பதும்குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

திராவிட இயக்கத்து எழுத்தாளர்கள் பலரைக் கதைக் குழுவில் பணியாற்ற வைத்து, முத்திரை பதித்த திரை ஓவியங்களைத் தயாரித்து வெளியிட்டு- திரைப்படத் தொழிலில் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழும் இந்நிறுவனம் சேலத்தில் இருப்பது, சேலம் மாவட்டத்திற்கே பெருமை சேர்க்கும் செயலாகும்.

## சேலம் மாவட்டம் சில தகவல்கள்

| | | |
|---|---|---|
| மாவட்டத்தின் பரப்பளவு | : | 8650 சதுர கிலோ மீட்டர் |
| மொத்த மக்கள் தொகை | : | 34,30,000 |
| ஆண்கள் | : | 17,60,000 |
| பெண்கள் | : | 16.70,000 |
| கிராமப் புறத்தில் வாழ்வோர் | : | 24,37,000 |
| நகர்ப்புறத்தில் வாழ்வோர் | : | 9,93,000 |
| சிறு விவசாயிகள் | : | 1,34,940 |
| குறு விவசாயிகள் | : | 1,58,258 |
| நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர் | : | 3,87,693 |
| படித்தவர் மொத்த எண்ணிக்கை | : | 13,25,316 |
| ஆண்கள் | : | 8,66,077 |
| பெண்கள் | : | 4,59,239 |
| கோட்டங்கள் | : | 4 |
| வட்டங்கள் | : | 9 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | : | 35 |
| நகராட்சிகள் | : | 8 |
| நகரியங்கள் | : | 2 |
| பேரூராட்சிகள் | : | 58 |
| ஊராட்சி மன்றங்கள் | : | 732 |
| வருவாய்க் கிராமங்கள் | : | 1,089 |
| கிராமங்கள் | : | 3,862 |

கிடைக்கும் கனிம வளம்:

| | |
|---|---|
| மாக்னசைட் | ஜிப்சம் |
| பாக்சைட் | ஸ்பீடைட் |
| சுண்ணாம்புக் கல் | மைக்கா |
| பெல்ஸ்பார் | குவார்ட்ஸ்-காரட் |
| மேக்னசைட் | |

வணிக விற்பனைப் பொருள்கள்:

| | |
|---|---|
| காப்பி | மாங்கனி |
| மரவள்ளிக் கிழங்கு | ரோஜா மலர்கள் |
| வாசனைப் பொருட்கள் | |





# களிமண்ணைக் கலையாக்கும் கலைஞர்கள்....

பண்டைய ஹாரப்பா, மொகஞ்சதாரோ காலத்திலிருந்து களிமண்ணால் உருவாக்கப்பட்ட மட்பாண்டங்கள் வீட்டுக்கு வீடு அவசியச் சாதனங்களாக இருந்து வருகின்றன. இன்றைய நாகரிகத்திற்கேற்ப உலோகப் பொருளாலான அலுமினியம் முதல் எவர்சில்வர் மற்றும் வெள்ளிப் பாத்திரங்கள் வரை புழக்கத்தில் இருந்தாலும் மண்பாண்டங்களுக்கு என்றுமே தனிச் சிறப்பு உண்டு.

தமிழ்நாட்டிலுள்ள மட்பாண்டம் தயாரிப்போரின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. அவர்கள் உற்பத்தி செய்த பொருட்கள் காலத்தை வென்றதோடு மட்டுமின்றி, நாடு முழுவதும் புகழும் பெற்றுள்ளன. குடும்பத்திலுள்ள அனைவருமே இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்களது நாட்டிலேயே, தாராளமாகக் கிடைக்கும் களிமண்ணைக் கொண்டே ஒரு தொழிலை நடத்தும் இவர்களே உண்மையான மண்ணின் மைந்தர்கள்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இலஞ்சி மற்றும் தேன்பொத்தையைச் சேர்ந்த மட்பாண்டம் தயாரிப்போர் நீடித்து உழைக்கும் கை வேலைப்பாடுகளுடன் கலையழகு மிக்க களிமண் பொருட்களைத் தயாரிப்பதில் புகழ்பெற்று விளங்குகிறார்கள்.

திருநெல்வேலியிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் இலஞ்சி உள்ளது. மட்பாண்டத் தொழிலாளர்களுக்காக இங்கு ஒரு கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம் இயங்கி வருகிறது. மட்பாண்டம் தயாரிக்கும் 66 பேர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். சங்கத்தின் இடைவிடா முயற்சியால் உறுப்பினர்களின் தேவைகள் நிறைவேற்றி வைக்கப்படுகின்றன. தற்பாது அவர்களது குடும்பங்கள் வறுமைக் கோட்டைத் தாண்டியுள்ளன.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மட்பாண்டம் தயாரிப்போருக்குத் தக்க காலத்தில் உதவும் பொருட்டு நிரந்தரக் கூடாரம் ஒன்றைக் கட்டித்தரவும் மற்றும் சூளை ஒன்றைக் கட்டவும் அது முன்வந்தது.

மட்பாண்டம் தயாரிப்போரின் உபயோகத்திற்காக 1982-83ல்



சூளை ஒன்றைக் கட்ட மான்யமாக 7,500 ரூபாயும், நிரந்தரக் கூடாரம் ஒன்றை அமைக்க 35,000 ரூபாயும் இச்சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது. அதேபோல சம பங்கு கடனைக் கதர்வாரியம் வழங்கியது. பாரம்பரிய மிக்க மட்பாண்டம் தயாரிக்கும் சக்கரங்களுடன் மின் சக்கரங்களையும் இச்சங்கம் வைத்துள்ளது.

தற்போது நாளொன்றுக்குப் பல்வேறு வடிவங்களில் 30 பானைகளைச் சுலபமாக இவர்களால் தயாரிக்க முடிகிறது. எல்லாப் பானைகளுமே கேரளாவில் விற்கப்படுகின்றன. நாளுக்கு நாள் இதன் தேவை அதிகரித்து வருகிறது. 1000 பானைகள் தயாரிக்க நபர் ஒன்றுக்கு 600 ரூபாயை முன்தொகையாகச் சங்கம் வழங்குகிறது. இதைக்கொண்டு உறுப்பினர்கள் கச்சாப்பொருட்களை உடனே சேகரிப்பதுடன் மாதம் முழுவதும் வேலையில் ஈடுபட முடிகிறது.

மின்சக்கரம் வாங்குவதற்குச் சங்கம் விடுத்த வேண்டுகோளை ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் பரிவுடன் ஏற்று உதவ முன்வந்துள்ளது. உறுப்பினர்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், வருமானத்தைப் பெருக்கவும் இத்திட்டம் மேலும் உதவும். சென்ற ஆண்டு ஒவ்வொரு உறுப்பினரும் தொடர்ந்து மாதந்தோறும் 300 ரூபாயிலிருந்து 400 ரூபாய்வரை நிரந்தர வருமானம் பெற்று வந்தனர். இத்துடன் சங்கம் ஒவ்வொருவருக்கும் 150 ரூபாய் போனசும் வழங்கியுள்ளது.

இலஞ்சி, தேன்பொத்தை மட்பாண்டம் தயாரிப்போர் சங்கம் மாதம் 5,000 ரூபாய்க்கு மேல் இலாபம் ஈட்டி வருகிறது. இது தவிர செம்மண் பானைகள் மற்றும் வெள்ளை நிறப்பானைகளும் இச்சங்கம் தயாரிக்கின்றது. இலஞ்சியைப் பொறுத்தவரையில் ஓட்டு மொத்தமாக கேரளா முழுவதும் அதன் தயாரிப்புகள் விற்பனை செய்யப்படுகின்றன.

தேன்பொத்தை சங்கம் 1981-82லிருந்து ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் உதவியைப் பெற்று வருகிறது. சங்கத்திற்கு வேண்டிய சூளை ஒன்றைக் கட்டுவதோடு 'டெம்போ வேன்' ஒன்றையும் ஐ ஆர் டி பி-யின் மானியமாகப் பெறவுள்ளது. சங்கத்திற்கு வேண்டிய கச்சாப்பொருட்களைக் கொண்டு செல்லவும், உற்பத்திப் பொருட்களை மார்க்கெட்டுக்குக் கொண்டு வரவும் இந்த 'டெம்போ வேன்' உதவும்.

சங்கம் தொடர்ந்து இவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது. மாதம் 400 ரூபாய்வரை அதன் உறுப்பினர்கள் மாத வருமானம் பெறுகின்றனர். இச்சங்கம் கலை வேலைப்பாடுகளிலும் ஆர்வம் காட்டி வருகிறது. மேலும் இவை தயாரிக்கும் வெள்ளைக் களிமண்ணினாலான கடவுள் உருவங்கள் மற்ற இடங்களிலுள்ள சித்திர வேலைப்பாடுகளுக்கு இணையாக உள்ளன.

நலிந்த பிரிவினைச் சேர்ந்த இலஞ்சி மற்றும் தேன்பொத்தை சங்கத்தினர் முன்னேற்றத்தில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் எல்லா வகையிலும் உதவி புரிந்துள்ளது பாராட்டுக்குரியது.




# நாட்காட்டி 1984

**ஜனவரி**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

**பிப்ரவரி**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | | | |

**மார்ச்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**ஏப்ரல்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

**மே**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

**ஜூன்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**ஜூலை**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

**ஆகஸ்ட்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

**செப்டம்பர்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**அக்டோபர்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

**நவம்பர்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

**டிசம்பர்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |



# நடுத்தரப் பாசனத் திட்டங்கள்

மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்

**திரு யா. சை. மு. யூசுப்**

உலகில் உயிரினங்கள் வாழ நீர் மிகவும் இன்றியமையாததாகும். திருவள்ளுவரும் இதையே ''நீரின்று அமையாது உலகு'' என்று கூறியுள்ளார். உலகில் மக்கள் வாழ்க்கை முதலில் ஆறுகளைச் சார்ந்த பகுதிகளில்தான் ஆரம்பித்தது. பிறகு காலப் போக்கில் ஆற்று நீரைத்திருப்பி வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் ஏற்பட்ட பின்னரே இதர பகுதிகளிலும் மக்கள் குடியேற ஆரம்பித்தனர். வளமற்ற பிரதேசங்களில் நீர் வசதிக்கு வழி செய்யப்பட்ட பின்னர் அப்பிரதேசங்களில் பொருளாதாரமும், மக்கள் வாழ்க்கைத்தரமும் வளம் பெறுவதைக் கண்கூடாகக் காணலாம்.

தமிழ்நாடு, இந்திய மாநிலங்களிடையே நிலப்பரப்பில் 11-வது இடமும் மக்கள் தொகையில் 7-வது இடமும் வகித்தபோதிலும் நீர் வளத்தில் 13-வது இடமே வகிக்கின்றது. இந்தியாவின் நீர்வளம் சராசரி, நபர் ஒன்றுக்கு 0.14 மில்லியன் கன அடி. ஆனால் தமிழ்நாட்டின் நீர்வளம் நபர் ஒன்றுக்கு 0.02 மில்லியன் கனஅடிதான். தமிழ்நாட்டில் பாயும் ஆறுகளில் பெரியது காவிரி. ஆனால் இவ்வாற்றின் நீர்வளம் மிக்க மேற்பகுதிகள் கருநாடகம், கேரளம் போன்ற அண்டை மாநிலங்களில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டின் பெரும்பகுதி மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரின் கிழக்கே அமைந்துள்ளதால் தென்மேற்குப் பருவக் காற்றால் நமக்கு மழை கிடைப்பதில்லை. நாம் நம்பகமற்ற தன்மை கொண்ட வடகிழக்குப் பருவ மழையையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

தமிழகத்தில் தொன்று தொட்டே பாசன திட்டங்கள் நடைமுறையில் இருந்து வந்துள்ளன. கரிகால் சோழனால், 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கல்லணை, நாளடைவில் தேவைக்கேற்ப மேம்படுத்தப்பட்டு, இன்றும் காவிரிப் பாசனத்தில் சிறப்பிடம் வகித்து வருகின்றது. இவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, ஏரிகளும், அணைகளும், கால்வாய்களும் அமைக்கப்பட்டு வந்திருப்பதுடன் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் பெரியாறு நீர்த்தேக்கம், மேட்டூர் நீர்த்தேக்கம் போன்ற நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைகளும் கால்வாய்களும் உருவாக்கப்பட்டன. நாடு சுதந்தரமடைந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் துவங்குவதற்கு முன்பே தமிழகத்தில் சுமார் 27 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி தரப்பட்டிருந்தது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலம் வரை பவானிசாகர், பரம்பிக்குளம், ஆழியாறு பாசனத்திட்டங்கள் தவிர இதர திட்டங்கள் பெரும்பாலும் நஞ்சைச் சாகுபடியைக் கருத்தில் கொண்டே அமைக்கப்பட்டு வந்தன. பின்னர் ஐந்தாவதுஐந்தாண்டுத் திட்டத்துவக்கத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்கள் அனைத்துமே புஞ்சைப் பயிர்களுக்குப் பாசனம் தரும் வகையில்தான் தீட்டப்பட்டன. ஒரு குறிப்பிட்ட நீரளவைக் கொண்டு நஞ்செய்ப் பாசனத்திற்கு எவ்வளவு நிலங்களுக்குப் பாசன வசதி தர இயலுமோ, அது போல் இரு மடங்கு நிலங்களுக்குப் புஞ்செய் சாகுபடிக்கு நீர் தர இயலும். இதனால் பாசனத் திட்டங்களின் பயன், பரவலாக அதிகபட்ச விவசாயிகளுக்குக் கிடைப்பதுடன் நஞ்செய்ச் சாகுபடியில் கிடைப்பதைவிட, அதிக லாபம் கிடைக்கவும் வழி கிடைக்கிறது. இதுபோன்று இருக்கும் நீரைக் கொண்டு கூடிய வரையில் அதிக பட்ச மக்கள் பயன் பெறும்படி, பரவலாகப் பாசன வசதி தரும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டுமென்ற கொள்கையையும் இவ்வரசு கடைப்பிடித்து வருகின்றது.

பாசனத் திட்டங்கள், சிறுபாசனத்திட்டங்கள், நடுத்தரப் பாசனத் திட்டங்கள், பெரும்பாசனத் திட்டங்கள் எனமூன்று வகைப்படும். ரூ. 50 இலட்சத்திலிருந்து 5 கோடிக்குள் அமைக்கப்படும் திட்டங்கள் நடுத்தரப் பாசனத் திட்டங்களாகக் கருதப்படுகின்றன. நம் மாநிலத்தில் நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட எட்டு நடுத்தரப் பாசனத் திட்டங்களின் வேலை தொடருவதுடன் புதியதாக தருமபுரி மாவட்டத்தில் ஏழு திட்டங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் நான்கு திட்டங்களும், திருச்சி மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டம் ஒவ்வொன்றிலும் மூன்று திட்டங்களும், சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் இரண்டு திட்டங்களும், கோவை மாவட்டத்தில் ஒரு திட்டமும் ஆக மொத்தம் 22 நடுத்தரப் பாசனத்திட்டங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகின்றது. இத்திட்டங்களின் மொத்த மதிப்பீடு சுமார் ரூ. 13 கோடி.

இத்திட்டங்களின் மூலம் சுமார் 2,36,000 ஏக்கர் நிலங்கள் பயனடையும். மேலும் தற்சமயம் சுமார் 40 நடுத்தரப் பாசனத் திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

நம் மாநிலத்தில் நீர்வளக் குறைவினாலும், உள்ள நீர்வளம் முழுவதையும் பயன்படுத்தும் வகையில் ஏற்கெனவே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டமையாலும் மேற்கொண்டு புதிதாகப் பெரியபாசனத்திட்டங்கள் அமைக்க வழியில்லை. ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் திட்டங்களை நவீனப்படுத்துவதன் மூலம் இத்திட்டங்களில் நீர் உபயோகத்தைக் குறைத்து. அப்படி சேமிக்கப்படும் நீரைக் கொண்டுதான் புதிய திட்டங்கள் அமைக்க வாய்ப்புள்ளது. தற்சமயம் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் பெரியாறு வைகைப்பாசனமேம்பாட்டுத் திட்டம் இந்தகையதோர் திட்டமாகும். உலக வங்கி உதவியுடன் காவிரி டெல்டாப் பாசனத்தை நவீனப்படுத்துவதற்கான திட்டம் தற்சமயம் மத்திய அரசின் ஆய்வில் உள்ளது. மேலும் கோதையாறு பாசனத்திட்டம், கீழ்பவானிப்பாசனத்திட்டம் பெண்ணையாற்றின் பழைய பாசனத் திட்டங்கள் ஆகியவற்றை நவீனப்படுத்துவதற்கான ஆய்வுத்திட்டங்கள் இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளன. இதர பாசனத் திட்டங்களையும் நவீனப்படுத்துவவதற்கான ஆய்வு நடந்து வருகிறது.

இதைத்தவிர அண்டை மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்கு நீர் கிடைக்க வழி வகைகள் செய்தால் அந்நீரைக்கொண்டு புதிய திட்டங்கள் அமைக்க வாய்ப்புள்ளது.





கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரிநீரைத் திருப்பி மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் வறண்ட பகுதிகளில் பாசனமளிக்க வாய்ப்புள்ளது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழு ஒன்று கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் வரமனாபுரம், அச்சன்கோயிலாறு. கல்லடா, கரமனாறு ஆகிய நான்கு ஆறுகளை ஆய்வு செய்து இவ்வாறுகளில் குறைந்தது 47 டி. எம். சி. நீர் உபரியாக உள்ளதெனப் பரிந்துரை செய்துள்ளது. இந்நீரைக் கிழக்கு நோக்கித் திருப்பி தமிழகத்தில் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில் பேச்சு வார்த்தைகள் நடத்த முன்வருமாறு கேரள அரசுக்குத் தமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது; கேட்டுப் பெறுவோம்.

நம் நரட்டின் சில பகுதிகளில் நீர்வளம் இருந்தும், சில பகுதிகளில் வறட்சி மிகுந்து உள்ளது. நீர்வளம் உபரியாக உள்ள பிரதேசங்களிலிருந்து நீர் வளம் குறைந்த பிரதேசங்களுக்கு நீர்வசதியளிக்கும் வகையில் ஆறுகலை நாட்டின் பொது உடைமையாக்கலாமா என்பது பற்றியும் மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. இது பற்றிய கொள்கைகளை வரையறுக்க பாரதப் பிரதமரைத் தலைவராகவும் மாநில முதல்வர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட 'National Water Resources Council' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் பெரு நதிகளை இணைத்துப் பாசன வசதிக்கு வழி செய்யும் நோக்கத்தில் முதற்கட்டமாக மகாநதியிலிருந்து வைகை நதி வரை இணைப்பு ஏற்படுத்தியும் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரைக் கிழக்கே திருப்பி இத்துடன் இணைத்தும் தென் மாநிலங்களில் பாசன வசதியைப் பெருக்கத் திட்டமொன்றும் மத்திய அரசால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதைச் செயல்படுத்த 'National Water Development Agency' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் கோட்ட அலுவலகம் ஒன்று சென்னையிலும் செயல்படத் தொடங்கியுள்ளது. டெல்லியில் நடந்த இவ்வமைப்பு இரண்டாவது வருடாந்திரக் கூட்டத்தில் 26-9-'83 அன்று நான் கலந்து கொண்டு நாட்டின் நதிகளை இணைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி, இதற்குத் தமிழக அரசு தேவையான ஒத்துழைப்பை அளிக்கும் என்று உறுதியளித்தேன். இவ்வமைப்பு மேற்கொண்டுள்ள ஆய்வு அனைத்து மாநிலங்களின் ஒத்துழைப்புடன் விரைவில் முடியும் என்றும், அண்டை மாநிலங்களிடம் நாம் கொண்டுள்ள நல்லுறவு மூலமும், நம் அயராத முயற்சியாலும் தமிழகத்தின் பாசனத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்றும் நம்புகிறேன்.

[23-10-83 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை]







## புலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது!

புலி வளர்ப்புத் திட்டம் 1973-74இல் துவக்கப்பட்டது. தற்போது நாட்டில் இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம், கர்நாடகம், பீகார், அசாம், ஒரிசா, மகாராஷ்டிரம், கேரளம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் அருணாசலப் பிரதேச மாநிலங்களில் 15 புலி சரணாலயங்கள் உள்ளன.

விசேஷமாக அமைக்கப்பட்ட சரணாலயங்களில் புலிகளைப் பாதுகாத்தல் பல்வேறு ரகப் புலிகளைப் பராமரித்தல், தேசிய பாரம்பரியத்தின் ஒரு அங்கமாகவும் எதிர்காலச் சந்ததியினரின் கல்வி மற்றும் மகிழ்ச்சிக்கு எனவும், இயற்கைச் சூழ்நிலையில் புலிகளின் எண்ணிக்கையைப் பேணுதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள். உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் வாழ்வின் அடிப்படையில்தான் மனிதனுடைய வாழ்வும் அடங்கியுள்ளது.

துவக்கத்தில் சுமார் 14,200 சதுர கிலோ மீட்டர் பரப்பில் ஒன்பது சரணாலயங்கள் மட்டுமே இருந்தன. அசாம், பீகார், ஒரிசா, உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், கர்னாடகம், இராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்கத்தில் இவை அமைந்திருந்தன.

1978-79ல் கேரளம் மற்றும் இராஜஸ்தானில் மேலும் இரண்டு சரணாலயங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. 1982-83ல் அருணாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கத்தில் மேலும் நான்கு சரணாலயங்கள் நிறுவப்பட்டன. தற்போது நாட்டில் 24,712 சதுர கிலோ மீட்டர் பரப்பில் 15 சரணாலயங்கள் அமைந்துள்ளன.

இத்திட்டத்திற்கான செலவை 1979-80 முதல் மத்திய-மாநில அரசுகள் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்கின்றன. அதற்கு முன்னா முழுக்க முழுக்க மத்தியத் திட்டமாகப் புலி வளர்ப்புத் திட்டம் செயல்பட்டு வந்தது.

இத்திட்டத்தின் மூலம் அனைத்து ரகப் புலிகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது. 1972ல் 268 ஆக இருந்த புலிகள் எண்ணிக்கை, 1982இல் 875 ஆக உயர்ந்துள்ளது.

சில சரணாலயங்கள் விரிவுபடுத்துதல், புலிக்குட்டிகள் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு, கூடுதல் சரணாலயங்களை உருவாக்குதல், ஆராய்ச்சித் திட்டங்களை வலுப்படுத்துதல் போன்றவற்றிற்கு ஆறாவது திட்டத்தில் தனி முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

### நீண்ட ஆயுளின் இரகசியம்

சோவியத் நாட்டில், காகசஸ் பகுதியின் மக்கள் தொகை, நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 7 சதவிகிதமாகும்; எனினும் நாட்டிலுள்ள 90 வயதுக்கு மேறபட்ட மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் இங்கு வாழ்கின்றனர். அவர்கள் பால், தேன் ஆகியவற்றை நிரம்ப அருந்துகின்றனர். சுறுசுறுப்பான, மனநிறைவு அளிக்கும் உழைப்பு, நிதானமான வாழ்க்கை முறை, ஆரோக்கியமான இயற்கைச் சூழல் ஆகியவையே இம் மக்களின் நீடித்த ஆயுளுக்குக் காரணம்!

# திரிந்து வழங்கும் பழமொழிகள்

நம் தமிழகத்தில் தொன்று தொட்டு, பல பழமொழிகள் வழங்கி வருகின்றன. அப்பழமொழிகள் பல அரிய கருத்துக்களை எளிதில் இனிய முறையில் உணர்த்துவதற்காகவே தோன்றியுள்ளன. அவ்வாறு உயர்ந்த கருத்துக்களை விளக்குவதற்காகத் தோன்றிய பழமொழிகள் பல, திரிந்து அதற்கு மாறுபட்ட பொருளை உணர்த்துகின்றன.

வாய்மையா? வாயா?

தமிழ் இலக்கியங்களும் அறநூல்களும் அறங்களில் எல்லாம் தலை சிறந்தது வாய்மை என்று கூறுகின்றன. தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

''யாம்மெய்யாக் கண்டவற்றுள்
இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற''

என்று வாய்மையின் சிறப்பைப் பற்றிக் கூறியுள்ளார். அரிச்சந்திரன் வாய்மையைக் காப்பாற்றுவதற்காகவே நாடு, நகரிழந்து, மனைவியையும், மகனையும் விலை கூறி விற்று அடிமையாகிச் சுடலை காத்தான். வாய்மையில் அவன் கொண்டிருந்த உறுதியே அண்ணல் காந்தியடிகளின் உள்ளத்தைக் கவர்ந்தது.

இதுபோல் வாய்மையுள்ளவர்கள் அரிச்சந்திரனைப்போல, காந்தியடிகளைப் போல சிறந்து விளங்குவார்கள் என்ற பொருளில் வாய்மையுள்ள பிள்ளை பிழைக்கும் என்ற பழமொழி தோன்றியது. ஆனால் இடைக்காலத்தில் அந்நிலை மாறி வாய்மையைப் பொய்மை போலவும், பொய்மையை வாய்மை போலவும் மாற்றிப் பேசத் தெரிந்தவர்கள்தான் வெற்றி பெற முடியும் என்ற நிலை தோன்றியதால் ''வாய்மையுள்ள பிள்ளை பிழைக்கும்'' என்ற பழமொழி 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என்று வழங்கி வருகிறது.

கல்வி கற்றவர்கள், தம் உள்ளத்தில் உள்ள கருத்துக்களைப் பிறர் உணருமாறு அழகாக எடுத்துச் சொல்லும் சொல்வன்மை பெற்றவர்களாக விளங்கவேண்டும். கல்வி கற்றும் சொல்வன்மை இல்லாதவர்கள் மணமில்லாத மலர் போன்றவர்கள் என்பதை,

''இணரூழ்ந்தும் நாறா
மலரனையர் கற்ற
துரை விரித்துரையா தார்''

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

ஆசிரியப் பணியாற்றுபவர்கள் தங்கள் சொல்வன்மையினால் மாணவர்களைக் கவரும் ஆற்றலுள்ளவர்களாக விளங்கவேண்டும் என்பதை விளக்கவே 'வாக்கு கற்றவன் வாத்தியார்' என்ற பழமொழி தோன்றியது.

ஆசிரியப் பணியின் சிறப்பை, ''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்'' என்னும் நறுந்தொகைப் பாடல் விளக்குகிறது.

ஆனால் பிற்காலத்தில் ஆசிரியர்கள் இந்நாட்டிற்காக ஆற்றும் புனிதமான பணியை உணராமல் பொருளாதாரத்தை மட்டுமே கருத்தில்கொண்டு பிறர்தகுதியை மதிப்பிடும் நிலை உண்டானது. அதனால் ''வாக்குக் கற்றவன் வாத்தியார்'' என்ற உயர்ந்த பொருளை உணர்த்தும் பழமொழி திரிந்து, 'வக்கற்றவன் வாத்தியார்' என்ற தாழ்ந்த பொருளை உணர்த்தும்பழமொழி தோன்றியது.

ஊர்களின் பெயர்களும் திரிந்து வழங்குகின்றன. திருவில்லிபுத்தூரின் அருகில் சிறுநதியின் அருகில் உள்ள ஒரு' ஊர் 'நதிக்குடி' என்ற அழகான பெயரில் வழங்கப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் 'நரிக்குடி' என்று திரிந்து நரிகள் கூடியிருந்த பாழான இடத்தில் இந்த ஊர் தோன்றியுள்ளது என்ற தவறான பொருளை உணர்த்தியது.

இதுபோல் உயர்ந்த பழமொழிகளும் ஊர்ப் பெயர்களும் திரிந்து தவறான கருத்துக்களைத் தருகின்றன. அவற்றை அறிந்து அப்பிழைகளைப் போக்கவேண்டியது அவசியமாகும்.

**கி. சீனிவாசன்**
**மேல்நிலை இறுதியாண்டு,**
**வணிகவியல் பிரிவு,**
**இலக்குமி ஆலை மேல்நிலைப்பள்ளி**
**கோவில்பட்டி,**
**நெல்லை மாவட்டம்.**

## பயிர்களைப் பாதுகாக்கும் புதிய மருந்து!

உலகில் ஆண்டுதோறும் பல கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருள்கள் பூச்சிகளால் அழிக்கப்படுகின்றன. இப்போது பயன்படுத்தப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகள், பயிர்களுக்குத் தீங்கு செய்யும் பூச்சிகளுடன், நன்மை செய்யும் பூச்சிகளையும் கொன்று விடுகின்றன. இவற்றை உண்டால் மக்களுக்கும் மரணம் ஏற்படுகிறது.

எனவே, பயிர்களைப் பாதுகாக்கும் புதிய மருந்து ஒன்றைச் சூழ்நிலைக்கும் மக்களுக்கும் தீங்கு செய்யாத ஒன்றை-சோவியத் விஞ்ஞானிகள் தயாரித்து உள்ளனர்.

பயிர்களுக்குத் தீங்கு இழைக்கும் பூச்சிகளைக் கொல்லக் கூடிய சில உயிரினங்கள் இயற்கையில் உள்ளன என்பதை அவர்கள் கண்டுபிடித்தனர். செயற்கைச் சூழ்நிலையில், இந்த உயிரினங்களை வளர்ப்பதில் அவர்கள் வெற்றி பெற்றனர். இந்த உயிரினங்களை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தயாரிப்புகள் பயிர்களைக் கொல்லும் பூச்சிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. "லெபிடோசைட்" என்பது, அத்தகைய புதிய தயாரிப்புகளில் ஒன்றாகும்.

திராட்சை,பருத்தி சர்க்கரை, வள்ளி முதலிய பயிர்களை நம்பகமாகப் பாதுகாக்கும் மருந்தாக, "லெபிடோசைட்" விளங்குகிறது. மக்களுக்கும், தாவரங்களுக்கும், பயனுள்ள பூச்சிகளுக்கும், இதனால் தீங்கு எதுவும் இல்லை.





# பார்வையற்றோருக்குப் பரிந்துதவும் அரசு

பார்வையற்றோரின் பிரச்னைகளை ஆய்ந்து, அவர்களது நலனுக்காக அரசு இது நாள்வரை ஆற்றியிருக்கும் பணிகளைத் தெரிந்து கொண்டு, அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய மேல் நடவடிக்கை குறித்து முடிவெடுக்கும் பொருட்டு 10.10.83 அன்று மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. பார்வையற்றோரின் நலனுக்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் பார்வையற்றோர் சங்கப் பிரதிநிதிகளுக்கு அப்போது விளக்கிக் கூறப்பட்டன.

பார்வையற்றோரின் நலனுக்காக அரசு ஏற்கெனவே வழங்கியுள்ள சலுகைகளும், முன்னுரிமைகளும் பிற உதவிகளும் கீழ் வருமாறு:

ஒன்பதாவது வகுப்பு அல்லது அதற்கு மேல் கல்வி பயிலும் பார்வையற்றோர் ஒவ்வொருவருக்கும் படிப்பு உதவியாளர் தொகை ( Readers allowance) மாதம் 50 வழங்குதல், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத்தவிர இதர எல்லாப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி, மாநில மற்றும் மத்திய அரசுப் பணிகளில் அமர்த்த உச்சவயதுவரம்பு வரம்பு 10 ஆண்டுகளுக்குத் தளர்த்தப்படுதல், எஸ்.எஸ்.எல்.சி. அல்லது அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் தேர்வு பெற்று வேலை இல்லாமல் வேலைவாய்ப் பலுவலகத்தில் 3 ஆண்டிற்கு மேல் பதிவில் உள்ள பார்வையற்றோருக்கு ஒவ்வொரு மாதமும் ரூ. 50 உதவித்தொகை வழங்குதல், அரசு மற்றும் அரசு சார்ந்த மற்றும் உள்ளாட்சித் துறை நிறுவனங்களில் எழும் காலி இடங்களில் 3%. ஊனமுற்றவருக்கு-பார்வையற்றோருக்கும் சேர்த்து ஒதுக்கீடு, கல்வி நிலையங்களிலும், தொழில் கல்லூரிகளிலும், தொழிற் பயிற்சி நிலையங்களிலும், ஊனமுற்றோருக்கு-பார்வையற்றோர்களுக்கும் சேர்த்து 3%. இட ஒதுக்கீடு, அரசு-அரசு சார்பு நிறுவனங்கள்ல் உள்ள மின் தூக்கி இயக்குபவர் பணிகள் ஊனமுற்றோருக்காகவே- பார்வையற்றோர் உள்பட - ஒதுக்கீடு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் ஒதுக்கப்படும் வீடுகள், நிலங்கள் ஆகியவற்றில் ஊனமுற்றோருக்குப் பார்வையற்றோர் உள்பட 1% ஒதுக்கீடு, பள்ளி கல்லூரிகளல் கல்வி பயிலும் பார்வையற்றோருக்கு கல்விக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்தல், பார்வையற்ற மாணவர்தேர்வுஎழுதும்பொழுது அவருக்கு எழுதும் உதவியாளர் இலவசமாக அளிக்கப்படுதல், தனக்கு அல்லது தன் பெற்றோருக்கு மாத வருமானம் ரூ. 350 க்கு குறைவாக இருப்பின் அவர் தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வு ஆணைக்குழு நடத்தும் தேர்வுப்பணிகளுக்கு மனுச் செய்யும் பொழுது பார்வையற்றவர் மனுக்கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுதல், பார்வையற்றவருக்கு மருத்துவச் சான்றிதழ் அரசு மருத்துவ அலுவலர்களால் இலவசமாக வழங்கப்படுதல், வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படுகிற காலி இடங்கள்-முன்னுரிமை பெற்ற மற்றும் முன்னுரிமை பெறாத இருவகைக் காலி இடங்களுக்கும்-பார்வையற்றோர் பரிந்துரைக்கப்படுதல் ஆகியவை அடங்கும்.

பார்வையற்றோர் சங்கங்களின் பிரதிநிதிகள் அக்கூட்டத்தில் சில கோரிக்கைகளை அளித்தார்கள். அவைகளில் குறிப்பாக ஊனமுற்றவர்களுக்கான 3%. இட ஒதுக்கீட்டில் ஒரு சதவீதம் பார்வையற்றவர்களுக்கு என்றே தனியாக ஒதுக்கப்படவேண்டும் என்பதுமுக்கியமானகோரிக்கைஆகும். அக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருப்பதாக அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.



# மாநகராட்சி மாணவ மணிகள்

சென்னை மாநகரில் வாழும் பள்ளி வயதடைந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கும் பொறுப்பை மாநகராட்சி ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கென சென்னை மாநகரில் 376 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைச் சென்னை மாநகராட்சி நடத்தி வருகிறது. மாண்புமிகு முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ், இவ்வனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் 1,00,250 குழந்தைகள் சத்துணவு பெறுகிறார்கள்.

மாநகராட்சித் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 5-ஆம் வகுப்பு மற்றும் 8-ஆம் வகுப்புக்களில் தேர்ச்சி பெற்று, தொடர்ந்து கல்வி பயில வசதியில்லாத குழந்தைகளுக்குப்போதுமான வாய்ப்பும் வசதியும் அளிக்கும் பொருட்டு 25 உயர்நிலைப் பள்ளிகளையும் 10 மேல்நிலைப் பள்ளிகளையும் இம்மாநகராட்சி நடத்தி வருகின்றது. சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்தி அரசுப் பொதுத் தேர்வுகளில் அதிகமான மாணவர்களைத் தேர்ச்சி பெறச் செய்யும் நோக்குடன், கடந்த 9 ஆண்டுகளாக மாநகராட்சிப் பள்ளிகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் மாணவ மாணவிகளுக்குப் பரிசளிக்கும் திட்டத்தைச் சென்னை மாநகராட்சி நடத்தி வருகிறது. 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்குப்பாடம் கற்பித்த ஆசிரியர்களுக்கும் ஊக்க ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இது தவிர, சிங்வி அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் திரு சுகால் சந்த்ஜெயின் அவர்கள் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புக்களில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிபெற்ற மாணவ, மாணவிகளுக்குக் கடந்த சில ஆண்டுகளாகத் தாமாக முன்வந்து ரூ. 3,000 ரொக்கப் பரிசு வழங்கி வருகிறார். இந்த ஆண்டு ரூ. 3,500 வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்றே, தமிழ்நாடு சட்ட மேலவை உறுப்பினர் திரு ஜேப்பியார் அவர்களும் தாமாக முன்வந்து 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தாழ்ந்தப்பட்ட மாணவ, மாணவியருள் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியடைந்த இருவருக்குத் தலா ரூ. 1,000 ரொக்கப் பரிசுத் தொகை வழங்கி வருகிறார்.

1983-ஆம் ஆண்டு நடைபெற்ற 10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவிகளுக்கும், ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் பரிசளிப்பு விழா குழந்தைகள் தினமாகிய 14-11-83 அன்று நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு தி.ச. சிவப்பிரகாசம், இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார். விழாவுக்குச் சென்னை மாநகராட்சிச் சிறப்பு அலுவலர் திரு இ. சந்திரசூடன், இ.ஆ.ப. தலைமை தாங்கினார்.

மாணவ, மாணவிகளுக்கும் அவர்களின் ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் பரிசுகள் வழங்கி, பாராட்டிப் பேசிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் குறிப்பிட்டதாவது:

''சிறந்த முறையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் நல்ல மாணவர்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கும் பரிசளிக்கும் நோக்குடன் இந்த விழா, ஆசியாவின் ஜோதி நேரு பிறந்த நாளாகிய இன்று கொண்டாடப்படுகிறது. திரு. நேரு அவர்கள் ஒருபோதும் நோய்வாய்ப்பட்டு படுத்தது கிடையாது. அயராது உழைத்து நாட்டு முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். குழந்தைகளிடம் மிகுந்த அன்பு கொண்டவர். எனவேதான், நேரு பிறந்த நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

''சென்னையில் மூன்றில் ஒரு பங்கு மாணவ, மாணவிகள் மாநகராட்சிப் பள்ளிகளிலேயே படிக்கிறார்கள். இப்பள்ளிகளில் படிக்கும் பெரும்பாலான குழந்தைகள் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்கள்தான். இவர்களின் தரத்தை உயர்த்த பல முயற்சிகளைச் செய்து வருகிறோம். மற்ற பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் போட்டி போடக்கூடிய அளவிற்கு இவர்களின் தரம் உயர வேண்டும். இதற்கு இவர்களின் பெற்றோர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தர வேண்டும். இதற்காக வாரத்திற்கு ஒரு முறையாவது மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளித் தலைமையாசிரியரிடம் சென்று தங்கள் குழந்தைகளின் நிலையைக் கேட்டறிதல் வேண்டும்.''

சென்னை மாநகராட்சிக் கல்வி அலுவலர் திரு ஒ. அ. கனகசபை நன்றி கூறினார்.

— தே. மணி






# சட்டக் கல்வியிலும் தமிழ்நாடு வழிகாட்டுகிறது

"பல்வேறு துறைகளில் சட்டக் கல்வி போதனை அவசியமானது. வழக்குரைஞர்களாகப்பணிபுரிவது தவிர சட்டம் சம்பந்தமான, புத்தகங்களை எழுதுவது, வகுப்புகள் நடத்துவது, கருத்தரங்குகளில் பங்கு பெறுவது ஆகியவை திறம்படச் செய்யவும், சட்டக் கல்வி அவசியம். இதை மனதில்கொண்டு பல வகையான சட்டக் கல்வி முறைகளை அமல்படுத்த வேண்டும்''.

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 2-11-83 அன்று நடந்த புதிய ஐந்தாண்டுச் சட்டக் கல்வி முறையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், மேதகு இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் திரு. எம். ஹிதயதுல்லா அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் :

''இந்தத் திட்டத்தை இரு கட்டங்களாக அமல்படுத்துவது பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று இந்திய சட்டக்கழகத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

''ஐந்தாண்டு சட்டக் கல்வி பயிலச் [illegible] முதல் 3 ஆண்டுகள் சட்டம் பற்றிய அடிப்படைக் கல்வியைப் பயிற்றுவித்து அவர்களுக்கு பி.ஏ., சட்டம் என்ற பட்டத்தைவழங்கலாம். இந்தப் பட்டத்தைப் பெற்றவர்களில் வழக்குரைஞர்களாகப் பணிபுரிய விரும்புபவர்களுக்கு மட்டும் மேலும் 2 ஆண்டு சட்டக் கல்வியில் தீவிரப் பயிற்சி அளிக்கலாம். இவர்களுக்குபி.ஏ., எல்.எல்.பி., பட்டம் தரலாம்.

''புதிய 5 ஆண்டு சட்டக் கல்வி முறையைத் தமிழ்நாடு தனது எல்லா சட்டக் கல்லூரிகளிலும் அமல்படுத்தமுன்வந்திருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறேன். இதன் மூலம் மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு வழிகாட்டியாகத் திகழ்கிறது.''

விழாவிற்குத் தலைமைவகித்து மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் பேசுகையில், ''புதிய 5 ஆண்டு சட்டக் கல்வி முறை, சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்த உதவும் என்று நம்புகிறேன். சட்டத் துறையில் பணியாற்றுவோர் மக்களுக்கு விரைவாக நீதி கிடைப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.''

விழாவின், மாண்புமிகு கல்வி அமைச்சர் [illegible] மேல்நிலைக் கல்வி முறையில் தொழிற் கல்வித் திட்டத்தை முதல் முதலாக அமல்படுத்திய தமிழ்நாடு, 5 ஆண்டு சட்டக் கல்வித் திட்டத்தையும் முதல் முதலாக அமல்படுத்தி இருப்பதன் மூலம், கல்வித்துறையில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. சட்டக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாட்டில் நான்கு இடங்களில் சட்டக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன.''

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி-பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு நீதிபதி திரு பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், ''சட்டக் கல்வி பயில்வோருக்குச் சிறப்பான பயிற்சி தர புதிய கல்வித் திட்டம் உதவும்'' என்றார்.

சட்டக் கழகச் செயலாளர் திரு என். ஆர். மாதவமேனன் பேசுகையில், ''1984-ஆம் ஆண்டுக்குள் பெங்களூரில் சட்டப் பல்கலைக் கழகம் உருவாக்கப்படும். சட்டம் பயிலும் மாணவர்களுக்கு நியாயமான விலையில் நல்ல பாடப் புத்தகங்களை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' என்றார்.

தமிழக அரசு கல்வித்துறை ஆணையாளர் மற்றும் செயலாளர் திரு டி.டி. சுந்தர்ராஜ், இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார். சட்டக் கல்வி இயக்குநர் பேராசிரியர் எஸ். [illegible] நன்றி நவின்றார்.

[illegible]

# தம்மம்பட்டி சிற்பங்கள்



**கோ**யில் தேர்களிலே இருக்கின்ற மரச் சிற்பங்கள் அக்காலத்திய மக்கள் தம் வாழ்க்கை முறைகளை விளக்குவனவாக இருக்கின்றன; இயலுமா இப்படி எனக் காண்போர் வியக்கத்தக்க அளவிற்கு நுணுக்கமுடையயவைகளாகக் காணப்படுகின்றன.

அவ்வாறான சிற்பங்கள் இன்றும் சிறப்புறச் செய்யப்படுகின்றன சேலம் மாவட்டத்திலுள்ள தம்மம்பட்டியில். சேலம்-திருச்சி வழியில் 60-வது கிலோ மீட்டரில் உள்ள சிற்றூர்தான் தம்மம்பட்டி.

அங்கே அனைத்திந்தியக் கூட்டுறவு வாரியத்தின் சார்பில் (All India association board) இச்சிற்பங்களைச் செய்வதெப்படி எனக் கற்பிக்க ஒரு பள்ளியே வைத்து நடத்துகிறார்கள். இங்கே படிக்கிறவர்களுக்கு மாதம் நூறு ரூபாய் உபகாரச் சம்பளம்.

மாநில அரசு ரூ. 50 வீதம் தந்து வருகிறது.

பொன்னுச்சாமியைத்தலைமைச் சிற்பியாகக் கொண்டு இங்கே பலபேர் மரங்களை உயிர்ச்சிலைகளாக்கும் வித்தையைக் கற்று வருகிறார்கள். தூங்குவாகை, மகாலிங்க மரம், கொடுக்காப்புளி மரம் ஆகியவற்றில்தான் சிற்பக் கைத்திறன் காட்டப்படுகிறது.

திருச்சி மாவட்டத்திலுள்ள அரும்பாவூர், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களிலும் இவ்வகை மரச்சிற்பங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் தம்மம்பட்டி கைத்திறன் அலாதியாக உள்ளது.

பூம்புகார் முதல் ரிஷிகேஷ் சிவானந்தா ஆசிரமம் வரை மட்டுமல்ல - வெளி மாநிலங்களும், இன்னும்சொல்லப்போனால் வெளிநாடுகளெல்லாமும் கூட இங்கே செய்யப்பட்ட மர வேலைப்பாடுகளுக்கு மதிப்பளித்துள்ளன; மதிப்பளித்து வாங்கி வருகின்றன.



பம்பாயிலும், டில்லியிலும் இங்கே செய்யப்பட்ட மரச்சிற்பங்களால் கண்காட்சியே அமைக்கப்பட்டிருக்கின்றன.

நடனப் பெண், வீணை வாசிப்பவள், சிவநடனம், மீனாட்சி கல்யாணம் போன்ற மரச் சிலைகள் அப்படியே உயிரோடுள்ளவை போலக் காணப்படுகின்றன. ஒரு மரச்சிலை அதிகபட்சம் பத்தடி வரை செய்யப்பட்டுள்ளது; பத்தாயிரம் ரூபாய் வரை விலை போயிருக்கிறது.

''சந்தனமரத்தில் இப்படிப்பட்ட சிற்பங்களை இன்னும் எழிலுறச் செய்யமுடியும். ஆனால் அரசு அதற்கு அனுமதி தரவில்லை'' என்றார் தலைமைச் சிற்பி.

இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டபோது அவர் இப்படித் தெரிவித்தார்: ''வெளிநாட்டுக்குச் சந்தன மரங்களை அனுப்புவதற்குத்தான் தடை இருக்கிறதே தவிர, அதில் சிற்பங்கள் செய்யவோ அனுப்பவோ கூடாது என்று சட்டமிருப்பதாகத் தெரியவில்லை''.

# சேலத்துக்கு வாய்த்த சிறப்பு



**சே**லம் மாவட்டத்திற்கெனச் சில தனிப் பெருமை உண்டு. சேலத்தில் உள்ள மாக்னசைட் தொழிற்சாலையும், சேலம் உருக்காலையும் தான் பெருமையை ஏற்படுத்தும் பெருந்தொழில்கள்.

## தமிழ்நாடு மேக்னசைட்

சேலத்தில்சேர்வராயன் மலைத்தொடரில் மாக்னசைட் என்னும் கனிமப் பொருள் பல்லாண்டுகளாகக் கிடைத்து வருகிறது. 1938ஆம் ஆண்டிலிருந்து 1958 முடிய 20 ஆண்டுக்காலத்திற்கும், பின்னர் 1958ஆம் ஆண்டிலிருந்து 1978ஆம் ஆண்டு வரை 20 ஆண்டுக் காலத்திற்கும் - மேக்னசைட் வெட்டி எடுத்துக் கொள்ளும் உரிமையைத் தனியாருக்கு, அரசு கொடுத்திருந்தது. 1978ல் தனியார் மறுபடியும் அனுமதிகோரி விண்ணப்பம் செய்த போதுஅரசு விழித்துக் கொண்டது. உரிமம் வேண்டி தனியார் அனுப்பிய மனுக்களை நிராகரித்து, அரசு தானே ஏற்றுக்கொண்டது. 1979ஆம் ஆண்டு பிப்ரவரி 6ல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டது, தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் என்னும் நிறுவனம்.

சேலத்தில் உள்ள திறந்தவெளிச் சுரங்கங்களில் ,மாதத்திற்கு 10,000 டன் மேக்னசைட் வெட்டி எடுக்கப்படுகிறது. இது, நாட்டின் தேவையில் மூன்றிலொரு பங்கைப் பூர்த்தி செய்வது மட்டுமல்ல, இத்துறையில் முதலிடத்தையும் வகிக்கிறது.

எஃகு உருக்குத் தொழிலில் மேக்னசைட் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இரசாயன உரங்கள் தயாரிக்கவும், மொசைக் தரைகள் போடுவதற்கும் பயன்படும் இந்தக் கனிமம் பால் போன்ற வெள்ளை நிறத்தில் உள்ளது. மேல்நாடுகளில் கால்நடைத் தீவனமாகவும் இது பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிறுவனத்தின் சுரங்கத்தில் ஏறக்குறைய 2300 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். தொழிலாளர்களில் 80 சதவிகிதம் ஆடவர், 20 சதவிகிதம் பெண்டிர். தொழிலாளர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் மாதச் சம்பளம் கணக்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. ஒரு தொழிலாளர் 6 நாள் தொடர்ந்து வேலைசெய்தால், 7ஆம் நாள் அவர் வேலை செய்யாமலே 7 நாட்களுக்குரிய சம்பளத்தை இங்கே பெறுகிறார். போனஸ் விதிகளின்படி, தொழிலாளர்களுக்கு 20 சதவிகித போனஸ் தரப்படுகிறது.

அவர்களுக்கு மருத்துவமனை, பூங்காக்கள், மருந்துகள், கைக்குழந்தைகளுக்கு விடுதி போன்ற பல்வேறு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சிற்றுண்டிச்சாலையில் - 5 காசுக்குத் தேநீரும் 5 காசுக்கு ஒரு இட்லியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

பெரும்பாலும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு பணியாற்றுகின்றனர். எல்லா மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு ஊழியர்களாக உள்ளனர்

கண்ணால் கண்டு, கையால் எடுக்க இயலாத மிகச் சிறிய துகள்களையும் பொறுக்கி எடுப்பதற்குரிய சிறப்பான இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட இருக்கின்றன. ரூ. 80 கோடித் திட்டம் இது. இதன் கீழ் நிறுவப்பட உள்ள உருள் சூளைகள், சுத்திகரிக்கும் இயந்திரங்கள், செங்கற் சூளைகள் மூலம் உயர் ரக மேக்னசைட் தயாரிக்க முடிவதுடன், உற்பத்தியும் பல மடங்கு பெருகுவது திண்ணம்.

''அகில உலகத் தரக்கட்டுப்பாட்டுக்கு இணையான மேக்னசைட் தயாரித்தால்,அதன் இறக்குமதி குறையும். அந்நியச் செலாவணியும் மிச்சமாவதுடன், இராமப் புறத்தில் வேலை வாய்ப்பும் உருவாகும்'' என்று தெரிவிக்கிறார் நிருவாக இயக்குநர் திரு எஸ்.சுப்ரமணியம்.

''புதிய உத்திகளை மேற்கொள்ளும்போது - இந்தத் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் உலகப் புகழ் பெறும் நிறுவனமாக மலரும்'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார், இந்நிறுவனத்தின் தலைவரும்தொழில்துறைச் செயலருமாகிய திரு தயப் இ.ஆ.ப.

''எங்கள் நிறுவனத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இணக்கமான நல்லுறவு இருப்பதால் பணிகள் தடையின்றி-தொய்வின்றி நிறைவேற்றப்படுகின்றன என்று பெருமையுடன் கூறுகிறார் நிருவாகமேலாளர்திரு.சண்முகம்.

நான்கு வயதைத் தாண்டி ஐந்தாவது வயதில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் இந்த நிறுவனம் தமிழகத்திற்கு - குறிப்பாக சேலம் மாவட்டத்திற்குத் தனிப் பெருமையைத் தேடித்தந்து கொண்டிருக்கிறது.

தமிழ்ப்பித்தன்

## சேலம் உருட்டாலை

சேலத்தில் கஞ்சமலைப் பகுதியில் இரும்புத்தாது கிடைக்கிறது. அதனைப் பிரித்தெடுக்கும் உருக்

காலை ஒன்று சேலத்தில் அமைக் கப்பட வேண்டும் என்று நீண்ட காலமாகக் கோரிக்கை எழுப்பப் பட்டு வந்தது. தமிழக அரசும் தமிழக மக்களும் மைய அரசிடம் இந்தக் கோரிக்கையைப் பல் லாண்டுகளாக வற்புறுத்தி வந்த னர். அதன் விளைவாக உருக்



தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் மூலம் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத் திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் நிதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர்கள் திரு ப. குழந்தைவேலு, திரு எஸ். திருநாவுக்கரசு இருவரும் உடனுள்ளனர்.

காலை கிடைக்காவிட்டாலும் உருட்டாலை நமக்குக் கிடைத் தது. 1981 செப்டம்பர் 13ஆம் நாளன்று சேலம் உருட்டாலை- எவர்சில்வர் தகடு உற்பத்தியைத் தொடங்கியது.

உயர்ந்த ரகப் பொருளையே உற்பத்தி செய்வது என்ற குறிக் கோளை இந்த ஆலை கொண்டி ருக்கிறது.

எவர்சில்வர் தகடுகளையும் சுருள்களையும் இந்த ஆலை உற் பத்தி செய்து வருகிறது. ஒவ் வொரு கட்டத்திலும் தரக்கட் டுப்பாடு இங்கு முழுமையாகக் கவ னிக்கப்படுகிறது.

நல்ல மேற்பரப்பும் ஒரேசீரான கனமும் கொண்ட இந்த எவர் சில்வர் தகடுகள் பாத்திரங்கள் செய்வதற்கு மிகவும் நல்ல ரக மாகத் திகழ்கின்றன. விரிசல் விழாத தன்மையும்-நன்கு வளைந்து கொடுக்கும் பாங்கும் இந்தத்தகட்டுக்குஉள்ளது. இந்தத் தகடுகளை வாங்கி அலைக்கருவி கள் உருவாக்குவோரும், வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்களைத் தயாரிப்போரும் இந்தத் தகடு களின் பெருமையை நன்கு

உணர்ந்திருக்கிறார்கள். மிகமிகக் குறைந்த அளவுதான் கழிவும் சேதமும் உண்டாகின்றன.

விற்பனைச் சந்தைக்கு அனுப் பப்படும் எவர்சில்வர் சுருள்கள் காகித இடைச் செருகல்களுடன்- மரச்சட்டங்களால் கட்டப்பட்டு, பாதுகாப்பாக அனுப்பப்படுகின் றன. இதனால் தகடுகளை வெட்டி, விற்பனைப் பொருள்களாக உரு வாக்குவோர்-தகடுகளில் நேரம் அல்லது சிராய்ப்பு ஏற்படாமல் தகடுகளை வெட்டமுடிகிறது.

சேலம் உருக்காலைத் தகடுகள் இன்று நாடெங்கும் கிடைக்கின் றன. மற்ற ஆலைகளின் எவர் சில்வர் தகடுகளுக்கு இணையாக விலை இப்போது சேலம் ஆலைத் தயாரிப்புக்குக் கிடைக்கிறது. சிறிய அளவில் கூட சேலம் எவர்



சில்வர் கிடைக்கிறது. வாடிக்கை யாளர்களுக்கு அநேக சலுகை களும் வழங்கப்படுகின்றன.

எவர்சில்வர் தகடுகளையும் சுருள்களையும் உருவாக்கும் தொழில்நுட்பம் பிரான்ஸ் நாட்டி லிருந்து- ஏற்றுக்கொள்ளப்பட் டிருக்கிறது. இங்குள்ள இயந்தி ரங்கள் பிரான்ஸ், பெல்ஜியம், ஆஸ்ட்ரியா, மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளி லிருந்து இறக்குமதி செய்யப்பட் டவையாகும்.

இங்கு பணிபுரியும் பொறி யியல் வல்லுநர்கள் - நிர்வாக அலுவலர்கள் எல்லாரும் எவர் சில்வர் தொழிலில் பழுத்த அனு பவம் வாய்ந்தவர்கள்.

இந்த ஆலை 3 கட்டமாகத் தனது பணியை நிறைவேற்றத் திட்டமிட்டிருக்கிறது. ஆண்டுக்கு 32000 டன் எவர்சில்வர் தகடு களையும் சுருள்களையும் தயா ரிப்பது முதற்கட்டம். செகண்ட்ஸ் மிர் ஆலையை கூடுதலாக உரு வாக்கி-தயாரிப்பு அளவை அதி கரிப்பது 2ஆம் கட்டம்.

திட்டமிடப்பட்ட பே.. து- 1974ஆம் ஆண்டில் -திட்ட மதிப் பீடு ரூ. 126.81 கோடியாக இருந் தது. தற்போது ரூ. 154.09 கோடி யாகலாம் என்று மதிப்பிடப்பட் டுள்ளது.

'காண்பதெல்லாம் தொழி லாளி செய்தான்' என்று பாவேந் தர் பாடினார். தொழிலாளர் களின் பெருமை அளவிடற்கரியது. அதனை நன்கு உணர்ந்துள்ள இந்த உருட்டாலை தனது தொழி லாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது.

மோகன்நகர் என்னும் நகரியப் பகுதி ரூ. 10 கோடி செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக 293 வீடுகள் பல் வேறு பிரிவுகளில் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் இரண்டு ஆண்டுகளில் மேலும் 500 வீடு கள் உருவாக்கப்பட உள்ளன.

தொழிலாளர்கள் நலன் காக் கும் வகையில் தொழிற் சங்கத் துடன் இணைந்த உற்பத்திக் குழு பாதுகாப்புக் குழு, துயர் துடைக்கும் குழு போன்ற பல் வேறு குழுக்கள் அமைக்கப்பட் டுள்ளன. கடன் வழங்கு, சேமிப்பு சங்கம் ஒன்றும் தொழிலாளர்க்கு உதவுகிறது.

18 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையும் உள்ளது. தொழிலாளர்களுக்கும் அவர் களது குடும்பத்தினருக்கும் இங்கு இலவச சிகிச்சை அளிக்கப்படு கிறது. நகரியத்துக்கு வெளியே வசிக்கின்ற -இந்த ஆலையின் தொழிலாளர்களுக்கும் இம் மருத் துவமனை சேவை புரிகிறது.

24 மணி நேரமும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் கிடைக்கிறது. பாதாளச் சாக்கடை வசதிகளும் உள்ளன. நல்ல முறையில் உரு வாக்கப்பட்ட தார்ச்சாலைகளும் போடப்பட்டுள்ளன.

## மேட்டூர் கெமிக்கல்ஸ்

மேட்டூரில் உள்ள மேட்டூர் கெமிக்கல் மற்றும் தொழில் கழ கம் லிமிடெட் ரூபாய் ஒரு மில்லி யன் மூலதனத்துடன் இயங்கு கிறது.

1936ஆம் ஆண்டு நவம்பர் 23ல் இது தொடங்கப்பட்டது என்றாலும் அவ்வப்போது வளர்ச்சியுற்று, இன்று சேலம் மாவட்டத்திற்கே தன்பெரு மையை ஏற்படுத்தித் தருகிறது.

நாட்டில் தொழில்யுகம் மலர்ந்த போது இரசாயனத் தொழிலின் வளர்ச்சியும்தேவையாகிவிட்டது. ஜவுளித்துணி உற்பத்தித் தொழி லுக்கு காஸ்டிக்சோடா, பிளீச்சிங் பவுடர், மற்றும் பல்வகை இரசா யனப் பொருள்கள் தேவைப்படு கின்றன. சோப் தயாரிப்புக்கும் காகிதத் தயாரிப்புக்கும் காஸ்டிக் சோடா இன்றியமையாப் பொரு ளாக விளங்குகிறது.

தினமும் 5 டன் காஸ்டிக் சோடா தயாரிக்கும் காஸ்டிக் குளோரின் தயாரிப்பு தொடங் கப்பட்டது. 1937ல் இந்தத் தொழிற்சாலைக்கு வித்திடப்பட் டது. 1940ல் வி. சேஷசாயி என் னும் தொழில் அதிபர் இந்தத் திட்டத்தை ஏற்றுச் செயல்படுத் தினார். திட்டம் நிறைவேற்றுவ தற்குத் தேவைப்பட்ட தொகை யை முதலீடு செய்து 1941ல் உற் பத்தியைத் தொடங்கினார்.

இந்திய நாட்டில் இதுதான் முழுக்க முழுக்க தேசிய முறை யில் உருவாக்கப்பட்ட முதல் காஸ்டிக் சோடா குளோரின் தயாரிப்பு நிறுவனம் ஆகும். அந் நாளில் ஆண்டிற்கு 3300 டன் தயாரித்து - நாட்டின் தேவையை நிறைவேற்றிய பெருமை இந்த நிறுவனத்துக்கு உண்டு.

மேட்டூர் அணைப் பகுதியில் 70 ஏக்கர் பரப்பில் அமைந்திருக் கிறது மேட்டூர் கெமிகல் நிறு வனம். காஸ்டிக் சோடா - சீமென்ஸ் பிலிட்டர் டயபராம் முறையில் தயாரிக்கப்படுகிறது. திரவ குளோரின் பேக்மன் முறை யில் தயாரிக்கப்படுகிறது.

1951ஆம் ஆண்டில் காஸ்டிக் சோடாவின் உற்பத்தி நாளொன் றிற்கு 14 டன்னாக அதிகரிக்கப் பட்டது. 1955ல் புதிய உத்தி கள் மூலம் நாளொன்றிற்கு 10 டன் திறனில் பிளீச்சிங் பவுட ரைத் தயாரிக்கத் தொடங்கியது. 1954ல் காஸ்டிக் சோடா உற் பத்தி நாளொன்றிற்கு 20 டன் னாகவும், 1962ல் 40 டன்னாக வும் 1964ல் 60 டன்னாகவும் விரிவடைந்தது.

வனஸ்பதியையும் இந்நிறு வனம் பல்லாண்டுகளுக்குமுன்பே தயாரிக்கத் தொடங்கியுள்ளது. தாவரச் சத்துக்களைக் கொடுப் பதில் இந்த எண்ணெய்ப்பொருள் பயன்படுகிறது. அப்போதே திருச்சியில் வனஸ்பதியின் இரண் டாவது மையத்தை உருவாக்கி விட்டது.

தனது பணியைப் பல்வேறு வகையில் வளர்ச்சியுறச் செய்த போது, ஆராய்ச்சிகளையும் அபி விருத்தி முயற்சிகளையும் இந் நிறுவனம் மேற்கொண்டது. அதன் விளைவாக -மாதத்திற்கு 50 டன் தயாரிக்கும் திறன் படைத்த பொட்டாசியம் குளோ ரேட் தொழிற்சாலையை ஏற் படுத்தியது.

1973ஆம் ஆண்டில் குளோரின் தொழில் இயந்திரங்கள் புதிய கட்டடத்திற்குக் கொண்டு செல்



லப்பட்டன. மின்ஆற்றல், தண்ணீர் விநியோக முறை, நீராவி விநியோகமுறை ஆகியவை புதுப்பிக்கப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டன.



135 ஏக்கர் பரப்பளவு கொண்ட புதிய இடம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. பழைய இடத்துக்கு 2 மைல் தொலைவில் உள்ளது இது. இங்கு ரேயான் கிரேடு காஸ்டிக் சோடா 1965ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. முதலில் நாள் ஒன்றிற்கு 60 டன் உற்பத்தி செய்யப்பட்ட காஸ்டிக் சோடா 1973ல் நாள் ஒன்றிற்கு 80 டன் உற்பத்தியாக வளர்ச்சியுற்றது.

இங்குள்ள குளோரோமெதேன் தயாரிக்கும் தொழிற்கூடத்தின் உதவியால் நாளொன்றிற்கு 20 டன் மெதில் குளோரைடு, மெதிலைன் குளோரைடு, குளோரோடு குளோரா பார்ம் மற்றும் கார்பன் டெட்ரா குளோரைடு ஆகியவை தயாரிக்கப் படுகின்றன.

மெர்க்குரி செல்களில் பயன்படுத்தப்படும் புதிய . தொழில் நுணுக்கமுறைகளைக் கையாண்டு நாளொன்றிற்கு 50 டன் தயாரிக்கும் நிலையை இந்நிறுவனம் பெற்றது. விரிவாக்கப்பணிகளின் மூலம் தற்போது நாளொன்றிற்கு 200 டன் காஸ்டிக் சோடா தயாரிக்கப்படுகிறது.

மேட்டூரில் இந்த நிறுவனம் செயல்படத் தொடங்கிய பிறகு தான்-இதன் அருகில் தொழில் மையங்கள் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டது. 6000 பங்குதாரர்களைக் கொண்ட இந்நிறுவனத்தில் 1500க்கு மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிகிறார்கள். இங்கு பணியாற்றுவோர தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் என்பது மட்டுமல்ல-வெளிநாடுகளுக்குச் சென்று நவீன கால முன்னேற்ற உத்திகளில் நல்ல பயிற்சி பெற்றவர்களும் ஆவார்கள்.

இங்கு தயாரிக்கப்படும் மெதில் குளோரைடு, பிளீச்சிங் பவுடர், எதில் சிலிகேட் ஆகியவை உலகத்தின் பலநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. குறிப்பாக தூரக்கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

700 தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு வாடகை வசூலிக்கப்படுவது கிடையாது. மின்சாரச் செலவையும் நிறுவனமே ஏற்றுக் கொள்கிறது. தண்ணீரையும் இலவசமாக வழங்குகிறது. தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு மட்டுமல்ல, இந்தத் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள கூனூர், ரெட்டைப் புளியமரம், சாம்பள்ளி, ராமநகர், தேங்கல்வாடை, கருமலைக்கூடல், பனங்காடு போன்ற மொத்தம் 10 கிராமங்களுக்கும் இத் தொழிற்சாலை தண்ணீரை விநியோகித்து வருகிறது.

உயர்நிலைப்பள்ளி, சமஸ்கிருத மொழி உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப்பள்ளி ஆகியவை இந்த நிறுவனத்தின் நிருவாகத்தால் நடத்தப்படுகின்றன. ஆண்டுக்கு 12 மாணவர்களுக்கு ரு.750 வீதம் படிப்புதவிப்பணம் வழங்கப்படுகிறது.

சிற்றுண்டிச்சாலையின் மூலம்-குறைந்த விலைக்கு உணவுப் பொருள்கள்வழங்கப்படுகின்றன. இதற்குரிய உதவித் தொகையை நிறுவனம் அளிக்கிறது.

20 ஆண்டுப்பணியை முடித்த தொழிலாளர்களுக்கு வெள்ளிப் பதக்கமும் எச்.எம்.டி. கைக்கடிகாரமும், 30 ஆண்டுப் பணியை முடித்த தொழிலாளர்களுக்கு தங்கப்பதக்கமும்வழங்கப்படுகின்றன. ஓர் ஆண்டுக்கு, குறைந்தது 50 தொழிலாளர்கள் கைக்கடிகாரங்களும் 10 தொழிலாளர்கள் தங்கப்பதக்கமும் பெறுகிறார்கள்.

ஆண்டுக்கு 42 சதவிகிதம் போனஸை இந்த நிறுவனம் அளித்துப் பெரும்புகழ் அடைந்திருக்கிறது; அடைந்துவருகிறது.

இந்தத் தொழிற் கூடத்தைப் போன்று பல்வேறு . தொழிற் கூடங்கள் சேலம் மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

**உயர்ந்த ரக மேக்னசைட்**

இந்தியாவில் உத்தரப்பிரதேசத்திலும் தமிழகத்தின் சேலத்திலும்தான் மேக்னசைட் கிடைக்கிறது. சேலத்தில் கிடைப்பதுதான் மிக உயர்ந்த ரகமாகும்.

**கழுதைகளும் உதவின**

ஏர்க்காடு நகரியப் பகுதியில் கொட்டச்சேட்டிலிருந்து கொம்புத்தூக்கி வரை சாலை உருவாக்கப்படும்போது - அதற்குரிய தளவாடச் சாமான்கள்-மூலப் பொருள்கள் ஆகியவை கழுதைகளின் மூலமாகக்கூட எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன.



**சேலம் மாவட்டம்**



# சத்துணவுத் திட்டம்

— ராஜீவ்

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'என்று சொல்லிய வள்ளலாரின் உள்ளக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 82-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தொடங்கப்பட்ட குழந்தைகள் சத்துணவுத் திட்டம் சேலம் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறுகிறது.

சேலம் மாவட்டத்தில் 1616 கிராமப் பகுதிகளிலும் 247 நகர்ப்புறப் பகுதிகளிலும் 2 வயது முதல் 4 வயது வரை உள்ள பிள்ளைகள் பயன் பெறுகிறார்கள். 5 வயதுக்கு மேல் 9 வயது வரை உள்ள பிள்ளைகள் 1915 கிராமப் பகுதிகளிலும் 197 நகர்ப்புறப்பகுதிகளிலும் பயன் பெறுகிறார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம் 2 வயது முதல் 4 வயது வரை உள்ள 79,229 ஆண் குழந்தைகளும் 69,559 பெண் குழந்தைகளும் பயன் பெறுகின்றனர். இவர்களில் 51,262 குழந்தைகள் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர் ஆவர்.

5 வயது முதல் 9 வயது வரை உள்ள, 1,48,462 ஆண் குழந்தைகளும் 1,10,683 பெண் குழந்தைகளும் பயன்பெறுகின்றனர். இவர்களில் 68,844 குழந்தைகள் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவர் ஆவர்.

அரசு உதவித் தொகை பெற்று வரும் முதியோர்களுக்கும் சத்துணவு வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் 1983-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அறிமுகம் செய்தார். அதன்படி, சேலம் மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தால் பயன் பெறும் முதியோர் உதவித் தொகையாளர் 15,778 பேர் ஆவர்.

குழந்தைகள் நல அலுவலர்கள், குழந்தைகள் நல உதவியாளர், பள்ளிச் சத்துணவு அமைப்பாளர், பள்ளிச் சமையலர், உதவியாளர் என மொத்தம் 11,933 பேர் சேலம் மாவட்டத்தில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்களில் விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் உள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் உள்ள 8 வட்டாரக் கிடங்குகளின் மூலம் 3,975 சத்துணவு மையங்களுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவிலான அலுவலர்கள், கோட்ட அளவிலான அலுவலர்கள், மண்டல அலுவலர்களாக நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மண்டல அலுவலரும் மாதத்திற்கு 30 மையங்களைப் பார்வையிட்டு அறிக்கை அனுப்புகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஆகியோர் மாவட்ட, கோட்ட அளவில் மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டு-கல்வித் துறையினால் நடத்தப்பட்டு வரும் சத்துணவு மையங்களைப் பார்வையிட்டு, அவர்கள் அறிக்கை அனுப்புகின்றனர்.

ஒவ்வொரு நகராட்சி ஆணையர்களும், அந்தந்த நகராட்சிக்கு மண்டல அலுவலர்களாக நியமிக்கப் பெற்று, 30 மையங்களைப் பார்வையிட்டு அறிக்கை அனுப்புகின்றனர்.

ஒவ்வொரு மாதமும், மாவட்ட ஆட்சித் தலைவர், மண்டல அலுவலர்கள் கூட்டத்தைக் கூட்டி, ஆய்வு செய்கிறார். அவ்வப்போது எழும் பிரச்சினைகள் குறித்தும் - இந்தத் திட்டம் மேலும் நல்லமுறையில் நடைபெறுவதற்குரிய வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடுகிறார்.

சேலம் மாவட்டத்தில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது; பொது மக்களின் வாழ்த்துக்களைப் பெருமளவில் பெற்று வருகிறது.



சேலம் மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதை நேரில் கண்டறிவதற்காக வினாயகம்பட்டி பாடசாலைக்குச் செல்கிறோம் நாம்.

முகமதுகவுஸ் என்பார் தலைமை ஆசிரியராக உள்ள அந்தப்பள்ளியில் முதல் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை உள்ள 180 குழந்தைகள் இத்திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டவர்களாவர். நாம் சென்றிருந்தபோது 150 பேரே வருகை தந்திருந்தனர்.





'அகர முதல எழுத்தெல்லாம்..' என்பதில் தொடங்கி திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாக்கள் ஆறு அந்த மழலைகளின் இசையிலே பாடி முடித்த பின் உணவுண்ணுகின்றன அந்த இளம் சிட்டுகள்.

உண்டு களைப்பாறிய பின் அவர்களில் சில மாணவ மாணவிகளை அழைத்துக் கேட்கிறோம் ''என்ன சாப்பாடு இன்றைக்கு?''

''காரட் சாம்பார், கீரை கடைசல்'' ஐந்தாறு பேர் ஒரே குரலில் சொல்லுகிறார்கள்.

சாப்பாட்டு வேளை; தலைமையாசிரியர் முன் நிற்க, திரு. ஆர். பி. கனகசபாபதி, திரு. ஆர். மாதேசன், திரு. ஏ. சந்திரமோகன், திரு. எஸ். சந்திரையன் ஆகிய ஆசிரியர் நால்வரும் மாணவ மாணவிகளை வரிசையுற அமரச் செய்கின்றனர் தட்டோடு.

அமைப்பாளர் மேற்பார்வையில் பணியாளர் இருவரும் சோறு பரிமாறுகின்றனர் ஆவி பறக்க.



'சாப்பாடு ஒங்க வீட்ல பண்ணினாப்ல இருந்துதா?''

''அதைவிட நல்லா இருந்திச்சி!''

அந்தப் பள்ளிக்குச் சற்றுத் தள்ளியிருந்த குடிசையில் எட்டிப் பார்த்த பெரியவர்கள் இருவரை அழைக்கிறோம், கே. சுந்தரம், ஆர். கந்தன் இருவருமாகிய அவர்கள் வந்து நம்முன் நின்றனர்.

''ஒங்க குழந்தைங்க இந்த ஸ்கூல்ல படிக்குதுங்களா?''

''ஆமாமுங்க'' என்கிறார்கள் அவர்கள்.

''இங்கே இலவசச் சாப்பாடு போடறாங்களே; அது பத்தி என்ன நினைக்கிறீங்க?''

''சின்ன வயசுலயே சோத்துக் கவலை இருந்ததாலதாங்க நாங்கள்லாம் படிச்சிக்க முடியலே; எங்க புள்ளைங்க இந்தத் திட்டத்துனாலேயே எந்தக் கவலையுமில்லாமெ நல்லா படிக்கிதுங்க. இது ரொம்ப ரொம்ப சந்தோஷப்பட வேண்டிய விஷயம்தானுங்களே!'' என்றார் ஒருவர்.

''பிள்ளைங்க இந்த சாப்பாடு பத்தி ஒங்ககிட்ட வந்து ஏதாவது குறைபட்டுகிட்டதுண்டா?''

''அதெப்பிடிங்க குறைபடும்? ஒரு தகப்பன் ஸ்தானத்துல இருந்து அரசாங்கமே போடற சாப்பாடு குறை சொல்றாப்ல இருக்குமுங்களா?'' என்று சற்றே வேகத்தோடு நம்மைக் கேட்டார் மற்றவர்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற நன்றி மறவாதிருக்கும் அந்தக் குழந்தைகளையும், பெற்றோரையும் வியந்து பாராட்டிவிட்டு விடை பெறுகிறோம் நாம்.





# நேகமத்தில் வேட்டி·சேலை வழங்கு விழா

நேகமத்தில் 6-11-83 அன்று நடைபெற்ற வேட்டி, சேலை, பட்டா வழங்கு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உரையாற்றினார்.

"இப்படிப்பட்ட விழாக்களில் ஆயிரம் பேருக்கு வேட்டி சேலை வழங்குவதென்றால் நாலு ஐந்து பேருக்கு வழங்கிவிட்டு பின்னர் அதிகாரிகள் தனியாக மற்றவர்கட்கு வழங்குவார்கள். ஆனால் வேட்டி சேலை மற்றும் நிலப்பட்டாக்கள் அனைத்தையும் இங்கேயே வழங்கிட வேண்டும் என்று விரும்பினோம். அதே நேரத்தில் அனைவரையும் பார்க்க வேண்டுமென்று விரும்பினேன். ஆனால், நூற்றுக்கணக்கானவர்களுக்கு இந்த உதவிகளை வழங்குவதற்குள் மழை வந்து விட்டது.

"உதவிகள் அனைத்தையும் இப்படிப்பட்ட விழாவில் நேரடியாகவே வழங்கிட வேண்டும் என்று விரும்புகிறேன். வேட்டி, சேலை, பட்டாக்களை மற்றும் அனைத்தையும் பெறுபவர்களை இம்மாத இறுதியில் நடைபெறும் நிகழ்ச்சியில் சந்திக்கின்றேன் என்றார் மாண்புமிகு முதலமைச்சர்.



விழாவிற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில் மாண்புமிகு அமைச்சர்களும், சட்டமன்றக் கொறடா, சட்ட மேலவைக் கொறடா, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

ஏழை எளிய மக்களுக்கு முறையாக பட்டா வழங்கப்பட்டிருக்கிறதா என்றும், வீடுகள் கட்டியுள்ளனரா என்றும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆலோசனையின்படி 29.11.83 அன்று கோவை மாவட்டத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட்டத்தைச் சார்ந்தபதின்மூன்று ஊர்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார். இதில் பயனடைந்த 340 பேரில் ஆதிதிராவிடர்கள் 227 பேர். மற்ற சமூகத்தினர் 113 பேர்.







## நெடுஞ்சாலைத் துறையின் சீரிய பணிகள்

கோவை மாவட்டம் பொள்ளாச்சித் தாலுக்காவில் நெடுஞ்சாலைத் துறையினர் உப்பார் ஆற்றின் குறுக்கே ஏறத்தாழ ரூ. 14 இலட்சம் செலவில் பாலம் கட்டியதினால் காளியாபுரம், வேட்டைக்காரன்புதூர், ஆனைமலை, சேத்துமடை, ஓடையகுளம் ஆகிய கிராமங்களில் உள்ள 50 ஆயிரம் மக்கள் பயன் அடைவார்கள்.

ஆழியாற்றின் குறுக்கே உள்ள பாலத்தை மீண்டும் திரும்பக் கட்டுவதால் ஏறத்தாழ ரூ. 30 இலட்சம் செலவாகும். இதனால் பொள்ளாச்சி, அம்பராம்பாளையம், ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், காளியாபுரம், ஓடையகுளம், சேத்துமடை, பெரியபோது, கொல்லங்கோடு (கோளமாநிலம்) பகுதிகளில் 80 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள்.

பெரியபட்டி நெகமம் சாலையில் ரூ3½ இலட்சம் செலவில் கட்டப்பட்டுவரும் பாலத்தினால் பெரியப்பட்டி, நெகமம், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு பகுதிகளில் 40 ஆயிரம் மக்கள் பயன் அடைவார்கள்.

## அரசுக்குப் புதிய சொத்துக்கள்

நீர்ப்பாசன திட்டம் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் போன்றவற்றால் ரூ. 270 கோடி அளவில் அரசுக்குப் புதிய சொத்துக்கள் உருவாகி உள்ளன.



## கோவை மாவட்டத்தில் நலிந்தோர் நல்வாழ்வுக்கான திட்டங்கள்

கோவை மாவட்டத்தில் 29.11.83 அன்று அரசின் மாபெரும் சமுதாய நலப் பணித் திட்டங்கள். ரூ. 14.5 இலட்சம் செலவில் 18 பள்ளிக் கட்டடங்கள். ரூ. 28.5 இலட்சம் செலவில் 57 சத்துணவு மையக் கட்டடங்கள். ரூ. 1 இலட்சம் செலவில் இரண்டு ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள். ரூ 10 இலட்சம் செலவில் 14 தாய்சேய் நலவிடுதிக் கட்டடங்கள். ரூ.6 இலட்சம் செலவில் ஏழு ஊரக மருந்தகக் கட்டடங்கள் ரூ. 96,000 செலவில் இரண்டு ஆசிரியை குடியிருப்புகள், பணிக் காலத்தில் இறந்துபோன இரண்டு அரசு ஊழியர்களுக்கு ரூ. 20,000 வழங்கப்பட்டது.

விவசாயத் தொழிலாளர்களுக்கு வேட்டி, புடவைகள் 3,472 பேருக்கு வழங்கப்பட்டன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 3 இலட்சத்து பதினாறாயிரம் கடனாகவும், ரூ. 1 இலட்சத்து நான்காயிரம் மானியமாகவும் 119 பேர்களுக்கு வழங்கப்பட்டது.

தலா ரூ. 1,000 வீதம் மூன்று விதவையரின் பெண்களுக்கு திருமண உதவித்தொகை ரூ. 3,000 வழங்கப்பட்டது. விதவைகளுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடனாக நான்கு பேருக்கு ரூ. 1,000 வழங்கப்பட்டது. உடல் ஊனமுற்றோருக்குப் பெட்டிக் கடைகள் வைக்க மானியமாக நான்கு பேருக்கு தலா ரூ. 500 வழங்கப்பட்டது. ஆதிதிராவிடர் ஒன்பது பேர்களுக்கு தொழிற்கருவிகள் வழங்கப்பட்டன.

பிற்பட்டோர் 55 பேர்களுக்கு தொழிற்கருவிகள் வழங்கப்பட்டன. 20 முதியோர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து விபத்தில் பாதிக்கப்பட்ட 31 பேருக்கு தலா ரூ. 1,000 வீதம் ரூ. 31,000 வழங்கப்பட்டது.





## கூட்டுறவே நாட்டுயர்வு

கூடிவாழ்ந்தால் கோடி நன்மை. கூட்டுறவே நாட்டுயர்வு என்றெல்லாம் கோடிட்டுக் காட்டுவது, அதனால் ஏற்படும் அளப்பரிய நன்மைகளைக் கருதியே என்பதைப் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களை நேரில் போய்ப் பார்த்தபோது தெரிந்து கொள்ள முடிந்தது.

முப்பதாவது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவினையொட்டி, 11.11.83 அன்று செய்தியாளர்கள் சென்னை நகரில் உள்ள கூட்டுறவு அமைப்புகளை நேரில் சென்று பார்த்தார்கள். இந்த ஒருநாள் பயணத்துக்குத் 'தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்' ஏற்பாடு செய்திருந்தது.

### தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்

கூட்டுறவு இயக்கம் பற்றி பொதுமக்களுக்குத் தெளிவாக விளக்கவும், கூட்டுறவு இயக்கச் சாதனைகளை விரிவாக எடுத்துரைத்து விழிப்புணர்ச்சியை உண்டாக்கவும் ஒவ்வொரு ஆண்டும் அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிக்கும், புதிய 20-அம்சத் திட்ட வெற்றிக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்பாகப் பணியாற்றிவருகின்றன. வேளாண்மை வளர்ச்சிக்கு உதவி நுகர்பொருள் வழங்குதல், உற்பத்திப் பொருள் விற்பனை, பழங்குடி மக்கள் மேம்பாடு, நலிந்தோர் நல்வாழ்வு, மாணவர் நலன் ஆகிய துறைகளில் கூட்டுறவு நிறுவனங்கள் அரும்பணி ஆற்றி வியத்தகு சாதனைகளைச் செய்திருக்கின்றன.

இவை தவிர வீட்டு வசதி, கைத்தறித்தொழில், மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு, பால் வளம், கிராமக் கைத்தொழில், தொழிலியல் மற்றும் சர்க்கரை உற்பத்தி ஆகிய பல்வேறு துறைகளில் கூட்டுறவுப்பணி குறிப்பிடத்தக்கதாகும்.

### தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய அத்தனைப் பணிகளையும் ஏற்றுசாலிக்கிராமத்திலுள்ள தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (டான்கோ) செயல்பட்டு வருகிறது.

உற்பத்தியாளர்கள்டமிருந்து பண்டங்களை நேரடியாகப் பெற்று, நுகர்வோருக்கு வழங்குகிறது, இவ்விணையம். மில் துணி முதல் மளிகைச் சாமான்கள் வரை சோப்பு, பற்பசை போன்ற எல்லாப் பொருட்களையும் இந்த இணையம் நேரடியாக அந்தத் தயாரிப்பாளர்கள்டம் கொள்முதல் செய்து தனது உறுப்பினர் சங்கங்களுக்கு விநியோகம் செய்கிறது. 1981-82ஆம் ஆண்டில் ரூ. 20 கோடிக்கு மேல் இது விற்பனை செய்துள்ளது. ஜவுளி ரகங்கள் 1982-83ஆம் ஆண்டில் ரூ. 3 கோடிக்கு இது விற்பனை செய்துள்ளது. வருகிற பொங்கல் திருநாளையொட்டி, மலிவுவிலையில் எட்டு முழ வேட்டி, புடவைகளை வழங்க இவ்விணையம் தீர்மானித்துள்ளது. அடுத்த கல்வியாண்டில் பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடைகளைக் குறைந்த விலையில் வழங்கவிருக்கிறது.

### தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

விவசாயிகளுக்குத் தேவையான தரமான இடுபொருட்களைக் குறைந்த விலையில் வழங்குதல், விளைந்த விளைபொருள்களை விற்பனை செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்ஃபெட்) செயல்பட்டு வருகிறது.

தரமான இடுபொருள்கள், உர விநியோகம், தரமான வித்துக்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், தரமான விவசாயக் கருவிகள் அதாவது விதை மற்றும் உரம் தெளிக்கும் கலப்பைக் கருவிகள் முதலானவற்றை இவ்விணையம் வழங்கி வருகின்றது.

முக்கியமாக உர விநியோகத்தை இந்த இணையம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் அதிக அளவு உர விற்பனை செய்யும் ஒரே நிறுவனமாக இந்த இணையம் உள்ளது.

### தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி

1981-82ல் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ரூ. 403.50 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. தற்போது சென்னையில் 30 கிளைகளுடன இவ்வங்கி சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும்பெரம்பூர், வில்லிவாக்கம், கே.கே.நகர், அண்ணாநகர் மேற்கு ஆகிய இடங்களில் கிளைகள் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டம் கலியம்பூண்டி கிராமத்தைத்தத்து எடுத்துள்ளது. அந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்கு ரூ. 2 கோடி செலவிடத் திட்டமிட்டுள்ளது.

### சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி

வைர விழா நோக்கி வளரும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி, ஏழை எளிய மக்களுக்குக் கடனுதவி புரிந்து, அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர வழிகோலி வருகிறது. இந்த வங்கி, நகைக் கடனாக, ஒரு சவரனுக்கு 800 ரூபாய் வீதம் நபர் ஒருவருக்கு அதிகபட்சம் 5000 ரூபாய் வரை கடனுதவி அளிக்கிறது. தற்போது 22 கிளைகளுடன் செயல்படும் இவ்வங்கி, எம்.ஆர்.வி.நகர் (கடற்கரைச் சாலை, ஐயப்பன் ஆலயம் அருகில்), வேளச்சேரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கே.கே.நகர் ஆகிய பகுதிகளில் கிளைகளை விரைவில் தொடங்கவிருக்கிறது.

படித்து வேலை இல்லாத இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு வழங்கிட, (நேஸே) வங்கி கடனுதவி செய்திருக்கிறது. காபி, டீ, பார் போன்றவை நடத்திட இத்திட்டத்தின் மூலம் ரூ. 10,000 வரை கடன் தரப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 92 பேர் பயன் பெற்றுள்ளனர்.

இந்த வங்கிக்கு அருகில் உள்ளதுதான், தனியார் துறைகளில் பணிபுரிவோர் சேர்ந்து அமைத்துள்ள கூட்டுறவுச் சேமிப்பு மற்றும் கடன் வசதிச் சங்கம். 61 நிறுவனங்கள் இணைந்துள்ள இச்சங்கத்தின் மூலம், நகைக் கடன் வீடு கட்ட கடன் போன்றவை வழங்கப்படுகின்றன. விரைவில் சேமிப்புக் கணக்கு வசதி தொடங்க இருக்கிறது.

### கோ-ஆப்டெக்ஸ்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 1983-ஆம் ஆண்டு நாடு முழுக்க கோ-ஆப்டெக்ஸ் துணிகள் விற்பனை இலக்கு ரூ. 50 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. இதில் 49.5 கோடி சாதனை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மட்டும் ரூ. 45 கோடிக்கு விற்பனையாகியுள்ளது. இதில் கடனாக வழங்கப்பட்ட துணியின் மதிப்பு ரூ.5 கோடியாகும்.

வருகிற பொங்கலுக்கும் புதிய ரகங்கள் வரவிருக்கின்றன. காஞ்சினா ரகப் பட்டுகளுக்கு நல்லவரவேற்பு உள்ளது.

### மாதவரம் பால்பண்ணை

தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம், சென்னை நகரில் நாள் ஒன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்கிறது.

பைபர் கிளாஸ் டாங்க்கில் பால்வைத்து விற்பனை செய்யும் கிளை சென்னையில் 9 இடங்களில் உள்ளது. பெரிய அங்காடி போன்றவைகளில் இவை உள்ளன. இதனால், அலுவலகம் செல்லும் பெண்கள் அலுவலகத்திலிருந்து திரும்பும்போது, எவர் தயவுமின்றி பால் வாங்கிச் செல்லலாம். இந்த டாங்க்கின் மதிப்பு ரூ. 6 ஆயிரம் ஆகும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் பாலின் தரம் சிறந்ததாக உள்ளது. கிருஷ்ணகிரி, சேலம் ஆகிய இடங்களில் விரைவில் பால்பதப்படுத்தும் நிலையம் தொடங்கப்பட உள்ளது.

### கூட்டுறவு வார விழா

30வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 14.11.83 முதல் 20.11.83 முடிய மிகச் சிறப்பாக நடந்தது.

முதல் நாள், 'மக்களாட்சி சீரமைப்பு' நாளாகக் கொண்டாடப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு டி.எம். ஆறுமுகம் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார். மாண்புமிகு சட்டமன்ற மேலவைத்தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், ஏழை எளிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உத்தரவாதமளிப்பது கூட்டுறவுத் துறை ஒன்றுதான் என்று கூறினார்.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்துப் பேசுகையில், 'கூட்டுறவுத் துறை ஒன்றுதான் ஏழை எளிய மக்களின் மேம்பாட்டுக்காக முழு வாய்ப்பும், தொழில் சுதந்திரமும் கொடுக்கவல்லது' என்றார்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில், 'கோ-ஆப்டெக்ஸ் துணிகள் ஆண்டுக்கு ரூ. 100 கோடி அளவுக்கு உற்பத்தியாகிறது. இங்கு மட்டுமல்ல வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் ஐந்து இலட்சம் நெசவாளர்கள் பயனடைகிறார்கள்' என்றார்.

சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பாராட்டுக் கேடயங்களும், பரிசுகளும், முன்னாள் இராணுவத்தினரின் விதவைகளுக்கு உதவிகளும் விழாவில் வழங்கப்பட்டன.

இரண்டாம் நாள் (15.11.83) புதிய 20 அம்சத்திட்ட நாள் விழாவாகவும், மூன்றாம் நாள் (16.11.83) கூட்டுறவு மற்றும் பொது விநியோக முறை நாளாகவும், நான்காம் நாள் (17.11.83) தற்சார்புடைமை நாளாகவும், ஐந்தாம் நாள் (18.11.83) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சிநாளாகவும், ஆறாம் நாள் (19.11.83) நலிந்தோர் நல்வாழ்வு நாளாகவும், ஏழாம் நாள் (20.11.83) மகளிர் மற்றும் இளைஞர் நாளாகவும் கொண்டாடப்பட்டன.

ஒவ்வொரு நாளும், கலை நிகழ்ச்சிகள் நடந்தன சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.

விழா நிறைவு நாள் 20.11.83 அன்று நடந்தது.

தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகத் தலைவர் திருமதி கல்யாணி இராமசாமி அவர்கள் பேசுகையில், 'பெண்களுக்குச் சம வாய்ப்பு வழங்கிடப் பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் பாடுபட்டார்கள். 1000 கோழிகள் கொண்ட 150 பண்ணைகள் சேலம் மாவட்டம், நாமக்கல் பகுதியில் அமைக்கப்பட்டவுள்ளன' என்றார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் விழா நிறைவுச் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்:

"கூட்டுறவு மூலம் சமுதாயம் பயன் பெறுகிறது. உழைக்கும் வர்க்கத்துக்கு உரிமையைத் தேடித்தருவது கூட்டுறவுத்துறை தான். உலகம் முழுவதும் 36 கோடிப் பேர் கூட்டுறவுத் துறையில் உறுப்பினர்களாக உள்ளனர். உலகில் 7 இலட்சம் கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன. இந்தியாவில் 3 இலட்சம் கூட்டுறவுகள் உள்ளன.

"கூட்டுறவு மூலம் விவசாயிகள்தான் அதிகம் பயன்பெறுகிறார்கள். தமிழ்நாட்டில் 76,000 குடும்பங்கள் பயன்பெறுகிறார்கள். கூட்டுறவுத் துறையானது பொன்முட்டையிடும் வாத்து போன்றது.

"இயற்கையின் காரணமாக விளைச்சல் பொய்த்துப்போனால் பல்வேறு வகையில் வாங்கிய 'கடனை ரத்து செய்வது இந்த அரசுதான்''

விழாவில், 3 சக்கரவண்டிகள், செயற்கைக் கால்கள், கைகள், தையல் இயந்திரங்கள், தமிழ்த் தட்டச்சுகள் ஆகியவை வழங்கப்பட்டன.

ஒரு வாரம் நடந்த கூட்டுறவு வார விழா, கோபுரம் போல் வளரும் கூட்டுறவின் சிறப்பினைச் சொல்லாமல் சொல்லியது என்றால் அது மிகையல்ல! -பி. வி. ஜி.



•"நான் துரோணன் என்றால் - காருகுறிச்சி அர்ஜுனன், கிருஷ்ணன் ஏகலைவன்" என்று நாதசுரமாமன்னன் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையாலேயே பாராட்டிக் கூறப்பட்ட நாதசுர இசைமேதை நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன் சேலம் மாவட்டத்துக்காரரே!





# சேலத்தில் வளரும் சித்திரக் கைத்தறி

சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறிக்குச் சேலம் மாவட்டம் நிகரற்றுத் திகழ்கிறது.

தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாகப் பெரும்பான்மை மக்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் நெசவுத் தொழிலாகும். இத்தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவது கைத்தறி மற்றும் துணிநூல் இயக்கமாகும்.

இந்த இயக்கம் சேலம் மாவட்டத்திலே வலுப்பெற்றிருக்கிறது.

தனியாரிடம் உள்ள கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழே கொண்டு வந்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதியுதவி அளிப்பதும், கைத்தறித் தொழிலுக்கு முக்கியத் தேவைகளான பருத்தி நூல், செயற்கைப் பட்டு நூல், கோராப்பட்டு, சரிகை, சாய இரசாயனப் பொருட்கள்



போன்றவற்றை வழங்கிடுவதும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணிகளை மாநிலத் தலைமைச் சங்கமான கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்வதும் கைத்தறி துணி நூல் இயக்க முழுப்பொறுப்பாகும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாகத் தமிழ்நாட்டில் 67 சதவிகித கைத்தறிகளைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்திலே மட்டும் 83,573 தறிகள் உள்ளன. இவை சேலம் சரகம் என்றும் திருச்செங்கோடு சரகம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. சேலம் சரகத்தில் 33,536 தறிகளும் அதாவது 41 சதவிகிதத் தறிகளும் மீதமுள்ளவை திருச்செங்கோடு சரகத்திலும் இருக்கின்றன. இவை இப்போது கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் பயனாக இம்மாவட்டத்திலே கைத்தறிகளின் உற்பத்தியளவும் விற்பனையளவும் அதிகரித்துள்ளன. 'பவர் லூம்' வளர்ந்துவரும் காலம் இது என்றாலும் அதனால் கைத்தறித் தொழில் எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை.

கைத்தறி மூலம் நெய்யப்படும் சில ரகத் துணி வகைகள் பவர் லூம் மூலம் போடப்படக்கூடாது என்ற கட்டுப்பாடு இருப்பதும் இதற்குக் காரணமாகும்.

அரசின் முழுக் கவனிப்போடு கைத்தறித் தொழில் காத்து வளர்க்கப்பட்டு வருகிறது. சேலம் சரகத்தில் விரைவிலேயே ஆதிதிராவிட மக்களுக்கான கைத்தறி நெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு அமைக்கப்படவிருக்கின்றன.

1980-81-ல் சேலம் சரகத்திலிருந்த மொத்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 60 மட்டுமே; இப்போதோ 74 இருக்கின்றன. அப்போது 25,501 ஆக இருந்த தறிகளின் எண்ணிக்கை இப்போது 33,536 ஆகப் பெருகியுள்ளது. துணி உற்பத்தியும், விற்பனையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன.

சொந்தத் தறியில்லாத கைத்தறி நெசவாளர்கள் அதிகமுள்ள இடங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடும் பொருட்டு, தொழிற்கூட அமைப்பிலான

நெசவாளர் தொழிலியல் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும் சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழும் அளிக்கப்படும் நிதியுதவி மூலம் இச்சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.



பட்டு நெசவுத் தொழில் மையங்களில் சேலம் மாவட்டமும் ஒன்றாகும். புதிய பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் வகையில் சங்க உறுப்பினர்க்குப் பங்கு மூலதனக் கடன் வழங்கவும், துணை பாகங்கள், நவீன கருவிகள் வாங்கவும், சிறிய சாயச் சாலைகள் அமைப்பதற்கும், தொழில்நுட்ப உற்பத்திக்கும் நிர்வாகப் பணியாளர்களுக்குத் தொகை வழங்கவும் அரசு பல வகைகளிலே நிதி உதவி வருகிறது.

கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்களைச் சேர்க்க மூலதனக் கடன் வழங்குதல், கைத்தறி நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்குத் தொகை கொடுத்தல், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை விகிதத்தில் நிதியுதவி அளிக்க இயலும் வகையில் வங்கிகளுக்கு வட்டிக்கான உதவித் தொகை அளிக்கும் திட்டம், கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டம், நெசவாளர்க்குப் பயிற்சித்திட்டம், கைத்தறித் துணிகளின் விற்பனை மீது தள்ளுபடி, நெசவாளர்க்குப் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் வீடமைப்புத் திட்டம், தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம், கூட்டுறவு நூற்பாலை வளர்ச்சி எனப் பல வகைகளிலே தமிழக அரசு கைத்தறித் தொழிலின் மேன்மைக்காகப் பேருதவி புரிந்து வருகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேரும் நெசவாளர்கள் எடுக்க வேண்டிய பங்குத் தொகை ரூ. 50 ஆகும். அரசு பருத்தி உடைகளைத் தயார் செய்யும் உறுப்பினர்களுக்குத் தலா ரூ. 180.ம் பட்டாடைகள் உற்பத்தி செய்யும் உறுப்பினர்களுக்கு ரூ. 250-ம் கடனாக வழங்கப்படுகிறது.



இந்த நிதியைக் கொண்டு சங்கமானது உற்பத்தி மற்றும் செலவினங்களைச் சரி செய்து கொள்ளலாம்.

அரசால் வழங்கப்படும் இந்தக் கடன் ஆண்டுக்கு ஏழரைச் சதவிகித வட்டியுடன் 4 சம ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

இந்த அடிப்படையில் திருச்செங்கோடு சரகத்தில் 1980-81-இல் அரசு வரவு செலவுத் திட்ட நிர்ணயத்தொகை ரூ. 5 ,00,000 என்றால் அவ்வளவும் கடனாகப் பெறப்பட்டது. அதேபோல் 1981-82ல் ரூ.3,50,000-ம் 1982-83ல் ரூ. 2,50,000-ம் கடனாகப் பெறப்பட்டது.

நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்து, இறந்தவர்களுக்குக் கோரிக்கையின் பேரில் ஆயுள் காப்பீட்டுக்கழகத்தொகை 1982-83ல் ஐந்து பேர்களுக்கு ரூ. 500 விதம் தரப்பட்டது. மூவாயிரம் ரூபாய் விதம் 35 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டக் கைத்தறித் தொழில் இவ்வகையில் வளர்ந்து வளம் பெற்று வருகிறது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!



# முத்துக் கொழிக்கும் தூத்துக்குடியில் முப்பெரும் விழா!

டிசம்பர் மாதம் 4ஆம் நாள் மாலைநேரம்.

தூத்துக்குடி நகரின் துறைமுகப் பகுதி எழிற்கோலம் கொண்டிருந்தது.

கப்பல் தளமும் அதைச்சார்ந்த பகுதிகளும், துறைமுகச் சாலையைச் சேர்ந்த மதுரை சோமு கலைஅரங்கமும் வண்ண விளக்குகளால் அணிபெற்றுத் திகழ்ந்தன. மக்கள் வெள்ளம் கலை அரங்கை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சுருக்கமாகச் சொன்னால் ஒரு திருவிழாக்கால உணர்வு அங்கே ஆட்சி செலுத்தியது. இதற்கெல்லாம் காரணம்-துறைமுக சபை நடத்திய முப்பெரும் விழாக்கள் தான்.

துறைமுகத்தின் எண்ணெய்ப் பொருட்கள் இறக்கும் கருவியினை இயக்கி வைத்தல், நகரிலுள்ள துறைமுக புதிய மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டுதல், வ.உ.சி.கப்பல் தளத்தில் புதிய சிற்றுண்டி விடுதி திறத்தல் என்னும் மூன்று விழாக்களையும் தூத்துக்குடி துறைமுக சபை அன்றைய தினம் ஒருசேர நடத்தி ஒப்பற்ற பெருமையைப் பெற்றுள்ளது.

கலையரங்க மேடையின் மையத்தில் அண்ணல் காந்தியும் நேருவும் அமர்ந்து உரையாடும் காட்சி சித்திரமாகத் தீட்டப்பட்டிருந்தது. மேடையின் வலப்புறத்தில் பாரதி, வ.உ.சி, காமராஜர், அண்ணா ஆகியோர் காட்சி தந்தனர்-ஓவிய வடிவில்!. இடப்புறத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் ஜெயில்சிங், மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி, மாண்புமிகு கப்பல்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் ரெட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் ஆகியோரும் ஓவியவடிவில் காட்சி தந்தனர்.

சீருடை அணிந்த பள்ளி மாணவியர் அமைச்சர் பெருமக்களை மலர் தூவி வரவேற்றனர். பாரதி வேடம் தாங்கிய சில மாணவியர்-அமைச்சர்களை அன்புடன் மேடைக்கு அழைத்துச் சென்று, இருக்கையில் அமரவைத்த காட்சி பரவசம் ஊட்டுவதாக அமைந்திருந்தது.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முப்பெரும் விழாவுக்குத் தலைமை ஏற்றார். விழாவுக்கு வருகை புரிந்தோரை வரவேற்று துறைமுக சபைத் தலைவர் திரு கே.ஏ. சுந்தரம், இ.ஆ.ப., மூன்று என்னும் எழுத்துக்கும் தமிழகத்திற்கும் உள்ள தொடர்பை அடுக்கடுக்காக எடுத்துரைத்தார். அவர் குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தை முன்பு ஆண்டவர்கள் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆவர். தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என முப்பிரிவு கொண்டுள்ளது. தமிழக விடுதலை வீரர்களான வ.உ.சி., பாரதி, ராஜாஜி மூவரும் சிறப்பு வாய்ந்தவர்கள். தமிழுக்குமறுமலர்ச்சியை, ஏற்றத்தை அளித்து, தமிழ்மொழியை அரியணையில் ஏற்றி, தமிழ் நாடு எனப் பெயர் சூட்டிய அண்ணா மூன்றெழுத்து. அவர் விட்டுச் சென்ற கொள்கைகளை சிரமேற்கொண்டு இயங்கிவரும் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் மூன்றெழுத்துக் கொண்டவர்கள். அதனால் தான் இன்று இங்கே மூன்று பெரும் விழாக்கள் நடத்தப்படுகின்றன.''

தலைமைப் பொறியாளர் திரு எஸ்.கோபாலன் தொழில் நுட்ப அறிக்கையைப் படித்தார். புதிய இயந்திரத்தின் பயன்-அதன் பெருமை ஆகியவற்றையும் விளக்

துவமனை-சிற்றுண்டி விடுதி ஆகியவற்றின் சிறப்பையும் அவ்வறிக்கையின் மூலம் தெளிவாக்கினார்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எஸ்.என் ராஜேந்திரன் சிற்றுண்டி விடுதியின் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்து உரையாற்றினார். அவர் தெரிவித்தார்.

''தூத்துக்குடி நகருக்குப் பெருமை தேடித்தரும் அளவுக்கு மிகவும் பிரம்மாண்டமாகத் துறைமுகம் உருவாகி வருகிறது. உலகப் புகழைத் தேடித்தரும் வாய்ப்பை இந்தத் துறைமுகம் விரைவில் பெற இருக்கிறது.

''தொழில் மூலம் இன்று வளம் பெற்று வருகிறது தூத்துக்குடி. வியாபார நிமித்தம், அரசியல் நிமித்தம், தொழில் நிமித்தம்- இங்கிருந்து பம்பாய் செல்வோர் தொகை அதிகரித்து வருகிறது. இவர்கள் எல்லாம் மதுரை சென்று ஆகாய விமானத்தின் மூலம் பயணம் செய்கின்றனர். தூத்துக்குடியில் விமான நிலையம் அமைந்தால் வியாபாரம் மேலும் பெருகுவதற்கு வசதியும் வாய்ப்பும் ஏற்படும். இன்னும் 10 ஆண்டு கழித்துப் பார்த்தால் இது பம்பாய் என்றோ கல்கத்தா என்றோ எண்ணுகின்ற வகையில் வளர்ச்சி பெறும்''

எண்ணெய்ப் பொருட்கள் இறக்கும் கருவியை இயக்கிவைத்தும், புதிய மருத்துவ மனைக்கு அடிக்கல் நாட்டியும், சிறப்புரை ஆற்றிய, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டார்:

''இந்தியாவில் உள்ள எல்லாத் துறைமுகங்களும் அகில இந்திய அளவில் ஏற்றுமதியையும் இறக்குமதியையும் செய்து கொண்டிருக்கின்றன. கடந்த ஆண்டு அனைத்தும் சேர்ந்து முந்திய ஆண்டை விட 9 சதவிகிதம் தான் வளர்ச்சியுற்றிருக்கிறது. ஆனால் தூத்துக்குடித் துறைமுகம் மட்டும் ஓர் ஆண்டில் மாத்திரம் ஏற்றுமதி இறக்குமதியில் 20 சதவிகிதம் வளர்ச்சியுற்றிருக்கிறது.

''சேது சமுத்திரத் திட்டம் தமிழகத்தின் நீண்டநாள் கோரிக்கையாகும். வளைகுடா என்றும் ஜலசந்தி என்றும் சொல்லப்படும் இந்த அதிசயமான கடற்பகுதி தெற்கு முனையில்தான் இருக்கிறது. இயற்கை தந்துள்ள அற்புத சக்தியைப் பயன்படுத்த அறியாமல் இருந்தால் என்ன பயன் என்பதை அருள்கூர்ந்து மைய அரசு எண்ணிப்பார்க்க வேண்டும்.

''இந்திய நாட்டுக்கு ஒரு பாதுகாப்பான இடம் தேவைப்படுகிறது என்று நினைத்தால் அது சேது சமுத்திரத் திட்டம் செயலாக்கப்படும் இடம் தான். ஆகவே இந்திய நாட்டின் பாதுகாப்பைக் கருதி-இந்திய மக்களின் நலம் கருதி மைய அரசு சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

''40 ஆயிரம் டன் எடையுள்ள கப்பல்கள் இங்கே தங்க முடியும். அதற்கு 30 அடி ஆழம் உள்ள நுழைவாயில் வேண்டும். தற்போதுள்ள நுழைவாயில் 27 அடி ஆழம் தான் உள்ளது. குறைவான ஆழமுள்ள நுழைவாயிலை ஆழப்படுத்துவதில் சிக்கல் இருக்கிறது என்பது தெரியும். சிக்கலை மீறித்தான் மனிதன் வெற்றி பெறுகின்றான். இதற்குரிய நடவடிக்கைகளை மைய அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''ஆகவே, தூத்துக்குடித் துறைமுகம் வளர்க்கப்பட வேண்டும்- சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும், சிறிய- நடுத்தரத் துறைமுகத் திட்டங்களுக்கு சீக்கிரம் அனுமதி வழங்கப்பட வேண்டும் ''

தலைமை வகித்த டாக்டர் நாவலர் தமது உரையில் தெரிவித்ததாவது :

''மாநில அரசின் சார்பில் என்னென்ன வசதிகள் மாநிலங்களுக்கு வேண்டும் என்று வலியுறுத்தி வருபவர்களுடன்-பொது மக்களின் குரலும் சேர்ந்து ஒலிக்க வேண்டும்.

''இதுபோன்ற துறைமுக வளர்ச்சியினால் வாணிபம் பெருகும்; ஏற்றுமதி மிகும். வடகோடியில் சென்னைத் துறைமுகம், தென்கோடியில் தூத்துக்குடித் துறைமுகம் அமைந்துள்ளன.

''நாகப்பட்டினம், கடலூர், குளச்சல் போன்ற இடங்களில் சிறு துறைமுகங்களை உருவாக்க வழி செய்ய வேண்டும் என்று சொல்லி வருகின்றோம்!''

துறைமுகத் துணைத் தலைவர் திரு எஸ்.கே.காந்திமதிநாதன் நன்றி கூறினார்.

அதன் பின்னர் செல்வி.சாமுண்டேஸ்வரி குழுவினரின் சிலப்பதிகார நாட்டிய நாடகம் கண்ணுக்கு விருந்தாகத் திகழ்ந்தது.

மறுநாள் (5.12.83) காலை 9 மணி அளவில் வ.உ.சி. தளத்தில் கட்டப்பட்டுள்ள புதிய சிற்றுண்டி விடுதியில், சிற்றுண்டி விற்பனையை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் தொடங்கி வைத்தார். அப்போது அவர் தெரிவித்தார்:

''பட்டதாரி நண்பர்கள் இந்த விடுதியை நடத்த முன் வந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். அவர்களைப் பாராட்டுகின்றேன்.

''தொழிலை நாம் எந்த அளவுக்கு மதிக்கிறோமோ அந்த அளவுக்குத் தொழில் நம்மை மதிக்கும். வியாபாரி எந்த அளவு வியாபாரத்தை மதிக்கிறானோ அந்த அளவு வியாபாரம் கைகொடுக்கும். கலையில் ஈடுபட்டுள்ளவர்களும்-கலையை எந்த அளவு மதிக்கிறார்களோ அந்த அளவு கலை சிறப்புறும்.''

சிற்றுண்டி விடுதி நடத்தும் கார்மேக வண்ணன், சொக்கலிங்க பாண்டியன், ராஜு ஆகிய மூவரும் அன்று தொழிலாளர்களுக்கு இலவசமாகத் தேநீர் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சித் தொகுப்பு :
**தமிழ்ப்பித்தன்**

**துறைமுகப் பொறுப்புக் கழகத்தைச் சேர்ந்த செய்திநிலையத்தில் உள்ள வடிவமைப்புக் குறித்து மாண்புமிகு அமைச்சர்களிடம் விளக்கம் செய்கிறார் திரு கே.ஏ.சங்கரம் இ.ஆ.ப.,**





# எண்ணெய் இறக்கும் புதிய இயந்திரம்

தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள நிலையான எண்ணெய்த் துறை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன்னுக்கு அதிகமான 'நாப்தா', எரிபொருள் எண்ணெய் (பர்னஸ் ஆயில்) ஆகியவற்றை இறக்குமதி செய்கிறது. இப்பொழுது கப்பலிலிருந்து கரையிலுள்ள குழாய்களுக்கு எண்ணெய்யை மாற்றிட 200 மி.மீ. (8 அங்குலம்) விட்டமுள்ள, நெளியும் தன்மை வாய்ந்த ரப்பர்க் குழாய் பயன்படுத்தப்படுகிறது. இதற்கானகுழாய்இணைக்கும் பணி, கப்பலிலுள்ள பளுதூக்கி மற்றும் துறையின் முகப்பிலே அமைக்கப்பட்டுள்ள சிறிய தோர் கை இயக்கப்பளு தூக்கி ஆகியவற்றின் உதவியுடன் நடைபெறுகிறது. எண்ணெய்க் குழாய் மணிக்கு 600 டன் என்ற திறனுக்கு வடிவமைக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது மணிக்கு 300 டன்தான் இறக்க முடிகிறது. அழுத்தம் அதைவிட அதிகமானால் ரப்பர்க் குழாய் வெடித்துவிடும்.

அடுத்த சில ஆண்டுகளில் எண்ணெய்யின் இறக்குமதி அளவு 7 இலட்சம் டன்னை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எண்ணெய்த்துறையின் திறன் 10 இலட்சம் டன். எனவே அதன் முழுத் திறனையும் பயன்படுத்தும் வண்ணம், நவீன நுணுக்கமான முறைகளின் மூலம் இறக்குமதியினைக் கூட்டிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதன் முதற் கட்டமாக, இறக்குமதித் திறனை, மணிக்கு 300 டன்னிலிருந்து 600 டன்னாக உயர்த்திடும் வகையில் நீர்த்திறன் இயக்கமுள்ள 'மெரைன் அன்லோடிங் ஆர்ம்' என்னும் நவீன இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இம்முறையில், நெளியும் தன்மையுள்ள ரப்பர்க் குழாய்க்குப் பதிலாக அன்லோடிங் ஆர்ம் பயன்படுத்தப்படுகிறது.

இந்திய அரசு ரூபாய் 25 இலட்சம் அந்நியச் செலாவணி அளித்துள்ளது. மொத்தம் 70 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில், 'நாப்தா' 'பர்னஸ் ஆயில்' ஆகியவற்றைக் கையாள, இரண்டு 'மெரைன் அன்லோடிங் ஆர்ம்' அமைத்திடும் திட்டத்திற்கு அனுமதியளித்தது. இத்தாலியைச் சேர்ந்த கிலார்டினி என்னும் நிறுவனம் இந்த இயந்திரங்களை அமைத்துத் தந்திருக்கிறது.



இந்த இரண்டு இயந்திரங்களும் வாங்கி நிர்மாணித்திட, ரூ. 53 இலட்சம் செலவாகியுள்ளது. இந்த இயந்திரத்தை 20,000 முதல் 40,000 டன் கொள்ளளவுள்ள கப்பல்களில் பயன்படுத்தலாம். இதில் பொருத்தப்பட்டிருக்கும் 'ஸ்விவல்' இணைப்புக்கள் கப்பலின் வெவ்வேறு நிலையிலுள்ள வெளியேற்றும் குழாய்களுடன் தானாகவே தொடர்பு கொள்ளும் வசதி படைத்தவை. ரப்பர்க் குழாய்களைக் கைகளால் இணைத்திடும் முறையை விட, இம்முறையில் கால விரயமின்றி, எண்ணெய் சேதமாகாமல் இறக்குமதியை எளிதாக்க முடிகிறது.

தாப்தா, பர்னஸ் ஆயில் ஏற்றி வரும் கப்பல்களிலிருந்து அவை மிகவும் விரைவாக, செவ்வனே வெளியேற்றப்படும். இம்முறையில் கப்பல் போக்குவரத்து மிகவும் விரைவுபடுத்தப்படும். எனவே தூத்துக்குடித் [illegible] முகத்தின் வாயிலாக, எண்ணெய்ப் பொருட்கள் வாணிபம் தானாகவே உச்ச[illegible]




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலை
ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்
அழகோவிய சேலைகள்...
துணிகள்
சேலைகள் ஆடவர்
விரும்பும் அருமை
ஆடைகள் ஆயிரம்

# நங்கை



Licence No. [illegible]N/MS(C)/P[illegible]
பதிவு எண். M. 8676





# மக்கள் எவ்வழி அரசும் அவ்வழி!

## மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

ஒரே கட்சி ஆட்சிதான் இந்தியாவில் இருக்க வேண்டுமென்று யார் விரும்பினாலும் சரி, அது இந்த நாட்டிற்கு நல்லதல்ல, அது இந்த நாட்டிற்கு ஒத்துவராது என்பதை நான் கண்டிப்பாகக் கூறவிரும்புகிறேன்.

அன்றும் சொன்னேன், இன்றும் சொல்கிறேன். ஒரே ஆட்சி என்றிருந்தால் என்ன ஆகும் தெரியுமா? இதுமாதிரி பேசுவதற்கு ஆளே இருக்காது.

ஒரே கட்சி ஆட்சியிலிருந்து ஒருவர் பேசினால் அவருக்குப் பதில் வேறொருவரை நியமிப்பார்.

நாம் கேட்டால் டிஸ்மிஸ், அவர்கள் கேட்டால் சஸ்பெண்ட். இந்த நிலைமை மாற வேண்டும்.

மாநிலக் கட்சிகள் கூடாது என்கிறார்கள், மாநிலக் கட்சிகள் இல்லாது மத்திய கட்சி ஏது? அரசியலை வைத்துக் கொண்டு அச்சுறுத்தல் உத்வேகம் பெற்றுவராத நிலையை உருவாக்கிக் கொண்டால்தான் நாடு ஒருமைப்பாட்டுடன் இருக்க முடியும், இல்லாவிட்டால் அதைக் காப்பாற்ற முடியாது.

இதைத் தயவு செய்து ஆட்சியிலிருக்கின்றவர்கள் சிந்திக்க வேண்டும்.

ஒருவகையில் பிரதமருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மின்துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் ஐக்கிய நாடுகள் சபையில் பேச பரிந்துரை செய்தது நான் என்றாலும், உலக மன்றத்துக்கு அனுப்பியவர் பிரதமர், அவரைப் பாராட்ட வேண்டும்.

இதுவரை இந்திய வரலாற்றில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு அமைச்சரை இப்படிப்பட்ட குழுவுக்குப் பொறுப்பாக அமைத்தது கிடையாது. இதுதான் வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிற முதல் வரிகள். அன்று பிரதமர் தலைமையிலும், பின்பு வெளிநாட்டு அமைச்சர் தலைமையிலும் செயல்பட்டது இந்தியக் குழு. இருவரும் டெல்லி திரும்பிய பின் அங்கிருந்த இந்தியக் குழுவுக்குத் தலைவராக பண்ருட்டி ராமச்சந்திரன் செயல்பட்டார்.

அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகத்தைச் சேர்ந்த ஓர் அமைச்சர் இந்தியக் குழுவுக்குத் தலைவராகச் செயல்பட்டார்.

இதை ஒத்துக்கொண்டு இவ்வளவு பெரிய நியாயத்தை வழங்கிய பிரதமரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆகவேதான் நான் நம்புகிறேன், இந்தப் பேச்சுக்களையெல்லாம் அவர் அறியும்போது நல்ல முடிவு வருமென்று நம்புகிறேன்.

பண்டித நேரு காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் போல பிரதமர் நிச்சயமாக ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற மாநிலங்களுக்கு நியாயமான அதிகாரங்களை வழங்க முன்வருவார்கள் என்று நான் மிகவும் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறேன்.

சுயநலமில்லா நம்பிக்கை வெற்றி பெறும்.

இதை நிறைவு விழா என்று சொன்னார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு வேண்டுமானால் இது நிறைவு விழாவாக இருக்கலாம், கொள்கைக்கு நிறைவு விழா அல்ல.

அந்தக் கொள்கை நிறைவு பெற இந்தப் பேராசிரியர்கள் கலந்து உரையாடியது மன நிறைவைத் தருகிறது.

மனநிறைவு விழாவே தவிர, கொள்கை நிறைவு விழா அல்ல. ஆகவே இது தொடர வேண்டும். மக்களிடம் செல்ல வேண்டும்.

மக்கள் நம்மைக் கேட்க வேண்டும். இனி தேர்தலுக்கு வருவதாக இருந்தால் இந்த உறுதியை (மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்) தருவதாக இருந்தால் வா-இல்லையென்றால் போ என்று மக்கள் கேட்கக்கூடிய நிலைக்கு மக்களைத் தயார் செய்யவேண்டும்.


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2015
ருத்ரோத்காரி — தை 2
மலர் : 14 இதழ் : 14
16-1-1984



சிறப்பாகப்பணியாற்றியவர்களுக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர்.எம்.ஜி.ஆர். அவர்கள் நற்சான்றிதழ்களை வழங்கினார்.

எல்லோரும் ஒத்துழைத்தால் மக்களைத் தயார் படுத்த முடியும்.

முயன்றால் முடியாதது எதுவுமில்லை. இது நமக்காக அல்ல, நாட்டுக்காக. நாட்டு மக்கள் நன்றாக வாழ்வதற்காக.

ஏழை மக்கள் பிரதிநிதிகள் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் இருந்தால் தான் நாம் நினைப்பது நடக்கும்.

அதற்குச் சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள் எளிமையான நடையில் புததகங்கள் எழுதி மக்களுக்குப் புரிய வைக்கவேண்டும்.

இத்தகைய கருத்தரங்குகள் தமிழ்நாட்டில் நடைபெறுவதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

இந்தியாவிலிருப்பவர்கள் தமிழ்நாட்டவர்கள் சொன்னார்கள் என்றால் கேட்பார்கள். அந்த அளவுக்குத் தமிழர்களுக்கு இது பெரிய புகழ். பெருமை தரத்தக்கது.

பல்கிவாலா பேச்சைக் கேட்க வேண்டுமென்று இருந்தேன். ஆனால் காவிரி நீர்ப் பிரச்சனை பற்றி பெங்களூர் செல்ல வேண்டியிருந்ததால் கேட்க முடியவில்லை.

முன்பிருந்தோர் தமிழகத்தை அப்படி ஆக்கிவிட்டார்கள். 1974ஆம் ஆண்டே பேசியிருந்தால் நன்றாயிருந்திருக்குமே!

நான் அமெரிக்கா சென்று வந்தவுடன் நதிகளையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்றேன். அப்போது என்னை முட்டாள் என்று கூடக் கூறினார்கள்.

இப்போது அவர்களே தீர்மானம் கொண்டு வருகிறார்கள்.

நதிகளை ஏன் தேசியமயமாக்கவில்லை என்கிறார்கள். எனக்கு ஒரு சந்தோஷம், என்னைப் போய் எத்தனை முட்டாள்கள் முட்டாள் என்றனர் என்று.

மக்களுக்கு எது தேவையோ அதைச் செய்வதற்குத்தான் அரசு. அந்த அரசைத் தேர்ந்தெடுப்பது மக்கள்.

அந்த அரசு வகுக்கும் சட்டங்கள் மக்களுக்குப் பயன்பட வேண்டும். இங்கே நாம் செய்யும் திட்டங்களை மக்கள் எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள்.

எல்லாக் கட்சியினரும் சத்துணவுத் திட்டம் சரி என்று ஒத்துக் கொள்கிறார்கள்.

ஆனால் மைய அரசு பணம் ஒதுக்க முடியாதென்றால் அவர்கள் மக்களிடம் எப்படி வாக்கு கேட்க முடியும்?

அந்த நிலையை உருவாக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சர்க்காரியா கமிஷன் நியாயமான தீர்ப்பு வழங்கும் என்று எண்ணி அதுவரையில் பொறுத்திருப்போம் என்று எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். என் ஒருவனால் எதையும் செய்து விட முடியாது. மக்கள் செய்ய வேண்டும். முன்பு, அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பார்கள், இன்று மக்கள் எவ்வழி, அரசும் அவ்வழி. இந்த வழி சரியான வழி!

[8.1.84 அன்று, தமிழ்நாடு அரசியல் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் மத்திய மாநில அரசுகள் உறவுமுறை பற்றிய அனைத்திந்தியக் கருத்தரங்கில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து]



# மத்திய-மாநில அரசுகள் உறவுமுறைக் கருத்தரங்கு.....

தமிழ்நாடு அரசியல் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் இந்தியாவில் மத்திய - மாநில அரசுகள் உறவு முறை பற்றிய அனைத்திந்தியக் கருத்தரங்கு, 1984 ஜனவரி 5 முதல் 8 வரை சென்னையில் நடந்தது.

முதல்நாள் சென்னை கலைவாணர் அரங்கில் நடந்த இந்தக் கருத்தரங்கை, சர்வதேச நீதி மன்றத்தைச் சேர்ந்த நீதிபதி டாக்டர் நரேந்திரசிங் தொடங்கி வைத்தார். மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தரும், தமிழ்நாடு அரசியல் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவருமான திரு ஜே.இராமச்சந்திரன் வரவேற்றுப் பேசினார். இந்திய உச்ச நீதி மன்றத்தின் முதுநிலை வழக்குரைஞர் திரு என்.ஏ.பல்கிவாலா சிறப்புரையாற்றினார்.



மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''மாநில அரசுகள் பலமாக இருந்தால்தான் மத்திய அரசு பலம் பொருந்தியதாக இருக்க முடியும். மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் கேட்கும் ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

''மத்திய-மாநில உறவுகள் குறித்து சர்க்காரியா கமிஷன் ஆராயப்போகிறது. பொதுமக்கள் கருத்தறிந்து மத்திய - மாநில உறவுக்குச் சுமுகத் தீர்வுகாணும் முயற்சியில் சர்க்காரியா கமிஷன் தன் பங்கினைச் செய்ய உள்ளது. விரைவில் அனைவரும் விரும்பும் வண்ணம் இப்பிரச்சினை தீரும் என எதிர்பார்ப்போம்.

தற்போதுள்ள அதிகாரஅமைப்பில், ஒரு சிறு தொழிற்சாலை தொடங்குவது என்றாலும் கூட, மைய அரசிடம் அனுமதி கேட்க வேண்டிய நிலை உள்ளது. சிறிய தொழிற்சாலைகளைத் தொடங்க மாநில அரசுகளுக்கு உரிமை இருக்க வேண்டும். ஆளுநர்களை நியமிக்கும்போது அந்தந்த மாநிலத்தில் உள்ள அரசுகளைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்''.

இறுதியில் கருத்தரங்க அமைப்பாளர் டாக்டர் சி.ஏ.பெருமாள் நன்றி கூறினார்.

அன்று பகல் 2 மணிக்கு, ஒட்டல் கன்னிமாராவில் கருத்தரங்கு தொடர்ந்தது. நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினர் டாக்டர் மால்கம் எஸ்.ஆதிசேஷய்யா தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

6.1.84 அன்று காலை, ஜோத்பூர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வி.வி. ஜான் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார். அன்று பகல், மத்திய அரசின் முன்னாள் உள்துறைச் செயலாளர் திரு.டி.சி.ஏ.சீனிவாசவரதன் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

7.1.84 அன்று காலை நடந்த கருத்தரங்கில், உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு.வி.ஆர்.கிருஷ்ண அய்யர் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

அன்று பகல், ஆந்திர மாநில உயர்நீதிமன்றத்தின் நீதிபதி திரு ஜஸ்டிஸ் பி.ஏ.செளத்ரி தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

8.1.84 அன்று காலை, பிரபல எழுத்தாளர் திரு.குல்தீப் நய்யார் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு.இரா.செழியன் அவர்களும் கருத்தரங்கில் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

அன்று பகல் தொடர்ந்த பொதுக் கருத்தரங்கில். உச்ச நீதிமன்றத்தின் முதுநிலை வழக்குரைஞர் திரு. டி. டி. தாக்கூர் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

அன்று மாலை, சென்னை கலைவாணர் அரங்கில் இக்கருத்தரங்கின் நிறைவு விழா நடந்தது.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர்



டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''மத்திய-மாநில உறவுகளைப் பற்றி ஆராய கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. இதற்கு மாநில சுயாட்சிக் கமிஷன் என்று பெயர் வைத்திருக்கவேண்டும்.

''இப்போது மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே உறவு சுமுகமாக இருக்கிறது. அதிகாரப் பரவல் கோரிக்கை என்பதை ஒரு போராட்டமாகக் கருதிவிடக்கூடாது. ஐ. நா. சபைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு அமைச்சரைத் தமிழ்நாட்டில் இருந்து அனுப்பிய பிரதமர் இந்திராவுக்கு நன்றி. நாம் பல மொழி, இனம், கலாச்சாரத்தைக்கொண்ட நாட்டினர். எனவே, இந்த வேற்றுமையில் ஒற்றுமை காணுகின்ற கூட்





டமைப்பு என்று இந்தியாவைப் பற்றிக் கூறிக்கொள்ள மத்திய அரசு அச்சப்படக்கூடாது.

"சிலர் தாமே முதலில் மாநில சுயாட்சி கேட்டதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். 1946ல் கட்சியைத் தொடங்கி மாநில சுயாட்சி கேட்டவன் நான்தான்."

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திருஇராம. வீரப்பன் அவர்கள் கருத்தரங்கு அறிக்கையைப் பெற்றுப் பேசியதாவது:

"இந்த நாட்டை ஒற்றுமையாக வைத்திருங்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் கூறுவதைக் கேளுங்கள் என்று மத்திய அரசிடம் கோரும் நிலையில்தான் மக்கள் உள்ளனர்.

"ஆட்சியில் இருந்தால் தண்ணீருக்குள் இருக்கும் பாஸ்பரஸ், ஆட்சிப் பொறுப்பில் இல்லையென்றால் கூரை மீது எரியப்பட்ட பாஸ்பரஸ் என்ற நிலையில் இருக்கும் அரசியல்வாதிகளிடம், இந்த ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்து விடாதீர்கள்.

"உத்தரப்பிரதேசத்தில்பேசப்படும்மொழியே தமிழ்நாட்டிலும் திணிக்கப்படும் என்றால் அதுதான் முதல்கட்ட பிளவுக்கு வழி கோலும். இந்தக் கருத்தரங்கு ஆங்கிலத்தில் தொடங்கி தமிழில் முடிகிறது. இதுதான் நமது மொழிக் கொள்கை; இதுதான் நமக்குத் தேவை. இதுதான் தேச ஒற்றுமையைப் பாதுகாக்கும் மொழிக்கொள்கை.

"சட்டங்களினால் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியாது. மக்களுக்கு அந்த உணர்வை ஊட்ட வேண்டும். அதைச் செய்யத்தக்க தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர்தான். அவர் தலைமையில் மக்கள் ஒன்றுபட வேண்டும்".

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் அவர்கள் கருத்தரங்கின் ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பினை வெளியிட்டுப் பேசுகையில்—

"இ.காங்கிரஸ் ஆட்சி புரியும் மாநிலங்களைப் போலவே மற்ற கட்சி ஆட்சி புரியும் மாநிலங்களையும் மத்திய அரசு சமமாக நடத்த வேண்டும். அப்போதுதான் ஒற்றுமை பலப்படும். மாநில அரசு நமக்கு உரியது. மத்திய அரசு அப்படி இல்லை என்று மக்களே கருதும் நிலை இருந்து வருகிறது. எனவே மத்திய அரசினர் மக்களின் நம்பிக்கையைப் பெற முயலவேண்டும். மாநில அரசுகளின் அதிகாரங்களை மத்திய அரசு பறித்துக் கொள்ளும் நிலையைத் தவிர்க்க வேண்டும். இது குறித்து நாட்டு நலனில் அக்கறை கொண்ட அறிஞர்கள் நீதிபதிகள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். இந்தக் கருத்தரங்கில் அறிஞர்கள், தெரிவித்துள்ள கருத்துக்களை, அரசியல்துறை மாணவர்களுக்குப் பாட நூலாக வைக்கலாம்."

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கருத்தரங்கின் அறிக்கையை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டார்:

"மாண்புமிகு புரட்சித்தலைவர் என்ன தத்துவங்களைச் சொல்கிறாரோ அவைதான் நம்முடைய தத்துவங்களாகும். வெற்றி கிடைக்கத்தக்க முறையில் காலம் இடம் கருதி செயல்படுகின்றவர்தான் புரட்சித் தலைவர்.

"மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று பேரறிஞர் அண்ணா கேட்டார். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கேட்கப்பட்டது. ராஜமன்னார் கமிஷனும் அமைக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டு பெங்களூரில் தென்னக முதல் அமைச்சர்கள் மாநாடு நடத்தப்பட்டது. இதில் கலந்து பேசிவிட்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வந்தார். உடனே மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டு விட்டது. தமிழக மக்களுக்கு மிகவும் அறிமுகமானவர்தான் சர்க்காரியா. முன்பே சர்க்காரியா சொன்னதை தமிழக மக்கள் ஏற்றுச் செயல்பட்டனர். அதேபோல நாம் ஏற்றுக் கொள்கிற முறையில் சர்க்காரியா இந்த முறையில் செயல்படுவார் என்று கருதுகிறேன். தமிழ்நாடு என்ன சொல்கிறது என்று சர்க்காரியா கமிஷன் உன்னிப்பாகக் கேட்கிறது.

"அதிக அதிகாரம் பெற்றுத் தருவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெற்றி பெறுவார். அவர் கூறினால் டில்லி கேட்கும்"

கருத்தரங்கில் கலந்து கொண்ட அயல் மாநில அறிஞர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு மலர் மாலை அணிவித்துப் பாராட்டினர்.

கருத்தரங்கில் கலந்துகொண்டு அதன் வெற்றிக்காக உழைத்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சான்றிதழ்களை வழங்கிக் கவுரவித்தார்.

விழாவில் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு ஜே. இராமச்சந்திரனும் கலந்து கொண்டார். கருத்தரங்கு அமைப்பாளர் டாக்டர் சி.ஏ. பெருமாள் வரவேற்றார். தமிழ்நாடு அரசியல் ஆராய்ச்சிக் கழகத்தின் பொருளாளர்திரு.சி. வி. அனந்தசயனம் நன்றி கூறினார்.






# வெள்ளம் விளைத்தது வேதனை- அதை விரட்டியடித்தது அரசின் சாதனை!

இதுவரை, எந்த ஆண்டும் இல்லாத வகையில், சென்ற டிசம்பர் மாதம் 20ஆம் தேதிமுதல் தமிழகத்திலே பெய்த அடைமழை பெரும் சேதத்தை விளைவித்தது.

இந்தப் பெருமழைக்கு, இலங்கை அருகே வங்கக் கடலில் உருவான புயலே காரணம் என வானிலை ஆராய்ச்சி நிலையத்தாரால் கருத்தறிவிக்கப்பட்டது.

மழையின் விளைவால் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள்-குறிப்பாகத் தஞ்சாவூர், திருச்சி,புதுக்கோட்டை,தென்னார்க்காடு மாவட்டங்கள் மிக மோசமான அளவில் பாதிக்கப்பட்டு விட்டன, சென்னை போன்ற பெரிய நகரங்களும் சேதாரங்களைச் சந்திக்க நேர்ந்தது.

மழையால் ஏற்பட்ட ஏரி-குளங்கள்-ஆறுகள் உடைப்பால் வயல்வெளிகள் மட்டுமல்ல; சில கிராமங்களும் பெருக்கெடுத்த வெள்ளத்தால் சூழப்பட்டது. அதன் காரணமாகப் பலர் உயிரிழந்திருக்கிறார்கள். வீடிழந்த மற்றும் பலர் மரக்கிளைகளிலெல்லாம் ஏறி உயிர் பிழைத்திருக்கிறார்கள். ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்கள் பல்லாயிரக்கணக்கிலே மாண்டு மிதந்தன.

எங்கு பார்த்தாலும் புயல் எச்சரிக்கைக் கூண்டுகள் ஏற்றப்பட்டன; பாம்பனில் மட்டு

## இல. இராசேந்திரன்

மன்றி, கடலோர ரயில் பாதைகள் உள்ள ஊர்களிலெல்லாம் ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. விமானங்கள் ஒத்திவைக்கப்பட்டன. சாலைகளும் பாலங்களும் அதிக அளவில் பாதிக்கப்பட்ட காரணத்தால் போக்குவரத்





துக்களும் பல ஊர்களைப் பொறுத்தமட்டில் துண்டிக்கப்பட்டன.

இயற்கையின் கொடூரத்தால் ஏற்பட்ட இந்த இன்னலிலிருந்து மக்களைக் காப்பாற்றவும், அவர்கள்தம் உடைமைகளுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கவும் போர்க்கால நடவடிக்கை போலப் பல்வேறு பணிகளைத் தமிழக அரசு மேற்கொண்டது.

**சென்னையில்...**

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரிலே—தென்சென்னையில் உள்ள 190 குடிசைப் பகுதிகளிலும், வட சென்னையில் உள்ள 77 குடிசைப்பகுதிகளிலும் உள்ள ஏராளமான குடிசைகள் நாசமானதால் எண்ணற்றோர் இன்னலுக்காளாயினர். அவர்களையெல்லாம் மாநகராட்சி அதிகாரிகள்-அரசு உத்தரவின் பேரில் ஆங்காங்கிருந்த மாநகராட்சிப் பள்ளிகளுக்குக் கொண்டு சென்று குடியேற்றினார்கள். எல்லோருக்கும் உணவுப் பொட்டலங்களை வழங்கி உயிர் காத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், பாதிக்கப்பட்டோர்க்கு இலவச வேட்டி சேலை, ரொக்கமெல்லாம் வழங்கப்பட்டது.

விடாது பெய்த மழையால் - இந்தியாவுக்கும், மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கும் சென்னையில் நடந்த கிரிக்கெட் ஆட்டப் போட்டி ஒரே நாளில் பெய்த 8 அங்குல மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து - தஞ்சை மாவட்டத்திலும் திருச்சி மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும்ஹெலிகாப்டர்மூலம்உணவுப் பொட்டலங்கள் கொண்டுபோய் வழங்கப்பட்டன. இத்தகைய பணிக்கென கொச்சியிலிருந்து 2 ஹெலிகாப்டர்களும், பெங்களூரில் இருந்து 2 ஹெலிகாப்டர்களும் அரசால் வரவழைக்கப்பட்டிருந்தன. இந்தியக் கப்பற்படைக்குச் சொந்தமான 2 ஹெலிகாப்டர்களும், விமானப் படைக்குச் சொந்தமான ஒரு ஹெலிகாப்டரும் கூட உதவிப்பணிகளில் ஈடுபட்டன.

**ஆந்திரா உதவி**

இங்கு நடந்த நிவாரணப்பணிகளுக்கு உதவும் விதத்தில், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு.என்.டி.ராமராவ் அவர்கள் பத்துலட்சம் ரூபாய் நிதியுதவினார்; மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு-''தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து ஆறுகோடி ஆந்திரமக்களும் துயரடைந்துள்ளனர்; எல்லோரும் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்'' என்றொரு தந்திச் செய்தியும் அனுப்பியிருந்தார்.

**முதல்வர் அறிவிப்பு**

தமிழகத்தை உருக்குலைத்த புயல்-மழைச்சேதம் பற்றிச் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த (24.12.83) மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள், பின்வருமாறு தெரிவித்தார்:

''முதலமைச்சர் நிவாரண நிதிக்காக வசூலான பணத்தையெல்லாம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமே கொடுத்து, வெள்ள நிவாரணத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், நிவாரண நடவடிக்கைகள் பற்றி முதலமைச்சருக்கும், தலைமைச் செயலாளருக்கும் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

''காவல் துறையினர், வருவாய்த்துறையினர், பொதுப்பணித்துறையினர், சமூக சேவை நிறுவனத்தினர், இராணுவத்தினர்-குறிப்பாகத் திருச்சியில் உள்ள இராணுவத்தினர் பொறுப்போடு நிவாரணப் பணிகளைச் செய்து வருகிறார்கள். இதற்காக அவர்களுக்கு என் நன்றி.

''பழுதடைந்த பாலங்கள், சாலைகளை சீர்செய்யும் பணி ஒருவாரகாலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற அளவில் வேலைகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

''வெள்ளத்தின் காரணமாகக் குடும்பத்திற்கு உதவிசெய்பவர் இறந்துவிட்டால் அந்தக் குடும்பத்திற்குப் பணம் மட்டுமல்லாமல் வீடும் கட்டித்தரப்படும். அவர்களுடைய தற்போதைய வீடு குடியிருக்க இயலாததாக இருந்தால் மறு வாழ்வுக்கு வசதிகள் செய்யலாம்.

**முதல்வர் பயணம்**

தமிழ்நாடெங்கும் பெய்த பெருமழை காரணமாக வெள்ளத்தாலும், வீடிழந்தும் தவிக்கும் மக்களுக்கு ஆறுதல் கூறவும், பாதுகாப்பான இடங்களில்பாதிக்கப்பட்டவர்களை வைத்துப் பாதுகாக்கும் பணிகளை நேரில் கண்டறியவும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 26.12.83 அன்று காலையில் ஹெலிகாப்டர் மூலம் பயணமானார்.



அரசு தலைமைச் செயலாளர் திரு. கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப.வும் உடன் சென்றார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளைப் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், பின்னர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நாகப்பட்டினத்திற்குப் போய் இறங்கினார். அங்கிருந்து ஜீப் மூலம் நாகையின் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கும், திட்டச்சேரி, பனங்குடி, கீவளூர், தேவூர், தப்பலாம்புலியூர், திருவாரூர், கொரடாச்சேரி, நீடாமங்கலம், தஞ்சாவூர் ஆகிய ஊர்களுக்கும் போனார்.

அந்தந்தப் பகுதிகளிலெல்லாம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு-வேட்டி, சேலை, அரிசி, பால், நிவாரணநிதி, உணவுப்பொட்டலங்கள் ஆகியவற்றையும் தானே வழங்கி ஆறுதல் கூறினார். நிலைமை சீராகிற வரை உதவிகள் தொடரட்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அவ்வப் பகுதிகளில், திரு.உமாநாத் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு இணைந்து சென்று மக்கள் குறைகளைக் கேட்டறிந்து உதவினர்.

திருச்சி மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்துவந்த மாண்புமிகு முதல்வர் அவர்களைச் செய்தியாளர்கள் சந்தித்தனர்.

அவர்கள் கேட்ட வினாக்களுக்கு அவர் இவ்வாறு விளக்கமளித்தார்;

''வெள்ளச் சேதம் மிக அதிகமாக இருக்கிறது. ஆகவே, டில்லி சென்று பிரதமரைச் சந்தித்து நிவாரண உதவி கேட்பேன்.

''வறட்சியைவிட வெள்ள நிவாரண நடவடிக்கைகளைத் துரிதமாகவும், விரைவாகவும் செய்யவேண்டியிருக்கிறது. அதைச் சாமளித்ததுபோல் இதையும் சமாளிப்போம். வீண் புரளி கிளப்பாமல் உண்மை நிலவரங்களை வெளியிட்ட பத்திரிகைகளைப் பாராட்டுகிறேன்.

''இவ்வளவு சோதனை வந்தும் மக்கள் இந்த அரசுமீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதைப் பாதுகாத்துக்கொள்வோம். இந்தத் துயர்துடைக்க பத்து இலட்சம் ரூபாய் நிதி வழங்கிய மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்களுக்குத் தமிழக மக்கள் சார்பிலும், அரசு சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்

''போலீஸ், இராணுவத்தாரின் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது. அதிகாரிகளின் உதவியோடு வெள்ள நிவாரண நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் விரைவுபடுத்தப்படும்.

''வெள்ள நிவாரணப் பணிகளில் பொது மக்களும் பணியாற்ற முன்வரவேண்டும். இதனால், மழையால் வேலை இல்லை என்ற நிலை இல்லாமல் அவர்களுக்குத் தொழில்கிடைக்கும்; வருமானமும் கிடைக்கும்.

''ஒருவருஷத்தில் பெய்யக்கூடிய மழை ஒரே நாளில் பெய்திருக்கிறது. இதனால் சேதம் அதிகம். ஆனாலும், மக்களுக்குத் துன்பமோ வறுமையோ ஏற்பட அரசு இடம் கொடுக்காது. வெள்ளப்பாதிப்பு உண்டான பகுதிகளில் பயிர்களுக்கு நஷ்டஈடு தருவது நிலைமைக்கு ஏற்ப செய்யப்படும்.

''வெள்ளத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு, அவரவர்கள் குடும்ப நிலைக்கு ஏற்ப ஆயிரம் ரூபாய் முதல் ஐயாயிரம் வரை உதவி நிதி வழங்கப்படும்.''

—இவ்வாறு கூறிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், பின்னர் திருச்சி மாவட்டத்திலுள்ள குழுமணி, மேக்குடி, பெரிய கருப்பூர், சின்ன கருப்பூர், ஜீயபுரம், திருவெறும்பூர், குண்டு கால்வாய், கிளிகால்வாய், வேங்கூர், கல்லணை, அரியமங்கலம், அசூர், தேவராயன் சேரி, செங்கிப்பட்டி பகுதிகளுக்கெல்லாம் சென்றார். பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்த்தார். இன்னலுற்ற மக்களுக்கெல்லாம் ஆறுதல் கூறினார்.



வெள்ளச்சேதப் பகுதிகளில், மாண்புமிகு தமிழக அமைச்சர்களெல்லாம் ஆங்காங்கே சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

**பிரதமர் உதவி**

இதற்கிடையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தமிழக வெள்ள நிவாரணத்திற்காக ஐந்து கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழக வெள்ளச்சேதம் குறித்துத் தொகுத்தளித்த புகைப்பட ஆல்பத்தைப் பிரதமரிடம் கொண்டு சென்ற இந்திராகாங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.பழனியாண்டி மூலம் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேலும்-மாண்புமிகு இந்தியப் பாதுகாப்புஅமைச்சர் திரு.ஆர்.வெங்கட்ராமன் தமிழகம்வந்துவெள்ளப்பகுதிகளைப்பார்வையிட்டு அறிக்கை தந்த பிறகு மேலும் எவ்வளவு நிதி அளிப்பதெனப் பிரதமர் தீர்மானிப்பார் என்றும் கூறப்பட்டது.



29.12.83 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் காண மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்றார்.

அம் மாவட்டத்தில் - கந்தர்வ கோட்டை கரம்பக்குடி, அறந்தாங்கி ஆகிய ஊர்களுக்கும் 300க்கும் மேலான கிராமங்களுக்கும் சென்று வெள்ளப்பாதிப்புக்கு இலக்கான பகுதிகளை அவர் நேரில் கண்டார். உடைப்பெடுத்த ஏரி, குளங்களின் கரைகள் செப்பனிடப்படுவதையும் பார்வையிட்டார்.

பின்னர், இராமநாதபுரம் பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்ட பகுதி நிலவரங்களைக் கண்டறிந்தார்.

**பிரதமருக்குத் தந்தி**

வெள்ள நிவாரணத்திற்காக நிதி உதவிய இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தந்தி அனுப்பினார். அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:



'தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ள நிவாரணத்திற்கு இடைக்கால உதவியாக ஐந்து கோடி ரூபாய் நிதியளிப்பதாகத் தாங்கள் அறிவித்துள்ளது தமிழக மக்களுக்கும்-குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பெரிதும் மன நிறைவை அளித்துள்ளது. உரிய நேரத்தில் தாங்கள் பெருமனதுடன் அளித்த உதவிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

'துயருற்ற காலங்களில் உடனடியாக உதவ முன்வரும் தங்களுக்குத் தமிழக மக்கள் எப்போதும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகளைக் கண்டறிய மத்தியப் பாதுகாப்பு அமைச்சரைத் தமிழகத்திற்கு அனுப்புவாகத் தாங்கள் கூறியுள்ளதை வரவேற்கிறோம்.'

—இவ்வாறு அந்தத் தந்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மாண்புமிகு மத்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 29.12.83 அன்றிரவு சென்னை வந்து சேர்ந்தார்.

மறுநாள் காலையில், வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளைக் காண அவர் தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

எல்லா ஊர்களுக்கும் நேரில் சென்றுவிட்டு வந்து, தஞ்சையில் பத்திரிகையாளர்களைச் சேந்தித்த அவர்—''வெள்ள நிவாரண வேலைகளை மாநில அரசு மிக நன்றாகச் செய்திருக்கிறது. நாங்கள் காரில் செல்லும் போது எந்த ஒரு இடத்திலும் உணவு, தங்குமிடம் போன்றவைபற்றி எந்தப் புகாரும் இல்லை. வெள்ளத்தால் பயிர்கள் மிகவும் பாதிக்கட்பட்டுள்ளன. அதனால் சிறிய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளச் சேதம்பற்றி மாநில அரசு அறிக்கை தந்தபிறகு, மத்திய அரசு குழு அனுப்பி வைக்கும். வெள்ள நிவாரணப் பணியில் இராணுவத்தாரின் சேவையை மக்கள் பெரிதும் பாராட்டினார்கள்.

—இவ்வாறு கூறிய மாண்புமிகு மத்தியப் பாதுகாப்பு அமைச்சர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் திருச்சி சுற்றுலா மாளிகையில் சந்தித்தார்.

வெள்ளத்தால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சேதம், அரசின் நிவாரண நடவடிக்கைகள் ஆகியவைபற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அமைச்சரிடம் விளக்கினார்.

வெள்ளப்பகுதிகளில் 4 நாட்கள் சுற்றுப் பயணம் செய்துவிட்டுச் சென்னை திரும்பிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், செய்தியாளர் சந்திப்பின்போது—

''வெள்ளச் சேதம் அதிகஅளவில் இருக்கும் என்று தெரிகிறது. இந்த நிவாரணப் பணிகளுக்குப் பலகோடி ரூபாய் வரை தேவைப்படும். மத்திய அரசிடம் இதற்காக நாங்கள் உதவி கேட்பதென்றால் 75 கோடி ரூபாயிலிருந்து 100 கோடி ரூபாய் வரை கேட்போம்'' என்று குறிப்பிட்டார்.

தஞ்சை மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தக்க சலுகைகளை அரசு அளிக்கும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அறிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்ட வெள்ளப் பகுதிகளை மேற்பார்வையிட திரு எஸ். ஆர். கருப்பண்ணன் இ.ஆ.ப.வும், திருச்சி மாவட்ட வெள்ளச் சேதத்தைக்கண்காணிக்க திரு மு. கலைவாணன் இ.ஆ.ப.வும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.





# ஆதி திராவிட மக்களுக்கு அரசின் அன்புக்கரங்கள்

**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**

## திரு. எம். விஜயசாரதி

வளர்ந்து வரும் சமுதாயத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நிலையை மேம்படுத்த ஆக்கபூர்வமான வழி வகைகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வரும் நம் தமிழ்நாடு அரசு, அம்மக்களின் அனைத்து நலன்களையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் தனது அன்புக் கரங்களை நீட்டி உதவி புரிந்து வருகிறது.

தமிழக மக்கள் தொகையில் 19.41 சதவிகிதம் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் ஆவர்.

நடப்பு நிதி ஆண்டில் 44.61 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அம்மக்களுக்கான பயன் நல்கிடும் பல திட்டங்கள் செம்மையாய்ச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதனை மகிழ்ச்சிப் பெருமிதத்துடன குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் நல்வாழ்வு சிறப்பாய் அமைய அவர்களுக்கு அடிப்படைத் தேவை கல்வியேயாகும். அக்கல்வியினை அளித்திட அரசு அனைத்து வகை ஊக்கத்தினையும் அளித்து வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்கட்கும் உண்டி உறைவிடத்துடன் செம்மையான கல்வியும் அளிக்க அரசு எல்லா வகையிலும் உதவி செய்து வருகிறது. இத்துறையினரால் 947 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளும், 137 பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளும், ஒரு உறைவிடமில்லாத பள்ளியும் செயல்பட்டு வருகின்றன. 1977-78 முதல் கடந்த ஆறு ஆண்டுகளில் மொத்தம் 59 உறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டுச் செம்மையான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. 675 ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்களும் 20 பழங்குடியினர் மாணவர் இல்லங்களும் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1-7-1982-க்கு முன்னர் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயின்று வந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 22 காசு அடக்கச் செலவில் நண்பகல் உணவு வழங்கப்பட்டது. 1-7-82-க்குப் பிறகு ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் 5—9 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 45 காசு செலவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இத்துறைப் பள்ளிகளில் பயிலும் 1.73 இலட்சம் இளஞ்சிறார்கள் வயிறார உண்டு கல்வியில் ஆர்வம் காட்டி வருவது நாடறிந்த உண்மை.

1982-83-ம் ஆண்டிற்கு 24,498 பட்டாக்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில் நடப்பாண்டில் (1983-84)ல் 25,000 பட்டாக்கள் வழங்க முதன் முறையான குறியீடு நிர்ணயிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் குறியீட்டு இலக்கை அடைய, தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. வீட்டு வசதியைப் பொறுத்தவரை தமிழ்நாட்டு வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ரூ. 4,000 மதிப்பீட்டுச் செலவில் 201 ச. அடி. பரப்பில் பயன் பெறுவோர் தாமே வீடுகளைக் கட்டிக் கொள்ளும் வகையில் ரூ. 3,250 மானியமாக வழங்கப்பட்டது. மீதமுள்ள ரூ. 750, பயன் பெறுவோரின் சொந்த உழைப்பாகக் கருதப்பட்டது. தற்போது ஒரு வீட்டின் மதிப்பீட்டுச் செலவை ரூ. 4,000-த்திலிருந்து ரூ. 6,000 ஆக உயர்த்தி இருக்கிறோம். இதில் ரூபாய் 5,250 மானியமாகவும் மீதமுள்ள ரூ. 750 பயன் பெறுவோரின் சொந்த உழைப்பாகவும் அமையும் என்பதை சுண்டுக் குறிப்பிட விழைகிறேன்.





கலப்பு மணம் புரிந்து கொண்ட ஆதி திராவிடர் மக்களை ஊக்குவிப்பதற்காக ரூ. 4,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் ரூ. 300 திருமணச் செலவுக்காகவும் அத்துடன் பாராட்டுப் பத்திரம் மற்றும் 8 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் அளிப்பதுடன் அத்தம்பதியரின் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரியிலும் பொறியியல் கல்லூரியிலும் முறையே 6 இடங்களும் 5 இடங்களும் ஒதுக்கப்படுகின்றன. இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருவதை உற்று நோக்குங்கால் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவு நனவாகி வருவதை நாம் அறியலாம்.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1.80 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்த உதவ வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட முக்கிய திட்டங்களை எடுத்துக் கொண்டால் வேளாண்மையில் ஆதிதிராவிட விவசாயிகள் பயன் பெறும் பொருட்டு எல்லா உதவிகளும் செய்து தரப்படுகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்முறையில் பெரும்பாலான ஆதிதிராவிடர்கள் பயன் பெற்று வருகின்றனர் என்பதை இத்தருணத்தில் சுட்டிக் காட்ட விழைகிறேன். அத்துடன் அவர்களுக்குக் கிடைக்கும் சலுகையில் 3-ல் ஒரு பகுதி மானியமாக அளிக்கப்படுகிறது. கால்நடை அபிவிருத்தியில் இம்மக்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்த அரசு அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது. இன்று இம்மக்களிடையே ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்ச்சி வெண்மைப் புரட்சியில் சடுபட வேண்டும் என்பதாகும். அதன்படி ஆதிதிராவிடர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க 3-ல் ஒரு பாகம் மானியம் என்ற நிர்ணயக் குறியை மாற்றி 50 சதவிகிதம் மானியமாக அளித்து ஆயிரக்கணக்கான ஆதிதிராவிடர் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகிறார்கள். தானும் வயிறார உண்டு நாட்டின் தேவையையும் சடு செய்கின்றனர் என்ற உண்மை நிலை தமிழ்நாடெங்கும் நிலவுகிறது.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த இளைஞர்கள் தரைப்படை மற்றும் காவல் துறையில் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பினை அதிகரிக்க இவர்களுக்கு உடல் அமைப்பு, அறிவுக் கூர்மை இவற்றை அதிகரிக்கும் பொருட்டும் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம், செயலாற்றப்படுகிறது. 1981-ம் ஆண்டு முதற்கண், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இரண்டு மாத காலம் பயிற்சி அளிப்பதற்காக அரசு அனுமதி வழங்கியது. இந்தப் பயிற்சி முகாம்கள் பயன் அளிக்கும் வகையில் அமைந்ததால் 1982-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் 100 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு 60 நாட்களுக்கு இராணுவப் படை மற்றும் காவல் துறையில் சேர்வதற்கு வகை செய்யும் பொருட்டுப் பயிற்சி முகாம்கள் நடத்த அரசு அனுமதி வழங்கியது. இதற்காக ரூ. 11,16,800 சிறப்பு மைய நிதியில் இருந்து வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. முன்பு சொன்ன பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்று இராணுவப்படையில் சேர 642 இளைஞர்களும் காவல் துறையில் சேர 167 இளைஞர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த மக்கட் தொகையில் 1.07 சதமாகப் பழங்குடியினர் இருந்த போதிலும் தமிழக அரசு ஆதிதிராவிடர் நலனுக்கென செயற்படுத்தப்படும் சிறப்பு உட்பகுதித் திட்டங்களைப் போலவே பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக, பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இத்துணைத் திட்டம் 1976-77-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1976-77ஆம் ஆண்டில் 101.82 இலட்சமாக இருந்தது. 1983-84-ஆம் ஆண்டில் ரூ. 600.58 இலட்சமாக உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின்படி பல்வேறு அரசுத் துறைகள் செயல்படுத்தி வரும் பலமுனைத்திட்டங்கள் அதாவது தோட்டக்கலை, கூட்டுறவு, கால்நடைவளர்ப்பு வன வளர்ப்பு, பாதுகாப்பு முதலியவற்றின் மூலம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருக்கும் பழங்குடி மக்களில் 50 விழுக்காடு அதாவது 15,000 குடும்பங்களை வறுமையிலிருந்து மீட்டு நல்வாழ்வு வாழச் செய்வதற்குத் தமிழக அரசு அரும்பாடுபட்டு வருகிறது.

கிராமத் தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (விளஸ்டர் புரோகிராம்) சென்ற ஆண்டு முதல் சென்னையைத் தவிர்த்து ஏனைய 15 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஊராட்சி ஒன்றியத்தைத தேர்வு செய்து மொத்தம் 15 ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு ஒன்றியத்தில் 1,000 ஆதிதிராவிடர்கள் குடும்பங்கள் அதிகமாக வசிக்கும் கிராமத் தொகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சென்ற ஆண்டு சுமார் 15,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் அடைந்தனர். நடப்பு ஆண்டிலும் மேலும் 15 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் அமல் செயல்படுவதனால் மேலும் சுமார் 15,000 ஆதிதிராவிடர்கள் பயன்பெறுவார்கள். இத்திட்டத்தின் மூலம் அந்தந்தப் பகுதி ஆதிதிராவிடர்கள் பல்வேறு தொழில்களின் வாயிலாக நிரந்தரமான வருவாய் பெற்றுப் பயன் அடைகிறார்கள் என்று இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

குடிஇயல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகளைச் செயல்படுத்த 20 இயங்கும் காவல் படைகள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும்பொருட்டு தனி நீதிமன்றங்கள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. தீண்டாமையின் தீமைகளை விளக்கும் திரைப்படம் ஒன்று இம்மாநிலம் முழுவதிலும் திரையிட்டு விளம்பரம் செய்து தயாரிக்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களையும் செயல்படுத்தவும் கண்காணிக்கவும் 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒவ்வொரு ஆதிதிராவிடர் விரிவாக்க அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் நலனின் சிறப்பு மத்திய நிதி உதவியும் கிடைக்கின்றது. அந்நிதி உதவியினைக் கொண்டு கிராமப்புறத்தில் உள்ள ஆதிதிராவிடர்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக நிரந்தர வருவாய் தரும் தொழில்கள் ஏற்படுத்தப்பட்டு, மானியமாகச் செலவிடப்பட்டு வருகிறது. குறிப்பாக நிரந்தர வேலைவாய்ப்புத் தரும் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் அல்லது விரிவுபடுத்தவும் செலவு செய்யப்படுகிறது. இவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சில திட்டங்களை எடுத்துக் கொண்டால் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ரூ. 439 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் அது உற்பத்தி தொடங்கும். ஏழு இடங்களில் விசைத்தறி வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டுப் பெரும்பான்மையானவை செயல்பட்டு வருகின்றன. மற்றவை கட்டுமானப் பணி நிறைவுற்றதும் செயலினைத் துவங்கும். மேலும் 14 விசைத்தறி வளாகங்கள் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அரசுத்துறையைச் சேர்ந்த போக்குவரத்துக்கழகங்களில் ஆதிதிராவிடர்களை ஓட்டுநர் போன்ற வேலைகளில் சேர்த்துக் கொள்ள, போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இது வரையிலும் 414 ஆதிதிராவிடர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரக்கூடிய பல்வேறு நல்ல திட்டங்களை உங்களின் முன் வைத்துள்ளேன். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் இவற்றினை நன்குணர்ந்து தங்களுடைய ஒத்துழைப்பினை நல்கிவிட்டால் சமூகத்தின் மற்றப் பிரிவினருடன் அனைத்துத் துறைகளிலும் மேம்பட்டு ஒளிமயமானதொரு வாழ்க்கையினை எய்திடக் கூடும் என்பதை உறுதியிட்டுக் குறிப்பிட விழைகிறேன்.

[18.12.83-ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரை].

## 1983–84ஆம் ஆண்டில் இயல் இசை நாடக மன்றம் வழங்கும் கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள்

| | |
|---|---|
| இயற்றமிழ்க் கலைஞர் | — திரு. திருக்குறள் வீ. முனுசாமி |
| இசைக் கலைஞர் | — திரு. டி. கே. ஜெயராமன் |
| வயலின் கலைஞர் | — திரு. வி. தியாகராஜன் |
| மிருதங்கக் கலைஞர் | — திரு. டி. ஆர். சீனிவாசன் |
| வீணைக் கலைஞர் | — திருமதி ச. காயத்திரி |
| நாதசுரக் கலைஞர் | — திரு. கோட்டூர் என். ராஜரத்னம்<br>திரு. கோட்டூர் என். வீராசாமி |
| தவில் கலைஞர் | — திரு. தென்சித்தூர் எஸ். என். சுந்தரம். |
| இறையருள் பாடல் கலைஞர்கள் | — திரு. பித்துக்குளி முருகதாஸ் (சிறப்பு)<br>திரு. எஸ். நமசிவாய ஓதுவார். |
| பரதநாட்டிய ஆசிரியர் | திரு. கே. ஆர். ராதாகிருஷ்ணன் |
| பரதநாட்டியக் கலைஞர் | — திருமதி மாலதி டாம்னிக், |
| நாடக நடிகர் | — திரு. பி. எஸ். வெங்கடாசலம் |
| நாடக நடிகை | — திருமதி என். விஜயகுமாரி |
| நாடக ஆசிரியர்கள் | — திரு. மனை ப. கீரன் (சிறப்பு)<br>திரு. திருச்சி பாரதன். |
| நாடகப் பாடலாசிரியர் | — திரு. இரா. முருகேசக் கவிராயர் |
| நாடகத் திறனாய்வுக் கலைஞர் | — டாக்டர் ஏ. என். பெருமாள் |
| இசை நாடக நடிகர் | — திரு. எம். ஆர். முத்துசாமி |
| இசை நாடக நடிகை | — திருமதி எம். கே. கமலம் |
| இசை நாடக ஆர்மோனியக் கலைஞர் | — திருமதி எம். ஆர். கமலவேணி. |
| திரைப்பட நடிகர் | — திரு. கே. பாக்கியராஜ் |
| திரைப்பட நடிகை | — திருமதி ராஜசுலோசனா |
| திரைப்பட இயக்குநர் | — டாக்டர் பி. பானுமதி |
| திரைப்பட வசனகர்த்தா | திரு. வலம்புரி சோமனாதன். |
| திரைப்படப் பின்னணிப் பாடல் கலைஞர் | — திருமதி எல். ஆர். ஈஸ்வரி |
| கிராமியக்கலைஞர் (வில்லிசை) | — திரு. பி. சின்னப்பா |
| சபா | — ஸ்ரீ கச்சாலீஸ்வரர் கான சபா, சென்னை. |
| முன்னாள் ஆளுநர் திரு. கே. கே. ஷா சுழற் கேடயம் பெறும் நாடகக்குழு | — ஹெரான் தியேட்டர்ஸ், சென்னை. |



# நகராட்சித் துறையில் அரசின் அரும் பணிகள்

வி. விஸ்வநாதன், இ.ஆ.ப.
இயக்குநர்,
நகராட்சி நிர்வாகத்துறை.

தமிழக மக்களின் நல்வாழ்வு ஒன்றையே தனது குறிக்கோளாகக் கொண்டு இன்றைய அரசு, பல்வேறு துறைகளின் மூலம் இந்நாள் வரை ஆற்றியுள்ள அரும்பணிகளை அறியாதார் இலர் எனலாம். தமிழ் நாட்டில் உள்ள 98 நகராட்சிகளும் 8 நகரியங்களும் தத்தமது பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்யக் கடப்பாடு உடையவை. எனினும் பல்வேறு காரணங்களால் வருவாய் பெருக வழியின்மையால் நிதிநிலை முடங்கிய நிலையில் மக்களுக்கு வசதிகளைச் செய்ய முடியாமல் அவதியுறும் நகராட்சிகட்கு — நகரியங்கட்கு வருவாய்க்கு வழிவகுக்கும் விதத்திலும், அதே சமயத்தில் மக்களுக்கு நன்மையாக அமையும் விதத்திலும் 1-7-77-க்கு முன்பிருந்த திட்டங்களை மேலும் அதிக அளவு நிதியுதவியுடன் செயலாக்கியதுடன் கடந்த மூன்றாண்டுகளில் மக்களுக்கு அளவிலா நன்மைகளை ஆற்றும் பொருட்டு மேலும் பல புதிய திட்டங்களையும் உருவாக்கி பெருமளவில் நிதியுதவி செய்து வருகிறது.

### விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் 700-க்கு மேற்பட்ட குடிசைப்பகுதிகள் உள்ளன. இப்பகுதிகளில் வாழும் மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி தூய்மையற்ற சூழ்நிலையில் உள்ளனர். இப்பகுதிகட்குப் பாதைகள் அமைத்தல், குடிநீர் வழங்குதல், தெருவிளக்குகள் அமைத்தல், பொதுக் கழிவறைகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் செய்வதற்குத் தமிழக அரசு ஆண்டு தோறும் ரூ. 50 இலட்சம் நிதியுதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 45 நகராட்சிகளுக்கு ரூ. 300 இலட்சம் மானியமாக வாரி வழங்கியதின் பலனாக இன்று 254 குடிசைப் பகுதிகளில் இவ்வசதிகள் செய்து தரப்பட்டு அவை பொலிவுடன் திகழ்கின்றன. இதனால் இங்கு வாழும் 5 இலட்சம் மக்கள் பயன் பெற்றுள்ளனர். 1983-84-ஆம் ஆண்டில் இத்திட்டம் 15 நகராட்சிகளில் ரூ. 50 இலட்சம் செலவில் செயலாக்கப்படுகிறது.

### பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்

நகராட்சிகளின் பல பகுதிகள் அடிப்படை வசதிகளின்றிப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் வாழும் இப்பகுதிகளைப் பொலிவாக்க இது வரை தமிழக அரசு 73 நகராட்சிகளுக்கு ரூ. 66 இலட்சம் வழங்கி சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், பொதுக் கழிவறைகள் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

### நகராட்சிகளின் தனியார் தெருக்களை மேம்படுத்த 'சுழல் நிதித் திட்டம்'

நகராட்சிப் பகுதிகளில் தனியார்களால் ஏற்படுத்தப்பட்ட சுமார் 820-க்கு மேற்பட்ட மனைப் பிரிவுகளில், மனைப் பிரிவு உரிமையாளர்கள் செய்ய வேண்டிய சாலை வசதி, வடிகால் வசதி, சிறுபாலங்கள், தெரு விளக்கு, போன்ற வசதிகள் செய்து நகராட்சிகளிடம் ஒப்படைக்காததால், அங்கு வாழும் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவதியுறுகின்றனர். இம்மக்களின் அல்லலை நீக்கும் பொருட்டு 'சுழல் நிதித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தினை 1980-81ஆம் ஆண்டில் ஏற்படுத்தி, இதற்காக அரசு ரூ. 25.00 இலட்சம் நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் அளித்துள்ளது. இதன்படி மனைப் பிரிவுப் பகுதிகளில் செய்யப்படும் பணிகட்கான மதிப்பீட்டில் 25 சதம் மனைப் பிரிவுகளில் குடியிருப்போர் முன் பணமாக நகராட்சிக்குக் கட்ட வேண்டும். சுழல் நிதியிலிருந்து அரசு 50 சதம் பணத்தை நகராட்சிக்கு நல்கும். மீதமுள்ள பணத்தை நகராட்சி நிதியிலிருந்து முன்பணமாக வைத்து மேற்படி வசதிகள் செய்து தரப்படும். மனைப் பிரிவு உரிமையாளர்கள் நகராட்சிக்கும் அரசுக்கும் திரும்பச் செலுத்த வேண்டிய மீதமுள்ள தொகை 5 வருட தவணைகளில் 7 சதவீத வட்டியுடன் திரும்பப் பெறப்படும். இதனால் 32 நகராட்சிகளில் ரூ. 65 இலட்ச மதிப்பீடு வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து மனைப்பிரிவுகளிலும் அடிப்படை வசதிகள் செய்து தரும்வரை நடைமுறைப்படுத்தும் இத்திட்டம் இப்பகுதி வாழ் மக்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.





### தன்னிறைவுத் திட்டம்

நாட்டில் வாழும் மக்கள் தங்கட்குத் தேவையான அனைத்துப் பொது வசதிகளையும் பெற்றாலன்றித் தன்னிறைவு ஏற்படாது என்பதையுணர்ந்த அரசு, மக்கட்கு ஒட்டு மொத்தமான பல நன்மைகளை ஒரு நேரத்தில் ஆற்றிட வேண்டுமென்று கருதி இத்திட்டத்தினை முதலில் கிராமப்பகுதிகளில் செயல்படுத்தி, அதனால் மக்களுக்கு நிறைவான பயன் கிட்டியதால், நகர்ப்புறங்கட்கும் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 1982-83ஆம் ஆண்டில் நிதிநிலை அடங்கிய 20 நகராட்சிகளுக்குத் 'தன்னிறைவுத் திட்டத்தின்' கீழ் தலா ரூ. 25.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 5.00 கோடி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 182 குடிநீர் வேலைகள் 554 சாலை வேலைகள், 354 சிறு பாலங்கள் மற்றும் மழை நீர் வடிகால் வேலைகள், 68 ஆதிதிராவிடர் காலனிகளுக்குச் சாலைகள் அமைத்தல், 62 ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல், 80 மருந்தகங்கள்-மற்றும் தாய்சேய் நல நிலையங்கள் கட்டுதல் 60 பகுதிகளில் தெரு விளக்குகள் போடுதல், சுகாதார ஊழியர்களுக்கு 77 வீடுகள் கட்டுதல் போன்ற 1437 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. இத்திட்டத்தினை 1983-84-ஆம் ஆண்டில் மேலும் 31 நகராட்சிகளுக்கு ரூ. 5.00 கோடி செலவில் தொடர்ந்து நிறைவேற்றவும் அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டம் இதுவரை நிறைவேற்றப்பட்ட பகுதிகளில் 'எல்லோரும் எல்லாமும் பெறலாம்' என்னும் நிலையேற்பட்டு உள்ளது என்பது வெள்ளிடைமலை என விளங்கும்.

### ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத் திட்டம்

விஞ்ஞானமும் நாகரிகமும் போட்டியிட்டு வளரும் இந்நாளில் நகர்ப்புறங்களில் நிறைய வேலை வாய்ப்புக்களை உண்டாக்கவும், கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறங்கட்கு மக்கள் புற்றீசல்கள் போல் பெருமளவில் குடிபெயர்வதைத் தவிர்க்கவும், நகரங்களில் வாழ்க்கைத் தரம் சிறக்கவும், ஒரு இலட்சம் மக்கட்தொகைக்குக் குறைவாக உள்ள நகராட்சிகளுக்கு 'ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத் திட்டத்தின்' மூலம் தமிழக அரசும் மைய அரசும் இணைந்து ரூ. 80 இலட்சம், மிகக் குறைந்த வட்டியில் கடனாக வழங்குகின்றன. ஒருகோடி ரூபாய் அளவிலான இத்திட்டத்தில் நகராட்சியின் பங்கு ரூ. 20 இலட்சமாகும். இத்திட்டத்தின் மூலம் தற்போது 28 நகராட்சிகளில் ரூ. 1978.47 இலட்ச மதிப்பீட்டில் பேருந்து நிலையங்கள், சந்தைகள், கடைகள் கட்டுதல், சாலைகள், சிறு பாலங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் மக்களுக்கு வசதிகள் பெருகுவதோடு நகராட்சிகட்கும் வருவாய் பெருக வாய்ப்புள்ளது. இத்திட்டம் வரும் ஆண்டுகளில் மேலும் பல நகராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

மேற்படி திட்டம் எல்லா நகராட்சிகளுக்கும் விஸ்தரிக்க முடியாது என்பதைக் கருத்தில் கொண்டு, 1980-81-ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம்' ஒன்று தொடங்கப்பட்டு இதன் மூலம் தேவைப்படும் நகராட்சிகளுக்குப் பயன்தரும் ஆக்கப் பணிகள், கடைகள், அங்காடிகள் பேருந்து நிலையங்கள், கட்டணக் கழிப்பிடங்கள் கட்டும் பொருட்டு கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 736 இலட்சம் மதிப்புள்ள வேலைகள் பல நகராட்சிகளில் செய்யப்பட்டு வருகின்றன.

**நகராட்சிப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்**

நகராட்சிகளில் மொத்தம் 1026 தொடக்கமற்றும்நடுநிலைப் பள்ளிகளும், 26 உயர்நிலைப் பள்ளிகளும், 33 மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. பெரும்பாலான பள்ளிகள் மிகவும் பழமையான, போதுமான பாதுகாப்பு இல்லாத கட்டடங்களிலும் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. நிதி நிலைமை சரியில்லாத காரணத்தால் பெரும்பாலான நகராட்சிகள் தங்களுடைய பள்ளிகளுக்கெனப் பாதுகாப்பான போதுமான இடவசதியுள்ள கட்டடங்க்ளைக் கட்ட இயலாத நிலையில் உள்ளன. இளங்குழந்தைகளை இம்மாதிரி பாதுகாப்பு இல்லாத நிலையில் பள்ளிகளில் பயில்விப்பது விரும்பத்தக்கதல்ல. இதனை உணர்ந்த அரசு 1980-81-ஆம் ஆண்டிலிருந்து ரூ. 61.50 இலட்சம் நிதியுதவி அளித்ததின் பயனாக இதுவரை ரூ.93.29 இலட்சம் மதிப்பீட்டில் 167 தொடக்கப்பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1981-82 மற்றும் 1982-83 ஆண்டுகளில் வழங்கப்பட்ட மொத்தம் ரூ. 50.00 இலட்சம் நிதியைக் கொண்டு, இதுவரை, ரூ. 67.71 இலட்சம் மதிப்பீட்டில் 32 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதனால்தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் முறையே 8,350, 1,600 பிள்ளைகளுக்கு இட வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**முதல்வரின் சத்துணவுத் திட்டம்**

''வயிற்றுக்குச் சோறிடவேண்டும்- இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திடவேண்டும்'' என்னும் மகாகவி பாரதியாரின் பாடலுக்கேற்ப இத்தமிழ் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள இளங் குழந்தைகள் அனைவரும் வாழவேண்டும்; அதுவும் சத்துணவு பெற்று நோயற்ற நிலையில் ஒளி படைத்த கண்ணும், உறுதி கொண்ட நெஞ்சும், களி படைத்த மொழியும், கடுமை கொண்ட தோளும், தெளிவு பெற்ற மதியும் பெற்று, தேர்ந்த கல்வி பெற்று அறிவிற் சிறந்து எதிர் காலத்தில் தாயகத்தைப் பொலிவாக்கும் சிற்பிகளாய்த் திகழ வேண்டும்; திருவள்ளுவர் அருளியது போல், 'உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு' என்பதையுணர்ந்த மாண்புமிகு முதல்வரின் சிந்தனையில் எழுந்ததே ''முதல்வரின் சத்துணவுத் திட்டம்''. 2 வயது முதல் 4 வயது வரை முடிய உள்ள குழந்தைகளுக்கான முதல்வரின் சத்துணவு திட்டம் 15-9-82 முதல் தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் மற்றும் நகரியங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சிகளின் மொத்த மக்கள் தொகையான 72,28,007ல், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 3,95,741 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்க மொத்தம் 2965 சத்துணவு மையங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இம்மையங்கள் கட்டுவதற்கு அரசு ரூபாய் 5,30,11,000 செலவு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் நகராட்சிகளில் 2,25,000 குழந்தைகள் சத்துணவு பெறுகின்றனர்.

இவ்வாறே 5 வயது முதல் 9 வயது வரையும் 10 வயது முதல் 14 வயது வரையும் உள்ள பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கும் திட்டம்1-7-82 முதல் நகராட்சிப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் தனித்தனி சமையற் கூடங்கள் ரூ. 61.36 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மொத்தம் 3.36 இலட்சம் மாணவர்களில் 1.70 இலட்சம் பேர் சத்துணவு பெறுகின்றனர். இம்மையங்களுக்குக் குடிநீர் லாரிகள் வாங்கவும் ரூ. 1.40 கோடி அரசு நிதி உதவி அளித்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுக் காலமாக பருவ மழை பொய்த்ததின்







விளைவாக தற்போது நகராட்சிகளில் 'விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்றுடற்றும் பசி' எனத் திருவள்ளுவ தேவர் அருளியதுபோல் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக் குறையைப் போர்க்கால அடிப்படையில் சமாளிக்க, அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள 72 நகராட்சிகளில் ரூ. 5.00 கோடி செலவில் 2000-க்கும் மேற்பட்ட குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு இதுவரை 1400 குழாய்க்கிணறுகள் முடிவடைந்தும் மற்றவை முடியும் நிலையிலும் உள்ளன. நிதி நிலைமை சிராக உள்ள 8 நகராட்சிகளில், அவர்களது நிதியிலிருந்து திறன் வாய்ந்த ஜெனரேட்டர் அல்லது டீசல் இன்ஜின் பம்ப்செட் வாங்கி தங்களுடைய குடிநீர் வழங்கும் பணியினைத் தொடர்ந்து நிறைவேற்ற அரசு அனுமதி அளித்துள்ளது.

தற்போது வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள மின் தட்டுப்பாட்டினைக்களையும் பொருட்டு இதுவரை 29 நகராட்சிகள்ல் அருகில் உள்ள மின் நிலையங்களிலிருந்து தலைமை நீரேற்று நிலையங்களுக்குத் தனியான மின்பாதை (Seperate Feeder Line) ரூ. 80 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. மேலும் 28 நகராட்சிகளுக்கு ரூ. 75 இலட்ச செலவில் தனியான மின்பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**துப்புரவுப் பணியாளர்களின்றிப் பராமரிக்கப்படும் கழிப்பறைகள் கட்டும் திட்டம்**

பன்னெடுங்காலமாகத் துப்புரவுப் பணியாளர்கள், கழிப்பிடங்களிலுள்ள கழிவுகளைக் கையினால் எடுத்துத் தலையில் சுமந்து செல்வதைத் தவிர்க்கும் நோக்கோடு உலர்கழிப்பிடங்களை துப்பரவுப் பணியாளர்களின்றிப் பராமரிக்கப்பட கூடிய தண்ணீர் ஊற்றிப் பயன்படுத்தப்படும் நவீன கழிப்பறைகளாக மாற்றும் புதியதொரு திட்டம் மைய மற்றும் தமிழக அரசின் உதவியுடன் உடுமலைப்பேட்டை நகராட்சியில் ரூ. 54,77,040 மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டு 6,000 கழிப்பிடங்கள் மாற்றியும் புதிதாகவும் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதனை முன்னோடியாகக் கொண்டு மைய அரசின் உதவியுடன் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்படும் 28 நகராட்சிகளிலும் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயலாக்கப்படாத நகராட்சிகளிலும் 'வீட்டு வசதி— நகர மேம்பாட்டுக் கழகத்தின்'' (HUDCO) கடனுதவியுடன் இத்திட்டத்தினைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்துடன் உலக வங்கியின் உதவியுடன் குறைந்த பணச் செலவில் ஆத்தூர், கோபிசெட்டி பாளையம், துறையூர், குன்னூர், பொள்ளாச்சி, தென்காசி, அறந்தாங்கி, தேனி-அல்லிநகரம், பட்டுக்கோட்டை, பண்ருட்டி, சீர்காழி, ஆம்பூர், செங்கற்பட்டு, கொடைக்கானல், போன்ற 14 நகரங்களில் ரூ. 16.10 கோடி செலவில் உலர் கழிப்பிடங்களை நவீன கழிப்பிடங்களாக மாற்றும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**பணிகள் :**

இத்திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் நகராட்சிகளில் உள்ள அனைத்து உலர் கழிப்பிடங்களும் தூய்மையான நீர் ஊற்றுக் கழிப்பிடங்களாக மாற்றப்படுவதுடன் துப்புரவுப் பணியாளர்களை அவர்கள் தற்போது செய்யும் அசுத்தமான பணியிலிருந்து விடுவித்து அவர்கட்கு மாற்று வேலை தரப்படும்.

**நகராட்சிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நலம் பயக்கும் பல திட்டங்கள்**

அனைத்து நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் சுமார் 15,000 துப்புரவுப்பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களான இவர்களுக்கு நலன் செய்ய வேண்டி, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(அ) அரசின் அடிப்படை ஊழியர்களுக்கு சடான முறையான ஊதிய விகிதம் மற்றும் பஞ்சப்படி, வீட்டுவாடகைப்படி, ஓய்வூதியம் பணிக்கொடை, குடும்பநல மருத்துவம் மற்றும் விடுப்புச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

(ஆ) ஆண்டொன்றுக்கு தலைப் பாகைத் துணியுடன் மூன்று ஜோடி சீருடைகள் மற்றும் ஒரு ஜோடி காலணியும் வழங்கப்படுகிறது.

(இ) மாதம்ஒன்றுக்கு சலவைப் படியாக ரூ. 5-ம், துப்புரவு படியாக ரூ. 7-ம் வழங்கப்படுகிறது. துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்பதற்காக வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. அத்துடன் ஓய்வு பெறும் காலத்தில் ஒவ்வொருவருக்கும் குடியிருக்க சொந்த வீடு ஒன்று இருக்க வேண்டும் என்ற கருத்துடன் சொந்தமாக வீடுகள் கட்டித் தரவும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

(ஈ) நகராட்சிகளில் பணியாற்

றும் ஊழியர்களுக்கு தற்சமயம் அவர்கள் சேமநல நிதியில் சேர்ந்த நாளிலிருந்து ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. இதனை மாற்றி, அனைத்து அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல இவர்களுக்கும் பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஓய்வூதியம், மற்றும் பணிக்கொடை வழங்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும் அரசு ஊழியர்களுக்குச் சொந்தமாக வீடு கட்டிக் கொள்வதற்குக் கடன் உதவி அளிப்பது போல நகராட்சிப் பணியாளர்களுக்கும் சொந்தமாக வீடுகள் கட்டிக் கொள்வதற்குக் கடன் வழங்கும் திட்டம் ஒன்றுமிட்டப்பட்டு முதல் கட்டமாக ரூ. 50.00 இலட்சம் வழங்குவதற்கு அரசு பரிசிலித்து வருகிறது.

**நகராட்சிப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தப் பரிசுத் திட்டம்**

நகராட்சிகளில் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்காகவும், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் கல்வியில் ஊக்குவிக்கும் பொருட்டும், அரசு பரிசளிப்புத் திட்டத்தினை 1980-81 ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் படி 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் உயர்ந்த மதிப்பெண் பெற்று முதலாவதாக வரும் மாணவ மாணவியர்களுக்குத் தலா ரூ. 250 ரொக்கப் பரிசு அளிக்கப்படுகிறது. மேலும் சென்ற ஆண்டை விட இவ்வாண்டில் தேர்ச்சி சதவீதத்தை 20 சதத்திற்கு மேல் உயர்த்திய பள்ளிக்குத் தனியாகச் சுழற்கேடயம் வழங்கும் திட்டமும், அப்பள்ளியில் பணிபுரியும் தலைமை ஆசிரிய, ஆசிரியர்கள் பொன்னாடை அளித்துச் சிறப்பிக்கப் படுகின்றனர்.

**பயிற்சி நிலையம்**

நகராட்சி நிர்வாகத்தின் முக்கியப் பொறுப்புக்களில் உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நிர்வாகத்தில் நவீன வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு ஏற்றவாறு தங்களை உருவாக்கிக் கொள்ள முறையாகப் பயிற்சி அளிப்பது அவசியமென அரசு கருதி 1981-82ஆம் ஆண்டில் ஒரு பயிற்சி நிலையம், கோவை மாநகரில் தொடங்கப்பட்டு, தமிழ்நாடு நகர் நிர்வாகப் பயிற்சி நிலையம்' என்ற பெயருடன் 28-11-81 முதல் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையம் வருங்காலத்தில் ஒரு மாபெரும் ஆராய்ச்சி மற்றும் புள்ளி விபர நிலையமாகப் பரிணமிக்கும் என்பதில் ஐயமில்லை.

**தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டத் திருத்தம்**

தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920-ல் ஏற்பட்டது. அதற்குப் பின் பல திருத்தங்கள் ஏற்பட்டிருப்பினும் இன்றைய கால நிலைக்கு ஏற்பவும், மக்களின் விருப்பத்திற்கு ஏற்பவும், ஒட்டு மொத்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்காகக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, இந்தக் குழு வழங்கிய 200-க்கு மேற்பட்ட திருத்தங்கள் அடங்கிய அறிக்கை அரசின் ஆழ்ந்த பரிசிலனையில் உள்ளது.

**நகராட்சி நிர்வாக இயக்கத்தைச் செம்மைப்படுத்தும் பணி:**

நகராட்சிகளில் சமூக மற்றும் பொருளாதாரத் திட்டங்களை மேம்படுத்த நகராட்சி நிர்வாக இயக்கத்தினைப் பலப்படுத்தும் நோக்குடன் கீழ்க்கண்ட பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

1. பொறியியல் பிரிவு:

   நகராட்சிகளில் நடைபெறும் வேலைகளுக்குத் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கவும், அப்பணிகளைக் கண்காணிக்கவும் இயக்ககத்தில் ஒரு கண்காணிப்புப் பொறியாளரும், ஐந்து மண்டலங்களில் ஒவ்வொரு செயற்பொறியாளரும் கொண்ட பொறியியல் பிரிவு 1981-82 முதல் இயங்கி வருகிறது.

2. திட்டப்பிரிவு :

   ஒரு இணை இயக்குநர் மற்றும் ஒரு துணை இயக்குநரின் தலைமையில், இவ்வலுவலகத்தில் திட்டப் பிரிவு, திட்டங்களை நகராட்சிகளுக்காக உருவாக்கி நன்முறையில் செயல்படுத்த 1981-82 ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

3. கல்விப் பிரிவு:

   ஒரு இணை இயக்குநர் உதவியுடன் இயக்ககத்தில் 13514உள்ள 1026ஆரம்பப் பள்ளிகள் மற்றும் 59 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைச் சிருடன் நடத்திச் செயல்படுத்த 1981-82-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

4. கணக்குப்பிரிவு:

   ஒரு முதுநிலைக் கணக்கு அலுவலர் உதவியுடன் நகராட்சிக்கு அளிக்கப்படும் நிதி உதவிகளை ஆய்ந்தறிந்த உதவிக் கணக்குப் பிரிவு 1981-82 முதல் இயங்கி வருகிறது

**நகராட்சிகளின் நிலையை உயர்த்துதல்:**

நகராட்சிகளின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தும் பொருட்டும் நகராட்சிகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைச் செம்மையாகவும் வேகமாகவும் செயல்படுத்தும் பொருட்டும் தஞ்சாவூர் திருப்பூர் வேலூர் மற்றும் பொள்ளாச்சி நகராட்சிகள் தேர்வு நிலையினின்றும் சிறப்பு நிலைக்கும், உடுமலைப்பேட்டை, ஆலந்தூர், கரூர், காஞ்சிபுரம், கடலூர் நகராட்சிகள் மற்றும் கத்திவாக்கம் மற்றும் கொடைக்கானல் நகரியங்கள் முதல் நிலையினின்றும், தேர்வு நிலைக்கும், தேனி, அல்லி நகரம், கோவில்பட்டி, பல்லவபுரம், நாமக்கல் மற்றும் தாராபுரம் நகராட்சிகள் இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கும் இடைப்பாடி, சாத்தூர், திருவள்ளூர் மற்றும் நெல்லிக்குப்பம் நகராட்சிகள் மூன்றாம் நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்கும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து இரண்டாம் நிலை மூன்றாம்நிலை நகராட்சிகட்கும் தேர்வு நிலை நகராட்சி ஆணையர்கள் நிலையில் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுகாறும் கூறியவையன்றி, தற்போதைய அரசு பொறுப்பேற்ற (1-7-77) நாளில் இருந்து அதற்கு முன்பிருந்த சில திட்டங்களுக்கும் பெருமளவில் நிதியுதவி செய்ததோடு, தமிழ் நாட்டினை வளம் மிக்கதாக்க வேண்டும் என்னும் பேரவாக் கொண்ட மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் நினைவெல்லாம் நிறைவேற, மேலும் கடந்த மூன்றாண்டுகளில் பல புதிய திட்டங்களை உருவாக்கிப் பெருமளவில் நிதியினை வாரி வழங்கித் தமிழ்நாடு வளம்பெற, மக்கள் நிறைவான வாழ்வினை வாழ கண்டோரும் கேட்டோரும் வியக்கும் வண்ணம் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக நகராட்சித் துறையில் ஏற்பட்ட நன்மைகள் எடுத்துரைப்பின் மேலும் மேலும் விரியும். மக்களின் நல்வாழ்வு ஒன்றையே தனது எண்ணமும் செயலுமாகக் கொண்ட தமிழக அரசு இனி எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் பல புதிய நலம் பயக்கும் திட்டங்களைத் தன்னுடைய ஆழ்ந்த பரிசிலனையில் கொண்டுள்ளது. அதனால் தமிழ்நாடு மேலும் வளம்பெறுவதை நாம் காணத்தான் போகின்றோம்.



# விவசாயிகளுக்கு அரசின் சலுகைகள்



நமது உழவர் பெருமக்களில் பெரும்பாலோர் சிறிய மற்றும் மிகச்சிறிய விவசாயிகள் ஆவர். விவசாயக் கடன் மற்றும் வட்டிச் சலுகைகளைப் பொறுத்த வரையில் ரிசர்வ் வங்கியின் விதிகளின் படி 5 ஏக்கர் நன்செய் அல்லது புன்செய் நிலம் அல்லது அதற்கும் குறைவாக உள்ளவர்கள் சிறு விவசாயிகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளனர். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மானியங்களைப் பொறுத்த அளவில் மைய அரசு நிர்ணயித்துள்ள வரையறைப்படி, 2.5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கர் அல்லது அதற்கும் குறைவான புன்செய்நிலம் உடையவர்கள் சிறிய விவசாயிகள் என்றும், 2.5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் மிகச் சிறிய விவசாயிகள் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளார்கள்

கால்நடை பராமரிப்பு சிறப்புத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் மூலம்சிறு விவசாயிகளுக்கு நேரடியாகவும், கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் பல ஆண்டுகளாக தமிழக அரசு சலுகைகள்அளித்து வருகின்றது.

பொதுவாக சிறிய விவசாயிகள் பெரிய விவசாயிகளைப் போல் வசதி வாய்ப்புகளுடன் பயிரிட்டு கூடுதல் மகசூல் பெற வாய்ப்பில்லை. முக்கியமாக அவர்களது விளை நிலங்களுக்குப் போதிய பாசன வசதி இல்லாதகாரணத்தால் அவர்களால் அதிக மகசூல் அடையும் உத்திகளை முழுமையாகக் கையாள முடிவதில்லை. இந்நிலையைப்போக்க சமீபத்தில் தமிழ்நாடு அரசு மைய அரசு உதவியுடன் சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு (உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன்) சில சிறப்பு திட்டங்களை 1983-84-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தியுள்ளது.

கிணறு மற்றும் இறைவை விசை குழாய் அமைப்பதற்குரிய செலவில் 50 சதம் வரை மானியமாக அளித்தல், காடு வளர்ப்பு மற்றும் பழத்தோட்டம் அமைப்பதற்கான செடிகள் அல்லது நாற்றுகளை இலவசமாகவோ அல்லது போதிய மானிய விலையிலோ மினிகிட்டுகள் அதற்குத்தேவையான உரங்கள் ஆகியவற்றை முழுவதும் மானியமாக அளித்தல் ஆகிய பல்வேறு நடவடிக்கைகள் மூலம் சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய திட்டங்கள் பல தமிழகத்தில் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

**அ. வேங்கடராமன், இ.ஆ.ப.**
**வேளாண்மைத்துறைச்** செயலர்.

மேற்சொன்ன சிறப்புத் திட்டங்களில் காடு வளர்ப்பு மற்றும் பழத்தோட்டம் அமைத்தல்'மினி கிட்' வழங்குதல் ஆகிய இரு திட்டங்களும் வேளாண்மைத் துறை மற்றும் எண்ணெய்வித்துத் துறையினரால் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

**காடு வளர்ப்பு:**

சிறிய விவசாயிகளுக்கு அதிக நிலமில்லாததால் அவர்களின் அன்றாடத் தேவைக்குரிய எரிபொருள் மற்றும் கனிகள் கிடைக்கும் மரவகைகளைப் பயிரிட முடிவதில்லை. எனவேதான் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பண்ணையைச் சுற்றிலுமுள்ள வயல் வரப்புகளிலும், பயிர் செய்யப்படாத ஏனைய இடங்களிலும் நடுவதற்கு, முழு மான்யமாகவோ அல்லது கன்று ஒன்றுக்குப் 10பைசா வீதமோ மரக் கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதே திட்டத்தின் கீழ் 75 சதவிகித மானிய விலையில் தென்னங் கன்றுகள் வழங்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. நடப்புஆண்டில் தமிழகத்தில் உள்ள 377ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஒன்றியத்திற்கு ரூபாய் 50,000 வீதம் அளித்து, நாற்றங்கால் பராமரித்து சிறு விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் விநியோகிக்கும் திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது. இதன்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய வட்டாரத்திலும் 60,000 கன்றுகளுக்குக் குறைவின்றி வழங்கப்படும்.

புதிய உயர்ரகப் பயறு மற்றும் எண்ணெய் வித்து விதைகளைச் சிறிய விவசாயிகளின் மத்தியில் பரவலாக்கும் பொருட்டு, விதை மற்றும் அதற்குத் தேவையான உரம் ஆகியவற்றை முழு மான்யமாக அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஒன்றியத்திற்கு ரூ. 30,000. ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் உள்ள எல்லா ஒன்றியங்களிலும் விவசாயத்துறை மற்றும் எண்ணெய்வித்துத் துறையினரால் இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது. இதன்படி கடந்த பட்டத்தில் 19,382 பயறு வகை மினிகிட்டுகளும்35376எண்ணெய் வித்து மினியட்டுகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

இதுதவிர, வறட்சி நிவாரணத்தின் கீழ் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் மிகச்சிறிய விவசாயிகளுக்கு முறையே 25 சதம், 33 1/3 மான்ய விலையில் உயர்ரக விதைகளும், பூச்சி மருந்துகளும் வேளாண்மைத்துறை கிடங்குகள் மூலம் வினியோகிக்கப்பட்டு வருகின்றன. நெல், சிறு தான்யம், பயறு மற்றும் பருத்தி விதைகளுக்கு ரூபாய் 50 இலட்சமும், எண்ணெய்வித்து விதைகளுக்கு ரூபாய் 30 இலட்சமும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளுக்கு ரூபாய் 24 இலட்சமும் உரவகைகளுக்கு ரூபாய் 360 இலட்சமும் மான்ய நிதி ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் மிகச்சிறிய விவசாயிகளுக்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன. மேலும் இச்சலுகைகள் 30-9-83 முடிய இருந்ததை மைய அரசு ஒப்புதலுடன் 31-12-83 முடிய நீட்டிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட சிறப்புச் சலுகைகளை தமிழகத்தில் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்.

வரி செலுத்துபவர்கள்
கவனிக்கவும்:

இப்போது
6-வருட
தேசீய சேமிப்பு பத்திரங்கள்
இரு மடங்கு லாபமளிக்கின்றன

க்ஷேம நல நிதியில் போடும் பணம், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம், 10 வருட குமுலேடிவ் டைம் டெப்பாசிட் முதலியவற்றுக்கு உள்ள, வருமான வரி சட்டத்தின் 80சி பிரிவின்படியிலான வரி சம்பந்தப்பட்ட சலுகைகள், 6 வருட தேசீய சேமிப்பு பத்திரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. (ஆருவது, ஏழாவது வெளியீடுகளுக்கும் இது பொருந்தும்)

6வது வெளியீடு
- ரூ. 1000, 6 வருடங்களில் ரூ. 2,015 ஆக அதிகரிக்கும்
- 12% கூட்டு வட்டி, ஆறு மாதங்களுக்கொரு முறை கணக்கிடப் பெற்று முதிர்வு காலத்தில் வழங்கப்படும்:
- வட்டி வருடந்தோறும் கணக்கிடப்படுவதால் வருமான வரியில் பயன்.

7வது வெளியீடு
- இதில் ரூ. 1000 முதலீடு செய்தால் 6 மாதத்திற்கொரு முறை ரூ. 60 பெறலாம். முதல் முழுதாக இருக்கும்.
- 12% வட்டி, அரையாண்டுக்கொரு முறை வழங்கப்படும்.
- சிறந்த கிரமமான வருவாய் திட்டம்.

இரண்டு வெளியீடுகளும் வெவ்வேறு அளவு முதலீடுகளில் கிடைக்கும். உங்களுக்கு ஏற்றதைத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாம்.

பொதுவான அம்சங்கள்
- முதலீட்டுக்கு வரம்பு கிடையாது.
- தேவையானல் 3 வருடங்களுக்கு பிறகு பணமாக்கிக் கொள்ளலாம்.
- வாரிசு குறிப்பிடலாம்.
- ரூ. 7,000 வரையிலான வட்டி (குறிப்பிடப்பட்ட வேறு முதலீடுகளுக்கு கிடைக்கும் வட்டி உட்பட), வருமான வரி சட்டத்தின் 80எல பிரிவின்படி, வருமான வரி விலக்குப் பெறும்.
- அயல் நாட்டில் வசிப்பவர்கள் செய்யும் முதலீட்டுக்கு 1% அதிகமாக—அதாவது ஆண்டுக்கு 13% முழுதும் வரி விலக்குப் பெற்ற வட்டி கிடைக்கும். முதலீட்டுக்கு உச்சவரம்பு கிடையாது.

எல்லா அஞ்சலகங்களிலும் கிடைக்கும். அத்தாட்சி பெற்ற ஏஜெண்ட்டுகளிடமும் வாங்கலாம்.

நேஷனல் ஸேவிங்ஸ் ஆர்கனைசேஷன்
போஸ்ட் பாக்ஸ் எண் 96, நாக்பூர்-6.

83/318






# வசதி பெருக்கிவரும் உடுமலை நகராட்சி


எச். பி. என். ஷெட்டி, இ.ஆ.ப.
ஆணையாளர்-அரசுச் செயலாளர்
நகர வளர்ச்சி-உள்ளாட்சித்துறை


கோவை மாவட்டத்திலுள்ள நகராட்சிகளில் உடுமலைப் பேட்டை நகராட்சி, அந்நகர வாசிகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நன்குணர்ந்து, நகரின் அழகை மேம்படுத்தி, சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாத்துச் செயலாற்றும், அதே நேரத்தில் நகராட்சியின் வருவாயைப் பெருக்கி, நிதி வளத்தையும் அதிகரித்துக் கொண்டு மென்மேலும் நன்மைகளைச் செய்ய முயன்று வருவதைப் பாராட்டாமல் இருக்க முடிவதில்லை.

''ஏழைகளின் உதகை'' என அழைக்கப்படும் உடுமலைப் பேட்டை நகராட்சி ஒரு தேர்வு நிலை நகராட்சியாகும். இதன் மக்கள் தொகை 54,582. இது 7.41 சதுர கிலோ மீட்டரில் பரந்துள்ளது.

பொதுச் சுகாதாரத்தைக் கண்ணும் கருத்துமாய்க் காத்து வருவது ஒரு நகராட்சியின் முதற் கடமையாகும். கழிவிடங்கள் முறையாக கவனிக்கப்படாவிட்டால், அவ்விடங்களே பற்பல நோய்களுக்குப் பிறப்பிடங்களாகி விடுகின்றன. எனவே, நகராட்சிகளில் குறைந்த செலவில் சிறந்த கழிப்பிடங்களை அமைத்து, நகர் மக்களுக்கு உதவ வேண்டுமென்பதற்காகவே குறைந்த செலவிலான கழிப்பிடத்திட்டம் ஒன்றினை மைய அரசு உருவாக்கி ஒவ்வொரு மாநிலத்திலும் சில நகராட்சியைத் தேர்ந்தெடுத்து நிறைவேற்ற முனைந்தது. இந்நகராட்சிகளில் உடுமலைப் பேட்டை நகராட்சியும் ஒன்றாகும். அதன்படி, இந்நகராட்சியிலுள்ள எடுப்புக் கழிப்பிடங்கள் அனைத்தையும் அகற்றிவிட்டு, அவற்றினை நவீனக் கழிப்பிடங்களாக மாற்ற உடுமலை நகராட்சியும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் இணைந்து செயலாற்றுகின்றன.

இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவில், பாதியை மைய அரசு ஏற்றுக் கொள்கிறது. எஞ்சிய தொகையைக் கடனாக அனுமதித்து கழிவறைகள் கட்டித்தரப்படுகின்றன. இத்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இங்கு 2403 வீடுகளில் எடுப்பு முறையிலான கழிவறைகளும், 4 இடங்களில் பொதுக் கழிவறைகளும் இருந்தன. இவையனைத்தையும் குறைந்த செலவிலான நவீன கழிவறைகளாக மாற்ற வேண்டியிருந்தது. 2403 கழிவறைகளில் 50 கழிவறைகளை உடுமலை நகராட்சியே நவீன கழிவறைகளாக மாற்றியமைத்துவிட்டது. எஞ்சிய 2353 இடங்களை மாற்றியமைக்கும் வேலையைத் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்தது. இவற்றில் இவ்வாண்டு நவம்பர் 5-ஆம்நாள் முடிய 2283 கழிவறைகள் நவீன அறைகளாக மாற்றப்பட்டுள்ளன. எஞ்சிய 70 இடங்கள் இந்த ஆண்டு முடிவிற்குள் நவீனமாக மாற்றப்படும். இவை தவிர, 3038 வீடுகளில் கழிவறைகள் என்று சொல்லக்கூடிய வகையில் முறையான அமைப்பு ஒன்றும் இல்லை. எனவே, இவற்றையும் நவீன கழிவறைகளாக மாற்றும் கருத்து அரசின் ஆய்வில் உள்ளது.

ஒரு நவீன கழிவறை கட்ட ரூ. 800 செலவாகிறது. இந்த முழுச் செலவையும் எல்லோரும் தாங்கிக் கொள்ள முடியாது என்பதாலும், நவீனக் கழிப்பிடங்களை மக்கள் பயன்படுத்திப் பழக வேண்டுமென்ற நோக்கத்தாலும் பாதித் தொகையை அரசு இலவசமாக வழங்குகிறது. எஞ்சிய ரூ. 400 கடனாகக் கருதப்பட்டு 10 ஆண்டுகளில் 20 அரை ஆண்டுத் தவணைகளாகச் சொத்து வரியுடன் சேர்த்து வசூலிக்கப்படும் கழிவறைகள் கட்டுவதற்கான மொத்த முதலீட்டுத் தொகை ரூ. 54.77 இலட்சம்.

இக்கழிவறைகளில் அமைப்பு எவ்வாறுள்ளது? சென்னை போன்ற பெருநகரிலுள்ள கழிவறை போன்றே மேடையமைத்து பீங்கான் தொட்டி அமைக்கப்படுகிறது. ஆழமான வட்டக் குழிகள் இரண்டு தனித்தனியாகத் தோண்டப்பட்டு அதனைச் சுற்றிக் கற்களால் சிறிது சிறிது இடம் விட்டு வட்டச் சுவர் கட்டப்படுகிறது. கழிவு நீர் சுற்றுப்புறத்தில் விரைவில் உறிஞ்சப்படுவதால், குழிகள் நிரம்புவதற்கு வெகுகாலமாகும் என்ற அடிப்படையில் இவ்வாறு கட்டப்படுகின்றன. இதனைச் சிலர் தவறாக எண்ணுவதுண்டு. அந்தத் தவறான எண்ணத்தை அலுவலர்கள் போக்கி வருகின்றனர். இரண்டு குழிகளும் தனித் தனியே கழிவு இருக்கையுடன் இணைக்கப்படுகின்றன. ஒரு குழி நிரம்புவதற்குச் சில ஆண்டுகள் ஆகுமல்லவா? அதன் பின்னர் அடுத்த குழிக்கு இணைப்புக் கொடுக்கப்பட்டு அது நிரம்பும். குழிகள் சிமெண்டினால் செய்த அரைவட்ட மூடிகளால்

மூடப்பட்டு விடுகின்றன. இதனால் சுகாதாரக் கேடு என்ற பேச்சுக்கே இடம் ஏற்படுதில்லை. இம்முறை சுத்தமாக, சுகாதாரமாக உள்ளது. வீட்டைச் சுற்றி அசுத்தமான சூழ்நிலையில்லை. நீர் தேங்குவதற்கு வழியேயில்லை. கொசுக்கள், ஈக்கள் போன்றவற்றால் நோய்கள் பரவ எந்த அடிப்படையும் இல்லை. பொது இடங்களில் சுகாதாரம் நன்கு பாதுகாக்கப்பட இது பெரிதும் துணை செய்கிறது.

நவீன கழிப்பறையின் தோற்றத்தை மக்கள் நேரில் கண்டு, அதன் அமைப்பை, பயனை, நன்கு உணர வேண்டுமென்பதற்காகவே நகராட்சி அலுவலகத்திற்கு வெளியே இதன் மாதிரி ஒன்று செய்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றொரு சமுதாயக் கொடுமையும் இதனால் அகற்றப்படுகிறது. பிறர் மலத்தை அகற்றி தன் வாழ்க்கையை நடத்த வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ள தொழிலாளிகள் இனி பிறர் மலம் அகற்றும் பணியை மேற்கொள்ளத் தேவையில்லை.

வீடுகளில் மலம் அகற்ற தற்போது உடுமலை நகராட்சியில் 45 துப்புரவுத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் அதிலிருந்து விடுவிக்கப்பட்டு, நகராட்சியின் வளர்ந்து வரும் பகுதிகளில் வேறு பணிகளில் அமர்த்தப்படுவார்கள்.

மாநகராட்சியின் இயல்பான வருவாயை மட்டுமே வைத்துக் கொண்டு வளர்ந்து வரும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற இயலாது என்பதை நாம் அனுபவ வாயிலாகக் கண்டறிந்துள்ளோம். எனவே வருவாயைப் பெருக்குவதற்கான வழிமுறைகளை நகராட்சிகள் மேற்கொண்டாலன்றி, நகரில் பல திட்டங்களை உள்ளாட்சிகள் செய்வதற்கில்லை. இதற்கு எடுத்துக் காட்டாக உடுமலை நகராட்சி விளங்குகிறது. ஒருங்கிணைந்த வளர்ச்சித்திட்டத்தினால் உடுமலையில் மூன்று இடங்களிலே அங்காடிகள் கட்டிவிடப்படுகின்றன. பழனிச் சாலையில் 20 கடைகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றை ஏலத்தில் விட்டதில் சாலையை எதிர் நோக்கியுள்ள 10 கடைகளின் மூலம் மாதத்திற்கு ரூ. 1250 முதல் ரூ.1,800 வரை நகராட்சிக்கு வருவாய் கிடைக்கிறது. இந்த 20 கடைகள் மூலமாக மொத்தத்தில் ரூ. 2.34 இலட்சம் வருவாய் ஆண்டு தோறும், நகராட்சிக்குக் கிடைக்கிறது.

சேர்மன் கைகராஜன் சாலையில் ஒரு சிறிய அங்காடியும் கட்டப்பட்டுள்ளது. இங்கு ஏற்கனவே ஒரு மிகப் பழமையான கட்டடம் இருந்தது. அதனை இடித்துத் தள்ளிவிட்டு அங்கே புதிய சிறு அங்காடி கட்டப்பட்டுள்ளது. இதில் 30 கடைகள் உள்ளன. கடைகளை ஏலம் விட்டதில் மாதத்திற்கு ரூ.250 முதல் ரூ.350 வரை ஏலம் போயிற்று.

இராசேந்திர சாலையிலுள்ள வாரச் சந்தையை அபிவிருத்தி செய்யவும் விரிவாக்கவும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. முதற் கட்டமாக 120 சிறுகடைகள் (ஸ்டால்கள்) கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மேலும் தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில், சோடியம் வாயு விளக்குகள் நகரில் பொருத்தப்பட்டுள்ளன.

ஊராட்சிகளைத் தொடர்ந்து பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்பதைச் சொல்லவேண்டியதில்லை. அதனையொட்டித் தமிழ்நாடு அரசின் நகராட்சிகளுக்கான தன்னிறைவுத் திட்டத்தின முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 நகராட்சிகளில் உடுமலைப்பேட்டை நகராட்சியும் ஒன்றாகும் என்ற செய்தி இனிப்பைத் தரும் செய்தியாகும். தன்னிறைவுத் திட்டத்தில் இந்நகராட்சியில் குடிநீர் பங்கீட்டுக் குழாய்கள் இல்லாத பகுதிகளுக்கு 1284 மீட்டர் நீள புதிய குழாய்கள் பதித்து, மூன்று இடங்களில் பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டு ஏழை மக்கள் வாழ் பகுதிகளுக்குப் போதிய குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

சாலை வசதிகள் திட்டத்தில் 25 சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நகராட்சிக்குச் சொந்தமான மண் சாலைகள் அனைத்தும் தார்ச் சாலைகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சாலைகள் பொலிவுடன் திகழ்வதோடு, போக்குவரத்திற்கும் நல்ல வசதியை ஏற்படுத்தி உள்ளது.

உடுமலை நகரின் தாழ்வான பகுதிகளில் மழைநீர் விரைந்து வடிந்து செல்ல 463 மீட்டர் நீளத்திற்கு மழை நீர் வடிகால்களும், தெருக்களில் மழை நீர் அரிப்பைத் தடுக்க முக்கியமான 16 இடங்களில் சிறு பாலங்களும் கட்டப்பட்டுள்ளன. மேலும், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ. 90,000 செலவில் பாதை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தவிர, இரண்டு வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடங்கள் ஒவ்வொன்றும் 101 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ. 6.70 இலட்சம் செலவில் 7 இடங்களில் கட்டப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில், தானியங்கும் கழிப்பிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் சேவை எத்தகையதாக இருக்க வேண்டுமென்பதற்கு உடுமலை நகராட்சி ஒரு முன்னோடியாக விளங்குகிறது.







# சமூக நலக் காடுகள்

சேலம் மாவட்டச் சமூகநலக் காடுகள் வளர்ச்சித் திட்டம்பற்றி அறிய மாவட்டச் சமூகநலக் காடுகள் கோட்ட வன அலுவலர் திரு ஆர். சென்னகேசவன் அவர்களைச் சந்தித்தோம். சமூக வனவியல் வனப் பாதுகாவலர் திரு எம். ரமேஷனும் அப்போது உடனிருந்தார்.

நாம் சமூக நலக் காடுகள் பற்றி எழுப்பிய வினாக்களுக்கு அவர்கள் அளித்த பதில்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

சேலம் மாவட்டத்தில் சமூக நலக் காடுகள் வளர்ச்சிக்கென 1981-82-ல் 2 லட்சத்து 23 ஆயிரத்து 443செடிகளும், 1982-83 இல் 3 லட்சத்து 18 ஆயிரத்து 289 செடிகளும், 1983-84ல் 5 இலட்சம் செடிகளும் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

யூகலிப்டஸ், சூபாபுல், புளி, நாவல், கொய்யா, இலவுபோன்ற வகைச் செடிகள் குறைந்த விலையிலே 1981-82-ல் 8 லட்சத்து 10 ஆயிரமும், 1982-83-ல் 8 லட்சத்து 40 ஆயிரமும், 1983-84-ல் 7.5 லட்சமும் தரப்பட்டிருக்கின்றன.

சேலம் மாவட்டத்தில் - இந்த மூன்றாண்டுகளிலே மட்டும் ஏரிக்கரைப் பகுதியில் 556 எக்டேர் நிலப்பரப்பிலும், புறம்போக்கு நிலம் மலைப் பகுதிகளில் 4,033 எக்டேர் நிலப்பரப்பிலும், தரிசு நிலங்களில் 233 எக்டேர் நிலப்பரப்பிலும் சமூக நலக் காடுகள் வளர்ச்சிக்கெனச் செடிகள் நடப்பட்டுள்ளன.

இவை தவிர சாலையோரங்களில் 56 கிலோ மீட்டர் தூரமும் இருப்புப் பாதையோரத்தில் 37 கிலோ மீட்டர் தூரமும், ஆற்றுப் படுகைகளில் 16 கிலோ மீட்டர் தூரமும் இத்திட்டத்தின் கீழ் செடிகள் வளர்க்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்ட வளர்ச்சிக்கென சேலம் மாவட்டத்திலுள்ள 55 கிராமங்களில் கிராம சமூக நலக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சமூகநலக் காடுகள் வளர்ச்சித் துறையோடு புள்ளியியல் விவரப் பிரிவும் இங்கே சிறப்புறச் செயல்படுகிறது. மாவட்டத்திலேயே ஆத்தூரில் தான் சமூக நலக்காடுகள் வளர்ப்புப் பணி பெரிதும் சிறப்புற்றிருக்கிறது.

சேலம் சாரதா மகளிர் கல்லூரி சமூக சேவா சங்க மாணவிகள், சேலம் பிளாக், பொய்மான் காட்டில் 1982-83ல் 34,000 செடிகள் நட்டுள்ளனர். 1983-84ல் சுமார் 10,000 செடிகள் மேற்கண்ட காட்டில் மாணவிகளால் நடப்பட்டன.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் குடியிருப்பு பங்களா, சேலம் மாவட்ட நீதிபதி குடியிருப்பு ஆகிய இடங்களிலும் அம் மாணவிகளால் செடிகள் நடப்பட்டன.

மேட்டூர் ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்த செடி நடு விழாவிற்குத் தேவையான சுமார் 10,000 செடிகள் இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

குமாரபாளையம் அலமேலு அங்கப்பன் கல்லூரி மாணவிகள் மூலம் மேற்கண்ட கிராம நலப் பணி திட்டத்தில் 5,000 கன்றுகள் இலவசமாக நடப்பட்டிருக்கின்றன.

வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரி மாணவர்களால் 30,000 பாலிதீன் பைச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

சேலம் அரசினர் பொறியியல் கல்லூரியில் 6,000 செடிகள் நடப்பட்டன.

சிறு விவசாயிகள் முன்னேற்றத்திற்காக ஊரக வளர்ச்சி முகமை அலுவலர் மூலம் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 40,000செடிகள் விவசாயிகளுக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மூலம் இலவசமாக வழங்கப்பட்டன.

மாவட்டத் தலைமையிடமான சேலத்தில் 3 இடங்களிலும், வட்டத் தலைமையிடமான, ஆத்தூர், ஏர்க்காடு, இராசிபுரம், நாமக்கல், மேச்சேரி, ஓமலூர், சங்ககிரி ஆகிய இடங்களில் தலா 6 இடங்கள் விதம் மொத்தத்தில் 45 இடங்களில் பொது மக்களுக்குத் தேவையான அளவு பைச் செடிகள் விற்பனைக்காகத் தயாராக வைக்கப்பட்டுள்ளன. யூகலிப்டஸ், சூபாபுல், புங்கன், வேம்பு, புளி, நெல்லி, பலா, நாவல், கொய்யா, இலவன் ஆகிய இனச் செடிகள் இலவசமாகவும் குறைந்த விலையிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

—இவ்வாறாகச் சமூக நலக் காடுகள் திட்டப்பணி சேலம் மாவட்டத்தில் செழித்தோங்கி வருகிறது.

**—இல. இராசேந்திரன்**

# காந்தி ஆசிரமம்



திருச்செங்கோட்டிலிருந்து சுமார் 11 கி.மீ. தொலைவில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க காந்தி ஆசிரமம் மூதறிஞர் இராஜாஜி அவர்களால் 6-2-25ல் நிறுவப்பட்டது.

தேசத்தந்தை அண்ணல் காந்தி அடிகள் விரும்பியபடி கிராமங்களில் கதர், கிராமத் தொழில்களின் மூலம் சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தி, தரமான பொருள்களை மக்களுக்குக் கிடைக்கும் வண்ணம் உற்பத்தி செய்து, விற்பனையையும் திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் செய்து வருகிறது. ஆசிரமத்தின் பணிகள் தொய்வடைந்து உற்பத்தியும், விற்பனையும் பெரும் நட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த கால கட்டத்தில் திரு டி. கௌரி அவர்கள் செயலாளர் பொறுப்பினை ஏற்ற இந்த 12 ஆண்டுகளுக்குள் ஆசிரமத்தின் வளர்ச்சி பல மடங்கு பெருகியுள்ளது. இன்று பல ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்கள், நூற்போர், நெய்வோர், வேப்பமுத்து சேகரிப்போர், ஆதிதிராவிடர்கள், உடல் ஊனமுற்றவர்கள், விதவைகள், மலைவாழ் மக்கள் ஆகியவர்களுக்கு வாழ்வளித்து வருகிறது.

உற்பத்தி:

ஆசிரமத்தின் நாற்பது உற்பத்தி நிலையங்கள் கதர், சலவை சோப்பு, பேக்கரிப் பொருட்கள், அகர்பத்தி, எண்ணெய் வகைகள், தீப்பெட்டிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகின்றன.

**விற்பனை:**

ஆசிரமத்தின் 30 நேரடி விற்பனை நிலையங்கள், 4 வேன்கள், 3 ஆட்டோக்கள், சுற்றுக் கிராமத்தில் உள்ள 500 தேநீர்க் கடைகள் ஆகியவைகள் மக்களின் ஏகோபித்த பேராதரவுடன் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் பொருட்களை பல இலட்சரூபாய்களுக்கு விற்பனை செய்து கிராம மக்களுக்குச் சேவை செய்துள்ளன.

**வேலை வாய்ப்பு:**

1970-71ல் 30 ஊழியர்களைக் கொண்டு பணி நடத்தி வந்த இந்த ஆசிரமம், இன்று 300 பட்டதாரிகள் மற்றும் அதற்குக் குறைவான கல்வி பயின்ற இளைஞர்கள், மற்றும் பஞ்சு அறைப்போர், நூற்போர், நெய்வோர், சோப்பு, பேக்கரி விற்பனை உதவியாளர்கள் என சுமார் 8,000 பேர்கள் இந்த ஆசிரமத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

கதர்ப்பணி: முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் சுமார் 2,000 கதர்ப்பணியாளர் பயன் பெறுகின்றனர். 20 நூற்புமையங்களில் 6 கதிர், 12 கதிர் உலோக ராட்டை நிலையம் மூலம் 82-83-ஆம் ஆண்டில் 20 இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி ஆகியுள்ளன. இதன் மூலம் சுமார் ரூ. 9 இலட்சம் கூலியாகப் பெற வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது. 82-83ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சத்துக்குக் கதர் ரகங்கள் உற்பத்தி ஆகியுள்ளன. அதுபோல் ரூ. 45 இலட்சத்திற்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் ஆசிரமக் கிளைகளின் மூலம் கதர் விற்பனை நடந்துள்ளது.

**சலவை சோப்பு :**

வேப்ப எண்ணெய் போன்ற-உண்பதற்குப் பயன்படாத எண்ணெய்களைக் கொண்டு, கைமுறையினால் சலவை சோப்பு தயாரிக்கும் 4 யூனிட்டுகள் சேர்ந்து ரூ. 90 இலட்சம் மதிப்புள்ள 22 இலட்சம் தரமான பார் சோப்புகளைத் தயாரித்து மக்களுக்கு விநியோகம் செய்துள்ளன.

பேக்கரி : ஆசிரமத்தைச் சேர்ந்த 5 பேக்கரி யூனிட்டுகள், ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள 38 இலட்சம் பன்கள் 3.75 இலட்சம் ரொட்டிகள் மற்றும் பிஸ்கட், கேக் ரகங்கள் உற்பத்தி செய்கின்றன. இவை அன்றாடம் ஆட்டோ மூலம் கிராமப்புற மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.



அகர்பத்தி: வாசனைபத்திகள், ஜவ்வாது பவுடர், நயம் சாம்பிராணி ஆகியவை 1982-83ஆம் ஆண்டில் ரூ. 6.75 இலட்சம் மதிப்பில் செய்யப்பட்டு விற்பனையும் ஆகியுள்ளன.

தீப்பெட்டி : சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களிடம் ரூ.23.52 இலட்சம் மதிப்புள்ள தீப்பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதில், ஆசிரமத்தைச் சேர்ந்த தீப்பெட்டிகளும் விற்பனை ஆகியுள்ளன. இதுபோல் மரச்செக்கு நல்லெண்ணெய், இலுப்பத்தூள், சீயக்காய்த்தூள், காலணிகள், பாலிஸ்டர் கதர் ஆகியவற்றின் உற்பத்தி பெருகியுள்ளது:



சமூகப்பணிகள்:- தொழு நோயாளிகளுக்கு ஆசிரம மருத்துவமனையின் மூலம், கடந்த ஆண்டு ரூ. 20,881க் குரிய மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.



காந்தி ஆசிரமத்தில் இராஜாஜி வாழ்ந்த இல்லம்

முதிய நூற்போருக்கு மாதப் ரூ. 20 வீதம், ரூ. 4,080 ஒய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட விடுதி மாணவ, மாணவிகள் 100 பேருக்கு இராஜாஜி நினைவு தினத்தன்று ரூ. 4,500 மதிப்புள்ள கதராடைகள் வழங்கப்பட்டன.

இராஜாஜி அவர்களின் குமாரர் திரு சி. ஆர். நரசிம்மன் அவர்களின் தலைமையும், ஆசிரமத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்து அவ்வப்போது பயனுள்ள திட்டங்களைத் தெரிவித்து வரும் திரு. வெ. இராமச்சந்திரன் அவர்களின் தொண்டும், எளம்பள்ளி பங்களாவை ஆசிரமத்திற்குத் தானமாக வழங்கிய ஆசிரம கௌரவப் பொருளாளர் திரு ராஜாகுருநாதன் அவர்களின் சேவையும் பேராதரவும், திரு டி. கௌரி அவர்களின் இடைவிடாத உழைப்பும், ஆற்றலும், ஆசிரமம் நிமிர்ந்துநின்று, ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆக்கப் பணி ஆற்றுவதற்கு உதவி செய்கின்றன.

★ இராமாயணத்தில், சீதையை அனுமன் கொங்குநாட்டிலும் தேடியிருக்கிறான். ஆம்; காவிரியில் நன்னீராடிவிட்டு, கொல்லிமலை, அலைவாய்மலை, சங்ககிரி, செங்கோட்டுமலை ஆகிய இடங்களிலெல்லாம் சீதாபிராட்டி தேடப்பட்டிருக்கிறாள். வியப்பாக இருக்கிறதா? கம்பராமாயணத்திலுள்ளதல்ல இது. 'தக்கராமாயணத்'தில் அப்படிக் கூறப்பட்டிருக்கிறது! முந்நூறாண்டுகளுக்கு முன்னால், இம் மாவட்டத்தில் 'கொங்கு எழுகரை நாட்டுத்' தலைவனாக இருந்த நல்ல தம்பிக் காங்கேயன் தூண்டுதலால், கம்பராமாயணத்தை வழி நூலாகக் கொண்டு ''பத்தர் பாடி எம்பிரான் கவிராயர்'' என்பார் ஐயாயிரம் அருந்தமிழ்ப்பாடல்களால் ஆக்கியதே 'தக்க ராமாயணம்'.

# கூட்டுறவுத் துறைக்கு ஒரு சேலம்

—எஸ். சண்முகசுந்தரம்

கூட்டுறவு என்பது நலிந்தோரின் கேடயம் என்று சொல்லப்படுகிறது. இந்த உண்மையை சேலம் மாவட்டம் நன்குணர்ந்து செயல்படுகிறது. கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு நூற்பாலை, கூட்டுறவு கைத்தறியாளர் சங்கம், கூட்டுறவு ஜவ்வரிசி ஆலை போன்ற பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் சேலம் மாவட்டத்தில் அமைந்து பொது மக்களுக்குப் பெரிதும் உதவுகின்றன.

## சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை

தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக ரூ. 52.5 இலட்சம் பெற்றுள்ள சேலம் அம்மாப்பேட்டையில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலை 1961ல்தொடங்கப்பட்டது. 32 ஏக்கர் பரப்பளவில் இது அமைந்துள்ளது. இலாபத்தை நோக்கும்போது மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகளில் எல்லாம் இந்த ஆலை சிறந்து விளங்குகிறது. ஊழியர்களுக்கு இந்த ஆலைதான் 20 சதவிகித போனஸ் வழங்குகிறது.

தொடக்ககாலத்தில் இந்த ஆலையில் பணிபுரிய முன்வருவோர் தொகை மிகக் குறைவாக இருந்தது. காரணம், அப்போது ஒரு தொழிலாளிக்கு நாளொன்றிற்கு ரூ. 2 தான் சம்பளமாகத் தரப்பட்டது. தற்போது இங்கு ஒரு தொழிலாளி மாதம் ஒன்றிற்கு ரூ 700 முதல் 1000 வரை சம்பளம் பெறுகிறார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இங்குப் பணிபுரிகிறார்கள். தினமும் 3 சிப்டுகளுடன் வாரத்தின் 7 நாட்களும் இவ் ஆலை பணியாற்றுகிறது.

முன்பெல்லாம் பரம்பரையாக கைத்தறி நெசவு செய்பவர்கள் தான் இந்தத் தொழிலில் இடம் பெற்றிருந்தனர். தற்பொழுது ஆதிதிராவிடர் தொழிலாளர்களும் இந்த நூற்பு ஆலைகளில் பணியாற்றி வருகிறார்கள். இலங்கையிலிருந்து வந்த அகதிகளும் இவ் ஆலையில் பணிபுரிகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

இவ் ஆலையில், 40, 60, 80, 100, 120 ஆகிய எண்கள் கொண்ட நூல்கள் தயாரிக்கப்படுகின்றன. 2 × 60, 2 × 80வகை நூல்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் நூல்களில் 60 சதவிகிதம், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் அனுப்பப்படுகின்றது.

இந்த 60 சதவிகிதத்திலும் பெரும் பகுதி நூல்,சேலம் மாவட்டத்தில் உள்ளவர்களால்தான் பயன்படுத்தப்படுகின்றது. தமிழ்நாடு விசைத்தறி வளாகம் அனைத்திற்கும் இவ் ஆலைதான் நூலை விநியோகம் செய்கிறது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற்பாலைகள் 12 உள்ளன. என்றாலும் சைசிங் யூனிட் இங்குதான் உள்ளது. 13 ஆயிரம் கதிர்கள் உற்பத்தித் திறன் கொண்டஇந்த ஆலை, தனது தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பல சலுகைகளை அவர்களுக்கு அளித்து வருகிறது.





நிர்வாக மேலாளர் எம்.எஸ். அய்யர்

வேலை நேரத்தில் தொழிலாளர்களுக்கு டீயும், பன்னும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆயுள் காப்பீட்டுறுதித் திட்டத்தின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஆண்டுக்கு இரண்டு செட் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

தொழிலாளர்கள் குடியிருப்பதற்காக 54 வீடுகள் கொண்ட குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. தனித்தனி வீடுகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை அகதிகளுக்கு வீடு பெறுவதில் முன்னுரிமை தரப்படுகிறது. வீடு இல்லாத அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வீடு கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 10ஆம் வகுப்புவரை இலவசமாகப் புத்தகங்கள் தரப்படுகின்றன.

பதினைந்து ஆண்டுப் பணியைப் பூர்த்தி செய்த 300 தொழிலாளர்களுக்கு எச்.எம்.டி. கைக்கடிகாரங்கள் வழங்கப்படுகின்றன.





இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து உரையாற்ற ஐ.நா. சபைக்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்ற மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரனை சென்னை விமான நிலையத்தில் முன்னாள் அமைச்சர்கள் திரு செ. மாதவன், திரு. ப.உ. ச.வழியனுப்பல்.



ஐக்கியநாடுகள் சபைக் கட்டடம்.




ஐக்கியநாடுகள் மன்றத்தின் பாதுகாப்புச் சபையில் மாண்புமிகு மின்துறை அமைச்சர்.

‘டல்லாஸ்’ நகரில் மறைந்த அமெரிக் குடியரசுத் தலைவர் ஜான் எப். கென்னடி பட்ட இடத்தைப் பார்வையிடப் பயணம்.











'நியூயார்க்' இலங்கைத் தமிழ்ச் சங்கத்தில் பேசுதல்.



'நியூயார்க்' நகரில் இந்தியத் தூதரக அதிகாரியுடன்.





ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியத் தூதர் திரு. என். கிருஷ்ணன் குடும்பத்தினருடன் மாண்புமிகு மின்துறை அமைச்சரும் அவரது துணைவியார் திருமதி சாந்தியும்.



'நியூயார்க்' நகர தமிழ்ச் சங்கத்தில் உரையாற்றும் பொழுது.



'நியூயார்க்' நகரத் தமிழ்ச் சங்க வரவேற்பு விழா நிகழ்ச்சி



'கிளீவ் லாண்டில்' நடைபெற்ற இந்தியக் கலாச்சார நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்.



பாஸ்டன் மாநகரத் தந்தை திரு. யுகனே பிரவுன் வரவேற்றல்.



மாசெகசெட்ஸ் மாநில ஆளுநர் திரு. மைக்கேல் 'மனித உரிமைக்காக வாதாடியவர்' என்னும் விருது வழங்கல்.



காலை 7 மணி முதல் பிற்பகல். 3.30 வரை ஒரு ஷிப்டு , பிற்பகல் 3.30 முதல் இரவு 12 வரை ஒரு ஷிப்டு ,இரவு 12 முதல் மறு நாள் காலை 7 மணி வரையிலும் ஒரு ஷிப்டு என மூன்று ஷிப்டுகள் இங்கு உள்ளன. நள்ளிரவில் ஷிப்டு முடிந்த பின்னர், தொழிலாளர்கள் தங்களது இல்லத்திற்குச் செல்ல சிரமம் என்பதால், அவர்கள் இரவு நேரத்தில் தூங்குவதற்கு வசதியாக ஓய்வகம் ஒன்று இங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

தொழிலை வளர்ப்பதிலும், தொழிலாளர் நலனைப் பேணுவதிலும் அக்கறை கொண்டுள்ள இந்த நூற்பு ஆலை சமுதாயப் பணிகளிலும் தனது அக்கறையைச் செலுத்துகிறது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக 1 இலட்ச ரூபாயையும், இலங்கைத் தமிழர் நிதிக்காக 10 ஆயிரம் ரூபாயையும் இந்த ஆலை அளித்திருப்பதன் வாயிலாக சமுதாயப் பணியில் இதற்கு உள்ள நாட்டம் தெளிவாகத் தெரிகிறது.

## சேலம் மாவட்ட ஸ்டார்ச், சேகோ உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம்

சேலம் மாவட்டத்தில் புகழ் பெற்றது ஜவ்வரிசித் தொழில் ஆகும். அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பை இந்தத் தொழில் தருகிறது. அதிலும் குறிப்பாக பெண்களுக்கு 95 சதவிகிதம் வேலை தருவது இந்தத் தொழில் தான்.

சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசித் தொழிற் சாலைகள் 550 உள்ளன. இவற்றில் 200தொழிற் சாலைகள் மிகப் பெரிய அளவில் உள்ளன. ஒரு தொழிற்சாலையில், குறைந்தது 100 தொழிலாளர் பணி புரிகிறார்கள்.

மரவள்ளிக் கிழங்கிலிருந்துதான் ஜவ்வரிசி தயார் செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் 60 ஆயிரம் ஏக்கரில் குச்சிக் கிழங்கு பயிரிடப்படுகிறது. சுமார் 50 ஆயிரம் விவசாயக் குடும்பத்தினர் இதனால் பயன்பெறுகிறார்கள்.

6 மூட்டை கிழங்கிலிருந்து 1 மூட்டை ஜவ்வரிசி தயாரிக்கலாம்.

1946ஆம் ஆண்டுதான் சேலம் மாவட்டத்தில் முதல் ஜவ்வரிசித் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. அது, தினமும் அரை மூட்டை அல்லது ஒரு மூட்டை ஜவ்வரிசி தயாரிக்கும் நிலையில் தான் இருந்தது. பிறகு நாளடைவில் பற்பல தொழிற் சாலைகள் உருவாகின. 15 ஆண்டுகளுக்கு முன்பே 500 தொழிற் கூடங்கள் ஏற்பட்டு விட்டன.



இந்தக் கூட்டுறவுச் சங்கம் 1933-ல் ஏற்பட்டது. அதற்கு முன்னர் 90 கிலோ கொண்ட ஒரு மூட்டைகிழங்கின் விலை 25ரூபாய் தான். தற்போது 45 ரூபாய் கிடைக்கிறது. கடந்த 2,3 மாதங்களில் ஒரு மூட்டை கிழங்குக்கு ரூ.75 விலை கிடைத்திருக்கிறது. ஒரு மூட்டை ஜவ்வரிசி ரூ. 350 விலை ஆகிறது.

தருமபுரி மாவட்டம் தவிர, ஏனைய மாவட்டத்தினரும்வெளி மாநிலத்தவரும், தமது தேவைக்கு சேலம் மாவட்டத்தைத்தான் அணுக வேண்டியுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டம், பெரியார் மாவட்டம் ஆகிய இடங்களில் உற்பத்தியாகும் ஜவ்வரிசியும் விற்பனைச் சந்தையை நாடி சேலம் மாவட்டத்திற்குத்தான் அனுப்பப்படுகின்றது.



தலைவர்
ஏ. அங்கமுத்து



நிர்வாக மேலாளர்
என்.நடராஜன்

சங்கம்தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே ரூபாய் ஒரு கோடி 30 இலட்சம் விற்பனை வரியாகக் கட்டப்பட்டுள்ளது.

ஜவ்வரிசியைத் தமிழ்நாட்டினரைத் தவிர ஏனைய மாவட்டத்தினர் நன்கு பயன்படுத்துகிறார்கள். தமிழ்நாட்டில் அது விருந்துக்கும் மருந்துக்கும் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளில் பாயசம் தயாரிக்கப் பயன்படுகிறது. நோய் வாய்ப்படும்போது டாக்டர் இடும் உத்தரவுப்படி வீடுகளில் ஜவ்வரிசிக் கஞ்சி தயாரிக்கப்படுகிறது. இந்த நவீன காலத்தில் ஜவ்வரிசியைச் சேர்த்து வடாம் தயாரித்து வருகிறார்கள். ஆனால் மராட்டியம், வங்காளம் ஆகிய மாநிலங்களில் இது தினசரி ஆகாரமாகப் பயன்படுகிறது. மத்தியப் பிரதேசத்தில் ஜவ்வரிசியைக் கொண்டு கிச்சடி, புட்டிங் போன்ற உணவுப் பொருள்களைத் தயாரிக்கிறார்கள். கேரளத்தில் இது அன்றாட உணவு. அங்கு விளைச்சலும் அதிகம்.

ஜவ்வரிசி தயாரிப்பு முழுக்க முழுக்க மனித சக்தியால்தான் இயங்குகிறது. இந்தத் தொழிலில் இயந்திரங்களின் பணி குறைவு. 2 அல்லது 3 இலட்சம் குடும்பங்கள் இந்தத் தொழிலை நம்பி இருக்கின்றன.

இந்தச் சங்கத்துத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு போனஸ் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகளில் தினமும் 3 சிப்டுகள் நடைபெறுகின்றன.

''ஒருவாகன் ஜவ்வரிசியை சேலம் ரயில் நிலையத்தில் ஏற்றி மகாராஷ்டிராவுக்கு அனுப்பினால் 4 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. அதை இங்கு விற்றால் 5 சதவிகிதம் வரி, அத்துடன்

கூடுதல் விற்பனை வரி, சர்சார்ஜ் ஆகியவற்றைக் கட்ட வேண்டியுள்ளது. வெளிமாநில விற்பனைக்கு விதிக்கப்படும் வரியே, உள் மாநில விற்பனைக்கும் வசூலிக்கப்பட்டால் இந்தத் தொழிலில் இன்னும் பல அரும் முயற்சிகள் செய்யலாம்'' என்று கூறுகிறார் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு ஏ. அங்கமுத்து

''தண்ணீர் இல்லாத பகுதியில் இந்தத் தொழிலை விட்டால் வேறு தொழில் கிடையாது. இந்தத் தொழிலைக் கண்ணும் கருத்துமாக்க் கவனித்தால் — கேரளத்துக்கு நாம் மரவள்ளிக் கிழங்கை அனுப்புகின்ற சூழ்நிலை கூட ஏற்பட முடியும்''— என்று தன்னம்பிக்கையுடன் தெரிவிக்கிறார் நிருவாக மேலாளர் திரு என். நடராஜன்.

கடந்த ஆண்டு 27 கோடி ரூபாய்க்கு ஜவ்வரிசி விற்பனை ஆகியுள்ளது. இந்த '82-83 அக்டோபர் மாத இறுதிவரை 21 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கல்கத்தாவில் இந்த நிறுவனத்தின் விற்பனைக் கிடங்கு ஜனவரியில் தொடங்கப்பட உள்ளது. ஐதராபாத், ஆமதாபாத், பம்பாய் அல்லது புனா, குண்டூர் அல்லது விஜயவாடா ஆகிய இடங்களில் விற்பனைக் கிடங்கு தொடங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

துவக்க காலத்தில் கூட்டுறவு வங்கிகள் கூட இந்தச் சங்கத்திற்குக் கடன் உதவி தருவதற்கு அஞ்சியதாகத் தெரிகிறது. தற்போது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கூட, கடன் உதவி செய்ய முன்வருகின்றன.

ஜவ்வரிசித் தொழில் சேலம் மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

## கூட்டுறவு அச்சகம்

அச்சகத் தொழிலில் அரும் பெரும் நன்மைகளை உருவாக்குவதற்காக-சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு அச்சகம், 29-5-1947ல் தொடங்கப்பட்டது. ரூ. 5இலட்சம் பங்கு மூலதனத்துடன் தொடங்கப்பட்ட இதில் 'ஏ' பிரிவு உறுப்பினர் 647 பேர், 'பி' பிரிவு உறுப்பினர் 509 பேர் உள்ளனர்.

> கூட்டுறவு வங்கி, தமிழ் நாட்டிலேயே முதன் முதலாகச் சேலம் மாவட்டத்தில்தான் தொடங்கப்பட்டது. கூட்டுறவு இயக்கம் சிறப்பாகச் செயல்படுவதும் சேலம் மாவட்டத்தில் தான்!

தொடக்கக் காலத்தில் 9 இயந்திரங்கள் இருந்தன. தற்போது அச்சகத்துறை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 4.94 இலட்சம், அரசினரிடமிருந்து கடனாகப்பெற்று இரு இயந்திரங்களும், மத்திய வங்கியில் நீண்ட காலக் கடனாக ரூ.1.71 இலட்சம் பெற்று மூன்று இயந்திரங்களும் வாங்கப்பட்டுள்ளன. ரூ. 75 ஆயிரம் கடன்பெற்று பைண்டிங் பிரிவிற்கு 4 இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன.

அச்சகம் தற்போது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. வளாகத்தில் உள்ள காலி மனையில் பைண்டிங் பிரிவுக்குக் கட்டடம் உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆண்டுதோறும் விற்பனை அதிகரித்து வருவதால் - இலாபமும் அதிகரித்து வருகிறது. 1980-81ல் 34,600 ரூபாயும், 1981-82ல் 1 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாயும் இலாபமாகக் கிடைத்துள்ளது.

1979-80, 1980-81 ஆண்டுகளில், வாடிக்கையாளரான உறுப்பினர் சங்கங்களுக்கு, கொள்முதல் செய்யப்பட்ட தொகையில் 10 சதவிகிதம் ரிபேட் வழங்கப்பட்டுள்ளது. அச்சக ஊழியர்களுக்கு 3 சதவிகிதம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. 1981-82ல் 6 சதவிகிதம் கொள்முதல் ரிபேட் வழங்கவும், ஊழியர்களுக்கு 67,760 ரூபாய்க்கு மேற்படாமல் ஊக்கத்தொகை வழங்கவும், ஒவ்வொரு ஊழியருக்கும் சைக்கிள் வழங்கவும் அனுமதி கிடைத்திருக்கிறது. 1982-83ஆம் ஆண்டிற்கு ஒவ்வொரு தொழிலாளிக்கும் மொத்த சம்பளத்தில் 20 சதவிகிதம் ஊக்கத்தொகை முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது.

அச்சகத்தின் எல்லைக்குட்பட்ட நாமக்கல் அல்லது திருச்செங்கோடு ஆகிய இடங்களில், அச்சுப்பணிகள் அதிகம் தரும் உறுப்பினர் சங்கங்களின் வசதிக்காக அச்சகக் கிளை ஒன்று அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உறுப்பினராக இல்லாத-அச்சகத்தின் விவகார எல்லைக்குள் இருக்கும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களையும் உறுப்பினராகச் சேர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்

1938 ஆம் ஆண்டில், 53 உறுப்பினர்களுடனும் ரூ 1107 பங்குத் தொகையாகவும் கொண்டு தொடங்கப்பட்ட இந்தச் சங்கம் தற்போது 6000 உறுப்பினர்களுடனும் ரூ.28இலட்சம் பங்குத் தொகையாகவும் கொண்டு இயங்கி வருகிறது. தமிழக அரசு தனது பங்கு மூலதனமாக ரூ. 78,000 அளித்துள்ளது. தமிழகத்தில் உள்ள பிரதம சங்கங்களில் எல்லாம் இச்சங்கம் மிகப் பெரியதாகும்.

பருத்திநூல், நூற்பட்டுநூல் ஆகியவற்றைக் கொண்டு இச்சங்கம் உற்பத்தி செய்துவரும் சேலைகள், பெட்ஷீட்கள், ஜரிகை வேஷ்டிகள் சேலம் மாவட்டத்தில் மட்டுமல்ல அகில இந்தியாவிலும் புகழ் பெற்றிருக்கின்றன. சமீப காலத்தில் பாலியஸ்டர் ரகத் துணிகளையும் கைத்தறியில் தயாரிக்கிறது. இதன் உறுப்பினர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு இருந்து வருகிறது என்பது பெருமைக்குரிய செய்தி ஆகும்.

சேலத்திலும், திருநெல்வேலி, திருச்சி, ஈரோடு, நெய்வேலி, கோயம்புத்தூர், பெங்களூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களிலுமாக சில்லறை விற்பனை நிலையங்கள் 16 உருவாக்கி வியாபாரத்தை இச்சங்கம் செய்து வருகிறது. மாநில அளவில் சங்கத்தின் சார்பில் 35 விற்பனை முகவர்களை நியமித்துள்ள இந்நிறுவனம் மொத்தத்தில் ஆண்டுக்கு 1 கோடி ரூபாய் அளவில் வியாபாரம் செய்து வருகிறது.

சொந்தத்தில் ஒரு சாயச் சாலையும் இந்நிறுவனத்திற்கு உண்டு. தனது நிறுவனத்திற்குத் தேவைப்படும்சாயவேலைகளைச் செய்வதுடன், இதர பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நூல்களை சாயமிட்டுத் தருகிறது. 26 தொழிலாளர்களைக் கொண்டு இயங்கும் சாயச்சாலை ஒவ்வொரு மாதமும் 2500 கட்டு நூல்களுக்குச் சாயமிடுகின்றது.

இச் சங்கத்தின் நெசவாளர்களுக்கு ரூ. 10,39,350 செலவில் தமிழக அரசு, வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளது. இதன் மூலம் 200 உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளனர். சங்கத்து உறுப்பினர்களின் வீடுகளைப் புதுப்பிக்கவும், செப்பனிடவும் தமிழக அரசு, ரூ. 37,309 கடனாகவும் மானியமாகவும் அளித்துள்ளது. (மூன்றில் ஒரு பங்கு கடன்; ஒருபங்கு மானியம்). இதன் மூலம் 39 உறுப்பினர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

இச்சங்கம் 49 விசைத் தறிகளை அமைத்திருக்கிறது. காடா, வேட்டிகள், பீஸ் துணிகள் ஆகியவை விசைத்தறிகளால் தயாரிக்கப்படுகின்றன. இச்சங்கத்தில் தயாராகும் ஜவுளிகளில் 40 சதவிகிதம் மாநிலச் சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மாநில சங்கத்திற்குத் தேவைப்படும் வடிவமைப்புகளில் ஜவுளி ரகங்களை உற்பத்தி செய்து தருகிறது இச்சங்கம்.

மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் சுற்றுலாப் பொருட்காட்சிகளில் இந்தச் சங்கம் கலந்து கொள்கிறது. சென்னை எழும்பூரில் உள்ள கைத்தறி மாளிகையில் ஆண்டுதோறும் நடைபெறும் கைத்தறிப் பொருட்காட்சியிலும் இச்சங்கம் அரங்கம் அமைத்து, கைத்தறித் துணிகளை விற்பனை செய்து புகழ்சூட்டிவருகிறது. மொத்தத்தில் தமிழகத்தின் கைத்தறித் துணி வரலாற்றில் அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குத் தனி இடம்-சிறப்பிடம் உண்டு.




> **திரையரங்குகள்**
>
> **சேலம் நகரில் 50க்கு மேற்பட்ட திரையரங்குகள் இருக்கின்றன.**

## கூட்டுறவு வங்கிகள்

சேலம் மாவட்டத்தில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி தற்போது 42 கிளைகளுடன் செயல்படுகின்றது. 6 கிளைகள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன.

சேலம் மாவட்டத்தில், விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களுக்கு இவ் வங்கி, அக்டோபர் '83 முடிய ரூ, 5.53 கோடி, பயிர்க் கடனாக வழங்கியுள்ளது.

வேளாண் பெருமக்கள் தங்களது உபரி வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக 83 அக்டோபர் முடிய, ரூ. 1.57 கோடியை இவ்வங்கி மத்திய காலக்கடனாக வழங்கியுள்ளது. நலிவுற்ற பிரிவினருக்கு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 1.00 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மலைவாழ் மக்களுக்கு 'லேம்ப்' சங்கங்கள் மூலம் 83 அக்டோபர் வரை, பயிர்க்கடனாக ரூ. 11.23 லட்சம் ,மத்திய காலக் கடனாக ரூ. 3.14 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மலைவாழ் மக்களிடம் 4 சதவிகித வட்டி மட்டுமே வசூலிக்கப்படுகிறது. மீதமுள்ள வட்டித் தொகையை அரசு, வட்டி மானியமாக வங்கிக்கு அளிக்கிறது.

நெசவாளர்களுக்கு உதவும் வகையில்-நெசவாளர் சங்கங்கள் 159 மூலம் ரூ. 10.17 கோடி அவர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நூற்பாலை, சர்க்கரை ஆலை, ஊராட்சி ஒன்றியங்கள், பெரிய நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களுக்கு சிக்கன ,கடன் வழங்கும் சங்கங்களின் மூலமாக ரூ. 4.18 கோடி கடன் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

விவசாயச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், வங்கித் தலைமை அலுவலகம், கிளைகள் ஆகியவற்றின் மூலம் ரூ. 1443 கோடி-நகைக் கடனாகப் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பட்டு வளர்ப்பு, நூற்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 3 லட்சம் இவ்வங்கியால் நிதிவசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஹட்கோ திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்காக தாரமங்கலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு இடைக் காலக் கடனாக ரூ. 6.58 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் குறிக்கோளான 20 அம்சத் திட்டத்தின் ஒன்றான திட்டப்படி - தச்சுவேலை, மண்பாண்டத் தொழில்-துணி தைத்தல்-ஆயத்த ஆடை தயாரித்தல்-ரொட்டி தயாரித்தல் -கயிறு பின்னுதல், கூடை முடைதல், ஊறுகாய், அப்பளம் தயாரித்தல் போன்ற சிறு தொழில்கள் செய்வோருக்கு நடப்பு ஆண்டுக்கு ரூ. 2 இலட்சம் கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சேலம் ,ஆத்தூர், நாமக்கல் வட்டங்களில் நடை முறையில் உள்ள பயிர் சுட்டுறுதித் திட்டத்தின்படி வேளாண்மக்களுக்குக் கடன் உதவி செய்கிறது இவ் வங்கி.

சிறப்புக்கால்நடைத் திட்டம், கலப்பினக் கன்று வளர்ப்புத்திட்டம், கோழிப் பண்ணை அமைத்தல், சாண எரிவாயுச் சாதனம் நிறுவும் திட்டம், பட்டு வளர்ப்பு இப்படி பலவகைத் திட்டங்களுக்கும் கடன்உதவி வழங்குகிறது இவ்வங்கி.

தலைமையலுவலகத்திலும் ஏனைய கிளைகளிலுமாக ரூ. 47.87 கோடி இட்டு வைப்பாக வைத்துள்ள இவ்வங்கி-கூட்டுறவுத் துறையில் சிறந்தவங்கியாகத் திகழ்வதுடன்-பொதுமக்களுக்கும் வேளாண் பெருமக்களுக்கும் ஒரு காமதேனு என விளங்குகிறது.



# மல்பரி செடியைப் பாதுகாத்திட......



மல்பெரி செடிகள் பட்டுப்பூச்சி வளர்ப்பிற்காகத் தற்போது பெருவாரியாகத் தமிழ்நாட்டில் குறிப்பாக சேலம், தருமபுரி, பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களில் அதிகமாகவும், மற்ற மாவட்டங்களில் ஓர் அளவும் பயிரிடப்படுகின்றன. அரசின் புதிய பட்டுப் புழு வளர்ப்புத் திட்டங்களாலும் கிணறுகளில் தண்ணீர்ப் பற்றாக் குறை காரணமாகவும், பட்டுக்கு வியாபார ரீதியில் நல்ல விலை கிடைப்பதாலும், மல்பெரி வளர்ப்பு, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது மல்பெரி செடியின் இலை, மொட்டு ஆகியவைகளைத்தாக்கி அழித்து. இலை உற்பத்தியை அதிகமாகப் பாதிக்கிறது.

அசிரியா மோரி என்ற நான்குகால் சிலந்தி மிகவும் நுண்ணியது. சுமார் 1,550 மைக்ரான் நீளமும், நீண்ட புழுப் போன்ற உருவ அமைப்பும், முன் பகுதியில் நான்கு கால்களும் உடையது. மைக்ராஸ்கோப் மூலம்தான் இவற்றைக் காண முடியும். இச்சிலந்திகள் இலைக் காம்புகளுக்கும் தண்டுக்கும் இடையே வளரும் இலை மொட்டுகளின் உள் புகுந்து, தம் முட்டைகளை இட்டு, சாற்றை உறிஞ்சிக் குடித்து வாழ்கின்றன. முட்டைகள் இரண்டு மூன்று நாட்களில் பொரித்துக் குஞ்சுகளாகின்றன. இரண்டு குஞ்சுப் பருவங்கள் கடந்த பின் சிலந்திகள் வளர்ந்த நிலைமையை அடைகின்றன. குஞ்சுகளும் தாய்ச் சிலந்திகளும் மொட்டுகளின் உள் அமர்ந்து சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் மொட்டுகள் பழுப்பு, நிறமடைந்து பின் காய்ந்துவிடுகின்றன. இதனால் செடியின் கிளைப்பும், இலைகளின் உற்பத்தியும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. செடிகள் கிளைக்காமல் நீண்ட குச்சிகளாக நின்றுவிடுகின்றன.

இச்சிலந்திகள், மொட்டுகளின் உள்ளே வாழ்வதாலும், இச்செடிகளின் குச்சிகளை வெட்டி நட்டு வளர்ப்பதாலும், மிகவும் சுலபமாகவும் வேகமாகவும் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் வயல்களிலும் பரவி வருகின்றன. வளர்ந்த செடிகளில் இச்சிலந்திகள் இருந்தால் இவற்றை மருந்திட்டு அழிப்பது சுலபமாயினும், மருந்திட்ட செடிகளில் இருந்து இலைகளைப் பறித்துப் பட்டுப்பூச்சிக்கு உணவாக அளிக்க முடியாது. ஆகவே, செடிகளைப் பயிர் செய்யும் முன்பே இச்சிலந்திகளை அழித்துவிட்டால் மிகுந்த பலன் கிட்டும். இதனைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்ததில் கண்டுபிடித்த வழி முறை வருமாறு:

**அழிக்கும் முறை:**

புதிய மல்பெரி செடிகள் பயிர் செய்ய எடுத்து வரும் நடவுக் குச்சிகளை 0.1 சதம் நுவாக்ரான் (சுமார் 2.5 மில்லி மருந்து 1 லிட்டர் தண்ணீரில்), அல்லது 0.1 சதம் டைமிக்ரான் (சுமார் 1 மில்லி மருந்து 1 லிட்டர் தண்ணீரில்) கரைசலில் இரண்டு நிமிடம் நனைத்துப் பின்நடவு செய்வதால், மொட்டுகளின் உள் மறைந்திருக்கும் இச்சிலந்திகளை அழிக்கலாம்.

இவ்வாறு செய்வதால் நடவுக் குச்சிகளின் முளைப்புத் திறனும் அதிகரிக்கிறது. இந்த எளிய முறையை விவசாயிகள் கடைப்பிடித்தால் சிலந்திப் பூச்சியின் தொல்லைகள் மல்பெரிச் செடியில் அறவே இராது.





# சேலம் மாவட்டத்தில் மீன் வளம்



மேட்டூர் நீர்த்தேக்கம் இந்தியாவிலுள்ள மிகப் பெரிய நீர்த்தேக்கங்களில் ஒன்றாகும். இதன் பரப்பு சுமார் 60 சதுர மைல்கள். இந்நீர்த்தேக்கம் 1934 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதன் அதிகபட்ச நீர்ப்பிடிப்பு 120 அடிகள்.

மேட்டூர் நீர்த்தேக்கம் மீன் வளப்பணிகளுக்காக 1939 ஆம் ஆண்டு மீன்துறையினரால் எடுத்துக்கொள்ளப்பட்டது. மீன்துறை மேட்டூர் அணையில் மீன் வளத்தை அபிவிருத்தி செய்வதில் குறிப்பிடத்தக்க சாதனை அடைந்துள்ளது. இங்கு நாள் ஒன்றிற்குச் சுமார் 1 டன அளவிற்கு மீன் பிடிக்கப்பட்டு வருகிறது. திட்டமிட்டு முறைப்படியாக மீன் குஞ்சுகளை இருப்புச்செய்து மீன் வளத்தைப் பாதுகாத்து வந்ததே இம்முன்னேற்றத்திற்குக் காரணம் என்று கூறினால் அது மிகையாகாது.

இந்நீர்த்தேக்கத்தில் கட்லா, ரோகு, மிர்கால், போன்ற பெருரகக் கெண்டை மீன்களும், கெளுத்தி வாளை போன்ற மீன் இனங்களும் பெருமளவில் பிடிபட்டு வருகின்றன. இங்கு பிடிபடும் தோப்பா, ரோகு, மிர்கால் ஆகிய பெருரகக் கெண்டை மீன்கள் ரயில் மூலம் கல்கத்தா நகருக்கு அனுப்பப்பட்டுவருகின்றன தோப்பா, ரோகு மிர்கால் ஆகிய மீன்கள் நீர்த்தேக்கத்தில் மேல் மட்டப் பகுதிகளில் இனப்பெருக்கம் செய்கின்றன. எனவே இப் பகுதியில் மீன்பிடிப்பு தடைசெய்யப்பட்டு இத்துறையினரால் தீவிர ரோந்துப்பணி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

மேட்டூர் அணையின் இருகரைகளிலுமுள்ள கிராமங்களில் வசிக்கும் சுமார் 750 மீனவக் குடும்பங்கள் மீன்பிடி தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றன. இவர்கள் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளார்கள். இவர்களின் நலனைக் கருதி இந் நீர்த்தேக்கத்தில் மீன்பிடிப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. மூன்று வகையான மீன்பிடி உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

பரிசலில் சென்று வலை உபயோகித்து மீன்பிடிப்பதற்கு உரிமத்தொகை ரூ. 125ம், கரையிலிருந்து வலை உபயோகித்து மீன்பிடிப்பதற்கு ரூ. 35 ம் தூண்டில் மூலம் மீன்பிடிப்பதற்கு ரூ. 5ம் உரிமங்கள் வழங்க விதித்துள்ள நிபந்தனைகளின்படி மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்கள் அனைத்தையும் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும்.

**பெருநீர்த் தேக்க மீன்வளம்:**

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இயற்கையில் மீன்குஞ்சுகள் உற்பத்தியாவதைத் தவிர தூண்டுதல் முறையில் நல்ல தரமுள்ள பெருங்கெண்டை மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ஆண்டு தோறும் இருப்புச் செய்யப்பட்டு மீன்வளம் குன்றாது பாதுகாக்கப்படுகிறது. இந்த ஆண்டு இதுவரை 35 லட்சம் விரலளவு மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப்பட்டுளளன. இந்நீர்த்தேக்கத்தில் ஆண்டுதோறும் 600 டன்கள் மீன்பிடிப்பு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பிடிக்கப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 180 டன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. மேட்டூர் நீர்த்தேக்கத்தில் பிடிக்கப்படும் மீன்களில் கிலோ ஒன்றிற்கு ரூ. 0.50 முதல் தரத்திற்கும் இரண்டாம் தரத்திற்கு ரூ.0.40 வீத

மும் .மூன்றாம் தரத்திற்கு ரூ. 0.35 வீதமும் மீன்பிடி உரிமைதாரர்களிடமிருந்து உரிமைப் பங்குத்தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணை மற்றும் சேடர்பாளையம் ஆகிய பகுதிகளில் இயற்கை நீர்நிலைகளிலிருந்து மீன்குஞ்சுகள் சேகரம் செய்யப்பட்டு அவைகள் நீர்த்தேக்கங்கள் மற்றும் துறை நீர்நிலைகளில் இருப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கென இவ்வாண்டு 11 இலட்சம் மீன் குஞ்சுகள் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இதுவரை 6 லட்சம் மீன் குஞ்சுகள் சேகரம் செய்யப்பட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்யப்பட்டது.

**தூண்டுதல் இனவிருத்தி நிலையம்:**

செயற்கை முறையில் மீன்களுக்கு ஊசிபோட்டு மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்வதற்கென மேட்டூர் அணையில் தூண்டுதல் இனவிருத்தி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

1983-84ஆம் ஆண்டிற்கு நுண் மீன் குஞ்சுகள் உற்பத்திக்கென 150 இலட்சம் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1983 அக்டோபர் திங்கள் முடிய 166இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. உற்பத்தி செய்யப்பட்டுள்ள நுண்மீன் குஞ்சுகளிலிருந்து விரலளவு மீன் குஞ்சுகள் வளர்த்தெடுக்கப்பட்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருப்புச் செய்யப்பட்டுள்ளது. மேலும் அம் மீன்குஞ்சுகளிலிருந்து வளர்த்தெடுக்கப்படும் விரலளவு மீன் குஞ்சுகள் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, வெளிக்கோட்டம், மற்றும் தனியாருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

**கட்டுமானப் பணிகள்**

மேட்டூர் அணை தூண்டுதல் இனவிருத்தி நிலையத்தில் மீன் குஞ்சு உற்பத்திப்பணிக்களுக்கென ஒரு கண்ணாடிக்குடுவைப்பொரிப்பகம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. வளர்ந்து வளரும் மீன் குஞ்சுகளை இருப்புச் செய்ய தேவைக்கேற்ப மீன்பண்ணையில் கூடுதலாக 20 மீன்வளர்ப்பு நாற்றங்கால்களும், ஒரு வட்ட வடிவமைப்புக் குளமும் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சிப்பணிகளுக்கென ஒரு ஆராய்ச்சிக் கூடம் மற்றும் ஒரு கிடங்கறையும் கட்டிமுடிக்கப்பட்டு ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பனிக்கட்டி நிலையம்**

மீன் எளிதில் கெட்டுப் போகக் கூடிய உணவுப்பொருள். ஆகையால் அதனைக் கெடாமல் பாதுகாத்து வெளியிடங்களுக்கு அனுப்பப் பனிக்கட்டி மிக அவசியமாகும். மேட்டூர் அணையில் மீன் துறைக்குச் சொந்தமான 5 டன்கள் எடையுள்ள பனிக்கட்டி நிலையம் இயங்கிவருகிறது. இந்நிலையம் 1963ஆம் ஆண்டு முதல் செயல்பட்டுவருகிறது. இந்நிலையத்தில் நடப்பு நிதியாண்டில் அக்டோபர் 83 திங்கள் முடிய 4.55 டன் பனிக்கட்டி உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை மூலம் ரூ. 1,09,990 துறைக்கு வருவாய் கிட்டியுள்ளது.

**மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்**

கூட்டுறவு இயக்கம் மூலம் மீனவர்களின் நலனைப் பாதுகாக்க மீனவர்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவைகள் செயல்பட்டு வருகின்றன. அரசு மீனவர்களுக்கு வழங்கும் சலுகைகள் அனைத்தும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் 10 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், மேட்டூர் அணையில் ஒரு மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கமும் இயங்கி வருகிறது. மேற்குறிப்பிட்ட 10 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சொந்தமான குளங்களை குத்தகை மூலம் எடுத்து மீன்பிடிப்புச் செய்து விற்பனை செய்துவருகிறது. இடைப்பாடி மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நடைமுறை மூலதனக் கடனாக ரூ. 5000, 1982-83ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் தமிழ்நாட்டில் இயங்கி வரும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டு வருகிறது.

சிறப்பாகச் செயல்பட்டதற்காக1977-78மற்றும்1978-79ஆம் ஆண்டிற்கு அரசு அளித்த வெற்றிக் கேடயத்தையும் இது பெற்றுள்ளது. இச்சங்கம் உறுப்பினர்களிடமிருந்து மீன்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகிறது. இச்சங்கம் சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் சில்லரை விற்பனை நிலையங்களைத் துவக்கி, மீன்களை விற்பனை செய்துவருகிறது. தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மற்றும் தமிழக அரசால் நிதியுதவி மற்றும் மானியம் வழங்கப்பட்டு இச்சங்கத்திற்குச் சொந்தமாகக் கிடங்கறை கட்டி முடிக்கப்பட்டும் மற்றும் ஊர்திகள் வாங்கப் பட்டும் செயல்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்திலுள்ள மிகச் சிறந்த கோடை வாசஸ்தலமாகிய ஏர்க்காடும் மீன்துறையினரால் பராமரிக்கப்பட்டுவரும் (வண்டிராமன்) ஏரியில் ஆண்டு ஒன்றிற்கு சுமார் ஒரு டன் மீன்கள் பிடிக்கப்பட்டு, அங்குள்ள பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அடைந்துள்ள பெருமை



சேலம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உள்ளது. இங்கு 'கம்மியர் (மோட்டார் வண்டி)' பிரிவில் பயிற்சி பெற்ற திரு யேசுதாஸ் என்பவர் 1982-ஆம் ஆண்டு நடைபெற்ற 19-வது அகில இந்தியத் திறனாய்வுத் தேர்வில் இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளார்.

இப்பயிற்சி நிலையத்தில்10 தொழிற் பிரிவுகளில் மொத்தம் 616 பயிற்சியாளர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மாலை நேரங்களில் மாநிலச் சிறப்புப் பயிற்சித் திட்டத்தில் நெசவாளர்கள் மற்றும் பொற்கொல்லர்கள் 40 நபர்களுக்கு 'கடைசல் மற்றும் பொறிப்பகுதி பொருத்துதல்' பிரிவிலும் 'கருமான் மற்றும் பொறிப்பகுதி பொருத்துதல்' பிரிவிலும் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகின்றது.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 60 நபர்களுக்கு மாலை நேரங்களில் காயில் கட்டுதல், 'இரண்டு சக்கரத் தானியங்கி பழுது பார்த்தல்' தூவான், தெளிப்பான் பழுது பார்த்தல், மின்சார ஒயரிங்' ஆகிய பிரிவுகளில் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.



# சேலம் அருங்காட்சியகம்

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை தேசியக் கவிஞராக மட்டுமல்ல; தலைசிறந்த ஓவியராகவும் திகழ்ந்தார். இதற்கு எடுத்துக்காட்டுச் சான்று வேண்டுமா? சேலம் அரும்பொருட்காட்சியகத்திற்குச் சென்றால் அதைப் பார்க்கலாம்.

ஆம்; நாமக்கல்லார் வண்ணந்தீட்டிய ஆளுயர மகாத்மா காந்தியடிகள் ஓவியமொன்று அங்கே அணிசெய்கிறது.



1976ல் தொடங்கப்பட்ட இந்த அரும் பொருட்காட்சியகத்தின் காப்பாளராகத் திரு.க.இலட்சுமி நாராயணன் இருக்கிறார். இந்திய விடுதலைக்குப் பின், மாவட்ட அளவில் உருவாக்கப்பட்ட முதலாவது அருங்காட்சியகம் என்ற பெருமை இதற்குண்டு.



அடுத்தடுத்துள்ள இரு தனி வாடகைக் கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள இதில் — தொழில் வளர்ச்சி, தாவர இயல், புவி அமைப்பு இயல், விலங்கியல், தொல்பொருளியல், போர்க் கருவியகம், அலங்காரக் கலை இயல், காட்சியியல், ஓவியங்கள், மரவகை எனப் பல்வேறு தலைப்புகளின் கீழே பழங்காலப் பொருட்கள் பக்குவமாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளன.

கொல்லி மலையாளிகள், பெரிய மலையாளிகள், பச்சை மலையாளிகள் என - மாவட்ட மலைவாழ் மக்கள் நாகரிகம், வாழ்க்கை முறை, பயன்படு பொருட்களையெல்லாம் இந்த அரும்பெரும் பொருட்காட்சியகத்தில் படங்களாகவும் பொருட்களாகவும் வைத்துள்ளனர்.

9-ஆம் நூற்றாண்டைய கற்சிலைகளிலிருந்து ஒவ்வொர் நூற்றாண்டையும் சேர்ந்த சிற்பச் சிலைகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள இங்கே-சூரியக் கடவுள், புலிக்குத்திக்கல் போன்ற நூதன கற்சிலைகளும் காணப்படுகின்றன.

'கடையெழு வள்ளல்களில் ஒருவன், கொல்லிமலைக் கொற்றவன், மறவர் தலைவன் வல்வில் ஓரி-சங்க காலத்தில் ,அகம்,புறம், நற்றிணைப் பாடல்களில் வ பரணர், கழைதின் யானை பெருஞ்சித்திரனார், கல்ல னார், கபிலர் போன்றோர பாடப்பெற்ற பெருமையுடை வன்; கோவலூர் குறுநில னன் திருமுடிக்காரியுடன் நடத்திய போரில் வீரமணம் அடைந்தவன்..'-என்பதுபோன்ற சேலம் மாவட்டப் பழம்பெருமை விளக்கும் வரலாற்றுக் குறிப்புகளும் ஆங்காங்கே எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன

வட்டாரப் பயிற்சிக்கும் வகை செய்வதாக இருக்கும் இந்த அரும் பொருட்காட்சியகத்தில் அவ்வப்போது கருத்தரங்குகள் மட்டுமல்ல; ஆய்வுத் துறையிலே ஊக்கமுடைய மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளும் நடக்கின்றன.

—ராஜு

## நீளமான கசிவு நீர்க் குட்டை

வறட்சி நிவாரணப் பணிகளில் முதன்மையான இடம் பெறுவது கசிவு நீர்க்குட்டையாகும். சேலம் மாவட்டத்தில் உருவாக்கப் பட்டுள்ள கசிவு நீர்க்குட்டை மிகப் பெரியது ஆகும். 800 அடி, 1000 அடி கரை போடப்பட்டுள்ள பெரிய கசிவு நீர்க்குட்டைகளும் இங்கே உள்ளன.





# குப்பை மேனியின் மருத்துவ குணங்கள்

ஏ. ஆர். என். துரைராஜ்,
ஆர்.ஐ.எம்.பி.

நம் மூதாதையர்கள் உடல் நலத்தையே ஒப்பற்ற செல்வமாகக் கருதி வந்து இருக்கிறார்கள். அதனால் தான், 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று கூறி அதனைப் போற்றி இருக்கிறார்கள்.

இயற்கை அன்னை தந்த மூலிகைச் செல்வங்களே நோய் தீர்க்கும் நன் மருந்துகளாம்! அவை உணவே மருந்து; 'மருந்தே உணவு' என்ற தத்துவத்திற்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. அத்தகைய மூலிகைகளில் குப்பைமேனியும் ஒன்று.

தோட்டங்களிலும், வழியோரங்களிலும் இது வளர்ந்திருப்பதை யாவரும் காணலாம். இது செடி உயரமுள்ளது.

குப்பைமேனியின் கீரையை ஆமணக்கு எண்ணெயில் தாளிதம் பண்ணி, ஒரு மண்டலம் கற்ப முறையாய் உண்டால் வாய்வுடனே சேர்ந்த பொல்லாத சேத்துமப் பிணிகள் யாவற்றையும் போக்கி, உடல் நலத்தை உண்டு பண்ணும்.

இலைமே னியயிறி விளக்கெண்
　　ணெய் யின் மெய்
யட்டியிலை யேனியை யா

தந்தமூலப் பிணிதீத் தந்திடு
　　புண் சர்வவிடம்
உந்துகுன்மம் வாதம் உதிரமு-
　　லந்தினவு
சூலஞ்சு வாசம் தொடர்பீந
　　சங்கபம் போம்
ஞாலங்கொள் மேனியத னால்

(தேரையர்குறிப்பு

**குப்பை மேனி**

காந்திமெ யிலைக்கறி கனிவுட
　　னயில மேய்
யாந்திமிர் வாதநோ யாதிகள்
　　போய் விடும்.

குப்பை மேனி இலையை உணவு முறையில், சமைத்துப் பிரியமுமுடன் சாப்பிட்டுவருபவரின் உடம்பிலுள்ள திமிர்வாதம் முதலிய நோய்கள் நீங்கும்.

**தீரும் வியாதிகள்**

தீப்பட்டரணம், பல்லடிநோய், பயிர்வகையில் நஞ்சு, வயிற்றுவலி வளிநோய், மூலம்,,நமைசசல் குத்தல் இரைப்பு, மூக்கில் நீர் வருதல், கோழை, தலைவலி, மேகரணம் சொறி சிரங்கு ஆகியவை தீரும்.

**நோய் தீர்க்கும் முறையும் பயன் படுத்தும் முறையும்**

இலையையும், உப்பையும் சேர்த்து அறைத்துச் சொறி, சிரங்குகளுக்குத் தேய்த்துக் குளித்துவர அவை குணமாகும்.

இதனுடைய இலைச் சாற்றை எண்ணெய்யுடன் சேர்த்துக் காய்ச்சிவலி நோய் உள்ளவர்கள் தேய்த்து வரலாம்.

இதனுடைய இலையை அறைத்து ரணம், நஞ்சுக்கடி, ஆகியவற்றிற்குப் போடலாம். (அல்லது) இலையை மஞ்சளுடன் சேர்த்து அறைத்துப் பூசலாம். இதன் இலையை அறைத்தும் சுண்ணாம்புடன் கலந்து நோயுடன் கூடிய கீல் வீக்கங்களுக்கும், கட்டிகளுக்கும் பூசலாம். காது வலிக்குக் காதைச் சுற்றிப் பூச நோய் தணியும்.

இலையுடன் உப்புச் சேர்த்துச் சாறு பிழிந்து, தினந்தோறும் காலையில் மூக்குத் துவாரங்களில் நசியமிட்டு,குளிர்ந்த நீரில் தலை முழுகிவர, வெறிநோய் நீங்கும்.

இதன் இலையைச் சாறு பிழிந்து, இத்துடன் சிறிது வேப்பெண்ணேய் கலந்து இறகில் தோய்த்துத் தொண்டையில் அல்லது உள்நாக்கில் தடவ, சிறு குழந்தைகளுக்கு வயிற்றில் தங்கி இருக்கும் கோழைகட்கு வாந்தியினால் வெளிப்படும்.

இதனுடைய சாற்றையே தலைவலிக்குத் தடவலாம். இலைப் பொடியைப் படுக்கைப்புண்களுக்களுக்கு வைத்துக்கட்ட புழுக்கள் சாகும்.

இதன் இலையை அரைத்து மேகப் புண்களுக்கு வைத்துக் கட்டலாம்.இதன் இலையைக் குடிநீரிட்டுச் சிறிது உப்புச்சேர்த்துக் குடிக்க, மலம் எளிதில் கழியும்.

வேரைக் குடிநீரிட்டு அல்லது வெந்நீர் விட்டு இடித்துச் சாறு பிழிந்து, தக்க அளவில் கொடுக்க கழியச் செய்யும்.

வேரை அறைத்து சுமார் ஒரு கொட்டைப் பாக்கு அளவு நீரிற் கலந்து ஒருநாள் கொடுத்து உப்பில்லாத பத்தியம் வைக்க எலிவிடம் தீரும். இந்த இலையினால் செய்யப்பட்ட தைலத்தை, வாத நோய்களுக்கு மேற்பூச்சாக இடலாம்.

குப்பைமேனி இலை அரியதொரு மருத்துவப் பொருளாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை

**கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் குழாய்க் கிணறு பராமரிப்புப் பயிற்சி முகாம்.**

சேலம் மாவட்டம்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குடிநீர் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளைப் பராமரிப்பு செய்யும் பராமரிப்பாளர்களுக்கு 11-10-83 மற்றும் 12-10-83 ஆகிய தேதிகளில் பயிற்சி முகாம் நடைபெற்றது. ஒன்றிய ஆணையாளர் திரு. எஸ். அப்துல்பாஷா தலைமை வகிக்க, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக உதவி நிருவாகப் பொறியாளர் திரு. ஜி.கலிய பெருமாள் பயிற்சி அளித்தார். நிர்மலா மேல்நிலைப் பள்ளி பட்டமேற்படிப்பு ஆசிரியர்கள் திரு பிச்சைமுத்து, திரு அமல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். பயிற்சி முகாம் ஏற்பாடுகளை ஊராட்சி வளர்ச்சி அலுவலர் திரு. வ. தண்டாயுதபாணி செய்திருந்தார். இருதினங்களுக்கும் பயிற்சியாளர்களுக்கு மதிப்பு ஊதியமும், ஸ்பேனர் செட் ஒன்றும் வழங்கப்பட்டன.





# பேராசிரியர் ஆ. கார்மேகனார்

இல. பழனியப்பன்

இலக்கிய மழை பொழிந்து, தமிழுக்குச் சோதனை வந்த காலத்தில் நக்கீரராகயிருந்து மொழி காத்த பேராசிரியர் கார்மேகனார் தமிழ்த்தாயின் தவப்புதல்வராவர். பாமரர்க்கும் பண்டிதர்க்கும் பாலமாய் விளங்கிய பேராசிரியர். கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர் அல்லர். தமிழ் மீது இருந்த தணியாத வேட்கையால் மதுரை தமிழ்ச் சங்கத்தில் படித்து அந்தத் தமிழ்ச் சங்கப் புலவராகவும் திகழ்ந்த பெருமைக்குரியவர்.

இராமநாதபுரம் மாவட்டம் அபிராமம் என்ற பேரூரின் பகுதியான அகத்தாரிருப்பு என்னும் சிற்றூரில் ஆயர்பாடிக்கோனார் இருளாயி அம்மாள்தம்பதியருக்கு 1889ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தவப்புதல்வனாகப் பிறந்த கார்மேகனார், தொடக்கக் கல்வியைதன்சொந்த ஊர்ப்பகுதியிலே முடித்துவிட்டு 1904ஆம் ஆண்டு முதல் எட்டாண்டுக் காலம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் படித்துப்பட்டம் பெற்றவர். தமிழில் பேசினால் இழிவு, தமிழாசிரியர் பணி என்றால் தலைக்குனிவு என்று தமிழினம் தாழ்வு மனப்பான்மையால் தளர்ந்துகிடந்த காலத்தில், தான் கற்றகல்வியால்-மொழியுணர்வால்-தாய் மொழிப் பற்றால் புதியதோர் மறுமலர்ச்சியினை ஏற்படுத்தித் 'தமிழ்கூறும் நல்லுலகம்' தலை நிமிர்ந்து வாழவித்திட்டார்.

'நவில் தொறும் நூல் நயம்' என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக இவரது இலக்கியப்படைப்புகள் இன்றளவும் சான்றாகத் திகழ்வதே இவரது புலமைக்கும், திறமைக்கும் சான்றாகும். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முப்பத்தேழு ஆண்டுகள் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராயிருந்து பல தமிழ் அறிஞர்களை உருவாக்கியது இவரது தனித்திறமைக்கும், பொது அறிவுக்கும் மிகப் பெரிய சாதனையாகும்.

அந்தக்கால வழக்கப்படி 1912-ஆம் ஆண்டு மே திங்களில் க. பத்மாச்சனியம்மாள் இவரது வாழ்க்கைத் துணைவியாகும் பேறுபெற்ற பெருங் குடும்பத்தில் பிறந்தார். ஐயா அவர்களுக்குப் பல்லாற்றானும் துணைவியாகயிருந்தார்.

மூன்று மகன்களுக்கும் மூன்று மகள்களுக்கும் தந்தையான நம் பேராசிரியரின் தமிழ்ப் பணிக்கு குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் ஒத்துழைத்தனர். குடும்பக் கவலையால் இந்த மாமேதை தளர்ந்துவிடாமல் எல்லோரும் அவரது பணியில் தாங்களும் ஈடுபட்டு இன்றளவும் அவர் தொடங்கிய பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருவது மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

தமிழ் வளர்த்த தனிப் பெருங் காவலர் பாண்டித்துரைத்தேவரவர்களின் அரவணைப்பில் தொடங்கிய தமிழ்ப்பணி, இறுதி மூச்சுவரை தொடர்ந்து முப்பத்தேழு ஆண்டுக்காலம் முத்தமிழை அமெரிக்கன் கல்லூரியில் முழக்கமிட்டு அமைதியாக ஆர்ப்பாட்டமின்றி வளர்த்த பெருமை நம் பேராசிரியர் அவர்களைமட்டுமே சாரும். 'விளையும் பயிர் முளையிலே' என்னும் பொன்மொழிக்கேற்ப மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வில் முதலிடம் பெற்று புதுக்கோட்டை மன்னரின் பொற்பதக்கத்தைப் பாண்டித்துரைத் தேவரவர்களிடமிருந்து பெற்ற



பெருமையும் இவரையே சேரும். இத்தங்கத்தைத் தரணிக்கு மெரு கிட்டுக்காட்டிய இவரது ஆசிரியர்கள் திரு.அ. கோபாலய்யர், திரு. சுந்தரேசுவர அய்யர், திருவாடுதுறை மகாவித்வான் சே.ரா சுப்பிரமணியக்கவிராயர், திரு. நாராயண அய்யங்கார் ஆகியோர்.

நாம் ச... கல்வி வருங்காலத் தலைமுறைக்கு நன்கு பயன்பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தால் பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார்கள். இவற்றில் பலபல்கலைக்கழகங்களில் பாடப் புத்தகமாக வைக்கப் பெற்று, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றி உள்ளன.

**நூல்கள் விவரம்:**

நல்லிசைப்புலவர்கள்
கண்ணகிதேவி
ஆபுத்திரன் வரலாறு
காப்பியக்கதைகள்
மலைபடுகடாம் ஆராய்ச்சி
மதுரைக்காஞ்சி ஆராய்ச்சி
பாண்டியன் நெடுஞ்செழியன்
புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி.
ஒட்டக்கூத்தர் - மூவருலாவைப்பற்றிய ஆராய்ச்சி.
கூலவாணிகன் சாத்தனார். ஆராய்ச்சிக் கட்டுரை.
நளவெண்பாவிற்கு-முதற்பகுதி விருத்தியுரை.
கலவழியிற் குறித்த கழுமலம்-ஆராய்ச்சி
குறுந்தொகையில் ஒரு பாட்டின் உரை ஆராய்ச்சி
தமிழ்மொழியின் மறுமலர்ச்சி.

சிறந்த எழுத்தாளர்கள் எல்லோரும் கவிஞர்களாக இருப்பதில்லை. அவ்வாறே சொற்பொழிவாளராகயிருக்கும் பலர் எழுத்துத்துறையில் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதில்லை. ஆனால் நம் பேராசிரியர் அவர்கள் இவற்றிற்கெல்லாம் விதிவிலக்கு. இயற்கையிலேயே தன்னிடம் அமைந்திருந்த செய்யுள் இயற்றும் திறனை மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பயின்றபோது வளர்த்துக் கொண்டார். இராமநாதபுரம் மன்னர் சேதுபதி யவர்கள் முன்னிலையில் பல பாடல்களைப் பாடிப் பாராட்டுப் பெற்றார்.

1928ல் கோவில்பட்டியில் நடைபெற்ற திருவிடர் கழக ஆண்டுவிழாவில் பேராசிரியர் ''பண்டைத்தமிழர் நாகரிகம்'' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்ட செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், ''கார்மேகமே உமது சொல்மாரியால் நாங்கள் உளங்குளிரப் பெற்றோம்'' என்று உளமாரப் பாராட்டினார்கள். அவ்வாறே அதே ஆண்டில் ''தமிழ் இலக்கியம்'' என்கின்ற தலைப்பில் விபுலானந்த அடிகளாரின் பாராட்டையும் பெற்றார். தொடர்ந்து 1944ல் மதுரையில் நடந்த முத்தமிழ் மாநாட்டில் ''திருவள்ளுவர்'' என்னும் தலைப்பில் தலைசிறந்த ஆராய்ச்சிச் சொற்பொழிவும், மதுரை திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவும் நிகழ்த்தி தன் நாவன்மையால் அனைவரையும் மகிழ வைத்தார்.

தமிழ் இலக்கிய உலகிலும், கல்வித்துறையிலும்கொடிகட்டிப் பறந்த பேராசிரியர் அவர்களைப் பல பதவிகள் நாடி வந்தது இயற்கைதானே!

சென்னைப் பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழுவில்தொடர்ச்சியாக 21 ஆண்டுகள் உறுப்பினராக இருந்து தொண்டாற்றிய பெருமை இவரைப்போன்ற ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்த பெருமையாகும். அவ்வாறேதேர்வாளர் குழுவிலும் 19 ஆண்டுக் காலம் உறுப்பினராகவும், தலைவராகவும் நடுநிலை தவறாது சீரிய தொண்டாற்றியுள்ளார்.

அவ்வாறே திருவாங்கூர், அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களிலும் பல ஆண்டுகள் தேர்வாளர் குழுக்களில் தொண்டாற்றியுள்ளார்.

எஸ்.எஸ்.எல்.சி தலைமைத் தேர்வாளர், பணியாளர் குழுத் தேர்வாளர், மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுக்குழு, அரசாங்கக் கல்லூரிகளின் தேர்வுக்குழு இப்படி அனைத்திலும் பல்வேறு நிலையில் தூய தொண்டாற்றியுள்ளார்கள்.

இத்துணை தகுதியிருந்தும் மிக அடக்கமாக எளிய வாழ்வு வாழ்ந்தவர் பேராசிரியர். சிறந்த ஒழுக்க சீலர். மற்றவர்க்குக் கெடுதல் செய்வதைக் கனவிலும் வெறுத்தவர். தமிழ்மொழியைப் பழிப்பவர்களைச் சாட அந்தக் காலத்தில் சங்கநாதம் முழங்கிய தமிழ்ச் சிங்கம் அவர். கம்பீரமான உருவம், காண்போரைக் கவரும் மிடுக்கு, எளிய வாழ்வு இவற்றின் மொத்த உருவாய்த் திகழ்ந்த பேராசிரியர் 1957ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். ஆனால் அவரது தமிழ் முழக்கத்தை அவரது படைப்புக்கள் வாயிலாகவும், அவரது குடும்பத்தார் மூலமாகவும், அவர் உருவாக்கிய தமிழ்ச்சான்றோர் மூலமாகவும் தமிழ்கூறும் நல்லுலகம் இன்றளவும் நுகர்ந்து இன்பத்தில் திளைக்கிறது.

கார்மேகனார் போலத் தமிழ் வளர்ச்சியில் நாம் அரிமாநோக் கோடு பீடு நடைபோடுவதே அவருக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

தமிழரசு
1.2.1984 இதழ்
கன்னியாகுமரி
மாவட்டச் சிறப்பிதழ்





# அதிக மகசூல் பெற ஐ.ஆர். 50 நெல்

மு. பிச்சையா,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர், வட ஆர்க்காடு மாவட்டம்.

தமிழ்நாட்டில் தஞ்சைக்கு அடுத்தபடியாக நெல்விளைச்சல் உள்ளது வட ஆர்க்காடு மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் சம்பா சாகுபடியில் நெல் விளைச்சல் எப்படி உள்ளது என்பதைக் கண்டறிய வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு டி.ஆர். பத்மநாபராவ், ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர்கள் பிரயாணத்தில் செய்தியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டோம்.

வேலூரிலிருந்து புறப்பட்ட நாங்கள் ரத்னகிரியிலிருந்து தொடங்கி ஆர்க்காடு மற்றும் வாலாசா வட்டாரத்தைச்சேர்ந்த கிராமங்களில் சம்பாப் பருவத்தில் பயிர் செய்யப்பட்டிருந்த நெல் வயல்களில் குறிப்பாக ஐ.ஆர்.50 பயிர் சாகுபடி செய்யப்பட்டிருந்த வயல்களைக் கண்டோம்.

கடப்பேரி கிராமத்தைச் சேர்ந்த வக்கீல் எ.மணி என்ற விவசாயி கூறியது எங்களை வியப்பில் ஆழ்த்தியது. ஒரு ஏக்கரில் ஐ.ஆர்.50 பயிரிட்டு 3 டன் நெல் அறுவடை செய்ததாகக் கூறினார். மேலும் ஐ.ஆர். 50 நெல் 90 நாட்களில் விளைந்துவிடுவதாகவும் ஏக்கருக்கு செலவு ரூ 800 தான் வருவதாகவும் நல்ல லாபம் தரக்கூடியதாகவும் உள்ளது என்று குறிப்பிட்டார்.

அதைக்கடந்து சிறுகரும்பூர் என்ற கிராமத்திற்குச் சென்ற பொழுது கே.உமாபதி என்ற விவசாயி 2.5 ஏக்கரில் 120 மூட்டை நெல் அறுவடை செய்ததாகக் கூறினார். கே.சம்பத் என்ற நிலச்சுவான்தார் கூட ஐ.ஆர்.50 நெல் நல்ல மகசூல் தருவதாகவும் வருகின்ற நவரைப்பருவத்தில் பயிரிடப் போவதாகவும் கூறினார்.

அங்கிருந்து காவேரிபுரம் கிராமம் சென்றபொழுது தணிகாசலம் என்ற விவசாயி ஏக்கருக்கு செலவு போக ரூ. 4,000 லாபம் தருவதாகவும் இறவைப் பயிருக்கு மிகவும் ஏற்றதாகவும் கூறினார்.

சிறுநமல்லி கிராமத்தைச் சேர்ந்த எஸ்.கே. கன்னையா என்ற விவசாயி வேளாண்மைத்துறையினர் கூறிய அறிவுரையைக் கேட்டு சம்பாப் பருவத்தில் 15 ஏக்கரில் ஐ.ஆர். 50 நெல் பயிரிட்டுள்ளேன். இன்னும் ஒரு வாரத்தில் அறுவடை நடைபெற உள்ளது. 15 ஏக்கருக்கு 14 ஆயிரம் ரூபாய் செலவு செய்துள்ளேன். எனக்கு நிச்சயமாக ஒரு ஏக்கருக்கு 38 மூட்டை நெல் கிடைக்கும் என்று கூறியதோடு தன் வாழ்க்கையில் பட்டுள்ள 60 ஆயிரம் ரூபாய் கடனையும் நிச்சயமாக அடைத்துவிடுவேன் என்று அவர் உணர்ச்சிவசப்பட்டு



அதிக மகசூல் பெற்ற சிறுகரம்பூர் விவசாயி திரு.உமாபதி.

மகிழ்ச்சியோடு கூறியது எங்களையெல்லாம் வியப்பில் ஆழ்த்தியது.

மேலும் எங்களது பயணத்தை தொடர்ந்தபொழுது மாமண்டூர் என்ற கிராமத்தில் நெல் வயல்களைப் பார்வையிட்ட பொழுது அவ்வூரைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் இணை இயக்குநரைச் சூழ்ந்துகொண்டு நவரைப் பருவத்திற்கு எங்களுடைய கிராமத்தில் 1,000 ஏக்கர் ஐ.ஆர். 50 நெல் சாகுபடி செய்ய விதை நெல் வழங்கும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

புளியரம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த குப்பாச்சாரி என்பவர் இரண்டாண்டுக்காலமாக ஐ.ஆர். 50 நெல்பயிரிட்டு வருவதாகவும் ஒரு ஏக்கருக்கு 40 மூட்டைநெல் அறுவடை செய்திருப்பதாகவும் கூறினார். அயல்கவுண்டர் என்ற 60 வயது மதிக்கத்தக்க விவசாயி எங்களிடம் ஓடிவந்து தன்னுடைய நிலத்தைக் காண்பித்து ஐ.ஆர். நெல் மிகவும் நல்லமுறையில் விளைந்துள்ளதாக மகிழ்ச்சிப் பெருக்குடன் கூறியது எங்களை மேலும் வியப்பில் ஆழ்த்தியது.

வருகின்ற நவரைப் பருவத்தில் இம்மாவட்டத்தில் ஐ.ஆர். 50 நெல் பயிரிடப்படுவதைப் பார்த்தால் தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டம் நெல் விளைச்சலில் தஞ்சை மாவட்டத்தை மிஞ்சிவிடும் என்ற முடிவுடன் எங்களது பயணத்தை இனிதே நிறைவேற்றித் திரும்பினோம்.

சிறுநமல்லி எஸ்.கே. கன்னையாவுடன் வேளாண்மைத்துறை அலுவலர்கள்.



# கோயில் சுண்டல்

— மு. முத்துக்காளத்தி

ஒரு கோயிலில் சுண்டல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். எந்த நிகழ்ச்சியானாலும், அதன் முடிவில் வந்திருக்கிறவர்கள் அத்தனைப் பேருக்கும் ஆண், பெண் குழந்தைகள் அனைவருக்கும் சுண்டல் கொடுப்பது அந்தக் கோயில் வழக்கம்.

சுண்டலை அள்ளிக் கொடுக்கிறவர்கள், எதிரே நீட்டப் பட்ட கை சிறியதாக இருந்தால் கொஞ்சமாகவும், பெரியதாக இருந்தால் அதிகமாகவும் கொடுப்பார்கள். சில பேர் தங்கள் கையில் எவ்வளவு வருகிறதோ அவ்வளவு அள்ளிக் கொடுத்துவிடுவார்கள். அது கீழுக்கும் மேலுக்கும் சிதறும். வாங்குகிறவர்கள் ஒரு கையில் வாங்கிய பிறகு, மறுகையைக் காட்டுவார்கள். ஒரே ஆளின் கைதான் அது என்று புரியாதவர்கள் போட்டுவிடுவார்கள். புரிந்தவர்கள் குழந்தைகளானால் தலையில் ஒரு குட்டு வைப்பார்கள். பெரியவர்களாக இருந்தால் திட்டுவார்கள்.

கிட்டுவுக்குக் குட்டு வாங்க விருப்பமில்லை. அதே சமயம், சுண்டல் அதிகம் வாங்கியாக வேண்டும். அதற்காக என்ன செய்தான் தெரியுமா?

ஒரு தூண் பின்னால் நின்று கொண்டு இரண்டு கைகளையும் தூணைச் சுற்றி நீட்டிக் கேட்டான். சுண்டல் கைநிறைய அள்ளிப் போட்டுவிட்டார்கள். ஆனால் இப்பொழுது கிட்டுவால் கைகளை எடுக்கவும் முடியவில்லை; வாயை வைத்துச் சாப்பிடவும் முடியவில்லை. அதற்குக் காரணம், அவனது இரண்டு கைக்கும் இடையில் ஒரு பெரிய தூண் இருந்ததும், அந்தத் தூணைச் சுற்றி அவன் கையைப் பிரித்துச் சேர்த்ததுமே!

பேராசைப்பட்டால் இப்படித் தான் ஆகும். ஆசைப்படலாம். அளவோடு நிற்க வேண்டும். அடுத்தவரைப் பற்றி அக்கறை இன்றி ஆசைப்படக்கூடாது. இது அன்றைக்குத்தான் கிட்டுவுக்குப் புரிந்தது.



# வாழ்வில் வெற்றி

காலையில் எழுந்திடு என்றும்—உடன்
கல்வி பயின்றிடு நன்றாய்
நாளை என்பதை மறந்திடு—நல்ல
பொழுதினைப் பொன்னாய்க் கருதிடு!

தாயினைத் தெய்வமாய் வணங்கிடு
தந்தையின் சொல்லினுக் கிணங்கிடு
தூய்மையை எங்கணும் கொண்டிடு
துயரினை வாழ்வில் வென்றிடு!

இனம் மொழி காத்திட எழுந்திடு
ஏழையர் வாழ்வினுக்கு உழைத்திடு
தினம்பல நன்மைகள் செய்திடு
திறம்பட எதிலும் செயல்படு!

பாரின் வளர்ச்சிக்கு உழைத்திடு
பண்பை நாளும் வளர்த்திடு
வேற்றுமைப் பேயை விரட்டிடு—வாழ்வில்
வெற்றிக் கொடியை நாட்டிடு!

**உடையார்கோவில் த. குணசேகரன்**
இளங்கலை இரண்டாம் ஆண்டு
வரலாற்றியல்
திருபுட்பம் கல்லூரி
தஞ்சை மாவட்டம்.

மாணவர் பக்கம்



தேசிய காவல் படையின் சார்பாக, காஷ்மீரில் இமய மலையில் ஏறும் பயிற்சிக்கு இந்திய மாணவர்கள் 100 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் தஞ்சை மாவட்டம், திருவாரூர் வடபாதிமங்கலம், சோமசுந்தரம் ஆண்கள் உயர் நிலைப்பள்ளியில் 9ஆம் வகுப்பு பயிலும் திரு இரா. வி. மாறன் என்னும் மாணவரும் ஒருவர்.

14.6.83 முதல் 10 நாட்கள் பிர்பான்சால் (Pirpanjal) மலைத் தொடர்ச்சியில் 14.000 அடி உயரம் ஏறும் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துச் சான்றிதழ் பெற்றுள்ளார் இவர்.

டெல்லியில் 1984-ஆம் ஆண்டு ஜனவரி 26ல் நடைபெற இருக்கும் குடியரசு நாள் விழா அணிவகுப்பில் தேசிய காவல் படையின் சார்பில் கலந்துகொள்ள இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்று இருக்கும் இவர் கதை, கட்டுரைகள் எழுதுவதிலும் ஆர்வம் உடையவர்.

# வீரச்சிறுமி வசந்தி

1983ஆம் ஆண்டு வீரச்செயலுக்காக கீதா சோப்ரா விருதினை தமிழ்நாடு மாநிலம் புதுக்கோட்டையைச் சேர்ந்த திரு ஆர். எஸ் திருநீலகண்டன் அவர்களுடைய புதல்வி செல்வி வசந்தி (வயது 8) இந்தியப் பிரதமரிடமிருந்து வரும் குடியரசு தினத்தன்று புது டெல்லியில் பெறுகின்றார்.

திரு திருநீலகண்டன் புதுக்கோட்டை மாவட்ட வர்த்தகர் கழகத்தின் முன்னாள் மேலாளராகப் பணிபுரிந்திருக்கின்றார். இவர் முன்னாள் இராணுவ வீரருமாவார். சுதந்திரப் போராட்டங்களில் பங்குபெற்ற தியாகி. இவரது மனைவியின் பெயர் திலகம். இவருக்கு 4 பெண் குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும் இருக்கின்றார்கள். விருது பெறுகின்ற வசந்தி இவரது நான்காவது குழந்தையாகும். இவள் புதுக்கோட்டையில் உள்ள அரசினர் மேல் தொடக்கப்பள்ளியில் இரண்டாவது வகுப்பு படிக்கின்றாள்,

கடந்த 10-8-83 அன்று புதுக்கோட்டையில் உள்ள மேலராஜ வீதி-வடக்கு ராஜ வீதி சந்திப்பு அருகில் செல்வி வசந்தி தனது 5 வயது தங்கையுடன் கடைக்குச் சென்றுகொண்டிருந்தபோது அந்தப் பக்கம் வந்த ஓர் ஊர்வலத்தில் விடப்பட்ட வாண வெடி ஒன்று திடீரென்று கீழ் நோக்கி வந்து சிறுமிக்கு அருகில் வெடித்துச்சிதறி சிறுமியின் இடது பக்கக் கன்னம் கீழ்த்தாடை, கழுத்து ஆகிய பகுதிகளில் தாக்கியதால் இப்பகுதியில் உள்ள சதைப் பகுதிகள் கிழிந்து ரத்தப்பெருக்கோடு சிறுமி காயமுற்றாள். அதே நேரத்தில் வெடியின் சத்தத்தைக் கேட்டு பயந்து சாலையின் குறுக்கே தன் சகோதரி ஓட முற்பட்டபோது, அந்த வழியே விரைந்து வந்த பேருந்து அருகில் வந்த காரணத்தால் தன் தங்கை பேருந்தில் அடிபட போகின்றதே என்ற நிலைமையில், தனக்கு ஏற்பட்ட வலி காயத்தையும் துயரத்தையும் நொடிப் பொழுதில் மறந்து, மின்னல் வேகத்தில் ஓடி தன் சகோதரியைக் காப்பாற்றினார் அச் சிறுமி வசந்தி. ரத்தப் பெருக்கோடு இருந்த இச்சிறுமிக்கு அருகில் உள்ள மருத்துவரிடம் முதலுதவி சிகிச்சை தரப்பட்டு பின்னர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். சுமார் 10தினங்கள் உள்நோயாளியாகச் சிகிச்சை பெற்ற பின்பு வீட்டிற்கு அழைத்து வரப்பட்டு சுமார் 1½ மாதங்கள் சிகிச்சை அளிக்கப்பட்ட பின் குணமடைந்தாள்.

**ஷ. பி எஸ். சுந்தரநாதன்,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை மாவட்டம்.





தாய் தந்தையுடனும் காப்பாற்றப்பட்ட தங்கையுடனும் வீரச் சிறுமி வசந்தி.

இந்த விபத்து நடைபெற்ற 15 தினங்களுக்குப் பிறகு அகில இந்திய வானொலி மூலம் அறிவிக்கப்பட்ட செய்தியினைக் கேட்ட இச்சிறுமியின் தந்தை திரு திருநீலகண்டன் அந்த அறிவிப்பின்படி, 28-8-83 அன்று புதுடெல்லியில் உள்ள இந்தியக் குழந்தைகள் நல வாரியச் செயலாளருக்கு மேற்கண்ட விபத்து பற்றியும், தனது புதல்வியின் வீரச் செயல் பற்றியும் உரிய சான்றுகளுடன் கடிதம் எழுதியிருக்கின்றார்.

மறைந்த இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு பிறந்த தினத்தையொட்டி 14-11-83 அன்று மாலை புதுக்கோட்டையில் அரசு சார்பில் நடைபெற்ற குழந்தைகள் தின விழாவில், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. கற்பூர சுந்தரபாண்டியன், இ. ஆ. ப., அவர்கள் வீரச் சிறுமி வசந்தியையும், அச்சிறுமியால் காப்பாற்றப்பட்ட சிறுமி சுமதியையும் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தி, சிறுமியின் வீரச் செயலைப் பாராட்டியதோடு இனிப்புகளையும் வழங்கிச் சிறப்பித்தார்.

# நூல் நயம்



## ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை முத்து விழா தமிழ்த் தென்றல் திரு.வி.க. நூற்றாண்டு விழா மலர்

பதிப்பாசிரியர்: வித்துவான் அம்பை இரா. சங்கரன், சிறுவை நச்சினார்க்கினியன்

வெளியீடு: ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை, சென்னை-14.

அரசியலில் புயலாகவும் அருந்தமிழில் தென்றலாகவும் விளங்கிய திரு.வி.க. அவர்களின் திறன்-பெருமை-உணர்வு ஆகிய பல்வேறு பண்புகள் குறித்து இம்மலர் விரிவாகத் தெரிவிக்கிறது. வாழ்த்து மலர்களாலும் கட்டுரை மலர்களாலும் கவிதை மலர்களாலும் தொகுக்கப்பட்டுள்ள இம்மலரில் திரு.வி.க. பல கோணங்களில் காட்சி தருகிறார். தமிழ் அறிஞர்கள், அரசியல் மேதைகள், தமிழ் நேயர்கள், திறனாய்வாளர்கள், திரு.வி.க. வுடன் பழக வாய்ப்புப்பெற்றபெருமக்கள் ஆகியோர் அவரைக் குறித்துச் சுவையான எழுத்தோவியங்களைத் தீட்டியுள்ளனர். ஆங்கில மொழியிலும் கட்டுரைகள்-கவிதைகள் இடம் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது.

திரு.வி.க. அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, இயற்றிய நூல்கள், தலைமை வகித்த காங்கிரஸ் அரசியல் மாநாடுகள் ஆகியவையும்-புகழ்ப் பூந்துணர் என்னும் தலைப்பில் பல்வேறு அறிஞர்கள் திரு.வி.க.வுக்குச் சூட்டிய புகழ் மாலைகளும் தொகுக்கப் பெற்றுள்ளது போற்றுதற்குரியது.

திரு.வி.க.வின் பொன்மொழிகள்-கருத்துக் கருவூலங்கள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ஆர்ட் தாளில் அச்சிடப்பட்ட புகைப்படங்கள் திரு.வி.க.வின் கைப்பட எழுதப்பட்ட பாவைப் பாடல் ஆகியவை மலருக்கு மணி மகுடம்போல் அமைந்து, பதிப்பாசிரியர்களின் கடின உழைப்பை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

திரு.வி.க. அவர்களால் தொடங்கப் பெற்ற ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபை குறித்து எழுதப்பட்டுள்ள கட்டுரைகள்-வரலாற்றுக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. தமிழறிந்தோர் கரங்களில் தவழ வேண்டிய செம்மலர் இது!

—வி.டி. வீரப்பன்

## அறவிளக்கு அரசர் முத்தையா

ஆசிரியர்: ஆறு. அழகப்பன்,

வெளியீடு: வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தியாகராயநகர் சென்னை-600 17.

விலை ரூ.8 பக்கம். 168

செட்டிநாட்டரசர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களின் வாழ்க்கை ஏட்டில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளை இந்நூல் தெரிவிக்கிறது.

ஏழையர்க்கு உதவுதல், கல்விப் பணி செய்தல், அரசியல் களத்தில் சிறப்படைதல், தமிழிசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றுதல், விருந்தினரை உபசரித்தல் ஆகிய அரும்பண்புகள் முத்தையா அவர்களின் மரபுவழி மாண்புறு குணம் என்பதை நூலாசிரியர் தெளிவுற எடுத்துக்காட்டியிருக்கிறார்.

வள்ளல் முத்தையா காட்சிக்கு எளியர் என்பதைப் பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளின் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார் நூலாசிரியர்.

முத்தையா அவர்களின் அறச் செயல்களைத் தொகுத்துக் கூறும் ஆசிரியர், பல்வேறு பொருள்களில் அவர் ஆற்றிய உரைகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அளித்திருக்கிறார். முத்தையவேளைக் குறித்து அரசியல் பிரமுகர்களும், தமிழ் அறிஞர்களும், இசைவாணர்களும், கவிஞர்களும், பத்திரிகைகளும் சூட்டியுள்ள புகழ்ப் பூக்களைத் தொகுத்துள்ளது சிறப்பம்சம்.

நூலின் இனிய, எளிய நடை நம்மைக் கவருகிறது. சில இடங்களில் நிகழ்ச்சிகளைக் காட்சிகள் போல அமைத்திருப்பது நூலாசிரியர் ஒரு நாடகாசிரியர் என்பதை நினைவுறுத்துகிறது.

## குடி அரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள்

ஆசிரியர்: டாக்டர் ச.சு. இளங்கோ,

வெளியீடு: ஏரக வெளியீடு, சதாசிவ நகர், மதுரை-625020.

விலை ரூ. 5 பக்கம். 112

தந்தை பெரியார் நடத்திவந்த 'குடி அரசு' என்னும் இதழில் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய 17 பாடல்கள் குறித்து ஆய்வு செய்ய முனைந்த நூலாசிரியர், பாடல் எழுந்த சூழ்நிலைகளை நன்கு விவரித்திருக்கிறார். அது மட்டுமல்ல, குடியரசு இதழ் தோன்றிய வரலாற்றையும் அதனை உருவாக்கிய தமிழகத்தின் அந்நாளைய நிலையையும், சுயமரியாதை இயக்கத்தின் தோற்றத்தையும் மிகத் தெளிவாக இந்நூலில் ஆய்வு செய்திருக்கிறார்.

பாவேந்தரின் பாடல்களில் சுயமரியாதைக் கருத்துக்களும் பகுத்தறிவுக் கொள்கைகளும் மலர்ந்து மணம் பரப்பிய செய்திகளைச் சான்றுகளுடன் விளக்கியிருக்கும் திறன் பாராட்டுதற்குரியது. பற்பல அரிய செய்திகளை-சுவையான தகவல்களை நூலில் அள்ளித் தெளித்திருக்கிறார். பாவேந்தரின் நூல்வடிவம் பெறாத பாடல்களை பின்னிணைப்பில் வெளியிட்டிருப்பதுடன் குடி அரசு இதழில் வெளிவந்த பாவேந்தர் பாடல்களின் காலவரிசையையும் தொகுத்துத் தந்திருப்பது பயனுள்ள பணியாகும். ஆய்வு நூல் எனினும், அனைவரும் படிக்கத்தக்க முறையில் நடை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

—தமிழ்ப்பித்தன்



# பெருஞ்சிறப்புத் திருநாள்

டாக்டர் திருமதி சரளா ராசகோபாலன்



விழா இல்லாத வாழ்க்கை நறுமணப்பூ பூக்காத முல்லைக்கொடி போன்றது. சோர்ந்து சலிப்புற்றுச் சரியும் நெஞ்சத்தை விழா ஊக்கம் தந்து மகிழ்ச்சியால் தூக்கி நிறுத்த முயல்கிறது. குடும்பத்தில் நடக்கும் விழா, உறவினருக்கு மட்டும் உவகைதரும். ஊரில் நடக்கும் தனிவிழா அந்தப் பகுதிக்கு மட்டும் களிப்பை நல்கும். நாட்டில்நடக்கும்விழா அனைத்து மக்களுக்கும் இனிமை பயக்கும்.

விழாக்கள் பெரும்பாலும் சமயத்தின் அடிப்படையில் நடக்கின்றன. அரசியலை ஒட்டிப் பிறப்பனவும் உண்டு. இலக்கியம், கலை பற்றி வருபவை மிகவும் குறைவு.

பொதுவாகப் பண்டிகைகளெல்லாம், சமயங்களின் பேரால், புராணங்களின் போதனையால் கொண்டாடப்படினும் அந்தப் பண்டிகைகளைத்தொடக்கிவைத்ததற்கான அடிப்படைக் காரணம் பொருளாதாரம்தான். பணம் ஒரு சிலரிடையே தேங்கி விடாமல் நாடு முழுவதும் பரவலாகச் சுற்றிவரும்படிச் செய்வதற்காகத்தான் நம் முன்னோர்கள் பண்டிகைகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்கள் தெரிவிக்கிறார். (கட்டுரைக் களஞ்சியம் ப.20) இந்தக் கருத்தை அரண் செய்யும் வகையில் அமைந்து இன்றளவும் நெறி மாறாமல் இருக்கும் ஒரு பெரும் விழா பொங்கல்தான்.

"வேற்றுமை இல்லாமல் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து மதபேதம் ஒன்றும் இன்றித் தமிழின் பெயரால் தமிழர்கள் தங்கள் இலக்கியம் தோன்றிய நாளாக இந்தத் திருநாளைக் கொண்டாடுகிறார்கள். ஒரு சமரச, சமதர்ம, சமநிலைத் திருவிழா இது. சிங்கப்பூர் மலேசியாவிலும் இது கொண்டாடப் பெறுகிறது என்று பொங்கலை உலக விழாவாகப் போற்றுகின்றார் டாக்டர் தெ.பொ.மீ அவர்கள் (தமிழும் பிறநாட்டுப் பண்பாடும் ப.103)

காலத்தின் புழுதியால் இடையில் மங்கிக் கிடந்த பொங்கலுக்குப் புத்துயிர் தந்து மக்கள் மத்தியில் தமிழர் திருநாளாகப் பொங்கலை உயர்த்தி வைத்தார் தமிழ்ப் பேராசிரியர் வள்ளல் கா. நமச்சிவாய முதலியார்.

"பசியும் பிணியும்
பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென"

வாழ்த்துவது பழந்தமிழ் மரபு. இந்த இனிய மரபுக்கு நினைவுத்துணையாக அமைகிறது பொங்கல் திருநாள். இது போகி, பெரும் பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என்று நான்கு நாட்களாக மணம் பரப்புகிறது.

போகி என்பது இந்திரனைக் குறிக்கும். இந்திரனை மக்கள் வணங்குவதற்காக இந்த நாள் அமைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. 'இந்திர விழாவிற் பூவினன்ன' என்ற சங்க இலக்கியத் தொடரும் (ஐங் 62-1), சிலம்பில் வரும் இந்திரவிழவூரெடுத்த காதையும் பழந்தமிழர் இந்திரனைப் போற்றி விழா எடுத்தனர் என்பதற்குச் சான்று காட்டுகின்றன. உழவு மருதநிலத்திற்கு உரியது. எனவே "வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி (தொல். பொருள். அகம் 5) உழவர்கள் மழைவளம் தரும் இந்திரனை வழிபட்டு வந்தனர் என்று சிலர் கூறுவர். "இந்திரவிழா அகத்தியன் சொற்படி தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் அரசனால் தொடங்கப்பட்டுவருடந்தோறும் காவிரிப்பூம் பட்டினத்தின் சோழ பரம்பரையோரால் இந்திரனுக்கு நடத்தப்பட்ட விழா" என்று மணிமேகலை கூறும் (மணி.விழாவறை காதை 3-9) "கண்ணன் தாம் அவதரித்த காலத்தில் இதனை (வழிபாட்டை) தமக்கு செய்யக் கட்டளையிடக் கேட்ட, இந்திரன் சினந்து மழை பொழிவிக்க, கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து மழை தடுக்க, செருக்கடங்கிய இந்திரன் பணிய, தைமாதத்திற்கு முன்னாள் உனை உலகம் பணிய எனக் கட்டளையிட்டபடி இந்திரனைப் பூசிக்கு நாள் என்பு" எனக் கூறுவார் அறிஞர் சிங்கார வேலு முதலியார் (அபிதான சிந்தாமணி ப.1217)

இந்திரவிழா சித்திரைத் திங்களில் சித்திரையும் நிறைமதியும் கூடிய நாளில் நடைபெற்றதாக நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் கூறுவர். (சிலம்பு ந.மு.வே.உரை. ப 100; ஆனால் போகி மார்கழி மாத இறுதியில் வருகிறது.

போகி அன்று, இந்திரனை வணங்கும் சடங்கு நடைபெறவில்லை. அந்தநாளில் வீட்டெதிரில் பழைய பாய், துணி, உடை, முறம் ஆகியவற்றை எரித்துப் போக்கி விடுவதால், (பயன்படாப் பழம் பொருளைப்) போக்கும் பொங்கல் என்று சொல்லப்பட்ட தொடர் இடைக்குறையாகிப் போகிப் பொங்கலாயிற்று என்றும் சொல்லப்படுகிறது. ஆடி முதல் உழைத்த உழவர் விளைச்சல் கண்டு தம் களைப்பைப் போக்கிக் கொள்ளும் நாள் அது. அதனால் போக்கிப் பொங்கல், போகிப் பொங்கலாயிற்று என்றும் கருதப்படுகிறது.

பெரும் பொங்கலன்று, புது அரிசி, கரும்பு, மஞ்சள், வள்ளிக் கிழங்கு ஆகியவை உணவில் இடம் பெறும். மக்கள் புத்தாடை அணிவார்கள். வெள்ளையடிக்கப்பட்ட வீடு மேலும் அழகு பெறும். பூவும் புகையும் பொங்கலும் கொண்டு, கதிரவனை மக்கள் வழிபட்டுப் 'பொங்கலோ பொங்கல்' என்று பேரொலி எழுப்புவர்.

## பொங்கல் புதுநாள்



தமிழர் திருநாளாம் பொங்கற் புதுநாள் தனித்தன்மை பெற்றது.

உழைப்பே செல்வம்,
உழைப்பே உயர்வு
உழைப்பின்றி உலகு இல்லை.

என்பன போன்ற நற்கருத்துக்களைத் தருவதாக அமைந்திருக்கின்றது.

அடுத்து வருவது மாட்டுப் பொங்கல். அன்று சலங்கை போட்டு மாலைசூட்டி, கொம்புகளில் வண்ணம் தீட்டி மாடுகள் கொண்டாடப்பெறும். மாட்டின் உதவியால் கிடைத்த அருஉணவு அவற்றிற்கே ஊட்டப்படும். 'பட்டி பெருகுக, பானை பொங்குக' என்று கொங்கு நாட்டில் குரல் எழுப்பும் பழக்கம் இருக்கிறது. மாட்டுப் பொங்கலன்று வைகறையில், முதல் நாள் அரிசி கழுவிய கழுநீரை எடுத்துச் சென்று கழனியில் தெளித்து 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ச்சிக் குரல் எழுப்பும் பழக்கமும் சில பகுதிகளில் இருக்கிறது.

பொங்கலின் நான்காம் நாளுக்குப் பல பெயர்கள் உண்டு. காணும் பொங்கல் கன்றுப்பொங்கல், கனுப் பொங்கல், கன்னிப் பொங்கல் என்று இது கூறப்படுகிறது. கொங்கு மண்ணில் இது பூப்பொங்கல் என்று மாறுபெயர் பெற்றுள்ளது. அன்று சிறியோர், பெரியோரைக் கண்டு வாழ்த்துப் பெறுவார்கள். கன்றுகள் பெருநிலை பெறும். கன்னிகள் இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். பெண்கள் பூப்பறித்து ஆடிப்பாடி மகிழ்வார்கள். சங்க காலத்தில் கன்னிகள் தைந்நீராடல் ஒரு சமுதாயச் சடங்காக நடைபெற்றது. இதைத் ''தவத்தைந்நீராடல்'' என்று பரிபாடல் குறிக்கும் (பரி 11-9). இன்று கன்னிப் பொங்கல் என்ற தொடருக்கும் இச்சடங்கிற்கும் உறவிருக்கலாம். இளமை நிலைக்குரிய இன்ப நாளாக இந்த நிறைவு நாள் கொள்வதற்குரியது.

இந்தப் பொங்கல் திருநாளுக்கு மற்றொரு சிறப்பையும் சேர்த்திருக்கிறார் தமிழ்க் கடலாகிய மறைமலை அடிகளார். ஏசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமேயே தைத்திங்களில் யங்காப் புகழ் பெற்ற மாமேதை திருவள்ளுவர், தமிழகத்தே தோன்றினார் என்று அவர் ஆய்ந்து கூறினார். அதன் சார்பாக, தமிழக அரசு, பொங்கலுடன் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடும் வாய்ப்பினை நாட்டின் பண்பாகக் கூட்டியிருக்கிறது.

உலகின் பல பாகங்களில் வயல் விளைச்சலுக்குப் பின் ஒருவிழா



கா. நமச்சிவாயர்

நடைபெறுகிறது. அது வெறும் அறுவடை விழாதான். ஆனால் பொங்கல் திருவிழா பல்வேறு விதத்தில் சிறப்புடைய பெருவிழா. அது வியர்வையைப் போற்றும் உழைப்புத் திருவிழா உதவாப் பழைமையைப் போக்கும் புதுமை விழா. உழவில் துணை நின்ற மாட்டினைப் போற்றும் கூட்டுறவு விழா. கதிரோனுக்கும் இயற்கைக்கும் நெஞ்சுவந்து கூறும் நன்றி விழா. 'உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி' என்ற உண்மையை நாடு நகரங்களுக்கு நினைவூட்டு விழா; மக்கள் வாழ்வை மலர்த்தும் பொருளாதார விழா. இன்பம் சேர்த்து நன்மைக்கு ஊக்கம் நல்கும் இளமை விழா. பெரியோர், வளரும் உள்ளங்களை வாழ்த்தும் விழா. கதிரவன் திசைமாற்றத்தினைக் குறிக்கும் 'பருவவிழா. தை பிறப்பதால் வழி பிறக்கும் என்று மணவயது மனங்கள் போற்றும் கனவு விழா. மாமேதையின் அடிச்சுவட்டை முடிசூடும் புனித விழா. இந்தப் பொங்கல் விழாவுக்கு இணையான விழா, பொங்கல் விழாதான்.





# இதயப் பொங்கல்!

## கவிஞர் வே. கபிலன்

ஆதவனைத் தொழுகின்ற நன்னாள்; நாட்டோர்
ஆதரித்துப் போற்றுகின்ற ஏற்றப் பொன்னாள்!
நாதமழை யில்எங்கும் நலத்தைக் காணும்
நல்லதினம்; நமச்சிவாயர் நாட்டுக் கந்நாள்
சாதனையின் திறன்காட்டிச் சான்றோர் ஏத்தும்
சமதர்மப் பொங்கலெங்கும் விழாவாய் மாற
போதனைசெய் தார்பின்னே; பெரியார்—அண்ணா
போதித்தார்; அன்றுமுதல் பொங்கல் ஏற்றம்!

மண்கிண்டிப் பண்படுத்தித் தண்ணீர் பாய்ச்சி
மாநிலத்தில் விதைவிதைத்துப் பயிர்வ ளர்த்து
கண்விழித்து அறுவடையில் களித்து; நம்மைக்
களிப்பாக்கும் உழைப்பாளர் கதையை; நெஞ்சைப்
புண்படுத்தி வாழ்வார்க்குப் புதுமைப் பாட்டால்
புலப்படுத்தி மனம்திருத்திப் பொலிவைக் கூட்டிக்
கண்திறக்க வந்துள்ள பொங்கல்; எளியோர்
கண்ணீரைத் துடைக்கின்ற கருத்துப் பொங்கல்!

பனிதேய மக்களிடம் பகைமை தேய
பண்பார்ந்த நல்லுணர்வு பலவும் சேர
இனிஇங்கே இல்லாதார் இல்லை யென்றே
இல்லந்தோ றும்தினமும் இனிப்பைச் சேர்க்கும்
மணியான சத்துணவுத் திட்டம்; நம்மை
மகிழ்விக்கும் நல்லரசு வழங்கும் நாளில்
இனிஎன்ன நமக்கிங்கே இன்னல்? நன்றி
இருக்கட்டும்; அதுவேநல் லிதயப் பொங்கல்!




# வெற்றிக்கு வழி வகுக்கும் வட்டமேசை மாநாடு

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசு எதையுமே செய்யவில்லை என்று தமிழகத்தில் சில எதிர்க்கட்சிகள் குறை சொல்வதை மறுக்கும் வகையில், ''இலங்கைத் தமிழர் பிரச்னையில் தமிழக அரசு எதுவுமே செய்யவில்லை எனக் கூறுவது தவறு. தமிழக அரசு தன்னால் ஆன அனைத்தையும் செய்தது'' என்று கருத்துக் கூறியுள்ளார், இலங்கைத் தமிழ் விடுதலை முன்னணியின் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம்.

''இலங்கைத் தமிழர் பிரச்னையை, சர்வதேசப்பிரச்னையாக்கியவர்கள் முதல்வர் திரு. எம். ஜி. ஆரும், அமைச்சர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரனும் தான்.''

ஐ. நா. வில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிக் குரலெழுப்பி விட்டு வெற்றியுடன் மீண்ட மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களைப் பாராட்ட 2-1-84 அன்று நடந்த விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தமது நன்றிப் பெருக்கை வார்த்தை வடிகாலில் ஓடவிட்டார் இலங்கைத் தமிழர் தலைவர்.

"நான் உலகமெல்லாம் பறந்து சென்று செய்த வேலையை, அமைச்சர் திரு பண்ருட்டி ராமச்சந்திரன் இருந்த இடத்திலேயே செய்து முடித்திருக்கிறார்.

''இலங்கையில் களப்பலியான குட்டிமணியின் மனைவிக்கும், சகோதரிக்கும் முதல்வர் திரு. எம். ஜி. ஆர். வீடு கொடுத்திருக்கிறார். களப்பலியான தங்கதுரையின் மனைவி உதவி கேட்டு என்னிடம் கொடுத்த மனுவை மூன்று நாட்களுக்கு முன்பு, டெல்லிக்குச் செல்வதற்கு முன்பு முதல்வர் திரு. எம். ஜி. ஆரிடம் கொடுத்துவிட்டுச் சென்றேன். இன்று நான் திரும்பி வரும் பொழுது தங்கதுரையின் மனைவிக்கு வீடு கொடுக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எவ்வளவு விரைவாக எங்கள் தேவையை அறிந்து, முதல்வர் திரு எம். ஜி. ஆர். செயல்படுகிறார்! இதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''ஈழத்தமிழர் பிரச்சினையை உலக அரங்கில் மிகத் தெளிவாக அமைச்சர் ராமச்சந்திரன் எடுத்துரைத்தார்.

''எல்லாக் கட்சிகளையும் டெல்லிக்கு அழைத்துச் சென்று பிரதமருடன் பேசி, எங்களுக்காகக் குரல் கொடுத்தவர் தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள். அவருக்கு எங்கள் நன்றி.

''தமிழக அரசியலில் தலையிடும் நோக்கம் எங்களுக்கு இல்லை. யார் எங்களுக்குச்சாதகமாக இருந்தாலும் நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், வெந்த உள்ளத்தோடு வந்துள்ள எங்களைச் சிலர் குறை கூறும் போது சொல்ல முடியாத வேதனை ஏற்படுகிறது.''

**—மு. முத்துக்காளத்தி**

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு நிலையான தீர்வு காண்பதற்காக, சர்வகட்சிமாநாட்டை 10-1-84 அன்று இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே கொழும்புவில் ஏற்பாடு செய்து, அதில் கலந்து கொள்ளுமாறு தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். வட்ட மேஜை மாநாட்டில் விவாதிப்பதற்காக 14 அம்சத்திட்டமொன்றையும் திரு. ஜெயவர்த்தனே அனுப்பியிருந்தார்.

இலங்கையில் 10-1-84 அன்று நடைபெறும் வட்டமேஜை குறித்தும், மாநாட்டில் விவாதிக்கப்படவிருக்கும் பொருள்கள், நிகழ்ச்சி நிரல் குறித்தும் 3-1-84 அன்று சென்னையில், இலங்கைத் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியினர் போலிட் பீரோ கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் முடிவுகள் பற்றி, இலங்கைத் தமிழ் ஐக்கிய முன்னணி செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் நிருபர்களிடம் பேசுகையில்—

''இலங்கை ஜனாதிபதி இந்த மாதம் 10-ந் தேதி கூட்ட இருக்கும் வட்டமேஜை மாநாட்டிற்கு அனுப்பி இருக்கும் அழைப்பும், அதன் இணைப்புகளும் தமிழர் விடுதலை முன்னணியால் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. இதனை இந்தியப் பிரதமருக்கும், இந்திய வெளியுறவு அமைச்சருக்கும் பிரதமரின் சிறப்புத் தூதருக்கும் டில்லியில் விளக்கிச் சொல்லியிருக்கிறோம்.

''கடந்த ஞாயிற்றுக்கிழமை. பிரதமர் திருமதி. இந்திராகாந்தி இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனேயுடன் தொடர்பு கொண்டு பேசினார். இலங்கை ஜனாதிபதி கேட்டுக் கொண்டபடி திரு. பார்த்தசாரதி இன்று கொழும்பு சென்றிருக்கிறார். இலங்கை ஜனாதிபதியுடன் அவர் பேசும்பொழுது எங்களுடன் ஆலோசனை நடத்துவதற்கு வசதியாக, எங்கள் கட்சியின் தூதுக்குழு கொழும்பில் இருக்க வேண்டுமென்று திரு. பார்த்தசாரதி கேட்டுக் கொண்டதற்கிணங்க, நாங்கள் நான்கு பேர் 4-1-84 அன்று சென்னையிலிருந்து கொழும்பு செல்கிறோம்'' என்று கூறினார்.

பேச்சு வார்த்தைகளுக்கு நிபந்தனை விதிப்பதை அவர் எதிர்த்தார்.

''தமிழர் பிரச்னைகளுக்குத் திருப்திகரமான முடிவு ஏற்பட்டால் அதைத் தமிழ் மக்கள்முன்பு வைத்து அவர்களது முடிவைப் பெறுவோம் என்பதுதான் எங்களது நிலை'' என்றார்.

இலங்கை ஜனாதிபதியும், திரு ஜி. பார்த்தசாரதியும் 4-1-84 அன்று கொழும்புவில் சந்தித்துப் பேசினார்கள்.

4-1-84 அன்று பிற்பகல் கொழும்பு சென்றடைந்த தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் முதல் காரியமாக, இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதர் திரு ஜி. பார்த்தசாரதியை சந்தித்துப் பேசினார்கள்.

'திரு ஜி. பார்த்தசாரதி இரண்டாம் தடவையும் ஜனாதிபதியை சந்தித்துப் பேசினார். இலங்கையின் முன்னாள் பிரதமர் திருமதி சிரிமாவோ பண்டார நாயகா, லங்கா சம சமாஜ கட்சித் தலைவர் டாக்டர் கோல்வின் டிசில்வா ஆகியோரையும் சந்தித்துப் பேசினார்.

திரு. ஜி. பார்த்தசாரதி மீண்டும் 6-1-84 அன்று இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து, அவர் தெரிவித்த 14 அம்சத் திட்டம் பற்றி, இலங்கைத் தமிழ் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார். அதன் பேரில், 14 அம்சத் திட்டத்தில் சில மாற்றங்களைச் செய்ய திரு ஜெயவர்த்தனே சம்மதித்தார்.

திரு. ஜி. பார்த்தசாரதியின் முயற்சி பயனளித்தது. பத்தாம் தேதி நடைபெறும் வட்டமேஜை மாநாட்டில் இலங்கைத் தமிழ் ஐக்கிய முன்னணி கலந்து கொள்ளும் என்று திரு. அமிர்தலிங்கம் அறிவித்தார்.





இலங்கைத் தமிழர் பிரச்னை மீது தீர்வுகாண திரு ஜி. பார்த்தசாரதி சிறந்த முறையில் பணியாற்றி வருவதாக, இலங்கைப் பத்திரிகைகள் முதன் முறையாகப் பாராட்டு தெரிவித்தன. "பறக்கும் தூதரின் முயற்சிகள் தொடர்கின்றன'' என்று தலைப்பிட்டு, இலங்கை அரசுக்குச் சொந்தமான 'சிலோன் டெய்லி நியூஸ்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டது.

திட்டமிட்டபடி வட்டமேஜை மாநாடு 10-1-84 அன்று கொழும்புவில் ஆரம்பமானது. இலங்கை ஜனாதிபதி தமிழர் தலைவர்களுடன் கைகுலுக்கி, அவர்களுடன் புகைப்படமும்எடுத்துக் கொண்டார்.

முதல் நாள் இலங்கை எதிர்க்கட்சிகள் இரண்டு மாநாட்டைப் புறக்கணித்தன. இரண்டாம் நாள் அவை உட்பட 10கட்சிகள் விவாதங்களில் பங்குகொண்டன.

இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதர் திரு. ஜி. பார்த்தசாரதி இலங்கையில் 9 நாட்கள் தங்கி அயராது பாடுபட்டு, தமது பணியை வெற்றியுடன் முடித்தார். புதுடில்லி திரும்பும் வழியில் அவர் 11-1-84 அன்று பிற்பகல் சென்னை வந்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்து, கொழும்பு வட்ட மேஜை மாநாட்டு விவரங்களை எடுத்துரைத்தார்.

முன்னதாக அவர் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடையே பேசும்பொழுது, ''கொழும்பு வட்ட மேஜை மாநாடு ஒரு பெரும் முயற்சியாகும். அதன் முடிவு குறித்து நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண்பதில் இந்த மாநாடு வெற்றி பெறும் என்றும் அவர் தமது உள்ளக்கிடக்கையை வெளியிட்டார்.

# ஐ.நா.வில் ஒலித்த தமிழ்க் குரல்!

ஐக்கிய நாடுகள் அவைக்கு, இந்தியக் குழுவின் சார்பிலே சென்று இலங்கைப் பிரச்னையைப்பற்றிப் பேசி, புகழ் பெற்றுத் திரும்பியிருப்பவர் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், அப் பிரச்னை



பற்றித் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் பேசுவதே பொருத்தமாக இருக்கும் என எண்ணி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களோடு தொடர்பு கொண்டபோது, நம் முதல்வர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமையாளர் இவர்.

88 நாட்கள் நடந்த ஐக்கிய நாடுகள் அவைக் கூட்டத்தில் 70 நாட்கள் கலந்து கொண்டார் மாண்புமிகு மின்துறை அமைச்சர்.

''இந்தியாவின் சார்பில் எத்தனைப் பேர் அங்கு சென்றீர்கள்?'' என்று நாம் 'தமிழரசு' இதழின் சார்பில் 6-1-84 அன்று அவரைச் சந்தித்த போது கேட்டோம்.

''இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் தலைமையில் நாங்கள் பதினோரு பேர் சென்றோம். பிரதமரும், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. நரசிம்மராவும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கமல்நாத்தும் ஐந்தாறு நாட்களில் அங்கிருந்து இந்தியா திரும்பிவிட்டனர். பின்னர், என்னைச் சேர்த்து எட்டுப்பேர் தொடர்ந்து அங்கிருந்து அவைக்கூட்டங்களில் கலந்து கொண்டோம்'' என்றார் மாண்புமிகு மின்துறை அமைச்சர்.

அட்டை சொல்லும் கட்டுரை

''அங்கே நீங்கள் பேசியதைப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. ஐக்கிய நாடுகளவையின் பொதுச் செயலாளர் பெரேஜ் -டி-க்யூலரைத் தனியே நீங்கள் சந்தித்தீர்களா?—ஆம் என்றால் அவரோடு என்ன பேசினீர்கள் என்று கூறலாமா?''

''25.11.83ல் நான் அவரைச் சந்தித்தேன். 35 ஆண்டுக் காலமாக எப்படி இலங்கைத் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள், படிப்படியாக அங்குள்ள தமிழர்களின் உரிமைகள் எப்படியெல்லாம் பறிக்கப்பட்டு வருகின்றன என்பதையெல்லாம் ஐ.நா. அவைப் பொதுச் செயலாளரிடம் விளக்கினேன். 1956 முதல், தொடர்ந்து இலங்கைவாழ் தமிழர்கள் எப்படி சிங்கள வெறியர்களாலும், அங்குள்ள காவல்துறையினராலும் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள் என்பதையும் விளக்கிச் சொன்னேன். எல்லாவற்றையும் அவர் கூர்ந்து கேட்டது மட்டுமல்ல; நான் சொன்னதையெல்லாம் அதிகாரிகள் மூலம் குறிப்பெடுத்தும் வைத்துக் கொண்டார்''.

''அதையெல்லாம் கேட்டுவிட்டு அவர் என்ன சொன்னார்?''

''ஐ.நா. அவை ஒரு நாட்டின் உள் விவகாரத்தில் நேரடியாகத் தலையிட முடியாது. ஆனாலும், இந்தப் பிரச்னை மனித உரிமைகள் பற்றியதாக இருக்கிறது. ஆகவே அனுதாபத்தோடு கவனிப்போம் என்று கூறியது மட்டுமல்ல; இலங்கைப் பிரச்னைபற்றி நான் சொல்லச் சொல்ல அவர் முகம் வருத்தத்தால் சோபை இழந்ததைக் கவனித்தேன். இப்போதுகூட அவரிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்திருக்கிறது. அதில் அவர் 'நீங்கள் என்னைச் சந்தித்து உரையாடியது என்றும் என் நினைவில் இருக்கும்; அந்த நினைவின் சின்னமாக, அன்புடன் தாங்கள் அளித்த தஞ்சாவூர்த் தட்டை வைத்து நான் பாதுகாப்பேன்' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். என்னை விடுங்கள்; இலங்கைப் பிரச்னை அவரை எந்த அளவுக்குப் பாதித்திருக்கிறது என்பதை உணர இந்தக் கடிதம் ஒன்று போதுமே!'' என்றபடி நமக்கு அந்தக் கடிதத்தை எடுத்துக்காட்டுகிறார் மாண்புமிகு மின்துறை அமைச்சர்.

அதை வாங்கிப் பார்க்கிறோம். பின்னர் கேள்வியைத் தொடர்கிறோம்-''ஐக்கிய நாடுகள் அவையில் நீங்கள் பேசிய ஆங்கிலப்பேச்சு வேறு எந்த மொழியிலாவது மொழிபெயர்க்கப்பட்டதா?''

''ஆமாம். நான் பேசியதை பிரஞ்சு, ரஷ்யன், சீனம், அராபியம், ஸ்பானிஷ் ஆகியவற்றிலும் மொழிபெயர்த்தார்கள்.''

''நீங்கள் பேசியதை அவையிலிருந்தவர்கள் எப்படி வரவேற்றார்கள்?''

''உலக நாடுகளின் உறுப்பினர்களெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்தார்கள். இந்தப் பிரச்னையை ஐ.நா. அவைக்குக் கொண்டு வந்ததே தவறு என்று இலங்கைப் பிரதிநிதி மறுத்த போது, நான் அவருக்குப் பதிலளிக்கும் வகையில் என்னுடைய விவாதத்தை வைத்தேன். அப்படி நான் பேசும்போது அவைத் தலைவரைப் பார்த்தே பேசியதால், அப்போது இலங்கைத் தூதுவர் முகம் எப்படி மாறியது என்பது எனக்குத்தெரியாது; நான் பேசிமுடித்துவிட்டு வந்தபின், பார்வையாளர் பகுதியிலிருந்த இலங்கைத்தமிழர்கள் என்னைக் கைகுலுக்கிப் பாராட்டி, 'மிக மூத்த அறிஞர்களில் ஒருவரான இலங்கைப் பிரதிநிதி பொன்சேகாவே உங்கள் விவாதத்தைக் கேட்டு வியர்த்து விறுவிறுத்துப் போய் விட்டார்' என்று புகழ்ந்தார்கள். அப்போது தான் நான் பேசியது இலங்கைப் பிரதிநிதியை எவ்வளவு நிலைகுலையச் செய்திருக்கிறது என்பது எனக்குத் தெரிந்தது''.

பெருமிதத்தோடு இதைச் சொன்னார் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன்.

''பிறகு நீங்கள் இலங்கைப் பிரதிநிதியைத் தனியே சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததா?'' என்கிறோம் நாம்.

''ஆம். ஒரு வரவேற்பு விருந்தின் போது அவரை நான் சந்தித்தேன். அங்கு வந்திருந்த இலங்கைப் பிரதிநிதி என்னிடம் கூறிய ஒரு கருத்தை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். தமிழ்நாட்டில் திரு. கருணாநிதி எதிர்க் கட்சிக்காரராக இருப்பதால் தான் இலங்கைத் தமிழர் பிரச்னைக்காக வீணான ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்; முதலமைச்சராக இருந்திருந்தால் கம்மென்று இருந்திருப்பார். ஏனென்றால் திருமதி. பண்டாரநாயகா இலங்கைப் பிரதமராக இருந்தபோது அவர் எங்கள் ஆட்சிக்குச் சாதகமாகத் தான் தமிழ்நாட்டில் செயல்பட்டார். எங்களுக்கு அது தெரியும் என்றார்கள் அவர்கள்.''

''அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் என்ன நினைக்கிறார்கள்?''

''நான் பார்த்த அளவில், இலங்கைத் தமிழர்கள்-குறிப்பாக வெளிநாட்டிலுள்ள தமிழர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள் என்பது என் கணிப்பு. தங்கள் பிரச்னைகளைத் தமிழகத்திலுள்ள அரசியல் தலைவர்கள் யார் ஆதரித்தாலும் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் அப்படி ஏற்றுக் கொள்ளுவதாலேயே நம்மை அவர்கள் தலைவராக ஏற்றுக் கொள்ளுவதாக நாம் நினைத்தால் அது தவறு என்பதே என் கருத்து. 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்றவகையில் அவர்களுடைய நடவடிக்கைகள் இருந்தாலும் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசியல் தலைவர்கள் குறித்தும் அவர்களெல்லாம் மிகச் சரியாகவே கணித்து வைத்திருக்கிறார்கள்.''

இவ்வாறு சிரிப்போடு சொல்லிவிட்டுத் தன் பேச்சை மேலும் தொடர்கிறார் மாண்புமிகு அமைச்சர்:

''இலங்கைத் தமிழர் விடுதலைப் போராட்ட வீரர் குட்டிமணி யார் என்பதே இலங்கை அரசுக்குத் தெரியாமலிருந்திருக்கிறது. இலங்கை அரசிடம் அவரைப் பிடித்துக் கொடுத்த கலைஞரின் கைங்கர்யத்தால்தான் குட்டிமணி இவர்தான் என்பதே இலங்கை அரசுக்குத் தெரிந்து படம் பிடித்துப் போடப்பட்டிருக்கிறது. குட்டி மணியோடு சிறையில் இருந்து தப்பி வந்த இலங்கைத் தமிழர்களே இதைஎன்னிடம் கூறினார்கள்''.

ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட்ட காலத்திலிருந்து, இந்தியாவும் இலங்கையும் தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்னையை அச்சபைக்குக் கொண்டுசென்றதும்-முதன் முதலாகத் தமிழர் ஒருவர் அச்சபை விவாதத்திலே பங்கேற்றதும்

ஐ.நா. அவைப் பொதுச் செயலாளர் கடிதம்

THE SECRETARY-GENERAL

22 December 1983

Dear Mr. Ramachandran,

I should like to express my sincere thanks and appreciation for the very fine Tanjore plate which you left for me recently.

I very much enjoyed our meeting on 25 November and the plate will serve as a reminder of the occasion.

With all good wishes.

Yours sincerely,

Javier Pérez de Cuéllar

His Excellency
Mr. S. Ramachandran
Minister for Electricity
Government of Tamil Nadu
Madras

இதுவே முதலாவது முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

''இலங்கைப் பிரச்னையில் இந்திய நாட்டின் அணுகுமுறை குறித்து அங்குள்ளவர்கள் எப்படிப் பேசிக் கொண்டார்கள்?''

''பாராட்டவே செய்தார்கள்''.

''இலங்கைமீது இந்தியா படையெடுக்க வேண்டுமென இங்கே கூறப்படுவது பற்றி அங்கே பேசப்பட்டதா?''

''ஐ.நா.சபைப் பொதுச்செயலாளரை இலங்கை வெளி விவகாரத்துறை அமைச்சர் திரு. அமீது அவர்கள சந்தித்துப் பேசுகையில், ஒரு நாட்டிற்குள் எழும் இனப் பிரச்னையை வைத்து, அந்தக் குறிப்பிட்ட இனம் அண்டை நாட்டிலும் இருக்கிறது என்கிற காரணத்தால் அண்டை நாடு படையெடுக்குமானால், பல சமூகங்களைக் கொண்ட உலகின் பல நாடுகளில் அமைதியே இராது. குறிப்பாக இலங்கைப் பிரச்னையில், இந்தியாவில் சில எதிர்க்கட்சிகள், இந்தியாவைப் படையெடுக்கத் தூண்டி வருவது இதையே குறிக்கிறது எனக்கூறியுள்ளார். ஐ.நா.சபைப் பொதுச் செயலாளரை நான் பார்த்துப் பேசும்போது ''இலங்கை மீது இந்தியாவுக்குப் படையெடுக்கும் ஆசையிருந்தால் எப்போதோ எடுத்திருக்கும். ஆனால், இந்தப் பிரச்னையில் அரசியல் ரீதியிலான தீர்வு ஒன்றையே இந்தியா விரும்புகிறது. அதைத்தான் தனது பிரதிநிதி திரு.பார்த்தசாரதி மூலம் இந்தியப் பிரதமர் செய்துவருகிறார்'' என்று கூறினேன். நான் பேசிய பிறகு இந்தப் பிரச்னையை மிக எளிதாகத் தீர்க்கவல்லவர் இந்தியப் பிரதமர் என்று தாம் கருதுவதாக ஐ.நா.மன்றப் பொதுச் செயலாளரும் கருத்தறிவித்தார்.''

''சரி, அங்கு வந்திருந்த இலங்கைத் தமிழர்கள் இது பற்றித் தங்களிடம் என்ன சொன்னார்கள்?''

''உலக நாடுகளெல்லாம் அனுதாபத்தைக் காட்டினாலும், இலங்கைத் தமிழர்க்கு உதவக்கூடிய ஒரே நாடு இந்தியாதான் என்றும், உலகெங்கும் உள்ள இலங்கைத் தமிழர்கள் இது குறித்து பாரதப் பிரதமரையே பெரிதும் நம்பியிருக்கிறார்கள் என்றும்சொன்னார்கள். தமிழகம் மட்டுமே தனித்து நின்று இதில் உதவ இயலாது என்பதை நன்றாக உணர்ந்துள்ள அவர்கள்— 'She is the only hope' என்கிறார்கள் ''.

''உலக நாடுகள் மன்றத்தில் முதன் முதலாகப் பேசுகிறோம் என்ற எச்சரிக்கையுணர்வு அங்கே உங்கள் விவாதத்தைப் பாதித்ததா?'' என்கிறோம் நாம்.

''நிச்சயமாக இல்லை, அறிஞர் அண்ணா அவர்களை நினைத்துக் கொண்டதால் '' என்று கூறிப் புன்னகைத்தார் அவர். ''சிங்கள இனவெறியுணர்வு கூடாது என்பதை எடுத்துரைக்க தமிழ் இன உணர்வைவிட மனித இன உணர்வே அதிகம் பயன்படுகிறது. இலங்கையிலே ஒரு இளம் பெண் பதின்மூன்று சிங்கள இராணுவச் சிப்பாய்களால் கற்பழித்துக் கொல்லப்பட்டிருக்கிறாள் என்றால், அதிர்ச்சியடைந்துபோய் 'Is it so, barbarious' என்கிறார்கள்.

''ஆகவே, இதை வெறும் தமிழர் பிரச்



னையாக மட்டும் ஆக்காமல் மனிதகுலப் பிரச்னையாக ஆக்குவதன் மூலமே, உலகின் கவனத்தையும் உலகநாடுகளின் பரிவையும் ஈர்க்க முடியும். ஐ.நா.சபையில் பேசும்போது அழகாகப் பேசுகிறார்களா என்பதைவிட, பேச்சில் ஆழ்ந்த கருத்துக்கள் உள்ளனவா என்றே கவனிக்கிறார்கள்.

''இந்தியா திரும்பியபின் பிரதமரைச் சந்தித்தீர்களே. ஐ.நா.அவையில் உங்களுடைய பங்கு பற்றி அவர் ஏதேனும் கருத்தறிவித்தாரா?''

''இந்தியப் பிரதிநிதியாகச் சென்று சிறப்புறச் செயல்பட்டமை குறித்துப் பாராட்டினார். தங்களுடைய பாராட்டு தமிழ்நாட்டுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் திரு.எம்.ஜி.ஆர். அவர்களுக்குமே உரியது என்று நான் பணிவோடும் நன்றியுணர்வோடும் அவர்களிடம் தெரிவித்துக் கொண்டேன்.''

''வேறு ஏதேனும் தாங்கள் சிறப்பாகச் சொல்லுவதானால் சொல்லலாம்?''

''நாம் இங்கேதான் நமது பண்டைப் பெருமைகளையெல்லாம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர, அங்கே நான் சந்திக்க நேர்ந்த அயல் நாட்டுப் பிரதிநிதிகளுக்கெல்லாம் தமிழ்நாடு என ஒன்று இருப்பதே தெரியவில்லை. இந்தியாவைத் தெரிகிறது. டில்லியைத் தெரிகிறது, பிரதமர் இந்திராகாந்தியைத் தெரிகிறது-அவ்வளவுதான்! இப்படிப்பட்ட நிலையில், அங்கே சென்ற எனக்கு தமிழர்களைப் பற்றி, தமிழின் சிறப்பு பற்றி, தமிழகத்தின் தொன்மை —பண்பாடு— தமிழகத்தின் ஆளுங்கட்சி எல்லாம் பற்றி உலக அரங்கிலுள்ளவர்களோடெல்லாம் பேசி அவர்களை உணரவைக்கிற அரிய வாய்ப்புக் கிடைத்தது; எங்களுடைய முதல்வர் அவர்கள் ரீகனைப் போல கலையுலகிலிருந்து அரசியலுக்கு வந்தவர் என்றால் ''அப்படியா!'' என்று அனைவரும் வியந்து பாராட்டினார்கள்.

ஐ.நா. சபைக்குச் சென்று அரியதோர் உரைநிகழ்த்தித் திரும்பியுள்ள மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரனைச் சந்தித்ததில், அரிய பல செய்திகளைத் தெரிந்து கொண்ட திம்மதியோடு நாம் விடை பெறுகிறோம்.

—சந்திப்பு : **இந்திரன்**






# சென்னையில் சுற்றுலா, தொழில் பொருட் காட்சி

சென்னை காமராசர் சாலையில்-போர் நினைவுச் சின்னத்தின் அருகிலுள்ள தீவுத்திடலில் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் தொடக்க விழா டிசம்பர் 30ஆம் நாளில் நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி-சுற்றுலா-அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம வீரப்பன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்க, மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள்பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்தார்.

விழாவுக்கு வருகை புரிந்த அனைவரையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்திரு.க.பாலசுப்ரமணியன் எம்.எல்.ஏ. வரவேற்றார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''அரசியல் மேடைகளில் நீங்கள் நீண்டநேரம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இன்னார் வந்துவிட்டார் என்று சொல்லப்படுவதுண்டு. அதுபோல, மக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்தப் பொருட்காட்சி 2, 3 கட்டங்கள் தேதி குறிக்கப்பட்டு, மாற்றம் பெற்று, இன்று தொடங்கப்படுகிறது.

''சென்ற ஆண்டை விடப் பல்வேறு சிரமங்கள் இந்த ஆண்டு ஏற்பட்டாலும், சோதனைகளைக் கடந்து-வெற்றி நடைபோடும் வகையிலே இது அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பல மாவட்டங்கள் புயலாலும் மழையாலும் பாதிக்கப்பட்டு, சோதனைகள் ஏற்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் சாதனைகளாக மாற்றி வருகிறார் புரட்சித் தலைவர்.

''1959ல் அவர் எங்களது ஊரான சீர்காழியில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தபோது காலில் முறிவு ஏற்பட்டது. அதன் பின்னர் அவரது புகழ் பரவியது-தமிழக மக்களிடையே! 1967ல் அவரது தொண்டையில் குண்டு பாய்ந்தது. அதன் பின்னர் அண்ணா அவர்களின் பேரன்பைப் பெற்று, அவர் அமைத்த ஆட்சிக்கு உறுதுணையாக இருந்தார் புரட்சித்தலைவர். 1977ல் ஆட்சியை அமைத்தார்; 1980ல் ஒரு சோதனை ஏற்பட்டது. அதன் பின்னர் மீண்டும்தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவ்வாறு சோதனைகளைச் சாதனைகளாக்கிக்கொள்வது புரட்சித் தலைவரின் இயல்பு -அவரது அரசு!''

மாண்புமிகு செய்தி சுற்றுலா அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம வீரப்பன் அவர்கள் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''11வது ஆண்டாக இந்தச் சுற்றுலா தொழில் பொருட்காட்சி இன்றுதுவக்கம்ஆகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னர் -இந்தப் பொருட்காட்சி மிகப் பொலிவுடனும் சிறப்புடனும் நடைபெறுகிறது. இது பொதுமக்களால் - [illegible]பாக தலைநகர மக்களால் [illegible]யும் பாராட்டப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு 25 இலட்சம் பேர் பொருட்காட்சியினைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 30 இலட்சம்பேர் பார்த்து மகிழ்வர் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

''மத்திய-மாநில அரசுகளின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரங்குகள் 54 இங்கு இடம் பெற்றுள்ளன. தமிழகத்தின் 16 மாவட்டங்களைச்சேர்ந்த அரங்குகளும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. மேற்கு வங்கம், குஜராத், அரியானா போன்ற மாநில அரசுகளும் பங்கு கொள்கின்றன.

''இங்கு நிரந்தரச் சிற்றுண்டி விடுதி ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது. மாலைநேரத்தில் கடற்கரைப் பகுதிக்கு வருகின்ற குடும்பத்தினர் பயன் பெறுகின்ற வகையில், முதல் முறையாக ரூ. 10 லட்சம் செலவில் இதுதொடங்கப்படுகிறது. இந்த விடுதியில் நவீன விஞ்ஞான வசதிகளுடன், சுகாதார வசதிகளுடன் சிறப்பாக உண்டியை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. லாப நோக்கத்தை மாத்திரமே கருதாமல் மக்களின் நலன் கருதியே இது நடத்தப்பட இருக்கிறது. குடும்பத்துடன் வருகின்ற இடமாகவும்-சிறுவர் விளையாடும் இடமாகவும் இந்தப் பகுதி மாற்றப்பட இருக்கிறது. சிறுவர் ரயில், தொடர்ந்து விடப்படும். இங்கு அறநிலையத்துறையால் உருவாக்கப்பட்டுள்ள மாதிரித் தெப்பக்குளம் எவ்வளவு காலம் வரை இருக்க முடியுமோ, அவ்வளவு காலம் வரை இருக்கும். மாலைநேர இசை நிகழ்ச்சி நடைபெறும். சுற்றுலாத் துறை அரங்கின் உள்ளே முதன்முதலாகப் பொம்மலாட்டத்தைக் கொண்டு ஒளி-ஒலிக் காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவும் எவ்வளவு காலம் நீடித்திருக்க முடியுமோ அவ்வளவு காலத்திற்கு இங்கே இருக்கும்; இந்த இடம், பாதுகாக்கப்படும்.

''சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1972ல் தொடங்கப்பட்டது. பெரிய அளவில் இழப்பினை இது



# பன்மொழிப் புலவருக்கு திரு. வி. க. விருது

**சி**றந்த தமிழ் எழுத்தாளருக்குத் தமிழக அரசினால், ஆண்டுதோறும் ரூ. 10,000 தொகையுள்ள தமிழ்த் தென்றல் திரு. வி. க விருது வழங்கப்பட்டு வருகிறது. 1983க்குரிய விருது பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

சந்தித்து வந்தது. கடந்த 4 அல்லது 5 ஆண்டுகளாகத்தான் லாபம் கிடைக்கிறது என்ற நிலையை அரசின் நிருவாகிகள் உருவாக்கியிருக்கிறார்கள்.

''முன்பு 50 ஆயிரம்-50 லட்சம் ரூபாய் முதலீடு கொண்டதாக இருந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம்-தற்போது 2 கோடி ரூபாய் முதலீடு கொண்டதாக விளங்குகிறது. 34 லட்ச ரூபாய் சொத்துக்கள் முன்பு இருந்தன. தற்போது 50 லட்ச ரூபாய் சொத்துக்கள் இதற்கு உள்ளன. முன்பு, ஆண்டுக்கு 2 லட்சரூபாய் அல்லது 3 லட்ச ரூபாய் நஷ்டம் என்ற நிலை இருந்தது. இப்போது கடன்களையும் அடைத்து வட்டிகளையும் செலுத்தியது போக, ஆண்டுக்கு 4 லட்ச ரூபாய் லாபம் தரும் கழகமாக இது விளங்குகிறது.

''இதைப்போல், சுற்றுலாப் பொருட்காட்சிக்குசென்ற ஆண்டு 26லட்ச ரூபாய் இலாபம் கிடைத்தது. இந்த ஆண்டு 35 லட்ச ரூபாயிலிருந்து 40 லட்ச ரூபாய் வரை இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் வகையில் இதன் செயல்முறைகள், வர்த்தகங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

''மத்திய அரசு டில்லியில் நடத்தும் பொருட்காட்சியைத் தவிர, மாநில அரசுகள் நடத்தும் பொருட்காட்சிகளில், தமிழ்நாடு அரசு நடத்தும் பொருட்காட்சி தான் சிறப்பாகத் திகழ்கிறது. தமிழகம் அடைந்துள்ள வசதிகளைப் பற்றி அறிந்துகொள்ள-தமிழக மக்கள் தங்கள் மாநிலத்தைப் பற்றி அறிந்து கொள்ள-தகவலைப்பெற - இப் பொருட்காட்சி பயன்படும்.

''தமிழகத்தின் சுற்றுலாத் துறை மேம்பாட்டுக்காகச் சில பெருந்திட்டங்களை நாம் தீட்டி மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசு அவற்றை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவேண்டும்-கருணை காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டிய நிலையில் தான் நாம் இருக்கிறோம்.

''திட்டக் குழுவினருடன் விவாதிப்பதற்காக டில்லிக்குச் சென்ற நமது மாநில அதிகாரிகளிடம், திட்டக்குழு உறுப்பினர்கள் மனம் விட்டுப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். 'இந்தியாவிலேயே சுற்றுலாத்துறை வளர்ச்சிக்காகப் பெருந்திட்டங்கள் தீட்டி அனுப்பியிருப்பது தமிழ்நாடு அரசு ஒன்றுதான்' என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

''வெளிநாட்டிலிருந்து டில்லிக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தாஜ் மஹாலைப் பார்த்து விட்டால் போதாது. அவர்கள் தஞ்சைப் பெரிய கோவிலையும் பார்க்க வேண்டும். மலைகளின் ராணி என்று புகழத்தக்க உதகமண்டலத்தையும் அவர்கள் காண வேண்டும். அருவிகள் என்றால் அவை பார்ப்பதற்கு மாத்திரம் தான் என்ற நிலை பல நாடுகளில் உண்டு. ஆனால் நமது குற்றால அருவி பார்ப்பதற்கு மட்டுமல்ல, குளிப்பதற்கும் ஏற்றது. அதனையும் வெளிநாட்டவர் காணவேண்டும். அவர்கள் அங்கு செல்வதற்குச் சரியான போக்குவரத்து வசதிகள்-விமான வசதிகள் செய்யவேண்டும்.

''கிழக்குத் திசை நாடுகளில் இருந்து வருகின்ற விமானங்கள் எல்லாம் சென்னையில் இறங்கிப் போக வேண்டும் என்பது நமது நீண்ட நாளைய வேண்டுகோள். மூன்று கடல்கள் முத்தமிடும் கடற்கரை-ஒரே நேரத்தில் கதிரவன் மறைவதையும்-சந்திரன் எழுவதையும் பார்க்க இயலக் கூடிய கடற்கரை-வெளிநாடுகளில் எங்கும் காணமுடியாது. அது கன்னியாகுமரியில் தான் இருக்கிறது.

''நமது ஒற்றுமையை - நமது பண்பாட்டை வளர்க்க -சுற்றுலாத்துறை வளர்க்கப்பட வேண்டும். பல்வேறு இன மக்கள்-பல்வேறு நாகரிகம்-பல்வேறு பழக்க வழக்கம் கொண்ட நமது நாட்டில் ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குச் சுற்றுலாத் துறையைத் தவிர வேறு எந்தத் துறையும் கிடையாது. ஒரு மொழி மாத்திரம் ஒருமைப்பாட்டை உருவாக்கி விடும் என்று சொல்ல முடியாது. சுற்றுலா-ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்க உறுதுணையாக விளங்குகிறது''.

பொருட்காட்சியைத் தொடங்கிவைத்த மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''டிசம்பர், ஜனவரி மாதங்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மிக முக்கியமானவைகளாகத் திகழ்கின்றன. டிசம்பரில் தான் தமிழ்நாட்டில் - சென்னையில் கர்நாடக இசைவிழா தொடங்கப்படுகிறது. சுற்றுலாப் பொருட்காட்சி தொடங்கப்படுகிறது. ஜனவரியில் பொங்கல் விழா சிறப்பாக விளங்குகிறது.

''சுற்றுலா என்னும் சொல் இந்த இருபதாம் நூற்றாண்டின் மிகப் புகழ்வாய்ந்த சொல்லாகத் திகழ்கிறது. சுற்றுலா, தொழில் வளர்ச்சியை உருவாக்குகிறது. பலருக்கு வேலை வாய்ப்பை நல்குகிறது. அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. மென்மேலும் வருவாயைப் பெருக்குகிறது.

''தமிழகத்தின் கலைகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. தமிழகத்தின் பரத நாட்டியம் இன்று உலகெலாம் புகழப்படுகிறது.

''சுற்றுலா இந்திய ஒருமைப்பாட்டை வளர்ப்பது மட்டுமல்ல-உலக ஒற்றுமையையும் உருவாக்குகிறது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் நாம் மேலும் பல வளர்ச்சிப் பணிகளைச் செய்ய வேண்டும்''.

பொருட்காட்சித் திடலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள நிரந்தர உணவுவிடுதியை மாண்புமிகு செய்தி-சுற்றுலா, அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் திறந்து வைத்தார்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாக இயக்குநர் திரு. என். கோவிந்தன் இ. ஆ. ப. வின் நன்றி உரைக்குப்பின்னர் நடை பெற்ற திரு நடராஜ், திருமதி சகுந்தலா குழுவினரின் சிலப்பதிகாரக் காவியக் கூத்து, நாட்டிய நாடகம் பொருட்காட்சியின் தொடக்க விழாவுக்கு வந்திருந்த பொது மக்களின் நெஞ்சங்களில் மகிழ்ச்சி அலைகளை உருவாக்கியது.

நிகழ்ச்சித் தொகுப்பு:

**தமிழ்ப்பித்தன்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


“கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்”
பார்த்தாலே தெரிகி
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

...No. TNMS(C)/PP-23
...எண். M. 8676



இலங்கையிலுள்ள வெளிக்கடைச் சிறைச் சாலையில் கொலையுண்ட இலங்கைத் தமிழர் விடுதலைப் போராட்ட வீரர் திருகுட்டிமணியின் குடும்பத்தினா சென்னையில் வசிப்பதற்கு, அரசு செலவில் ஒரு வீடு அளித்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன் பேரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி காலனி யில், உயர் வருவாய் வீடு ஒன்று திரு. குட்டி மணியின் குடும்பத்தாரிடம் 7.11.83 அன்று தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. ஏ. செல்லையா அவர்களால் வழங்கப்பட்டது.

இலங்கைச் சிறைச் சாலையில் அடித்துக் கொல்லப்பட்ட திரு. தங்கதுரையின் மனைவி திருமதி நவமணியிடம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. ஏ. செல்லையா, நந்தனம் 9 அடுக்கு குடியிருப்பில் 6-பி எண்ணுள்ள வீட்டை 2-1-84 அன்று ஒப்படைத்தார்.







தமிழகத்திற்கு வருகை புரிந்த லண்டன் காமன்வெல்த் பாராளு மன்றச் சங்கத்தின் நிர்வாகக் குழுத்தலைவர் திரு. ஜி. ஆர். ஓட்டன் ஹெய்மர் அவர்களை சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத்தலைவர் திரு.க.ராசாராம் அவர்கள் வரவேற்றார்.





சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 16.1.84ல் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளின் போது, 1983ஆம் ஆண்டுக்கான திரு.வி.க. விருதினை, பன்மொழிப் புலவர் டாக்டர் கா. அப்பாதுரையார் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார்.



பொங்கல் திருநாளையொட்டி மாமல்லபுரத்தில் 17.1.84 அன்று கட்டுமரப் போட்டி நடைபெற்றது. மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் துவக்கி வைத்தார். மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் திரு. க. கலைமணி அவர்கள் விழாவிற்கு தலைமை வகித்தார்.



# இனிய தமிழுக்காக இந்த அரசு எதையும் செய்யும்! எதையும் தாங்கும்!

— மாண்புமிகு முதல்வர் டாக்டர் **எம்.ஜி.ஆர்.**

திருவள்ளுவர் பெயரைச் சொல்லி நாமும் புகழ் பெறுகின்ற நாள், இந்த நாளாகும். சிலரைப் பாராட்டுவதன் மூலம் நாம் புகழ் பெறுகிறோம்,

இங்கே 2 மணி நேரத்துக்கு மேலாக இசை நிகழ்ச்சியை நடத்தி உங்களை எல்லாம் கட்டுப்படுத்திய சீர்காழி கோவிந்தராஜனின் மகன் சிவசிதம்பரத்தை முதலில் நான் பாராட்டுகிறேன்.

இங்கே வடமாநிலத்தைச் சேர்ந்த வங்கிப் பணிபுரியும் அதிகாரிகள் தமிழில் பேச முன்வந்து நம்மை எல்லாம் திகைப்படையச் செய்திருக்கிறார்கள். அவர்களது உணர்வுக்கு நான் தலை வணங்குகிறேன். இந்த உணர்வு அனைவருக்கும் வரவேண்டும் என்பதுதான் நமது கொள்கை; அண்ணா அவர்கள் கொண்டிருந்த கொள்கை.

திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றிப் பேசுவதற்கு முன்னர் தமிழைப் பற்றி பேசலாம் என்று விரும்புகிறேன். ஏனெனில் தமிழை நன்கு தெரிந்தவர்கள்கூட, படித்தவர்கள் கூட, சொற்களை உச்சரிக்கும்போது 'ன' என்ற வார்த்தையை 'ண' என்று உச்சரிக்கிறார்கள். மனம் என்பதை மணம் என்றும், மனிதன் என்பதை மணிதன் என்றும் உச்சரிக்கிறார்கள். சில கவிஞர்கள்கூட, கவிதைகளை நன்றாக எழுதிவிட்டு, படிக்கும்போது இந்தத் தவற்றைச் செய்கிறார்கள். நம்மைப் பார்த்துச் சிறுவர்களும் தவறு செய்யத் தொடங்கிவிடுவார்கள். அதனால் அப்படிப் பட்டவர்கள் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

டெலிவிஷன், வானொலி ஆகியவற்றில் சிலர் இப்படிப் பேசுகிறார்கள். அவர்கள் யார் என்பதை நான் சொல்லக் கூடாது. ல, ழ, வித்தியாசம் தெரியாமல் உச்சரிக்கிறார்கள். மேற்படி நிறுவனங்கள் இதைத் திருத்த வேண்டும். இந்த இரண்டு நிறுவனங்களும் நிச்சயம் இதனைக் கவனிக்கும் என்று நம்புகிறேன். இப்படிப்பட்ட இழிவான நிலை தமிழகத்தில் வராது காப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன்..

சிறுவயதில் எனக்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள் மிக எச்சரிக்கையாகக் கற்றுக் கொடுத்தார்கள். நாங்கள் அந்த வகையில் வளர்க்கப்பட்டோம். நான் அதிகம் படித்தவன் அல்ல.

நான் சிறு வயதில் பாட்டெழுதலாம் என்று எண்ணி, 'ஆதி அந்தம் இல்லாத ஆதி நாராயணன்' என்று எழுதினேன். அப்போது எனது தாயார் 'இருக்கிற தரித்திரம் போதாதா' என்றார்கள்.

பாட்டு எழுதப் படித்தவர்கள், தரித்திரர்களாக இருப்பார்கள் என்ற நிலை 30, 40 ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது. தமிழ் படித்தவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள் என்ற நிலை இங்கே எத்தனையோ ஆண்டுகளாக இருந்து வருகிறது. இப்போதும் அப்படித்தான் இருக்கிறது என்று யாராவது சொன்னால்,நான் தலைகுனிந்துபோகும் நிலைதான் இருக்கிறது.

ஆனால் தமிழைக் கற்றவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே, ஓரளவுக்கு அவர்களுக்கு நிம்மதியை அளிக்கும் வகையில் சில ஏற்பாடுகளை நாம் செய்து வருகிறோம்.

அரசு அதிகாரிகள் தமிழில்தான் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், உடனே பிரிவினை வாதி என்ற பட்டத்தையும், சுயமரியாதைக்காரன், தி.மு.க.விலிருந்து வந்தவன் என்ற பட்டத்தையும் அளித்து விடுகிறார்கள். தன்னுடைய மரியாதையைக் காத்துக் கொள்வது எப்படித் தவறாகும்?

தமிழரசு
கன்னியாகுமரி மாவட்டச் சிறப்பிதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2015
ருத்ரோத்காரி — தை 18
மலர் : 14 இதழ் : 15
1-2-1984

சீர்திருத்தக்காரன் என்றால் கடவுளை நம்பாதவன் — பண்பில்லாதவன் - அடக்கமில்லாதவன்-அகந்தையுடையவன் என்றெல்லாம் பலரும் பொருள் கொள்ளுகின்றனர்.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், எந்த ஒரு அதிகாரியும் ஓராண்டுக்குள் தமிழில் படித்து, தமிழில் பேசி, தமிழில் எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினேன். அதற்குச் சில அதிகாரிகள் முணுமுணுத்தார்கள்; சிலர் கோபித்தார்கள்; அலுவலகங்களில் உணவருந்துகின்ற நேரங்களில், சிறு குழந்தைகள் போல, ''இவர் ஆட்சி இன்னும் கொஞ்ச காலம்தானே! இந்த அதிகாரம் நிரந்தரமாக முடியாது!'' என்று சொன்னது எல்லாம் எனக்குத் தெரியும்,

இஙகே தமிழில் பேச முயற்சி எடுத்த வங்கி அதிகாரிகள் அடுத்த முறை பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்போது, இன்னும் நன்றாகத் தமிழைப் பேசுவோம் என்று சொன்னார்கள். இதைக் கேட்கும்போது எப்படி இருக்கிறது தெரியுமா? இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்று கூறினார்களே-அப்படி இருக்கிறது.

இப்போது கர்நாடக மாநிலத்தில் ''ஓர் ஆண்டுக்குள் அதிகாரிகள் கன்னடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்று அரசு சொல்லியிருக்கிறது. ''கன்னடம் தெரிந்தவர்களுக்கே அரசு வேலை கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் போராடப் போகிறேன்'' என்று எனது சகோதரர்-நடிகர் ராஜ்குமார் சொல்லியிருக்கிறார். இந்தப் பிரச்னையில் சுமுகமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கர்நாடக அரசு ஒரு குழுவை நியமித்துள்ளது.

வங்காளத்தைச் சேர்ந்த வங்கி அதிகாரிகள் தமிழகத்தில் பணியாற்றுகிறார்கள்; தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் காஷ்மீரில்-மேகாலயாவில்-இன்னும் மற்ற மாநிலங்களில் பணி புரிகிறார்கள். ராஜகுமார் போடும் நிபந்தனைப்படி பார்த்தால் என்ன நடக்கும் என்று நான் சொல்ல விரும்பவில்லை. இந்த நிலை ஏற்படுமானால் ஒருமைப்பாடு என்பது சந்தேகத்திற்குள்ளாகிவிடும்; இந்தியா முழுதும் ஒன்று; எல்லோரும் எங்கும் பணியாற்றலாம்!



நான் அவரைச் சந்தித்துப் பேச இருக்கிறேன். ஆங்கிலம் மட்டுமே தெரிந்த அரசு அலுவலர்கள்-வட்டார மொழியைக் கற்றுக் கொள்வதற்கு ஓராண்டு அவகாசம் தர வேண்டும் என்பதை அவரிடம் வலியுறுத்த இருக்கிறேன்.

இங்கே நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் இதுதான். புலவர்கள் வயது அதிகமானாலும்கூட அவர்களிடம் புலமை அதிகமாகத்தான் இருக்குமே தவிர, குறையாது. அவர்கள்,பிரச்சினைகள் பற்றி, நூல்கள் எழுத வேண்டும். நல்ல பாடல்கள் பள்ளிக் குழந்தைகளுக்காக எழுத வேண்டும். பள்ளியிலே பயில அறிவியல், சமுதாய இயல், ஆகியவை பற்றிப் பாடல்கள் எழுதிக் கொடுக்க வேண்டும்; குழந்தைப் பருவத்தில் அவர்களிடம் சொல்லப்படும் கருத்துக்கள் எளிதில் மனத்தில் பதிந்துவிடும்.

பாடல்கள் எப்படி இருக்க வேண்டும்? நான் விளம்பரத்திற்காகச் சொல்கிறேன் என்று கருத வேண்டாம். 'ஒருதாய்மக்கள் நாம் என்போம்; ஒன்றே எங்கள் குலம் என்போம்' என்று ஒரு பாடல் உண்டு. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கருத்தில்உள்ள 'ஒன்றே குலம்' என்பது இந்தப் பாடலில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பாடல்கள் பசுமையாக மனத்தில் பதிந்துவிடும். சிறுவர்கள் துவக்கத்தில் இதுபோன்ற பாடல்களைப் பாடிப் பழகிவிட்டால், அவர்கள் பிற்காலத்தில் நல்லவராக வளர-மனத்தில் ஊக்கம் பெற - அச்சத்தை அகற்றி வாழ முடியும்.

அடுத்த ஆண்டு முதல்,தொழில் கல்வியைக் கற்றுக் கொடுக்க இருக்கிறோம். தொழில் கல்வியைக் கற்றுக் கொடுப்பதற்குரிய பாடங்களைக் கொண்ட நூல்களை வெளியிட முயற்சிகள் செய்து வருகிறோம். படித்தவன் பயனற்றவன் என்ற நிலையை மாற்ற-படித்தவன் பயனுள்ளவன் என்ற நிலையை ஏற்படுத்த முயற்சிகள் செய்து வருகிறோம்.

தொழில் கல்வியைத் துவங்கும் எண்ணம் என்னுடையதென்றாலும்-கல்வி அமைச்சர் தலைமைச் செயலாளர்-கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோருடன் கலந்து பேசிப்பேசி ஆலோசனைகள் நடத்தி வருகிறோம்.

உயர்ந்த கல்வி கற்கும்போதே உழைக்கும் கல்வியையும் மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறோம். தனக்கு விருப்பமான தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கற்றுக் கொள்வது மோசமான காரியம் அல்ல என்பதை மாணவர்கள் உணர வேண்டும்.

பந்து, மட்டை, கேரம்போர்டு போன்ற விளையாட்டுப் பொருள்களை-40 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களை -நாம் ஆண்டுதோறும் வெளிமாநிலங்களிலிருந்து வாங்கி வருகிறோம். இந்தப் பொருள்களை இங்கேயே மாணவர்களைக் கொண்டு செய்தால் என்ன? அதனால் பல பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமே! இதைப்போலவே மருத்துவமனைகள், தங்கும் விடுதிகள், அலுவலகங்கள் இங்கெல்லாம் உள்ள மேஜைகளில் பயன்படுத்தப்படும் துணி விரிப்புகளை நமது அரசு தொழிற்சாலைகள் உருவாக்கி அங்கு செய்தால் பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் தர முடியும்.

நமது நாடு, நமது மக்கள், நமது மொழி என்ற உணர்வு நமக்கு வேண்டும். அயர்லாந்தில் அவர்கள் தங்கள் மொழியை மிகவும் போற்றுகிறார்கள் என்று அறிகிறேன். பிரிவினை வேண்டாம்; அந்தக் கொள்கையை முன்பே விட்டுவிட்டோம். நமக்கு என்று உள்ள மொழியை நாம் காப்பாற்ற முயலும்போது நம்மை ஏன் பிரிவினைவாதிகள் என்று கருத வேண்டும்? நம் மீது ஒரு மொழி திணிக்கப்படுவது கூடாது என்று சொன்னோம்-சொல்கிறோம்-இன்னும் சொல்வோம்! தமிழக அரசு-அ.தி.மு.க. அரசு, திணிப்பு மொழியை ஏற்றுக் கொள்ளாது என்று சொல்கிறோம்.

நான் பதவி ஏற்றதும், கோவில்களில் எல்லாம் புலவர்கள் நியமிக்கப்பட வேண்டும்; அவர்கள் தேவாரம் முதலிய நூல்களைச் சொல்லித் தருவார்கள் என்று சொன்னேன். ஆனால் அறநிலையத்துறையிடம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய பணம் இல்லை. அதற்குக் காரணம்,பல சொத்துக்கள் தனியாரிடம் சிக்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை மீட்கும் வேலையில் ஈடுபட்டால் அதற்கொரு போராட்டம் தொடங்கப்படுகிறது.

டெல்லியிலிருந்து கடிதம் வருகிறது-ஓவர் டிராப்ட் தொகையை உடனே திருப்பிக் கொடுங்கள் என்று! இங்கே உள்ளவர்கள் பட்ஜெட் வர உள்ளதே, புதிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டியுள்ளதே, அதற்காகப் பணம் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அங்கே தடுப்பது-இங்கே கேட்கச் சொல்லுவது! இது முறையா?

தமிழகத்தில் உள்ள அதிகாரிகள் துவக்கத்தில் எங்களுக்கு ஒத்துழைப்புத் தராவிட்டாலும், தற்போது, திட்டங்களைத் தீட்டுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் எங்களுக்கு ஒத்துழைப்புத் தருகிறார்கள். தமிழகத்தில் உள்ள அதிகாரிகளுக்கு இணையாக, இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எங்கும் கிடையாது. எத்தகைய திட்டத்தையும் நிறைவேற்றும் திறன் அவர்களுக்கு உண்டு.

பல திட்டங்கள் முதலில் ஏட்டளவில் தான் இருந்தன. மக்களுக்குத் தேவை இந்தத் திட்டங்கள் என்று சொன்னதும் அதிகாரிகள் துணிந்து, பொறுப்புகளை ஏற்றுத் திட்டங்களை நிறைவேற்ற ஒத்துழைப்பு நல்குகிறார்கள். அந்தத் திட்டம் தான் சத்துணவுத் திட்டம். இதனைத் தக்க வகையில் நிறைவேற்றுவதற்குத் தலைமைச் செயலர் திரவியம் இருந்தார். அவர் திறமையான அதிகாரியாக இருந்தார். தற்போது இருக்கும் தலைமைச் செயலரும் மிகவும் உதவியாக இருக்கிறார். அண்ணா அவர்களின் காரியதரிசியாக இருந்தவர்-அதனால் மக்கள் பிரச்னையை இவர் நன்கறிவார்.

குழந்தைகளுக்குப் பாடல் எழுதும் புலவர்களின் ஒரு பாடலுக்கு ரூ. 500 வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பொ. திருகூடசுந்தரம்பிள்ளை எழுதியதுபோல கேள்வி-பதில் முறையில்கூட அது அமைக்கப்படலாம். எல்லோரும் நாட்டுக்காக எழுதுங்கள். பாடலைப் புலவர் குழு தேர்ந்தெடுக்கும். அவை நூலாக வடிவம் பெறும். கல்வி அமைச்சர் ,குழுவின் தலைவராக இருப்பார். கல்வித்துறை அதிகாரிகள் ஓரிருவர் உறுப்பினராக இருப்பார்கள்.



## அறிவும் ஆற்றலும்!

*அறிவினாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்!*

—பேரறிஞர் அண்ணா.

பள்ளிகளில் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட வேண்டும் என்ற உத்தரவுபோட வேண்டும். இசைத் தட்டுகளில் ஒலித்தால் மட்டும் போதாது. மாணவர்களுக்கும் அந்தப் பாடல் பாடம் ஆக வேண்டும். எவ்வளவோ நாட்டில் எழுதப்படுகின்றன. ஒரு பத்து, பன்னிரண்டு வரிகளையாவது நாம் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டால் அது நமக்குக் கட்டாயம் பயன்படும்.

திருக்குறள் 2 வரிகளில்தான் எழுதப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் யாருக்காக எழுதினார்? தமிழர்க்குப் பயன்படுவதற்காக எழுதினார். தமிழ் வளர்ச்சிக்குப்பயன்படுவதற்காக-தன் குடும்பத்திற்காக அல்ல. தனக்காக அல்ல! 2000 ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் நமக்குப் பாராட்டுக் கிடைக்கும் என்பதற்காக அவர் எழுதவில்லை. அவர் தனது கடமையைச் செய்தார். அதன் பலன், இன்று தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

பேரறிஞர்களை அவர்கள் இருக்கும் போது பாராட்டுவது இல்லை. மறைந்தபின் பாராட்டி வருகிறோம். புலவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். தமிழுக்காக இந்த அரசு எதையும் செய்யும்; எதையும் தாங்கும்! அதை நம்புங்கள்! உதவுங்கள்! நல்ல வாழ்க்கை பெறுங்கள்! எதிர்காலச் சந்ததியினருக்கு நல்ல வாழ்வு கொடுங்கள்.

தமிழ் கற்ற புலவர்கள் அத்தனை பேருக்கும் உதவி செய்துவிட வில்லையே என்பது எனது நீண்டநாள் வேதனை. அனைவருக்கும் உதவும் வகையில் ஒரு திட்டத்தை நிறைவேற்ற எண்ணியுள்ளேன். அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளில் இருந்து, தமிழகத்தில் புலவர் பட்டம் பெற்ற பெருமக்கள் அனைவரின் வாழ்க்கை வசதி, நிதி நிலையை அறிந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்க நான் முடிவு செய்திருக்கிறேன். புலவர்கள் துன்பப்பட்டு வேதனைப்பட்டு மறையக்கூடாது-தமிழ்படித்தவர்கள்-தமிழுக்காக வாழ்பவர்கள் - மன நிறைவோடு மறைய வேண்டும் என நான் கருதுகிறேன்.

**[16-1-84 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற 'திருவள்ளுவர் திருநாளில்' ஆற்றிய உரையிலிருந்து]**



# திருவள்ளுவர் திருநாள்

# செந்தமிழ் வளர்ச்சித்திருநாள்

தைத்திங்கள் இரண்டாம் நாள். அதாவது ஜனவரி 16ஆம் தேதி. சென்னை வள்ளுவர் கோட்டம் புதுப் பொலிவுடன் விளங்கியது. திருக்குறளை உலகுக்கு அளித்த திருவள்ளுவரின் பிறந்த நாள் விழா தமிழக அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆண்டுதோறும் நடைபெறும் திருவள்ளுவர் திருநாளில், அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நிதி உதவி அளிக்கும் நிகழ்ச்சியும், சிறந்த நூல்களை எழுதிய ஆசிரியர்களுக்குப் பரிசுத் தொகை - பதிப்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்று வருகின்றன. பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களுக்கு திருவி.க.விருதுவழங்கும்நிகழ்ச்சி, இந்தியஅரசு வங்கி ஆட்சிச்சொல்லகராதி வெளியீட்டு நிகழ்ச்சி, சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்பு நூல், தமிழ்நூல் விவர அட்டவணை ஆகியவை வெளியிடப்படும் நிகழ்ச்சி என, மேலும் சில நிகழ்ச்சிகளை இந்த ஆண்டு திருவள்ளுவர் திருநாள் தன்னோடு இணைத்துக் கொண்டது.

வள்ளுவர் கோட்டம் பிற்பகல் 4 மணிக்கே நிறைந்துவிட்டது. 4.30 மணி அளவில் டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம் குழுவினரின் இசை நிகழ்ச்சிதொடக்கமாகியது. பாரதியார் பாடல்கள், பவேந்தர் பாடல்கள், மற்றும் பல கவிஞர்களின் பாடல்களைப் பாடி அவையினைக் கவர்ந்தார் சிவசிதம்பரம். ஏறக்குறைய இரண்டு மணி நேரத்துக்கு மேல் இசை விருந்தை வழங்கி விழாவுக்கு வந்திருந்த அனைவரின் உள்ளங்களையும் நிறைத்தார்.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் சிலம்பொலி திரு சு. செல்லப்பன் வரவேற்புரை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''உலகத்தில் எத்தனையோ நூல்கள் இருக்கின்றன. அவற்றில் திருக்குறளுக்குத் தனிச் சிறப்பு உண்டு. குறள் ஒரு விளக்கு என்று சொல்லப்படுகிறது. பிற விளக்குகள் புற இருளை நீக்கும். குறள் அக இருளை நீக்கும். சிறப்புமிக்க குறளை உருவாக்கிய திருவள்ளுவருக்குச் சிறப்புற விழா எடுக்கப்படுகிறது. முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலத்தில் தமிழ் கொண்டாடப்படுகிறது. தமிழுக்கெனத் தனிப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்திய குரிசிலாக அவர் விளங்குகிறார். இவரது ஆட்சிக்காலம் தமிழுக்குப் பொற்காலம்.''



விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''தமிழக அரசு எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து இரண்டாண்டுக் காலமாகச் செயலாற்றி வருகிறது. ஆரம்பத்தில் இது பலராலும் அலட்சியப்படுத்தப்பட்டது. அரசின் சார்பில் வெளியிடப்பெறும் புத்தகங்களில் எழுத்துச் சீர்திருத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதனை எல்லோரும் கடைப்பிடிக்கவேண்டும். எழுத்தாளர்கள் அதனை நிறைவேற்ற வேண்டும் என்பது எங்களது ஆசைகள்.

''சமுதாயத்தின் மூலை முடுக்கெல்லாம் விஞ்ஞானக் கருத்துகள் பரவி ஆக வேண்டும். பல்வேறு சமுதாயம், நூல்களின் மூலம் முன்னேறுவதை நாம் நோக்கும்போது, புத்தகங்களின் மூலம் விஞ்ஞானக் கருத்துக்கள் நிறைய வெளிவந்தாக வேண்டும் என்பது உறுதியாகிறது''.

இந்திய அரசு வங்கி ஒரு குழுவை அமைத்து உருவாக்கியுள்ள 'இந்திய அரசு வங்கி ஆட்சிச் சொல் அகராதி' குறித்து இந்திய அரசு வங்கிப் பொதுமேலாளர் (திட்டம்) திரு.வி.எம்.டி. ஜோஷி உரையாற்றினார். தமிழ் மொழியை அறியாத அவர் தமிழில் பேசி அனைவரையும் வியப்படையச் செய்தார். அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''மாணவர்களுக்கும் ஏனைய பொதுமக்களுக்கும் வங்கி அலுவலர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இந்நூல் பயன்படும் என்று நாங்கள் கருதுகிறோம்.''

மழலைத் தமிழில் உரையாற்றி விட்டு இருக்கையில் வந்தமர்ந்த ஜோஷி அவர்களை, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள், கைகுலுக்கிப் பாராட்டினார்.

வங்கி ஆட்சிச் சொல் அகராதியை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெளியிட, இந்திய அரசு வங்கியின் சென்னைக் கிளையின் பொதுத் தலைமை மேலாளர் திரு கபில்தேவ் நய்யார் முதற்படியைப் பெற்றுக்கொண்டார்.

அடுத்து, திரு நய்யார் தமிழில் உரையாற்றினார். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த அவர் பைந்தமிழைப் பேசிய பாங்கு- அவையினரின் உள்ளத்தில் ஆனந்த அலைகளை உருவாக்கியது. அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''முதலில் இந்த நூலை எங்கள் அலுவலகம் பயன்படுத்துவதற்காக ஆக்கினோம். தமிழ் மக்கள் வங்கியோடு நன்கு பழகவும், தெளிவு கொள்ளவும், வங்கி-மக்கள் தொடர்பு நெருக்கம் ஆகவும் நூலை விரிவு செய்தோம்''

''நான் தமிழ்மொழியை விரும்பிப் படித்தாலும் இன்னும் தொடக்க நிலை மாணவன்தான். என் பணிக்காலத்தில் இன்னும் சிறப்பாகப் படித்துப் பேசப் பழகி விடுவேன்.''

தமது உரைக்குப் பின்னர், வங்கி ஆட்சிச்சொல் அகராதி நூலின் படிகளைப் பேழையினுள் வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் வழங்கினார் திரு கபில்தேவ் நய்யார்.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டார்:



'' திருவள்ளுவர் விழாவாக மாத்திரமல்லாமல் தமிழ் வளர்க்கும் நாளாக நடத்த நாம் சபதம் ஏற்று முதல்வரின் ஆணைப்படி கடந்த 5 ஆண்டுகளாக, இது தமிழ் வளர்ச்சித் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ் வளர்ச்சியில் மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் இந்த விழா-இலட்சிய விழாவாக நடத்தப்பட வேண்டும் என்று புரட்சித் தலைவர் ஆணையிட்டார். தமிழ்மொழியை இனி யாரும் அழிக்க முடியாது என்ற மகத்தான கருத்தைப் 'புரட்சித் தலைவரின் ஆட்சி ஏற்படுத்தியுள்ளது.

''இந்திய அரசு வங்கியைச் சேர்ந்த கபில்தேவ் நய்யார் அவர்கள் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர். திரு ஜோஷி கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர்கள் தமிழில் -மழலைத் தமிழில் பேசியது நமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

''இந்தியாவில் முதன் முதலில் அச்சேறிய மொழி தமிழ்மொழிதான். 500 ஆண்டுகளுக்கு முன்னர் அச்சேறிய மொழி தமிழ்! கிறிஸ்துவப் பாதிரியார்கள் ஆங்கிலம்-லத்தீன் மொழிகளை அறிந்தவர்கள்-இங்கு வந்து தமிழைக் கற்றுக் கொண்டு தமிழை அச்சேற்றினார்கள்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாரதி பாடினாரே, அந்த உண்மையான சிறப்பு தமிழுக்கு மாத்திரமே கிடைத்திருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ்ப் பல்கலைக் கழகம் காணவேண்டும் எனப்பாரதி விரும்பினார். பாண்டித்துரைத்தேவரால் தொடங்கப்பட்ட 4ஆம் தமிழ்ச்சங்கத்திற்கு பாரதி வாழ்த்துக் கூறினார்.

''கிறிஸ்துவப் பாதிரியார்களும் மகாகவி பாரதியாரும் கண்ட கனவுகள் இப்போதுதான் நனவாகின்றன. புரட்சித் தலைவரின் காலத்தில் தான் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நாம் கண்டிருக்கிறோம். புரட்சித் தலைவரின் காலத்தில் தமிழ் பாதுகாக்கப்படுகிறது; வளர்க்கப்படுகிறது; தலை நிமிர்ந்து நிற்கிறது.

'' திருவள்ளுவர் திருநாளை தமிழ்ச் சமுதாயம் நினைக்க வேண்டும் என்ற லட்சியத்துடன், தமிழுக்கு— தமிழ்ச் சமுதாயத்திற்கு-தமிழ்ச்சான்றோர்களுக்கு-தமிழ் அறிஞர்களுக்கு இது பொற்காலம் என்ற முறையில்- இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் புரட்சித் தலைவர். உலகத்தில் உள்ள தமிழ் மக்கள் எல்லாம் இதனை வாழ்த்திக் கொண்டிருப்பார்கள். தமிழை வளர்த்திடும் நாளாக-அறிவினை நிறைவேற்றுகின்ற நாளாக திருவள்ளுவர் திருநாள் அமைகிறது.''

அடுத்து, சிறப்புரையாற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்ததாவது:

''வனப்பு அனைத்தையும் காட்டும் மாதம் தைமாதம். ஏரி, குளம் நிறைந்து, கரும்பும் நெல்லும் சிறந்து, மஞ்சளும் இஞ்சியும் விஞ்சி நிற்பது இந்த மாதத்தில்தான். வெளியூருக்குச் சென்றவர்கள் எல்லாம் திரும்பி வரும் காலம் இதுதான். போருக்குச் சென்ற வீரர்கள் தங்கள் காதலியைக் காணவரும் காலம் இதுதான். பொலிவு கொழித்து நிற்கும் காலம்.



இது அறுவடைத் திருநாள்; ஆண்டின் முதல் நாள். வாழ்வில் நம்பிக்கை தரும் மாதம் தை. வேளாண்மைக்காகக் கடன் வாங்கியவர்கள், கடனை அடைப்பது தைமாதத்தில் தான். புலவர், பாணர், கூத்தர் ஆகியோர் மன்னர்களிடம் பரிசு வாங்குவது இந்த மாதத்தில் தான். இதை விட்டுவிட்டால், ஓராண்டுக்காலம் கழித்துத் தான் பரிசு வாங்க முடியும். மன்னர்களைப் புலவர்கள் காணும் நாள் - காணும் பொங்கல் என்று அழைக்கப்பட்டது. பின்னர் இது மருவி கன்னிப் பொங்கல் என மாறிற்று.

''திருவள்ளுவர் திருநாளை விடுமுறை நாளாக்கியது. மட்டுமில்லாமல் அதனைக் கொண்டாட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எண்ணி- தமிழுக்கு ஏற்றம் தந்தவர்கள் யார் யாரோ, தமிழை வளர்ப்பவர்கள் யார் யாரோ அவர்கள் எல்லாம் இந்த நாளில் பாராட்டப்பட வேண்டும் என்று கருதி- இந்த நாளைக் கொண்டாட ஆணையிட்டுள்ளார்கள். அறிவுத் திருவிழாவாக திருவள்ளுவர் நாள் விளங்க வேண்டும் என்ற முறையில் வளர்ச்சித் திருநாளாக நாடே கொண்டாடுகிறது.

''அறநூலை - அறிவு நூலை- ஒழுக்க நூலை-நீதி நூலை -சமய நூலை - நெறிநூலை - பொது நூலை - முதல் நூலை -உலக நூலை - செயல் நூலை -பெரும் நூலை-இலக்கிய நூலை -அணி நலம் வாய்ந்த நூலை - சொல்லழகுப் பெரும் நூலை -உலகத்தார் அனைவரையும் கவரத்தக்க



பட்டுக்கோட்டை

பி. வி. கிரி  இராசேந்திரன்  திருக்குறளார்

ஒரு நூலை -ஆராய்ச்சி நூலை- ஆக்கித் தந்தவர் வள்ளுவப் பெருந்தகையாவார். மறந்தும் பிறன் கேடு சூழற்க, சூழின் அறஞ் சூழும் சூழ்ந்தவன் கேடு' என்னும் குறளின் மூலம் அறநெறியையும்-சட்டத்தையும் அவர் எடுத்துக் கூறுகிறார்.''

அடுத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். விழா நிறைவுச் சொற்பொழிவு ஆற்றினார். (உரை பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ளது)

பின்னர் 1983ஆம் ஆண்டின் சிறந்த எழுத்தாளருக்குரிய திரு வி.க விருதினைப்பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களுக்கு வழங்கினார் மாண்புமிகு முதல்வர். தமிழ் வளர்ச்சித் துறையின் வெளியீடுகளான தமிழ் நூல் விவர அட்டவணை 7ஆம் தொகுதி 2ஆம் பிரிவு, Emperor of John என்னும் நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு நூல்; Vicar of Wakefield என்னும் நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு நூல் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் வெளியிட்டார். மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவற்றைப் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர், அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர் முப்பது பேருக்கு உதவித்தொகை வழங்கிய மாண்புமிகு முதல்வர் 1981-1982 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த தமிழ் நூல்களை எழுதிய எழுத்தாளர்களுக்குப் பரிசுகளையும், பதிப்பாளர்களுக்குச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

திருவள்ளுவர் திருநாள் செந்தமிழ் மொழியின் வளர்ச்சித் திருநாளாக விளங்கி, வந்திருந்தோர் உள்ளந்தோறும் இல்லந்தோறும் மணம் பரப்பியது.

**நிகழ்ச்சித் தொகுப்பு :**

**—தமிழ்ப்பித்தன்.**

## ஆரல்வாய் மொழி கூட்டுறவு நூற்பு ஆலை



ஆரல்வாய்மொழியிலுள்ள கூட்டுறவு நூற்பு ஆலையில் மொத்தம் 150 பேருக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் 116அகதிகள் ஏற்கெனவே பயிற்சி முடிந்து இதே ஆலையில பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். 34 அகதிகள் தற்போது இவ்வாலையில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்த நூற்பு ஆலையில் மத்திய அரசு, அகதி ஒருவருக்கு ரூ. 15,000 வீதமும், மாநில அரசு ஒட்டு மொத்தமாக ரூ. 36,60,000 யும் தங்களது பங்காக முதலீடு செய்துள்ளன.

**அடுத்து வரும் இதழிலும் கன்னியாகுமரி மாவட்டக் கட்டுரைகள் இடம்பெறும்.**



# தொழிற் கல்விக்கு உதவும் திருக்கோயில்

**செ**ங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள மேல் மருவத்தூரில் இருக்கும் அருள்மிகு ஆதிபராசக்தி திருக்கோயில் கல்வி, மருத்துவ, பண்பாட்டு அறநிலை சார்பில் தைப்பூசப் பெருவிழாவும், ஆதிபராசக்தி தொழில்நுட்பக் கல்விக் கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் (19.1.84) சிறப்புற நடைபெற்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பங்கேற்ற இவ்விழா-மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் தலைமையிலும், பங்காரு அடிகளார் முன்னிலையிலும் நடைபெற்றது. மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் மற்றும் நாடாளுமன்ற-சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்களும் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

பத்தாயிரம் பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து உணவு உண்ணும் வசதியோடு சுமார் இரண்டேமுக்கால் ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள உணவுக் கூடத்தையும், தொழிற் கூடத்தையும் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்லாயிரவருக்கு இலவச உடைகளையும் வழங்கினார்.

இலங்கை அகதிகள் நிவாரண நிதிக்கு முன்னாள் மத்திய அமைச்சர் திரு. கே.எஸ். இராமசாமி மூலம் ரூ. 55 ஆயிரமும், மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்காக திரு.எஸ்.தியாகராசன் மூலம் ரூ. 55 ஆயிரமும் இந்த அறநிலையத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வரிடம் வழங்கப்பட்டன.

தொழிற்கூடம் அமைக்க அறநிலை சார்பில் ரூ. 22 இலட்சத்து 25 ஆயிரத்திற்கான காசோலை செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டி.ஆர். சீனிவாசன் இ.ஆ.ப. மூலம் மாண்புமிகு முதல்வரிடம் அளிக்கப்பட்டது.

அங்கு நடைபெற்ற சமபந்தியில் மாண்புமிகு முதல்வரும், மற்றும் அமைச்சர்களும், எல்லோரோடும் அமர்ந்து உணவு உண்டனர்.

விழாத் தொடக்கத்தில் -அருள்மிகு ஆதிபராசக்தி அறநிலைத் தலைவர் திரு எஸ். தியாகராசன் வரவேற்புரையாற்றினார். மகளிர் அறநிலைப் பிரிவுத் தலைவி திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் ஆண்டறிக்கை படித்தார்.

**முகப்பு:**

சென்னைத் தவுத்திடலில் [illegible] அகில இந்திய [illegible] மற்றும் [illegible] பொருட்காட்சியின் நுழைவு வாயில் [illegible] விவேகானந்தர் பாறையில் [illegible] சின்னத்தின் மாதிரியாக உருவ[illegible]பட்டிருக்கிறது.

முகப்பில் 18 அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சிலை. [illegible] தாணுமாலயன் திருக்கோயிலில் உள்ளதன் மாதிரி வடிவமாகும்.

வண்ணப்படம்: பி. [illegible]

# இறவாத சரித்திரம் படைத்த இமயத்துப் பொன்முடி

**கலைவை பா. வரதன்**




சீட்டாலும் வெண்மைதரும் சங்கே; நாட்டின்
சுவையான மாங்கனியே! சுகத்தை நீட்டும்
எட்டாத வான்நிலவே! ஏழை .நெஞ்சின்
எரிவிளக்கே! என்னண்ணா! எளியோர் வாழ்வைப்
பொட்டாக்கி பூவாக்கி புவியோர் போற்றும்
பொன்னாக்கி உன்னுடம்பைப் பொதுமை யாக்கி
எட்டிநின்ற எதிரிகளும் ஏற்றங் காண
எடுத்தபணி ஒன்றிரண்டா எடுத்துச் சொல்ல!

ஊர்ந்திருந்த தமிழகத்தை உயரச் செய்த
உத்தமனே! தத்துவமே! உலகத் தாயின்
பேர்சிறக்க வாழ்ந்தவனே! பெற்ற நாட்டின்
பெருமைக்குச் சீர்சேர்க்கப் பெருங்கா லத்தைச்
சோர்வின்றித் தந்தவனே! சோகப் பாட்டைச்
சுகப்பாட்டாய் மாற்றிவிடச் சொத்தைப் பாட்டை
வேரற்ற மரமாக வீழ்த்தி எங்கள்
வேட்கைக்கு வாழ்வளித்த வேந்தே வாழி!

காவிரிநீர் போன்றவனே! கடந்த காலக்
கடைச்சங்கப் புகழ்விரித்துக் கடமையாற்றி
ஓவியம்போல் பிறர்நெஞ்சில் ஒழுங்காய் வாழும்
ஒற்றுமையே! உன்பெயர்தான் ஒருமைப் பாடு!
காவியம்போல் கடல்மல்லைக் கவிதை தீட்டிக்
கண்மணியாம் தம்பியர்க்குச் சேர்த்தாய்;அன்பால்
தாவிவரும் தோழருக்குக் கொள்கை நெஞ்சம்
தந்தவனே! சந்தனமே! தலைவா வாழி!

இறவாத சரித்திரத்தை இறந்தும் காட்டும்
இமயத்துப் பொன்முடியே! இயக்க வானில்
மறவாமல் உதிக்கின்ற மதியே! மண்ணுள்
மறைவாக இருக்கின்ற மணியே! ஏட்டில்
திரளாக நிற்கின்ற திரண்ட சொல்லின்
திருவுருவே! தித்திப்பே! தெளிந்த காற்றே
உறவாகி உலகத்தின் உவமை யாகி
உறைபவனே! இனம்தழைக்க உதித்தோய் வாழி!

## குமரி மாவட்டம் – சில தகவல்கள்

**பூகோள அமைப்பு**

சுற்றுக்கோடு —8°05' முதல் 8°.35'
நேர்க்கோடு —77°05' முதல் 77°36'

**பரப்பும் மக்கட் தொகையும்**

| | |
|---|---|
| பரப்பு (ச.கி.மீ.) | 1672 |
| மக்கட்தொகை (1981) | 14,19,110 |
| மக்கள் அடர்த்தி | 849 |
| படித்தவர்கள் | 8,80,495 |
| சதவீதம் | 63 |

**முக்கியப் பயிர்களின் பரப்பு (1981—82)**

| பயிர் | பரப்பு (எக்டேர்) |
|---|---|
| நெல் | 52,000 |
| பயறு வகைகள் | 1,589 |
| மரவள்ளிக்கிழங்கு | 12,337 |
| நிலக்கடலை | 1,363 |
| வாழை | 2,063 |
| தென்னை | 15,461 |
| காய்கறிகள் மற்றும் பழங்கள் | 1,984 |
| புளி | 1,843 |
| முந்திரி | 2,350 |
| பனை | 3,082 |
| மா | 1,746 |
| பலா | 839 |

**குடி நீர் (1981-82)**

(செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அறிக்கையின்படி)

| | |
|---|---|
| கிணறுகள் | 60 |
| குழாய்க் கிணறுகள் | 624 |
| மேல்நிலைத்தொட்டி | 136 |



**கால்நடை வளர்ப்பு — பராமரிப்பு (1981-82)**

| | |
|---|---|
| கால்நடைகளின் எண்ணிக்கை ... | 235966 |
| கோழிகளின் எண்ணிக்கை ... | 386915 |
| கால்நடை மருத்துவமனை ... | 3 |
| கால்நடை மருந்தகங்கள் | 15 |
| வெக்கைநோய்த் தடுப்புத் திட்டம். | 1 |
| கோழி விரிவாக்க நிலையம் ... | 1 |
| நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு ... | 1 |
| வெக்கைநோய்த் தடுப்புச் சோதனைச் சாவடி ... | 1 |
| கேந்திர கிராம நிலையங்கள் ... | 4 |

**மீன்வளம் (1981-82)**

கடற்கரை நீளம்—68 கி.மீ.
கடல்மீன் உற்பத்தி—58,000 டன்கள்
மீன் இறங்கும் துறைகள்—41

**வனங்கள் (1981–82)**

| | ச.கி.மீ. |
|---|---|
| வனத்தின் பரப்பு ... | 445.64 |
| காப்புக் காடுகள் ... | 406.61 |
| காப்பு நிலம் ... | 40.03 |
| வனப்பொருட்களிலிருந்து உற்பத்தி (மரம் மற்றும் மென் மரங்கள்) ... | 573.269 கி.மீ. |
| விறகு ... | 330 டன் |

**நக்கியப் பயிர்களின் பரப்பு**

| | எக்டேர் |
|---|---|
| ரப்பர் ... | 12,165 |
| கிராம்பு ... | 110 |

**கல்வி**

| | |
|---|---|
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ... | 12 |
| தொழிற் கல்விக் கல்லூரி ... | 2 |

**பொதுக்கல்வி (1981-82)**

| | எண்ணிக்கை |
|---|---|
| துவக்கப்பள்ளிகள் ... | 357 |
| நடுநிலைப்பள்ளிகள் ... | 147 |
| உயர்நிலைப் பள்ளிகள் ... | 120 |
| மேல்நிலைப் பள்ளிகள்... | 56 |
| ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ... | 5 |

**மருத்துவம், உடல் நலம் மற்றும் குடும்ப நலம்**

| | |
|---|---|
| மருத்துவ மனைகள் ... | 9 |
| மருந்தகங்கள் ... | 8 |
| ஆரம்பச் சுகாதார நிலையங்கள் | 90 |
| தாய்சேய் நல விடுதிகள்... | 101 |
| நடமாடும் மருத்துவப் பகுதிகள் | 8 |
| பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் ... | 70 |
| செவிலியர் ... | 85 |
| துணைச் செவிலியர் ... | 182 |
| மருந்து கலவையாளர்கள். | 79 |
| பல் மருத்துவர்கள் ... | 3 |

**உள்ளாட்சி மன்றங்கள்**

| | |
|---|---|
| ஊராட்சி ஒன்றியங்கள் | 9 |
| பேரூராட்சிகள் ... | 66 |
| ஊராட்சிகள் ... | 88 |
| நகராட்சிகள் ... | 4 |
| நகரியம் ... | 1 |

## குமரி மாவட்ட இணைப்பிற்குப் போராடிய மறைந்த மாவீரர்கள்

திரு ஏ. நேசமணி
திரு நத்தானியேல்
திரு ஆர். பொன்னப்ப நாடார்
திரு ஏ. குஞ்சன் நாடார்
திரு சி. கோபாலகிருஷ்ணன்
திரு ப. ஜீவானந்தம்
திரு என். எஸ். கிருஷ்ணன்
திரு டி. கே. சண்முகம்
திரு எஸ். வி. முத்துக்கருப்பப் பிள்ளை
திரு காந்திராமன் பிள்ளை
திரு பி. சிதம்பரம் பிள்ளை
திரு ஏ. சிதம்பரநாத நாடார்
திரு டாக்டர் எம். இ. நாயுடு



# மூர்த்தி சிறியது... கீர்த்தி பெரியது!

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்.

ஆடவர் பெண்டிர் என மக்கள் குழுமியிருக்கின்றனர்.

எல்லாரும் ஏதோ ஒரு பிரச்சினையை மனத்தில் தாங்கிக் கொண்டு காத்திருக்கின்றனர், அந்தப் பிரச்சினை தீராதா என்ற ஏக்கமும் அவர்கள் முகத்தில் தெரிகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப. அவர்களை ஒவ்வொருவராக அழைக்கிறார்.

''என்னுடைய மகள் ஆசிரியை வேலைக்குப் படித்திருக்கிறாள். வேலை இல்லை. மிகவும் கஷ்டப்படுகிறோம்''—இது அவருடைய தாயின் வேண்டுகோள்.

''என் பிழைப்புக்கு வழியில்லை. எனக்கு ஏதாவது ஒரு உதவி செய்ய வேண்டும்'' இது ஒரு ஊனமுற்றவரின் பரிதாபக் குரல்.

அன்று, மக்கள் குறை கேட்கும் நாளானதால், பொதுமக்களின் குறைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுதாபத்துடன் கேட்டு, உடன் இருந்த சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் குறைகள் களைய ஆவன செய்து கொண்டிருந்தார்.

''ஒவ்வொரு திங்கட்கிழமையும் இருநூறு, முந்நூறு பேர் இப்படி கோரிக்கைகளுடன் வருகிறார்கள். இதில் 50 சதவிகிதம் பேர் வேலை வாய்ப்பு கேட்டு வருகிறார்கள்'' என்கிறார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும் நடந்த, நடக்கின்ற பணிகள் குறித்தும் ஆட்சித்தலைவர் அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறினார்—

**ஏ. வி. எம். கால்வாய்**

குளச்சல் பகுதியில் சுமார் 4 கி.மீ. தூரத்துக்கு ஏ. வி. எம். கால்வாய் ஒன்று உள்ளது. இதற்கு Amantha Victoria Marthandam கால்வாய் என்று பெயர். இது மார்த்தாண்டவர்மராஜா காலத்தில் வெட்டப்பட்டது. மிகப் பழமையான இந்தக் கால்வாய் முட்டைப்பாசி அடர்ந்தும், தூர்ந்து போயும், சுகாதாரமற்ற நிலையில் பயனில்லாமலும் இருந்து வந்தது.

இந்தக் கால்வாய் தற்சமயம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடலோர மக்கள் குளிப்பதற்கேற்ற வகையில் பாசிகளை அகற்றி, தூர் எடுத்துச் சீரமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் குளிப்பதற்கு எனத் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. கரை நெடுகிலும் பக்கச் சுவரும் எழுப்பப்பட்டு வருகிறது.

**சுய வேலைவாய்ப்பு**

குமரி மாவட்டத்தில் குறைந்த அளவு பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த இளைஞர்களின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் வழங்க மத்திய அரசு 60 இலட்சம் ரூபாய் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. 18 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களுக்கு இந்தக் கடன் கிடைக்கும்.

சிறுதொழில் தொடங்க—கடன் கேட்டு இம்மாவட்டத்தில் இதுவரை 3,097 பேர் தொழில் மையத்துக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். 292 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 27,19,100-க்கு கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல்.கே. திரிபாதி இ. ஆ. ப அவர்களின் பேட்டி



மக்கள் குறை கேட்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்

இதேபோல, சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் தொழிற் பயிற்சி பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்கள். தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சுயவேலை தொடங்க ரூ. 10 ஆயிரம் வரை தொழிலுக்குத் தகுந்தவாறு மானியம் மற்றும் கடனுதவி வழங்கப்படுகிறது.

**மீனவர்கள் நலம்**

மீனவர் நலனுக்கும் அரசு பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. அவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக்கொடுத்தல், மீன்வலை, கட்டுமரம் ஆகியவற்றுக்குக் கடனுதவி வழங்குதல், மீன் விற்பனைக்காக விற்பனைக் கூடங்கள் அமைத்துத்தருதல் போன்ற பணிகள் செவ்வனேநடைபெற்று வருகின்றன.

**ஆதிதிராவிடர் நலம்**

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களை உள்ளடக்கி 1964 சதுர கிலோ மீட்டர் பரப்பில் பரந்துள்ளது. இங்கு 12.22இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 60,173 பேர் ஆதிதிராவிட மக்களாவர். 6,358 பேர் பழங்குடியினங்களைச் சார்ந்தவராவர். மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிடர்கள் 4.14 சதவீதமும், பழங்குடி மக்கள் .023 சதவீதமும் ஆகும். ஆதிதிராவிடர்கள் 341 கிராமங்களிலும், பழங்குடியினர் 47 குடியிருப்புகளிலும் வசித்து வருகின்றனர்.

கல்வியைப் பொறுத்த மட்டில் ஆதிதிராவிடர்களில் 50 சதவிகிதத்தினர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். கல்விச் சிறப்பினால் இம்மாவட்டத்தில் தீண்டாமை உணர்வு நீங்கியுள்ளது. எல்லாவகையான பொது இடங்களிலும், ஆதிதிராவிட மக்கள் சாதிப் பாகுபாடு இன்றிப் பயன் பெறுகின்றனர்.

**தன்னிறைவுத் திட்டம்**

இம்மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 3கட்டமாக பயனுள்ள பள்ளி கட்டடங்கள், தாய் சேய் நல விடுதிக் கட்டடங்கள், குடிநீர்த் திட்டங்கள் முதலிய 809 வேலைகள் ரூ. 421.71 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு எல்லா வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**வறட்சி நிவாரணப் பணிகள்**

குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், பாசனக் கிணறுகளை மேம்பாடு செய்தல், சாலைகள் அமைத்தல், ஊருணிகள் பராமரிப்பு போன்ற 697 வேலைகள் ரூ. 56.05 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் வெகு காலமாகக் குடிநீர்ப் பற்றாக்குறையாக உள்ள ஆரல்வாய்மொழி, திருவட்டார், கருங்கல், திங்கள் சந்தை, ஏழுதேசம், வேர்க்கிளம்பி திற்பரப்பு, மருங்கூர், தேங்காப்பட்டணம், ஆறுதெங்கன்விளை முதலிய பதின்மூன்று பேரூராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 520 புதிய குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி நகரியப் பகுதி ஒரு முக்கியம் வாய்ந்த சுற்றுலாப் பகுதியாக உள்ளதால் உல்லாசப் பயணிகளுக்குக் குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கும் நகரியப் பகுதியை அழகுபடுத்தவும் பல்வேறுபணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்சமயம் இப்பகுதிக்கு நாகர்கோவில் குடிநீர்த் திட்டத்திலிருந்து நாள்தோறும் 82,500கேலன் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கல்லுவிளை கிணற்றிலிருந்து நாள்தோறும் 60,000 லிட்டர் குடி தண்ணீர் எடுக்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது. வளரும் நகரியத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நாள்தோறும் 3 இலட்சம் லிட்டர் தண்ணீர் கிடைக்கக் கூடிய குடிநீர்த் திட்டம் ஒன்று சுமார் ரூபாய் 29.99 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மேலும் கடற்கரையை அழகுபடுத்தவும், சிறுவர் பூங்கா அமைக்கவும், கழிவறைகள் கட்டவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சத்தான திட்டம் —சத்துணவுத் திட்டம்!**

இம்மாவட்டத்தில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. 1,221 முதலமைச்சர் சத்துணவுக் கூடங்கள் இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன.

2 வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயன்பெறும் கூடங்கள் :

கிராமப்புறங்களில்—584ம், நகர்ப்புறங்களில்—74ம் உள்ளன. இவை சமூகநலத் துறையின் கீழ் இயங்குவன.

5 வயதிற்கு மேற்பட்டு 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் பயன்பெறும் கூடங்களாவன:

பள்ளிச் சத்துணவுக் கூடங்கள் 552. வனத்துறையைச் சார்ந்தவை 4, ஆதிதிராவிடர் சத்துணவுக் கூடங்கள் 7, ஆக மொத்தம் 1221. இவை பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்குபவை.

இந்தச் சத்துணவுக் கூடங்கள் வாயிலாக நாள்தோறும் 1,35,000 குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு வழங்கப்படுகிறது. இவ்வாறு சத்துணவு வழங்கப்படுவதன் மூலம்,



ஏ. வி. எம். கால்வாய் சீரமைப்பு

பள்ளியில் கல்வி பயில வரும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. இத்திட்டம் அமல்படுத்தப்படுவதற்கு முன்பாக, பள்ளிகளில் குழந்தைகளின் வருகை 1,28,630 ஆக இருந்தது. இப்பொழுது 1,35,000 ஆக உயர்ந்துள்ளது.

இந்தச் சத்துணவுக் கூடங்களில் மொத்தம் 3,660 பேர் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர். வாழ்க்கையில் வாழ வழி தெரியாமல், துயரச் சுமையைச் சுமந்து கொண்டுள்ள கைம்பெண்களுக்கும், கணவனால் கைவிடப்பட்டு, நிராதரவாக உள்ள நிலையிலுள்ள தாய்மார்களுக்கும், இத்திட்டத்தில் முதலிடம் கொடுக்கப்பட்டு பணியிமலர்த்தப் பட்டுள்ளனர். இவ்வாறு பயனடைந்த 587 விதவைகள் இம்மாவட்டத்தில் சத்துணவுக் கூடத்தில் குழந்தைகளுக்குப் பணியாற்றுவதன் மூலம் தங்கள் வாழ்வில் ஒரு பிடிப்பினை ஏற்றுக் கொண்டு புது வாழ்வு பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

வறுமைக்கோட்டின்கீழ் உள்ள குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஊட்டச் சத்து இன்மையால் உடல் நலிவுற்று உள்ள வளர்ச்சி குன்றி இருந்த நிலையை மாற்றி, விளையும் பயிரை முளையிலேயே கவனித்து, உரம் இட்டு ஊட்டம் கொடுக்க, அக்குழந்தைகள் ஒளி படைத்த கண்ணினராக உறுதி கொண்ட நெஞ்சினராக மாறுகின்ற தன்மை இத்திட்டத்தின் தனிச் சிறப்பு ஆகும்.

கிராமப்புறங்களில் உள்ள ஏழைத் தாய் வேலைக்குப் போயிருக்கும்போது, வயல் வெளியிலும், சாலைப்புறங்களிலும் குழந்தைகளை விட்டுவிட்டு வேலை செய்கின்ற நிலை மாறி, அவர்கள் பாதுகாப்புடன் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுக் கூடத்தில் இருந்து உண்டு, பயின்று வளர்ந்து வருகின்ற நிலைகளைக் காண முடிகிறது.

ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவர்கள், இக்குழந்தைகளை அவ்வப்போது பார்வையிட்டு அவர்களின் உடல் நலனில் அக்கறை கொண்டு பணியாற்றுகிறார்கள்.

மேலும் இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக, இலவசப்பல்பொடித் திட்டம் 14-11-82 முதல் அமல்படுத்தப்பட்டு கிராமப்புற சத்துணவுக் கூடங்களில் பயில்கின்ற குழந்தைகட்கு மாதம் ஒரு முறை ஒரு பல்பொடி பாக்கட் கொடுக்கப்படுகிறது. குழந்தைகளின் நல் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் சிறந்த பற்களை அவர்கள் பெறுவது இன்றியமையாததாகும். ஆகையால் இலவசப் பல்பொடித் திட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

பல் சரியாக இல்லையெனில் பலவித நோய்களுக்கு வழி வகுக்கும். நோயற்ற வாழ்வு வாழ சிறந்த பற்கள் குழந்தைகளுக்கு அமைய வேண்டும் என்பதற்காக இதில் தனிக் கவனம் கொண்டு இத்திட்டம் சிறப்பாக இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றது. நாகர்கோவிலிலுள்ள 'சிட்கோ' நிறுவனத்தினர் பல்பொடியைத் தயார் செய்து கொடுக்கின்றனர். உணவுப் பொருட்கள், மாதந்தோறும் சத்துணவுக் கூடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்போது பல்பொடியும் விநியோகம் செய்யப்படுகின்றது.

அடுத்தபடியாக, 15-1-1983 அன்று முதல் முதியோர் உதவித் தொகை பெறும் 4,000 முதியோர்களுக்கு நான்தோறும் சத்துணவுக் கூடங்களின் வாயிலாக உணவு வழங்கப்படுகின்றது. அன்னாருக்கு,குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுமுன், உணவு வழங்கப்பட்டு அனுப்பி விடுகின்றனர். அதன் பின்னர் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில், குறுகுறு நடந்து சிறுகை அளாவுன்ற குழந்தைகள் பொலிவோடு வளர்ந்து வருகின்றனர். அவர்களின் சின்னஞ்சிறு கைகளில் ஒரு சரித்திரம் இருப்பதால் அவர்களின் வாழ்விலும் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு இத்திட்டம் இம்மாவட்டத்தில் மிகச் சிறப்பாக அமல்படுத்தப்படுகின்றது.

"மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது" என்பார்களே அதைப் போல, இம்மாவட்டம் சிறியது என்றாலும் பல்வேறு பணிகளைச் சீராகச் செயலாற்றுவதன் மூலம் பெரிதாகக் கருதலாம் என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம் அல்லவா?

[illegible]

## வழிகாட்டி அமைத்தல்

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் சிரமமின்றிக் கரை திரும்ப புத்தன் துறை, இணையம், தூத்தூர், நீரோடி, இராஜாக்கமங்கலம், கோடிமுனை, குறும்பனை ஆகிய ஏழு இடங்களில் ரு 2½ இலட்சம் செலவில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

# கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்.

எண். ஒய் 238

ஆரல்வாய்மொழி

தந்தி : "கன்யாஸ்பின்" தொலைபேசி : 24 & 26

## கைத்தறி நெசவாளர்களுக்குத் தரமான நூல் உற்பத்தி செய்வோர்

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு முலதனம் | ரூ. 100.00 இலட்சம் |
| செலுத்தப்பட்ட பங்கு முலதனம் | ரூ. 72.42 இலட்சம் |
| நிறுவப்பட்ட கதிர்களின் எண்ணிக்கை | 24,960 கதிர்கள், 3,588 முறுக்கு நூல் கதிர்கள் 360 கோன் பைண்டிங் உருளைகள் |
| உற்பத்தி செய்யப்படும் நூல் விவரம் | 20S, 40S, 60S, 80S, 2/20S, 2/60S, 2/80S, மற்றும் 80S 2/40S & 2/80S பாலியஸ்டர் கலப்பு ரக இழைகள் |
| ஆண்டு ஒன்றுக்குச் சராசரி நூல் உற்பத்தி | ரூ. 5.50 கோடி |
| ஆண்டு ஒன்றுக்குச் சராசரி விற்பனை | ரூ. 5.75 கோடி |

ந. இராமமூர்த்தி
நிர்வாக இயக்குநர்

திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர்.



# திருவட்டார் ஊராட்சி ஒன்றியம்
# தச்சுப்பட்டறை உற்பத்தி நிலையம்

ஆற்றூர்

* குறைந்த விலை !  * நீடித்த உழைப்பு !

அன்புடையீர் !

திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், ஆற்றூரில் இயங்கி வரும் தச்சுப் பொருள் உற்பத்தி நிலையத்தில் அரசு அலுவலகங்கள், பள்ளிக் கூடங்கள் மற்றும் வீடுகளுக்குத் தேவைப்படும் மேஜை, நாற்காலி, பெஞ்சு, அலமாரி மற்றும் நவ நாகரிகமாகத் தோற்றமளிக்கும் சோபா செட், டைனிங்டேபிள், ஈசிச்சேர் முதலிய மரச்சாமான்கள் உயர்ந்த ரகத் தேக்கு மற்றும் இதர மரங்களில் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களால் நீடித்த உழைப்புடன் குறைந்த விலையில் குறிப்பிட்ட நாளில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு அணுகவும் :

ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம்,
திருவட்டார்.
போன் : நிர். 3. குலசேகரம்

* தங்கள் ஆதரவை என்றும் நாடும்

ச. திருமலைச்சாமி, எம்.காம்.
தனி அதிகாரி மற்றும் கோட்ட
வளர்ச்சி அதிகாரி,
பத்மனாபபுரம். இருப்பு தக்கலை.

மா. செல்லன் நாடார், பி.ஏ.
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், திருவட்டார்.





மொழிவழி மாநில அமைப்புகளை ஏற்படுத்துவதற்கென நியமிக்கப்பட்டுள்ள "மாநிலங்கள் திருத்தியமைப்புக்குழுவின்" ( State Reorganisation Committee ) பரிந்துரையின் அடிப்படையில், திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்தின் தென் பகுதியில்அமைந்துள்ள தமிழர்கள் வாழ் பகுதியாக அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களைத் தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டம் அமைக்கப்பட்டது.

1956 நவம்பர் முதல் நாளிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டின் ஆட்சி முறைப்படி செயல்பட்டு வருகின்றது.

திருவிதாங்கூர் கொச்சி அரசு ஏற்படுத்திய 46 பேரூராட்சிகளும், கன்னியாகுமரி மாவட்டம் தோன்றிய பின்னரும் செயல்பட்டு வந்தன. 1958-ல் தமிழ்நாடு ஊராட்சி சட்டம் அமலுக்கு வந்த பின்னரும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த பேரூராட்சிகளின் அமைப்பில் மாறுதல் ஏதும் செய்யப்படாமல், பேரூராட்சிகளாகவே செயல்பட அனுமதிக்கப்பட்டன.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் அடிப்படையில், ஊராட்சி ஒன்றியங்களை அமைப்பதில், கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டச் சிக்கல்களும், பிரச்சினைகளும் ஏற்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு, ஊராட்சி சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் அமல் செய்யப்பட்டது.

ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் பேரூராட்சி மற்றும் ஊராட்சித் தலைவர்கள் மட்டுமே தமிழ்நாட்டின் இதர ஒன்றியங்களில் அங்கம் வகிக்கும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேரூராட்சி உறுப்பினர்கள் அனைவரும் அங்கம் வகிக்க அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊராட்சி அமைப்புகளை, தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களில் உள்ளதுபோல் அமைத்திடும் பொருட்டு, செயல்பட்டு வந்த 46 பேரூராட்சிகளையும், பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளாகத் திருத்தி அமைத்திட அரசு கருதியது.

1970-ல் 46 பேரூராட்சிகள் 64 பேரூராட்சிகளாக மாற்றப்பட்டன. 224 ஊராட்சிகள் 288 ஊராட்சிகளாகத் திருத்தி அமைக்கப்பட்டன. 1970-ல் மேற்கூறிய ஊராட்சிகளின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டு, ஒன்றிய அமைப்புகள் செயல்பட்டு வந்தன.

திருத்தியமைக்கப்பட்ட ஊராட்சிகளில் தனித்தியங்கும் சக்தியற்றவைகளெனக் கருதியவைகளையும், நிர்வாக வசதிகளையும் பரிசீலனை செய்து, 1981-ல் மீண்டும் ஊராட்சிகள் திருத்தியமைக்கப்பட்டன. அதன்படி தற்சமயம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 288 ஊராட்சிகளும், 64 பேரூராட்சிகளும் உள்ளன.

மேற்கூறியவை நீங்கலாக நாகர்கோவில், பத்மநாபபுரம், குளச்சல் மற்றும் குழித்துறை என நான்கு நகரசபைகளும், கன்னியாகுமரி நகரியமும் செயல்பட்டு வருகின்றன.

நான்கு நகரசபைகளும் நீங்கலாக உள்ள ஏனைய பகுதிகள் யாவும் 9 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குள் அடங்கியுள்ளன.

## அகதிகள் மறுவாழ்வு

கன்னியாகுமரி மாவட்டத்தில் பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து வரப்பெற்ற அகதிகள் குடியமர்த்தப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர்.



# குமரி மாவட்டம் இவரை டாக்டர் ஆக்கியது



ாக்டர் பொ. இராமச்சந்திரன்

கன்னியாகுமரி மாவட்டம் பற்றி ( The History of Nanci-nad ) ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி, கேரளப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் திரு. பொ. இராமச்சந்திரன். இவர் தற்போது நாகர்கோவிலிலுள்ள தெ. தி. இந்துக் கல்லூரியில் வரலாற்றுத்துறைத் துணைப் பேராசிரியராகப் பணியாற்றிவருகிறார். அவரைச் சந்தித்தபோது, கன்னியாகுமரி மாவட்டச் சிறப்புகள் குறித்துப் பல சுவையான தகவல்களைத் தந்தார்:

*கன்னியாகுமரி மாவட்டத்தில் சோழர், பாண்டியர் காலத்தில் கட்டிய கோயில்கள் நிறைய உள்ளன. அவர்கள் 200 ஆண்டுகள் ஆண்டதற்கான தடயங்கள் இன்றும் உள்ளன.

*செண்பகராமன், தாழக்குடிப் பக்கத்தில் உள்ள பழைய ஆதிச்சன்புதூரில் ஔவையார் கோயில் ஒன்று உள்ளது. நூறு ஆண்டுக்கு முன் கட்டிய இந்தக் கோயிலில் கல்வெட்டும் உள்ளது.

*கன்னியாகுமரியில் குகநாதேஸ்வரர் கோயில், ராஜராஜசோழன் காலத்தில் கட்டியது. ராஜேந்திர சோழனுடைய காலத்தில், கன்னியாகுமரி, என்னும் பெயர், 'கங்கைகொண்ட சோழபுரம்' என அழைக்கப்பட்டது. இவரது அரண்மனை ஒன்றும் அப்போது இருந்தது. அதன் பெயர் கல்வெட்டில் 'கேரளன் மாளிகை' என்பதாகும். சோழர் காலத்தில் கோட்டாற்றில் நிலப்படை இருந்தது. வடசேரியில் சோழீசுவரம் கோயிலும், சேரமங்கலத்தில் தென் திருவரங்கத்து ஆழ்வார் கோயிலும் இருந்தன.

*இம்மாவட்டத்தை வளப்படுத்தக்கூடிய ஆறு பழைய ஆறு என்பதாகும். இதைப் பரளி ஆறு என்றும் கூறுவர். சங்க இலக்கியத்தில், குறிப்பாக சிலப்பதிகாரத்தில் பஃருளி ஆறு என்று குறிப்பிடப்படுவது இதுதான்.

*இம்மாவட்டத்தில் ஓடும் பழையாறு 22 மைல் நீளம் உள்ளது. சுருளக்கோடு என்ற இடத்தில் தொடங்கி, மணக்குடியில் சங்கமமாகிறது. கரை நெடுக சுமார் 800 கோயில்கள் உள்ளன.

*பழையாற்றின் குறுக்கே 12 அணைகள் கட்டப்பட்டுள்ளன. பள்ளிகொண்டான் அணை, வீரப்புலி அணை, குட்டி அணை, சோழன் திட்டை அணை, பிள்ளை பெற்றாள் அணை என்று பல அணைகள் இருந்தன. பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டது பாண்டியர் அணை. இரண்டு மைல் தூரத்துக்குப் பாறையைச் செதுக்கி நீரைக் கொண்டு வந்துள்ளார்கள்.

*இம்மாவட்டத்தில் பண்டு இருந்த துறைமுகங்கள் முட்டம். மணக்குடி, குளச்சல், தேங்காய் பட்டணம் ஆகியவையாகும்.



இவையெல்லாம் தூர்ந்துபோயின. 1741-ல் டச்சுக்காரர்களுக்கும் மன்னர் மார்த்தாண்டவர்மனுக்கும் குளச்சலில் போர் நடந்தது. இதன் நினைவாக ஒரு கல்தூண் இங்கு நிறுவப்பட்டுள்ளது.

*அண்மையில் அகழ்வாராய்ச்சி செய்ததில், தோட்டி ஓடு என்ற இடத்தில், புதிய கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவர்கள் பயன்படுத்திய கற்கோடரி ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. இது 3,500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

* வெள்ளிமலைப் பகுதியில் பழையதாழிகள் கிடைத்துள்ளன. இதன் அடிவாரத்தில்தான் புதைபொருள் ஆராய்ச்சி நடந்தது.

*அழகிய மலர்கள் இம்மாவட்டத்தில் நிறைய கிடைக்கின்றன. தோவாளையில் பிச்சிப்பூ, செவ்வந்தி, அரளிப்பூ, முல்லை மற்றும் தோவாளைப் பச்சை(கொழுந்து) ஆகியவை பல இடங்களுக்கு விற்பனைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றன.

*பூதப்பாண்டி, திருவந்திக்கரை ஆகிய இடங்களில் குகைக் கோயில்கள் உள்ளன.

*பெரிய கலையழகு வாய்ந்த தேர்கள் சுசீந்தரம் தாணுமாலய சுவாமி கோயிலிலும், பூதப்பாண்டியிலும் உள்ளன. பூதப்பாண்டியிலுள்ளவை இலுப்பை மரத்தால் ஆன தேராகும்.

*இம்மாவட்டத்தில், நிலக்கரி வெட்டுவதுபோல, கற்கள் வெட்டி எடுக்கும் தொழில் பெருமளவு நடைபெறுகிறது. மண்பாண்டத் தொழிலும் மிகுதியாக நடைபெறுகின்றது.

பேட்டி : பொ. மறைமலை

# மக்கள் நல்வாழ்வு



கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுச் சுகாதாரத் துறையைக் கண்காணிக்க மாவட்ட சுகாதார அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. அதன் கீழ் பத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகளாவன: அகஸ்தீஸ்வரம், இராஜாக்கமங்கலம்துறை, முட்டம், கோதநல்லூர், கருங்கல் செண்பகராமன் புதூர், இடைக்கோடு, குட்டக்குறி, ஆறுதேசம், முன்சிறை.

துணை ஆரம்பச் சுகாதார நிலையம் இவ்வாதார நலநிலையங்களின் வழியாக மருத்துவப் பணி, நடமாடும் மருத்துவப்பணி தாய்சேய் நலத் திட்டம், பள்ளிச் சிறுவர் நலத்திட்டம், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம், மலேரியா நோய் தடுப்புப்பணி, கொள்ளைநோய்த் தடுப்புப்பணி, போன்ற திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சுகாதார நிலையத்திலும் பணிகளைச் சரிவரக் கவனிக்க மருத்துவ அலுவலர்கள், சுகாதாரப் பார்வையாளர்கள், துணைச் செவிலியர்கள், மருந்து ஆளுநர், அடிப்படைச்சுகாதார ஊழியர்கள், ஆய்வாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள்போன்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனார்கள்.

1981-82-ம் ஆண்டு 51,099 வெளி நோயாளிகளுக்கும், 51 உள்நோயாளிகளுக்கும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் வழியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 1982-83-ஆம் ஆண்டு 49.184 வெளி நோயாளிகளுக்கும், 33 உள்நோயாளிகளுக்கும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் வழியாகச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 1983-84-ஆம் ஆண்டு 32,037 வெளி நோயாளிகளுக்கும், 38 உள்நோயாளிகளுக்கும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் வழியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

1982-83-ஆம் ஆண்டு 8,948 குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு (ஆறுமாதங்கள்) 11,459 குழந்தைகளுக்குத்தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 1982-83-ஆம் ஆண்டு 12,500 தாய்மார்களுக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு (ஆறு மாதங்கள்) 10,682 தாய்மார்களுக்குத்தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 1982-83-ஆம் ஆண்டு 11,104 குழந்தைகளுக்கு இரும்புச் சத்து மாத்திரை 1983-84ஆம் ஆண்டு (ஆறு மாதங்கள்) 8,399 குந்தைகளுக்கு இரும்புச் சத்து மாத்திரை வழங்கப்பட்டது. 1982-83-ஆம் ஆண்டு 6,670 குழந்தைகளுக்குந் தடுப்பு ஊசி போடப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டுக்கு 10,000குழந்தைகளுக்குப் போட திட்டமிடப் பட்டுள்ளது.

நடமாடும் மருத்துவப் பணி மூலம் 1981-82ஆம் ஆண்டு 62,365நோயாளிகளுக்குச்சிகிச்சை அளிக்கப்பட்டது. 1982-83ஆம் ஆண்டு 80608 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 1983 84ஆம் ஆண்டு (ஆறு மாதங்கள்) 42,638 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

1981-82ஆம் ஆண்டு 1,21,343 பேர்களுக்கு இரத்தத் தடவல்கள். எடுத்துப் பரிசோதித்ததில் 50 நபர்களுக்கு மலேரியா நோய்க் கிருமி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

1982-83ஆம் ஆண்டு 1,24,835 பேர்களுக்கு இரத்தத் தடவல்கள் எடுத்துப் பரிசோதித்ததில், 103 பேர்களுக்கு மலேரியா நோய்க் கிருமி இருப்பதர்கக் கண்டுபிடிக்கப்பட்டது. (6 மாதம்) 1983-84 ஆம் ஆண்டு 58,397 பேர்களுக்கு இரத்தத் தடவல்கள் எடுத்துப் பரிசோதித்ததில் 30 பேர்களுக்கு மலேரியா நோய்க்கிருமி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.



1981-82ஆம் ஆண்டு காலரா பரவாமல் இருப்பதற்காக இம்மாவட்டத்தில் 1,23,072 நபருக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது. 1982-83-ஆம் ஆண்டு காலரா பரவாமல் இருப்பதற்காக இம் மாவட்டத்தில் 1,54,317 நபர்களுக்குத் தடுப்பு ஊசி போடப் பட்டது. 1983-84ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய 1,12,009 நபர்களுக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டது.

1982 சூலை திங்கள் வரை பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 101 ஊராட்சி ஒன்றிய மகப்பேறு நிலையங்களிலும் பள்ளிமுன்னிலைப்பருவ குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் கேர் நிறுவனத்தால் வழங்கப் பட்ட கேர் உணவு சமைத்து வழங்கப்பட்டது. ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் எண்பது பள்ளி முன்னிலைப் பருவ குழந்தைகளுக்கும், இருபது தாய்மார்களுக்கும் மகப்பேறு நிலையம் ஒவ்வொன்றிலும் 20 குழந்தைகளுக்கும் 10 தாய்மார்களுக்கும் மாதத்தில் 25 நாட்களுக்கு மாலை 3 மணியிலிருந்து 4 மணிக்குள் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையமும் 15 நாட்களுக்கு ஒரு முறை சுகாதாரத் துறை பலநோக்குப் பணியாளர்களால் பார்வையிடப் படுகிறது. மருத்துவ அலுவலர்களும் மாதம் ஒரு முறை பார்வையிட வேண்டும். சத்துணவு மையங்களில் சுகாதார முறைகேடுகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்யும் முறைகள் குறித்து கூறப்பட்டு, பார்வையாளர் பதிவேட்டிலும் எழுதி ஆவன செய்யப்படுகிறது.



# விவேகானந்தர் நினைவு மண்டபம்

கௌதம புத்தர் போதி மரத்தடியில் ஞானோதயம் பெற்றது போல், சுவாமி விவேகானந்தர் 1892-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ம் நாள் மாலையில் முக்கடல்களின் நடுவே கொந்தளிக்கும் அலைகளில் குதித்து நீந்திச் சென்று, கரையிலிருந்து 1600 அடி தொலைவில் உள்ள ஸ்ரீ பாத பாறையை அடைந்து, டிசம்பர் 27-ஆம் நாள் வரை தியானித்ததில் ஆழ்ந்து ஞானோதயம் பெற்றார். வடக்கே தெரிந்த இந்திய நாட்டை நோக்க அதன் ஆன்மீக வளத்தை நினைந்து நினைந்து அதனை மேல் நாடுகளுக்கு எடுத்துக்கூறத் திட்டமிட்டார். ''இந்தியாவின் கடைசி துண்டுப்பாறையில் இருந்தபோது என் உள்ளத்தில் ஒரு திட்டம் தோன்றியது.'' எனக் கூறினார் சுவாமி விவேகானந்தர். பின்னர் மேலை நாடுகளில் சென்று இந்தியாவின் ஆன்மீக வளத்தை எடுத்துக்கூறும் பிரச்சாரப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகளை உலகந்திற்கு எடுத்துக்கூறவும், அவர் ஞானோதயம் பெற்ற பாறையில் ஒரு சிறந்த நினைவுச் சின்னம்எழுப்பவும், 1962-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விவேகானந்தர் பாறை நினைவுக்குழு அமைக்கப்பட்டு, 1970-ஆம் ஆண்டு நினைவுச் சின்னம் திறக்கப்பட்டது.

இக்கருங்கல் நினைவு மண்டபத்தின் நீளம் 85 அடி. அகலம் 40 அடி. இதன் முகப்பு அஜந்தா குகையையும், விமானம் பேலூர் இராமகிருஷ்ணர் கோயிலையும் நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளன. 65 அடி உயரம் கொண்ட விமானத்தின் அடியில் சுவாமி விவேகானந்தரின் 8 அடி வெங்கலச் சிலை ஒன்று, நின்ற கோலத்திலே நிறுவப் பட்டுள்ளது. தேவி பாதத்திற்கென ஒரு தனிக்கோயிலும், சபாமண்டபத்தின் தாழ் வாரத்தில் ஒரு தியான மண்டபமும் அமைக்கப் பட்டுள்ளன.

தமிழகத்துச் சிற்பக் கலைஞர்களின் அருந் திறனுக்குச் சான்று பகரும் வகையில் இந் நினைவு மண்டபம் நிலவுகிறது. இக்கலைக் கோவிலிலே இருந்து, சுற்றிலும் உள்ள கடலிடைக் கொஞ்சும் சலங்கை என ஒலிக்கும் அலை ஓசை, காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

தமிழக அரசின் சார்பாக மூன்று இலட்ச ரூபாயில் கட்டி முடிக்கப்பட்ட படகுத்துறையிலிருந்து காலை 7 மணி முதல் 11 மணி வரையிலும் மாலை 2 மணி முதல் 5 மணி வரையிலும் படகுப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. நாள்தோறும் எண்ணற்ற பயணிகள் இப்படகுப் போக்குவரத்தின் மூலம் நினைவுச் சின்னத்தைக் கண்டு களிக்கின்றனர். வங்கத்திலே தோன்றிய ஆன்மீகச் சிங்கமாகிய விவேகானந்தருக்கு வங்காளவிரிகுடாப் பகுதியிலேயே நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது ஒரு தனிச் சிறப்பாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1983-ஆம் ஆண்டு தாய்மார்களுக்கு நவீன முறையில் குடும்ப நல அறுவைச் சிகிச்சை, இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நடைபெற்றது.

22-9-1983 ஆண்டு, தக்கலை வட்டாரத்திலுள்ள கோதநல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் 121 தாய்மார்களுக்கு நவீனமுறையில் (லாபரோஸ்கோபிக்) குடும்ப நலச் சிகிச்சை முதன் முறையாக நடைபெற்றது 16-11-1983 ஆண்டு, தேவாளை வட்டாரத்திலுள்ள செண்பகராமன்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 125-தாய்மார்களுக்கு நவீனமுறையில் குடும்ப நலச் சிகிச்சை இரண்டாவது முறையாக நடைபெற்றது.

நாகர்கோயில் அரசு தலைமை மருத்துவமனையில் 1981-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின்பேரில், புதியதாக 64 படுக்கைகள் கொண்ட மகப் பேறுபகுதி, பத்து படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் துரிதச் சிகிச்சைப் பிரிவு, எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவு வெளிநோயாளிகள் பிரிவு கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்த தன் பேரில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 26-5-83 அன்று

## இதன் வயது-108



அழகிய அரபிக் கடலோரத்தில் அமைந்துள்ளதுதான் முட்டம் கலங்கரை விளக்கம். நாகர்கோவிலிலிருந்து 15 கி. மீ. தூரத்தில் உள்ளது இது.

72 அடி உயரமுள்ள இந்தக் கலங்கரை விளக்கத்தில, பெல்ஜியத்திலிருந்து வரவழைக்கப்பட்ட 4 லென்ஸ்கள (குவி ஆடி) உள்ளன. இவை சிறியவற்றைப் பெரிதாகக் காட்டும சக்தி உள்ளவை. இது நிமிடத்துக்கு மூன்று முறை சுற்றுகிறது. சுமார் 15 மைல் தூரம் வரை இதன் ஒளி தெரியும்.

இதன் மேலே ஏறி நின்று. அழகிய கடற்கரைக் காட்சிகளைக் கண்டு மகிழலாம். 25 காசுக் கட்டணத்துடன் பொதுமக்கள் பார்க்கவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டு இயங்கிக் கொண்டு வருகிறது.

இதனால் 1982 முடிய 243 படுக்கை வசதிகள் கொண்டுள்ள இந்த அரசு தலைமை மருத்துவ மனை தற்போது, 317 படுக்கை வசதிகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

இந்த மருத்துவமனைக்கென்று தனியாக ரூ. 1,12,750 மதிப்புடைய தான் இயங்கி மின்கலம் நிறுவப்பட்டுள்ளது. மின் தடை உள்ள காலங்களிலும், அவ்வப்போது ஏற்படும் மின்வெட்டு நேரங்களில் இந்த ஜெனரேட்டர் மிகவும் பயனுள்ளதாக மருத்துவ மனைக்கு உதவி வருகிறது.

மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு மருந்து, அறுவைச் சிகிச்சை, மகப்பேறு துறை இவற்றில் விசேடப் பயிற்சி பெற்றுள்ள மருத்துவ அலுவலர்களை அரசு இங்கு பணிபுரிய நியமித்துள்ளது, இந்த மருத்துவமனையின் வளர்ச்சிக்கு முக்கியமான செயலாகும்.

1984-85-க்கான நிதி ஒதுக்கீட்டில், இந்தமருத்துவ மனைக்கு அனுமதி வழங்கி கட்டடங்களை நிர்மாணிக்க அரசு தீர்மானித்துள்ளது.

1. நான்கு படுக்கைகள் கொண்ட இருதய நோய் தீவிரச் சிகிச்சைப் பிரிவு.

2. பிண அறையில் ஆறு உடல்களைத் தற்காலிகமாக அடைத்து வைக்க குளிர் சாதன அறைகள் கட்டுதல்.

3. பொதுமக்களுக்கு வசதிகள் ஏற்படுத்த நவீன கழிப்பிடம் கட்டுதல்.

4. மாவட்ட மருத்துவ அதிகாரி தங்குவதற்குக் கோணம் என்ற ஊரில் அரசு குடியிருப்பு மனை இருக்குமிடத்தில் விடுதி கட்டுதல்.

இது தவிர, பல சிறந்த திட்டத்தின் கீழ் மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட கட்டடங்கள் எழுப்ப விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### அரசு மருத்துவமனை, பத்மனாபபுரம்:

ஐம்பது படுக்கைகளாக 1982 வரையில் இருந்த அரசு மருத்துவ மனை பத்மனாபபுரத்தில் புதியதாக இருபது படுக்கைகள் கொண்ட வார்டு கட்டப்பட்டு 1983-ஆம் ஆண்டில் 75 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. மேலும் நவீன சமையலறை கட்டுவதற்கு 1984-85-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் அரசு ஒப்புதல் அளிக்க வரைபடமும் செயற்குறிப்பும், இயக்குநர் அவர்களுக்கு மேல்நடவடிக்கைக்காகவும் அனுப்பப்பட்டுள்ளது.

### அரசு மருத்துவமனை குழித்துறை:

இந்த மருத்துவமனைக்கு 20 படுக்கைகள் கொண்ட பகுதியும், மகப்பேறு அறுவைச் சிகிச்சை அரங்கும் கட்டுவதற்கு 1984-85 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் அரசு அனுமதி வழங்க வரைபடமும், செயற்குறிப்பும் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மின், கதிர்வீச்சு (X-ray Dept.) பகுதியை நிர்மாணிக்க வரைபடமும் செயற்குறிப்பும் இயக்குநர் அவர்களுக்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

### அரசு மருத்துவமனை, குளச்சல்:

1980-ஆம் ஆண்டு அரசால் அனுமதிக்கப்பட்டு தற்போது முடிவடைந்து இருக்கும் குளச்சல் அரசு மருத்துவமனையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 10 படுக்கைகள் கொண்ட பகுதி இயங்கி வருகிறது.

### அரசு மருத்துவமனை,கொட்டாரம்:

1984-85ஆம்ஆண்டுநிதி ஒதுக்கீட்டில்,அரசு ஒப்புதல் வழங்க புதியதாக 10 படுக்கைகள் கொண்ட பகுதியும், மகப்பேறு அறுவைச் சிகிச்சை அரங்கும் கட்டுவதற்கு வரைபடமும், செயற்குறிப்பும் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### அரசு மருத்துவமனை, தூத்தூர்:

தூத்தூர் ஊர் பொது மக்கள் அளித்த நன்கொடையில் அரசுக்குக் கிடைக்கப் பெற்ற நிலத்தில் புதியதாக அரசு மருத்துவ மனை கட்டப்பட்டு 1983ல் கட்டடம் பூர்த்தியடைந்து தற்போது இயங்கி வருகிறது.

### அரசு மருத்துவமனை, கன்னியாகுமரி:

கன்னியாகுமரியில் இயங்கிவரும் அரசு மருத்துவமனை, நகரிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு கீழ்க் காணும் கட்டடங்கள் கட்ட தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவமனையைச் சுற்றி பலமான பாதுகாப்புச் சுவர்,

மருத்துவமனை பாதையைச் சீர் செய்தல்,

10 படுக்கைகள் கொண்ட புது குழந்தைகள் பகுதி,

மகப்பேறு பகுதி நவீனக் குளியலறையுடன் அமைத்தல்,

அறுவை அரங்கு,

மருத்துவ அதிகாரி தங்கும் விடுதிகள்—2,

அலுவலர்கள் தங்கும் விடுதி 12,

பணியிலிருக்கும் மருத்துவ அலுவலர் தங்கும் விடுதி—1,

வெளி நோயாளிகள் காத்திருக்கும் பகுதி,

சமையலறை, மருந்து கிடங்கு அலுவலக அறை, பதிவு அஃற பிரிவு,

பிண பரிசோதனை அறையை புதுப்பித்தல்,

தண்ணீர் சேமிப்புத்தொட்டி விரிவாக்கி இரும்பு ஏணிப்படியை அமைத்தல்.

**ஊர்தி நிற்கும் அறை:**

ஒன்பது படுக்கைகள் கொண்ட தற்போதுள்ள இந்த மருத்துவமனையை 50 படுக்கைகளாக விரிவாக்குதல்,

**பரிசோதனைக் கூடம், ஆண், பெண் புண் கட்டுமிடம் கட்டுதல்:**

10 படுக்கைகள் கொண்ட சித்தா ( Siddha ) மருந்தகம் கட்ட விரைவான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இது தவிர, இதர மருத்துவமனைகளில் புதிதாகப் படுக்கை வசதிகளை அதிகரிக்க கட்டடங்கள் கட்ட, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் நவீன குடும்பநல அறுவைச் சிகிச்சை பெண்களுக்குச் செய்ய, அரசு தலைமை மருத்துவமனை, நாகர்கோவில், அரசு மருத்துவமனை, குழித்துறை, பத்மனாபபுரம், குளச்சல் போன்ற இடங்களில் மாதந்தோறும் முகாம்கள் ஒழுங்கு செய்து, இதில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களைக் கொண்டு அறுவைச் சிகிச்சை ஏற்பாடாகியுள்ளது. ஆயிரக்கணக்கான தாய்மார்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர்.

கண்நோய், தொழுநோய், காசநோய் போன்ற திட்டங்களின் கீழ் ரோட்டரி, லயன்ஸ், ஐ.எம்.ஏ. இவர்களின் கூட்டமைப்பில் பல முகாம்கள் அமைத்து பொது மக்களுக்கும் முக்கியமாக பள்ளி மாணவர்களுக்கும் மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்குத் தொழுநோய் ஆரம்ப அறிகுறி இருக்கிறதா என்று கண்டறியும் மருத்துவ ஆய்வு நடத்தப்பட்டு அதன்படி மாணவ, மாணவிகள் பரிசோதனை செய்யப்பட்டனர். கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளும் தகுந்த சிகிச்சையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். வளர்ச்சிப் பணிமுகாமின் போது காட்டுபுதூர் மற்றும் தாழக்குடி என்ற கிராமங்களில் மருத்துவமுகாம் நடத்தப்பட்டு சுமார் 1550 பேருக்குச்சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 48,218 மாணவர்களுக்குத் தொழுநோய் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

## அண்மைக்கடல் மீன்பிடி அளவை நிலையம்

தமிழக அரசு கன்னியாகுமரி மாவட்ட கடல் பகுதியில் வளமான மீன்பிடி தளங்கள் கண்டுபிடித்து தெரிவித்து. மாவட்டத்து மீன்பிடிப்பை அதிகமாக்கி, மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுவதற்கு, 'அண்மைக் கடல் மீன்பிடி அளவை நிலையம்' செயல்பட்டு வருகிறது

இந்த மீன்பிடி அளவை நிலையத்தின் பணிகளாவன:

1. ஒதுக்கப்பட்ட 500 சதுர மைல் கடல் பரப்பு அளவை செய்து, வளமான மீன்பிடி தளங்கள் கண்டுபிடித்தல்.

2. கடலில் காணாமல் போகும் நாட்டுப் படகு, கட்டுமர மீனவர்களைத் தேடிக் கண்டு பிடித்துக் கரை சேர்த்தல்.

3 கன்னியாகுமரிக்குத் தெற்காக இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள வளமான மீன் பிடி தளம் "வெட்ஜ் பாங்க்" கில் ஊடுருவல் செய்யும் அந்நிய நாட்டு மீன்பிடி நாவாய்களைக் கண்டுபிடித்துத் தகவல் தெரிவித்தல்; மற்றும் அப்பகுதியில் அளவாய்வு மேற்கொள்ளல்.

4. நாட்டுப்படகு மீனவர்களுக்கும், விசைப் படகு மீனவர்களுக்கும் மீன்பிடியில் தாவா ஏற்படும்போது சுற்றுக்காவல் பணி மேற்கொள்ளல்.





# சமூகநலத்துறை சாதனைகள்

சமூகநலத்துறையின் மூலம் பல திட்டங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் நகர்ப் புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வாழும் ஏழை எளிய மக்களின் துயர் துடைக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டுவருகின்றன. இந்நலத்திட்டங்கள் இத்துறையின் கீழ் குழந்தைகள் நலம், மகளிர் நலம், உடல் ஊனமுற்றோர் நலம் என்று மூன்று பிரிவுகளாகச் செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் 125 குழந்தைகள் காப்பகங்கள், 12 குழந்தைகள் நல நிலையங்கள் 30.6.82 வரை செயல்பட்டு வந்தன. 1.7.82ல் கிராமப்புறங்களிலும், 15.9.82ல் நகர்ப்புறங்களிலும் முதலமைச்சர் குழந்தைகள் நண்பகல் சத்துணவுத்திட்டம் அமல் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2 வயதிலிருந்து 5 வயதுக்குட்பட்ட ஏராளமான குழந்தைகள் பயன் அடைகிறார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி புகட்டுவதற்கும், உணவோடு உணர்வையும் அறிவையும் ஊட்டுவதற்கும் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மத்திய அரசின் முழு மானியத்துடன் குழந்தைகள் நல நிலையங்களும், குழந்தைகள் காப்பகங்களும் நடைபெறுகின்றன. இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1.10.83 முதல் நாகர்கோவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அநாதைக் குழந்தைகள், விதவைகளின் குழந்தைகள், ஏழைக் குழந்தைகள் இப் பராமரிப்பு இல்லத்தில் சேர்க்கப்பட்டு பயன் அடைகிறார்கள். இப்பராமரிப்பு இல்லத்தில் 250 குழந்தைகள் சேர்க்க அனுமதிக்கப்படுவார்கள். 6 வயது முதல் 10 வயது வரை உள்ள ஆண் குழந்தைகளும், 5 வயது முதல் 16 வயது வரை உள்ள பெண் குழந்தைகளும் சேர்க்கப்படுகிறார்கள். இங்கு சேர்க்கப்படும் குழந்தைகளுக்குக் கல்வி, உணவு, உடை தமிழக அரசால் இலவசமாக அளிக்கப்படுகிறது. 1982ல் 184 குழந்தைகளும், 1983ல் 250 குழந்தைகளும் பயன்அடைந்துள்ளார்கள்.

1 முதல் 12 வரை படிக்கும் விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளி பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இவர்களின் ஆண்டு வருமானம் ரூ. 3000 குறைவாக இருத்தல் வேண்டும். இதன்மூலம் 1982ல் 283 மாணவர்களும், 1983ல் 320 மாணவர்களும் பயன் அடைந்துள்ளனர்.

| குழந்தைகள் நல நிலையங்கள் | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| குழந்தைகள் நல நிலையங்கள் | 583 | 74 |
| பயன்பெறும் குழந்தைகள் | 50,388 | 6753 |
| குழந்தைகள் நல அமைப்பாளர்கள் | 583 | 74 |
| குழந்தைகள் உதவி நல அமைப்பாளர்கள் | 665 | 158 |

கிராமப் பெண்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் ஒன்றுசேர்ந்து பலசமூகப் பொருளாதாரக் கருத்துக்களைப் பரிமாற ஒன்று கூடி கிராமங்களில் மகளிர் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவர்களுக்குக் குடும்பக்கலை, குழந்தைகள் வளர்ப்பு, சத்துணவு, முதியோர் கல்வி, தையற்கலை ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. குமரி மாவட்டத்தில் ஒன்பது ஊராட்சி ஒன்றியங்களில் மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மகளிர் மன்றங்களிலும், காய்கறித்தோட்டம் அமைத்துச் சிறப்பாகக் கவனித்து வருகிறார்கள். மகளிர் மன்றங்களைப் பதிவு செய்து அதன் வழியாகச் சமூகநலத்துறையின் மானியம் பெற்று பசு, மாடு வளர்க்கும் திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் மன்ற உறுப்பினர்களில் ஐவருக்கு, பசுமாடு வழங்க அதன் வரவு செலவுகளைக் குறிப்பிடுவதற்கு மகளிர் எழுத்தரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்;

மகளிர் மன்றங்களின் முன்னேற்றத்திற்காக ஆண்டுதோறும் சிறந்த மகளிர் மன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் பரிசு ரூ.



# புனித சவேரியார் ஆலயம்

புனித சவேரியார் போர்ச்சுகல் நாட்டில் பிறந்தாரெனினும் இந்தியர்களோடு ஒன்றி அவர்களோடு இணைந்துவிட்ட இயேசுநாதர் குழுவின் ஈடும் இணையுமற்ற மதகுருமார்களில் ஒருவர் எனில் அது மிகையாகாது. இவர் 1542-ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் நாள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி 15,000 மைல்கள் கடற்பயணத்திற்கப்பால் கோவாவை வந்தடைந்தார். முத்துக்கொழிக்கும் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோதெல்லாம் அக்காலத்தில் வாணிகத்தில் சிறந்து விளங்கிய கோட்டாறுக்கு பிரான்சிஸ் சவேரியார் அடிக்கடி வருகை தருவது வாடிக்கையாக இருந்தது.

கோட்டாறில் தங்கியிருந்தபோது, புனித சவேரியார், புனித மேரி அன்னையின் சிறிய கோயிலில் வழிபாடு நிகழ்த்துவார் என்று கூறப்படுகிறது.

நல்லொழுக்கம், தொண்டு மனப்பான்மை முதலியவற்றால் பிரான்சிஸ் சவேரியார் கிறித்தவர்களல்லாத மக்களிடத்தும் பிரசித்தி பெற்று விளங்கினார் என்றும், அவர் மக்களாலே 'வலிய பண்டாரம்' என அன்புடன் அழைக்கப்பட்டார் என்றும் நாம் அறிகிறோம்.

கோட்டாறில் இவர் தங்கியிருந்தபோது பத்மநாபபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அப்போது ஆட்சிபுரிந்து வந்த வேணாட்டு மன்னருக்கு, படகர்களின் படையெடுப்பைத் தவிர்த்ததன் மூலம் உதவி புரிந்தார் எனத் தெரிகிறது. இந்த நிகழ்ச்சியின் விளைவாக சவேரியாருக்கும் வேணாட்டு மன்னருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது என்றும், அதன், விளைவாக கோட்டாறில் ஒரு கத்தோலிக்கத் திருச்சபையைக் கட்டுவதற்கு, வேணாட்டு மன்னர் இடம் தந்து உதவினார் என்றும் தெரிகிறது. இதுகாறும் கூறியவற்றால் கோட்டாறில் 1544-ஆம் ஆண்டிலேயே ஒரு திருச்சபை தற்போது சவேரியார் ஆலயம் இருக்கும் இடத்திலேயே இருந்தது என நன்கு புலனாகிறது. 1622-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12ஆம் நாள் 15-வது போப் ஆண்டவராகத் திகழ்ந்த கிரகரி என்பவரால் புனிதராக்கப்பட்டதன் நினைவாக இவ்வாலயத்திற்குப் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் என்ற பெயர் சூட்டப்பட்டது. சாதி, மத, நிற, இன, மொழி வேறுபாடின்றி மக்கள் ஆண்டுதோறும் நவம்பர் 24-ஆம் தேதி, முதல் டிசம்பர் 3-ஆம் தேதி வரை நடைபெறும் புனித சவேரியார் திருவிழாவிற்குப் பெருந்திரளாக வந்து பயனடைகிறார்கள்.

---

1000, 2ஆம் பரிசு ரூபாய் 600, 3ஆம் பரிசு ரூ. 400 வழங்கப்பட்டு வருகின்றது. மகளிர் மன்ற அமைப்பாளர்களுக்கு ஒரு காலாண்டிற்கு ரூ. 15 வீதம் மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வருகின்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இராமவர்மபுரம், ஆலந்துறை, பளுகல் ஆகிய இடங்களில் தையல் பயிற்சி நிலையங்கள் சமூகநலத் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களில் 10ஆம் வகுப்பு படித்துத் தேறிய பிற்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடப் பெண்களுக்கு ஒரு ஆண்டுக் காலம் (ஜனவரி முதல் டிசம்பர் வரை) பயிற்சி அளிக்கப்பட்டு, முடிவில் அரசினர் தொழில் நுட்பத் தேர்விற்கும் அனுப்பப்படுகின்றனர். பயிற்சிக் காலத்தில் ஒரு மாணவிக்கு ரூ. 30 வீதம் மாதந்தோறும் உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

**தீப்பெட்டித் தொழில் திட்டம்:**

நாகர்கோவில் மகளிர் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்,கன்னியாகுமரி மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டு ஏழைப் பெண்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பொருட்டு, தமிழக முதலமைச்சரின் சீரிய திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு ஆகும்.

இது சமூகநலத்துறையால் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.சேவைத் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சமூகநலத் துறை மூலம் அரசு மூலதனமாக ரூபாய் ஒரு இலட்சமும் 25 பெண்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அங்கத்தினர்களாகவும் கொண்டு நடைபெற்று வருகிறது.

தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 'பூப் பறவை' தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகள் சேவைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வடநாடுகளில் விற்பனை செய்வதோடு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கச்சாப்பொருட்களைக் கொள்முதல் செய்வதும் சேவைச் சங்கத்தின் பொறுப்பு ஆகும்.

இந்த அமைப்பின் மூலம் 400க்கும் மேற்பட்ட பெண்கள் தீப்பெட்டி உற்பத்தி செய்வதில் ஈடுபட்டு பலன் அடைகின்றனர். அத்துடன் 100க்கும் மேற்பட்ட படித்த இளைஞர்கள் எழுத்தர். போர்மேன் மற்றும் உதவியாளர் போன்ற பணியில்அமர்த்தப்பட்டு பலன் அடைகின்றனர். இதனால் குமரி மாவட்டத்தில் தீப்பெட்டி உற்பத்தி பெருகியதோடு,ஏழைப் பெண்கள், படித்த இளைஞர்கள் ஆகியவர்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. மேலும் 500 பேர் பலன் அடையக்கூடிய திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் செயல்படுத்த ஆவன செய்யப்பட்டு வருகின்றது.

**விதவைகள் மறு வாழ்வுத் திட்டம்:**

விதவைப் பெண்கள் மறுமணம் புரிந்தால் அவர்களை ஊக்குவிப்பதற்காகத் தமிழக அரசால் ரூ. 5000 மதிப்புள்ள தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட ஏழை விதவைப் பெண்களின் மகள் திருமணத்திற்கு ரூ. 1000 வீதம் நிதி உதவி அரசால் அளிக்கப்படுகிறது.

1983-84ஆம் ஆண்டிற்கு 6 பேர்களுக்கு ரூ. 1000 வீதம் 6000 வழங்கப்பட்டுள்ளது. மீதி 15 விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு மானியம் கிடைக்க அனுப்பப்பட்டுள்ளது.

விதவைப் பெண்கள், வாழ்விழந்தவர்கள், வாழ வழியற்ற ஏழைப்பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்ற பெண்களுக்கும் இத்துறையால் இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

1983-84ஆம் ஆண்டிற்கு இலவசமாகத் தையல் இயந்திரம் கேட்டு 200 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

தாம்பரம், தஞ்சை, சேலம், கடலூர் திருநெல்வேலி ஆகிய இடங்களில் சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் விதவைப் பெண்கள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இவர்களுக்குச் சமூக நலத்துறையால் உணவு, உடை, கல்வி, தொழிற்கல்வி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி போன்றவை இலவசமாக அளிக்கப்படுகின்றன.

**வாழ்க்கைத் தொழிற் கல்வி:**

ஆண்டு வருமானம் ரூ. 3000 உட்பட்ட 18 முதல் 30 வயது வரையுள்ள ஏழை எளிய பெண்களுக்கு நாகர்கோவில், தக்கலை, குழித்துறை ஆகிய இடங்களில் தனியார் நிறுவனத்தின் மூலம் இலவச தட்டச்சுப் பயிற்சி, சுருக்கெழுத்துப் பயிற்சி, கணக்கியல் பயிற்சிக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

பள்ளி இறுதித் தேர்வு பெற்று மேற்படிப்பிற்குவழியின்றித்தவிக்கின்ற ஏழை மாணவிகளுக்கு மாதம் ரூ. 15 வீதம் உதவித் தொகையுடன் ஓராண்டிற்கு இலவசமாகத் தட்டச்சுப் பயிற்சி இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளி இறுதித்தேர்வு பெற்று மேற்படிப்பிற்கு வழியின்றித் தவிக்கும் ஏழை மாணவிகளுக்கு மாதம் ரூ.10 வீதம் உதவித் தொகையுடன் ஓராண்டிற்குச் சுருக்கெழுத்துப் பயிற்சி இலவசமாக இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளி இறுதித் தேர்வு பெற்று மேற்படிப்பிற்கு வழியின்றி தவிக்கும் ஏழை மாணவிகளுக்கு மாதம் ரூ. 15 வீதம் உதவித்தொகையுடன் 6 மாத காலம் கணக்கியல் பயிற்சியளிக்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றவர்களுக்காகப் பல திட்டங்கள் சமூக நலத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இரண்டு கால்களால் நடக்கும் சக்தியை இழந்த உடல் ஊனமுற்ற ஏழைகளுக்கு வாழ்க்கையை மேற்கொள்வதற்காக முச்சக்கர வண்டிகள் இத்துறை மூலமாக இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

கண்பார்வையற்ற நபர்களின் வேதனைபோக்கி சாதனை புரிகின்ற அளவிற்கு மேம்பாட்டை எட்டிப் பிடித்து, நாங்களும் சமுதாயத்தில் வாழப் பிறந்தவர்கள் என்ற எண்ணத்தை நிலைநிறுத்தி உறுதுணை புரிய, அரசு விழியிழந்தோர்பள்ளி, கோணம் என்ற இடத்தில் சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றது. இதில் 25 பார்வையற்ற குழந்தைகள் சேர்க்கப்பட்டு கல்விப்பயன் அடைகிறார்கள்.

செவிப் புலனற்றோர் வாழ்வில் செழுமை மலர்ந்திட, தனியாரால் கொட்டாரம் என்ற இடத்தில் காது கேளாதோர் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. பார்வையற்றோர் வாழ்க்கையில் பசுமைத் தென்றல் வீசிட இரேனிபுரத்தில் 'பார்வையற்றோர் பள்ளி' ஒன்றும் திறம்பட உடல் ஊனமுற்றோர் நலம் கருதி செயல்பட்டு வருகின்றது.



வில்லுக்குறி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 'வில்லுக்குறிப் பாலம்' இது. சுமார் 25 கி.மீ. தூரமுள்ள இந்த மேம்பாலத்தில் தண்ணீர் ஓடுகிறது! கீழே போக்குவரத்துகள் நடைபெறுகின்றன. மேலே உள்ள கால்வாய்த் தண்ணீர் பாசனத்துக்குப் பயன்படுகிறது.



# உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

கன்னியாகுமரியிலுள்ள கல்லுக் கூட்டம் என்னும் கிராமம்.

அங்கு அரசு நடுநிலைப் பள்ளியிலுள்ள முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட மையத்துக்குத் திடீரெனச் செல்கிறோம்.

அதோ! கரும்பலகைக்கு முன்னால் மழலைச் செல்வங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன. ஆசிரியை, கரும்பலகையில் உள்ள எழுத்துக்களைச் சுட்டிக்காட்டிச் சொல்ல, குழந்தைகளும் அப்படியே சொல்லுகின்றன. பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

தலைமையாசிரியரிடம் விசாரிக்கிறோம்.

''எங்கள் பள்ளியில் 305 குழந்தைகள் படிக்கிறார்கள். 1 முதல் 6வது வகுப்பு வரை வகுப்புகள் உள்ளன. இங்குப் பயிலும் பெரும்பாலான குழந்தைகள் ஏழைத் தொழிலாளிகள் குழந்தைகள், இவர்களுக்கெல்லாம் நாள்தோறும் இலவச மதிய சத்துணவு போடுகிறோம்.''

இந்த ஊரின் சுற்றுப்புறங்களிலிருந்து இந்தக் குழநதைகள் வருகின்றன. இவர்களின் பெற்றோர்கள் பெரும்பாலும் விவசாயக் கூலிகள்; கட்டடத் தொழிலாளர்கள்; மீனவர்கள். இவர்கள் தத்தம் வேலைகளைக் கவலையின்றிக்கவனிக்கின்றனர். ஏனென்றால், இவர்களது குழந்தைகளுக்கு வயிறார மதிய உணவு கிடைக்கிறது என்ற நம்பிக்கைதான்.

முதல் வகுப்பில் படிக்கும், தெரசிட்டாள் என்ற ஆறு வயது சிறுமியை அழைக்கிறோம்.

''நேற்று பகல் என்ன சாப்பிட்டே?'' அந்தச் சிறுமியைக் கேட்கிறோம்.

''தக்காளி, பருப்பு சாதம்'' என்று வாயைக்குழப்பிக்கொண்டு பதில் சொல்லுகிறது.

''சாப்பாடு நல்லா இருக்கா?''

''ஊம்..ரொம்ப நல்ல இருக்கு. வயிறு நெறைய சரப்பிட்டேன்'' அந்தச் சிறுமி வயிற்றைத்தடவிக் கொண்டே சொல்லுகிறாள். நமக்கு மனநிறைவு ஏற்படுகிறது.

இன்னொரு சிறுவன். அவன் பெயர்: அர்னால்டோ ஜென்கிங்ஸ். ஆறு வயதாகிறது. அவனை விசாரிக்கிறோம்.

''எங்கப்பா கூலி வேலை செய்றார். முன்பெல்லாம் வீட்லே கஞ்சி, கூழ்தான் குடிப்பேன். இப்ப...வயிறு நெறைய சாப்பாடு கெடைக்குது. காய்கறி, கீரை, பருப்புச் சாதம். ரொம்ப நல்லா இருக்குது....'' என்கிறான் அவன்.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் சாப்பாடு போட ஆரம்பிச்சிடுவாங்க...' என்கிறார் அந்த வகுப்பு ஆசிரியை.

இங்குள்ள சத்துணவுக் கூடத்தில் இரண்டு பெண்மணிகள் சமையல் வேலை பார்க்கின்றனர். கூடத்தின் ஓர் பக்கம் தக்காளி, கருணை, கோசு, உருளைக் கிழங்கு என காய்கறிகள் இருந்தன. ஒருவர் காய்கறிகளை அரிந்துகொண்டிருந்தார். உள்ளே சமையல் ஆகிக்கொண்டிருந்தது. எல்லா வேலையும் கவனமாகவும், அதே சமயத்தில் துரிதமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறித்த நேரத்தில் உணவு பரிமாற வேண்டும் அல்லவா?

இந்தச் சத்துணவு மையம் சிறப்பாக நடைபெறுகிறது என்பதற்காகவும், இந்த மையத்தின் அமைப்பாளர் சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார் என்பதற்காகவும் மாண்புமிகு சத்துணவு அமைச்சர் திரு ஆர். செளந்தரராசன் அவர்கள், இந்த மையத்துக்கு வருகை தந்து, கேடயம் ஒன்றைப் பரிசாக வழங்கியிருக்கிறார்.

''தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் சத்துணவு மையங்களிலிருந்து மிகச் சிறந்தவை என்று தேர்ந்தெடுக்கப்படும் சத்துணவு மைய அமைப்பாளர்களுக்கும், இரு உதவியாளர்களுக்கும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் பரிசு வழங்கப்படும்.

''தமிழ்நாட்டில் நகரசபை, ஊராட்சி ஒன்றியம், சமூகநலத் துறை, பிற்பட்டோர் நலத்துறை, கல்வித்துறை போன்ற ஒன்பது அமைப்பாளர்களின் மூலம் சத்துணவு மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.







தெரசிட்டாள்

''இவ்வாறு அமைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த அமைப்பாளர்கள், இரண்டு உதவியாளர்கள் ஆக மொத்தம் 27 பேருக்குப் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் பரிசுகள் வழங்கப்படும்.''

இவ்வாறு மாண்புமிகு சத்துணவு அமைச்சர் அவர்கள் நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளது. நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது அல்லவா?

கல்லுக்கூட்டம், அரசு நடுநிலைப்பள்ளிச் சத்துணவு மைய அமைப்பாளர் திருமதி ஆகத்தம்மாள் ஒரு விதவை.

''குடும்பத்தை எப்படி நடத்துவது என்று திண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம் எனக்குக் கைகொடுத்தது'' என்கிறார் இவர்.

''குழந்தைகளுக்குச் சத்துணவோடு அறிவும் புகட்டுகிறோம். இறைவணக்கம், நல்லொழுக்கம், சுகாதாரம் போன்ற நல்ல பழக்கங்களைக் கற்றுத் தருவது என் வேலை...'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் திருமதி ஆகத்தம்மாள்.

இவர் பெற்ற பரிசுக் கேடயத்தில் நடராசர் உருவம் பொறிக்கப்பட்டு, அதில் 'சிறந்த அமைப்பாளர் திருமதி என். ஆகத்தம்மாள் - பரிசு வழங்கியவர் மாண்புமிகு சத்துணவு அமைச்சர் திரு ஆர். செளந்தரராசன் அவர்கள் 11-12-'83' என்று குறிப்பிட்டிருந்தது.

இம்மாதிரியான பரிசு, தமிழ் நாட்டிலேயே முதன் முறையாக இந்த மையத்துக்கு வழங்கப் பட்டிருக்கிறதுஎன்ற தகவலையும் தெரிந்து கொள்கிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை நாள்தோறும் 1,35,000 குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு வழங்கப்படுகிறது.







போகிற வழியில், மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சக்கரபாணி என்னும் இடத்தில் உள்ள சத்துணவு மையத்தில் குழந்தைகள் பகல் உணவருந்தி விட்டுக் குதூகலமாக ஆடிப்பா[illegible] கின்ற காட்சியைக் கண்டோ[illegible]. இக்கூடத்தில் 55 குழந்தை[illegible] உள்ளன.

கன்னியாகுமரியில், [illegible] முடிந்து வீடு திரும்பும் குழந்தைகள் தத்தம் பலகைப்புத்தகங்களுடன், இலவசப் பல்பொடித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பல்பொடிப் பொட்டலங்களையும் எடுத்துக் கொண்டு போவதைப் பார்க்கிறோம். ஒரு சிறுவனை அழைத்து, ''பல் நன்றாகத் துலக்குகிறாயா?'' என்று கேட்கிறோம். அதற்கு அவன் 'ஈ' என்று பல்லைக் காட்டுகிறான். பிறகு அவனே சொல்கிறான்; ''முன்பெல்லாம் செங்கல் தூளிலேதான் பல் விளக்குவேன். இப்ப அப்படி இல்லே....''

ஒரு வேளைச் சோற்றுக்கு ஒண்டிக் கிடந்த குழந்தைகள்—பசியால் வாடி பகல் உணவையே மறந்த மழலைச் செல்வங்கள் இன்று வயிறார உண்டு, ஆண்டு முழுவதும் சோற்றுக்குப் பஞ்சமில்லாமல் நெஞ்சம் மகிழ்கின்ற [illegible] காணும்போது [illegible] தார் உயிர் [illegible] என்று மணிமேகலையில் [illegible] அழகிய வரிகளே நம் நினைவுக்கு வருகின்றன.

— [illegible]. கிரி

85346



# தொழில் வளம்...

மாநிலத்தில் தொழில் வளம் பெருக்க, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களின் வளம் பெருக்க விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளும்பொருட்டு அரசு துவங்கிய 14 மாவட்டத் தொழில் மையங்களில், நாகர்கோவில் மாவட்டத் தொழில் மையமும் ஒன்று. நாகர்கோவில் மாவட்டத் தொழில் மையம் 1.8.1978 முதல் துவங்கப்பட்டு நன்கு செயல்பட்டு வருகின்றது.

மாநிலத்தில் வாழும் மக்களின் தொழில் வளம் பெருக்கி, பொருளாதார மேம்பாடடைய ஆவன செய்யும் பொருட்டு இப்பணியில் ஈடுபட்டுள்ள அரசுத் துறைகள், வாரியங்கள் நிதி வழங்கு வாரியங்கள் ஆகியவற்றின் செயல்முறைகளை ஒருங்கிணைத்து ஒரு குடைக்கீழ் செயல்படுத்துகின்ற அமைப்புத்தான் மாவட்டத் தொழில் மையங்கள்.

இவற்றின் நோக்கங்கள் என்ன?

1. தொழில் தொடங்கி நடத்துவதற்குத் தேவைப்படும் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ் வழங்குதல்.

2. பல்வேறு துறைகளிலிருந்து தேவைப்படும் உரிமங்களையும் விரைவில் பெற்றுத் தருதல்.

3. இயந்திரம், நிலம், கட்டடம், நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்கு ஆகும் நிதி உதவிக்கு ஏற்பாடு செய்தல்.

4. மூலப் பொருள் கிடைக்க வகை செய்தல்.

5. விற்பனைச் சந்தைக்கு வழி வகுத்தல்

6. மின்வினியோகம் பெற உதவுதல்.

7. பொருளாதார அமைப்புக்களைக் கண்டறிந்து புதிய தொழில் தொடங்க ஏற்ந்த இடங்களைத் தேர்வு செய்தல்.

8. சிறுரகத் தொழில் கூடங்கள் அமைத்தல்.

9. நலிவுற்ற தொழில்களைக் கண்டறிந்து புத்துயிரூட்டல்.

10. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்.

11. குறைந்தவட்டியில் ஊரகத்தொழிற் கடன் வழங்குதல், மாநில மத்திய அரசுகள் வழங்கும் மானியங்களைப் பெற்றுத் தருதல்.

கடந்த நான்கு ஆண்டுகளில் 418 நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்களும், 1450 கைவினைத் தொழில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வுதவியின் மூலம் முறையே 18484, 3072 தொழில் முனைவோர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஊரகத் தொழிற் கடன் திட்டத்தின்கீழ் 100 நிறுவனங்களுக்கு ரூ. 10.75 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தேசியமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 685 நிறுவனங்களுக்கு ரூ. 157.48 இலட்சம் கடனாகப் பெற்றுத்தரப்பட்டுள்ளது. இதனால் 572 தொழில் முனைவோர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக 258தொழில் நிறுவனங்களுக்கு 153.00 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதன் வழி 3521 தொழில் முனைவோர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். இது போன்று தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும் ஒரு தொழிலுக்கு ரூ.13.300 விதைப் பணம் உதவி வழங்கியுள்ளது.

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எஸ்.எஸ்.எல்.சி. வரை பயின்ற 18 முதல் 35 வரையுள்ள படித்து வேலையற்ற இளைஞர்களுக்குத் தொழில் தொடங்க ரூ. 25,000 வரை கடன் வழங்கப்படுகின்றது.

கடந்த நான்கு ஆண்டுகள்ளில் 500 தொழில்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட மூலப் பொருட்களான பாரபின் மெழுகு, தீப்பெட்டி மெழுகு, இரும்பு, உருக்கு, கல்கரி, சிமெண்டு, டீசல், மண்ணெண்ணெய் போன்றவைகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளில் 16 மாவட்ட ஆலோசனைக்குழுக் கூட்டங்கள் மூலம் 154 சிறு தொழில் நிறுவனங்களுக்கு மின்இணைப்பு மற்றும் உரிமங்கள் பெற்றுத்தரப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் நாகர்கோவில் பக்கம் உள்ள கோணத்தில் 8 தொழிற் கூடங்கள் அடங்கிய ஒரு தொழிற்பேட்டையும், மார்த்தாண்டத்தில் 3 தொழிற்கூடங்கள் அடங்கிய ஓர் தொழிற்பேட்டையும் ஏற்படுத்தப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் கோணம் தொழிற்பேட்டையில் 10 சிறு தொழில் கூடங்களும், 19 சீர் திருத்தப்பட்ட மனைகளும் தொழில் முனைவோர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 3178 நபர்களுக்குப் பல்வேறு தொழில் பிரிவுகளில் 22.98 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தீப்பெட்டி தயாரித்தல், பூத்தையல் வேலைகள், இருபிரி கயிறுகள், இயந்திரத்தையல், மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் ஆகிய தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஊரக கைவினைஞர்கள் ஊக்குவிப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் ரூ.76,000 செலவில் 96 நபர்களுக்கு தச்சு, கருமார் வேலை, உலோகத் தகடுகள் பற்றவைக்கும் வேலை போன்ற தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்காண்டுகளில் 2495 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்ற 57தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவைகளில் 13 கயிற்றுத் தொழில் சங்கங்களும், 27 சிறு தொழில் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கங்களும் மற்றும் 17 இதர வகை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன. இதில் ரப்பர் பொருள் உற்பத்திக்கென ஒரு கூட்டுறவுச் சங்கமும், சேம்பர் செங்கல் செய்யும் கூட்டுறவுச் சங்கமும் அடங்கும். பெண்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் 32 தொழிற் கூட்டுறவுச் சங்கமும் ஆதிதிராவிட மக்கள் நலனுக்காக 3 தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் சிறப்பு அங்கத் திட்டத்தின்கீழ் ( Special Component Scheme ) தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் 2 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு சேம்பர் செங்கல் கூட்டுறவுச் சங்கமும் அடங்கும். இம்மூன்று கூட்டுறவுச் சங்கங்களுக்காக மொத்தம் 14.06 இலட்சம் நிதியுதவி தமிழக அரசினால் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு ஆதிதிராவிட முன்னேற்றத் துறையின் வாயிலாக ரூ. 6,54,600 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் வாயிலாக 221 ஆதிதிராவிட மக்கள் பயனடைவர்.

1980 முதல் 1983 வரை மூன்று ஆண்டுகளுக்குச் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. 1983-84லிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்குச் செயல் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

ரப்பர்:—இம்மாவட்டத்தில் ஏறத்தாழ 4372 எக்டேர் நிலப்பரப்பில் ரப்பர் பயிரிடப்பட்டு ஆண்டொன்றுக்கு 12000 டன்கள் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதில் உள்ளூரில் பயன்படுத்தப்பட்டுவரும் 350 டன் போக எஞ்சியதைப் பயன்படுத்தி சைக்கிள் டியூப்புகள் 'வி' பெல்டுகள் கட்டும் ரப்பர்கள், பலூன்கள், கையுறைகள், டிரட் ரப்பர்கள் போன்ற பொருட்கள் தயாரிக்கும் தொழிலகங்கள் அமைக்க வாய்ப்புகள் உள்ளன.

மரவள்ளிக் கிழங்கு:—13000 எக்டேர் நிலத்தில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டு ஆண்டு ஒன்றிற்குச் சுமார் 2 இலட்சம் டன்கள் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதில் உணவாகப் பயன்படும் 50 விழுக்காடு தவிர எஞ்சியதைப் பயன்படுத்தி கிழங்குமாவு திரவ குளுக்கோஸ் மற்றும் பசை வகைகள் தயார் செய்ய வாய்ப்புகள் உள்ளன.

# நாட்டு வளம்





# வேலை வாய்ப்பு

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், நான்கு பிரிவுகளாக இயங்கி வருகின்றது. அவை:

1. பொதுப்பிரிவு, 2. வாழ்க்கை நெறிவழிகாட்டிப்பிரிவு, 3. வேலை நிலவரத் தகவல் பிரிவு, 4. வேலை வாய்ப்பற்றோர் நிவாரணபிரிவு.

பொதுப்பிரிவு: இப்பிரிவில் வேலை வேண்டிவரும் மனுதாரர்களின் பெயர், கல்வி, தகுதிகளைப் பதிவு செய்தல், வேலை அளிப்போர் தெரிவிக்கும் காலிப் பணியிடங்களுக்கு மனுதாரர்களைப் பரிந்துரை செய்தல் போன்ற பணிகள் செய்யப்படுகின்றன.

வாழ்க்கைநெறி வழிகாட்டிப் பிரிவு: படித்த இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சி பற்றிய தகவல், அவரவர் திறமைக்கேற்ப தொழில் மற்றும் வேலை வாய்ப்பினைத் தேர்ந்தெடுத்தலில் வழிகாட்டுதல், ஆலோசனை வழங்குதல் போன்ற பணிகளை இப்பிரிவு செய்து வருகிறது.

வேலை நிலவரத்தகவல் பிரிவு: பொது மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்ற பணியாளர்களின் விவரங்கள் இப்பிரிவில் சேகரிக்கப்பட்டு, இயக்குநர் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சென்னை மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பொது இயக்குநர் புது டில்லி அவர்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. இந்நாட்டின் மனித சக்தியின் தேவை மற்றும் அதன் அளவு இவைகள் தொடர்பான ஆராய்ச்சிக்கு இப்பிரிவில் சேகரிக்கும் புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.



மென் மரங்கள்:—இம்மாவட்ட நீர்த்தேக்கப் பகுதிகளில் 165டன் ரப்பர் மரமும் 98,000 டன் இதர மரங்களும் உள்ளன. இவைகளிலிருந்து ஆண்டொன்றுக்குச் சுமார் 6000கனமீட்டர் ரப்பர் மரங்களும். 2500கன மீட்டர் இதர மென் மரங்களும் வெட்டப்பட்டு வெளி மாநிலங்களுக்குச் செல்லும் நிலையிலுள்ளது. இவைகளிலிருந்து தீக்குச்சி, தீப்பெட்டி, அட்டைகள் மற்றும் அட்டைப்பெட்டிகள் போன்ற தொழில்கள் துவங்க வாய்ப்புகள் உள்ளன.

பழ வகைகள்:—இம்மாவட்டத்தில் ஆண்டிற்கு 3500 மெட்ரிக் டன் வாழைப்பழமும், 31,800 டன் மாம்பழமும், 700டன் பலாப்பழமும், அன்னாசிப்பழங்களும் கிடைப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி ஜாம் தயாரிப்புத் தொழிற்சாலை தொடங்க வாய்ப்பு உள்ளது.

தென்னை: குமரி மாவட்டத்தில் ஆண்டொன்றுக்குச் சுமார் 18 கோடி தேங்காய்த் தொண்டுகள் கிடைக்கின்றன. சுமார் 18,000 மெட்ரிக் டன் தேங்காய் நார் இதிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. தென்னை நார் அடிப்படையாக உள்ள தொழில்கள் தொடங்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

புளியமரம்: ஆண்டிற்கு 4500 டன் புளியம் பழம் கிடைக்கிறது. இதிலுள்ள விதைகளிலிருந்து மாட்டுத் தீவனம் மற்றும் துணி ஆலைகளுக்குத் தேவையான பசைப் பொருட்கள் தயாரிக்கலாம்.

**தொழில் வளர அரசு சலுகைகள்:**

1. குமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்தைத் தமிழக அரசு பின் தங்கிய வட்டாரமாக அறிவித்து, இப்பகுதியில் தொழில் துவங்குபவர்க்கு நிரந்தர மூலதன முதலீட்டில் (நிலம், கட்டடம், இயந்திரம்) 15 விழுக்காட்டினை மானியமாக வழங்குகிறது.

அ. மத்திய அரசு மாவட்டம் முழுவதிலும் தொழில் துவங்குபவர்களுக்கு அவர்களது நிரந்தர மூலதன முதலீட்டில் 10 விழுக்காட்டினை மானியமாக வழங்குகிறது.

இ. ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வரைபட ஒப்புதல் பெறுவதற்குத் தீங்குவிளைவிக்கின்ற கழிவுப் பொருட்களை வெளியாக்குகின்ற 14 தொழில்கள் தவிர ஏனைய தொழில்களுக்கு உடல் நலத்துறையின் அனுமதி பெற வேண்டியதில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

ஈ. தொழில் துவங்குவோர் நகர் கிராமப்புறத் திட்ட த்துறை யிலிருந்து ஒப்புதல் பெறுவதற்குத் தேவையில்லையென்றும் மாவட்டத் தொழில் மையமே அனுமதி வழங்கலாமென்றும் அரசு அறிவித்துள்ளது.

உ. 5 குதிரைச் சக்திக்குக் கீழ் மின்சக்தி பயன்படுத்துகின்ற குடிசைத் தொழில்களுக்கு உடல் நலத்துறையின் அனுமதி பெற வேண்டியதில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

ஊ. தொழில்தொடங்குவோர் மின்இணைப்புப்பெற வருவாய்த்துறையிலிருந்து பெறுமதிச்சான்று இதழ் பெற வேண்டியதில்லையென்று அரசு ஆணை வழங்கியுள்ளது.

மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் மத்திய அரசும் மாநில அரசும் வழங்குகின்ற வாய்ப்புகளையும், சலுகைகளையும் பயன்படுத்தி, வாய்ப்புள்ள தொழில்களைத் தொடங்கி வளம் பெறுவோம்!





திருவனந்தபுரத்தில் 'தும்பா' ஏவுகணைத் தளம் உள்ளது. தும்பா ராக்கட் தளத்திற்கு, துணை ஏவுகணைத் தளம் ஒன்றை அமைக்க இடம் தேவைப்பட்டது. இதற்காகத் தென் இந்தியாவில் இருபத்திரண்டு இடங்களை ஐந்து ஆண்டுகளாக ஆய்வு செய்தார்கள் வல்லுநர்கள். இறுதியாக, கன்னியாகுமரிமாவட்டமே இதற்கு உகந்தது எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதுதான் இம்மாவட்டத்தில் உள்ள மகேந்திரகிரி மலைப்பகுதி! இப்பகுதி மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் உள்ளது. இதன் ஒரு பகுதி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்திருக்கிறது.

மகேந்திரகிரி மலையில் அமைக்கப்பட்டு வரும் துணை ஏவுகணைத் தளத்தின் பரப்பளவு 6,272 ஏக்கர். தளம் அமைக்கும் வேலைகள் நடைபெறுவதற்காக 8 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பணியில் சராசரியாக நாள்தோறும் 500 பேர்கள் பணியாற்றுகிறார்கள். பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இப்பணி 1985-ஆம் ஆண்டு இறுதியில் முடியும்.

இங்கு அறிவியல் ஆய்வாளர்களுக்கு ஒரு பகுதியும், ஏவுகணை ஆய்விற்கு இரண்டு பகுதிகளும், ராக்கட் ஆய்விற்கு மூலப்பொருளான திரவப் பொருளைத் தேக்கி வைக்க இரண்டு பகுதிகளும், அலுவலகத்திற்கு ஒரு பகுதியும் என பல்வேறு பகுதிகளைக் கட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்தத் துணை ஏவுகணைத் தளம் பெரும்பாலும் மின் நுணுக்க முறையில் இயங்கும்.

ஏவுகணைகளைத் திடப்பொருளாகவும், திரவப் பொருளாகவும் வைத்துச் செலுத்தலாம். இங்கு திரவப் பொருளாக வைத்து ஏவுகணை செலுத்துவதற்குச் சிறிய வகையில் ஆய்வு செய்யப்படும். அதன் பிறகு திருவனந்தபுரத்தில் உள்ள தும்பா நிலையத்திலிருந்து இது செலுத்தப்படும்.

அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகள் திரவப் பொருள் மூலம் ஏவுகணை விடுகின்றன. இந்த வகையில் இந்தியா 5-வது இடத்தினை வகிக்கிறது. திரவப் பொருள் பம்பாய், ஹைதராபாத் ஆகிய இடங்களிலிருந்து பெறப்படும்.

இங்கு அமைக்கப்பட இருக்கும் தளத்தில் தொழில்நுணுக்க இளைஞர்கள் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மகேந்திரகிரி மலையில்அமைய இருக்கும் ஏவுகணைத் தளம், கடல் மட்டத்திலிருந்து 240 மீட்டர் உயரத்தில் உள்ளது. இதன் திட்ட மதிப்பீடு ரூ. 25 கோடியாகும். இங்கு அமைய இருக்கும் துணை ஏவுகணைத் தளம் உலக அரங்கில் ஓர் உன்னதமான இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை!

**அ. மருது**

## மகேந்திரகிரி மலையில்..








# கிராமக் குடிநீர்த்திட்டம்

**1976-77**-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் பரவலாக ஏற்பட்ட தண்ணீர்ப் பற்றாக்குறையினைக் கவனத்தில் கொண்டு வருங்காலங்களில் அவ்வாறு தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்காவண்ணம் தண்ணீர் வினியோகம் செய்யும் பொருட்டு விரிவானதோர் கணக்கு எடுக்கப்பட்டு தண்ணீர் பற்றாக்குறையுள்ள இடங்களை 6 பகுதிகளாக பிரிக்கப்பட்டது.

இதன்படி 1977-78-ல் குமரி மாவட்டத்தில் பிரிவு 1 மற்றும் 2-ல் 80 கிராமங்களைத் தேர்வு செய்து ரூ. 55.55 இலட்சத்தில் இக்கிராமங்களுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு 78 கிராயங்களில் வேலைகள் முடிவுற்றுள்ளது இதனால் 49,893 மக்கள் பயன் பெறுகிறார்கள். மீதமுள்ள 2 கிராமங்களில் வேலைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளது. இதனால் 2,150 மக்கள் பயன்பெற இருக்கின்றனர். 46 கிராமங்களில் 22 பல்வேறு குதிரைத் திறன் சக்தி வாய்ந்த மின் இயக்கு நீரேற்றி மூலம் பல்வேறு கொள்ளளவுகள் கொண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்குத் தண்ணீர் ஏற்றப்பட்டு, அங்கிருந்து பி.வி.சி. மற்றும் ஜி.ஐ. பகிர்தமான குழாய்கள் பல மீட்டர் நீளத்திற்குப் போடப்பட்டு பொதுக் குழாய்கள் மூலம் தண்ணீர் பொதுமக்களுக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது.

1980-81-ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் முதல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி இம்மாவட்டத்தில் 95 கிராமங்களைத் தேர்வு செய்து ரூபாய் 113.41 இலட்சத்திற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு மொத்தம் 90 கிராமங்களில் வேலை முடிவுற்றுள்ளது. இதனால் பயன் பெறும் மக்கள் தொகை 80684. மீதமுள்ள 5 கிராமங்களில் வேலை முன்னேற்றத்தில் உள்ளது.

1981-82ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி 65 கிராமங்களில் 39 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு 17 கிராமங்களில் வேலை முடிவுற்றுள்ளது. 22 கிராமங்களில் வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளது. மீதமுள்ளவை பின் வருங்காலங்களில் திட்டம் செயல்படுத்த எடுத்துக் கொள்ளவிருக்கின்றன.

1982-83-ஆம் ஆண்டுகளில் 3-வது கட்ட தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில் உள்ள தேர்வு செய்யத் தகுதியுள்ள கிராமங்கள் நகர ஊராட்சிகளில் அடங்கியமையால் திட்டங்கள் செயல்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மறுதரம் வகுக்கப்பட்ட பட்டியலில் இருந்து 15 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 45.79 இலட்சத்திற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதனால் பயன் பெறும் மக்கள் தொகை 24,150 ஆகும். மேலும் தற்போது 83-84ஆம் ஆண்டுத் திட்டங்களுக்கு 3-வது கட்டமாகத் தக்கலை, திருவட்டார் ஒன்றியங்களில் 14 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

1983-ஆம் ஆண்டில் குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியினால் மக்கள் குடிநீர் வேண்டி மிகவும் கஷ்டப்பட்டனர். எனவே வறட்சிநிவாரணப் பணியின்கீழ் இவ்வாண்டு 485 ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன. அதற்கு இதுவரை செலவான தொகை ரூ. 49.07 இலட்சங்கள்.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 100 முதல் 120 அடி ஆழத்திற்குப் படிவங்களில் களிமண் கலந்துள்ளதால் ஆழ்குழாய்க்கிணறுகளில் போதிய தண்ணீர் கிடைப்பதில்லை. அடிபம்பிற்குத் தேவையான தண்ணீரே கிடைக்கிறது. இந்த வகையான பாறைகளில் துளையிடவும், தனியான துளைக் கருவிகள் தேவைப்படுகிறது. எனவே வறட்சி நிவாரணத் திட்டத்தில் போடப்பட்ட கிணறுகளை நிரந்தரமாகப் பயன்படுத்தும் வகையில், ஏற்கெனவே உள்ள நீர் மேல்மட்டத் தொட்டிகளையும் இக்கிணறுகளையும் இணைத்து மாவட்ட ஆட்சித்தலைவரால் 13 கிராமங்கள் தேர்ந்தெடுத்து ரூபாய் 10.49 இலட்சத்தில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக திங்கள்சந்தை, தேங்காய்ப்பட்டினம், கருங்கல் ஆகிய ஊர்கள் இவ்வாறு பயன் பெறப்பட்ட கிராமங்களாகும். ஆரல்வாய்மொழியில் தலைப் பணியிட கிணற்றில் நல்ல தண்ணீர் இருந்தும் சரியான பகிர்மானம் இல்லாததால் மேட்டுப் பகுதிகளுக்குத் தண்ணீர் சரியாகக் கிடைக்காத நிலை இருந்து வந்தது. மேற்கூறிய வறட்சித் திட்டத்தின் கீழ் 1 இலட்சம் கொள்ளளவுள்ள ஓர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி கட்டி தண்ணீர் இப்போது வினியோகிக்கப்பட்டு வருகிறது.




# நேசமணி போக்குவரத்துக் கழகம்

இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப்படும்போது கொச்சி மாநிலத்திலிருந்து பிரிந்து தமிழகத்துடன் 1.11.1956ல் இணைந்தது. அவ்வமயம் கொச்சி அரசிடமிருந்து இப்பகுதியில் ஓடிக்கொண்டிருந்த 45 வழித் தடப் பேருந்துகளைத் தமிழக அரசு ஏற்றெடுத்து தமிழக அரசு போக்குவரத்துத்துறையில் கன்னியாகுமரிக் கிளை என்றுஒன்று ஏற்படுத்தி மாவட்ட போக்குவரத்துக் கண்காணிப்பாளரால் நிர்வகிக்கப்பட்டது. இது நாகர்கோவிலில் உள்ள மீனாட்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்தது.

கன்னியாகுமரி கிளை கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்பட்டு வந்தது. அது முதல் குமரி மாவட்டத்தில் போக்குவரத்துத் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்றே சொல்ல வேண்டும். பல புதிய வழித் தடங்கள் ஏற்படுத்தப்பட்டு புதிய பேருந்துகள் விடப்பட்டன. 1962ஆம் ஆண்டில் பேருந்துகளை நல்ல முறையில் பராமரிக்க ராணித்தோட்டத்தில் மிகப்பெரிய தொழிற்கூடம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் அதில் கூண்டு கட்டும் பிரிவு, டயர், புதுப்பிக்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டு தன்னிறைவு பெற்றது.

1966ஆம் ஆண்டு குழித்துறையில் ஒரு பணிமனை திறக்கப்பட்டது. 1968ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பல தனியார் பேருந்துகள் தேசிய மயமாக்கப்பட்டதன் விளைவாக கன்னியாகுமரி கிளை மேலும் வளர்ச்சியடைந்தது. நிர்வாகம் விரிவடைந்ததன் காரணமாக 1970ஆம் ஆண்டு கிளை இயக்குநர் நியமிக்கப்பட்டார். 1971ல் போக்குவரத்துத் தடங்களில் பல மாறுதல்கள் செய்யப்பட்டு பல புதிய நகரப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1971ல் இராணித்தோட்டத்தில் ஒரு புதிய பணிமனையும் திறக்கப்பட்டது.

தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்படுத்தும் அரசின் முடிவுப்படி 1.1.1974 முதல் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்காக நாகர்கோவிலைத் தலைமைச் செயலகமாகக் கொண்டு "கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்" உதயமாயிற்று. அப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 265 பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. 1974ல் திங்கள்சந்தை, திருவட்டார் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் புதிய பணிமனைகள் திறக்கப்பட்டன. 1976ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த தனியார் பேருந்துகள் அத்தனையும் தேசியமயமாக்கப்பட்டன.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் 770 பேருந்துகளை இயக்கி வந்தது.

தமிழ்நாடு அரசு நியமித்த பட்டாபிராமன் குழுவின் கருத்துப்படி மக்களுக்குச் சிறந்த சேவை செய்ய வேண்டுமெனில் போக்குவரத்துக் கழகங்கள் மாவட்டந்தோறும் தனித்தனியே இயங்க வேண்டுமென்ற கருத்தின் படி, தமிழ்நாடு அரசின் சீரிய சிந்தனையின் விளைவாகக் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன் விளைவாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய போக்குவரத்துக் கழகம் அமரர் நேசமணி அவர்களின் திருப்பெயரைக்கொண்டு "நேசமணி போக்குவரத்துக் கழகம்" என்ற பெயரில் 1.4.1983 முதல் செயல்படத் தொடங்கியது.

இந்தப் போக்குவரத்துக் கழகத்தில் இராணித்தோட்டம் புறநகர் பிரிவு, இராணித் தோட்டம், குழித்துறை, திங்கள்சந்தை, கன்னியாகுமரி, திருவட்டார் ஆகிய இடங்களில் பணிமனைகள் உள்ளன.

சரித்திரப் புகழ் வாய்ந்த சிறந்த தொழிற்கூடத்தை இராணித் தோட்டத்தில் கொண்ட இக்கழகம், தன் தேவைகளைத் தானே நிறைவு செய்து கொள்வதோடு திருநெல்வேலியில் இயங்கும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்துக்கும் பேருந்தின் கூண்டு கட்டும் பணியினையும் கொண்டுள்ளது. நல்ல அனுபவமும், தொழில் திறனும் கொண்ட தொழிலாளர் வேலைபார்க்கும் இராணித்தோட்டம் தொழிற்கூடத்திலிருந்து அண்டை மாநிலமான கேரளாவுக்குப் பேருந்து கூண்டுகட்டி அனுப்பி வருவது குறிப்பிடத்தக்கது.

இப்போக்குவரத்துக் கழகத்தில் மாதம் 1500 டயர்களைப் புதுப்பிக்கும் தொழிற்சாலை தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் ஏனைய அரசு ஊர்திகளுக்கும் பட்டைகளைப் புதுப்பித்துக் கொடுக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது.

நேசமணி போக்குவரத்துக் கழகத்திலுள்ள மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 353. நாளொன்றுக்கு சராசரி பேருந்துகள் ஓடும் தூரம் 1,02,400 கி.மீ. சராசரி ஒரு நாள் வருவாய் ரூ. 3,45,715. சராசரி ஒரு நாள் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை 3,80,185. இக்கழகத்தில் வேலைபார்க்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,824.



# வேளாண்மை வளர்ப்போம்!

கன்னியாகுமரி மாவட்டம் 1956ஆம் ஆண்டு, முன்னாள் திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானத்திலிருந்து பிரித்து ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாட்டிலேயே சிறிய மாவட்டம் இதுதான். இம்மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 645.5 சதுர மைல்கள். தற்போதைய மக்கள் தொகை 14.20 இலட்சமாகும்.

இம்மாவட்டம் தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு என நான்கு வட்டங்களையும், தோவாளை, அகஸ்தீஸ்வரம், இராஜாக்கமங்கலம், குருந்தன்கோடு, தக்கலை, திருவட்டார், மேல்புரம், முஞ்சிறை, கிள்ளியூர் என ஒன்பது வளர்ச்சி வட்டாரங்களையும் கொண்டது.

தட்ப வெப்ப நிலையைக் கொண்டு இம்மாவட்டத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

1. மலையும் மலை சார்ந்த பகுதியும்:

இப்பகுதியில் ரப்பர், கிராம்பு, ஜாதிக்காய், மிளகு, அன்னாசி பழம் போன்ற பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன.

2. சமவெளிப் பகுதி:

இப்பகுதியில் நெல், மரச்சீனி, வாழை, தென்னை போன்ற பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன.

3. கடற்கரைப் பகுதி:

இங்கு தென்னை, முந்திரி போன்ற பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன.

பரப்பளவில் சிறிய மாவட்டமாக இருந்தாலும் இம்மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலை இங்கு பல பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக உள்ளது. நெல், மரச்சீனி, தென்னை, நிலக்கடலை போன்ற பயிர்களும் ரப்பர், வாசனைத் திரவியங்களும் பயிர் செய்யப்படுகின்றன.

இம்மாவட்டம் தென்மேற்கு, வடகிழக்குப் பருவக் காற்றுகளால் பயனடைகிறது. இம்மாவட்டத்தின் சராசரி மழையளவு 1465 மில்லி மீட்டர்.

இம்மாவட்டத்தின் முக்கிய நதிகள் 1. பறளியாறு, 2. கோதையாறு, 3. சிற்றாறு. இவற்றில் பறளியாறு குறுக்கே பெருஞ்சாணி அணையும், கோதையாறு அருகே பேச்சிப்பாறை அணையும் கட்டப்பட்டுள்ளன. சிற்றாறின் குறுக்கே இரண்டு அணைகள் சிற்றாறு ஒன்று மற்றும் இரண்டு கட்டப்பட்டுள்ளன. இவை இரண்டும் பாசனத்திற்கு உதவுகின்றன.

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி நீர்த் தேக்கங்கள் இணைந்து செயல்படும் நீர்ப்பாசனத் திட்டத்திற்குக் கோதையாறு பாசனத் திட்டம் என்று பெயர். இத்திட்டத்தில் தோவாளை வட்டத்தில் 4712.00 எக்டர், அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் 8394.00 எக்டர், கல்குளம் வட்டத்தில் 5737.00 எக்டர் விளவங்கோடு வட்டத்தில் 136.00 எக்டர் ஆகமொத்தம் 19,009.00 எக்டர் பரப்பு பயன் பெறுகிறது.

சிற்றாறு பட்டணம் கால்வாய் திட்டத்தின் மூலம் கல்குளம் வட்டத்தில் 660.00 எக்டர், விளவங்கோடு வட்டத்தில் 2125.00 எக்டர் ஆக மொத்தம் 2785.00 எக்டர் பாசன வசதி பெறுகின்றது.

கேரள நெய்யாறு பாசனத் திட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் 1456 எக்டர் நிலம் பயனடைகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலப்பரப்பு 1,67,215 எக்டர் ஆகும். இப்பரப்பு கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது: வனங்கள் 55044 எக்டர், சாகுபடிக்குப் பயன் படாத நிலம் 4101 எக்டர், சாகுபடி அல்லாத வேறு விதத்தில் பயன்படுத்தப்பட்ட நிலம் 23,666 எக்டர். சாகுபடிக்கு ஏற்ற தரிசு 430 எக்டர், சாகுவதமான மேய்ச்சல் தரையும் மற்ற புல் தரையும் 380 எக்டேர். சாகுபடி செய்யப்பட்ட பரப்பில் சேர்க்கப்படாத தோப்பு மரங்களடங்கிய பரப்பு 231 எக்டர். நடப்பு ஆண்டில் தரிசுகள் 1835 எக்டர், மற்ற தரிசு நிலங்கள் 347 எக்டர், நிகர சாகுபடி பரப்பு 81181 எக்டர்.

வறட்சியில் மாற்றுப் பயிர் எள்.





பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்— விவசாயிகளுக்கு நேரடி விளக்கம்

நெல், இம்மாவட்டத்தின் முக்கிய உணவுப் பயிராகும். இது இரண்டு பருவத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. முதல் பயிர் ஏப்ரல், மே மாதத்திலும் இரண்டாவது பயிர் செப்டம்பர், அக்டோபர் மாதத்திலும் சாகுபடியாகின்றன.

நெல்லுக்கு அடுத்த உணவுப் பயிராக மரச்சீனி பயிர் செய்யப்படுகிறது. எப்ரல்,மே மாதங்களிலும், செப்டம்பர், அக்டோபர் மாதங்களிலும் மரச்சீனி மானாவாரியாகப் பயிர் செய்யப்படுகிறது. முக்கியமான பணப் பயிர் தென்னை ஆகும். நஞ்சை தரிசிலும், மரச்சீனியுடன் ஊடுபயிராகவும் பயறு வகைகள் செய்யப்படுகின்றன.

காய்கறிகள் ஜனவரி,பிப்ரவரி, ஜூலை, ஆகஸ்ட் மாதங்களிலும் பயிர் செய்யப்படுகின்றன. தண்ணீர்ப் பானைகளில் எடுத்து விடுவதுதான், உள்ளூர் பழக்கமாகும் சில பகுதிகளில் 2வது நெற்பயிர் அறுவடைக்குப் பின், மூன்றாவது பயிராகச் சாகுபடி செய்யப்படுகிறது.

வாழை-மே, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பயிர் செய்யப்படுகின்றது.

நிலக்கடலை, மார்ச்-ஏப்ரல், அக்டோபர்-நவம்பர் மாதங்களில் மானாவாரியாகப் பயிர் செய்யப்படுகின்றது.

1983ஆம் ஆண்டு முதல் போகத்தில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்து, 24,000 எக்டர் பரப்பில் நெல் சாகுபடி செய்வதற்குப் பதிலாக, 17,500 எக்டர் பரப்பில் மட்டுமே பயிர் செய்யப்பட்டது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களில் குறைந்த அளவு தண்ணீர் இருந்த போதிலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனைப்படி திறமையாக நீர் நிர்வாகத்தை மேற்கொண்டதனாலேயே சாகுபடியான 17,500 எக்டர்பரப்பும் அறுவடைக்குக் கொண்டு வரப்பட்டது. வறட்சியின் காரணமாக 84,000 டன்கள் உற்பத்தி செய்வதற்குப் பதில் 57,400 டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தரிசாகக் கிடந்த நிலங்களில் மாற்றுப் பயிராக சோளம், மரச்சீனி, உளுந்து, நிலக்கடலை, எள் சாகுபடி செய்ய ஆலோசனை கூறப்பட்டு, 925 எக்டர் பரப்பில் மாற்றுப் பயிர் சாகுபடி செய்யப்பட்டது. மரச்சீனி 405 எக்டர், எள் 100 எக்டர், பயறு வகைகள் 150 எக்டர், நிலக்கடலை 200 எக்டர், காய்கறி 70 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது.

புதிய ரக நெல் ரகங்களான ஐ.ஆர். 50, பொன்மணி, கோ. 43 நெல் ரகங்களை விவசாயிகள் பயிர் செய்து அனுபவம் பெற 5520 மினிகிட் நிருபணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 547 பயறு வகை மினிகிட் நிருபணங்களும் அமைக்கப்பட்டன.

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கும், ஆதிதிராவிட விவசாயிகளுக்கும் நெல் நாற்றுகள் இலவசமாக வழங்குவதற்கு 25 ஏக்கர் பரப்பில் சமுதாய நாற்றங்கால் அமைத்து நாற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

83-84ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் விதை, பூச்சி மருந்து மானிய விலையில் விநியோகிக்க ரூ. 100000-ம் ரூ. 50000-ம்முறையே ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனில் இதுவரை ரூ. 81000-ம் ரூ. 45660ம் செலவு செய்யப்பட்டுள்ளது.

## கன்னித் தமிழும் கன்னியாகுமரியும்

தமிழுக்கும், குமரிக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. தமிழ் மூன்றெழுத்துக்களைக் கொண்டது. குமரியும் மூன்றெழுத்துக்களைக் கொண்டது. தமிழ் என்ற சொல்லிலே வல்லினம், மெல்லினம், இடையினம் உண்டு. குமரி என்ற சொல்லிலும் அவையாவும் உண்டு.

தமிழ் இயல், இசை, நாடகம் எனும் முப்பகுதிகளைக் கொண்டது. குமரியும் முக்கடலால் சூழப்பட்டது. ஓங்கலிடைவந்து - உயர்ந்தோர் தொழ விளங்கி, ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் மின்னேர் தனியாழி வெங்கதிருக்கும் தன்னேரிலாத் தமிழுக்கும் தொடர்புண்டு. அது போல கதிருக்கும் குமரிக்கும் தொடர்புண்டு.

தமிழ் கற்போருக்கு இன்பம் பயக்கும். குமரி தன்னைக் காண்போருக்கு இன்பம் பயக்கும். தமிழ் தென்மொழி. குமரி தமிழ்நாட்டின் தென் முனை. தமிழ் தொன்மையானது. குமரியும் தொன்மை வாய்ந்தது.



# மீன் வளம் பெருகிட மேலான திட்டங்கள்

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் கன்னியாகுமரி மாவட்டம் மீன் வளத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். இந்தியாவில் மேற்கே அரபிக்கடலும், கிழக்கே வங்காள விரிகுடாவும், தெற்கே இந்து மகா சமுத்திரமும் ஆகிய மூன்று கடல்களும் சந்திக்கும் சிறப்பு கொண்ட குமரி மாவட்டம் 68 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது. இக்கடலோரம் 42 மீன்பிடி கிராமங்களில் வாழும் மீனவப் பெருமக்களின் தொகை ஏறக்குறைய ஒரு இலட்சமாகும். இது தமிழ்நாட்டின் மீனவ மக்கள் தொகையில் நான்கில் ஒரு பாகம். இக்கடற்கரையோரம் பிடிக்கப்படும் மீன்கள் ஆண்டுக்கு 63 ஆயிரம் டன்களாகும். இது தமிழ்நாட்டின் மொத்த கடல் மீன் உற்பத்தியில் 26.33 சதவீதமாகும்.

சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கட்டுமரங்கள், அறுநூற்றுக்கு மேற்பட்ட நாட்டுப் படகுகள் சுமார் ஐந்நூறு விசைப்படகுகள் ஆகியவைகள் இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இம்மாவட்டத்தின் மீன் வளங்களில் மிகச் சிறப்பு வாய்ந்தவை கல் இரால், கணவாய் இரால், நெத்தொலி ஆகிய மீன்வளங்களாகும். சிங்கி ரால் என்ற விலை மதிப்பு பெற்ற,ஏற்றுமதி சிறப்பு வாய்ந்த மீன்கள் இந்தியாவிலேயே இம்மாவட்டத்திலேதான் தனிச் சிறப்பு வளத்தைக் கொண்டுள்ளது.

இவ்விதத் தனிச் சிறப்பு கொண்ட குமரி மாவட்டத்தின் மீன்வளத்தைப் பெருக்கவும், மீனவ சமுதாயத்தின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தவும் அரசு பல அரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

### மீன்பிடி துறைமுகத் திட்டம்

முக்கடலும் சங்கமமாகும் குமரிமுனையை அடுத்த சின்ன முட்டம் என்ற கிராமத்தில் ரூ. 560 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மீன்பிடி துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் 1,000 கட்டுமரங்களும் 250 விசைப்படகுகளும் பயன் அடைய இருக்கின்றன. இத்திட்டம் 1985-இல் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் சிரமம் இன்றி கரைவந்து அடைய நான்கு கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நான்கு கிராமங்களில் இவ்வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் பணிமுடியும் தறுவாயில் உள்ளது.

இம்மாவட்டத்தில் ஏழை மீனவர்களுக்கு 23 கடற்கரை கிராமங்களில் சுமார் ரூபாய் 10,000 மதிப்புள்ள 1,529 வீடுகள் இலவசமாகக் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. 105 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் இவ்வாண்டு 300 வீடுகள் கட்டப்பட உள்ளன.

கட்டுமரம் மூலம் மீன்பிடித்தலைப் பெருக்கும் வகையில் 17 வெளிப்பொருந்தும் இயந்திரங்கள் (Out Board Engines) மீனவர்களுக்கு 25 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இயந்திரங்களின் மதிப்பு ரூ. 10,010.50 ஆகும். இதில் ரூபாய் 8008.50 கடன். ரூபாய் 2002 மானியம்.

### கடல் மீனவர் நிவாரணத் திட்டம்

கடலில் மீன்பிடிக்கும்போது இறக்கும் மீனவர்களின் வாரிசுகளுக்கு நிவாரணமாக ரூபாய் 5000 மானியமாக வழங்கப்படுகிறது. அதில் ரூபாய் 2000 உடனடியாகவும், மீதம் ரூ. 3000 மாதம் ரூபாய் 100 வீதம் 30 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. 1980 முதல் இதுவரை கடலில் இறந்த மீனவர்களது 29 குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளன.

1.10.'82 முதல் தொடங்கப்பட்ட கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டம் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன்பிடி இல்லாத காலங்களாகிய ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்கள் நீங்கலாக



ஏனைய ஒன்பது மாதங்களில் மீனவர்களை மாதம் ரூ. 10 வீதம் சேமிக்கச் செய்து ஒன்பது மாதங்களில் சேமித்த தொகை ரூ. 90 உடன் அரசு ரூபாய் 90 சேர்த்து ரூ. 180 ஆக மீன்பிடி இல்லாத மூன்று மாதங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும்.

இம்மாவட்டத்தில் 56 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் பணிபுரிகின்றன. அவை:

பிரதம கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 40, பிரதம உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 10, மாவட்ட மீன் வியாபார இணையம் 1, உற்பத்தி மற்றும் மீனவர் கூட்டுறவுச்சங்கம் 1, படகுகட்டும்கூட்டுறவுச்சங்கம் 1, சங்குகுளிப்போர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் 1, மீன் வியாபார ஒன்றியம் 2, ஆக மொத்தம் 56.



இம்மாவட்டத்தில் உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் 15,935 அங்கத்தினர்கள் உள்ளனர். அவர்கள் ரூ. 5,99,443 பங்குத் தொகை செலுத்தியுள்ளனர்.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக மீனவர்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் வழியாக 20 முதல் 50 சதவீதம் மானியத்துடன் கடன்கள் வழங்கப்படுகின்றன. மூன்று ஆண்டுகளில் இயந்திரப் படகுகளுக்கும் கூட்டுறவுச் சில்லறை விற்பனை நிலையங்களுக்கும், போக்குவரத்து ஊர்தி மற்றும் வலை, கூட்டுறவு கிட்டங்கி மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகியவைகளுக்கும் ரூ.9.02 இலட்சம் உதவியாக வழங்கப்பட்டுள்ளது. தற்போது 6 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 650 மீனவர்களுக்கு எந்திரப்படகு, கட்டுமரம், நாட்டுப்படகு, வெளிப்பொருத்து இயந்திரம், வலை ஆகியவைகளுக்காக சுமார் ரூ.50 இலட்சம் 20 சதவிகித மானியத்துடன் உதவி செய்ய தேசிய மீனவர் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்துக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாவட்ட மீனவர் நல மேம்பாட்டுக்காக, பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாக்க மூன்று பனிப்பொறி நிலையங்களும் இரண்டு குளிர்பதன அறைகளும் இயங்கிவருகின்றன.

உள்நாட்டு மீன்வளத்தின்கீழ் இம்மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1 மற்றும் சிற்றாறு-2 ஆகிய நீர்த்தேக்கங்களில் விரைவில் வளரக்கூடிய உயர்ரகக் கெண்டை மீன் குஞ்சுகளை இருப்பு செய்து இந்நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியைப் பெருக்கி மீன்துறையினால் அரசு நிர்ணயித்த விலையில் விற்பனை செய்து வரப்படுகின்றன.

இம்மாவட்ட நன்னீர்த் தேக்கங்களில் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தேவையான அளவு வேண்டிய உயர்தரக் கெண்டை மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் ஒன்று பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது. அது போன்று சிற்றாறு அணை-2லும் புதிதாக மீன் பண்ணை ஒன்று ரூபாய் 3 இலட்சத்து அறுபத்தையாயிரம் மதிப்பீட்டில் மீன் பண்ணை ஒன்று கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது. இவ்விரு நிலையங்கள் மூலமாகத் தூண்டுதல் முறையில் உயர்ரக மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு இம்மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளில் இருப்பு செய்யப்படும்.

### மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை

உள்நாட்டு நன்னீர் மீன்வளத்தைப் பெருக்கும் அரசு திட்டங்களில் ஒன்றான மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை (Fish Farmer's Development Agency) ஒன்று குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகவும், மண்டல மீன் துறை உதவி இயக்குநரைச் செயலாளராகவும், மீன்துறை உதவி இயக்குநர் ஒருவரை முதன்மை நிர்வாக அலுவலராகவும் கொண்டு இது செயல்பட்டு வருகிறது. 27.4.82ல் ஆரம்பிக்கப்பட்ட இம்முகமை 200 எக்டர் நீர்ப்பரப்புகள் கொண்ட குளம் குட்டைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை மீன்வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கு அளித்து விரைவில் வளரக்கூடிய கெண்டை மீன் குஞ்சுகளை அவற்றில் இருப்பு செய்து தீவிர மீன் வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இது தவிர்த்து, மீன்துறை அலுவலர் ஒருவரை விரிவாக்க அலுவலராகக் கொண்டு, வருவாய்த்துறையின் கீழ் ஊராட்சிக் குளங்களில் தீவிர மீன்வளர்ப்பு முறையில் உயர்ரகக் கெண்டை மீன்களை வளர்த்து, ஊராட்சி வருவாயைப் பெருக்க, ஊராட்சி மீன்வளர்ப்புத் திட்டம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.








# கடலரிப்புத் தடுப்பு

தமிழக அரசின் பொதுப்பணித் துறை மாநில வளர்ச்சியில் பல்வேறு நிலைகளிலும், காலகட்டங்களிலும் பன்னெடுங்காலமாக மாபெரும் சாதனைகளை இயற்றி வந்துள்ளது.

பாசன வசதிக்கான அணைகளும், அணைக்கட்டுகளும், நிலத்துக்கு நீர்பாய்ச்சும் நெடிய கால்வாய்களும், குடியிருப்புக் கட்டடங்களும், குழந்தைகளுக்குப் பள்ளிகளும், பல்கலை பல பயில பாங்கான கல்லூரிகளும், மருத்துவமனைகளும், மகப்பேறு விடுதிகளும் இன்னோரன்ன எண்ணற்ற பிறவும் பொதுப்பணித்துறையின் சாதனைகளே.

இவை தவிர ஆண்டுதோறும் நம்நாட்டின் கடற்கரையை அடுத்துள்ள நிலப்பகுதி கடலலைகளின் கடும் சீற்றத்தால் அரிக்கப்பட்டு வருவதால், நில இழப்பைத் தடுக்கும் பணியிலும் தமிழக அரசின் பொதுப்பணித்துறை தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

குமரி மாவட்டம் முழுவதும் அதன் ஒருபுற எல்லையைக் கடலாகக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தின் கடற்கரையின் மொத்த நீளம் சுமார் 72 கி.மீ. இதுமன்னார் வளைகுடாவையும், அரபிக்கடலையும் அடுத்துள்ளது.

பொதுவாக இக்கடற்கரை தக்க பாதுகாப்புடன் இருந்தாலும், பருவ மழைக்காலங்களில், கடற்காற்றழுத்தம் குறைவதாலும், பெருங்காற்றுடனோ அல்லது, புயலுடனோ கூடிய மழை பெய்வதாலும், அலைகள் உயர்ந்து எழுவதாலும் கடற்கரைப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு கரையரிப்பு ஏற்படுகிறது.

கடற்கரையரிப்பைத் தடுக்கும் பொருட்டு, பொதுப்பணித் துறையினர் ஆய்வுகள் பல செய்தனர். ஆய்வுக்கான பொறியியல் விவரங்களைத் தயாரித்தனர். அலைகளின் தன்மைகள், உயரம், காற்றின் வேகம், வீசும் திசை, கடல் மணல் பெயர்ச்சி, ஆண்டுதோறும் அரிக்கப்பட்ட கரையின் அளவு, மற்றும் தேவையான விவரங்களைக் கடற்கரையிலும், கடலரிப்புப் பகுதிகளிலும் தயாரித்து ஆய்வுகள் நடாத்தி கடற்கரையில் கடலரிப்பைத் தடுப்பதற்காகத் தடுப்புச் சுவர் கட்டுவதுதான் சிறந்தவழி எனக் கண்டு பிடிக்கப்பட்டது. அதன்படி கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வீபுரம், கன்னியாகுமரி, கோவளம், மணக்குடி, பள்ளம், புத்தன்துறை போன்ற 29 இடங்கள் கடலரிப்பினால் பாதிக்கப்படுகின்றன.



குமரி மாவட்ட கடலரிப்புத் தடுப்புப் பணிக்காக தமிழக அரசு இதுவரை மொத்தம் 6.07கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. 1977-ல் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் தொடங்கப்பெற்று இதுவரை 14 கி.மீ. தூரம் வரை குமரி மாவட்டத்தில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி, பள்ளந்துறை, பொழிக்கரை, சின்னவிளைத் துறை, இணையம், ராமன்துறை, முள்ளூத்துறை, தேங்காய்ப் பட்டினம், நீரோடி ஆகிய இடங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டு முடிவடைந்துவிட்டன. பிற இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொத்தமுள்ள சுமார் 72கி.மீ. கடற்கரையில் சுமார் 32 கி.மீ. தூரம் மிகவும் பாதிக்கப்படக் கூடிய இடமாகக் கண்டு, தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல ஊர்களிலும் சுமார் 22 கி.மீ.தூரத்திற்குத் தடுப்புச்சுவர் கட்டுவதற்குத் தமிழக அரசால் ரூ. 608 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, இதுவரை சுமார் 200 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் சுமார் ரூ. 200 இலட்சம் மதிப்புள்ள வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை சுமார் 7 கி.மீ. தூரம்தடுப்புச்சுவர்வேலை முடிந்துள்ளது. சுமார் 8 கி.மீ. தூரம் வேலை நடைபெற்று வருகிறது.

தடுப்புச் சுவர் முடிக்கப்பட்ட பகுதிகளில் கடலரிப்பு முழுவதும் தடுக்கப்பட்டு மக்களுக்கு நல்ல பலன் ஏற்பட்டுள்ளது. வேலை நடைபெறும் இடங்களிலும் தடுப்புச் சுவரின் நன்மைகளை உணர்ந்து மக்கள் ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள். கன்னியாகுமரி, வாணியக்குடி போன்ற இடங்களில் கடற்கரையிலிருந்து குறுக்குச் சுவர் கட்ட முடியுமா என்பதை ஆய்வு செய்ய பூண்டி சோதனைக் கூடம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பணிகள் முடிவெய்திய இடங்களில் கடல் அரிப்பினின்று போதிய பாதுகாப்பு கிடைக்கின்றது. கடல் அலைகள் தடுப்புச் சுவரைத் தாண்டி வருவதில்லை. இவ்வாறு மக்களின் உயிர்களும், உடைமைகளும் பாதுகாக்கப்படுகின்றன

இன்னும் எஞ்சிய இடங்களில் பணிகளைத் தொடங்கி நடத்தி முடிக்க தீவிர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் கன்னியாகுமரி மாவட்டம் கடலரிப்பினின்றும் முழுமையாகக் காக்கப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை.



# இலாபம் தரும் தோட்டப்பயிர்

இன்றைய நிலையில் பல தொழில்களுக்குப் பயன்படும் ரப்பர் ஒரு முக்கியப் பயிராகும். தானியங்கிகள், மிதிவண்டிகள் ஆகியவற்றின் சக்கரங்கள் மற்றும் அதனுள்ளடங்கிய ட்யூப்கள், காலணிகள், மின்கம்பிகள், கேபிள்கள் ஆகியவற்றின் காப்புறைகள் போன்றவற்றில் ரப்பர் பெருமளவில் பயன்படுகிறது. பெட்ரோலியம், எண்ணெய் ஆகியவற்றின் விலையேற்றத்தினால் செயற்கை ரப்பர் தயாரிப்பு பாதிக்கப்பட்டிருப்பதால் இயற்கை ரப்பரின் அவசியம் இன்றியமையாததாகி விட்டது. அதன் விளைவாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இயற்கை ரப்பரின் தேவை அதிகரித்துவிட்டது.

ரப்பரை அடிப்படையாகக் கொண்ட பல தொழில்கள் தோன்றத் தொடங்கியுள்ளன. நாட்டில் இன்றைய நிலையில் ரப்பர் பயிரிடுதல் ஒரு இலாபம் தரக்கூடிய தோட்டப் பயிர் என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை. ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே உள்ளது.

இயற்கையாக ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கும் இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் சிறந்த ரப்பர் தோட்டங்களைத் தன்னகத்தே கொண்டது. செல்வம் கொழிக்கும் முதிர்ந்த வெட்டு மரக்காடுகளையும், 15,000 ஏக்கர்களில் தனியார் ரப்பர் தோட்டங்களையும் தன்னகத்தே கொண்டதாக இந்த மாவட்டம் விளங்கியது.

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர வேறு எங்கும் ரப்பர் பயிரிடமுடியாததாலும், முதிர்ந்த காட்டுப் பிரதேசம் இங்கு இயற்கையாக அமைந்திருந்ததாலும் ரப்பர் பயிரிடும் நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு வனத்துறை ரூபாய் 34 இலட்சம் செலவில் 6 ஆண்டுகளில் 1,200 எக்டேர் பரப்பளவில் ரப்பர் பயிரிடும் திட்டம் ஒன்றைத் தயாரித்தனர். இதன் அடிப்படையில் 1960-ல் ரப்பர் பயிர் செய்வது தொடங்கப்பெற்று 1965-க்குள் திட்ட இலக்காகிய 1,200 எக்டேர் பயிரிட்டு முடிக்கப்பட்டுவிட்டது. ரப்பர் பயிரிடுவதில் இந்த முதல் முயற்சி ஊக்கமளிப்பதாக அமைந்ததால் ரப்பர் பயிரிடும் திட்டம் விரிவாக்கப்பட்டு, 1979-80 வரை தொடரப்பெற்றது. அதன் பிறகு எந்தக் காரணத்திற்காகவும் இயற்கை வன வளத்தை அழிக்கக் கூடாதென்றும் எவ்வகையிலேனும் அதனைப் பேணிப் பாதுகாக்கவேண்டுமெனவும் அரசு உத்தரவிட்டதால், மேற்கொண்டு காடுகளை அழித்து ரப்பர் பயிரிடும் முயற்சி கைவிடப்பட்டது. தற்போது கன்னியாகுமரி கிழக்கு ரப்பர் மண்டலத்தில் பின்வரும் நான்கு கோட்டங்களிலும் மொத்தம் 1919.80 எக்டேர் அளவிலான ரப்பர் தோட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



(1) கீரிப்பாறைக் கோட்டம்—486.60 எக்டேர்,; (2) பரளியாறு கோட்டம்—463.40 எக்டேர்: (3) மணலோடை கோட்டம்—535 எக்டேர்: (4) காளிகேசம் கோட்டம்—434.80 எக்டேர்; ஆக மொத்தம் 1,919.80 எக்டேர்.

1979-80 வரை அனைத்து ரப்பர் தோட்டங்களும் ஒரே வனப் பாதுகாவலரின் பொறுப்பில் இருந்து வந்தன. கன்னியாகுமரி கிழக்கு ரப்பர் மண்டலம் என்றும், கன்னியாகுமரி மேற்கு ரப்பர் மண்டலம் என்றும் 11-2-80 முதல் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

கன்னியாகுமரி கிழக்கு ரப்பர் மண்டலத்தில் (1) கீரிப்பாறைக் கோட்டம்; (2) பரளியாறுகோட்டம்; (3) காளிகேசம் கோட்டம்; (4) மணலோடை கோட்டம்; (5) கீரிப்பாறைத் தொழிலகம்.

கன்னியாகுமரி மேற்கு ரப்பர் மண்டலத்தில் (1) சித்தார் கோட்டம்; (2) மைலார் கோட்டம்; (3) குத்தியார் கோட்டம்; (4) கல்லார் கோட்டம்; (5) மருதம்பாறை கோட்டம்.

மேலே குறிப்பிட்டுள்ள கோட்டங்களில் கல்லார் கோட்டம் தவிர மற்ற எல்லாக் கோட்டங்களிலும் உள்ள ரப்பர் மரங்களிலிருந்து பால் எடுக்கப்படுகிறது. மரங்களிலிருந்து எடுக்கப்படும் பால் உடனுக்குடன் தொழிற்சாலைக்குக் கொண்டுசெல்லப்படுகின்றது. அங்கு அது ரப்பர் ஷீட்டுக்களாகவும், கிரேப்பாகவும் ( Crepe ) Concentrated Latex ஆகவும் மாற்றப்படுகின்றன. அத்தகைய தொழிற்சாலைகளில் ஒன்று கீரிப்பாறையில் அமைந்துள்ளது. மணலோடை கோட்டத்தில் பெருஞ்சாணி என்னுமிடத்தில் மற்றொரு தொழிற்சாலை இருக்கிறது. அங்கு ஷீட்டிங் மட்டுமே நடைபெறுகிறது.

ரப்பர் விற்பனை மூலம் 1982-83-ஆம் ஆண்டு கிடைத்த வருவாய் ரூ. 128.72 இலட்சமாகும். 1418.32 எக்டேர் பரப்பளவிலுள்ள மரங்களிலிருந்து எடுக்கும் பாலின் மூலம் இந்த வருவாய் கிடைக்கிறது. பயிரிடப்பட்டுள்ள ரப்பர் வகை உயரினத்தைச் சேர்ந்ததும் அதிக பால் தரக்கூடியதுமாகும்.

சாதாரணமாக நடப்பட்ட 7ஆம் ஆண்டிலிருந்து ரப்பர் பலன் தரத் தொடங்குகிறது. 14-வது ஆண்டில் அதிக பட்சமான பலன் கிடைக்கும். நல்ல இனமுள்ள ஒரு ரப்பர் தோட்டத்தில் ஒரு எக்டேருக்கு 1,250 முதல் 2,000 கிலோ வரை பலன் மாறுபடும். ஒரு எக்டேர் ரப்பர் தோட்டம் அமைக்க சுமார் ரூ. 15,000 செலவாகும். சாலைகள், தங்கும் வசதிகள் ஆகியவை ஏற்படுத்த ஒரு எக்டேருக்கு மேலும் ரூ. 12,500 வரை தோராயமாகத் தேவைப்படலாம்.

கன்னியாகுமரி கிழக்கு ரப்பர் மண்டலத்தில் 1,269 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

தொழிலாளர்களில் இருபாலாரும் உண்டு. அவர்களில் பெரும்பான்மையோருக்குத் தங்கும் வசதி, குடிநீர் வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி, மருத்துவ [illegible] செய்து கொடுக்கப்பட்டுள்ளன. [illegible] இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்குப் புனர்வாழ்வளிக்கும் நோக்கோடு தொடங்கப்பெற்ற ரப்பர் திட்டத்தின் அடிப்படையில் இதுவரை 285 குடும்பங்களுக்குக் குடிநீர், கல்வி, மருத்துவ வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, சித்தார் குத்தியார் (கன்னியாகுமரி மேற்கு ரப்பர் மண்டலம்) கோட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

கன்னியாகுமரி கிழக்கு ரப்பர் மண்டலத்தில், இதுவரை 558 தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் பல கட்டப்பட்டு வருகின்றன.

ரப்பர் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பலவகைப்பட்ட ரப்பர்கள் மாதம் ஒரு முறை அல்லது இருமுறை பொது ஏலத்தில் விடப்படுகின்றன. நாடெங்கிலுமிருந்து ரப்பர் வியாபாரிகள் இதில் பங்குபெறுகின்றனர்.

1981-82-ல் விற்பனை செய்த ரப்பரின் அளவு 17,62,646 கிலோ. இதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 2,76,28,361.60

இந்த இரு மண்டலங்களையும் உள்ளடக்கிய ரப்பர் கழகம் (Tamil Nadu Rubber Plantation Corporation) ஒன்றை ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.



## வளமிக்க கன்னியாகுமரி

புவியல் அமைப்பின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். 1. சமவெளிப் பிரதேசம் 2. மலைப் பிரதேசம் 3. கடற்கரைப் பிரதேசம்.

மலைப் பிரதேசம் பெரும்பாலும் அரசாங்க வனங்களாகும். மலைப் பிரதேசத்தில் தனியார்களாலும், அரசினாலும் ரப்பர் பயிர் செய்யப்படுகிறது. மேலும் மரவள்ளிக்கிழங்கு, தென்னை, வாழை, கொக்கோ, கிராம்பு ஆகியவைகளும் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

மலைப் பிரதேசத்தில் காணப்படும் மண், பயிர் செழித்து வளர்வதற்கேற்ற சத்துள்ள வளமான மண்ணாகும். மலைப் பிரதேசம் மிகவும் சரிவாக உள்ளதால் எளிதில் மழைக்காலங்களில் மேல் மண் அரிமானம் ஏற்படுகிறது. இந்த அரிமானத்தைத் தடை செய்ய மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதிருப்பதால், இம்மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் பிரிவு தேவையான மண்வளப் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு தீவிரமாகப் பணியாற்றி வருகிறது.

சமவெளிப் பிரதேசம் மலை அடிவாரத்திலிருந்து ஆரம்பமாகி, கடற்கரைப் பகுதிவரை பரந்து கிடக்கின்றது. சமவெளிப் பிரதேசம் சில இடங்களில் சரிவாகவும், சில இடங்களில் சமநிலமாகவும் இருக்கின்றது. இப்பிரதேசத்தில் நெல், வாழை, மரவள்ளிக்கிழங்கு, ரப்பர், தென்னை ஆகியவை பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இப்பகுதியிலும் நிலச்சமன் செய்தல், நீர்ப்பராமரிப்பு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடற்கரைப் பிரதேசம் மணல் பாங்காக அமைந்துள்ளது.



# வாழை நாரில் வண்ணப் பைகள்!

**வா**ழை மரம் பலவகைகளில் பயன்படுகிறது என்பது நமக்குத் தெரியும்.

அது, அழகிய வண்ணப்பைகள் செய்யவும் பயன்படுகிறது என்பதை நேரில் பார்க்கும்போது தான் தெரிந்து கொள்ள முடிந்தது.

திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொல்வேல் கிராமத்தில் உள்ளதுதான், நார்த் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்.

இங்கே வாழை நாரைக் கொண்டு, வனிதையர் பலர் தம் கைவண்ணத்தால் வகை வகையான கைப் பைகளைத் தயாரிக்கும் நேர்த்தியைப் பார்த்து வியக்கிறோம்.

பதப்படுத்தப்பட்ட வாழை நார் ஒரு எளிய கருவியின் மூலம் இழை இழையாகப் பிரித்தெடுக்கப்படுவதும், அது வெயிலில் காய வைக்கப்பட்டு, பட்டு நூல்போல் பளபளப்பதையும் பார்க்கிறோம்.

இந்த வெள்ளை நாரைக் கொண்டு ஜடை பின்னுவது போல் பின்னி, பலவித வடிவமைப்புகவாக உருவான பிறகு, அவற்றையெல்லாம் ஒன்றாக இணைத்து, நூலால் தைத்து அழகிய கைப் பையாக உருவாக்குகிறார்கள். வாழை நாரைப் பல்வேறு வண்ணச் சாய கலவையில் தோய்த்தெடுத்து தயாரிப்பதன் மூலம் வண்ணப் பொருள்கள் கிடைக்கின்றன.

கதர் கிராமக் கைத்தொழில் வாரிய நிர்வாகத்தின்கீழ் 65 பெண்கள் பணியாற்றுகிறார்கள். சுற்றுப்புறங்களில் உள்ள ஏழை எளிய குடும்பத்துப் பெண்கள் இதன் மூலம் வேலை வாய்ப்புப் பெற்று வருகிறார்கள். இங்கு வேலை செய்யும் பெண்களுக்கு, 20 கைவினைக் கலைஞர்கள் பயிற்சி தருகிறார்கள்; இவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மாதம் 125 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இங்கு வேலை செய்யும் பெண்கள் நாள் ஒன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 6 வரை கூலி பெறுகிறார்கள். வடிவமைப்புக்குத் தகுந்தாற்போல் இதற்குமேலும் கூலி பெற வாய்ப்புண்டு.

கைப்பை மட்டுமல்லாது மேசை விரிப்புகள், மணிபர்ஸ், தட்டுகள், கூடைகள் போன்றவையும் தயாரிக்கப்படுகின்றன. வடிவமைப்புக்குத் தகுந்தாற்போல விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு அழகிய பெரிய பை ரூ. 35லிருந்து ரூ. 40 வரையும், மணிபர்ஸ் ரூ.3.50-க்கும், மேசை விரிப்புகள் ரூ. 12-லிருந்து ரூ. 40 வரையும் விற்கப்படுகின்றன. இந்தப் பொருள்கள் அழகானவை மட்டுமல்ல, உறுதியானவையும் கூட.

இங்குத் தயாராகும் இந்த வண்ணப் பொருள்கள் காதி கிராப்ட் அங்காடிகளிலும், சென்னைக் குறளகத்திலும், திருவனந்தபுரத்திலும்கூட கிடைக்கின்றன. கன்னியாகுமரிக் கடைகளில் இந்தப் பைகளை வாங்காத சுற்றுலாப் பயணிகளே இல்லை எனலாம்.

இந்தத் தமிழ்நாட்டுக் கைவண்ணப் பொருள்கள் நம்நாட்டவரை மட்டுமல்ல, மேலை நாட்டினரையும் வெகுவாகக் கவர்கின்றன என்றால் அது மிகையல்ல!

—'கிரிஜா'



# நினைவுச் சின்னங்கள்



சதாவதானி



கலைவாணர்



பகுத்தறிவுத் தந்தை



பெருந்தலைவர்

## திருவள்ளுவர் சிலை அமைத்தல்

கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு அருகில் உள்ள பாறையின் மீது ரூ. 2 கோடியே 12 இலட்சம் செலவில் திருவள்ளுவர் சிலை விரைவில் அமைக்கப்படவுள்ளது. குமரிமுனை கடற்கரையிலிருந்து திருவள்ளுவர் சிலை இருக்கும் இடம் வந்து செல்ல 390 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் உள்ள பாதையும் அதையொட்டி ஒரு தொடர் பாலமும் அமைக்கப்படும்.

## அமரர் ப. ஜீவானந்தம் அவர்களுக்குச் சிலை அமைத்தல்

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த காலம் சென்ற தேசியத் தலைவர் ப. ஜீவானந்தம் அவர்களுக்கு ரூ. 58,000 செலவில் தமிழக அரசின் சார்பில் சிலை நிறுவப்பட்டுள்ளது. இச்சிலை விரைவில் திறக்கப்படும்.

## நாகர்கோவிலில் தந்தை பெரியார் நினைவுத் தூண் நிறுவுதல்

நாகர்கோவிலில் தந்தை பெரியாரின் பொன்மொழிகளைக் கொண்ட பெரியார் நூற்றாண்டு நினைவுத்தூண் - நிறுவப்படும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## கன்னியாகுமரியில் பெரும் தலைவர் காமராஜருக்கு நினைவுச் சின்னம் அமைத்தல்

பெரும் தலைவர் அமரர் காமராஜருக்கு கன்னியாகுமரியில் ஒரு நினைவுச் சின்னம் தமிழக அரசால் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

## சதாவதானி செய்குத்தம்பிப் பாவலருக்கு நாகர் கோவிலில் நினைவு மண்டபம் அமைத்தல்

ஏக காலத்தில் பத்துவிதமான திறமைகளை வெளிப்படுத்திய பல்கலைப் பெரும் மேதையும், தமிழில் சிறந்த கவிதைகளும், உரைநடைக் காவியங்கள் இயற்றியவரும், தேசியப் போராட்ட வீரராகத் திகழ்ந்தவருமான சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் அவர்களுக்கு அவர் பிறந்த இடமாகிய நாகர்கோவிலை அடுத்த கோட்டாறு என்னும் இடத்தில் ரூ. 4,10,000 செலவில் நினைவு மண்டபம் அமைக்க அரசு தீர்மானித்துள்ளது.

அமைக்கப்படவிருக்கும் செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபத்தில் தரைக் கட்டடமும், அதன் மேல் ஒரு மாடிக்கட்டடமும் கட்டப்படும். தரைக் கட்டடத்தில் ஒரு மண்டபமும், மாடிக்கட்டடத்தில் மற்றுமொரு மண்டபமும், ஒரு நூலகமும் அமையும். மூன்று பக்கங்களில் படிக்கட்டுகள் அமைக்கப்படும். தரைக்கட்டடம் மற்றும் மாடிக் கட்டடத்தில் மொசைக் தளம் போடப்படும். தோட்டம் அலங்கார விளக்குகள் முதலியனவும் அமைக்கப்படும்.

## அதங்கோட்டாசான் சிலை அமைத்தல்

குமரி மாவட்டத்தைச் சார்ந்த அதங்கோடு என்னுமிடத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் அதங்கோட்டாசானுக்கு ரூ. 65,000 செலவில் சிலை அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. இச்சிலை விரைவில் திறக்கப்படும்.

## நாகர்கோவிலில் உள்ள கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் இல்லத்தை நினைவுச் சின்னமாக்குதல்

நாகர்கோவில் ஒழுகினசேரிப் பகுதியில் உள்ள கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் இல்லத்தை அரசு உடைமையாக்கி நினைவு இல்லமாகப் பாதுகாக்கலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## கன்னியாகுமரி காந்தி மண்டபம்

கன்னியாகுமரியிலுள்ள காந்திமண்டபத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்காக அரசு ரூ. 1,15,000 அனுமதித்து வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் காந்திமண்டபத்தின் உட்புறம், காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிடும் நிரந்தரப் புகைப்படக் கண்காட்சியும், காந்தியடிகளின் தத்துவங்களை விளக்கிடும் புத்தகங்களைக் கொண்ட [illegible] கண்காட்சியும் அமைக்கப்படவிருக்கிறது.

# பத்மநாபபுரம் அரண்மனை



பத்மநாபபுரம் என்னும் இவ்வூர் 2.5 மைல் சுற்றளவுள்ள சதுரமான கற்கோட்டையால் சூழப்பட்டுள்ளது. இது பதினெட்டாம் நூற்றாண்டு வரை திருவிதாங்கூரின் தலைநகராகவும், அரச குடும்பத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்தது. பத்மநாபபுரம் முற்காலத்தில் கல்குளம் என்ற பெயருடன் விளங்கியது.

பத்மனாபபுரம் கோட்டையின் குறைந்த உயரம் 15 அடி. அதிக உயரம் 24 அடி. நான்கு திசைகளிலும், நான்கு பெரிய வாயில்களும், சில சிறிய அவசர வாயில்களும் இக்கோட்டையில் உள்ளன.

பத்மநாபபுரம் கோட்டையின் உள்ளே சேரர்வழி வந்த வேணாட்டு மன்னர்கள் வாழ்ந்த அரண்மனை, வரலாற்றுச் சின்னமாக நமக்கு காட்சி தருகின்றது. இக்கோட்டையில் உள்ளும், புறமுமாக மொத்தம் பன்னிரண்டு சிவாலயங்கள் உள்ளன. பத்மநாபபுரம் கோட்டைக்குள் இருக்கும் நீலகண்டசுவாமி கோயில் ஒரு பழமையான திராவிடக் கலைப் பாணியில் கோபுரத்துடன் கட்டப்பட்ட ஒரு கம்பீரமான கட்டடமாகும்.

மார்த்தாண்ட வர்ம மன்னரால் கட்டப்பட்ட இராமசாமி கோயில் இராமாயணக் கதை நிகழ்ச்சிகளைச் சித்திரித்துக் காட்டும் நுண்ணிய மரவேலைத் திறனை நன்கு புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. 18ஆம் நூற்றாண்டில் வேணாட்டு மன்னர் மார்த்தாண்ட வர்மாவின் ஆட்சிக் காலத்தில், இவ்வரண்மனை மிகச் சிறப்புப் பெற்றது.

வேணாட்டு மன்னர்கள் பலர் இந்த அரண்மனையில் தங்கியதால் இங்குள்ள கட்டடங்கள் பல காலங்களில், பல அமைப்புகளில் கட்டப்பட்டுள்ளதை நாம் காணலாம். மந்திரசாலை என்னும் அறை, கலைச் சிறப்புகளுடன் பளிங்குக் கண்ணாடி போன்று காட்சி தருகின்றது. 2,000 பேர் அமர்ந்து உண்ணும் அளவுள்ள நீண்ட அறை, அரண்மனையினுள் அமைந்துள்ள சுரங்கப்பாதை, நுண்ணிய மரவேலைப்பாடுகள் அமைந்த மரத் தூண்கள், ஆயுதச்சாலைகள் போன்றவை பார்க்க வேண்டிய அம்சங்களாகும்.

இந்த அரண்மனையிலேயே மிகவும் கவர்ச்சியான பகுதி அதன் நடுவண் அமைந்துள்ள உப்பரிகை மாளிகைதான். 64 மூலிகை மரங்களால் செய்யப்பட்ட கட்டில், சுவர்கள் அனைத்தும் பச்சிலைகளால் வரையப்பட்ட என்றும் அழியா ஓவியங்களைக் கொண்ட அரசரின் பூசை அறை போன்றவை கண்டு களிகூரத்தக்கவை. அடுத்து அமைந்துள்ள சித்திராலயம், வரலாற்றுச் சிறப்புமிக்க ஓவியங்களைக் கொண்டது. தீபலட்சுமிகளுடன் காணப்படும் நவராத்திரி மண்டபம் ஒன்றும் அழகிய வேலைப்பாடுடன் அமையப்பெற்றுள்ளது.

இவ்வாறு பத்மநாபபுரம், கோட்டையும் அரண்மனையும் அன்றைய சமுதாய நிலை, அரசியல் வரலாறு, சமயச்சிறப்பு, கலைத்திறன் இவற்றை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

பத்மனாபபுரம் அரண்மனை 1940-ஆம் ஆண்டு முதல் தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் காட்சிச் சாலையாக இயங்கி வருகிறது. இப்பொருட்காட்சிச் சாலையில், சிற்பங்கள், பழைய நாணயங்கள், பண்டைக் காலத்துப் போர்க்கருவிகள் போன்ற பலவும் வைக்கப்பட்டுள்ளன.

# குமரி மாவட்டத் திருக்கோயில்கள்

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களின் கீழ் 490 திருக்கோயில்கள், குமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலுமாக உள்ளன.

இந்தத் திருக்கோயில்களின் நிர்வாகத்தினைக் கவனிக்கத் தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் தகுதியில் ஒரு செயல் அலுவலர் உள்ளார். இத் திருக்கோயில்களின் மொத்த வருமானம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. பசலி 1380-ல் ரூ. 29 இலட்சமாக இருந்தது, சென்ற பசலியில் 35 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

குமரி மாவட்டத்தில் திருக்கோயில்களின் சார்பாக முதன் முதலாக நாகர்கோவில் அருள்மிகு நாகராஜா திருக்கோயிலில் ஒரு கல்யாண மண்டபம் சுமார் ரூ 7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டபபட்டு, முடியும்தறுவாயில் உள்ளது.

சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயன் திருக்கோயில் ராஜகோபுரத் திருப்பணிகள் சுமார் 100 ஆண்டுகளாகச் செய்யப்படவில்லை. தற்போது ரூ 4 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. மேலும் ரூ 3 இலட்சம் மதிப்பீட்டில் அருள்மிகு தாணுமாலயன் திருக்கோயில் மண்டப ஒழுக்கடைப்பு வேலைகள் நடை பெற்று முடிவுறும் தறுவாயில் உள்ளன.

திருக்கோயில்களின் சார்பில் குழித்துறையில் நடைபெற்று வரும் ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரிக்குத் தேவையான வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் ஒன்றும் ரூ 2,65,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டு வேலைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன.

இத்திருப்பணிகள் பொது மக்களுக்குப் பெரிதும் நன்மை பயக்கக் கூடியவையாகும்.

குமரி மாவட்டத்தில் பின் வரும் திருக்கோயில்கள் மிகவும் பிரசித்தி வாய்ந்தவைகளாகும்.

அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், கன்னியாகுமரி— அருள்மிகு தாணுமாலயன் திருக்கோயில், சுசீந்திரம் — சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மருங்கூர் — சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமாரகோவில்— நாகராஜா திருக்கோயில், நாகர்கோவில்—ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், திருவட்டார், திருவாழிமார்பன் திருக்கோயில், திருப்பதிசாரம் — பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு.



## சுசீந்திரம் தாணுமாலயர் திருக்கோயில்

நாகர்கோயிலிலிருந்து 6 கி.மீ. தொலைவிலும், கன்னியாகுமரியிலிருந்து 13 கி.மீ. தொலைவிலும் இக்கோயில் அமைந்துள்ளது. கோயிலினுள்ளே 2300 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் கொன்றைமரம் இக்கோயில் மிகவும் புராதனமானது என்பதைப் புலப்படுத்தும். பழைய ஆற்றின் கரையில் காண்போர் உள்ளத்தைக் கவரும் தன்மையதாய், எழிலார்ந்த பசுமைமிக்க வயல்வெளிகளின் இடையில் ஓங்கி உயர்ந்த கோபுரத்துடன் தாணுமாலயர் ஆலயம் காட்சி தருகிறது. தாணு என்ற சொல் சிவனையும் மால் என்ற சொல் திருமாலையும், அயன் பிரம்மனையும் குறிக்கும்.

ஐந்து மைல் சுற்றளவில் கம்பீரமாகக் காட்சிதரும் இக்கோயிலின் கோபுரம் 135 அடி உயரமுள்ளது. கல்லும் கதைபேசும் செண்பகராமன் மண்டபம், திருக்கல்யாணம் நடைபெறும் ஊஞ்சல் மண்டபம், சங்கீதத் தூண்களைக் கொண்ட குலசேகர மண்டபம், வேனிற்காலத்தில் மூலவர் இளைப்பாறும் வசந்த மண்டபம், திருவிழாக் காலங்களில் வாகனங்களை அழகுபடுத்தும் இடமான அலங்கார மண்டபம், பல தெய்வங்களின் திருவுருவங்களையும் தன்னகத்தே அழகுபடுத்தும் இடமான சித்திரசபை இவை இக்கோயிலின் முக்கியப் பகுதிகளாகும். பன்னிரண்டு ராசிகளும் ஒன்பது கிரகங்களும்கொண்ட நவக்கிரக மண்டபம் மற்றக் கோயில்களில் காணப்படுவதுபோல் அல்லாமல் மேலே கூரையிலே பொருத்தப்பட்டிருப்பது, இம்மண்டபத்தின் தனிச்சிறப்பாகும்.

இக்கோயிலை ஒரு கலைக்கூடமாகக் கருதலாம். இராம பிரான் சந்நிதியை நோக்கி 18 அடி உயரத்தில் அஞ்சலி ஹஸ்தத்துடன் நின்றருளும் அனுமானது சிலை, பல இசைக் கருவிகளின் நாதங்களை எழுப்பி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தும் ஒரேகல்லில் வடித்தெடுத்த சங்கீதத் தூண்கள், மிகப் பெரிய நந்தி, நுண்ணிய வேலைப்பாடு அமைந்த சிற்பங்கள், பெண் உருவில் காட்சி தரும் விநாயகர், தீபம் ஏந்தி நிற்கும் தீபலட்மிகள் போன்றவை மிகச் சிறப்பு வாய்ந்த அம்சங்களாகும்.

இக்கோயிலில் 100-க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் பழைமையானது கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. திருக்கோவில் நாஞ்சில் நாட்டவர்களால் மிகவும் புனிதமாகக் கருதப்படுகிறது. இங்கு மார்கழித் திருவிழாவின்போது நடைபெறும் தேரோட்டமும், சித்திரைத் திருவிழாவின்போது நடைபெறும் தெப்ப விழாவும் தனிச் சிறப்பு வாய்ந்தவைகளாகும்.

# வட்டக்கோட்டை வாரீர்!



குமரி மாவட்டத்தில் பல கோட்டைகளை இன்றும் காணலாம். நகரைச் சுற்றி அமைந்துள்ளது பத்மநாபபுரம் கோட்டை, மலையைச் சுற்றி அமைந்துள்ளது உதயகிரிக்கோட்டை. மலையின் மேல் காணப்படுவது மருந்துக் கோட்டை, கடலை அடுத்துக் காணப்படுவது வட்டக்கோட்டை.

வட்டக்கோட்டை எனப்படுவது கடுக்கரை கன்னியாகுமரி கோட்டையின் ஒரு தொடர்ச்சியாகும். இது முக்கடலும் கூடி முழங்கும் குமரி முனைக்குத் தென்கிழக்கே மூன்றரை கல்தொலைவில் அமைந்துள்ளது.

3 ஏக்கர் பரப்புடைய இக்கோட்டையின் மதில்கள் 25 முதல் 28 அடி உயரமும் முன் பாகத்தில் 29' பருமனும் மூலைகளில் 18' பருமனும் பின்புறத்தில் 6' பருமனும் கொண்டவை. கோட்டையின் ஒரு பக்கம் கடலும், மறுபக்கங்களில் அகழியும் உள்ளன. இக்கோட்டையைத் தொடர்ந்து ஒரு கருவேலங் காடு அரணாக உள்ளது.

வட்டக்கோட்டை பற்றிய திட்டவட்டமான குறிப்புகள் பண்டைய இலக்கியங்களிலோ, கல்வெட்டுக்களிலோ காணக் கிடைக்கவில்லை. ஆனால் இக்கோட்டையின் அமைப்பு; அங்குக் காணப்படும் மண்டபங்கள் கோட்டையைச் சுற்றியுள்ள இடங்களின் வரலாறு இவற்றை வைத்து நோக்கும்போது, இக்கோட்டை ஒரு காலத்தில், முத்துக்கொழிக்கும் துறைமுகப்பட்டினமாகவும், குமரித் துறையின் காவல் தளமாகவும் இருந்தது என்றும், வர்த்தக வளத்திலைப் பாதுகாக்க, பாண்டிய மன்னர்கள் இக்கோட்டையை எழுப்பினர் என்றும் கருத இடமிருக்கிறது. ஏனெனில் பாண்டியர்களின் சின்னம் மீன். கோட்டையின் உள்ளே காணப்படும் மண்டபங்களில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

12, 13 நூற்றாண்டுகளில் வட்டக் கோட்டையும், அதன் சுற்றுப்புறங்களும் பாண்டியர்களின் ஆட்சியின் கீழ் இருந்தன என்று இலக்கியச் சான்றுகள் பகர்கின்றன. பாண்டியர்களின் ஆட்சிக்குப் பின்னர், கோட்டை கொத்தளங்களை அழித்ததாகச் சான்றுகள் உள. 1740-ல் முகிலன் படை இந்த வட்டக் கோட்டையில் தாவளமிட்டுக் கொள்ளையடித்ததாகக்கல்வெட்டுகள் உள.

18ஆம் நூற்றாண்டில் கொல்லம் ஆண்டு 949, ஐப்பசி மாதம் 6ஆம் நாள் வேணாட்டு மன்னர் மார்த்தாண்ட வர்மர், அவரது, தளபதி டிலெனாயின் ஆலோசனைப்படி வட்டக்கோட்டையைப் புதுப்பித்து ஒரு பேரரணாக அமைத்தார். கடல் வழியாக வரும் பகைவர்களைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் கோட்டைக் கொத்தளங்கள் சீரமைக்கப்பட்டன. பீரங்கியை மேலேகொண்டு போய் கடலை நோக்கிச் சுடுவதற்கு கல்லிலே சாரம் கட்டி உள்ளனர். இக்கோட்டையில் நெடுநாளாக திருவிதாங்கூர் படையின் ஒரு பகுதி தாவளமிட்டிருந்தது.

இவ்வாறு வட்டக்கோட்டை பாண்டியர்களின் வரலாற்றிலும், சேரர் வழிவந்த வேணாட்டு மன்னர்கள் வரலாற்றிலும் சிறந்ததொரு இடத்தைப் பெற்று வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கோட்டையாக இன்றும் திகழ்கிறது.

இந்தக் கோட்டை தற்போது மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கண்காணிப்பில் உள்ளது. தமிழ்நாடு அரசு, இக்கோட்டையைச் சுற்றியுள்ள இடங்களை நவீன பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்ட சிறந்த சுற்றுலா ஓய்விடமாக மாற்றத் திட்டம் தீட்டி, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டத்தில் கன்னியாகுமரியிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இயற்கை எழிலைப்பருகிக்கொண்டு இக்கோட்டை வரை இனிமையாக நடந்தே வர நீண்டதொரு கடற்கரைச் சாலை அமைக்கவும் திட்டம் வகை செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## நான்காவது அட்டையில்...
## கன்னியாகுமரிக் காட்சிகள்

1. கொல்வேல் கிராமத்தில் உள்ள நார்த் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் வாழை நார்ப் பைகள் தயாரிப்பு.
2. சின்னமுட்டத்தில புதிதாக அமைக்கப்பட விருக்கும் மீன் பிடி துறைமுகத்தில் ஒரு காட்சி.
3. மயிலாடியில் உள்ள சிற்பக் கலைக் கூடம்.
4. வயல்வெளியில வனிதையர்
5. கோவளத்தில் மீன் விற்பனை
6. திற்பரப்பு அருவி

வண்ணப்படம் : ஆர். செயபாஸ்கரன்



## குமரி பெற்ற பரிசு

இவ்வோர் ஆண்டும் கொடிநாள் அன்று (டிசம்பர் 7) நாடு காக்கும் இராணுவ வீரர்களின் நலம் காக்க நன்கொடை வசூலிக்கப்படுகிறது. கடந்த 1981-ஆம் ஆண்டுக்கு அரசு நிருணயித்த குறியீட்டுக்கு மேல் நன்கொடை வசூலித்து, முதற் பரிசு பெற்றிருக்கிறது கன்னியாகுமரி மாவட்டம். இதற்குரிய கேடயத்தை மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல். கே. திரிபாதியிடம் 16.1.84ல் வழங்கினார்.









நாகர்கோயிலில் வார விடுமுறை வெள்ளிக்கிழமையாகும். (ஞாயிறு கடைகள் எல்லாம் திறந்திருக்கும்.) இரணியலுக்கு அருகில் உள்ளதுதான் திங்கள் சந்தை (Monday Market) என்னும் பகுதியாகும். வெள்ளியன்று சந்தை கூடுவதால் வெள்ளிச் சந்தை' (Friday Market) என்ற பெயர்ப்பலகையுடன் பேருந்தும் செல்கிறது.

* * *

கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழைப் பழங்களுக்குக் குறைவில்லை. நேந்திரம், செவ்வாழை, கதளி, சிங்கன் (இது ஒரு பழத்தின் பெயர்) இப்படிப் பழங்கள் எல்லாக் கடைகளிலும் காணப்படுகின்றன. இன்னொரு பழம் உள்ளது. அதன் பெயர்; மட்டி. இது அளவில் சிறியது. இனிப்பும் மிக்கது. இதன் மகிமை; மணமுள்ளது மட்டுமல்ல, இம்மாவட்டத்தில் மட்டுமே கிடைப்பதாகும்.

* * *

குளச்சல், மண்டைக்காடு, கூட்டு மங்கலம், ஈத்தாமொழி ஆகிய பகுதிகளில் தென்னை மரத் தோப்புகள் மிகுதி. இங்குத் தேங்காய் மட்டையை ஊற வைத்துக் கயிறு திரிக்கும் தொழில் மிகுதியாக நடைபெறுகிறது. ஏழை எளிய குடும்பங்களுக்கு இத்தொழில் பெருமளவில் வேலை வாய்ப்பு அளிக்கிறது. இங்குத் தயாராகும் கயிறுகள் நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

* * *

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொருத்த வரையில், வீட்டுக்கு ஒரு மரம் அல்ல, ஒன்பது மரங்கள் உள்ளன. மரங்கள் இல்லாத பகுதியே இல்லை எனலாம்.



* * *

திருவட்டார் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் எல்லாம் ரப்பா மரத் தோட்டங்களே காணப்படுகின்றன. ரப்பர் பால் எடுக்கும் தொழிலில் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன.

* * *

கன்னியாகுமரி இயற்கை எழில் மிகுந்த மாவட்டமாகும். எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலென வயல் வெளிகள். தென்னை மரத் தோப்புகள், சிற்றாறுகள், கால்வாய்கள், மலைத் தொடர்கள் ஆகியவற்றைக் காணலாம்.

* * *

நாகர்கோயில் நகரில் தோன்றிய முதல் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, டதி பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகும். இது 1819ல் தோன்றியது. முதன் முதலில் தோன்றிய தனியார் பள்ளி, ஸ்காட் கிறித்தவ உயர்நிலைப் பள்ளியாகும். இது 1809ல் ஆரம்பிக்கப்பட்டது.



## காந்தி நினைவு மண்டபம்

1937-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15-ஆம் நாள் அண்ணல் காந்தியடிகள் குமரித்துறையிலே நீராடி ''முக்கடலும் கூடும் இடத்தை இங்கன்றி வேறெங்கும் காண முடியாது. புனித நீரான குமரித் துறையைச் சூழ்ந்துள்ள கடல் நீரும், குமரி அன்னையைப்போலவே கன்னிப் பெண்ணாக இருக்கிறது. காரணம்? இங்குக் கப்பல்கள் வருவது கிடையாது'' என நகைச்சுவை ததும்பக் கூறிச் சென்றார். குமரியின் கடலோரத்தில் காந்தியடிகளின் நினைவு மண்டபம் உள்ளது.

1948-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ஆம் நாள் இந்திய நாட்டின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த அண்ணல் காந்தியடிகளின் அஸ்தியை இங்கு கரைத்ததன் நினைவாக வட இந்தியக் கட்டடக் கலை அமைப்பில் காந்தி மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. அஸ்தியை வைத்திருந்த பீடத்தில் காந்தி ஜெயந்தியன்று (அக்டோபர் 2) பகல் பன்னிரண்டு மணிக்கு மட்டும் சூரிய ஒளிபடுவது இம்மண்டபத்தின் தனிச் சிறப்பாகும்.

## சுற்றுலா அலுவலகம்



கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி, 1971-ஆம் ஆண்டு சுற்றுலா அலுவலகம் தொடங்கப்பட்டது. இதுகாறும் சுற்றுலா அலுவலகம் "தமிழ்நாடு ஓட்டலில்" இயங்கி வந்தது.

இவ்வலுவலகம் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை எல்லையாகக் கொண்டு அவற்றின் சுற்றுலா மேம்பாட்டிற்கெனப் பணியாற்றி வருகின்றது. கன்னியாகுமரி சுற்றுலா அலுவலகத்தில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 50 பேருக்குத் தகவல் அளிக்கப்படுகிறது. கன்னியாகுமரிக் கடற்கரையில் அழகிய தமிழ்நாடு ஓட்டலும் உள்ளது.



தக்கலை பள்ளி வாசல்

# பீருமுகம்மது அப்பா



பீருமுகம்மது ஒலியுல்லா தர்கா

தக்கலையின் தவஞானி—தமிழ் வளர்த்த அருங்கவிஞர், பீரு முகம்மது அப்பா திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த தென்காசியில் தோன்றினார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த பீர்மேடு என்ற பகுதியில் சிலகாலம் தவ வாழ்வில் ஈடுபட்டு, பின்னர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த தக்கலையில் வந்து தங்கினார்.

அஞ்ஞான இருளில் அழுந்திக்கிடக்கும் மக்களுக்கு மெய்ஞ்ஞான ஒளியூட்டும் நோக்கத்தில் இம்மாமேதை மெஞ்ஞானத்தைக் கருப்பொருளாகக் கொண்ட எண்ணற்ற பாடல்களை இயற்றியுள்ளார். 'ஞானப்புகழ்ச்சி' 'ஞானமணி மாலை' 'ஞானப் பூட்டு' 'ஞானத்திறவுகோல்' 'ஞான ஆனந்தக் களிப்பு', 'ஞானக்குறம்', 'திருமெய்ஞ்ஞானச் சரநூல்' 'திருநெறிநீதம்' ஆகியவை இவர் எழுதிய பாடல்களில் சில. இவரது விழுமிய தமிழ்ப் பாக்களில் அரபுச் சொற்களும் விரவிக் கிடக்கின்றன. சேர மன்னர்களோடு இக்கவிஞர் தொடர்பு கொண்டிருந்தார். பத்மனாபபுரக் கற்கோட்டை இவர் கல் எடுத்து வைக்கக் கட்டப்பட்டது என்று கூறப்படுகிறது.

மெய்ஞ்ஞானக் களஞ்சியமாய்த் திகழ்ந்த இம்மாபெரும் கவிஞரின் ஆண்டு விழா, ஆண்டுதோறும் ரஜப் திங்கள் முழுமதி நாளில் தக்கலையில் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் தமிழக மக்களும் கேரள மக்களும் பேரளவில் சாதி, சமய வேறுபாடின்றிக் கலந்து கொள்கின்றனர். இவரது தமிழ்த் தொண்டினைப் போற்றிப் பாராட்டும் வகையில், தமிழக அரசு, இவரது ஆண்டு விழா நாளன்று, உள்ளூர் விடுமுறை அளித்துப் பெருமை செய்து வருகிறது.



## திற்பரப்பு அருவி

இயற்கையன்னையின் எழில் கொழிக்கும் இம்மாவட்டத்தில் குற்றாலம் அருவியைப் போன்ற குளிர்ந்த தண்புனல் அருவி ஒன்றுள்ளது. தாமிர வருணியாறு மேற்குத் தொடர்ச்சி மலையின் கீழ்ப்புறத்தில் இருந்து நெல்லை மாவட்டத்திலும் மேற்புறத்தில் இருந்து குமரி மாவட்டத்திலும் தவழ்ந்தோடி வருகிறது. குமரி மாவட்டத்தில் ஓடும் ஆறு குழித்துறை ஆறு என்றும் இப்பகுதி மக்களால் அழைக்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் காவிரியாறு ஒகெனக்கல் நீர்வீழ்ச்சியாகப் பாறைகளில் இருந்து வீழ்வதைப்போன்றே குழித்துறையாறும் திற்பரப்பில், பாறைகளில் இருந்து இழிந்து அருவியாக விழுகிறது. திற்பரப்பில் இழிந்தோடும் தீம்புனல் அருவி, காண்போர் கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்தாக அமைந்திருக்கும் இயற்கையன்னையின் அற்புதப் படைப்புக்களில் ஒன்றாகும். திற்பரப்பு அருவியின் கரையோரத்தில் மிகப்பழமையான மகாதேவர் ஆலயம் ஒன்றுள்ளது.

கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!








# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ருத்ரோத்காரி — மாசி 4

16-2-1984 75 காசு








# குடியரசுத் திருவிழா

35-வது குடியரசுத் திருநாள் சென்னை காமராசர் சாலையில் 26.1.84 காலை 8 மணியளவில் கொண்டாடப் பெற்றது.

விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை புரிந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை, அண்ணல் காந்தியடிகளின் சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த மேடை அருகே தலைமைச் செயலர் திரு.கு.சொக்கலிங்கம் இ.ஆ.ப. வரவேற்றார். பின்னர்-விழாவில் பங்கு கொள்ள வந்த மேதகு ஆளுநர் அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்று, முப்படைத் தளபதிகளையும், அலுவலர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ருத்ரோத்காரி — மாசி 4
மலர் : 14 இதழ் : 16
16-2-1984

மேதகு ஆளுநர் நாட்டுக் கொடியை ஏற்றினார். காற்றில் ஆடி அசைந்து ஒளி வீசிய கொடிக்குப் பூமாரியைப் பெய்தன விண்ணில் பறந்து சென்ற விமானங்கள்.

இராணுவ வீரர்கள தந்த அணிவகுப்பு மரியாதையை மேதகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்டார். அதன்பின் வியப்பு ஊட்டும் வகையில் விமான அணிவகுப்பு நடைபெற்றது.

முப்படையினர், சென்னை மாநகரப் பெண் காவலர், முன்னாள் படைவீரர், ரயில்வே பாதுகாப்புப் படை, செயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் பிரிகேட், தீயணைப்புப் படை, ஊர்க்காவலர், சாரணர் மற்றும் பலரின் அணிவகுப்பும், தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் 14 ஊர்திகளின் அணிவகுப்பும் நடைபெற்றன.

அவற்றைத் தொடர்ந்து நடைபெற்ற பள்ளிச் சிறார் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள்-நாட்டுப்புறக் கலைஞர்களின் கலைநிகழ்ச்சி ஆகியவை மக்களைக் கவர்ந்தன.

*1983 மார்ச் மாதம் 15ஆம் நாளன்று மதியம் கரூரில் ஒரு கிணற்றில் தவறி விழுந்த தமிழ்ச்*







செல்வி என்ற 4ஆம் வகுப்புப் பயிலும் சிறுமியைக் காப்பாற்றிய 9 வயதுச் சிறுவனான நா.பத்மநாபனுக்கு அண்ணா வீரப் பதக்கத்தையும், ஆயிரம் ரூபாய்க்குரிய காசோலையையும் இந்த விழாவில் வழங்கினார் மாண்புமிகு முதல்வர். சிறுவனை உச்சிமோந்து அவனுக்குப் பாராட்டும் வழங்கினார். சிறுவன் பத்மநாபன் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தான். முதல்வரின் கன்னத்தில் முத்தமிட்டுத் தனது நன்றி புணர்வைத் தெரிவித்துக் கொண்டான். உடனே அவனைக் கட்டி அணைத்து மீண்டும் பாராட்டுத் தெரிவித்தார், தாய் மனம் கொண்ட முதல்வர். இந்தக் காட்சியைக் கண்ணுற்ற சிறப்பழைப்பாளர்களும், பொது மக்களும் கரஒலி எழுப்பித் தங்களது பாராட்டுதல்களைத் தெரிவித்தனர்.

சேலத்திலிருந்து 1982 பிப்ரவரி 20ஆம் நாள் இரவில் வேளாங்கண்ணிக்குச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஆற்றினுள் மூழ்கிய போது, அதன் உள்ளிருந்து தூக்கி எறியப்பட்ட ஜான் பாஸ்கோ என்னும் இளைஞர், காரின் கண்ணாடிகளை உடைத்து, 30 பேரைக் காப்பாற்றினார். அந்த வீரச் செயலைப் பாராட்டி அவருக்கு அண்ணா வீரப் பதக்கத்தை மாண்புமிகு முதல்வர் வழங்கினார்.

பவானியில் காவிரி ஆற்றில் 1981 ஆகஸ்ட 23 அன்று குளித்துக் கொண்டிருந்த திருமதி. சகுந்தலாவை வெள்ளம் அடித்துக் கொண்டு போக, அப்போது உடனிருந்தவர்கள் கூச்சலிட, அதைக் கேட்ட ஊர்க்காவல் படையைச் சார்ந்த கேசவன்-வெள்ளத்தில் குதித்து-அந்தப் பெண்ணை மரணத்திலிருந்து காப்பாற்றினார். இந்த வீரச் செயலைப் பாராட்டி அண்ணா வீரப் பதக்கத்தையும், கடந்த ஆண்டு குடியரசு நாள் விழாவில் பங்குபெற்ற அலங்கார ஊர்திகளில் வெற்றி பெற்ற துறையினருக்குச் சுழற்கேடயங்களையும், பள்ளிச் சிறார் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற பள்ளிகளுக்குப் பரிசுகளையும், ஆவடி, தருமபுரி கரகம்-காவடி சிறப்புக் காவல் பிரிவினருக்குச் சிறப்புப் பரிசுகளையும் (திரு. என்.சிவகுரு, திரு.ஆ. திருப்பதி ஆகியோர்) முதல்வர் வழங்கினார்.

மகாவீர் சக்கரா விருது பெற்ற-தமிழ்நாட்டைச் சேர்ந்த லெப்டினன்ட் ஜெனரல் கே. கௌரிசங்கர், பிரிகேடியர் டி.கே.தியாகராஜ் (ஓய்வு), பிரிகேடியர் பி.கே.நந்தகோபால் (ஓய்வு), சுபேதார் தோமஸ் பிலிபோஸ், நாயக் எம்.கே.இராசு (ஓய்வு), ஆகியோருக்கு முதல் முறையாக இந்த விழாவின்போது பாராட்டு தெரிவிக்கும் வகையில் தஞ்சாவூர்த் தட்டுகளைப் பரிசாக வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.

சென்னையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த பூட்டில் என்பவர், சுற்றுலாத் துறையின் ஏற்பாட்டின்படி யானை மீது உலாவந்தார். மேதகு ஆளுநர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாலை அணிவித்த நிகழ்ச்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவியர், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காண்பித்தனர்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு அணிவகுப்பைப் பார்வையிட்டனர்.

பொதுமக்கள் ஏராளமான அளவில் திரண்டிருந்து குடியரசு நாள் விழாக் காட்சிகளை அமைதியாக ரசித்தது, குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**நிகழ்ச்சித் தொகுப்பு: அ. மருதவிநாயகம்**





# மின்வாரிய வெள்ளி விழா

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்வாரிய மைய அலுவலகக் கட்டடத் திறப்புவிழா சென்னை-அண்ணா சாலையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இந்தியக் குடியரசு நாளான சனவரித் திங்கள் 26ஆம் நாளன்று நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பங்கேற்றார்.

மாண்புமிகு மின்வாரியத்துறை அமைச்சர் திரு.ச.இராமச்சந்திரன் தலைமையில் நிகழ்வுற்ற இந்த மாபெரும் விழாவில், தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் திரு. பி. விஜயராகவன் இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார்.

இக் கட்டடம் உருவாகக் காரணமாயிருந்தவர் முன்னாள் மின்வாரியத் தலைவரும் இந்நாள் அரசுத் தலைமைச் செயலாளருமான திரு. சொக்கலிங்கம் என்று குறிப்பிட்ட அவர், 87,700 மின்வாரிய ஊழியர்கள் சார்பில் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அதன் பின், மின்வாரியத்தைச் சேர்ந்த பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சார்பில் மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு மின்துறை அமைச்சர், அரசு தலைமைச் செயலாளர் ஆகியோருக்கு மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. களப்பணியாளர் சங்கச் சார்பில் முதல்வர் நிதிக்கென ரூ.5000 அளிக்கப்பட்டது.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமியின் புதல்வர், மாண்புமிகு முதல்வருக்கு மாலையணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

'தமிழ்நாட்டு மின் திட்ட அணைகள்' என்ற நூலைத் தலைமைச் செயலாளர் திரு. கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. வெளியிட்டு உரையாற்றினார். அப்போது அவர், "அணைகள் கட்டுவதில் தமிழ்நாட்டுப் பொறியாளர்களே மிகவும் திறமையாளர்கள் என் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அணைக்கட்டுகளை எப்படிப் பாதுகாப்பது, பராமரிப்பது என்பதையெல்லாம் இப்படிப்பட்ட நூல்களில் இனி குறிப்பிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

**மின்துறை அமைச்சர்**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் விவசாயமானாலும், தொழில் துறையானாலும் இன்றியமையாதது மின்சாரம். சட்டி



# கலைமாமணி விருது வழங்கும் விழா

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் கலைமாமணி விருது வழங்கும் விழா, சென்னை கலைவாணர் அரங்கில் 26-1-'84 அன்று எழுச்சியுடன் நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

விழாவுக்கு வருகை புரிந்தவர்களைத் தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் வரவேற்றுப் பேசினார். மன்றத்தின் செயலர் நடிகமணி டி.வி. நாராயணசாமி ஆண்டறிக்கை படித்தார்.

அடுத்து, மறைந்த கலை மேதைகள் பதினான்கு பேரின் திருவுருவப் படங்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார்.

அதன் பின்னர் கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களுக்கு மேதகு ஆளுநர் பொற்பதக்கம் அணிவித்தார். விருதுகளை மாண்புமிகு முதல்வர் வழங்கினார். சிறந்த கலைநிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸ்ரீ கச்சாலீஸ்வரர் கான சபைக்குரிய பரிசையும் மேதகு முன்னாள் ஆளுநர் திரு கே.கே. ஷா அவர்களின் சுழற்கேடயத்தை ஹெரான் தியேட்டர்ஸ் நாடகக் குழுவுக்கும் மாண்புமிகு முதல்வர் வழங்கினார்.

ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்று, நலிந்த நிலையில் இருக்கும் கலைஞர்கள் பதினான்கு பேருக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பொற்கிழிகளை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''மக்கள் ஆட்சி மலர்ச்சி பெற்ற இந்தக் குடியரசு நாளில் நாம் கலைஞர்களைப் பாராட்டுகிறோம். எந்த நாடு கலைஞர்களைப் போற்ற மறுக்கிறதோ அந்த நாட்டு மக்களின் வாழ்வில் உயிரோட்டம் இருக்க முடியாது.

''பிறரை இன்பத்துள் ஆழ்த்துவது -மகிழ்ச்சிகரமாக ஆக்குவது என்பது எளிதான காரியமல்ல. எவ்வளவு கோடி பட்ஜெட் போட்டாலும் 'மக்களுக்கு மகிழ்ச்சி வருமா! சென்ற ஆண்டு 2,450 கோடி ரூபாய்க்குப் புரட்சித் தலைவரின் அரசு பட்ஜெட் தீட்டியிருக்கிறது. 'இதை எடுத்திருக்கலாம்', 'இதைக் கூட்டியிருக்கலாம்' என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் நாட்டினரை எல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்துவதற்குக் கலைஞர் பெருமக்களால்தான் முடியும். சிறு முயற்சியின் மூலமாகவே - சிறு பணியின் மூலமாகவே மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறார்கள் கலைஞர்கள்.

''பத்து இலட்ச ரூபாயை ஒருவருக்கு வழங்கினாலும் அவரை மகிழ்விக்க முடியாது. 'இவரது சம்பாத்தியத்துக்கு இன்னும் கொஞ்சம் தரலாமே' என்பார்! நிறையப் பணம் பெற்றிருப்பதால் - ஒருவரின் இதயத்தில் இடம் பிடித்து விட முடியாது. மக்களின் கவலையைப் போக்கும் பெரும்பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் கலைஞர்கள். 3,000 ஆண்டுகளுக்கு முன்னமேயே, பாணர்கள், கூத்தர்கள், பொருநர்கள், இசைவாணர்கள் ஆகியோர் பாராட்டப் பெற்றமையைச் சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை ஆகிய நூல்களின் மூலம் அறிகிறோம்.

''தமிழகத்தில் வளர்ந்துள்ள கலைகளுக்கு ஈடான கலை அகில உலகத்திலும் இல்லை. ஆங்கில மொழி இலக்கியம் ஆயிரம் ஆண்டுக்கு உட்பட்டதுதான். அதற்கும் முன்னதாக கிரேக்கமும், ரோமும் இலக்கியங்களைப் பெற்றிருந்தன.

''இன்று கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் ஈடு இணையற்ற செல்வாக்குப் பெற்றிருப்பவர்கள். இந்தக் கலைஞர்கள் வாழ்க! இவர்கள் திறன் வளர்க! செயல்கள் வெல்க! வெல்க!''

அடுத்து, மேதகு ஆளுநர் தமது தலைமை உரையில் தெரிவித்தார்:

''கலைஞர்களைப் பாராட்டும் ஒரு சமுதாயம், தன்னையே பாராட்டிக் கொள்கிறது என்று சொல்லலாம்-உலகெங்கும் கலைஞர்கள் மதிக்கப்படுகிறார்கள். கலை - அது ஓவியமாயினும் சரி, இசையாயினும் சரி, கிராமியக் கலை ஆயினும் சரி, பாராட்டுக்குரியது. அது புத்துணர்ச்சியை வழங்குகிறது. கலை, சமுதாயத்தின் சிறப்பம்சமாகும். கலை நாட்டைச் செழிப்பாக்குகிறது.''

விருது பெற்றோர் சார்பில் ஏற்புரை கூறிய பல்கலை விற்பன்னர் திரு எஸ்.எம். கௌரி சங்கர் ஸ்தபதியார் தெரிவித்தார்:

''முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலம் கலைஞர்களுக்கு நற்காலமாகத் திகழ்கிறது.''

அடுத்து ஏற்புரை கூறிய பரத நாட்டியக் கலைஞர் திருமதி மாலதிடாம்னிக் குறிப்பிட்டார்:

''எங்களுடைய பணிகளை நாங்கள் தொடர்ந்து செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்:''.

திரைப்பட இயக்குநர் திருமதி



பானுமதி இராமகிருஷ்ணா தமது ஏற்புரையின்போது தெரிவித்தார்:

''இருபது ஆண்டுகளுக்கு முன்பே எனக்குக் கலைமாமணி விருது கொடுக்க முன் வந்தார்கள். அப்போது எனக்கு 35 வயது இருக்கலாம். என்னைவிட மூத்த கலைஞர்கள் எல்லாம் அந்த விருதை அப்போது வாங்கினர். அதனால் எனக்கு வயது ஆகவில்லை என்று சொல்லி இந்த விருதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டேன்! இப்போது ஏற்றுக் கொள்கிறேன்.

''முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் திரைப்படத்தில் ராஜாவாக-ராஜ குமாரனாக நடித்தார். அந்த வேடங்களில் எல்லாம் 'ஆக்ட்' பண்ணி எப்படி ஆட்சியையாளுவது என்று தெரிந்து கொண்டு, இப்போது நாட்டை ஆளும் முதல்வராக ஆகிவிட்டார். இதற்காகத்தான் அவர் ராஜகுமாரனாக நடித்தாரோ என்று கூட எண்ணத்தோன்றுகிறது. இவரே தொடர்ந்து முதல்வராக இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.''

அடுத்து, இறையருட் பாடல் கலைஞர் திரு பித்துக்குளி முருகதாஸ் தமது ஏற்புரையில் குறிப்பிட்டதாவது:

''கலை எல்லாவற்றிலும் சிறந்தது. மனித சமுதாயம் வாழ்வாங்கு வாழ்வதற்குக் கலை பயன்படுகிறது. கலை வளர்ச்சிக்குத் தொண்டு செய்யும் இந்த அரசுக்கு-முதல்வருக்கு எனது நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன்.''

ஏற்புரை வழங்கிய திருக்குறளார் முனுசாமி குறிப்பிட்டார்:

''மனித இனம்தான் நன்றி சொல்லும் திறன் பெற்றது. மாடு, கன்றுகளுக்கு நாம் எவ்வளவோ சேவை செய்கிறோம். அவை நமக்கு நன்றி தெரிவிப்பதில்லை. மனிதன் ஒருவனே நன்றி தெரிவிக்கத் தெரிந்தவன்.

''மனைவி கணவனுக்குச் சாப்பாடு போட்டவாறு பக்கத்திலேயே நிற்பாள். எதற்காக ? மூன்று மணி நேரம் சமையலறையில் புகுந்து உணவைச் சமைத்திருக்கிறோமே, அதன் சிறப்பைப் பாராட்டிக் கணவன் ஏதாவது ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்லமாட்டானா என்றஎதிர்பார்ப்புதான்அதற்குக் காரணம். ஆகவே நன்றி சொல்ல வேண்டும் என்பது மனிதனின் சிறப்பான குணமாகும். அந்த வகையில் எங்களுக்கு விருது வழங்கிய இந்த அரசுக்கு - மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.''

ஏற்புரை வழங்கிய திரைப்பட நடிகர் கே.பாக்யராஜ் குறிப்பிட்டார்:

''இங்கே முதியவர்கள் பலருக்கு இந்த விருது கிடைத்திருக்கிறது. வயது அதிகம் ஆகாத எனக்கும் இது கிடைத்திருக்கிறது. நீ இன்னும் சிறப்பாகப் பணி ஆற்றவேண்டும் என்பதைச் சுட்டிக் காண்பிப்பதற்காக இந்த விருது கொடுத்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

''இங்குள்ள பலரை எனக்குத் தெரியவில்லை. இந்த நிகழ்ச்சியின் மூலமாக அவர்களை எல்லாம் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு வந்ததால் இன்று திருக்குறளார் ஐயா அவர்களின் அருமையான சொற்பொழிவைக் கேட்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. முதல்வர் அவர்கள், சென்ற முறை ஒரு நிகழ்ச்சியின்போது திருக்குறளாரின் சொற்பொழிவைக் கேள் என்று என்னிடம் சொன்னார்கள். அவர்களது வழிகாட்டலின்படி இன்று திருக்குறளாரின் பேச்சைக் கேட்க வாய்ப்புக் கிட்டியது. பசியை மறந்துவிட்டு அவரது பேச்சை எல்லோரும் கேட்டோம் .

''மக்களுக்காக முக்கியமான திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் மக்கள், எம்.ஜி.ஆர். அவர்களை முதல்வராகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.''



வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் குறிப்பிட்டார்:

''கலைஞர்கள் எல்லோரையும் பாராட்ட வேண்டும் என்பது தான் இந்த அரசின் கொள்கை. நிதிநிலை வசதி, சூழ்நிலை ஆகியவற்றை வைத்து ஆண்டுக்கு 30 கலைஞர்களுக்குத்தான் கலைமாமணி விருது வழங்க முடிகிறது.

''இங்கு முதிய கலைஞர்களுக்கும் விருது வழங்கப்பட்டுள்ளது. இளைய கலைஞர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. முதியவர்கள் அவர்கள் செய்த சேவைக்காக விருது பெற்றிருக்கிறார்கள். இளைஞர்கள் - வளர்ந்து வருபவர்கள் - ஊக்கமுடன் பணியாற்ற வேண்டும் என்பதற்காக விருது பெற்றிருக்கிறார்கள்.

''கலைமாணி பட்டத்தைப் பெற்றுள்ள பலர் ஏழ்மையில் இருக்கின்றனர். அவர்களுக்குக் கிடைப்பது பட்டமே தவிர வாழ்க்கைப் பாதுகாப்பு அல்ல என்பதை மனதில் வைத்து இந்த நிகழ்ச்சியை நாம் கவனிக்கவேண்டும்.

''மதிக்கப்பட வேண்டிய கலைஞர்கள் தமிழ்நாட்டில் ஆயிரக் கணக்கில் உள்ளனர்.

''கலைஞர்கள், நாம் நாட்டுக்காக வாழ்கிறோம் என்பதையும், நமது கலை நாட்டு மக்களுக்காக-மக்களை மகிழ்விப்பதற்காக என்பதையும் உணர வேண்டும்

''நம்முடைய குழந்தை மூக்கு வடித்துக் கொண்டு நின்றால் நாம் அதைத் துடைக்கிறோம் ஆனால் அடுத்தவர்களின் குழந்தை அவ்வாறு இருந்தால் நாம் துடைப்பதில்லை, என்ன இந்தக் குழந்தை இப்படி இருக்கிறதுஎன்று கூறிக்கொள்கிறோம். அதுபோல நமது கலைஞர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.



''கலைஞர்கள் நாட்டுக்காகப் பாடுபட வேண்டும்; அப்போது தான் அவர்கள் சிரஞ்சீவியாக இருப்பார்கள். அவர்களுக்கு முதுமை வராது. கலைஞர்கள் தமக்கு வயது அதிகம் ஆகிறது என்று நினைக்கக்கூடாது. அப்படி நினைப்பதே ஒரு பலகீனம். வயதைப் பற்றிக் கலைஞர்களே, கவலைப்படாதீர்கள்! உங்கள் திறமை பிறருக்காகப் பயன்பட வேண்டும். உணவுபற்றிக்கவலைப் பட வேண்டாம். உணர்வுபற்றிக் கவலைப்பட வேண்டும். .

''கலைஞர்கள் ஜாதிபேதமின்றிப் பழக வேண்டும். மத பேதமின்றிப் பழக வேண்டும்.

''நலிந்த கலைஞர்களின் நல்வாழ்வுக்கு விரைவில்நல்லதிட்டம் தீட்டப்படும். காலம், நேரம் பார்த்து அந்தத் திட்டம் வெளியிடப்படும். சமுதாயத்தில், குழந்தைகளுக்கு, வயது முதிர்ந்தவர்களுக்கு எல்லாம் செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நாடகக் கலைஞர்களாக இருப்பவர்களில் நலிந்தவர்களாகஇருப்பவர்களின் நல்வாழ்வுக்கும் திட்டம் தீட்டப்பட வேண்டும். நாடக மேடையில் இருப்பவர்களுக்கு—சினிமாவில் இருப்பவர்களுக்கு நல்ல வாழ்க்கை கிடையாது. வருமானம் கிடையாது. வயதாகி விட்டால் நடிக்கவும் முடியாது. இத்தகையவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் திட்டம் ஒன்று தீட்டிக் கொண்டிருக்கிறேன். விரைவில் வெளியிடுவேன்.''

அடுத்து, மன்றச் செயலர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் நன்றி உரை ஆற்றினார்.

கலைமாமணி விருது வழங்கும் விழா கலையுலகின் திருவிழாவாகத் திகழ்ந்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**தமிழ்ப்பித்தன்**



கலைமாமணி விருது வழங்கும் விழாவில் (26-1-84) திறந்து வைக்கப் பெற்ற கலைமேதைகளின் திருவுருவப் படங்கள்

**இயல்**
**இசை**
**நாடக மன்றம்**

இயற்றமிழ்க் கலைஞர் பாண்டித்துரைத் தேவர்.
சங்கீத சாகித்தியமேதை திருவனந்தபுரம்லட்சுமணப்பிள்ளை
சங்கீத மேதை பி.கே. அருணாசல அண்ணாவி.
மிருதங்க மேதை பழனி சுப்பிரமணிய பிள்ளை.
நாதசுர மேதைசெம்பனார்கோவில் கோவிந்தசாமிப்பிள்ளை
நாதசுர மேதை செம்பனார் கோவில் தட்சிணாமூர்த்திப் பிள்ளை.
தவில் மேதை திருமுல்லைவாயில் முத்துவீருப் பிள்ளை.

பரதநாட்டிய மேதை திருவிடைமருதூர் குப்பையாப்பிள்ளை.
பரதநாட்டிய மேதை திருக்கழுக்குன்றம் துரைசாமி நட்டுவனார்.
நாடக நடிகர் டி.கே.பகவதி.
நாடக நடிகர் சி.எஸ்.சாமண்ணா.
நாடகாசிரியர் பி.டி.சம்பந்தம்
திரைப்பட நடிகை சாவித்திரி
இசை நாடக நடிகர் எம்.எம். மாரியப்பா.

**1983-84ஆம் ஆண்டில் பொற்கிழி பெற்ற கலைமாமணிகள்**

திரு.டி.ஜி.பாவுப் பிள்ளை.
திரு மு.ராமசுப்பிரமணிய சர்மா.
திரு. மெலட்டூர் ஜி.சுவாமிநாதன்.
திருமதி கே.பி.மெய்ஞானவல்லி.
திருமதி என். அய்யம்மாள்.
திரு. எஸ்.எஸ்.சிவசூரியன்.
திரு.சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்
திரு. ராஜராஜா ஏ.பி.பெருமாள்ராஜ்.

திரு.கண்ணாடிமாஸ்டர் சி.ஏ.என். ராஜ்.
திரு. என்னத்தே கன்னையா.
திருமதி ஜானகி.
திரு. மன்னார்குடி என்.ராஜகோபால்.
திரு.டி.கே.ராமச்சந்திரன்

திரு.பி.தாமோதரன்-



# தமிழகத்தில் ஊரகத் தொழில் வளர்ச்சி

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்

## திரு. இரா. அருணாசலம்

பயிர்த் தொழில் மூலம் மட்டுமே விரைவான பொருளாதார வளர்ச்சிக்கும், வளர்ந்து வரும் மக்கட் தொகைக்குத் தேவையான வேலை வாய்ப்பிற்கும் வழிகோலிட வாய்ப்பு அதிகமில்லை. எனவேதான் தலையாய இக் குறிக்கோள்களைச் செயலாக்கும் முயற்சியில் தொழில்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பெருரக, மற்றும் நடுரகத் தொழில்களும், சிறு தொழில்களும் ஒருங்கிணைந்த முறையில் ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று உதவி, விரைவாகவும், பரவலாகவும் வளர்ந்திடத் தேவையான உதவிகளையளித்து, வளர்ச்சிக்குச் சாதகமானதோர் சூழ்நிலையை உருவாக்கிடுவதில் தமிழக அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அதிலும்,ஒரு குறைந்த அளவு முதலீட்டினைக் கொண்டு, குறுகிய காலத்தில் அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கக் கூடியவை சிறு தொழில்கள் என்பது ஐயப்பாட்டிற்கு இடமின்றித் தெளிவாக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பகுதியில் பெரிய தொழிற்சாலையொன்றை நிறுவுவதன் மூலம் ஓரளவிற்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிட இயலும். ஆனால் ஆங்கிலத்தில் 'spread effect' என்று கூறப்படும் முழுமையான, பயனுள்ள விளைவுகள் காணப்பட வேண்டுமானால் அதற்கு அப்பகுதிகளில் தோன்றும் தொழில்கள் ஊரகப்பகுதிகளில் கிடைக்கக் கூடிய மனிதத்திறனைப் பயன்படுத்தக்கூடியவையாயும், சூழ்நிலைக்கு ஏற்றதாயும் இருக்க வேண்டும். இந்த அடிப்படையிலும் ஊரகத் தொழில்களின் வளர்ச்சி முக்கியத்துவம் பெறுகின்றது. எனவேதான் தமிழக அரசு சிறு தொழில்களின், குறிப்பாக ஊரகத் தொழில்களின், வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதிலும், பரவலாக்குவதிலும் மிகவும் கவனம் செலுத்தி வருகிறது.

இவற்றின் முன்னேற்றத்திற்கெனப் பல்வேறு உதவித்திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை இத்தகைய தொழில்களின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு நிலையிலும் தேவையான உதவிகளை அளிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன. சிறு தொழில்களுக்கும், கைவினைத் தொழில்களுக்கும் பதிவுச் சான்றிதழ் அளித்தல், மிகச் சிறு தொழிற் கூடங்கள் உட்பட்டு பல்வேறு அளவுகளில் தொழிற் கூடங்கள் பெற உதவுதல், தேவையான இயந்திர சாதனங்கள் மற்றும் கருவிகள் பெறுவதில் உதவி, மூலப்பொருள்களைப் பெறுதல் மற்றும் பொருள் விற்பனை இவற்றில் உதவி இவை அனைத்தும் இதில் அடங்கும். தனிப்பட்ட முறையில் தொழில்களைத் துவக்கி நடத்தவும், கூட்டுறவுத்துறையில் இவற்றை அமைத்து நடத்தவும் உதவிகள் வழங்கப்படுகின்றன. செயல்படுத்தப்படும் உதவித்திட்டங்களில் சிலவற்றைப் பற்றிப் பார்ப்போம்.

**மாவட்டத் தொழில் மையங்கள்**

ஒருங்கிணைந்த முறையில், சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் தேவையான அனைத்து உதவிகளையும் அளிப்பதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்டத் தொழில் மையங்கள் சிறு தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதிலும், பரவலாக்குவதிலும் பெரும் பணியாற்றியுள்ளன. Regulatory functions என்று சொல்லக்கூடிய கண்காணிப்புப் பணிகளுக்கே பெருமளவிற்குப் பயன்படுத்தப் பட்டு வந்துள்ள தொழில் வணிகத்துறையின் கள அமைப்புகள் அபி





விருத்தி நோக்குடன் செயல்படத் துவங்கியுள்ளது மாவட்டத் தொழில் மையங்களின் சாதனைகளில் முதன்மையானது.

தீவிரமான முறையில், சிறு தொழில்கள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் என்பது ஒரு சில ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட்டு வந்த ஒரு முயற்சி என்ற நிலை மாறி, ஊக்குவிப்பு வேலையென்பது தொழில் மையங்களில் முக்கியமான பணிகளுள் ஒன்றாக உருவெடுத்துள்ளது மற்றொரு முக்கியமான மாற்றமாகும். கடந்த மூன்றாண்டுகளுக்குள்ளாகவே 500க்கு மேற்பட்ட ஊக்குவிப்புக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளமை இதற்குச் சான்று கூறுகின்றது.

தொழில் மையங்கள் அமையும் முன்னர், சிறு தொழில்களுக்கு வங்கிகள் மூலம் தொழில் வணிகத்துறை நிதி உதவி பெற்றுத் தருதல் என்பது குறிப்பிடக்கூடிய முறையில் அமைந்திருக்கவில்லை. தொழில் மையங்களின் அமைப்பில் பங்கு பெற்றுள்ள முதன்மை வங்கியின் அலுவலரது முழு நேர ஈடுபாட்டுடன் கடந்த நான்காண்டுகளில் 15,000 சிறு தொழில்களுக்கு மட்டும் சுமார் ரூ. 30கோடி கடனுதவியாக வங்கிகளிடமிருந்து பெற்றுத் தரப்பட்டுள்ளது குறிப்பிடக்கூடியதோர் சாதனையாகும்.

சிறு தொழில்களுக்கு உரிமங்கள் வழங்கும் பணியில் பல துறைகள் சம்பந்தப்பட்டிருந்தாலும், தொழில் மையங்கள் அமைவதற்கு முன்னர் அவை ஒவ்வொன்றும் தனிப்பட்ட முறையில் செயல்பட்டு வந்துள்ளன. சம்பந்தப்பட்ட துறைகளுடன் சிறு தொழில்களின் சார்பில் தொடர்புகொண்டு, உரிமங்கள் விரைவாகக் கிடைத்திடச் செய்ய வழி வகுத்துள்ளது தொழில் மையங்களின் மற்றொரு முக்கியமான சாதனையாகும்.

வளர்ச்சிக்கு வழிகோலுவதற்கெனப் பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சம்பந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து திட்டங்களைச் செயலாக்குவதிலும் மையங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சான்றாக தீவிர கிராமப்புற வளர்ச்சித் திட்டம், கிராம இளைஞர் சுயவேலைவாய்ப்பிற்கான பயிற்சித் திட்டம் போன்ற இவைகளை ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தி வந்தாலும் பயிற்சி பெறுவதற்குரியவர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், பயிற்சியளிப்பதிலும் தொழில் மையங்கள் நேரடியான பங்கு பெற்றுள்ளன. இவற்றின் ஈடுபாட்டுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் சுமார் 1 இலட்சம் நபர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். தீப்பெட்டித் தொழில், பட்டுத் தொழில் போன்றவை இது வரை அவை வளர்ச்சியடைந்திராத புதிய பகுதிகளில் அமைந்து வருவதற்கு இப்பயிற்சி வசதிகள் பெரிதும் உதவியுள்ளன என்று கூறினால் அது மிகையாகாது.

### வழிமுறைகளை எளிதாக்கியிருத்தல்

சிறு தொழில் வளர்ச்சி பொதுவாக தனியார் துறையிலேயே அமைவதால், வளர்ச்சிக்குச் சாதகமானதோர் சூழ்நிலையினை உருவாக்குவதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உரிமங்கள் விரைவாகக் கிடைத்திடக்கூடிய வகையில் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

இவற்றின் கீழ், தொழிற் பகுதிகள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமையக்கூடிய சிறு தொழில்கள் குறிப்பிட்ட சில அலகுகளுக்குட்பட்டிருந்தால் உள்ளாட்சி மன்றத்தைத் தவிர வேறு எந்த நிறுவனத்திடமிருந்தும் உற்பத்தியைத் துவங்குவதமுன உரிமம் பெறத்தேவையில்லை. இதன் மூலம் உரிமங்கள் பெறுவதில் உள்ள இடர்ப்பாடுகள் பெருமளவிற்குக் களையப்பட்டுள்ளன. இதன் பயன் பெருவாரியான தொழில்களுக்குக் கிடைத்திடக்கூடிய வகையில் மாநிலத்தில் கூடுதலான பகுதிகளைத் தொழிற் பகுதிகள் என்று வரையறுத்து அறிவிக்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.



### தொழிற் கூட்டுறவுகள்

சிறு மற்றும் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல், கிராமப்பகுதிகளில் வேலை வாய்ப்புக்களைப் பரவலான முறையில் தோற்றுவித்தல் போன்ற முக்கியமான குறிக்கோள்களை மாநில அரசு செயற்படுத்த ஒரு சாதனமாகப் பயன்படுத்தி வரப்பட்டுள்ள தொழில் கூட்டுறவுத் துறையில் போற்றத் தக்க வளர்ச்சி காணப்பட்டுள்ளது. 1977-1978ல் 297 ஆக இருந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1983 மார்ச் திங்கள் இறுதியில் 904 ஆக உயர்ந்திருந்தது.

விவரங்கள் வருமாறு:

| வருடம் | தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | உற்பத்தி (ரூபாய் லட்சங்களில்) | விற்பனை. |
|---|---|---|---|
| 1977-78 | 297 | 1509.20 | 2762.97 |
| 1978-79 | 389 | 1813.70 | 2035.33 |
| 1979-80 | 559 | 2489.33 | 2874.25 |
| 1980-81 | 702 | 3377.06 | 3748.06 |
| 1981-82 | 840 | 3649.22 | 4218.66 |
| 1982-83 | 904 | 3904.11 | 7376.29 |

### நீலகிரியில் சிறு தேயிலை உற்பத்தியாளர் நலன் காக்கத் தேயிலைத் தொழிற் கூடங்கள்

நீலகிரியில் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தனியார் தேயிலைத் தொழில் அதிபர்கள் பிடியில் சிக்கி நியாயமான விலை கிடைக்கப் பெறாமல் கொடுத்த விலையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையை மாற்ற 1965ல் இருந்து 1977 வரை 11 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் தொடங்கப் பட்டன.

1977க்குப் பின்னால் மேலும் இரண்டு தொழிற் கூடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு ஒரு தொழிற்கூடம் செப்டம்பர் திங்களில் உற்பத்தியைத் துவக்கியுள்ளது. மற்றுமொரு தொழிற் கூடத்தின் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 10,000 சிறு தேயிலை உற்பத்தியாளர்களில் 7,462 நபர்களை அங்கத்தினர்களாகக் கொண்டுள்ள 13 தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை 1982-83ல் ரூ. 10 கோடியைத் தாண்டியுள்ளது. இவை சுமார் 40,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையளிக்கின்றன.

தீப்பெட்டித் தொழில் தருமபுரி, சேலம், வடஆர்க்காடு போன்ற புதிய பகுதிகளுக்குப் பரவியுள்ளது. 1977க்கு முன்னர் தமிழகத்தில் 11 சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களே இருந்த நிலை மாறி, 30.6.83 அன்று 107 சேவைத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும், 446 தொழிலாளர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் செயற்பட்டு வந்தன. இவற்றில் அரசின் உதவியுடன் 247 ஆதி திராவிட நபர்கள் உறுப்பினர்களாக அமைய வழி வகுக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் மூலம் 60,000 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுப் பயனடைகிறார்கள்.

### தென்னை நார் கயிற்றுத் தொழில்

கயிற்றுத் தொழிலில் 56 புதிய சங்கங்கள் கிராமப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்டு, சுமார் 8,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கயிற்றுப் பொருள்கள்





தயாரிக்கவும், சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**மரவள்ளிக் கிழங்கிலிருந்து சவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரிக்கும் தொழில்**

பிற மாநிலங்களிலிருந்து வந்துள்ள இடைத் தரகர்களது பிடியில் சிக்கி, மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகளும் சவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரிப்போரும் தக்க விலை கிடைக்காமல் இன்னல் பட்டுக் கொண்டிருந்த நிலையில், தமிழக அரசு சேலத்திலும், தருமபுரியிலும் இரு சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கி, இடைத் தரகர்களது பிடியிலிருந்து அவர்களை விடுவித்ததின் விளைவாக, மூட்டை ஒன்றுக்கு ரூ. 220-மட்டுமே பெற்று வந்த ஏழை விவசாயிகள் ரூ. 520 பெறுகின்ற நிலையை இன்று பெற்று, தமிழக அரசை நன்றியுணர்வோடு பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல சவ்வரிசி உற்பத்தியாளர்களும் கணிசமான விலையைப் பெற்றுள்ளனர்.

ஒரு மூட்டை சவ்வரிசி மாவுக்குக் கிடைக்கும் விலை சங்கம் அமையும் முன் ரூ. 160; சங்கம் அமைந்த பின் ரூ. 390.

இச்சேவைச் சங்கங்களின் விற்பனை 1981-82ல் ரூ. 40.63 இலட்சத்திலிருந்து 1982-83ல் ரூ. 27.72 கோடியாக உயர்ந்துள்ளது. இது, கூட்டுறவுச் சங்க விவசாயிகளுக்குக் கூடுதலான வருவாய் கிடைக்கின்ற நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது.

**தமிழக அரசு அளித்த விற்பனை வரி விலக்கு**

சேலத்தில் செயல்படும் சேவை சங்கத்திடம் சவ்வரிசியினை வாங்கும் வியாபாரிகள் மறுபடி அதனை விற்பனை செய்யும்போது மேலும் விற்பனை வரி கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இச்சலுகை காரணமாக தனியார்கள் கூட்டுறவுச் சங்கங்கள் வளராமல் தடைபடுவதற்குக் காரணமான செயல்கள் தவிர்க்கப்பட்டன.

**பாலித்தின் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

1977ஆம் ஆண்டிற்கு முன்பாக இயங்கி வந்த ஏழு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று பதினான்கு சங்கங்களாக வளர்ந்து ஒருகோடி ரூபாய்க்கும் அதிகமாக உற்பத்தினைப் பெருக்கி 600 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன. இவர்கள்ல் பெரும்பாலானவர்கள் பெண்கள்.

**மிகச் சிறிய தோல் உற்பத்தியாளர்கள் வாழ்வு மலர தோல் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள்**

திண்டுக்கல், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய நான்கு இடங்களில் தோல் உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு திண்டுக்கல்லிலும, இராணிப்பேட்டையிலும் பணிகள் தொடங்குகின்ற நிலையிலும் பேரணாம்பட்டில் பணிகள் விரைந்து நடக்கின்ற நிலையிலும் உள்ளன. திண்டுக்கல் திட்டம் சுமார்ரூ.98லட்சத்திலும், இராணிப்பேட்டைத் திட்டம் ரூ. 100 லட்சத்திலும் முடிக்கப்பட்டு உள்ளன. பேரணாம்பட்டுத் திட்டம் ரூ. 94 லட்சத்தில் பணிகள் துவக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் விரைந்த செயல்பெற்று வருகின்றன. இதனால் சொந்தமாக தோலைப் பதனிட்ட பின்னர் பூர்த்திசெய்யத் தேவைப்படும் மிருதுவாக்குதல், வண்ணம் பூசுதல் போன்ற பணிகளைச்செய்து கொள்ள வாய்ப்பில்லாமல் இருந்த 180 சிறு உற்பத்தியாளர்கள் பயன் பெறுவதுடன் 3,500 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. வாணியம்பாடி தொழிற் கூட்டுறவுச் சங்கம் இலாபத்தில் இயங்குகிறது.

**(அடுத்த இதழில் முடியும்)**





# பாசன வளம்

இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கோடியில் முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நில அமைப்பினைக் கொண்டு விளங்கும் கன்னியாகுமரி மாவட்டம் வடகிழக்கு, தென்மேற்கு ஆகிய இரு பருவக் காற்றுகளாலும் மழை பெறுகிறது. பருவ மழை தவறும் காலங்களில் வேளாண்மைக்கு இடையூறு ஏற்படாத முறையில் பாசனத்தினை அளித்திட பின் வரும் பெரிய பாசனத் திட்டங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

## கோதையாறு திட்டம்

கோதையாற்றின் குறுக்கே பேச்சிப்பாறை அணையும், பரளியாற்றின் குறுக்கே பெருஞ்சாணி அணையும் கட்டி இவ்விரு அணைகளிலும் மிகுந்த தண்ணீர் விவசாயத்திற்குப் பயன்படும் முறையில் அமைக்கப்பட்ட இத்திட்டம் கோதையாறு பாசனத்திட்டம் எனப்படும். பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் கோதையாறு இடதுகரை கால்வாய் வழியாகப் புத்தன் அணைக்கட்டுக்குக் கொண்டு வரப்படுகிறது. இதுபோன்ற பெருஞ்சாணி அணையிலுள்ள தண்ணீர் புத்தன் அணைக்கட்டில் சென்று சேர்கிறது. பின்னர் அங்கிருந்து அந்நீர் தோவாளைக் கால்வாய், அனந்தனார்க் கால்வாய், பத்மனாபபுரம் புத்தனார் சரகம், நாஞ்சில் நாடு புத்தனார்க்கால்வாய் (பழையாறு அடங்க) ஆகிய கால்வாய்கள் வழியாக கல்குளம் அகஸ்தீஸ்வரம் வட்டங்களில் சுமார் 59,000 ஏக்கர் நிலங்களுக்கு இருபோகப் பயிருக்கு நிரந்தரப் பாசன வசதிஅளித்து வருகிறது.

முதலாவது குறைந்த காலப் பயிர் கன்னிப் பயிரென்றும், இரண்டாவது நீண்டகாலப்பயிர் கும்பப்பயிரென்றும் இம்மாவட்டத்தில் அழைக்கப்படுகின்றது.

## நெய்யாறு திட்டம்

கேரள மாநிலத்திலுள்ள நெய்யாறு எனும் ஆற்றின் குறுக்கே செப்பிலாமூடு என்கின்ற இடத்தில் நெய்யாறு பாசனத் திட்டத்திற்காக ஒரு அணை கட்டப்பட்டு, அதன் இரு பக்கமும் இரண்டு கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநில புனரமைப்பின் காரணமாக இடதுகரைக் கால்வாயின் பாசன நிலங்களில் ஒருபகுதி தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டது. அதனால் இடது கரைக் கால்வாயில் தமிழ்நாடு அரசால் கன்னியாகுமரிக் கிளைக் கால்வாய் வெட்டப்பட்டது. இவ்வேலை கேரளமும், தமிழகமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படிகன்னியாகுமரிக் கிளைக் கால்வாய்க்கு வினாடிக்கு 150 கனஅடி தண்ணீர்விடவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டு, வேலை 1959ல் தொடங்கி 1963ல் முடிவுற்றது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 3404 ஏக்கர் நிலங்களுக்கு இருபோகப் பயிருக்குத் தற்போது நிரந்தரப் பாசன வசதி கிடைத்துள்ளது.

## திற்பரப்பு சிற்றணைத் திட்டம்

இம்மாவட்டத்தில் குலசேகரம் எனும் இடத்தில் 5-வது மைலில் திற்பரப்பில் கோதையாற்றின் குறுக்கே இச்சிற்றணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையிலிருந்து திற்பரப்பு இடதுகரைக் கால்வாய் என்றும், வலதுகரைக் கால்வாய் என்றும் இரு பிரிவுகள் பிரிந்து செல்கின்றன. இடது கரைக் கால்வாய் சுமார் 401 ஏக்கருக்கும், வலது கரைக் கால்வாய் சுமார் 483 ஏக்கருக்கும் பாசன வசதி அளிக்கிறது.

## அருவிக்கரை சிற்றணைத் திட்டம்

இம்மாவட்டத்தில் திருவட்டார் எனும் ஊரிலுள்ள பரளியாற்றின் கீழ்க் கோடியில் அவ்வாற்றின் குறுக்கே முன்னாள் திரு சொச்சி அரசு ஒரு சிற்றணை கட்டியுள்ளது. இந்த அணைக்கட்டு பெருஞ்சாணி நீர்த்தேக்கத்தில் இருந்து 8 மைல் தூரத்திலுள்ளது. இச்சிற்றணையின்கீழ் பரளியாறு கோதையாற்றுடன் சேர்ந்து முடிவில் தாம்பிரபரணி ஆறாக மாறி கடலில் கலக்கின்றது. இச் சிற்றணையிலிருந்து அருவிக்கரை இடதுகரைக் கால்வாய், வலதுகரைக் கால்வாய் என இரு கால்வாய்கள் பிரிந்து செல்கின்றன. அவை முறையே 527 ஏக்கர், 127 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்றன.

## சிற்றாறு பட்டணங்கால் திட்டம்

சிற்றாறு அணை—1, விளவங்கோடு வட்டத்தில் காசிமலை

அரசு வனத்தில் எட்டக் காணிக் கும், வண்டிபிலாகாணிக்கும் அருகில் கடல் மட்டத்திற்கு மேல் 2000 அடி உயரத்தில் உற் பத்தியாகி 7 மைல் ஓடி, பேச்சிப் பாறை அணையிலிருந்து 3 மைல் தூரம் கீழ்ப்பாகத்தில் கோதை யாற்றில் சேர்கின்றது. கோதை யாற்றில் இந்த ஆறு சேரும் இடத்திற்கு ஒரு மைல் மேற்கு ஒரு மண் அணை 73 அடி உயரத் தில் கட்டப்பட்டுள்ளது.

சிற்றாறு—2. கேரள மாநிலந் திற்குட்பட்ட நெய்யாற்றின் கரை வட்டத்திலுள்ள கல்மலை அரசு வனத்தில் கடல் மட்டத் திற்கு மேல் சுமார் 2300 அடி உயரத்தில் உற்பத்தியாகி கோதை யாற்றில் சேர்கிறது.

கல்குளம், விளவங் கோடு வட்டாரங்களில் சுமார் 15,000 ஏக்கர் இருபோகச் சாகு படிக்கும், திருநெல்வேலி மாவட் டம் நாங்குநேரி வட்டத்தில் 17,000 ஏக்கர் ஒருபோகச் சாகு படிக்கும் வகை செய்யப்பட் டுள்ளது.

கோதையாறு, பட்டணங்கால் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண் டும் மழை இல்லாதிருந்தால் ஜூன் முதல் தேதியிலிருந்து பிப்ரவரி 28ஆம் தேதி வரை விவ சாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்படும்.

சிற்றாறு பட்டணங்கால் பாச னத்தின்கீழ் 8625 ஏக்கரும், நெய்யாறு பாசனத் திட்டத்தின் கீழ் 3453 ஏக்கரும் இருபோக பாசன வசதி பெற்றுள்ளன. மேலும் நிலக்கால்வாய்கள் அமைப்பதன் மூலம் சிற்றாறு பட்டணங்கால் திட்டத்தில் 3313 ஏக்கருக்கும், நெய்யாறு பாச னத் திட்டத்தில் 284 ஏக்கருக் கும் நிரந்தரப் பாசன வசதி செய்து கொடுக்கலாம்.

நெல் சாகுபடிதான் இம் மாவட்டத்தில் முக்கியமெனினும் தென்னை, முந்திரி, மரச்சீனி, ரப்பர், பாக்கு, காப்பி, தேயிலை, கிராம்பு போன்ற வணிகப்பயிர் களும் ஏராளமாகப் பயிர் செய் யப்படுகின்றன. பிற மாவட்டங் களில் கிடைக்காத மட்டி, செவ் வாழை ரசகதலி, பூங்கதலி போன்ற பலவகை வாழைப் பழங் களும் இம்மாவட்டத்தில் ஏராள மாகப் பயிராகின்றன. இந்த மாவட்டத்தின் வேளாண்மை வளர்ச்சிக்கு மேற்குறித்த ஐந்து பாசனத் திட்டங்கள்தான் பெரி தும் உதவுகின்றன எனில் அது மிகையாகாது.

## அனந்தனாறு கால்வாய் — சீரமைப்பு

அனந்தனாறு கால்வாய் சீரமைப்புத் திட்டத்தில், ரூ. 2.44 கோடி செலவில் வேலைகள் நடைபெற்று, முதல் பகுதியில் சில இடங்களில முடிவடைந் துள்ளன. கற்காரைப் பாளங்கள் சீதப்பால். பூதப்பாண்டி ஆகிய இடங்களில் தயாரிக்கும் வேலைகள் நடைபெற்று வரு கின்றன.

ஆரல்வாய்மொழி பக்கத்தி லுள்ள பொறற்கை அணைத் திட்டமும். குழித்துறை ஆற்றின் பக்கமுள்ள முல்லையாற்றுத் திட்டமும் ஆய்விலுள்ளது. மேலும் கோதையாறு கால்வாய் கள் அனைத்தையும் சீரமைக்கும் திட்டமும் ஆய்வு செய்யபபட்டு வருகிறது.

பேச்சிப்பாறையில் சுற்றுலா மையம் கட்டுவதற்கென நேச மணி போக்குவரத்துக் கழகத் திடமிருந்து ரூ. 3 இலட்சம் ஒதுக் கப்பட்டுள்ளது பணிகள் ஆரம் பிக்கபபட்டுள்ளன.



அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# பாசன வளம் - சில தகவல்கள்



கோதையாறு- 1, 2 இல் மின் உற்பத்தி நிலையம் உள்ளது. இதில் ஏறத்தாழ 300 பேர்கள் பணியாற்றுகிறார்கள். மலைப்பகுதியில் போக்கு வரத்து வசதிக்காக 4 இழுவை ரயில்கள் பயன் படுத்தப்படுகின்றன.

கோதையாறு மின் திட்டம் 1இல் 60 மெகா வாட் உற்பத்தித்திறனும், கோதையாறு மின் திட்டம் 2-இல் 40 மெகாவாட் உற்பத்தித் திறனும் கொண்டது. 1970ல் முதல் திட்டமும், 1971ல் இரண்டாவது திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. மொத்த மதிப்பீட்டுத் தொகை ஏறத்தாழ ரூ. 390 இலட்சம் ஆகும்.

■ ■ ■

சித்தாறு அணை-1, சித்தாறு அணை-2, சேர்ந்து 15,000 ஏக்கருக்குப் பாசன வசதியைக் கொடுக்கின்றன.

இந்த அணையின் நீர்வரத்துப் பரப்பு 8.5 சதுரமைல், அணையின் நீளம் 2,500 அடி. அணையின் உயரம் 73 அடியாகும்.

■ ■ ■

சித்தாறு அணை-2ன் நீர்ப்பிடிப்புப் பகுதி பரப்பு 1.6 சதுர மைல். அணையின் உயரம் 82 அடி, நீளம் 4,800 அடி. நீர்வரத்துப் பகுதி 10.1 சதுர மைல். இந்த அணைப் பகுதியில சுமார் ரூ. 4 இலட்சம் செலவில் மீன் பண்ணை அமைக் கப்பட்டுள்ளது.

■ ■ ■

பரளியாற்றின் குறுக்கே கட்டப்பட்டது தான் பெருஞ்சாணி அணையாகும். 1948இல் தொடங்கப்பட்டு 1953இல் இது கட்டி முடிக்கப் பட்டது. இதன் கொள்ளளவு 2,890 மில்லியன் கன அடியாகும். இது சுதந்திரம் அடைந்தபிறகு கருங்கற்களால் கட்டப்பட்ட அணையாகும். இதன் நீர்பிடிப்புப் பரப்பு 3.72 சதுர மைல். நீர்வரத்துப் பகுதி 67 சதுரமைல். அணையின் நீளம் 1224 அடி. அணையின் உயரம் 84 அடி. நீர்மட்ட உயரம் 77 அடியாகும்.

ஏறத்தாழ 848 தொழிலாளிகள் இவ் வாலையில் பணியாற்றுகிறார்கள். ரூ. 71 இலட்சத்துக்கு ஆலை நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி மூன்றாண்டுகளில் முடியும். 1981-82ல் 50 சதவிகித ஆலை இயந்திரங்கள் 61 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப் பட்டுள்ளன.

■ ■ ■



■ ■ ■

திருவிதாங்கூர் மகாராஜாவால் 1895இல் இந்த இடத்தில் அணை கட்டுவதற்கான ஆய்வு செய்யப்பட்டு, 1897இல் அணைகட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. 1906ல் ரூ. 26.1 இலட்சத் தில் கட்டி முடிக்கப்பட்டதாகும். அணையின் நீளம் 1396 அடி. ஏறத்தாழ 50 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கான பாசன வசதிக்காகக் கட்டப்பட் டது. இது ஆனால் இன்று ஏறத்தாழ ஒரு இலட் சம் ஏக்கர் நிலம் பாசன வசதியைப் பெறுகிறது. நீர்வரத்துப் பரப்பு 80 சதுர மைல். நீர்ப்பிடிப்புப் பரப்பு 5.85 சதுர மைல். நீர் கொள்ளளவு 4,350 மில்லியன் கன அடி. அணையின் உயரம் 103 அடி



# ஞானரதம் அரங்கேற்றம்

**1983** டிசம்பர் 15ஆம் தேதி அன்று சென்னையில் சுவாமி சங்கரதாஸ் கலையரங்கில், சுர வந்திதா என்ற நாட்டியக் குழு நிகழ்த்திய 'ஞானரதம்' என்ற புதிய நாட்டிய நாடகத்தின் அரங் கேற்றம் நடைபெற்றது. இந்த நாட்டிய நாடகத்தைத் தயா ரித்து வழங்கியவர், காலஞ்சென்ற பிரபல நாட்டிய ஆசிரியர் பத்மஸ்ரீ தண்டாயுதபாணியின் புதல்வி யும்-சிறந்த நடனக் கலைஞரும்-நடன ஆசிரியருமான செல்வி உமா தண்டாயுதபாணி.

மகாகவி பாரதியின் சிறந்த படைப்பென அறிஞர்களாலும், தமிழ்மொழி வல்லுநர்களாலும் போற்றப்படுவதாகும் ஞானரதம்.

இந்த நாட்டிய நாடகத்தின் பாடல்களுக்கு - கருத்துருவிற்குத் தகுந்தாற்போல், நடன அமைப் பைப் பாங்குடன் உருவாக்கிய தற்குச் செல்வி உமா தண்டாயுத பாணியை எவ்வளவு பாராட்டி னாலும் தகும். தத்துவங்களும் கற்பனைகளும் நிறைந்த இக்கவி தையை நாட்டிய நாடகமாகத் தயாரித்து மேடையில் துணிகர மாக அளிப்பதற்கு எடுத்துக் கொண்ட அவருடைய உண்மை யான முயற்சியையும் ஆர்வத்தை யும் பாராட்டாமல் இருக்க முடி யாது.

இந்நாட்டிய நாடகத்திற்கு எளிய முறையில் எழில்மிக்க பாடல்களைப் புனைந்த கவிஞர் இளையபாரதி மதிவாணன், கலையன்பர்களின் மனங்களை ஈர்த்த பெருமை போற்றுதற் குரியது.

இந்நாட்டிய நாடகத்திற்கு நல்லமுறையில் இசை அமைத்த வர் மிக்க அனுபவம் வாய்ந்த திரு.ராமமூர்த்தி. திரு.கஜேந்தி ரன் தன் இனிய குரலால் பாடல் களைப் பாடி, செவிகளுக்கு ஓர் இனிய விருந்தினை அளித்தார்.

இந்த நாட்டிய நாடகத்தில் 'பர்வத குமாரி' என்ற பாத்தி ரத்தில் பெரும்பாலான காட்சி களில் மிகச் சிறப்பாக நாட்டிய மாடிய செல்வி நாகநந்தினி எல் லோருடைய கவனத்தையும் மிக வும் ஈர்த்தார். பாரதியாராகத் தோன்றிய செல்வி சித்ராவின் பாத்திரம் மிக்க அடக்கமாகவும் அமைதியாகவும் இருந்தது.

நாட்டிய நாடகத்தில் மற்ற பாத்திரங்களில் தோன்றிய இளம் நடனக் கலைஞர்களும் தங்களு டைய ஒத்துழைப்பைச் சீரியமுறை யில் அளித்தது குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் இந்த நாட்டிய நாடகம் மிகச் சிறப்பான முறை யில் அமைந்திருந்தது. இது, மத் திய அரசின் கலாச்சாரத்துறை தொழில்முறைக் குழுக்களுக்குப் புதிய படைப்புக்களுக்காக மானி யம் வழங்கும் திட்டத்தின்கீழ் உதவி பெற்ற நாட்டிய நாடகப் படைப்பாகும்.

**கே. எஸ். ராமன்,**
**உதவிச் செயலாளர்,**
**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை.**





# பால் வளம்

தமிழகத்தின் தென்கோடியில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்டம் இயற்கையிலேயே பல வளமும் பெற்றுள்ள மாவட்டம் ஆகும. குறிப்பாக, பால் வளமும் அதிக அளவில் பெருகியுள்ள மாவட்டமாக இது விளங்கி வரு கிறது.

இங்கு பால் வளத்தை அதிகப் படுத்திய பங்கு கூட்டுறவுச் சங் கங்களையே சாரும். மாவட்டத் தின் பால் உற்பத்தியையும், விணி யோகத்தையும் நாகர்கோவிலில் அமைந்துள்ள மாவட்டக் கூட்டு றவுப் பால் உற்பத்தியாளர் ஒன் றியமே நிர்வகித்து வருகிறது. இவ்வொன்றியமானது 1949ஆம் ஆண்டு நாஞ்சில்நாடு கூட்டுறவுப் பால் விணியோகச் சங்கமாக ஆரம்பிக்கப்பட்டு, தற்போது மாவட்டக் கூட்டுறவுப் பால் உற் பத்தியாளர் ஒன்றியமாகச் செயல் பட்டு வருகிறது.

ஆரம்பக் காலத்தில் 24 உறுப் பினர்களுடனும்ரூ.1,620 பங்குத் தொகையுடனும் வேலை செய் யத் துவங்கிய இவ்வொன்றியம், தற்பொழுது 96 பிரதமக் கூட் டுறவுப் பால் உற்பத்தியாளர் சங் கங்களையும், 25 இதரக் கூட் டுறவுச் சங்கங்களையும்,205 தனி நபர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு செயலாற்றி வருகிறது. தமிழக அரசு உறுப்பினராகச் சேர்ந்து ரூ. 3.50 இலட்சம் பங்குத் தொகையில் முதலீடு செய்துள்ளது.

இம்மாவட்டத்தில்பெரும்பகுதி யிலும் பசுக்களே வளர்க்கப்படு கின்றன. மொத்தப் பால் உற் பத்தியில் 98 சதவீதம் பசுவின் பாலாகும். மாவட்டத்திலுள்ள 85 பிரதம பால் உற்பத்தியாளர் சங்கங்கள் தங்களது உபரிப் பாலை ஒன்றியத்துக்கு வழங்கி வருகின்றன. மாவட்டத்தின் கல் குளம், விளவங்கோடு வட்டங் களில் அதிக அளவில் கலப்பு இன மாடுகள் வளர்க்கப்படுகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஒன்றியத்தின் பால் உற்பத்தி முந்தைய ஆண்டுகளைவிட கணிச மான அளவுக்கு அதிகரித்துள்ளது. தற்போது சராசரி தினசரி உற் பத்தி 12,000 லிட்டர் அளவில் இருக்கிறது. கடந்த 2 ஆண்டு களில் கறவைமாடுகளுக்கென அதிகக் கடன் வழங்கப்பட்டு அதற்கென தமிழக அரசின் மானி யமும் வழங்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தி அதிகரித்ததற்கான காரணங்களில் முக்கிய அம்சமா கும். 1970-71ல் தினசரி சராசரி பால் உற்பத்தி 3800 லிட்டராக இருந்தது. 1982-83ல் 10,490 லிட்டராகவும்தற்போதைய தின சரி சராசரி 12,000 லிட்டராக வும் உயர்ந்துள்ளது.

உற்பத்தியாளர் சங்கங்களுக்கு லிட்டர் 1க்கு ரூ. 1.70 கொள் முதல் விலையாகக் கொடுக்கப் பட்டது. 1982-83ல் ரூ. 2.35 ஆகவும் 1983-84ல் ரூ. 2.50ஆக வும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விலை நிரக்கு பசுவின் பாலுக்கு மாகாண அளவில் கொடுக்கப்படும் விலை நிரக்கில் ஒப்பிடும்போது அதிக விலையா கும். இது தவிர ஒவ்வொரு ஆண் டின் இறுதியிலும் இலாபத்தின் அடிப்படையில் லிட்டருக்கு 2 காசு முதல் 5 காசு வரையிலும் ஊக்கவிலை வழங்கப்படுகிறது.

கொள்முதல் செய்யப்படும் பால் ஒன்றியத்தில் இருக்கும் இயந்திரங்கள் மூலம் பதனம் செய்யப்படுகிறது. அதாவது பால் முதலில் பரிசோதனை செய் யப்பட்டு பிறகு டிகிரியில் சூடாக் கப்படுகிறது. இதனால் பாலில் உள்ள கிருமிகள் கொல்லப்படு



'கேன்' களைச் சுத்தம் செய்தல்



பாலாடை தயார் செய்தல்

வழங்கப்பட்டு வருகிறது. இவை தவிர அண்டை மாநிலமான கேரளத்திற்கும் தினசரி 3600 லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

மாநகரங்களில் செயல்படும் மிகப் பெரிய பால்பண்ணைக்கு நிகராக இவ்வொன்றியமும் நறுமணப் பால் தயார் செய்து வருகிறது.

பால்கோவா நகர மக்களை வெகுவாரியாகக் கவர்ந்துள்ளதால் அதிகமான விற்பனை உள்ளது. நகர மக்களுக்குக் கலப்படம் இல்லாத நெய் வழங்கும் எண்ணத்துடன் சேலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து வரவழைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

பால் உற்பத்தியாளர்களுக்குத் தரமான கால்நடைக் கலப்புத் தீவனம் கிடைக்க வேண்டிய வகைக்கு, தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் சென்னை மற்றும் ஈரோடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ஆகியவைகளிடம்

கின்றன. அதன் பிறகு குளிரவைக்கப்படுகிறது. இதனால் இப்பாலை பல மணி நேரங்களுக்குக் கெட்டுப்போகாமல் பாதுகாக்க முடியும். குளிர்விக்கப்பட்ட பால், அதற்கென நிறுவப்பட்டுள்ள ஸ்டீல் தொட்டிகளில் (இன்சுலேட்டட் டேங்கர்) நிரப்பப்பட்டு, தேவையான நேரங்களில் மக்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த ஒன்றியத்தில் பாலில் இருந்து வெண்ணெய் பிரிக்கப்படுவதில்லை. கொள்முதல் செய்யப்படும் பால் முழுமையாகவே வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆதலால் வெண்ணெய் மற்றும் நெய் இதர கூட்டுறவு ஒன்றியங்களில் இருந்து வரவழைத்து விநியோகம் செய்யப்படுகிறது.

தற்போதுள்ள பால் பதனிடும் நிலையத்தின் சக்தியை அதிகரிப்பதற்கென தமிழக அரசு ரூ.7.00 இலட்சம் நிதி உதவி செய்துள்ளது. இதனால் பால் பதனிடும் திறனை மணிக்கு 2000 லிட்டரிலிருந்து மணிக்கு 4000 லிட்டர் வரை அதிகரிக்கப்படும். இப்பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது.

மாவட்டத்தின் கிராமங்கள் அளவில் பால் விநியோகம் அந்தந்த கிராமங்களில் உள்ள பிரதமச் சங்கங்களால் செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தின் முக்கிய இடங்களாக நாகர்கோவில், கன்னியாகுமரி, தக்கலை, மார்த்தாண்டம் போன்ற இடங்களில் இந்த ஒன்றியம் பால் விநியோகம் செய்து வருகிறது. நாகர்கோவில் நகரத்தில் வசக்

கிள் மூலமும், 'பூத்து'க்கள் மூலமும் ரொக்கத்துக்கும், கூப்பன் மற்றும் அட்டைகளுக்குப் பால்

பால் பதனம் செய்யப்படுகிறது.







# கன்னியாகுமரி பகவதி ஆலயம்

கடலோரத்தில் நாற்புறமும் மதில்களால் சூழப்பட்டு செவ்வக வடிவத்தில் குமரியன்னை பகவதியின் திருக்கோயில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கி தவக்கோலத்தில் தேவியின் திருவுருவம் அமைந்துள்ளது. கரையில் இருந்து 1600 அடி தொலைவில் அலைகடலின் நடுவே உள்ள "ஸ்ரீ பாத பாறையில்" தான், முன்பு பகவதி கோயில் இருந்ததென்றும், அக்கோயிலைக் கடல் கொண்டதால், தற்போது அமைந்துள்ள கோயில் கட்டப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இங்கு ஆண்டுதோறும் வைகாசி மாதமும் புரட்டாசி மாதமும் திருவிழா நடைபெறுகிறது. சித்திரா பௌர்ணமி நாளன்று குமரிக் கடலாடுதலை கிடைத்தற்கரிய அரும்பேறாகப் பக்தர்கள் கருதுகிறார்கள்.

ம

இருந்து கால்நடைக் கலப்புத் தீவனம் வாங்கி விநியோகிக்கப்படுகிறது. கால்நடை கலப்புத் தீவன விநியோகம் அதிகரித்துள்ளது.

நடமாடும் கால்நடை மருத்துவப்பிரிவு 20.6.1978 அன்று துவக்கப்பட்டு நல்ல நிலைமையில் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. உதவி கால்நடை மருத்துவர் ஒருவர் வாரம் ஒருமுறை அவரது பயணத்திட்டப்படி சங்கங்களுக்குச் சென்று கால்நடைகளுக்கு மருத்துவம் செய்து வருகிறார். தமிழக அரசால் இம்மாவட்டத்தில் பால் கொள்முதல் குழு 28.5.1980 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது

ஒன்றியத்தில் உபரிப் பால் திருவனந்தபுரம் மில்மாவிற்கும் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துக்கும் அனுப்பப்பட்டு உபரிகாலப் பிரச்னைகள் சமாளிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டில் மின்வெட்டு அதிக அளவில் இருந்ததால் அதைச் சமாளிக்க ஒரு ஜெனரேட்டர் வாங்க வேண்டிய கட்டாய நிலைமை உருவாகியது. ஆகவே உடனடியாக பால் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று ஜெனரேட்டர் வாங்கி பொருத்தப்பட்டு அது செயல்பட்டு வருகிறது. 'ஜெனரேட்டர்' வாங்கிய காரணத்தால் பிரதம சங்கங்கள் வழங்கிய பாலைக் கொள்முதல் செய்து கெடாமல் பாதுகாக்க முடிந்து வருகிறது.

மார்த்தாண்டத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான கட்டட வேலைகள் முடிவடைந்துள்ளன. இந்நிலையத்திற்காக மின் இணைப்பு கிடைப்பதற்குச் சம்பந்தப்பட்ட பொறியாளரைக் கேட்கப்பட்டுள்ளது. மின் சக்தி கிடைக்கப்பெற்றவுடன் இயந்திரங்கள் நிறுவப்பட்டு பால் குளிரூட்டும் நிலைய வேலை நடைபெற உள்ளது. இந்நிலையத்தில் நாள் ஒன்றுக்கு 3000 லிட்டர் பால் குளிரூட்டம் செய்ய வழிவகை உள்ளது.

விரிவாக்குத் திட்டத்தின் கீழ் பாலிதீன் பைகளில் பாலை நிரப்பி நாகர்கோவில் நகரங்களில் பால் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பால் விநியோகம் அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவுப் பால் விநியோக ஒன்றியமாக இருந்த இவ்வொன்றியம் 16.9.1983 முதல் உற்பத்தியாளர் ஒன்றியமாக மாற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரைப் பெருந்தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

பதன நிலையத்தின் திறனைவுக்கு மேல் உற்பத்தி செய்து பாலைப் பக்குவப்படுத்திய வகையில் 1969-70ஆம் ஆண்டில் தமிழகத்தில் முதல் இடத்தையும் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தையும் இவ்வொன்றியம் வகிக்கிறது.

1973-74ஆம் ஆண்டில் விருதுநகர் சரகத்திலும், 1978-79ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலும், சிறந்த ஒன்றியமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கேடயம் பெற்றுள்ளது.

# கண்புரை நோயாளிகளுக்கு குருதி இன ஆய்வும் மின் பகுப்பாய்வும்


டாக்டர்
**எஸ். சத்திய வாகீசன்**
(சென்னை மருத்துவக் கல்லூரி
கண் நோய் இயல் தலைமைப் பேராசிரியர்
கண் மருத்துவமனைக் கண்காணிப்பாளர்)

டாக்டர்
**எஸ். அப்துல் கரிம்**
(கண் மருத்துவமனை
கண் நோயியல்
உதவிப் பேராசிரியர்)

**கே. அசோக்**
(கண் மருத்துவமனை
உயிர் வேதியியல் வல்லுநர்)


பல்வேறு நோய்களில் குருதி இனங்களின் முக்கியத்துவம் பற்றி பன்னெடுங்காலமாக விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. குருதி இனம் 'ஏ' ஐச் சேர்ந்த நோயாளிகள், கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளும்போது அவர்கள் எளிதில் குருதி கட்டிப் போகிற நோய்க்கு ஆளாகிறார்கள். குருதி இனம் 'ஓ' வைச் சேர்ந்த நோயாளிகளுக்கு சிறு குடலில் புண்வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது. குருதி இனம் 'பி' ஐச் சேர்ந்த நோயாளிகளைப் பெரியம்மை கடுமையாகப் பாதிக்காது. ஆனால், குருதி இனம் 'ஏ' ஐச் சேர்ந்த நோயாளிகளைப் பெரியம்மை, கடுமையாகப் பாதிக்கும். பெரியம்மை நோய்க் கிருமிகளில் ('ஏ' இன எதிர்ப்பாற்றலால் உண்டாக்கும் அணுக்கள் (antigen) இருப்பதால் குருதி இனம் 'ஏ' ஐச் சேர்ந்த நோயாளிகளைப் பெரியம்மை கடுமையாகப் பாதிக்கிறது என்று விளக்கப்படுகிறது. குருதி இனம் 'பி' ஐச் சேர்ந்த நோயாளிகளுக்கு ஏற்கனவே எதிர்ப்பாற்றல் அணுக்கள் இருப்பதால் நோய் அவர்களை அதிகமாகத் தாக்குவதில்லை. குருதி இனம் 'ஏ' ஐச் சேர்ந்த நோயாளிகளுக்கு இத்தகைய எதிர்ப்பாற்றல் அணுக்கள் இல்லாததால் அவர்கள் நோயினால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய முக்கியமான கருத்துக்களைக் கருத்தில் கொண்டு 'கண் புரை நோயாளிகளுக்கு குருதி இன ஆய்வு—மின் பகுப்பாய்வு' பற்றிய அடிப்படை ஆராய்ச்சியை நாங்கள் நடத்தியுள்ளோம்.

**கண்புரை நோய்க் கட்டுப்பாடும் முறையும்**

சென்னை அரசினர் கண் மருத்துவமனையில் கண் புரை நோய் அறுவைச் சிகிச்சைக்காகச் சேர்ந்துள்ள பல்வேறு சமூகப் பொருளாதாரத் தொகுதிகளைச் சேர்ந்த நோயாளிகளிடையே இந்த ஆய்வு நடத்தப்பட்டது. முதுமையில் ஏற்படும் கண்புரை நோய் பற்றி மட்டுமே ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்பட்ட கண்புரை நோயாளிகளின் எண்ணிக்கை 450 ஆகும். புரை நோய்க் கட்டுப்பாடு செய்யப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 750 ஆகும். கண் புரை நோயாளிகள் எந்தக் குருதி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று முதலில் அறியப்பட்டது. புரதச்சத்து பற்றிய நோயாளிகளில், புரை நோயல்லாத வேறு பல காரணங்களுக்காக அரசினர் பொது மருத்துவமனையில் குருதி இனம் கண்டறியப்பட்ட நோயாளிகளும் அடங்குவர். அவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 750 ஆகும். இது தவிர, கண்புரை நோய் அல்லாத வேறு நோய்களுக்காக, அதாவது விழிவெண்படலத்தில் அந்நியப் பொருளினால் ஏற்படும் நோய், விழிவெண்படலப் புண் நோய், கண் விழிவிரைப்பு நோய் ஆகியவற்றிற்காக அரசினர் கண் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு மின்பகுப்பாய்வும் புரதச்சத்துக்கான நிணநீர்ப்பகுப்பாய்வும் செய்யப்பட்டன.

**பகுப்பாய்வின் முடிவுகள்:**

புரைநோய்க் கட்டுப்பாடு செய்யப்பட்ட நோயாளிகள், புரை நோயாளிகள் ஆகியோரின் குருதி இன விவரம்

| குருதி இனம் | புரைநோய்க் கட்டுப்பாடு செய்யப்பட்ட நோயாளிகள் (சதவிகிதத்தில்) | புரை நோயாளிகள் எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|---|
| ஏ | 23 | 76 | 17 |
| பி | 32 | 152 | 34 |
| ஓ | 39 | 212 | 47 |
| ஏபி | 6 | 10 | 2 |

குருதி இனம் ஏ, ஏபி நோயாளிகளிடையே கண்புரைநோய் குறைவாகக் காணப்பட்டது. குருதி இனம் 'ஓ' நோயாளிகளிடையே புரைநோய் அதிகமாகக் காணப்பட்டது. குருதி இனம் 'பி' நோயாளிகளில், புரை நோயாளிகளின் சதவிகிதமும் கட்டுப்பாடு செய்யப்பட்ட புரைநோயாளிகளின் சதவிகிதமும் பெரும்பாலும் ஒன்றாகவேயுள்ளன. நமக்குத் தெரிந்தவரையில் இதுதான் முதல் முறையாகச் செய்யப்பட்ட ஆய்வாகும். புரைநோய் குருதி இனம் 'ஓ' வைச் சேர்ந்தவர்களுக்கு அதிகமாக வருகிறது என்பது இந்த ஆய்விலிருந்து கண்டறியப்பட்ட முக்கிய முடிவாகும்.

**புரதச் சத்திற்கான நிணநீர்-ஆய்வு மின்பகுப்பாய்வு:**

புரைநோய் ஏற்படுவதற்கு, கண் பாப்பாவில் ஏற்படும் புரதச் சத்து மாறுதல்கள் முக்கிய காரணமாகும். கண் பாப்பா இரத்த ஓட்டம் பெறாத உயிருள்ள திசு என்பதால், அது பெரிதும் உயிர்-வேதியியல் முக்கியத்துவம் பெற்றதாகும். கண்புரை நோய் ஏற்படும்போது கரைக்க இயலாத புரதச் சத்துக்கள் அதிகரிப்பது கண்டறியப்பட்டுள்ளது. கண் பாப்பாவிலுள்ள புரதச்சத்துக்கள் பல அமினோ அமிலங்களாலானவை என்றும் தெரிய வந்துள்ளது. இவற்றின் அடிப்படையில் கண்புரை நோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையைப் பற்றி ஆய்வு செய்ய விரும்பினோம்.

எங்கள் ஆய்வு நிணநீரிலுள்ள புரதச் சத்து எவ்வளவு, கண் திசு குவியாடியிலுள்ள புரதச் சத்து மாறுதல்கள் எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை மையமாகக் கொண்டிருந்தது.

புரைநோய்க் கட்டுப்பாடு செய்யப்பட்ட சுமார் 56 நோயாளிகள் மீது இந்த ஆய்வு நடத்தப்பட்டதில் இயல்பான அளவில் ஆல்புமின் உள்ள மொத்தத்தில் குறைந்த புரதச் சத்தும் குறைந்த குளோபுலினும் உள்ள நோயாளிகள் இருப்பது தெரிகிறது.

சில நோயாளிகள் இயல்பான அளவில் ஆல்புமினும் மொத்தப் புரதச் சத்தும் பெற்றுள்ளார்கள் எனத் தெரிகிறது. குளோபுலின் சத்தில் இயல்பான குறைந்த அளவைக் கூட குளோபுலின் அடையவில்லை. மின் பகுப்பாய்வுக்குள்ளான நோயாளிகளில் பெரும்பாலோருக்கு ஆல்பா 1, பீட்டாவை விட ஆல்பா 2 அதிகரித்திருந்தது தெரிந்தது.




**நிணநீர்ப் புரதச் சத்து:**

| பெயர் | மொத்தத்தில் புரதச்சத்து | ஆல்புமின் | குளோபுலின் |
|---|---|---|---|
| இயல்பான அளவு | 6 3-7.9 | 3.7-5.3 | 1.8-3.6 |
| வீரப்பன் | 5.3 | 4.8 | 1.5 |
| இராஜப்பா | 5.4 | 4.4 | 1.0 |
| சுப்ரமணி | 6 | 4.5 | 1.5 |
| பாக்கியம் | 5.9 | 4.8 | 1.1 |
| அங்காளம்மாள் | 5.5 | 4.9 | 0.6 |

மொத்தத்தில் நிணநீர் புரதச் சத்து, இயல்பான அளவுக்குள்ளும், குளோபுலின், இயல்பான அளவை விடக் குறைந்தும் ஆல்புமின் இயல்பான அளவிலும் உள்ள நோயாளிகள்

| பெயர் | மொத்தத்தில் புரதச்சத்து | ஆல்புமின் | குளோபுலின் |
|---|---|---|---|
| பியாரிப் | 6.4 | 5. | 1. |
| கோவிந்தம்மாள் | 6.1 | 5 | 1.1 |
| ஏகாம்பரம் | 6.4 | 5.1 | 1.3 |

நம் உடலில் பொதுவாக வந்து சேரும் புரதச்சத்து உடலின் ஒவ்வொரு உறுப்பையும் வந்தடைகிறது. இவ்வாறாக, இப்புரதச் சத்து கண்ணிற்கும் கண்திசு குவியாடிக்கும் வந்து சேருகிறது. புரதப் பொருள் உட்கொள்வது குறைந்தால், நிணநீர் புரதச் சத்தின் அளவு குறையும். இது கண் திசு குவியாடியின் புரதச்சத்து அளவையும் 'அமினோ' அமில அளவையும் நேரிடையாகப் பாதிக்கும். இந்தப் பாதிப்பின் காரணமாக இயல்பான புரதச்சத்து அமைப்பில் தொந்தரவுகளை உண்டாக்கும். இதன் காரணமாக நீரில் கரையாத புரதச்சத்தின் அளவு கண் திசு குவியாடியில் அதிகரித்து, அதன் காரணமாக புரை உண்டாவதற்கு வழிகோலும். நாங்கள் நடத்திய ஆய்வுகளில் சில நோயாளிகளுக்கு 'ஆல்புமின்' அளவும் மொத்தப் புரதச் சத்து அளவும் இயல்பான அளவில் இருந்த போதிலும், 'குளோபுலின்' அளவு குறைந்திருந்தது தெரிந்தது. ஆல்பா 2ஐ விட ஆல்பா 1, பீட்டா பெருமளவிற்குக் குறைந்திருந்தது. எனவே, அவைகளில் இருந்த அமினோ அமிலங்கள் கரையாத புரதச்சத்து அதிகமாவதைத் தடுப்பதில் ஓரளவுக்குத் தொடர்புடையதாக இருக்கலாம். ஏனெனில், இவை கொலஸ்ட்ரால் பஸ்போலிபிட்ஸ் போன்ற நிலையான கூறுகளிலிருந்து இயல்பான அளவுக்குச் செறிவு பெற்றிருந்தன.

### இதிலிருந்து அறியும் முடிவு

தற்போதைய ஆய்விலிருந்து பின்வரும் முடிவுகள் கிடைத்துள்ளன.

1. மொத்தத்தில் குறைந்த நிணநீர் புரதச்சத்து
2. குளோபுலின் அளவு குறைதல்
3. குளோபுலின் மொத்த அளவு குறைதல். (அளவு ஆய்வுப்படி)
4. ஆல்பா 1, பீட்டா அளவு மிகக் குறைந்திருத்தல்
5. ஆல்பா 2 அளவும் குறைந்திருந்தாலும் ஆல்பா 1, பீட்டாவை விடச் சற்று அதிகமாயிருத்தல்.

வயதானவர்களுக்கு ஏற்படும் புரை நோயைத் தடுப்பதற்கான முக்கியத் திறவுகோல் கிடைத்துவிட்டது என நாம் நம்பலாம். புரதச்சத்தினை இயல்பான அளவுக்குக் கொண்டு வருவதன் மூலமே நாம் புரை நோயைத் தடுக்க முடியும்.

- குளோபுலின் மொத்த அளவினை அதிகரிப்பதற்கான முறைகள்.
- ஆல்பா 1, பீட்டா, குளோபுலின் இவற்றை அதிகரித்தல்.
- ஆல்பா 2ஐ இயல்பான அளவிற்குக் குறைத்தல்.

இவற்றைச் செய்வதற்கான வழிவகைகள் யாவை?

- புரதப்பொருள் உட்கொள்ளும் அளவினை மாற்றுவதன் மூலமாகவா?
- புரதப்பொருள் உட்கொள்ளும் பழக்கத்தை மாற்றுவதன் மூலமாகவா?
- புரதப்பொருள் சத்தினை நரம்பு வழியாகச் செலுத்தியோ வேறு வகையில் செலுத்துவதன் மூலமாகவா?
- புரதச்சத்து தேவை என்றால், அமினோ அமிலங்கள் தேவை என்றுதான் பொருள். அதற்கு பால், பருப்பு, இறைச்சி, முட்டை, சோயா மொச்சை போன்று அதிகப் புரதச் சத்து அடங்கிய உணவு வகைகளை உட்கொள்வது நல்லது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் கண்புரை நோயைத் தடுப்பதில் பெரும் பங்கு வகிக்க முடியுமென்று நாங்கள் நம்புகிறோம்.**

எனவே ஏழை எளிய மக்களில் நாற்பது வயது முதல் அறுபது வயது வரை உள்ள வயதுத் தொகுதியினருக்குக் கண்புரை நோய் ஏற்படுவதைத் தடுக்கும் ஓர் ஏற்பாடாக இச் சத்துணவுத் திட்டத்தை அவர்களுக்கு நீட்டிக்கலாம்.



## பரிசு பெற்ற நாடகத்துக்குப் பாராட்டு!

அனைத்திந்திய அரசு அலுவலர்களுக்கான நாடகப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழக அரசு தலைமைச் செயலக அலுவலர்களுக்கும், மாநில அளவில் பங்கேற்றவர்களுக்கும் தமிழ்நாடு அரசு செய்தி-சுற்றுலா (தமிழ்ப்) பண்பாட்டுத்துறை சார்பில் பாராட்டி, 27-12-83 அன்று கலைவாணர் அரங்கில் நடந்த விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

அனைத்திந்திய நாடகப் போட்டியில் பரிசு பெற்ற சிசில் பி. கிரியேஷன்ஸ் நாடகக் குழுவினரின் "மண்புழுக்கள்" என்ற நாடக நூலை வெளியிட்டதுடன், அந்த நாடகத்தைப் பாராட்டி அதன் இயக்குநர் திரு. ஏ. அருணாசலத்திற்கு விழாவில கலந்து கொண்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் கேடயம் வழங்கினார்.

இந்த விழாவிற்குத் தமிழ்ப் பழங்கலை இயக்கக இயக்குநர் திரு. திருக்குறளார் வீ. முனிசாமி தலைமை வகித்தார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் நடிகமணி திரு. டி. வி. நாராயணசாமி அனைவரையும் வரவேற்றார். செய்தி, சுற்றுலா மற்றும் (தமிழ்ப்) பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. ஏ. பி. முத்துசாமி, இ.ஆ.ப. நன்றி கூறினார்.





## முட்டுக்காட்டில் உல்லாசப்படகு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காடு என்னும் இடத்தில் படகுஇல்லம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் போகும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ளது முட்டுக்காடு. தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்களால் 8-1-84 அன்று இந்தப் படகு இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விழாவைத் தொடங்கிவைத்து தலைமைச் செயலர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "முட்டுக்காட்டில் உள்ள இந்தப் படகுத்துறை, சென்னை நகர மக்களையும், உல்லாசப் பயணிகளையும் கவரக்கூடிய இடமாகும் சில நாட்களுக்கு முன் நான் இந்த இடத்திற்கு வந்தபோது, இந்த இடத்தில் சுற்றுலா மையம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இருப்பதை அறிந்தேன். அதை அலுவலர்களிடம் எடுத்துரைத்தேன். அவர்கள் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் இந்தப் படகு இல்லத்தை அமைத்துள்ளனர்."

விழாவிற்கு வந்திருந்தோரைச் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. என். கோவிந்தன், இ.ஆ.ப. வரவேற்றார்.

விழாவில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு எம். பாலசுப்பிரமணியம், செய்தி சுற்றுலா மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறைச் செயலர் திரு ஏ. பி. முத்துசாமி, இ.ஆ.ப., வணிகவரி மற்றும் அறநிலையத்துறைச் செயலர் திரு. அர். சண்முக சிகாமணி இ.ஆ.ப., சுற்றுலாத் துறை இயக்குநர் திரு ஆர். கிருபாகரன் இ.ஆ.ப., கப்பல் படைக் கமாண்டர் கார்வே, மேஜர் ஜெனரல் பச்சிடார்சிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு அமைந்துள்ள படகுத் துறை பக்கிங்காம் கால்வாய் கடலில் சேரும் உப்பங்கழிப்பகுதியில் உள்ளது. இங்கு 4 அடிமுதல் 8 அடி வரை தண்ணீரின் ஆழம் உள்ளது.

கடலோரக் காவல் படையினர் இந்த இடத்தில் தண்ணீர் நிறைவது பற்றியும், ஆழம் பற்றியும், உப்பங்கழி நெடுகிலும் ஆய்வு நடத்திப் படகுகள் விடவும் தண்ணீரில் விளையாட்டுக்கள் நடத்தவும் ஏற்ற இடம் என்று தெரிவித்துள்ளனர்.

மோட்டார்படகுகள், துருப்புப் படகுகள், காலில் மிதித்து பெடல் செய்யும் பைபர்கிளாஸ் படகுகள் ஆகியவை இந்தப் படகுத் துறையில் விடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு படகிலும் பாதுகாப்பு ரப்பர் உறைகள் உள்ளன. உல்லாசமாகப் படகில் சவாரி செய்ய ஒரு மணி நேரத்திற்கு 15 பேர் செல்லக்கூடிய இயந்திரப் படகிற்கு ரூ. 30 கட்டணமாகவும், இருவர் செல்லக் கூடிய பெடல் படகிற்கு ரூ. 6 கட்டணமாகவும், நால்வர் செல்லக்கூடிய துடுப்புப் படகிற்கு ரூ. 5 கட்டணமாகவும் வசூலிக்கப்படுகிறது. படகில் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை செல்லலாம். எல்லா நாட்களும் படகில்சவாரி செய்யலாம்.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே உதகை, ஏர்க்காடு ஆகிய இடங்களில் படகுத் துறைகள் உள்ளன. தற்பொழுது இங்கு அமைந்துள்ள படகுத்துறை மூன்றாவது ஆகும். இந்தத் துறையை அமைக்க ரூ. 50 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூ. 5 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்படவும் உளளது.

இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் சிற்றுண்டித்தேவைகளைப் பூர்த்தி செய்ய வறுத்த மீன், இறால், பிஸ்கட், காபி, தேநீர், குளிர்பானங்கள் விற்கப்படுகின்றன.

சுற்றுலாப் பயணிகளை இந்தப் படகு இல்லம் வெகுவாகக்கவரும் என்பதில் ஐயமில்லை.

**அ. மருது**





## நகரின் தூய்மைக்கு நல்குவோம் ஒத்துழைப்பு!

சென்னை மாநகரின் தூய்மைக்கும் அழகுக்கும் தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் அயராது பணியாற்றி வருகின்றது. சென்னை நகரில் துப்புரவு இயக்கப்பணி தொடர்ந்து நடந்து வருகிறது. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இந்தப் பணியை நேரில் சென்று கவனிக்கிறார். ஆங்காங்கே மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டு உடனுக்குடன் பரிகாரம் காணுகிறார்.

1984 ஜனவரி 8ந் தேதி காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை ஆயிரம்விளக்கு மாடல் பள்ளிசாலை, காதர்நாவஸ்கான் சாலை, 197வது வட்டம் ராமன் தெரு, குளத் தெரு, இராயப் பேட்டை 120வது வட்டம் கணபதி காலனி, முத்து தெரு, சீனிவாச பெருமாள் தெரு, தாண்டவராயன் தெரு ஆகிய பகுதிகளுக்கு மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சென்று, நடைபெறும் துப்புரவுப் பணிகளைத் துரிதப்படுத்தினார்.

மாநகராட்சித் துணைஆணையர் திரு. ஜனார்த்தனன், உதவி ஆணையர் திரு. எஸ். ரகுபதி மற்றும் பெருநகர் குடிநீர் வழங்கு துறை அலுவலர்கள் அமைச்சருடன் சென்றனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:'' இந்தத் துப்புரவுப் பணிஇயக்கம் சென்னைநகரம்முழுவதும முனைப்பாக நடந்து வருகிறது. பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். தங்கள் தங்கள் பகுதிகளைச் சுத்தமாக வைத்து சுகாதாரத்தைப் பேணுவது அவசியம்''.



## ஏழை மீனவர்களுக்கு வீடுகள்

42 கடற்கரை மீனவ கிராமங்கள் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில், 41 கடலோர மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் 10 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு உற்பத்தி மற்றும் விற்பனைக் கூட்டுறவுச் சங்கமும், அவற்றை இணைத்து ஒரு மீனவர் கூட்டுறவுச் சம்மேளனமும் செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் ஏழை மீனவர்களுக்குப் பின் வரும் கிராமங்களில் வீடுகள் கட்டப்பட்டு இலவசமாக வழங்கப் பட்டுள்ளன.

மேல்மனைக்குடி-100, சின்ன முட்டம் 160, பூத்துறை 50, தூத்தூர் 50, இணையம் 117, குறும்பனை 50, கடியப் பட்டணம் 50 இணையம்புத்தன் துறை 22, குளச்சல் 50, புத்தன் துறை 50, கேசவன்புத்தன் துறை 50, பொழிக்கரை 50, பெரியவிளை 110, ராமன்துறை 33, முள்ளூர்துறை 74, நீரோடி 11, மார்த்தாண்டன்துறை 4, வள்ளவிளை 24, பள்ளம் 30, நடுத்துறை 80, இராஜாக்க மங்கலம் 60, பெரியகாடு 30.





கன்னியாகுமரிக் காட்சிகள்

தென்னையிலிருந்து கயிறு திரிக்கும் தொழிற் கூடம்

கலைவாணர் திருவுருவச் சிலை

நேசமணியின் திருவுருவச் சிலை.

கன்னியாகுமரி இரயில்வே நிலையம்

கனனியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் ஒரு தோற்றம்.

சுசீந்திரம் தாணுமாலயன் திருக்கோயிலில் உள்ள இசைத் தூண்கள்

திற்பரப்பு அருவியின் எழில்மிகு தோற்றம்.

சின்னமுட்டத்தின் ஓர் அழகிய தோற்றம்

# ஒருமைப்பாட்டுக்கு ஓர் மாவட்டம்

தொல்காப்பியப் பாயிரத்தில் இருந்து இக்கால இலக்கியம் வரை வண்டமிழ்ப் புலவர்களால் தன்துறைக் குமரியென்று விதந்து பாராட்டப்பட்டதும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான கன்னியாகுமரி மாவட்டம், முன்னாள் திருவிதாங்கூர் — கொச்சி மாநிலத்தில் இருந்து பிரிந்து தமிழ் நாட்டுடன் இணைந்து ஏறத்தாழ 27 ஆண்டுகள் ஆகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கோடியில் முக்கடலால் சூழப்பட்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்களைத் தாங்கி இலங்கும் இம்மாவட்டம், பல்வேறு தனிச் சிறப்புகளையுடைய மாவட்டமாகும். உருவில் சிறியதேயாயினும், இயற்கையெழிலிலும், மழை வளத்திலும் கல்வி வளர்ச்சியிலும் ஏனைய மாவட்டங்களுக்கு முன்னோடியாகத் திகழும் மாவட்டம், இக்குமரி மாவட்டமாகும்.

அன்னை பராசக்தி இம்மாவட்டத்தில் ஆரல்வாய் மொழியில் அங்கயற்கண்ணியாகவும் கன்னியாகுமரியில் கன்னித் தெய்வமாகவும், மண்டைக்காட்டில் பகவதியாகவும், கொல்லங்கோட்டில் மாகாளி அம்மனாகவும் அடியார்க்குக் காட்சி தந்து அருளாட்சி புரிகிறாள். வானிடம் உறவு கொண்டாடும் மலைகள், வான்பொய்ப்பினும் தான் பொய்யாத வற்றாத நீராறுகள், நெஞ்சையள்ளும் நீண்ட கடற்கரைப் பகுதிகள், வனப்புமிக்க காடுகள், வளங்கொழிக்கும் பசுமையான வயல்கள், இழுமென இழிதரும் அருவிகள், காண்போரைச் கண்டியிழுக்கும் கவின்மிகு கலைச் செல்வங்கள் அனைத்தும் இம்மாவட்டத்தில் உண்டு. இவைகளைக் கண்டு களிகூர, நாடோறும் சுற்றுப் பயணிகள் எண்ணற்றோர் வந்த வண்ணம் உள்ளனர்.

அருந்தமிழ் வளர்த்த அன்னை ஔவை மூதாட்டிக்கு இம்மாவட்டத்தில் அன்றி வேறெங்கும் கோயில் கிடையாது.

இம்மாவட்டத்தில் தோவாளை, அகஸ்தீஸ்வரம் வட்டங்களை உள்ளடக்கிய பகுதி நாஞ்சில் நாடு என்று வழங்கப்படுகிறது. இப்பகுதிக்கு நாஞ்சில்நாடு என்று பெயர் வரக்காரணம், அரிசி கேட்ட ஔவை மூதாட்டிக்கு யானையைப் பரிசிலாகத் தந்த நாஞ்சில் வளவன் என்ற புரவலன் ஆண்ட நாடானதால் அப்பெயர் வந்தது என்று ஒரு சாரார் கூறுவர். ஏர்ப்பின்னதே உலகம் என்பது பொய்யாமொழி-நாஞ்சில் என்ற சொல்லுக்கு கலப்பை என்னும் பொருள் கொண்டு ஏரின் உதவியால் செய்யப்படும் உழவுத் தொழில் மிகுந்த நாடென்பதால் இப்பெயர் வந்திருக்கலாம் என்று வேறு சிலர் கருதுகின்றனர். நாஞ்சில் என்பதற்கு மதிலுறுப்பு எனும் வேறொரு பொருளுமுண்டு. இயற்கை அரண் ஆன குன்றும், கடலும் சூழப்படடிருப்பதால் இப்பகுதிக்கு நாஞ்சில்நாடு என்று பெயர் வந்திருக்கலாம் என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. நாஞ்சிவல்லது படையும் அறியார் என்று புறநானூறு கூறுகிறது. நாஞ்சில் நாட்டின் நால்வகை வளங்களையும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தனது நாடக நூலான மனோன்மணியத்தில் நயம்படச் சித்திரித்துள்ளார். இம்மாவட்டத்தின் தென்கோடியில் ஓடும் பழையாறு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததாக வரலாற்று அறிஞர்களால் பேசப்படும் குமரி நாட்டில் விளங்கிய பஃறுளி ஆற்றின் எச்சம் என்றே கருதப்படுகிறது.

இம்மாவட்டம் தந்த, தொல்காப்பியர் காலத்து வாழ்ந்த அதங்கோட்டு ஆசான், தக்கலையின் தவஞானி பீருமுகம்மது அப்பா என்பவர்களைத் தவிர ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ஆராய்ச்சிப் பேரறிஞர் கே. என். சிவராசப் பிள்ளை, சதாவதானி செய்குதம்பிப் பாவலர், நகைச்சுவை மன்னர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், நாடகக் கலைமாமணிகளான டி. கே. எஸ். சகோதரர்கள், இசைப் பேரறிஞர் இலக்குமணப் பிள்ளை என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்த மாவட்டத்தில் முக்கடல் சங்கமம் மட்டும் அல்லாமல் பல்வேறு சமயங்களின் சங்கமும் உண்டு. இந்து, கிறித்தவ, இஸ்லாம் சமயத்தினர் இங்கு, சாதி, சமய வேறுபாடின்றி ஒருமித்து வாழ்கிறார்கள். குமரி, சுசீந்திரக் கோயில்களும், புனித சவேரியாரின் புகழ்மிகு திருச்சபையும், தக்கலையில் உள்ள பள்ளிவாசலும் இம்மாவட்டத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஓர் அரிய எடுத்துக்காட்டாக விளங்குகிறது.





முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# நலிந்தவர் நல்வாழ்வு பெற...

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களை மேலேற்றவும், சமுதாயத்தில் நலிந்தவர்களுக்கு நல்வாழ்வு அளித்திடவும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உதவி புரிகின்றன. அந்த வகையில் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியும் ஏழை எளியவர்களுக்குக் கடனுதவி வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் 31, 32வது கிளைகளின் தொடக்க விழாக்கள் 23.12.83, 27.12.83 ஆகிய நாட்களில் அண்ணாநகர் மேற்கு விரிவாக்கத்திலும், பெரம்பூரிலும் நடந்தன.

இவ் வங்கியின் தனி அலுவலர் மற்றும் பொது மேலாளர் திரு. டி. ஆர். இராமமூர்த்தி அனைவரையும் வரவேற்றார். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. டி.எம். ஆறுமுகம் இ. ஆ. ப. தலைமை வகித்தார். இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு. கு. ஆளுடைய பிள்ளை இ.ஆ.ப. பாதுகாப்புப் பெட்டகப் பிரிவைத் தொடங்கி வைத்தார்.

வங்கிக் கிளையைத் தொடங்கி வைத்தும், நலிவுற்றோர்க்குக் கடனுதவி வழங்கியும் மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவு அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

விழாவில், நலிந்த பிரிவினர் இவருக்குச் சலவை வண்டி, நாற்காலிகளுக்கு ஒயர் பின்னுதல் ஆகியவற்றுக்குக் கடனுதவி வழங்கப்பட்டது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், டீக்கடை, ரெடிமேட் துணிக்கடை, சைக்கிள் கடை வைக்கவும், மூவருக்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டன. நால்வருக்கு நுகர்வோர் கடன்கள் தரப்பட்டன.

இவ்வங்கியின் பெரம்பூர் கிளைத் தொடக்க விழாவுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு டி.எம். ஆறுமுகம் இ.ஆ.ப. தலைமை வகித்தார். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஏ. எம். சுவாமிநாதன் இ.ஆ.ப. பாதுகாப்புப் பெட்டகப் பிரிவைத் தொடங்கிவைத்தார். தனி அலுவலர் மற்றும் பொது மேலாளர் திரு. டி. ஆர். இராமமூர்த்தி அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவு அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள், வங்கி கிளையைத் தொடங்கிவைத்தும், நலிந்த பிரிவினர்க்குக் கடனுதவிகள் வழங்கியும் சிறப்புரையாற்றினார்.

விழாவில் ஊறுகாய், அப்பளம் தயாரித்தல் ,ஒயர் பை செய்தல் ஆகியவற்றுக்கும், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சைக்கிள்கடை, தையற்கடை வைப்பதற்கும் கடனுதவிகள் வழங்கப்பட்டன.

—பி. வி. கிரி



# கால்நடை வளம்

கால்நடை பராமரிப்புத்துறையில் முக்கிய நோக்கம் கால்நடை உற்பத்தியினைப் பெருக்குவதாகும்.

கால்நடை, ஆடுகள், பன்றி, கோழி இவற்றை அறிவியல் முறையில் இனப்பெருக்கம் செய்தல், இனப்பெருக்கம் பால் உற்பத்தி அதிகரித்தல், முட்டை உற்பத்தி, சிகிச்சை செய்தல் ஆகிய பணிக்குக் கால்நடைகளின் உடல் நலம் மிகவும் முக்கியம், கால்நடைகளின் உடல் நலம் கவனிக்க வெக்கைநோய்த் தடுப்புத் திட்டம் கால்நடை மருத்துவப் பெருமனை கால்நடை மருந்தகங்கள் செயற்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் நாகர்கோவில் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. 12-5-82 முதல் தக்கலை கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் தனியாகச் செயற்படுகிறார். கால்நடைகளின் உடல் நலம் கவனிக்க, கால்நடை மருந்தகங்கள் பல இடங்களில் உள்ளன. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு நாகர்கோவிலில் உள்ளது.

கால்நடைகள் வளர்ச்சிக்குக் கேந்திர கிராமத் திட்டம் செயல்படுகிறது.

இனவிருத்தி, தீவனம், பராமரிப்பு நோய், தடுப்பு வழிகளில் நவீன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் கால்நடைகளின் தரத்தையும், உற்பத்தித் திறனையும் உயர்த்துவதே கேந்திர கிராமத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

ஒரு கேந்திர கிராமம் என்பது 1,000 பசுக்கள் அல்லது எருமைகளைக் கொண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட ஒரு கூட்டு அமைப்பாகும். உயர் இனக்கறவை இனங்களை கலப்பு இனவிருத்தி செய்தல் அல்லது சாதாரண நாட்டுப் பசுக்களை உயரினக் காளைகள் கொண்டு சேர்க்கை செய்து அவற்றின் தரத்தை உயர்த்துதல் ஆகியன மூலம் பால் உற்பத்தியையும், உழைக்கும் தரத்தையும் மேம்படுத்துதல் கேந்திரக் கிராமத் திட்டத்தின் முக்கிய பணியாக விளங்குகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் செயல் முறையில் கொண்டு வரப்பட்டுள்ளது. நாகர்கோவில், குழித்துறை, கொட்டாரம், திங்கள்சந்தை ஆகிய இடங்களிலுள்ள 4 கேந்திர கிராம நிலையங்கள் இம் மாவட்டத்தில் உள்ளன. ஒவ்வொரு கேந்திர கிராம நிலையத்தின் கட்டுப்பாட்டிலும் 10 கேந்திர கிராமக் கிளை நிலையங்கள் உள்ளன.

ஒவ்வொரு கிளை நிலையத்திலும் ஒரு கால்நடை ஆய்வாளர் உள்ளார். அவர் கேந்திர கிராம நிலையத்திலிருந்து கிடைக்கப் பெறும் விந்தைக் கொண்டு கிளை நிலையங்களுக்குக் கொண்டு வரப்படும் பசுக்கள், எருமைகளுக்குச் செயற்கை முறையில் கருவூட்டல் செய்கிறார். பிற்பகல் நேரங்களில் அவர் கிராமங்களுக்குச் சென்று செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டு பசுக்கள் சினையானதா என்றும் கன்று பிறப்பு பற்றியும் விசாரணை செய்து கணக்கிடுகிறார். மேலும் தடுப்பூசி போடுதல், ஆண்மை நீக்கம் பணி செயல்படுத்துகிறார்.

செயற்கை முறையில் பிறந்த சிறந்த கன்றுகள் தேர்ந்து எடுத்து அவற்றிற்கு மான்யம் கொடுக்கப்படுகிறது. கன்றுகள் பேரணியும் அவ்வப்போது நடத்தப்பட்டு சிறந்த பசுக்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

எழுபது சதவிகிதத்திற்கு அதிகமாக மாடுகள் செயற்கை முறையிலேயே இனவிருத்தி செய்யப்படுகின்றன. எனவே, இம் மாவட்டம் வெண்மைப்புரட்சிக்கு அடிகோலி வருகிறது.

கால்நடை பராமரிப்புத் துறையின் முக்கியப் பணிகளில் ஒன்று கோழிகள் வளர்ப்பு. அதிக அளவு முட்டைகளும், கோழி இறைச்சியும் உற்பத்தி செய்வதன் மூலம் நம் நாட்டில் புரதச்சத்து பற்றாக் குறையை எளிதில் நீக்க முடியும்.

இம்மாவட்டத்தில் கோழிகள் விரிவாக்க நிலையம் ஒன்று கொட்டாரத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு கோழி வளர்ப்புக் கழகத்தில் செயல்பட்டு வந்த இந்நிலையம் 1-9-76 முதல் கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்றப்பட்டு தற்போது நாகர்கோவில் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ளது.





## இறந்த மீனவர் குடும்பங்களுக்கு நிதி உதவி

மாமல்லபுரத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்ட மீன்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு க. கலைமணி அவர்கள், கடலில் மீன் பிடிக்கும் பொழுது இறந்துபட்ட மீனவர்களின் குடும்பங்களுக்குத் துயர் துடைப்பு நிதியை வழங்கினார்.

கடலில் மீன்பிடிக்கும் பொழுது இறந்து போகும் மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ. 5,000த்தை தமிழக அரசு நிவாரண உதவியாக வழங்குகின்றது. இதில் 2,000 ரூபாய் முதல் தவணையாகவும், மீதமுள்ள 3,000 ரூபாய் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதமும் வழங்கப்படுகிறது.

இந்த நிதி உதவியை மீன்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு கலைமணி, மாமல்லபுரத்தில் நடந்த பொங்கல் விழாவில் வழங்கினார். புதுப்பட்டினத்தைச் சேர்ந்த விஜயரங்கன் மகள் பார்வதி, மாமல்லபுரத்தைச் சேர்ந்த பட்டரையான் மனைவி சின்னப்பொன்னு, கடலூர் ஆலிக்குப்பத்தைச் சேர்ந்த குப்பனின் தந்தை ராஜூ செட்டியார் ஆகியோர் இந்த நிதி உதவியைப் பெற்றனர்.

சிறிய அளவில் கொல்லைப்புற கோழி வளர்ப்புக்கு நல்ல உயர்இனக் கோழிகள் விற்கப்படுகின்றன. இங்கு கிடைக்கும் முட்டைகள் பொதுமக்களுக்கும், ஊட்டச்சத்துணவுத் திட்டத்திற்கும், நாகர்கோவில் அரசினர் மருத்துவமனைக்கும், விந்து கலவைக்காகக் கேந்திர கிராம நிலையங்களுக்கும் விற்கப்படுகின்றன. அடை முட்டைகள் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன. கழிவு செய்யப்பட்ட கோழிகள் இறைச்சிக்காக விற்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கலப்பு இனக் கன்றுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுகிறது. இதன் நோக்கம், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு விவசாயிகள், மிகச் சிறிய விவசாயிகள், விவசாய கூலிகள் இவர்களிடம் இருக்கும் நாட்டுப் பசுக்களிலிருந்து குறைந்த அளவு 1,600 கிலோவிலிருந்து 2,000 கிலோ பால் ஒரு கறவை காலத்தில் கொடுக்கும் தன்மையுள்ள கலப்பினப் பசுக்கள் உற்பத்தி செய்வதாகும். இதனைச் செயல்படுத்த கலப்பினக் கன்றுகள், அதிக அளவு பால் கொடுக்கும் எருமையின் கன்றுகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

கலப்பினக் கன்றுகளுக்கு நல்ல சத்துள்ள தீவனம் கொடுத்தால் அவை மிகவும் குறைவான காலத்தில் பருவம் அடையும் வாய்ப்பு பெறுகிறது. கறவையின் காலம் நீடிக்கவும் செய்கிறது. நல்ல சத்துள்ள தீவனம் கலப்பின கன்றுகளுக்கு வழங்கப்படுகிறது. வழங்கப்படும் சத்துள்ள தீவனத்தின் மதிப்பில் பாதி மான்ய தீவனமாகவும், பாதி கடனாகவும் சிறு விவசாயி மிகச் சிறிய விவசாயிகளுக்கு அரசு வழங்குகிறது. விவசாயக் கூலிகளுக்கு 66 2/3 சதம் மானிய தீவனமாகவும் 33 1/3 சதம் கடனாகவும் வழங்குகிறது. இவ்விதம் கன்று 3 மாதம் வயது பூர்த்தி அடைந்ததிலிருந்து 28 மாதம் வயது அடையும் வரை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 450 கலப்பினக் கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றில் 172 கலப்பினக் கன்றுகள் நாகர்கோவில் கோட்டத்தில் உள்ளன.



# பிற்பட்டோர் நலம்

பிற்பட்டோர் நலத்துறை இயக்ககம் - சென்னை என்ற துறை உருவானபோது, மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை என்றதொரு பிரிவு மாவட்டத்தில் பிற்பட்டோர் மேம்பாட்டிற்கான முன்னேற்றத் திட்டங்களைக் கவனிப்பதற்கெனத் தனியே தொடங்கப்பட்டது. முதலில் இம்மாவட்டத்தில் 1.6.74லிருந்து பிற்பட்டோர் நலத்துறை தனியாக இயங்கி வருகிறது. மாவட்டப் பிரிவு, மாவட்ட ஆட்சித்தலைவரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் துறை சம்பந்தமான பணிகளைச் செயல்படுத்துவதில் சென்னை பிற்பட்டோர் நல இயக்ககத்தின் கண்காணிப்பில் செயல்பட்டு வருகிறது.

இம் மாவட்டத்தில் உள்ள மொத்த மக்கள் தொகையில் பிற்பட்டோர் 52 சதவீதம் உள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம் கல்வியில் மேம்பாடு அடைந்த ஒரு மாவட்டமாகும். பிற்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், ஆதி வாசிகளும் கூட கல்வியில் மேம்பாடு அடைந்துள்ளனர். பொதுவாக மற்ற மாவட்டத்தினரைக் காட்டிலும் இம்மாவட்ட மக்கள் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் நல்ல நிலையில் உள்ளனர். பெரும்பாலானவர்கள் விவசாயக் கூலிகளாகவும், சிலர் சொந்தத்தில் விவசாயம் செய்பவர்களாவும் உள்ளனர்.

பிற்பட்ட வகுப்பினரைக் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மேம்பாடு அடையச் செய்ய பல நலத் திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**கல்வி உதவித் தொகை:**

1977-78க்கு முன், பிற்பட்டோர் மற்றும் குற்றப்பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த பள்ளி மாணவர்களுக்கு உதவித்தொகை பணமாக வழங்கப்பட்டு வந்தது. குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் 6ஆம் வகுப்பிலிருந்தும், பிற்பட்ட வகுப்பினர் 2ஆம் வகுப்பிலிருந்தும் உதவித் தொகை பெறத் தகுதியுள்ளவராவர். தமிழக அரசு பள்ளி இறுதி வகுப்பு வரை இலவசமாக கல்வி வசதி வழங்குவதால், இந்த உதவித்தொகை, புத்தகம் வாங்கவும் சிறப்புக்கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்தவும் கொடுக்கப்பட்டது.

1977-78லிருந்து பணமாகக் கொடுந்து வந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டு மாவட்டத்தில் உள்ள வட்டாரப் பாடப்புத்தகக் குழுவினரின் முதல்வரால், பெரும்பாலும் பகவதி கூட்டுறவுச் சிறப்புப் பேரங்காடி வழி புத்தகங்கள் தகுதியுடைய மாணவர்களுக்குக் கல்வி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது. அதற்குரிய தொகை இத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது. இதே போன்று கல்வி நிறுவனங்களில் தகுதியுடைய மாணவர்களிடமிருந்து சிறப்புக் கட்டணம் வசூலிக்க வேண்டாமென்றும், அதற்குரியஈட்டுதொகையைப்பட்டியல் மூலம் இத்துறையிடமிருந்து பெறும்படியும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ. 5000க்குக் குறைவாக உள்ளவர்கள் இந்த உதவி பெறத் தகுதியுடையவராவர்.

தகுதி பெற்ற பிற்பட்டோர் மற்றும் குற்றபரம்பரையிலிருந்து நீக்கப்பட்டப் வகுப்பினரைச் சார்ந்தவர்களுக்குப் பட்டப்படிப்புக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித்தொகை, கல்லூரிப்படிப்பிற்கும், மேல்நிலைப்பள்ளிப்படிப்பிற்கும், பட்டப்படிப்பிற்கும்தொழில் நுட்பக் கல்விக்கும் மற்றும் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, தையற்கலை, பூ வேலைப்பாடு ஆகிய படிப்பிற்கும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக்கல்வி உதவித் தொகையில் புத்தகத்திற்கென பணம், தனிக்கட்டணம், படிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் ஆகியவை அடங்கும், விடுதியில் தங்கிப்படிக்கும் மாணவர்களுக்கு உண்டி, உறையும் கட்டணமும் சேர்ந்து உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் பள்ளிப்படிப்பில், 1983-ல் 6232 மாணவர்களும், கல்லூரிப் படிப்பில் 4714 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் பிற்பட்ட வகுப்பினர், மற்றும் குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட சாதியினரைச் சார்ந்த எட்டாம் வகுப்பு மற்றும் பள்ளியிறுதி வகுப்பில் படிக்கும்மாணவர்களில் கூடுதல் மதிப்பெண்கள் பெற்ற மாணவர் இருவருக்கு முறையே முதல், இரண்டாவது பரிசுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளியிறுதிவகுப்பில் முதலாவது வெற்றிபெற்ற மாணவருக்கு ரூபாய் 100 மதிப்பில் முதல் பரிசும், இரண்டாவதாக வெற்றி பெற்ற மாணவருக்கு ரூபாய் 50 மதிப்பில் இரண்டாவதுபரிசும், எட்டாவது வகுப்பும் முதலாவதாக வெற்றி பெற்ற மாணவருக்கு ரூ. 50 மதிப்பில் முதல் பரிசும், இரண்டாவதாக வெற்றி பெற்ற மாணவருக்கு ரூ. 10 மதிப்பில் புத்தகங்கள் மாணவர்களின் விருப்பப்படி வாங்கப்பட்டு, பரிசாக வழங்கப்படுகின்றன







திருவட்டார் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பரளியாற்றின் மேலே மலைகளை இணைக்கும் வகையில் புதுமையான பாலம் உள்ளது. 6 பர்லாங் தூரத்திற்கு இந்தத் 'தொட்டிப் பாலம்' உள்ளது. மாத்தூரில் இது கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கால்வாயின் அகலம் 8 அடி. அதில் 3 அடிக்கு மக்கள் நடந்து போவதற்கு நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. பல மலைப் பகுதிகளுக்கு இடையே இந்தக் கால்வாய் ஓடுவதால், கல்குளம் வட்டம், விளவங்கோடு வட்டம் ஆகியவை பயன்பெறுகின்றன. இந்தப் பாலத்தை மொத்தம் 28 கல தூண்கள் தாங்கி நிற்கின்றன. ஒவ்வொரு தூணும் 110 அடி உயரமாகும். ம

பிற்பட்ட வகுப்பு மாணவ-மாணவிகளுக்கு இலவச உணவு, உறையுள் வழங்க இம்மாவட்டத்தில் மூன்று கல்லூரி மாணவியர் விடுதிகள், ஏழு பள்ளி மாணவியர் விடுதிகள், இரண்டு பள்ளி மாணவர் விடுதிகள் 12 இடங்களில் இயங்கி வருகின்றன.

**தொழில் முன்னேற்றம்:**

சாதி மத பேதமின்றி பிற்பட்டோர் வகுப்பினரைச் சார்ந்த சவரத்தொழில் செய்யும் நலிவுற்ற தொழிலாளர்களுக்குப் பொருளாதார நிலையில் உயர்வடையச் செய்ய இலவசமாகத் தொழில் கருவிகள் வழங்கப்படுகின்றன.

வீட்டுமனைத் திட்டம் 1982-83ல் தொடங்கப்பட்டது. 83 நாவிதர் குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்கென ஆரல்வாய்மொழியில் இடம் தேர்வு செய்யப்பட்டு நிலம் கையகம் செய்யப்பட்டுள்ளது. நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதற்கு ரூபாய் 79695 செலவு செய்யப்பட்டுள்ளது. 1983-84 ஆண்டில் மருங்கூர் கிராமத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் வீட்டுமனைக்காக நிலம் கையகம் செய்யப்படவிருக்கிறது.

பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த ஏழைகள் தொழில் மற்றும் வியாபாரம் செய்து வாழ்வில் முன்னேற்றம் காண உதவும் பொருட்டு, தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார முன்னேற்றக்கழகம் என்று புதிதாக அரசினரால் நியமிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் தொழில்கள் தொடங்கி பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களை முன்னேற்றுவதற்கென பிரேரணைகள் அனுப்புமாறு இம்மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர் கேட்கப்பட்டுள்ளார்.

தற்போதுள்ள பிற்பட்டோர் பட்டியலைத் திருத்தி அமைக்கும் பொருட்டு அரசினரால் பிற்பட்டோர் நலக்குழு ஒன்றுஅமைக்கப்பட்டுள்ளது. இக்குழு கன்னியாகுமரி மாவட்டத்தில் 13.10.83, 14.10.83 ஆகிய தேதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பொது மக்களிடமிருந்தும், பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களிடமிருந்தும் மனுக்கள் பெற்று அவர்களின் குறைகளை நேரடியாக விசாரித்தது.. ஒவ்வொரு சாதியையும் சார்ந்த பிரதிநிதிகள் தனித்தனியே விசாரிக்கப்பட்டு அவர்களது கோரிக்கைகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிற்பட்டோர் நலக்குழு தெரிவித்துள்ளது.



# சுங்கத்தீர்வை இல்லாத மண்டலம்

மீனம்பாக்கம், சுங்கத் தீர்வையற்ற வர்த்தக மண்டலம் குறித்து இந்தியப் பொறியாளர் தொழில் சங்கம், தென் வட்டார அமைப்பின் கருத்தரங்கை 2-1-1984 அன்று சென்னையில் நடத்தியது.

கருத்தரங்கில், தலைமைச்செயலர் திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

"கண்டலா, சாந்தாகுரூஸ் வர்த்தக மண்டலங்களில் ஏற்பட்டுள்ள குறைகளைத் தமிழக அரசு அறிந்து அவைகள் மீனம்பாக்கம் வர்த்தக மண்டலத்தில் ஏற்படாமல் அமைக்கும்.

"இங்கு அமையும் வர்த்தக மண்டலத்துக்குத் தேவையான மின்சாரம் கல்பாக்கம் அணுமின் நிலையம் மற்றும் எண்ணூர், மேட்டூர் ஆகிய இடங்களில் உள்ள மின் நிலையங்களிலிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாலாற்றில் இருந்து தண்ணீர் பெறவும் வசதி செய்யப்பட்டுள்ளது. மற்றைய பணிகளும் விரைவாக நடைபெற்று வருகின்றன. தொழில்களைத் தொடங்க 250-க்கும் மேற்பட்டவர்கள் அணுகியுள்ளனர். இவர்களில் 40-க்கும் மேற்பட்ட வெளிநாட்டைச் சார்ந்த இந்தியர்களும் அடங்குவர். சிறந்த தொழில்நுட்பம் உள்ள தொழில்களை இந்த மண்டலத்தில் அமைப்பதில் தொழில் அதிபர்கள் முன் வரவேண்டும்."

வர்த்தக மண்டலம் இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படத் தொடங்கும். இந்த மண்டலம் சென்னையிலிருந்து 24 கி.மீ. தூரத்தில் உள்ளது. 'சிப்காட்' இதற்கான பணிகளை விரைவில் முடிக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

## சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந் நிதியாண்டில் 7.5 எக்டேர் நிலப் பரப்பளவில் குளக்கரையோரங்களில் 1,10,000 மரங்கள் நடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தோவாளை, பேச்சிப்பாறை ஆற்றோரப்பகுதிகளில் 7.5 கி.மீ. தூரத்தில் 7,500 மரங்கள் நடத் தீர்மானிக்கப் பட்டது.

ரயில் பாதை ஓரங்களில் 7,500 மரங்கள் 13 கி.மீ. தூரத்திற்குள் நடத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

30,000 மரக கன்றுகள் இலவசமாகப் பொதுமககளுக்கு வழங்கிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

ம

## வீட்டு மனைகள்

முடிதிருத்துவோர்83 பேருக்கு வீட்டுமனைகள் வழங்குவதற்கென ஆரல்வாய்மொழியில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு நிலம் கையகம் செய்யப் பட்டுள்ளது. இதற்கு ரூபாய் 79,695 செலவு செய்யப்பட்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டிற்கு மருங்கூர் கிராமத்தில் ரூ. 1 இலட்சம் செலவில் வீட்டுமனைக்கான நிலம் கையகம் செய்யப்பட இருக்கிறது.

ம



# கன்னியாகுமரிக் கதம்பம்

## அரசு உப்பு நிலங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான உப்பு நிலங்களில் உப்பு உற்பத்தி செய்யும் உரிமை திருவிதாங்கூர் உப்புச் சட்டத்தின் விதிகளுக்குட்பட்டு, தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றது.

உப்பு நிலங்களின் குத்தகை அனுமதி மாநில அரசினாலும், உப்பு உற்பத்தி செய்ய வழங்கும் உரிமம் மத்திய அரசினாலும் வழங்கப்பட்டு வருகிறது. உப்பு உற்பத்தி செய்யும் பொருட்டு உப்பு நிலங்களைக் குத்தகைக்கு விடுவது சம்பந்தமாகத் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் விதிமுறைகளை மாற்றி அமைத்து, புதிதாகச் சட்டம் ஒன்று இயற்றும் பொருட்டு சட்டமுன் வடிவு ஒன்று அரசின் பரிசீலனையிலுள்ளது.

உப்பளங்களின் குத்தகைதாரர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 30 குத்தகைப் பணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 127 உப்பள உரிமதாரர்கள் உள்ளனர். குத்தகைக்கு விடப்பட்டுள்ள உப்பு நிலங்களின் மொத்தப் பரப்பு ஏறத்தாழ 1030 ஏக்கர் ஆகும்.

ம

## பதிவுத்துறையின் பாங்கான பணி

கன்னியாகுமரி பதிவு மாவட்டத்தில் பூதப்பாண்டி, குளச்சல், இடலாக்குடி, இரணியல், கொட்டாரம், மணவாளக்குறிச்சி, பள்ளியாடி, ராஜாக்கமங்கலம், தக்கலை, நாகர்கோவில் ஆகிய பத்து பதிவகங்களும், மார்த்தாண்டம் வட்டத்தில் அருமனை, கருங்கல், கொல்லங்கோடு, முஞ்சிறை, பளுகல், திருவட்டார், வேர்க்கிளம்பி, மார்த்தாண்டம், மார்த்தாண்டம்-2, இணைசார் பதிவகம் ஆகிய 9 சார் பதிவகங்களும் உள்ளன.

நெடுநாளைய ஆவலைப் பூர்த்திசெய்யும் வகையில் தமிழக அரசு 15.9.80 முதல் கன்னியாகுமரி பதிவு மாவட்டத்தில் மேலும் ஒரு புதிய சார் பதிவகமாக, வடசேரி சார் பதிவகம் தொடங்கப்பெற்றது.

பொதுமக்களின் நலனைக் கருதி முத்திரைத் தாள்கள் நாகர்கோவில் தலைமை அலுவலகத்திலும், கிராமப் புறங்களில் நீதிமன்ற வில்லைகள் வாங்குவதில் ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும் பொருட்டு, அனைத்து சார் பதிவகங்களிலும் விற்பனை செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு அப் பணியும் செவ்வனே நடை பெற்று வருகிறது.

## கன்னியாகுமரி நகரியம்

கன்னியாகுமரி நகரிய வளர்ச்சிக்காக ரூ. 18.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி கட்டணக் கழிப்பறை ரூ 2.50 இலட்சம் செலவிலும், கடைகள் மற்றும் அங்காடிகள் கட்ட ரூ. 6 இலட்சமும், பேருந்து நிலையம் அமைக்க ரூ. 4 இலட்சமும், பொழுதுபோக்கு மையம் கட்ட ரூ. 4 இலட்சமும், குழந்தைகள் பூங்கா அமைக்க ரூ. 2 இலட்சமும் ஒதுக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### ஆதிதிராவிடர் காலனிகளுக்குக் குடிதண்ணீர்

ஆதிதிராவிடர் காலனிகளுக்குக் குடிதண்ணீர் கிணறு வெட்டுவதற்கு 1983-84ஆம் ஆண்டிற்கு ரூ. 25,000மும் ஆதிவாசிகளுக்குத் தண்ணீர் கிணறு வெட்டுவதற்கு ரூ. 25,000மும் இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1983-84ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர்களுக்கும் மற்றும் ஆதிவாசி பழங்குடியினர்களுக்கும் இந்த மாவட்டத்தில் வீட்டு மனை, இடுகாடு, குடியிருப்பிற்கான வழிப்பாதை, இடுகாட்டிற்கான வழிப்பாதைக்கு நிலம் கையகம் செய்வதற்கு அரசு ரூபாய் 3,00,000 அனுமதித்துள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் ஆதிவாசி பழங்குடியினருக்கு இவ்வாண்டு 300 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

## தூண்டுதல் முறையில் உற்பத்தி நிலையங்கள்

சிற்றார் அணை 2-ல் புதியதாக அரசால் ஒரு தூண்டுதல் முறையில் மீன்குஞ்சு உற்பத்தி நிலையம், ரூ.3,65,000 செலவில். நிறுவ கட்டுமான பணி நடை பெற்று வருகிறது.

ரூ. 1,80,000 அரசால் அனுமதிக்கப்பட்டு, பேச்சிப்பாறையில் பத்து நாற்றங்கால்களும், மூன்று வளர்ப்புக் குளங்களும் கட்டப் பட்டு ஓர் ஆண்டில் 20 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



# நாகர்கோவில்

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகராகத் திகழும் நாகர்கோவில் மிகப் பெரிய நகரமாகும். இந்நகரில் அமைந்துள்ள நாகராஜர் கோயிலே நாளடைவில் நாகர்கோவிலாயிற்றுஎன்பர். இக்கோவில் முதன் முதலாக சமணக் கோயிலாக இருந்தது. சமண தீர்த்தக்காரர்களான வர்த்தமான மகாவீரர், பார்சுவநாதர் சிலைகளை மண்டபத்தின் தூண்களில் இன்றும் காணலாம். 1521ஆம்ஆண்டுச் சாசனம் ஒன்று அக்காலத்தில் இது சமணக் கோயிலாக இருந்ததாகக் குறிப்பிடுகிறது.

நாகராஜர் கோயிலைப் பற்றிய கர்ணபரம்பரைக் கதையொன்று கூறப்படுகிறது. ஒரு நாள் பெண்ணொருத்தி புல்லரிந்தபோது இரத்தம் சொட்டியதாகவும் — கூர்ந்து நோக்கியபோது தனது அரிவாள் ஐந்து தலைநாகத்தின் தலையில் பட்டதால் ஏற்பட்ட இரத்தம் அது என்று தெரிந்த அவள் அஞ்சி நடுநடுங்கி அருகே இருந்த கிராமத்தார்க்கு அறிவித்ததாகவும், மக்கள் திரளாக வந்து அந்தஅதிசயத்தைக் கண்டதாகவும், அது முதல் அநத இடம் துப்பரவு செய்யப்பட்டு வழிபாட்டிற்கு உகந்த இடமாக மாற்றப்பட்டதாகவும், ஐந்து தலை நாகத்தைப் படிமம் செய்து சிறுகோயிலொன்று அமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இக்கோயிலின் புகழ் நாளடைவில் நான்கு திக்குகளிலும், பரவிற்று என்றும், தொழுநோயால் மிகவும் துன்பமுற்ற களக்காடு மன்னர் ஆவணி மாதத்தில் ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று நாகராஜர் ஆலயத்தின் முன் தவமியற்றினார் என்றும், அதன் விளைவாக அவர் தனது தொழுநோயிலிருந்து பூரண குணமடைந்தார் என்றும் நன்றிக் கடனாக நாகராஜருக்கு இன்றுள்ள கோயிலைக் கட்டினாரென்றும் நாம் அறிகின்றோம்.

நாகராஜர் கோயில், நெல் வயல்கள், மலர்த் தோட்டங்கள், தென்னந்தோப்புகளால் சூழப்பட்ட இயற்கையெழில் நிறைந்த கோயிலாகும். இங்குள்ள மலர்த் தோட்டத்தில் நாகராஜரின் அடையாளமான நாகமலர்கள் உண்டு. இம்மலர்கள் நாகங்களால் பாதுகாக்கப்படுவதால், மலர்களையோ, தேங்காய்களையோ யாரும் திருடுவதில்லை. கோயிலில் எண்ணற்ற நாகங்கள் இருப்பினும் அவற்றால் இதுவரை மக்களுக்குத் தீங்கேதும் நேர்ந்ததில்லை.

இக்கோயிலின் மூலவர் சந்நிதி களிமண் சுவரால் கட்டப்பட்டுள்ளது. இதன் கூரை தென்னங் கீற்றுகளால் மூங்கிற்கழி மேல் வேயப்பட்டுள்ளது. தென்னங் கீற்றுப் பந்தல் கூரையை அகற்ற வேண்டாமென்று நாகராஜன், களக்காடு மன்னரின் கனவில் தோன்றி அறிவித்ததாகக் கூறப்படுகிறது. ஐந்தலை நாக வடிவம் படிமம் செய்யப்பட்ட இடம் சேறு கலந்த பூமியாக உள்ளது. இந்தப் பூமியில் இருந்து எடுக்கப்படும் மணலே பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்தும், இம்மணல் அளவில் இதுவரை குறைந்ததில்லை. இந்த மணல் ஆறுமாதம் கருமை நிறத்தோடும் ஆறுமாதம் வெண்மை நிறத்தோடும் காணப்படுகிறது.

இக்கோயிலின் முக்கிய சிலையான நாகராஜர் சிலை அர்த்த மண்டபத்தில் படிமம் செய்யப்பட்டிருக்கும் சிவன், அனந்த கிருஷ்ணனின் சிலைகள் மண்டபத் தூண்களில் செதுக்கப்பட்டிருக்கும் சமண தீர்த்தங்கரர்களின் சிலைகள் பௌத்த மடத்தைப் போன்று சீனக்கலை பாணியில் அமைக்கப்பட்டிருக்கும் அழகான நுழைவு வாயில், சைவ வைணவ, சமண, புத்த மதங்களின் பெருமையை எடுத்தியம்பும் கலைச் செல்வங்களாகக் காட்சி தருகின்றன.

எம்மதமும் சம்மதமெனும் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு அரியதோர் எடுத்துக்காட்டாக இக்கோயில் இலங்குகிறது. ஆண்டு தோறும் தை மாதத்தில் இத் திருக்கோவிலின் விழா பத்து நாட்களுக்குக் கொண்டாடப்படுகிறது. ஆயில்ய நட்சத்திர தினத்தன்று மாதந் தோறும் இக் கோவில் சிறப்புப் பூசை நடைபெற்று வருகிறது.

கி

நல்ல ரப்பர் மரத்தில் ஒரு மணி நேரத்திற்கு 3 சிரட்டை அளவிற்கு அரை கிலோ ரப்பர் பால் கிடைக்கும். பால் எடுக்கும் ஒருவருக்கு ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் கூலி கிடைக்கும். ஒருவர் ஒரு நாளைக்கு 250 முதல் 300 மரம் வரை ரப்பர் பால் எடுக்கலாம்.

# உழவர்களின் உற்ற நண்பன்

மத்தியக் கூட்டுறவு வங்கி இம்மாவட்டத்தின் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு பாதுகாவலனாக இருந்து தொண்டாற்றி வருகிறது. இம்மாவட்டத்தின் முக்கியப் பயிர்களான நெல், வாழை, ரப்பர், மரச் சீனி, தென்னை போன்ற பயிர்களுக்குப் பயிர் செய்யத் தேவைப்படும்அளவிற்கு ரொக்கம் மற்றும் பயிர்களுக்குத் தேவையான இரசாயன உரம், பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவற்றையும் காலா காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிட உதவி வருகின்றது. 1981-82-ல் ரூ. 261.00 இலட்சமும், 1982-83-ல் ரூ. 239.00 இலட்சமும் இவ்வங்கி விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனாக வழங்கி உள்ளது.



போர், அணுசக்தி ஆகியவற்றினால் ஏற்படும் இடர்களைத் தவிர வேறு எவ்வகையிலேனும் பயிர்கள் பாதிக்கப்பட்டாலும் கூட்டுறவுச் சங்க விவசாய உறுப்பினர்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் பயிருக்கான பயிர்ப் பாதுகாப்புறுதித் திட்டத்தைத் தேர்ந்தெடுத்து வட்டங்களில் நிறைவேற்றி வருகிறது. இம்மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டம் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பயிர்க் கடனைப் போன்றே விவசாயத்தைச் சார்ந்துள்ள தொழில்களுக்சாகவும் கறவை மாடு வாங்க, இரட்டை மாட்டு வண்டி, மருந்து தெளிப்பான்கள், உழவு மாடுகள், இரட்டை மாட்டுவண்டியும் மாடு ஆகியவைகள் வாங்க, மாட்டுத் தொழுவும் அமைக்க மற்றும் இதர தொழில்களுக்கான கிராமக் கைவினைஞர்கள் செய்யும் தொழில்களுக்கும் மத்தியகாலக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்கள் வழியாக வழங்கப்படுகின்றன இவ் விதக் கடன்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம், இவ் வங்கியுடன் இணைந்து வழங்கும் கடன்கள் சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகளாக இருந்தால் அவர்களுக்குக் கடனில் ஒரு சிறு பகுதி மானியமாகவும் வழங்கி துணை புரிகிறது. 1982-83-ல் இம்மாவட்டத்தில் செயல்படும் வணிக வங்கிகளைவிட கூட்டுறவு நிறுவனங்கள் அதிக அளவில் மத்தியகாலக் கடன்கள் வழங்கியுள்ளன.

அவ்வாண்டின் மொத்த குறியீடான ரூ. 40 இலட்சத்தைக் கடந்து மொத்தத்தில் ரூ. 56.28 இலட்சம் கடன் வழங்கி விவசாயிகளுக்கு உற்ற நண்பனாகச் செயல்பட்டு வருகிறது. அண்மையில் 1983 செப்டம்பர் திங்களில் நடைபெற்ற வளர்ச்சிப் பணி விளம்பர முகாமின்போது இம்மாவட்டத்திலுள்ள திருப்பதி சாரம் எனும் கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எல். கே. திரிபாதி இ. ஆ. ப. அவர்களால் விவசாய உறுப்பினர் ஒருவருக்கு நடுத்தரக் காலக் கடனாக இரட்டை மாட்டு வண்டியும், மாடும் வழங்கப்பட்டது.

இம்மாவட்டத்தின் மத்திய வங்கியின் 5 கிளைகள் மூலமாகவும், அதனோடு இணைந்துள்ள 55 விவசாய சேவை சங்கங்கள் வழியாகவும் விவசாய மற்றும் பொதுமக்களுக்கு நகை ஈட்டுக் கடன் வழங்கி வருகிறது. பொது மக்களும், ஏழை விவசாயிகளும் தனியார் மற்றும் பிற இடங்களில் அநியாய வட்டிக்குக் கடன் வாங்கி அவதியுறுவதை இது தடுக்கிறது. 1982-83 இறுதியில் பிரதம சங்க அளவில் ரூ. 403.18 இலட்சமும், மத்திய வங்கியின் கிளைகள் அளவில் ரூ. 17.96 இலட்சமும் கடன் நிலுவையாக நிற்கின்றது.

வேளாண்மை செய்கின்ற விவசாயிகளைத் தவிர நலிந்த பிரிவினருக்கும், அதாவது கிராமப்புறத்தில் வசிக்கும் மக்களில் ஆண்டொன்றிற்கு ரூ. 2,500-க்கு மேற்படாதவர்களுக்கும், நகர்ப்புறத்தில் வசிக்கும் மக்களில் ஆண்டொன்றிற்கு மொத்த வருமானம் ரூ. 3,000-க்கு மேற்படாதவர்களுக்கும் தனிநபர் ஒருவர் பொறுப்பின் அடிப்படையில் ரூ. 7,000 வரை அரசின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் அம்சமாகச் சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில் துவங்கிட இம்மாவட்டத்தின் மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளைகள் மூலமாகவும், உழவர் பணி கூட்டுறவுச் சங்கங்கள் வழியாகவும் 4 சதம் வட்டி வீதத்தில் கடன் வழங்கப்பட்டு வருவதனால், சிறு தொழிலை மேம்படுத்துவதோடு நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத்தரத்தை உயர் நிலைக்குக் கொண்டு செல்லவும் இதனால் வழியேற்படுகிறது.

1982-83-ல் இது வகைக்கு ரூ.1 00 இலட்சம் அளவில் கடன்

வழங்கியதுமில்லாமல் 1983-84ல் இதன் அளவை ரூ. 4.00 இலட்சத்திற்கு உயர்த்திடவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 1983-84-ஆம் ஆண்டில் கிராமக் கைவினைஞர்களுக்குக் குறைந்த வட்டிக்கடனில் இம்மாவட்டத்தில் மாத்தூர் என்ற கிராமத்தில் வாழ்க்கையில் நலிவுற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டு அவர்களால் சிறுவர், சிறுமிகளுக்கான தரமான, அழகான உடைகளும் தயார் செய்யப்படுகின்றன.

கடன் வழங்குவதில் சாதனை ஏற்படுத்தியது போன்று கடன் வசூல் பணியிலும் இம்மாவட்டம் பிற மாவட்டங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவே விளங்கி வருகிறது. எந்தவிதக் கெடுபிடியுமின்றி நேரடி அணுகுமுறை மூலம் உறுப்பினர்களிடம் இருந்து பெருமளவு கடன் நிலுவை வசூலிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மத்திய வங்கி அளவில் மொத்த கேட்பில் 1981-82-ல் 86.35 சதமும், 1982-83-ல் 83.66 சதமும் வசூலிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் கடும் வறட்சி இம்மாவட்டத்தில் நிலவிய போதிலும் மாநில அளவில் வசூல் பணியில் இம்மாவட்டம் முதல் இடத்தினைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பிரதம சங்க அளவில் இம்மாவட்டத்திலுள்ள புத்தளம் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஒரு சிறப்பான இடத்தை 1980-81-ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகப் பெற்று வருகிறது. உறுப்பினர்கள் அளவில் எவ்விதக் கடன்பாக்கியுமின்றி நேரடி அணுகுமுறை மூலம் வசூலித்து வந்துள்ளது. இவ்வாறு ஒரு சிறந்த சங்கமாகத் தொடர்ந்து செயல்படுவதினைப் பாராட்டி 30-வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழாவின்போது தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் அச்சங்கத்திற்குக் கேடயம் பரிசு வழங்கி கௌரவித்துள்ளது.

அதேபோன்று 'மெதுக்கும்மல்' என்ற கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கமும் 1982-83-ஆம் ஆண்டு இறுதியில் தனது உறுப்பினர்களிடம் இருந்து நிலுவை நின்ற எல்லாக் கடன்களையும் வசூலித்து சிறப்பினைப் பெற்றுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள 5 நில வள வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு நில மேம்பாட்டிற்காகவும், தென்னை, ரப்பர், கிராம்பு, பிச்சிப்பூ போன்ற தோட்டப் பயிர்கள் வளர்ச்சிக்காகவும், பால்பண்ணை, ஆடு வளர்த்தல், கோழிப்பண்ணை போன்ற துணைத் தொழில்களில் ஈடுபடுதல் முதலிய விவசாயத்தை ஒட்டிய இதர பல்வகை காரணங்களுக்காகவும் 7 முதல் 15 ஆண்டுகளில் திருப்பித் தரக்கூடிய நீண்டகாலக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் செயல்படும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம், இம்மாவட்டத்தின் மக்களுக்குத் தரமான நுகர் பொருட்களை நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகிறது. இதில் பெரும் பங்கை இம்மாவட்டத்தின் மொத்த விநியோகம் கூட்டுறவுப் பண்டகசாலை வசூலித்து வருகிறது. தனது இரு சிறறங்காடிகள் மூலமாகவும், நகரிலும், புறநகரிலும் செயல்படும் பல விற்பனை நிலையங்கள் மூலமாகவும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், கட்டுப்பாட்டுப் பொருட்களையும் விநியோகம் செய்து வருகிறது.

ஓராண்டினைக் கடந்து வெற்றியுடன் செயல்பட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் வெற்றிக்கு இம்மாவட்டத்தின் கூட்டுறவுப் பண்டகசாலை பெருமளவு உறுதுணையாக நிற்கின்றது. சத்துணவு மையத்திற்குத் தேவையான தரமான காய்கறிகளை இம்மாவட்டத்தில் முதலாவதாகவும் மாநிலத்திலேயே இரண்டாவதாகவும் அமைந்துள்ள கிள்ளியூர் காய்கறி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மூலமாகவும், இராமநாதபுரம் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை மூலமாகவும் பெற்று சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்விநியோகம் தொடங்கப்பட்ட குறுகிய காலத்திற்குள் ரூ. 1.08 இலட்சத்திற்குக் காய்கறி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் செயல்படும் சத்துணவு மையங்களின் விவரம் :

கல்வித்துறை சார்ந்த சத்துணவு மையங்கள் 552; ஆதிதிராவிடர் மற்றும் வனத்துறையைச் சார்ந்த சத்துணவு மையங்கள் 11; சமூக நலத்துறையைச் சார்ந்த சத்துணவு மையங்கள் 657. ஆக மொத்தம் 1,220 சத்துணவு மையங்கள். இதன் மூலம் பயன் பெறுவோர் எண்ணிக்கை 1,94,000 பேர்.

இம்மாவட்டத்தில் செயல்படும் 1,220 சத்துணவு மையங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை, 69 வழித் தடங்களில் பிரதிமாதம் 20-ஆம் தேதிக்குள் ஆரம்பித்து 25-ஆம் தேதிக்குள் சுமையுந்துகள் மூலம் வழங்கி வரப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகளை முகவர்கள் மூலமாக 1976-ஆம் ஆண்டிலிருந்தே விநியோகம் செய்து வரப்படுகிறது.

1980-81-ஆம் ஆண்டில் ரூபாய் 10.71 இலட்சத்திற்கும், 1981-82-க்குரூ16.92 இலட்சத்திற்கும், 1982-83-க்குரூ20.37 இலட்சத்திற்கும் பாட நூல்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று அனைத்து மாணவர் பண்டகசாலை மூலமாகவும், மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலை இல்லாத இடங்களில் பிற கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் மாணவர்களுக்குத் தேவையான கட்டுப்பாட்டு நோட்டுப் புத்தகங்களை மலிவு விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

நடப்புக் கல்வியாண்டில் ரூ. 3.4 இலட்சம் மதிப்பிற்கு வெளிச் சந்தை நோட்டுப் புத்தகங்கள் தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் மூலமாகவும், ரூ. 6.00 இலட்சம் மதிப்பிற்குத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திலிருந்தும் பெறப்பட்டு 30-9-1983 முடிய ரூ. 5 இலட்சத்திற்கு இம்மாவட்டத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1980-81-ல் ரூ.. 10.40 இலட்சத்திற்கும், 1981-82-ல் ரூ. 17.68 இலட்சத்திற்கும், 1982-83-ல் ரூ. 18.65 இலட்சத்திற்கும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கடன் வழங்கும் பணி மற்றும் வசூல்பணி போன்று இம்மாவட்டத்தில் செயல்படும் பல்வேறு கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் குடும்பநல நிதித்திட்டம் மூலமாகத் துணைபுரிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி வழித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோரின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தும் அரசின் சீரிய நோக்கத்தின் அடிப்படையில், உடல் ஊனமுற்றோர்களுக்கான கூட்டுறவுச் சங்கம் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார்-1 மற்றும் சிற்றார்-2 ஆகிய நான்கு நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவற்றில் விரைவில் வளரக்கூடிய தரமான கலப்பின மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, வளர்ந்த மீன்கள் இத்துறை மீனவர்களால் பிடிக்கப்பட்டு விற்கப்பட்டு வருகின்றன**






வயது வந்தோர் கல்வித்திட்டமானது, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1980 ஜனவரி முதல் செயல்படத் தொடங்கியது. இம்மாவட்டத்திலுள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களில் கடலோரப்பகுதிகளான அகஸ்தீஸ்வரம், இராஜாக்கமங்கலம், குருந்தங்கோடு, கிள்ளியூர், முன்சிறை ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமல்படுத்தப்பட்டது.

ஊராட்சி ஒன்றியத்திற்கு வயது வந்தோர் கல்வி மையங்கள் 100 வீதம் 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் வயது வந்தோர் கல்வி மையங்கள் 500 ஆரம்பிக்கப்பட்டன. இக் கல்வி மையங்களின் ஊக்குநர்களாகப் பள்ளி இறுதித் தேர்வில் தேறிய இளைஞர்கள் பெரும்பாலும் பெண்பாலர் நியமிக்கப்பட்டனர். வயது வந்தோர் கல்வி மையங்களில் கற்போராக 15 முதல் 35 வயது வரையிலும் உள்ள கல்வியறிவற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

வயது வந்தோருக்கு எண்ணறிவு, எழுத்தறிவு கற்பித்துத் தருவதோடு, அவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அவர்கள் மேற்கொண்டுள்ள தொழிலின் செயல் திறனை வளர்ப்பதே இக்கல்வித் திட்டத்தின் நோக்கமாகும்.

1981-82ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் வயது வந்தோர் கல்வியின் வாயிலாகப் பயனடைந்த வயது வந்தவர்களின் எண்ணிக்கை 16,248 ஆகும். இதில் 15,173 பெண்களும் 1,075 ஆண்களும் அடங்குவர். 1981-82ல் வயது வந்தோர் கல்வித்திட்டத்தின் வாயிலாக, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 273 ஆண்களும், 3,384 பெண்களும் பயன் பெற்றனர்.

1982-83ல் இத்திட்டத்தால் 691 ஆண்களும் 14,696 பெண்களும் ஆக மொத்தம் 15,387 பேர்கள் பயனடைந்தனர். இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 189 ஆண்களும் 2,577 பெண்களும் பயனடைந்தனர். மலைவாழ் மக்களில் 31 பெண்களும் 1982-83வது ஆண்டில் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

1983-84 ஆம் ஆண்டில் முறையே தோவாளை, தக்கலை, திருவட்டார் மற்றும் மேல்புறம் ஆகிய புதிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் வயது வந்தோர் கல்வித் திட்டமானது விஸ்தரிக்கப்பட்டது. தற்போது மேற்குறிப்பிட்ட 4 ஊராட்சி ஒன்றியங்களோடு ஏற்கனவே திட்டம் செயலிலிருந்த குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தையும் சேர்த்து 5 ஊராட்சி ஒன்றியங்களில் வயது வந்தோர் கல்வித் திட்டமானது செயல்பட்டு வருகிறது. முந்தைய ஆண்டுகளை விட 1983-84ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் அதிகமான எண்ணிக்கையில் கற்போர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1983-84ல் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் வயது வந்தோரின் எண்ணிக்கை 17,711 ஆக உயர்ந்துள்ளது. இதில் 17072 பேர் பெண்களும் 639 பேர் ஆண்களுமாவர். இத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் 3836 பெண்களும் 197 ஆண்களும் பயன் பெற்று வருகின்றனர். குறிப்பாக இவ்வாண்டில் அதிகமான மலைவாழ்மக்கள் இத்திட்டத்தால் பயன்பெறுகின்றனர்.

அரசினரால் நடத்தப்பட்டு வரும் வயது வந்தோர் கல்வித் திட்டம் செயல்பட்டு வரும் அதே சமயத்தில் இம் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தனியார் தொண்டு நிறுவனங்களும் வயது வந்தோர் கல்வித்திட்டத்தை 1983-84ல் இம்மாவட்டத்தில் செயல்படுத்தியுள்ளன. இத் தொண்டு நிறுவனங்கள் முறையே பெருமான் குழியில் இயங்கிவரும் கிராம வளர்ச்சி மற்றும் சமூக நல நிறுவனம் (Rural Development and Social Welfare Organisation) மற்றும் முள்ளங்கினா விளையில் அமைந்துள்ள Y.M.C.A. ஆகியவையாகும். மேற்கண்ட இரண்டு தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொன்றும் 30 வயது வந்தோர் கல்வி மையங்கள் நடத்தி வருகின்றன. தொண்டு நிறுவனங்கள் நடத்தி வரும் 60 வயது வந்தோர் கல்வி மையங்களிலும் 2,324 வயது வந்தவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

வயது வந்தோர் கல்வித்திட்டத்தால் பயனடைந்த வயது வந்தவர்கள் தாங்கள் கற்ற கல்வியை மறந்துபோகாமல் நினைவில் வைத்துக்கொள்வதற்கும் பெற்ற கல்வியைத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தி கல்வியோடு நிரந்தரமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஏற்ற வகையில் இலவசமாக செய்தித் தாள்களும், சிறிய நூல்களும் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதே ஏட்டறிவு நிலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

ஏட்டறிவு நிலைத் திட்டத்தின் ஊக்குநர்களாக ஏற்கெனவே வயது வந்தோர் கல்வி மையங்களில் ஊக்குநராகப் பணியாற்றியவர்களே நியமிக்கப்பட்டுள்ளார்கள். வயது வந்தோர் கல்வித் திட்டம் அமலிலிருந்த ஊராட்சி ஒன்றியங்களில் 1981-82ஆம் ஆண்டு ஏட்டறிவு நிலை மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

## பாண்டியராஜபுர சர்க்கரை ஆலை

**மதுரை சர்க்கரை ஆலை நிறுவனத்தை மாநில அரசு மேற்கொண்டது**

**ம**துரை மாவட்டம் பாண்டியராஜபுரத்திலுள்ள மதுரை சர்க்கரை ஆலை நிறுவனம் 1983-84 சர்க்கரைப் பருவத்துக்கான சர்க்கரை உற்பத்தியை நவம்பர் திங்களில் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு சர்க்கரை உற்பத்தி தொடங்கப்படவில்லை. அவ்வாறு சர்க்கரை உற்பத்தியைத் தொடங்காதிருப்பது ஆலைக்குக் கரும்பு பதிவு செய்த விவசாயிகளுக்கும், ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பெருமளவில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் சிரமங்களை நீக்கும் வண்ணம் மதுரை சர்க்கரை ஆலையை மாநில அரசு 26.12.1983 முதல் மேற்கொண்டுள்ளது.

இம்மையங்களால் 240 வயது வந்தவர்கள் பயனடைந்தார்கள்.

1982-83ஆம் ஆண்டில் 18 ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 540 ஆகும். 1983 84ல் ஆரம்பிக்கப்பட்ட ஏட்டறிவு நிலை் மையங்களின் எண்ணிக்கை 39 ஆகும். இவற்றால் தற்போது பயனடைந்து வருவோரின் எண்ணிக்கை 1170 ஆகும்.

**பள்ளிசாராக் கல்வி:**

பள்ளி சாராக் கல்வித் திட்டமானது 6-14 வயதுக்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கு உரிய திட்டமாகும்.

தொடக்கப்பள்ளிப் படிப்பை இடையில் விட்டவர்களும் பள்ளிக்கே செல்லாதவர்களுமான பள்ளிப் பிள்ளைகள் இதனால் பயனடைகின்றனர். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரையிலும் உள்ள பாடத் திட்டங்களின் அடிப்படையில் கலைத் திட்டம் தயாரிக்கப்பட்டு இக்கல்வி மையங்களின் சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்கப்படுகின்றது. இக்கல்வி மையங்களில் ஊக்குநர்களாக பகல் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களே (Day School Teachers) நியமிக்கப்படுகிறார்கள். பள்ளி சாராக் கல்வி வகுப்புகள் மாலையில் பள்ளி நேரம் முடிந்த பின்னரே நடத்தப்படுகின்றன.

1981-82ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 50 பள்ளிசாராக் கல்வி மையங்கள் நடத்தப்பட்டன. இதில் பயனடைந்த இருபால் சிறார்களின் எண்ணிக்கை 1618 ஆகும்.

1982-83ல் இம்மாவட்டத்தில் 26 பள்ளிசாராக் கல்வி மையங்கள் நடத்தப்பட்டு அவற்றால் 719 சிறார்கள் பயனடைந்தனர். அதைப் போல் 1983-84ல் 22 பள்ளி சாராக் கல்வி மையங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 699 ஆகும்.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தற்போது தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் 2 பள்ளிசாராக் கல்வி மையங்களும் மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் 2 பள்ளிசாராக் கல்வி மையங்களும் இயங்கி வருகின்றன. இக் கல்வி மையங்களால் பயனடைந்து வரும் சிறார்களின் எண்ணிக்கை 120 ஆகும்.

**பள்ளிசாராத் தொழில் கல்வி:**

பள்ளிசாராத் தொழில் கல்வி மையங்கள் வாயிலாக 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தொழில் கல்விகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. பெண்களுக்குத் தையல் கலையும், பிளாஸ்டிக் ஒயர் பின்னலும் பள்ளி சாராத் தொழில் கல்வி மையங்களில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. ஆண்களுக்கு ( Simple Electrical Wiring Radio Mechanism ) ஆகியவை கற்பிக்கப்பட்டு வாழ்க்கையில் அவர்கள் முன்னேறிட வழி வகுத்துத் தரப்படுகின்றது. 1981-82ல் இரு பள்ளிசாராத் தொழில் கல்வி மையங்கள் நடத்தப்பட்டன. அவற்றால் 25 ஆண்களும் 25 பெண்களும் பயனடைந்தனர்.

1983-84ஆம் ஆண்டில் 5 பள்ளிசாராக் கல்வி மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பயிற்சி பெறுவதற்கென்று கல்வி மையத்திற்கு 20 பெண்கள் வீதம் 5 மையத்திலும் 100 பெண்கள் கற்போராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு தொழிற்கல்வி பெற்று வருகின்றனர். இந்தப் பள்ளி சாராத் தொழிற் கல்வி மையங்கள் அனைத்தும் நகராட்சிப் பகுதிகளிலே நடத்தப் படுகின்றன.

**நூலக ஏட்டறிவு நிலைத் திட்டம்:**

பொது நூலகஏட்டறிவு நிலைத் திட்டமானது இம்மாவட்டத்தில் ஏற்கெனவே வயது வந்தோர் கல்வி மையங்கள் செயல்பட்டு முடிவடைந்த 5 ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் 5 பொது நூலக ஏட்டறிவு நிலை மையங்கள் 1.10.1983 முதல் செயல்பட்டு வருகின்றன.

வயது வந்தோர் கல்வி மையங்களில் கற்றுப்பயனடைந்த வயது வந்தவர்கள் அருகாமையிலுள்ள நூலகத்தைப் பயன்படுத்தி கல்வியில் தொடர்ச்சி நிலைமை பெற வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பொது நூலக ஏட்டறிவு நிலை மையங்கள் ஒவ்வொன்றிலும் 30 வயது வந்தோர் மைய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள். 5 மையங்களிலும் 150 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுக்கு உதவிடும் வகையில் ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். ஒருங்கிணைப்பாளரின் உதவியோடு நூலகங்களிலிருந்து நூல்களைப் பெற்று வயது வந்தோர் பயனடைந்து வருகின்றனர்.

வயது வந்தோர் கல்வித்திட்டமானது, மேற்கண்டபடி பல கல்வித் திட்டங்களைத் தன்னகத்தே கொண்டு குமரி மாவட்டத்தில் செவ்வனே செயல்பட்டு வருகின்றது.





# ஏழை எளியவர் ஏற்றம்பெற..

**க**ன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 1978-79 ஆண்டில் செயல்படுத்தப்படத் தொடங்கியது. ஆனால் மாவட்டத்திலுள்ள ஒன்பது ஊராட்சி ஒன்றியங்களிலும் முழுமையாகச் செயல்படுத்தப்படத் தொடங்கியது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கும் 1980-81 ஆண்டிலிருந்து மட்டுமே ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்திருந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள திட்டங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்துடன் காந்தியடிகளின் பிறந்த தினமான 2-10-80-ல் இணைக்கப்பட்டன. திட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்பாக மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் தோன்றியது. இந்நிறுவனத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பெருந்தலைவர் ஆகிறார்.

வேளாண்மைத் துறை, கால்நடைபராமரிப்புத்துறை, தொழில் வணிகத்துறை, கதர் கிராமக் கைத்தொழில் வாரியம், விவசாய மறு நிதியீடு மற்றும் வளர்ச்சிக் கழகம் ஆகிய பல்வேறு அரசுத் துறைகளின் கீழ் அமல்படுத்தப்பட்டு வந்த வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திற்கும் ஒருங்கிணைந்த திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

கிராமப் புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளிய மக்களை மேம்படுத்துவதே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களில் ஏழைகளில் ஏழையாக உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உதவியளிக்கப்படுகிறது. விவசாயம், கால்நடைகள் போன்ற உயிரினங்கள், இதரசொத்துக்கள் கூலிவேலை இவை மூலமாகக் கிடைக்கும் ஆண்டு நிகர வருமானம் ரூ. 3,500-க்குக் குறைவாக உள்ள குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய குடும்பங்களை இனங்காணும் பொருட்டு ஒரு குடும்ப ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. குடும்ப ஆய்வு முடித்து குடும்பங்களிலுள்ள உறுப்பினர்களின் தனிநபர் நிகர வருமானத்தின் அடிப்படையில் மிகக் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு முன்னுரிமையளிக்கும் வகையில் குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒவ்வொரு ஆண்டிலும் 600 குடும்பங்கள் வீதம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 3,000 குடும்பங்கள் வீதம் பயன் பெறத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இவ்விதம் தேர்வு செய்யப்படும் குடும்பங்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு திட்ட காலத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 35 இலட்சம் வீதம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 315 இலட்சம். இத்தொகை மத்திய, மாநில அரசுகளால் சரி சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகி...

வாழ்க்கை வசதியற்ற ஏழை எளிய மக்களுக்கு நிரந்தரமான சொத்து உருவாக்க வசதிசெய்து அதன் மூலம் அவர்களுக்குத் தொடர்ச்சியாக வருமானம் ஈட்டி நாளடைவில் அவர்களை வறுமைக்கோட்டைத் தாண்டச் செய்வது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நடைமுறை, நிரந்தர சொத்து உருவாக்க தேவையான மூலதனத்தின் 2/3 பாகம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், இதர வணிகவியல் வங்கிகள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவைமூலம் கடனாக வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. மீதியுள்ள 1/3 பாகம் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் இனாமாக (மானியமாக) வழங்கப்படுகிறது. மானியம் வழங்குவதற்கு 1981-82ல் ரூ.54 இலட்சம், 1982-83-ல் ரூ. 72 இலட்சம், 1983-84-ல் 72 இலட்சம் எனும் விகிதத்தில் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு உள்ளது. மானியம் வழங்கப்படுவதால் ஏழைகளின் கடன்பளு குறைவதோடு திட்டத்தின் மூலம் பெறப்பட்ட சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கடன் தொகையை எளிதான தவணைகள் மூலம் செலுத்தி விடலாம். கடன் தொகை கெடு முடிந்ததும் சொத்து சம்பந்தப்பட்ட குடும்பத்திற்குச் சொந்தமாகிறது. இவ்விதம் திட்ட காலத்தில் பல்வேறு வகைகளிலாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 3,000 வரையிலும் மானியம் பெற வாய்ப்புள்ளது.

**கிராம இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புப் பயிற்சி:**

தனித்தனித் திட்டங்களின் மூலம் ஏழைகளுக்கு உதவிசெய்வது மட்டுமின்றித் தேர்வு செய்யப்பட்ட குடும்பங்களிலுள்ள 18 வயதிற்கு மேல் 35 வயதுக்குட்பட்ட ஊரக இளைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கும் டிரைசம் எனப்படும் பயிற்சித் திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும்.

டிரைசம் திட்டத்தின்கீழ் கால்நடை பராமரிப்பு, வாழைநார்த் தொழில், பிரம்புத் தொழில்.

## இயற்கைத் துறைமுகம் குளச்சல்

குமரி மாவட்டத்தில் 42 மைல் நீளத்திற்குக் கடற்கரை இருக்கிறது. இம் மாவட்டத்திலுள்ள ஒரே ஒரு இயற்கைத் துறைமுகம் குளச்சலாகும். கடற்கரையிலிருந்து அரைக் கிலோ மீட்டர் தொலைவில் ஆழ்கடலில் பெரிய கப்பல்கள் நங்கூரம் போட்டு நிறுத்தப்படுகின்றன. படகுகள் மூலம் இல்மனைட், மானசைட் உலோக மணல்களும், பனைமர நாரும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

குளச்சல் வரலாற்றுச் சிறப்புமிக்கது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இத் துறைமுகத்துக்கும் பாபிலோன், கிரீசு, ரோம் ஆகிய நாடுகளுக்கும் வணிக உறவு இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

ஒரு காலத்தில் டச்சு நாட்டிலிருந்து வந்த படையினர், டச்சு தளபதி டிலனாய் தலைமையில் குளச்சலில் போர் தொடுத்தனர். அப்படையை எதிர்த்து திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மனின் தளபதி வேலுத்தம்பி தளவாய், டிலனாயைக் குளச்சல் போரில் தோற்கடித்து, கைதியாகப் பிடித்தார் என்று வரலாறு கூறுகிறது.

பனையோலைத் தொழில், கயிறு திரித்தல், தேனீ வளர்ப்பு, மின் கருவிகள் பழுது பார்ப்பு, இரு சக்கர வண்டிகள் பழுது பார்ப்பு, மோட்டார் மெக்கானிக், அச்சுத் தொழில் ஆகிய தொழில்களுக்கு ஆறுமாதம் வரையிலான கால அளவிற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ. 125.00 உபகாரச் சம்பளமும் பயிற்சியளிக்கும் நிறுவனத்திற்கு ஒவ்வொரு பயிற்சியாளர் பெயரிலும் ரூ. 50 பயிற்சிச் செலவு வழங்கப்படுகிறது. நடப்பு 1983-84-ல் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலுமாக மொத்தம் 1170 இளைஞர்கள் பயிற்சியளிக்கப்பட உள்ளனர். இவர்கள் பயிற்சி முடிந்ததும் சொந்தமாகத் தொழில்கள் தொடங்க வங்கிகள் மூலம் கடன் ஏற்பாடு செய்து மானியமும் வழங்கப்படும். 1983-84 ஆண்டில் ரூ. 19.67 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**அடிப்படை வசதி :**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஏழைக் குடும்பங்களுக்குக் கிடைக்கும் சொத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு விற்பனை வசதி ஏற்படுத்துவது ஏழைக் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. விற்பனை வசதி அளிப்பதற்குத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு அடிப்படை வசதி தேவை. இதனைக் கருத்திற் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடிப்படை வசதியளிப்பதற்குத் திட்டமொன்று ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் பாகமாகச் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கருவிகள் வாங்கவும், பணிக்கூடங்கள் அமைக்கவும் விற்பனை ஊர்திகள் வாங்கவும் வசதி செய்யப்படுகிறது. ஒவ்வொரு சங்கத்திற்கும் தேவையை அறிந்து திட்டங்கள் வகுத்து அரசின் அனுமதி பெற்று திட்டம் செயல்படுத்துவதற்குத் தேவையான மூலதனத்தில் நேர் பாதி (50 சதம்) வங்கிகள் மூலம் கடனாகவும் மீதித்தொகை (50 சதம்) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட மானியமாகவும் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்கென 1983-84 ஆண்டில் ரூ. 7.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதி திராவிடர்களுக்கான சிறப்புத் திட்டம் :**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மட்டுமின்றி மத்திய அரசின் தனி நிதி உதவியுடன் இந்து ஆதி திராவிட மக்களுக்கான சிறப்புத் திட்டமொன்று மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத்தின்கீழ் 1981-82, 1982-83 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு வந்தது. 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி உதவிக்காக அரசிடம் வேண்டப்பட்டுள்ளது.

**சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகளுக்கான சிறப்புத் திட்டம் :**

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் வாழ்வு வளம்பெறவும், நாட்டின் விவசாய உற்பத்தியைப் பெருக்கிடவும் மத்திய அரசு மாநில அரசு நிதி உதவியுடன் இத்திட்டம் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது.

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் புதிய கிணறுகள் வெட்டவும் பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும குழாய்க் கிணறுகள் போடவும் மின்சாரம் மற்றும் ஆயில் எஞ்சின் பம்பு செட் பொருத்தவும், இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படுகிறது.

சாகுபடி நில வளர்ச்சிக்காக நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலத்தைச் சமன்படுத்தவும் காண்டூர் அணைகள் அமைக்கவும், நிலச்சரிவைத் தடுக்க சுவர்கள் அமைக்கவும் இத் திட்டம் உதவுகிறது.

தற்போது சிறு விவசாயிகள் மிகச் சிறு விவசாயிகளைத் தேர்ந்தெடுக்கும் பணி எல்லா வட்டாரங்களிலும் நடைபெறுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 200 முதல் 250 வரை சிறு-மிகச் சிறிய விவசாயிகள் பயனடைவார்கள். சிறுவிவசாயிகளுக்கு 25 சதம், மிகச் சிறுவிவசாயிகளுக்கு 33 1/3 சதம் ஆக ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூ 3,000 வரை மானியம் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். மானியம் வழங்குவதற்கெனச் சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ரூ. 3.50 இலட்சம் மற்றும் நிலமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 50,000 ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 45 வகைகளுக்கு 1980-81 இல் ரூ. 71 இலட்சம் செலவிட்டதில் 12,610 பேர் பயன் அடைந்தனர். 1981-82இல் ரூ. 71 இலட்சம் செலவிட்டதில் 15,697 பேர் பயனடைந்தனர். 1982-83இல் ரூ. 67 இலட்சம் செலவிட்டதில் 14,274 பேர் பயன் அடைந்தனர். 1983-84இல் இதுவரை ரூ. 30 இலட்சம் செலவிடப்பட்டதில் 4,118 பேர் பயனடைந்துள்ளனர்.



**அட்டை சொல்லும் செய்தி:**

## தியாகிகள் தினம்

'இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த, பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன்.

தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் ஆகிய எந்த ஒரு வகையிலும் கடைப்பிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி கூறுகிறேன்.

அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்துகளுக்கு இணங்க, சாதி, சமய, வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமை.

மேலும் தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதை உணர்ந்து செயல்படுவேன்.

இந்திய அரசியலமைப்பின்பால் எனக்கு இருக்கும் முழுப் பற்றுக்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாய் விளங்கும் என்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

*[சென்னை, கோட்டையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தியாகிகள் தினத்தன்று (30.1.1984) தலைமைச் செயலக அலுவலர்களுக்குச் செய்து வைத்த உறுதிமொழி. இந்த உறுதி மொழியை மக்கள் அன்றைய தினம் ஏற்றனர்.]*





## சைதையில் வெள்ள நிவாரணப் பணி

கடந்த 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்ட சென்னை வாழ் குடிசைப் பகுதி மக்களுக்கு, சைதை ஆசிரியர் கல்லூரி வளாகத்தில் 14.1.84 அன்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொருவருக்கும் நேரடியாக நிவாரணப் பொருட்களை 933 குடும்பங்களுக்கு வழங்கினார். நிகழ்ச்சிக்கு வருவாய் நிர்வாக ஆணையாளர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப. தலைமை தாங்கினார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள், 61 முன்னாள் படை வீரர்களின் விதவைகளுக்குத் தலா ஒரு வேட்டியும், சேலையும், மேலும் பொங்கல் பரிசாக ரூ. 10-ம் வழங்கினார்.

பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னை மாவட்டத்திலுள்ள முதியோர் உதவித் தொகை பெறுவோர் 5,620 பேருக்கும், விதவை உதவித் தொகை பெறுவோர் 2,950 பேருக்கும், ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவோர் 450 பேருக்கும், முஸ்லீம் விதவைப் பெண்கள் 300 பேருக்கும் அரசு உதவித் தொகையும், சேலை-வேட்டியும் வழங்கப்பட்டன.

# கன்னியாகுமரி காட்சி அரங்கம்

கடந்த சில ஆண்டுகளைவிட, இந்த ஆண்டு நடைபெறுகின்ற பதினோராவது அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி அதிகமான நிலப்பரப்பிலே அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சுற்றுலா தொழில் பொருட்காட்சியில் தமிழ்நாட்டின் 16 மாவட்டங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கு, சுற்றுலாப் பொருட்காட்சிக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் அமைந்துள்ளது.

கன்னியாகுமரி என்றால் சுசீந்திரம் நினைவிற்கு வரும்! அங்கு எழுந்தருளியுள்ள அருள்மிகு தாணுமாலயன் திருக்கோவிலின் வசீகரத் தோற்றம் அரங்கின் முகப்பாக அமைந்து அழகூட்டுகிறது. அத்தோடு அஞ்சனை புதல்வரான ஆஞ்சநேயர் அஞ்சலி செய்யும் பக்திப் பரவசமான காட்சி ஒன்று மிகப் பிரமாண்டமான முறையில் அரங்கின் இடப்பக்கம் அமைக்கப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரியின் கடற்கரை ஓரத்தில் எழிலூட்டும் வகையில் அமைந்துள்ள காந்தி மண்டபத்தின் வடிவமைப்பை மிக அழகாகச் சித்திரித்து வைக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரியின் கடல் நடுவே கம்பீரத் தோற்றத்துடன் எழுந்தருளியுள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தின் மாதிரித் தோற்றம் கன்னியாகுமரி அரங்கின் நடுவே கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கிறது. கடலில் இருந்து கதிரவன் எழும் காட்சி எழிலான முறையில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

ஊர் கூடித் தேர் இழுக்கும் உன்னதமான சுசீந்திரம் தேர்த் திருவிழாக் காட்சி! கன்னியாகுமரி மரியன்னை உலா வரும் திருவிழாக் காட்சி! உதயகிரி

**இரா. நடேசன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

கோட்டையின் ஒப்பற்ற தோற்றம்! அதில் அமைந்துள்ள டிலேனாயிடு சமாதி. குற்றால அருவியோ என்று திகைக்கின்ற அளவிற்குச் சிறப்பாக அமைந்துள்ள திற்பரப்பு அருவியின் சீர்மிகு தோற்றம்! ஒகேனக்கல் அருவியோ என்று வியக்கின்ற அளவிற்கு அமைந்துள்ள உலக்கருவியின் உன்னதத் தோற்றம்! கன்னியாகுமரி செல்லுகின்ற சுற்றுலாப் பயணிகள் கண்டு இன்புற வேண்டிய மற்றும் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளை எந்நேரமும் எடுத்தியம்பும் முகமாக தமிழக அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள புகழ்பரப்பும் புதிய சுற்றுலா அலுவலகத்தின் கவர்ச்சியான தோற்றம்!



தென்னை மரப் பின்னணியில் தேனிரும்புப் பாதையினில் கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் புகை வண்டித் தொடரின் அமைதியான தோற்றம்! கன்னியாகுமரி அருகில் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கவேண்டிய வட்டக் கோட்டையின் வசீகரத் தோற்றம்! உலகத்திலேயே காணக் கிடைக்காத முக்கடல் கூடும்









## தோட்டக் கலைத்துறை திறப்பு விழா

உதகமண்டலத்தில் தோட்டக்கலைத் துறைப் பயிற்சிவழித் தொடர்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 12·5 இலட்சத்தில் உருவாக்கப் பட்டுள்ள இரு கட்டடங்களை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் 11.1.84 அன்று திறந்து வைத்தார்

அரிய காட்சி! கன்னியாகுமரி மாவட்டத்தின் எழில்மிகு இயற்கை வளம் ஆகிய அனைத்தும் அறிந்து கொள்ளும் வகையில் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

இவை மட்டும்தானா! கன்னியாகுமரி மாவட்டத்தில் பாசன வசதி, குடிநீர் வசதி ஆகியவைகளை அள்ளித் தருகின்ற முக்கடல், பெருஞ்சாணி, பேச்சிப்பாறை நீர்த்தேக்கங்களின் அழகிய தோற்றங்களைக் கண்டு களிப்புக் கடலில் நீந்தலாம்.

எம்மதமும் சம்மதமே என்று எடுத்து இயம்புகின்ற வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் எழுந்தருளியுள்ள, இந்து, முஸ்லீம், கிறித்துவர் ஆலயங்களின் எழில்மிகு தோற்றங்கள்! கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் கண்கொள்ளாச் காட்சிகள்! உலகப் புகழ் பெற்றதும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தனிச்சிறப்பைப் பெற்றுத் தருகின்றதுமான ரப்பர் மரங்களின் மகத்தான தோற்றம்!

மேலும், ரப்பர் மரத்தையே அரங்கினுள் கொண்டு வந்து நிறுத்தி, மரத்திலிருந்து பால் எடுக்கும் காட்சியைக் கண்டு மகிழலாம். மாணவர்களைப் பெரிதும் ஈர்க்கின்றது இக்காட்சி.

மக்கள் விரும்பிப் பெறுகின்ற மார்த்தாண்டம் தேன், அரங்கினுள் நுழைகின்ற அனைவருக்கும் குறைந்த விலையிலே கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல், மாண்புமிகு முதல்வரின் மகத்தான திட்டமான தன்னிறைவுத் திட்டம் மற்றும் அதன் பணிகள் பற்றிய புகைப்படங்கள், அத்திட்டத்தின் மூலம் முனேற்றம் அடைந்த ஒரு கிராமத்தின் முந்தைய தோற்றம், திட்டத்திற்குப் பின் அந்த வளர்ச்சி பற்றிய பிந்தைய தோற்றம்! சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பிரச்சனைக்குப் தீர்வு காணும் வகையில் அரசு அண்மையில் மேற்கொண்ட கிருஷ்ணா நதி குடிநீர்த் திட்டம். மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம்! மாண்புமிகு முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் போன்ற திட்டங்களைச் சித்திரிக்கும் புகைப்படங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், ஏழை எளிய மக்களுக்குப் பசுமாடு, மனைப் பட்டா வழங்குதல் ஆகியவற்றைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளன

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் அற்புதமாக அமைந்திருக்கும் நூல் ஆலையின் தோற்றமும் அதன் செயலாக்கமும் விவரிக்கப்பட்டுள்ளன. அரங்கத்தை ஒருமுறை பார்த்தாலே போதும். கன்னியாகுமரி மாவட்டத்தை நேரில் சுற்றிப் பார்க்க நிறைவு உண்டாகும்.



# கட்டுமரப்போட்டி

**போ**ங்கல் திருநாளையொட்டி (17.1.84) மாமல்லபுரத்தில் கட்டுமரப்போட்டி நடத்தப்பட்டது. எந்த ஆண்டும் இல்லாமல் இந்த ஆண்டுதான் முதன்முதல் இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.க.கலைமணி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியை மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் வானைநோக்கித் துப்பாக்கியால் சுட்டு, துவக்கி வைத்தார்.

ஒரு கட்டுமரத்திற்கு நால்வர் விதம் 50 கட்டுமரங்களில் 200 பேர் பங்கேற்ற இப்போட்டியைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தோடு - மத்திய அரசு சுற்றுலாத் துறை, தமிழ்நாடு அரசு மீன்வளத் துறை, கடற் பாதுகாப்புப் படை மற்றும் ராயல் சென்னை படகுக் கழகம் ஆகியவைகளும் இணைந்து நடத்தின.

மாமல்லபுரத்தில் உள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகக்கடற்கரை விடுதி வளாகக் கடற்கரையில் இந்தக் கட்டுமரப் போட்டி நடைபெற்றது. கடலில், 2 கடல் மைல்கள் தூரத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் பாதுகாப்புப்படை மோட்டார்ப் படகைச் சுற்றிக் கொண்டு கட்டுமரங்கள் வர வேண்டும் என்பது போட்டியின் விதியாகும்.

இப்போட்டியில், நெம்மேலி குப்பத்தைச் சேர்ந்த பச்சையப்பன் குழுவுக்கு முதல் பரிசும், வேலாயுதம் குழுவுக்கு இரண்டாவது பரிசும், கோவளத்தைச் சேர்ந்த சந்திரன் குழுவுக்கு மூன்றாவது பரிசும், தேவனேரி குப்பத்தைச் சேர்ந்த பிச்சை குழுவுக்கு நான்காவது பரிசும் நெம்மேலிகுப்பம் குப்பன் குழுவுக்கு ஐந்தாவது பரிசும் கிடைத்தன.

வெற்றி பெற்றவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் ரொக்கப் பரிசாக முறையே ஆயிரம் ரூபாய், 800 ரூபாய், 600 ரூபாய், 300 ரூபாய், 200 ரூபாய் வழங்கப்பட்டது. இதுதவிர, வென்றோருக்கு முறையே எவர்சில்வர் குடம், டிரான்சிஸ்டர் ரேடியோ, அலாரம் கடிகாரம், மடக்கு நாற்காலி, பிளாஸ்க் ஆகியவைகளும் பரிசுகளாக அளிக்கப்பட்டன.

இப்பரிசுகளை மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் வழங்கினார். போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.க. கலைமணி புத்தாடைகள் அளித்தார்.

மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் தமது தலைமையுரையில், தமிழ்நாடு அரசு மீனவ சமுதாயத்தினரின் மேன்மைக்காக அரும்பணிகளை ஆற்றி வருகிறது என்று குறிப்பிட்டார். மாண்புமிகு செய்தி - சுற்றுலாத்துறை அமைச்சர் தமது உரையில், அடுத்த ஆண்டு முதல் இந்தப் போட்டி கட்டுமரப் போட்டியாக மட்டுமன்றி, படகுப்போட்டியாகவும் இன்னும் விரிவான அளவில் நடத்தப்படும் என்றார்.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.டி.ஆர்.சீனிவாசன் இ.ஆ.ப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு.க.பாலசுப்பிரமணியம், திரு இரா.மோகனரங்கம், எம்.பி. தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆனூர் செகதீசன், தமிழ்நாடு சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. ஆர். கிருபாகரன் இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் திரு. சங்கரசுப்பையன், இ.ஆ.ப. மற்றும் மத்திய சுற்றுலாத்துறை அதிகாரிகள் ஆகியோரும் இவ் விழாவிற்கு வருகை தந்திருந்தனர்.

நூற்றுக் கணக்கான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் கட்டுமரப் போட்டியைக் கண்டு களித்தனர்.

2.30 மணியளவில் தொடங்கி 4 மணியளவில் இப்போட்டி முடிந்தபின்னர் அன்று மாலை மாமல்லபுரம் பேருந்து நிலையத்தருகே பொங்கல் திருநாளையொட்டிப் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.





# அன்னை சத்யா சத்துணவுக்கூடம்

**செ**ங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது ஊரப்பாக்கம் ஊராட்சி. இங்கு, அண்மையில் (24.1.84) அன்னை சத்யா நினைவு சத்துணவுக்கூடம் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமது அன்னையார் நினைவாக வழங்கிய நிதி உதவியுடன் கட்டப்பட்டது இந்தச் சத்துணவுக்கூடம். இதனை, மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு ஆர்.சவுந்தரராசன் திறந்துவைத்தார்.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த.ரா.சீனிவாசன் இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில்- சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.ஆனூர், பு.கோ. செகதீசன் ,திரு.ஜி. சொக்கலிங்கம், மாவட்டச் சுகாதாரம் மற்றும் குடும்பநல அலுவலர் திரு.கி.கந்தசாமி, ஆகியோரும் மற்றும் பலரும் உரையாற்றினர்.

நான்காவது அட்டையில்

[19.1.84-இல் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலில் நடைபெற்ற விழாவில் ஏழை எளிய மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாகடர்எம்.ஜி.ஆர்.அவர்கள் உணவு அளித்தல்.]

அந்த வட்டாரக் கிராமப்புற மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டிருந்த அன்னை சத்யா நினைவு சத்துணவுக் கூடத் திறப்பு விழாவில், செங்கை கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு.ச.கலியாணசுந்தரம் வரவேற்புரையாற்றினார்.

சத்துணவுத் திட்ட ஆணையர் மற்றும் செயலர் பொறுப்பிலுள்ள திரு. கே.லட்சுமி காந்தன் பாரதி இ.ஆ.ப. பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''அரசின் பணம், பொதுமக்கள் அளிக்கும் நிதி ஆகியவற்றிலேதான் எல்லா ஊரிலும் சத்துணவு மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால் இங்கேதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தன் சொந்தப் பணத்தில் உணவு மையம் கட்டித் தந்திருக்கிறார். அந்த வகையில் இந்த ஊரப்பாக்கம் அதிர்ஷ்டமுள்ள கிராமம் ஆகும்.''

திருமதி சௌந்தரா கைலாசம் பேசியதாவது:

''தாயிற் சிறந்ததோர் கோயிலில்லை என்பதை எல்லாக் குழந்தைகளும் நன்றாக உணரவேண்டும் என்ற எண்ணத்தாலேயே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தன் அன்னையார் பெயரில் இந்தச் சத்துணவு மையத்தைக் கட்டித் தந்திருக்கிறார். அன்னதானம், கல்வி தானம், ஞானதானம் என்கிற மூன்று தானங்களில் அன்னதானமே தலைசிறந்தது. ஒருவருக்கு அன்னதானமளித்தால், அதற்கடுத்த இரண்டு தானங்களைப் பெறுவதில் அவர்களுக்குச் சிரமம் இருக்காது. அந்தக் கருத்தில் இத்தகைய சத்துணவுக்கூடத்தை அமைத்துதவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தமிழகமே கடமைப்பட்டிருக்கிறது''.

அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த.ரா. சீனிவாசன், இ.ஆ.ப. பேசுகையில்—''இத்தகைய சத்துணவுக் கூடங்களை, அவ்வப்பகுதி மக்கள் தங்கள் தங்கள் சொந்த வீடுபோலப் பராமரிக்க வேண்டும், பாது காக்கவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு.ஆர்.சவுந்தரராசன் பேசியதாவது:

''பதவி வரும்போது பணிவு வரவேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த வகையில் உள்ள நம்முடைய முதல்வர் அவர்கள், சொன்னதை மட்டுமல்ல. சொல்லாததையும் செய்து சாதனை புரிந்து வருகிறார். அதற்கு உதாரணம் இந்தச் சத்துணவுத் திட்டம். எந்தத் தேர்தல் அறிக்கையிலும் சத்துணவுத் திட்டம் கொண்டுவரப்படும் என்று இல்லை; ஆனாலும் இன்றையதினம் இந்தத் திட்டம், 'மாணவச் செல்வங்கள் இந்நாட்டின் முதுகெலும்புகள்' என்று நேரு சொன்னதற்கு மதிப்பளிக்கும் விதத்திலே சீரும் சிறப்புமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

''இப்படிப்பட்ட மையங்களில், குழந்தைகள் தாய்ப்பாசத்தோடு கவனிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே பெண்களை நியமித்து வருகிறோம்.

''இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் பல்வேறு வகைக் குழந்தை நோய்களே அற்றுப்போயிருக்கின்றன. குறிப்பாகச் சொல்லுவதென்றால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னாலே சொறி சிரங்கு போன்ற நோய்கள் 60 முதல் 70 சதவிகிதம் குறைந்து போயிருக்கிறது. இங்கே, இன்றைய தினம் 1200 குழந்தைகள் மருத்துவர்களாலே பரிசோதிக்கப்பட்டுள்ளன. அவர்களில் அந்த நோய் பன்னிரண்டே குழந்தைகளுக்குத்தான் இருந்திருக்கிறது!





''மிகப் பெரிய பணக்கார நாடு கூட இப்படியொரு திட்டத்தை நிறைவேற்ற யோசிக்கும்; ஆனால், உங்கள் முதல்வர் தைரியமாக இதைச்செய்திருக்கிறாரே; அவரை நாங்கள் பாராட்டுகிறோம், என்று வெளிநாட்டவர்களெல்லாம் வியந்து பாராட்டும் வகையிலே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

''மாதாவை ஒரு நாளும் மறக்கவேண்டாம் என்பதற்கு, இலக்கணமாக விளங்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சொந்த நிதியில் கட்டப்பட்டுள்ள இந்தச் சத்துணவு மையத்தைத் திறந்து வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன்''.

—இவ்வாறு மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் உரையாற்றினார். இந்தக் கட்டடத்தைச் சிறப்புறக் கட்டி முடித்த ஒப்பந்தக்காரர் வீரராகவனுக்குக் கைத்தறி ஆடை அணிவித்தார்.

பின்னர் - சிறுவர் சிறுமியரின் கலை நிகழ்ச்சியோடு விழா இனிது முடிந்தது.

49 ஆயிரம் ரூபாய் செலவில், 100 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள அன்னை சத்யா நினைவு சத்துணவுக் கூடத்தின் முன் பகுதியில் 96 அடி அளவில் விளையாட்டிற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சத்துணவுக் கூடத்தின் மூலம்-ஊரப்பாக்கம், கிளாம்பாக்கம், அய்யஞ்சேரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 205 குழந்தைகள் பயன்பெறுவார்கள். ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஆண்குழந்தைகள் 43 பேர், பெண் குழந்தைகள் 42 பேர், பின் தங்கிய மற்றும் இதர வகுப்பைச் சேர்ந்த ஆண் குழந்தைகள் 61 பேர், பெண்குழந்தைகள் 59 பேர் ஆகியோர் இதில் அடங்குவர்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**இல. இராசேந்திரன்.**



# சத்தான கோதுமையில் எத்தனை பலகாரங்கள்!

உலகத்தில் தட்ப, வெப்பம் சமமாக இருக்கும் நாடுகளில் பெரும்பாலும் கோதுமையே முக்கிய உணவாக இருக்கிறது. உலகில் மிக அதிகமாகப் பயிராவதும், மிக அதிகமாக விற்பனையாகும் உணவுப் பயிராக விளங்குவதும் கோதுமையே. இந்தியாவ்ல் கோதுமை மிகப் பெரும்பான்மையான மக்களால் உணவாகக் கொள்ளப்படுகிறது.

கோதுமை தானியத்தில் மூன்று பாகங்கள் இருக்கின்றன. அவை வருமாறு

1. முளைக்கரு-இது தானியத்தின் மொத்த பாகத்தில் 2%
2. முளை சூழ்தசை – இது 85%. மக்கள் உண்ணும் கோதுமை மாவில் பெரும்பாகம் இதுவே. புதிய செடி முளைப்பதற்கு உணவாக உதவுவதும் இதுவே.
3. தானியத்தின் பாதுகாப்பிற்காக மேற்புறத்தில் இருக்கும் தோல் உமி முதலியன தானியத்தின் 13%

கோதுமையில் வெள்ளை, மஞ்சள், சிவப்பு முதலிய நிறங்களும், மிருது, கடினம், மிகக் கடினம் எனப் பல தரங்களும் உள்ளன.

கோதுமை குளிர்காலப் பயிர். இந்தியாவில் வட பகுதிகளில் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் பயிரிடுகிறார்கள். மூன்று முதல் ஆறு மாதங்களில் அறுவடை செய்கிறார்கள். பஞ்சாப், அரியானா, பீகார், உத்திரப் பிரதேசம் முதலிய வட மாநிலங்களில் கோதுமை பெருவாரியாகப் பயிராகிறது.

கோதுமையில் 8 முதல் 17 சதவிகிதம் வரை புரதச் சத்தும், 2 முதல் 3 சதவிகிதம் வரை சர்க்கரைச் சத்தும், 1.5 முதல் 2 சதவிகிதம் வரை தாதுப் பொருள்களும் உள்ளன. சர்க்கரைச் சத்து குறைவாகவும், புரதச்சத்து மிகுதியாகவும் இருப்பதால், சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு அரிசியைவிட கோதுமை மிகச் சிறந்த உணவாகக் கருதப்படுகிறது.

கோதுமையில் உள்ள தாதுப் பொருள் சத்தில், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு முதலியன இருக்கின்றன. வைட்டமின் சத்துகள் B1, B2, C முதலியவையும், காரட்டினும் கோதுமையில் உள்ளன. கோதுமையின் முளைக் கருவிலுள்ள



எண்ணெய்தான் வைட்டமின் E க்கு முக்கியமான மூலம். 100 கிராம் கோதுமை, 345.4 காலரி வெப்பத்தைக் கொடுக்கக் கூடியது.

கோதுமை சத்தும், சுவையும் மிக்கதாக இருப்பதால் அது மக்களால் பெரிதும் விரும்பி உண்ணப் படுகிறது. சப்பாத்தி, பூரி போட்டி போட்டுக் கொண்டு உண்ணாத குழந்தைகள் யார்? தென்னிந்தியாவில் இட்டிலி, தோசை எப்படியோ, அப்படி வட இந்தியாவில் பூரி, சப்பாத்தி. இந்தப் பூரி, சப்பாத்தி மட்டுமல்லாமல் இன்னும் எத்தனையோ வகையான பலகாரங்களைக் கோதுமையில் செய்யலாம். உதாரணத்துக்கு ஒரு சில கீழே விளக்கப் படுகின்றன.

## கோதுமைக் கஞ்சி:

உடைத்த சம்பா கோதுமையிலிருந்து உன்னதமான கஞ்சி தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: உடைத்த கோதுமை ¼ லிட்டர், தேங்காய்த் துருவல் ¼ லிட்டர், வெல்லம், உப்பு போதுமான அளவு.

தண்ணீரைக் கொதிக்க வைத்து, தேங்காய்த் துருவலில் அதை ஊற்றி தேங்காய்ப் பாலைப் பிழிந்து கொள்ள வேண்டும். தேங்காய்ப் பால் முற்றிலும் கிடைக்கின்ற வகையில் மூன்று நான்கு முறை வெந்நீரை விட்டு, தேங்காய்ப்பாலை நன்கு பிழிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

முதல்முறை எடுத்த பாலைத் தனியே வைத்துவிட்டு, பிறகு எடுக்கின்ற பாலில் கோதுமை நொய்யை வெல்லத்தோடும் உப்போடும் கலந்து கொதிக்க வைக்கவும். கோதுமை வெந்த பிறகு, முதன்முறை எடுத்த தேங்காய்ப் பாலைக் கலந்து இரண்டு நிமிடம் கொதிக்க விடவும். பிறகு இறக்கிவிட்டுப் பரிமாறுங்கள். சத்தான சுவையான கோதுமைக் கஞ்சியை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நாக்கைச் சப்புக் கொட்டிச் சாப்பிடுவார்கள்.

## கோதுமைப் பொங்கல்:

அரிசிப் பொங்கல் அனைவருக்கும் தெரியும். கோதுமைப் பொங்கல் செய்வது எப்படி?

உடைத்த சம்பா கோதுமை 200 கிராம், பாசிப் பருப்பு 50 கிராம், எண்ணெய் 20 கிராம், மிளகுத்தூள் 5 கிராம், உப்பு 10 கிராம், இஞ்சி ஒரு துண்டு—இவற்றை எடுத்துக் கொள்ள வேண்டியது.

உடைத்த சம்பா கோதுமையை சுத்தம்செய்து, சிறிதளவு எண்ணெய் விட்டு வாணலியில் வறுக்கவும். தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதில் இந்தக் கோதுமையைப் போட்டுப் பொங்கவைக்கவும். அது வெந்தவுடன் உப்பு, மிளகு, மசித்த இஞ்சி ஆகியவற்றைக் கலந்து, துழாவிவிடவும். சுமார் 15 நிமிடங்கள் கழித்து இறக்கவும். இப்பொழுது

## தட்டம்மையைத் தடுக்க...

குழந்தைகளைத் தாக்கக் கூடிய மணல் வாரி அம்மை, புட்டாளம்மை, இளம்பிள்ளை வாதம் முதலான நோய்கள் அமெரிக்காவில் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது. தட்டம்மையை வெற்றி கொள்ளும் போரின் கடைசிக் கட்டத்தில் புதிய தடுப்பு மருந்தை அமெரிக்க நிறுவனம் ஒன்று தயாரிக்கிறது. முன்மாதிரிச் சோதனையாகப் புதிய மருந்து 500 குழந்தைகளுக்கு இப்பொழுது கொடுக்கப்படுகிறது. அது வெற்றி பெற்றால் இலட்சக்கணக்கான குழந்தைகளைத் தட்டம்மை நோயினின்று காப்பாற்ற முடியும்.

தட்டம்மையைத் தோற்றுவிக்கும் விஷக் கிருமிகளைத் தனிமைப்படுத்திக் கட்டுப்படுத்த இயலாமற் போனதால் இந்த நோயை அடியோடு ஒழிக்க முடியவில்லை. அதனால் இந்த அரிப்பு நோய் பெருகியது. ஆட்கொல்லியாகவும் மாறியது.

ஆண்டுதோறும் அமெரிக்காவில் முப்பது இலட்சம் பேர் இந்த நோயினால் காக்கப்படுகின்றனர். 4500 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர். 125 பேர் மரணமடைகிறார்கள்.

புதிய மருந்து அறிவியல் உலகத்திற்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி; ஏனென்றால் இது அமெரிக்காவுக்கு மட்டுமல்ல; அகில உலகுக்கும் பயன்படும் அல்லவா?

— அமெரிக்கத் தகவல் நிலையம்



சுவையான கோதுமைப் பொங்கல் தயார்.

### கோதுமை இனிப்புப் பொங்கல்:

மேலே சொன்னது கோதுமை சாதா பொங்கல். அரிசியில் வெண் பொங்கல் தயாரிப்பது மாதிரி சர்க்கரைப் பொங்கலென்று ஒன்றும் இருக்கிறதல்லவா? அது மாதிரி கோதுமையிலும் இனிப்புப் பொங்கல் செய்யலாம்.

கோதுமைச் சம்பா ரவை 500 கிராம், பாசிப் பருப்பு 100 கிராம், வெல்லம் 500 கிராம், தேங்காய் 100 கிராம், ஏலக்காய் 5 எடுத்துக் கொள்ள வேண்டியது.

பாத்திரத்தில் பாசிப்பருப்பைப் போட்டு நன்றாக வேகவைத்துத் தனியே எடுத்து வைக்கவும். மற்றொரு பாத்திரத்தில் இரண்டு பங்கு தண்ணீர் வைத்து கோதுமை ரவையைப் போட்டு நன்கு வேகவைக்கவும்.

பிறகு அதில் ஏற்கெனவே வேக வைத்து எடுத்து வைத்துள்ள பாசிப் பருப்பைக் கலக்கவும். வெல்லத்தை தூளாக்கிப் போடவும். துருவி யெடுத்த தேங்காயைக் கலக்கவும். ஏலக்காயைப் பொடிசெய்துபோட்டு பதமாகக் கிளறி இறக்கவும்.

பந்திக்கு வந்தவர்களை உட்கார வைத்துப் பரிமாறுங்கள். நான் முந்தி நீ முந்தி என்று விருந்தினர் விருப்பத்தோடு சாப்பிடுவார்கள்.

### கோதுமை இட்டிலி:

இது என்ன விந்தை? அரிசி இட்டிலிதானே நமக்குத் தெரியும்? கோதுமையில் இட்டிலியா?என்கிறீர்களா? ஆமாம், கோதுமையிலும் இட்டிலி செய்யலாம்.

கோதுமை சம்பா ரவை 300 கிராம், தயிர் ½ லிட்டர், கொத்தமல்லி கொஞ்சம், கறிவேப்பிலை கொஞ்சம், கடலைப் பருப்பு 50 கிராம், எண்ணெய் 50 கிராம், பச்சை மிளகாய், இஞ்சி, உப்பு தேவையான அளவு எடுத்துக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் விட்டுக் கோதுமை சம்பா ரவையைப் பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை, கொத்தமல்லி ஆகியவற்றை தொறுங்க அரிந்து கோதுமை ரவையுடன் தயிரையும் உப்பையும் சேர்த்துக் கலக்கவும். அவசியமானால் கொஞ்சமாகத் தண்ணீர் விட்டு, இட்டிலி மாவாகக் கரைத்துக் கொள்ளவும்.

இட்டிலி பாத்திரத்தில் மாவை விட்டு, இட்டிலி வெந்தவுடன் எடுத்துப் பரிமாறவும். தொட்டுக் கொள்ள சட்டினியோ, கூட்டோ, சாம்பாரோ சேர்த்து விட்டால் ஜோர் தான்!

—முத்துமீனா

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


“கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்”
பார்த்தாலே
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி